# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## THIRD SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

### 6th to 10th and 12th August 1963.

### Volume XIII (Nos. 1 to 6).

TABLE OF CONTENTS.

*Tuesday, 6th August* 1963.


| | | PAGES |
|---|---|---|
| | Personnel of the Government of Madras .. .. .. .. | i |
| | Principal Officers of the Madras Legislative Assembly .. .. | ii |
| | List of Members of the Madras Legislative Assembly with their constituencies .. .. .. .. .. .. .. | iii–viii |
| I | Obituary reference to Sri R. S. K. Pandian, ex-M.L.A. .. .. | 1 |
| II | Swearing-in of a Member .. .. .. .. .. .. | 1 |
| III | Questions and Answers .. .. .. .. .. .. | 1–30 |
| IV | Adjournment Motion re. non-supply of 14 carat gold for the Jewellery Industry .. .. .. .. .. .. .. | 30–31 |
| V | Privilege Matter re. prorogation of the Assembly from 6th June 1963 .. .. .. .. .. .. .. .. | 31–35 |
| VI | Announcement re. Panel of Chairmen .. .. .. .. | 35 |
| VII | Presentation of the Report of the Public Accounts Committee.. | 35 |
| VIII | Government Motions— | |
| | (1) Election to the Committee on Estimates for 1963-64 .. | 35 |
| | (2) Election to the Committee on Public Accounts for 1963-64 .. .. .. .. .. .. .. | 36 |
| IX | Government Resolutions— | |
| | (1) Ratification of the Constitution (Fifteenth Amendment) Bill, 1963 .. .. .. .. .. .. .. | 36–64 |
| | (2) Ratification of the Constitution (Sixteenth Amendment) Bill, 1963 .. .. .. .. .. .. .. | 64–96 |
| X | Papers laid on the Table of the House .. .. .. .. | 96–119 |

PAGES

*Wednesday, 7th August 1963.*

I Obituary Reference to Sri M. P. Mangala Coundor, Ex-M.L.A. .. 121
II Questions and Answers .. .. .. .. .. .. .. 121–149
III Adjournment Motion *re.* exclusion of Tiruchirapalli from Air Service .. .. .. .. .. .. .. .. 150–152
IV Privilege Matter *re.* prorogation of the Assembly from 6th June 1963 .. .. .. .. .. .. .. .. 152–153
V Presentation of the Reports of the Committee on Estimates .. 153
VI First Supplementary Statement of Expenditure for 1963–64 .. 153–157
VII Report of the Committee of Privileges (Dina Thanthi case) .. 157–159
VIII Government Resolution—*cont.*
Ratification of the Constitution (Sixteenth Amendment) Bill, 1963—cont. .. .. .. .. .. .. .. 159–241
IX Papers laid on the Table of the House .. .. .. .. 241–247

*Thursday, 8th August 1963.*

I Questions and Answers .. .. .. .. .. .. .. 249–272
II Adjournment Motion *re.* the action of the Police in the Transport Workers' Strike at Maduranthakam .. .. .. .. 272–276
III Calling Attention to the non supply of electricity to pumpsets in North Arcot district .. .. .. .. .. .. 276–278
IV Presentation of the Report of the Committee on Estimates .. 278
V Non-Official Resolutions—
(1) Conduct of Examination for State Services by the Madras Public Service Commission in Tamil also .. 278–302
(2) Recognition of all the Fourteen Languages as the Official Languages of the Indian Union .. .. 302–361
VI Papers laid on the Table of the House .. .. .. 361–362

*Friday, 9th August 1963.*

I Questions and Answers .. .. .. .. .. .. 369–399
II Point of order *re.* the reported resignation of the [illegible] Minister. 399
III Calling Attention to the poor response to Tamil Medium courses in the Arts Colleges .. .. .. .. .. .. .. .. 399–400
IV Government Bills—
(1) The Payment of Wages (Madras Amendment) Bill, 1963 .. .. .. .. .. .. .. .. .. 400
(2) The Madras General Sales Tax (Special Provisions) Bill, 1963 .. .. .. .. .. .. .. .. 401–405
V Announcements—
(1) The Madras General Sales Tax (Special Provisions) Bill, 1963 .. .. .. .. .. .. .. .. 400–401
(2) Business of the House .. .. .. .. .. .. 465


61422




PAGES

VI The Madras State Electricity Board Budget 1963–64 .. .. 406–465
VII Papers laid on the Table of the House .. .. .. .. 465–466

*Saturday, 10th August 1963.*

I Questions and Answers .. .. .. .. .. .. 467–496
II Calling Attention to the shortage of sugar and blackmarketing in its sale .. .. .. .. .. .. .. .. 496–498
III Government Bill—
The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963 .. .. .. .. .. .. .. 498–499
IV Association of Council Members with the Committees—
(1) Committee on Estimates .. .. .. .. .. 499
(2) Committee on Public Accounts .. .. .. .. 499
V Government Motion—
Amendment to Schedule to the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 .. .. .. 499–500
VI First Supplementary Statement of Expenditure for 1963–64—General Discussion .. .. .. .. .. .. .. .. 501–550
VII The Madras State Electricity Board Budget for 1963–64 Discussion—cont. .. .. .. .. .. .. .. .. 550–571
VIII Papers laid on the Table of the House .. .. .. .. 571–572

*Monday, 12th August 1963.*

I Questions and Answers .. .. .. .. .. .. 607–633
II Calling Attentions to the lack of accommodation in Engineering Colleges .. .. .. .. .. .. .. .. .. 634–635
III Announcements—
(1) Election to the Committee on Public Accounts .. 635
(2) Election to the Committee on Estimates .. .. 635–636
(3) The Madras General Sales Tax (Special Provisions) Bill, 1963 (L.A. Bill No. 11 of 1963) .. .. .. .. 636
(4) The Madras Appropriation (No. 4) Bill, 1963 .. .. 644
IV Government Bills—
(1) The Madras District Police (Amendment) Bill, 1963 .. 636
(2) The Madras Appropriation (No. 4) Bill, 1963 .. .. 644
V Government Motion re. Change in the Order of Business .. 637
VI Voting on Demands for Grants for Further Expenditure for 1963-64—

*A. Expenditure on Revenue Account.*

*Demand number.*

III General Sales Tax and Other Taxes and Duties Administration. 637–638
VIII Head of State, Ministers and Headquarters Staff .. .. 638

*A. Expenditure on Revenue Account*—cont.

| Demand number. | | PAGES |
|---|---|---|
| IX | District Administration and Mi cellaneous .. .. | 638 |
| XII | Police .. .. .. .. .. .. .. .. | 638 |
| XIII | Education .. .. .. .. .. .. .. | 639 |
| XIV | Medical .. .. .. .. .. .. .. | 639 |
| XV | Publ.c Health .. .. .. .. .. .. .. | 639 |
| XVI | Agriculture .. .. .. .. .. .. .. | 639 |
| XVII | Fisheries .. .. .. .. .. .. .. | 639 |
| XVIII | Animal Husbandry .. .. .. .. .. .. | 640 |
| XX | Industries .. .. .. .. .. .. .. | 640 |
| XXIII | Commun.ty Development Projects, etc.. .. .. | 640 |
| XXV | Welfare of Sche .uled Tribes, Castes and other Backward Classes .. .. .. .. .. .. .. | 640 |
| XXVI | Irr.gation .. .. .. .. .. .. .. | 641 |
| XXVIII | Public Works—Establishment and Tools and Plant .. | 641 |
| XXIX | Public Works—Grants-in-Aid .. .. .. .. | 641 |
| XXX | Road Transport Schemes .. .. .. .. .. | 641–642 |
| XXXIV | Stationery and Printing .. .. .. .. .. | 642 |
| XXXV | Forest Department .. .. .. .. .. .. | 642 |

*B. Expenditure on Capital Accoun.*

| | | |
|---|---|---|
| XL | Capital Outlay on Industrial Development .. .. .. | 643 |
| XLI | Capital Outlay on Irrigat.on .. .. .. .. | 643 |
| XLII | Capital Outlay on Public Works .. .. .. .. | 643 |
| XLIII | Capital Outlay on Road Transport Schemes .. .. | 643–644 |
| VII | The Madras State Electricity Board Budget for 1963-64—Discuss.on—*cont.* .. .. .. .. .. .. | 644–717 |
| VIII | Papers laid on the Table of the House .. .. .. | 717 |


# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Thursday, 8th August 1963

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS

### *Relief to Goldsmiths*

*1 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to give relief for the goldsmiths affected by the Gold Control Order in our State so far?

THE HON. SRI R. VENKATARAMAN : A detailed statement[a] is placed on the table of the House.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** நான்கு கூட்டுறவு சொஸைடிகள் அமைத்து வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கக்கூடிய விபரம் முதல் பாராவில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு கூட்டுறவு சொஸைடியிலும் 50 பேர்களுக்குத் தான் வேலை வாய்ப்பு கிடைக்கும். இதன் மூலம் 200 பேர்களுக்கு மேல் வேலை கிடைக்காது. நம் ராஜ்யத்தில் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் வேலை இழந்தவர்கள் மொத்தம் எவ்வளவு பேர்கள் என்பதற்குப் புள்ளி விவரம் இருக்கிறதா, ரிபைனரி உள்பட இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முதல் பாராவில் கண்டு இருப்பது பல திட்டங்களில் ஒன்று. இந்த திட்டத்தில் "மல்ட்டி பர்பஸ் மெட்டல் சொஸைட்டி" என்பது வெள்ளி, பொன், மற்ற உலோகங்கள் எல்லாவற்றையும் வைத்து செய்யக்கூடிய "High specialised industry" அதற்காக மொத்தம் ரூ. 6,12,000 ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த ஒரு திட்டத்தின்மூலம் இந்தப் பொற்கொல்லர்களின் பிரச்னை தீர்ந்துவிடும் என்று சர்க்கார் நினைக்கவில்லை. பொற்கொல்லர்களுக்கு "specialised skill" இருப்பவர்களுக்கு, ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று அதை ஒரு திட்டமாக வைத்து இருக்கிறோம். நம் ராஜ்யத்தில் எவ்வளவு பொற்கொல்லர்களின் பிரச்னை தீர்ந்துவிடும் என்று சர்க்கார் அவர்கள் பதிவு செய்த எண்ணிக்கைதான் எங்களிடமிருக்கிறது. பதிவு செய்த அளவுக்கு சற்றேறக் குறைய 20,000 வரும் எனத் தெரிகிறது.

---

[a] Printed as Appendix I on pages 363–364 infra.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** பல உலோக கலப்படம் மூலம் தொழில் செய்ய, அதிக நுட்பமான திறமை வேண்டும் என கனம் அமைச்சர் கூறினார்கள். அதில் பயிற்சி ஏதாவது அவர்களுக்கு இருக்கிறதா? அதில் பயிற்சி கொடுக்க ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பயிற்சி இருக்கிறவர்களாக பார்த்து தேர்ந்து எடுக்க வேண்டும். தேர்ந்து எடுக்கப்பட்டவர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** செயற்கை வைரம் தயார் செய்து அதன் மூலம் நகைகள் உற்பத்தி செய்யும் தொழில் முக்கியமான தொழில். பொற்கொல்லர்களைவிட அதிகமான பேர்கள் அத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள், குறிப்பாக திருச்சி ஜில்லாவில், செயற்கை வைரத்தைக்கொண்டு நகை செய்கிறார்கள். அப்படிச் செய்வதற்கு இந்தத் தங்கம் போதுமான பதம் உள்ளதாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** போதுமான பதம் இருக்குமென்று தான் நிபுணர்கள் சொல்லுகிறார்கள். சென்னையிலே பல நகை வியபாரிகள்கூட, விகம்ஸி, வும்மடியார் போன்றவர்கள்கூட, செயற்கை வைரம் அல்லாது, நிஜ வைரத்தைக்கூட இந்தப் பொன் மூலம் கட்டமுடியும் என்று, அவர்கள் நகைகள் எல்லாம் செய்து வெளியில் வைத்து இருக்கிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** 14 காரட் தங்கம் எவ்வளவு உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது நியமிக்க உத்தேசித்திருக்கும் சுத்திகரிப்பு தொழிற்சாலைமூலம் கிடைக்கும் தங்கம் நம் ராஜ்யத்தில், குறிப்பாக செயற்கை வைரத் தொழிலுக்குப் போதுமானதாக இருக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** சர்க்கார் அமைக்க இருக்கிற கூட்டுறவு ரிபைனரி போதிய அளவு தங்கம் சப்ளை செய்ய வேண்டுமென்பது தான் திட்டம். ஆனால் எவ்வளவு தேவைப்படும் என்பது போகப் போகத்தான் தெரியும். சர்க்காரைப் பொறுத்த வரையில் போதிய அளவு கொடுக்கவேண்டும் என்றுதான் திட்டம் வைத்து இருக்கிறோம்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** பொற்கொல்லர்களுக்கு கொடுக்கும்படியான கடன் மாவட்ட ரீதியாக, கலெக்டர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா? அப்படியிருந்தால் மாவட்டத்தில் கலெக்டர்கள் இவ்விதம் தகவல் ஒன்றும் இல்லை என்று சொல்லுவது சர்க்காருக்குத் தெரியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது Assistant Director of Industries and Commerce அவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை கலெக்டரிடம் கேட்டதால் அவருக்கு தகவல் இல்லை என்று சொல்லி இருக்கலாம். அந்த விவரம் எனக்குத் தெரியாது.





**திரு. சா. கணேசன்:** பொற்கொல்லர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட தங்கம் இவ்வளவு என்று அனுமானிக்கப்பட்டு இருக்கிறதா? அல்லது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதா? அல்லது எவ்வளவு ஒதுக்கப்பட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இதைச் சர்க்கார் ஒதுக்குவதில்லை. இப்போது நடைமுறையில் 22 காரட் தங்கம் கூட எப்படி விற்கப்படுகிறது என்றால், மார்க்கெட்டில் பலர் வந்து தங்களின் பழைய நகைகளை விற்கிறார்கள். அதை வாங்கி நகை செய்கிறவர்கள் 22 காரட்டில் செய்து கொடுக்கிறார்கள். அதேபோல இந்தக் கூட்டுறவு ரிபைனரி மார்கெட்டில் இருக்கிற தங்கத்தை வாங்கி அதை ரிபைன் செய்து 14 காரட்டாக மாற்றி சப்ளை செய்யும்.

**திரு. சி. பொன்னுசாமி:** கனம் சாபாநாயகர் அவர்களே, இப்போது 20,000 பொற்கொல்லர்களுக்கு எவ்வளவு காலத்திற்குள்ளாக பயிற்சி அளிப்பது, வேலை வாய்ப்பு அளிப்பது என்று ஒரு கால வரையறையை ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்த விதமான திட்டம் இருக்கிறது. கனம் அங்கத்தினர் மேஜை மீது நான் வைத்து இருக்கும் ஸ்டேட்மெண்டில் 5, 6, 7, 8, பாராக்களைப் பார்த்தால், என்னென்ன திட்டங்கள், என்னென்ன வேலைகள் செய்வதற்கு ஆன பயிற்சி எல்லாம் கொடுக்கப்படுகிறது என்பது தெரியும்.

**திரு. கி. இரா. சம்பந்தம்:** இந்த 14 காரட் தங்கம் நகை செய்யும் பொற்கொல்லர்கள், பத்தர்களுக்கு சரியாக கொடுக்கப்படவில்லை. ஆகவே அவர்கள் வேலை செய்ய முடியாமல் இருக்கிறார்கள். கடைகளில் அந்த இடத்தில் வெள்ளி சாமான்கள் பெருவாரியாக வைத்து இருக்கிறார்களே தவிர, இன்னும் 14 காரட் தங்க நகைகள் அதிகமாக வைக்கப்படவில்லை. 14 காரட் தங்கம் போதுமான அளவு அவர்களுக்கு கிடைக்கச் செய்ய சர்க்கார் முன் வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் ஒரு தவறான அடிப்படையில் கேள்வி போட்டிருக்கிறார்கள் என நினைக்கிறேன். எந்தக் காலத்திலும் சர்க்கார் பொற்கொல்லர்களுக்கு தங்கம் கொடுத்தது கிடையாது. பொற்கொல்லர்கள்தான் தங்கத்தை மார்க்கெட்டில் வாங்கியிருக்கிறார்கள். 14 காரட் தங்கம் கிடைக்கிறதா என்று பார்த்தால், பம்பாயில் கிடைக்கிறது. அதைப் பெரிய வியாபாரிகள் வாங்கி வைத்துக்கொண்டு சென்னையில் உபயோகிக்கிறார்கள். சென்னையில் கிடைப்பதற்காகத்தான் நாம் இப்போது "ரிபைனரி" வைப்பதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து போதுமான அளவு 14 காரட் தங்கம் விநியோகம் செய்ய முடியுமா என்பதையே சந்தேகத்திற்குக் கொண்டுவந்து விட்டார்கள். வசதி இருக்கிற பெரிய கம்பெனிகள்தான் பெற

முடியும், மார்க்கெட்டில் விற்பனையாகிற 22 காரட் தங்கத்தை வாங்கித்தான் 14 காரட் தங்கமாக மாற்றுவது என்றால் இந்த கூட்டுறவு நிறுவனம் நடத்துவதற்கு கூட போதுமான தங்கம் கிடைக்குமா என்பது சந்தேகம். 22 காரட் தங்கம் கொள்முதல் செய்வதற்கு, அதை சேமித்து வைத்து இருப்பவரிடமிருந்து பெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கொள்முதல் செய்ய இப்போது சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் இருந்து 22 காரட் தங்கத்தை, 14 காரட் தங்கமாக மாற்றி நகை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த தங்க கட்டுப்பாடு திட்டமே நாட்டிலுள்ள மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதாலும் இந்தத் தங்கக் கட்டுப்பாட்டால் பல்லாயிரக் கணக்கான பேர்கள் வேலையிழந்து இருந்தும், இந்த திட்டம் தோல்வி அடைந்து இருக்கிறது என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்ளுமா? அப்படி ஒப்புக் கொண்டால் மத்திய அரசிடம் இதை கைவிட வேண்டும் என்று சிபாரிசு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தங்கக் கட்டுப்பாட்டால் ஏற்பட்ட நிர்ப்பந்தங்களுக்கு எந்த அளவுக்கு நம் ராஜ்யத்தில் செவ்வையாக சமாளிக்க முடியுமோ, அந்த அளவுக்கு சமாளித்துக் கொண்டு வருகிறோம் என்பது எனது திட்டவட்டமான அபிப்பிராயம். அதற்காக பலவிதமான உதவிகளை நாம் கொடுத்து இருக்கிறோம் என்பது ஸ்டேட்மெண்டிலிருந்து தெரியும். கட்டுப்பாடு ஒன்றுமே வேண்டாம் என்று சொல்வது வேறு இடத்தில் தான் பேசவேண்டும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** பொற்கொல்லர்களை திரும்பத் திரும்ப அதே தொழிலில் ஈடுபடுத்துவதற்கு முயற்சிப்பதைக் காட்டிலும் வேறு துறைகளில், சர்க்கார் நிலங்களில், விவசாயிகளாக மாற முன் வந்தால் சர்க்கார் நிலங்களை கொடுத்து அவர்களை ஊக்குவிக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** என் சொந்த அபிப்பிராயமும் அதுதான். ஏதோ பழைய காலத்தில் நகை போட்டுக்கொண்டு இருந்தோம். இந்தத் தொழிலை வருங்காலத்தில்கூட தொடர்ந்து செய்ய வேண்டுமென்பது என்னைப்பொறுத்த வரையில், அவ்வளவு பொருத்தமில்லை என நினைக்கிறேன். அதற்காக அவர்களுக்கு சர்க்கார் எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்கிறது. அவர்களுக்கு இண்டஸ்டிரியல் ட்ரெயினிங் ஸ்கூலில் வேண்டிய இடங்கள் ஒதுக்கி இருக்கிறோம். வயது அதிகமாக இருந்தால்கூட அதற்காக "கன்செஷன்" கொடுத்து இருக்கிறோம். புதிய தொழில்களில் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்து இருக்கிறோம். கனம் அங்கத்தினர் சொன்னபடி நிலம் ஏதாவது இருக்குமானால் அதை அவர்களுக்குக் கொடுக்க முடியுமா என்றுகூட சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. இந்த சமூகத்தில் தலைவர்களாக இருக்கிறவர்கள் வருங்கால சந்ததியினருக்கு அவர்கள் தொழிலை மாற்றி அமைக்கக் கொஞ்சம் பிரசாரம் செய்தால், அது நாட்டிற்கு நல்லதாக இருக்கும் என நினைக்கிறேன்.



**திரு. எம். எஸ். மணி :** திருச்சி மாவட்ட பொற்கொல்லர்கள் கடன் கேட்டும், நிவாரணம் கேட்டும், அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியும் இதுவரையில் திருச்சி மாவட்டத்தில் உள்ள பொற்கொல்லர் ஒருவருக்குக்கூட கடன் வசதி அளிக்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? அவர்களிடமிருந்து இதுவரையில் ஏதேனும் புகார் வந்திருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒருவருக்குக்கூட வரவில்லை என்று சொல்வது சரியல்ல. இந்த ராஜ்யத்தில் ரூ. 2,18,000 State Aid to Industries Act மூலமும், ரூ. 1,44,000 கடன் மூலமாகவும் ஜூலை 15 வரை வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு பிறகு ஒரு மாதம் ஆகிறது. இன்னும் மேற்கொண்டும் பணம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். நான் திருச்சிக்குச் சென்று கொண்டிருந்தபோது, பணம் கிடைக்கவில்லை என்று யாரும் சொல்லவில்லை. அதிகமாக வேண்டுமென்றுதான் சொன்னார்கள்.

**திரு. கோ. சி. மணி :** கும்பகோணம் வட்டாரத்திலுள்ள பொற்கொல்லர்கள் 14 காரட் தங்கம் இப்போது கிடைக்கவில்லை என்று நேரிடையாக முறையீடு செய்ததாகச் சொல்லப்படுகிறது, அது உண்மையா? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 14 காரட் தங்கம் இன்னும் கிடைக்கவில்லை. அதற்காகத்தான் 'ரிபைனரி' வைக்க ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

**திரு. செ. மாதவன் :** State Aid to Industries Act கீழ் கொடுக்கப்படும் கடன்களுக்கு, ஒவ்வொரு அப்ளிகேஷனுக்கும் எவ்வளவு பணம் கட்டவேண்டும் என்று ஒரு விதி இருக்கிறது. அது இப்போது அமல் நடத்தப்பட்டு வருகிறது. பொற்கொல்லர்களுக்கு அமுலாக்கப்படும்போது அதிலிருந்து விதிவிலக்கு கிடைக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இரண்டு விதமான கடன் திட்டம் இருக்கிறது. ஸ்டேட் எய்டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்ட்டின் கீழே மனுக் கொடுக்கும்போது 25 ரூபாய் அவர்கள் கட்டணம் கட்ட வேண்டும். ஏனென்றால் அதுதான் இப்போது சட்டத்தில் இருக்கிறது. ஆனால் 1,000 ரூபாய் வரையில் ஜாமீன் இல்லாமல் கடன் கொடுக்கலாம் என்ற பொற்கொல்லர்களுக்கான கடன் திட்டத்தின் கீழ், எந்தவிதமான கட்டணமும் செலுத்த வேண்டிய தில்லை என்று சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறது.

[8th August 1963

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in addition to these relief measures for the goldsmiths, what are the relief measures proposed to be taken for the agriculturists in the rural areas where they are not able to get any loan on the pledge of their jewels on account of the Gold Control Order?

THE HON. SRI R. VENKATARAMAN : Co-operative societies are available.

திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, பம்பாயில் 14 காரட் தங்கம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதன் மூலம் பெரிய வியாபாரிகள் சென்னையிலும் 14 காரட் தங்கம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார். சென்னையில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டு இருக்கிற அளவில் திருப்தி. ஆனால் மற்ற ஜில்லா பிராந்தியங்களிலேயுள்ள ஏராளமானவர்களுக்கும் கிடைப்பதற்கு என்ன திட்டம் இருக்கிறது? என்ன செய்யப் போகிறார்கள்? இப்படி கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம், 22 காரட் தங்கத்திற்கு மார்க்கெட்டில் இயல்பான விலையைவிட அதிகமாக அதாவது கிட்டத்தட்ட பவுன் எடை ரூ. 125 வரையில் விற்பதை நான் கண்ணால் பார்த்து இருக்கிறேன். காரணம் அதுதானா? அப்படியானால் அதை வாங்கி 14 காரட் தங்கமாக மாற்றி கிராமப் பிராந்தியங்களிலும் கிடைக்க ஏற்பாடு செய்யப் பெறுமா?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : கேள்வி முதல் பகுதி, பம்பாய் ராஜ்யத்தில் ரிபைனெரி இருப்பதன் காரணமாக, தங்க கண்ட்ரோல் வருவதற்கு முன்னாலேயே அங்கு ரிபைனரி வைத்து நடத்தி கொண்டு இருக்கிறார்கள். அதனால்தான் இப்போது அவர்கள் 14 காரட் தங்கம் உற்பத்தி செய்ய முடிகிறது. சென்னை நகரத்திலே இவ்வளவு தங்கம் நாம் உபயோகித்தாலும், நம் நகரத்திலே இது வரையில் ரிபைனரி வைக்கவில்லை. அதனால்தான் புதிதாக ரிபைனரி வைக்க வேண்டியிருக்கிறது.

(திரு. சா. கணேசன் குறுக்கீடு)

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ஸ்டேட்டில் லைசென்ஸ்ட் ரிபைனரி கிடையாது. அடுத்தபடியாக தங்கத்தின் விலை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். தங்கத்திற்கு விலை கட்டுப்பாடு கிடையாது. தங்கம் வேண்டுபவர்கள் சற்று அதிகமாக விலை கொடுப்பதைப் பற்றி நாம் கண்ணீர் சிந்த வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : 22 காரட் தங்கம் கள்ள மார்க்கெட்டில் கிடைத்தும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தும் கள்ள மார்க்கெட் செய்கிறவர்களைப் பற்றிக்கூட அரசாங்கத்திற்கோ, போலீசிற்கோ தெரியபடுத்தாதிருக்கின்றவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த முறையில் கள்ள மார்க்கெட் என்று விளக்கினால் பதில் சொல்ல முடியும்.



8th August 1963]

கனம் சபாநாயகர் : கள்ள மார்க்கெட் செய்கிறவர்களுக்கு அல்லாமல் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கா தண்டனை? (சிரிப்பு).

திரு. டி. கார்ச்சா கவுடர் : பெங்களூரிலுள்ள எச்.எம்.டி. கடியார தொழிற்சாலையில் உள்ளதுபோல் நம் மாநிலத்திலும் ஒரு தொழிற்சாலை அமைத்து வேலையிழந்த பொற்கொல்லர்களுக்கு வேலை வாய்ப்பு அரசாங்கம் செய்து கொடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கடியாரம் செய்வது மட்டும் தொழிலல்ல, கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டில் பாரா 6, 7, 8 எல்லாவற்றிலும் என்னென்ன தொழில்கள் நம் ராஜ்யத்தில் உகந்ததாக செய்ய முடியும் என்று சொல்லப்பட்டிருப்பது தெரியும். அதை இன்னும் அதிகமாக விரிவுபடுத்த அவசியம் ஏற்பட்டால் செய்யலாம்.

திரு. எம். எஸ். மணி : தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடன் கொடுக்கப்படும் என்று அமைசர் அவர்கள் சொன்னார்கள். தங்கக் கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டவர்களில் தெருமுனை வைரத் தொழிலாளர்களையும், ஆபரணக்கடைகளில் வேலை செய்யும் குமாஸ்தாக்களையும் சேர்த்துக் கொள்ள அமைச்சர் முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப் பற்றியும் ஆலோசனை செய்துகொண்டு இருக்கிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா : கனம் அமைச்சர் அவர்கள், பொற்கொல்லர்களுக்கு கடன் கொடுப்பதாகக் கூறினார்கள். எந்த நிபந்தனையின் பேரில் கொடுக்கப்படுகிறது? சொத்து ஜாமீன் இல்லாமல் நபர் ஜாமீன் மீது கடன் கொடுக்க சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 25 தொழில்களை விளக்கி நாம் ஒரு அறிக்கை விட்டு இருக்கிறோம். பலசரக்கு கடை வைப்பது, சைக்கிள் ஷாப் வைப்பது, சிறு சிறு கடைகள் வைப்பது, சிறு, சிறு தொழில்கள் நடத்துவது போன்று 25 தொழில்கள் போட்டு அந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறோம். அந்தத் தொழிலைச் செய்வதற்கு யார் முன் வந்தாலும் ஜாமீன் இல்லாமல் கடன்கொடுக்கிறோம். நபர் ஜாமீன்கூட கிடையாது.

திரு. கி. இரா. சம்பந்தம் : 14 காரட் தங்கம் எல்லோருக்கும் தேவைப்படுகிறது. தனிப்பட்ட முறையில் தமிழ் நாட்டில் அதை உற்பத்தி செய்ய சர்க்கார் அனுமதி தருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யார் முன் வந்தாலும் கூட்டுறவு முறையில் ரிபைனரி துவக்கி வைக்க சர்க்கார் ஊக்குவிக்கும்.

திரு. வை. சங்கரன் : இந்த அறிக்கையின்படி பார்த்தால், கூட்டுறவு சங்கங்களின் மூலமாக 50 பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று தெரிகிறது. ஆனால், கடன் தொகை 50 முதல் 100 பேர்

[8th August 1963

களுக்குத்தான் கிடைக்கும் என்று இருக்கிறது. பல ஆயிரக் கணக்கானவர்கள் வேலை இழந்திருப்பதால் மற்றவர்களுக்கு என்ன பரிகாரம் செய்து கொடுப்பதாய் சர்க்கார் உத்தேசித்து இருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முதலில், கொடுத்திருக்கும் சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்ட பிறகு, பாக்கி எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைச் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தங்கக் கட்டுப்பாடு கொண்டு வருகிற சமயத்தில், 'எண்பது ரூபாய்க்கு ஒரு சவரன் என்று விற்றுக்கொண்டிருந்ததை, அறுபது ரூபாயாகக் குறைக்க வேண்டும், கள்ளக் கடத்தலைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் கொண்டுவரப்பட்டது' என்று கூறப்பட்டது—என்பது அனைவரும் அறிந்த விஷயம். ஆனால், தங்கக் கட்டுப்பாடு கொண்டு வந்ததற்குப் பிறகு, தங்கத்தின் விலை 60 ரூபாய்க்குப் பதிலாக 120 ரூபாய், 135 ரூபாய் என்று அதிகரித்ததன் காரணமாகவும், கள்ளக் கடத்தல் தடுக்கப்படாமல் நாட்டிலே தேவையான அளவிற்குக் கள்ளத்தனமாகத் தங்க நகை வியாபாரம் நடைபெறுவதை அறிந்தாகிலும், நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு 'இந்தக் கொள்கையை விட்டுவிடவேண்டும்' என்று சிபார்சு செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் கேட்கின்ற கேள்வி மத்திய சர்க்காரிலே போடவேண்டிய கேள்வியாகும். ஒரு சர்க்கார் மற்ற சர்க்காருக்கு என்ன சிபார்சு செய்கிறது என்பதெல்லாம் வெளியிடக்கூடியதல்ல.

**திரு. இரா. நாராயணன் :** தங்கக் கட்டுப்பாட்டினால் சிற்றூர்களிலுள்ள பொற்கொல்லர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். அவர்கள் ஊருக்குள்ளேயே இருக்கிறபடியால், பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திலே அவர்களுக்கு ஏதாவது வேலை வாய்ப்புக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவர்கள் அஸிஸ்டென்ட் டைரக்டர் ஆஃப் இன்டஸ்ட்ரீஸைப் போய்ப் பார்த்தால் அவர்கள் என்ன செய்ய முடியும் என்று ஆலோசனை கூடக் கூறுவார்கள்.

**திரு. சி. பொன்னுசாமி :** இப்பொழுது பொற்கொல்லர்களுக்கு நாம் என்ன என்ன சலுகைகளைச் செய்திருக்கிறோம், அவர்களுக்கு என்ன என்ன திட்டம் வைத்திருக்கிறோம் என்று எடுத்துக்காட்டும் வகையிலும், 14 காரட்டில் எப்படி எப்படிப் பல நகைகளைச் செய்ய முடியும் என்று எடுத்துக்காட்டும் வகையிலும், குறிப்பிட்ட சில நகரங்களில் Exhibit செய்து விளம்பரம் செய்ய சர்க்கார் நிலையங்களை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விதமான அவசியம் இப்பொழுது இல்லை.



8th August 1963]

### *எக்ஸ்பிரஸ் பஸ்கள்*

* 41 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் தனியார் துறையில் ஓடும் எக்ஸ்பிரஸ் பஸ்கள் எத்தனை ?

(இ) எக்ஸ்பிரஸ் பஸ்கள் ஓடும் ரூட்டுகள் ஒவ்வொன்றிலும் 1961-62-ல் ஸ்பேர் பஸ்கள் எத்தனை நாட்கள் ஓடி இருக்கின்றன ?

(உ) எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கும், ஸ்பேர் பஸ்ஸுக்கும் உள்ள [illegible] வித்தியாசங்கள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (c) A statement * is placed on the table of the House.

**திரு. து. ப. அழகமுத்து :** சாதாரண பஸ்களைவிட எக்ஸ்பிரஸ் பஸ்களில் உட்காரும் இடங்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், எக்ஸ்ப்ரஸ் பஸ்களுக்குப் பதிலாகப் போகும் சாதாரண பஸ்களிலும் அதிகக் கட்டணம் வசூலிக்கும் வாய்ப்பு இருப்பதால், வேண்டுமென்றே பஸ் முதலாளிகள் ஸ்பேர் பஸ்களை ரூட்களில் [illegible]கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

### *Long distance bus routes*

* 42 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) a list of long distance bus routes opened by the State Transport Department during 1963–64; and

(b) the details of routes under consideration to be opened?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Madras to Nagapattinam (via) Pondicherry.

Salem to Ootacamund.

(b) Routes within Madras State :

1. Madurai to Krishnagiri (via) Salem.
2. Coimbatore to Krishnagiri (via) Mettur Dam.
3. Tiruchirappalli to Coimbatore (via) Dharapuram.
4. Madras to Neiveli (via) Panruti.
5. Coimbatore to Ramanathapuram (via) Dharapuram and Madurai.
6. Salem to Cuddalore (via) Vriddhachalam and Neiveli.
7. Nagappattinam to Ramanathapuram (via) Pattukottai and Karaikudi.

*Inter-State routes* :

1. Madras to Vijayawada.
2. Tiruchirappalli to Bangalore.
3. Madras to Bangalore (via) Chittoor and Palmaner.

---

* Printed as Appendix II on pages 65–368 infra.

**திரு. ஜே. மாதா கவுடர்:** உதகையிலிருந்து கொச்சின் வரைக்கும் இன்டர்-ஸ்டேட் ரூட்டாக எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டுமென்று ஏற்கெனவே கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கிறேன். அதைப்பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?,

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** மெமொராண்டம் எழுதிக் கொடுத்தால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** திருச்சியிலிருந்து பங்களூர் வரைக்கும் போகக்கூடிய ரூட், மைசூர் அரசாங்கத்தினுடைய சம்மதம் பெற்று வருவதற்குக் காலதாமதம் ஆகும் ஆதலால், அது வரையில், திருச்சியிலிருந்து சேலம் வழியாகக் கிருஷ்ணகிரி வரைக்குமாவது விடுவதற்கு முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இன்டர்-ஸ்டேட் ரூட்ஸ் எல்லாம், மற்ற ராஜ்யங்களின் சம்மதத்தின் பேரில்தான் ஆரம்பிக்க முடியும். திருச்சியிலிருந்து பங்களூர் வரைக்கும் ட்ராஃபிக் இருக்கும். ஆனால், திருச்சியிலிருந்து கிருஷ்ணகிரிக்கு ட்ராஃபிக் இருக்காது. அதனால், நமக்கு வேண்டிய ட்ராஃபிக் இருக்குமா என்று பார்த்துத்தான் முடிவு செய்ய முடியும்.

**திரு. வை. சங்கரன்:** சர்க்கார் எக்ஸ்பிரஸ் பஸ்களில் கால் வைக்கும் இடம் மிகவும் குறுகலாக இருக்கிறது என்று பொதுவான புகார் இருக்கிறது. அதற்குச் சீக்கிரமாக ஒரு பரிகாரம் செய்ய உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அம்மாதிரி புகார் எங்களுக்கு வரவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** வேதாரண்யத்தில் புதிதாகத் தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வேதாரண்யத்திலிருந்து சென்னைக்கு ஒரு துரித பஸ் விடுவதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பஸ் விடுவதற்கெல்லாம் நிதி எவ்வளவு இருக்கிறது என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். சாதாரணமாக ஒரு பத்து ரூட்களுக்கு மேலே ஒரு வருஷத்திலே புதிதாக விட முடியாது. ஒவ்வொரு ஊருக்கும் பஸ் அவசியம்தான். சந்தேகம் இல்லை. எவ்வளவு தூரம் சாத்தியமோ அதைச் சர்க்கார் செய்யும்.

**திரு. மா. இராசாங்கம்:** இன்டர்-ஸ்டேட் ரூட் என்ற வகையில் மதுரையிலிருந்து கோட்டயத்திற்குப் பஸ் போட உத்தேசம் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அது எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்பொழுது உத்தேசம் இல்லை. கேரள இராஜ்யத்துடன் நாம் இப்பொழுது கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருப்பது இந்த ரூட் பற்றியல்ல.



**திரு. எம். தண்டாயுதபாணி:** சென்னையிலிருந்து தஞ்சைக்குச் செல்லும் பஸ்கள் மூன்றும் ஒரே வழியில் செல்வதால், அந்த மார்க்கத்தை மாற்றி, மாயவரம்-மன்னார்குடி-பட்டுக்கோட்டை வழியாக தஞ்சை செல்ல வழி செய்ய முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்பொழுது அந்த உத்தேசம் இல்லை.

**திரு. கோ. சி. மணி:** கும்பகோணத்திலிருந்து திண்டுக்கல்லுக்கு ஒரு துரித பஸ் விடவேண்டுமென்று வியாபாரிகள் சங்கத்தின் சார்பாகவும் நகராட்சியின் சார்பாகவும் அமைச்சருக்கு மகஜர் எழுதியனுப்பப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது. அது எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அது நிதி வசதியைப் பொருத்திருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** உதகையிலிருந்து திருச்சிக்கு ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் விடப்போவதாக ஏற்கனவே கனம் அமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்கள். அந்தத் திட்டம் எப்பொழுது அமுலுக்கு வரும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பார்த்துப் பதில் சொல்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி:** திருச்சியிலிருந்து விழுப்புரம் மார்க்கமாக வேலூருக்கு ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் போகிறது. அதில் ஐந்து பாஸஞ்சர்களுக்குமேல் செல்வதில்லை. புதுக்குடி, விழுப்புரம் போனதற்குப் பிறகுதான் அதிலே பாஸஞ்சர்கள் ஏறுகிறார்கள். அந்த மார்க்கத்தை திருவண்ணாமலை வழியாக வேலூர் செல்லும்படி மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது ஜனங்களுடைய சௌகரியத்தைப் பொருத்தது. சில இடங்களில் பாசஞ்சர்கள் குறைவாக இருந்தாலும், அந்த ரூட் வழியாகச் செல்லவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால், சர்க்கார் நிச்சயமாக அந்த வழியாக பஸ் விடுவார்கள். 'பாஸஞ்சர் இல்லை' என்பதற்காக ரூட்டை மாற்றுவது இல்லை.

**திரு. ஏ. ஆறுமுகம்:** பார்லிமென்ட் அங்கத்தினர்களுக்கு ரயிலில் போக முதல் வகுப்புப் பாஸ் கொடுப்பதுபோல் சர்க்கார் பஸ்களில் சட்டசபை அங்கத்தினர்கள் போவதற்குப் பாஸ் கொடுக்கப்படுமா?

(பதில் இல்லை.)

**திரு. ஜே. மாதா கவுடர்:** ஏர்-கண்டிஷன் பஸ் விடுவதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா? நீலகிரியிலிருந்து 'ப்ளெயின்ஸ்'-க்கு பஸ் வந்ததும், பிரயாணிகளுக்கு மிகவும்

கஷ்டமாக இருக்கிறது. ஓரே புழுக்கமாக இருக்கிறது. உதகையிலிருந்து வரும் பஸ்களையாவது ஏர்-கண்டிஷன் செய்ய அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஏர்-கண்டிஷன் பஸ் விட வேண்டும் என்பது என்னுடைய அவா. ஆனால், அயல்நாட்டுச் செலாவணியைச் செலவழித்து ஏர்-கண்டிஷன் பஸ் விடுவது நியாயம் அல்ல ; தர்மம் அல்ல. அதனால்தான் அதை நிறுத்தி வைத்திருக்கிறோம்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** இப்பொழுது இந்த ஸ்டேட் பஸ்ஸில் நெடுந்தூரப் பாஸஞ்சர்கள் எல்லோரும் வருவதன் காரணமாக, அவர்கள் இடையில் 'ஈஸ்' பண்ணிக்கொள்வதற்கோ, முகம் கழுவிக் கொள்வதற்கோ வசதி இதுவரையில் செய்து கொடுக்கப்படவில்லை. அதைச் செய்துகொடுப்பதற்கு இப்பொழுது முன்வருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப் பஸ்ஸிலேயே செய்யவேண்டுமென்று சொன்னால், அது அவ்வளவு சௌகரியமாக இருக்காது என்று நான் நினைக்கிறேன். ஆனால், பஸ்கள் நிற்கின்ற 'ஸ்டாப்'-களிலே அப்படிப்பட்ட வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்றால், அதற்கு வேண்டிய வசதிகள் இப்பொழுது செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, விழுப்புரத்தில் அம்மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாமண்டூரிலும் அம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறது. எந்த எந்த இடத்தில் வசதி செய்துகொடுக்க முடியுமோ அந்தந்த இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** அதிகமான பஸ்கள் விடுவதற்கு சர்க்கார்த் துறையில் நிதி வசதி இல்லாவிட்டால், ஜனங்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு, தனியார்த் துறையில் பஸ்களைவிட அரசாங்கம் கவனிக்குமா ?

(பதில் இல்லை.)

**திரு. சா. ராமசாமி :** திருச்சியில் இருந்து சிதம்பரம் வழியாகக் கடலூருக்கு அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டுமென்று திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறை-
9-00 a.m. வேற்றப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** என்னிடத்தில் அதுபற்றித் தகவல் இல்லை.

**திரு. எஸ். ஜே. இராமசாமி :** இப்போது ஓடிக் கொண்டிருக்கிற நீண்ட தூர பஸ்களில் ஒரு பொழுதுபோக்காகவாவது ரேடியோ வைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ரேடியோ வைப்பது விபத்தை ஏற்படுத்துகிறது என்ற கருத்து இருப்பதனால் அது வைக்கப்படுவதில்லை.





**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** புதுவையில் இருந்து கடலூர் வழியாக பெங்களூருக்கு பஸ்கள் போகின்றன. அந்த ரூட்டின் மூலம் பஸ் முதலாளிக்கு எழுநூறு ரூபாய்க்குமேல் கலெக்ஷன் ஆகிறது. மேலும் கடலூர் பிரயாணிகளுக்கு கடலூரில் இடம் கிடைப்பதில்லை. ஆகவே நம்முடைய அரசாங்க பஸ்ஸை கடலூர் வழியாகவும், ஹோசூர் வழியாகவும் விடுவதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது அது ஆலோசனையில் இல்லை.

**திரு. மு. சண்முகம் :** நீண்ட தூர பஸ்களில் பின் வரிசையில் ஐந்து பேர்களுக்கு மேல் உட்கார வசதி கிடையாது. ஆனால் இப்போது ஆறு பேர்கள் உட்காரும்படியாகச் செய்திருப்பதனால் இட நெருக்கடியாக இருக்கிறது. ஆகவே அந்த வரிசையில் ஐந்து பேர்கள் மட்டுமே உட்கார உத்தரவு போடுவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஐந்து பேர்கள்தான் உட்கார வேண்டுமென்று உத்தரவு போட்டாகிவிட்டது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** நீண்ட தூர பஸ்கள் இன்ன இன்ன இடத்தில் நிற்கும் என்று ஸ்டாண்டுகள் நிர்ணயித்திருக்கிறார்கள். சில இடங்களில் (Bus stops) ஏற்படுத்தினால் பிரயாணிகளை ஏற்றிக்கொள்வதற்காகவாவது இடையில் நிறுத்தலாம். அதை சர்க்கார் கவனிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்போது அது எக்ஸ்பிரஸ் பஸ்களாக இருக்காது. லோக்கலாகப் போய்விடும்.

**புலவர் கா. கோவிந்தன் :** "எங்களுக்கு பஸ்களில் குளிர் சாதன வசதி செய்து தரவேண்டும், ஷேவ் பண்ணிக்கொள்ள வசதி செய்து தரவேண்டும்" என்பதாகவெல்லாம் சில அங்கத்தினர்கள் கேட்டார்கள். நாங்கள் அப்படி ஒன்றும் கேட்கவில்லை.

**கனம் சபாநாயகர் :** யாரும் அதுமாதிரியாகச் சொல்லவில்லை. அந்தமாதிரி கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதாகச் சொல்வது சரியல்ல.

**புலவர் கா. கோவிந்தன் :** நாங்கள் அந்தமாதிரி எந்த வசதியும் கேட்கவில்லை. மாலை நான்கு மணிக்கு மேல் செய்யாருக்குப்போக பஸ் கிடையாது சென்னையிலிருந்து மாலை ஆறு மணிக்குப் புறப்பட்டு செய்யார் அடைய அரசாங்க பஸ்ஸை விட ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தமாதிரியான விஷயங்களுக்கு எல்லாம் என்னிடத்தில் தகவல் இருக்குமென்று எதிர்பார்ப்பது கஷ்டம். ஏதாவது வசதி வேண்டுமென்று சொன்னால் எழுதி அனுப்பினால் கவனிக்கத் தயார்,

[8th August 1963

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** திருச்சியில் இருந்து சென்னை வருகிற பஸ்கள் இடையிலே தங்குகிற குறிப்பிட்ட இடங்களில் சாப்பாட்டு வசதியே சரியாக இல்லை. அதனால் சாப்பாட்டு வசதி யுள்ள இடங்களில் ஸ்டாப்புகளை ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விவரம் எனக்குத் தெரியாது. எழுதி அனுப்பினால் விசாரிக்கிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** எக்ஸ்பிரஸ் பஸ் ஸ்டாப்புகள் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது ? ஊரின் ஜனத்தொகை அடிப்படையிலா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சாதாரணமாக 25 மைல் களுக்குள்ளாக ஓரிடத்தில் நிறுத்தக்கூடாது என்பது கொள்கை. ஆனால் ரூட்டின் மொத்த தூரத்தை எடுத்துக்கொண்டு அதில் எத்தனை ஸ்டாப்புகளை வைக்கலாம் என்பது தீர்மானிக்கப் படுகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நீண்ட தூர பஸ்களில் பிரயாணி களுடைய லக்கேஜுகளை வாங்கி பஸ்ஸின் மேல் போட்டு விடுகிறார்கள். ஆனால் இடையில் இறங்கும்போது ஒருவர் மற்றொரு வருடைய பெட்டியை எடுத்துக்கொண்டு இறங்கிவிடக்கூடும். ஆகவே ஆகாய விமானத்தில் வைத்திருப்பது போல லக்கேஜை ஒரு பாசஞ்சரிடமிருந்து வாங்கி மேலே போடும்போது அவரிடத் திலும் அதற்கு ஒரு ரசீது கிழித்துக்கொடுத்து இன்னொரு ரசீதை அவருடைய லக்கேஜில் வைக்க ஏற்பாடு செய்தால், பின்னால் பாசஞ்சருக்கு ( claim ) செய்ய வசதி ஏற்படும். இப்படிச் செய் வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தமாதிரியான கோரிக்கை வந்தால் பரிசீலனை செய்கிறோம்.

### ஜீப் மாடல் பஸ்கள்

*** 43 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் ஜீப் மாடல் பஸ்களை எந்தெந்த மார்க்கங்களில் விடுவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Due to the Emergency, all jeep type vehicles have been frozen. Introduction of jeep buses will not therefore be possible.

### கப்பல் பிரயாண டிக்கட்டுகள்

*** 44 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மலேயாவிற்குச் செல்லும் கப்பலுக்கான டிக்கட்டுகள் கள்ள மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கப்படுவது உண்மையா ?



8th August 1963]

(இ) இடைத் தரகர்களை அகற்றி பிரயாணிகளுக்கு நேரடி யாக டிக்கெட் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தக் குழப்பங்கள் எல்லாம் டிராவல் ஏஜென்ஸி மூலம் வருகிறது. ஆகவே டிக்கெட்டுகளை டிராவல் ஏஜென்ஸி மூலம் இல்லாமல் நேரிடையாகக் கொடுக்க வசதி செய்ய முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நேரிடையாகக் கொடுக்கின்ற வசதியும் இருக்கலாம். ஆனால் இப்போதுள்ள முறைப்படி தவறு ஏற்பட்டால் அதை சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினால் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். தகுந்த நடவடிக்கையை எடுத்துக்கொண்டும் வருகிறார்கள்.

### பள்ளி இறுதித் தேர்வு

*** 45 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளியிறுதித் தேர்விற்கு மாணவர்களை அனுப்பு வதில் வடிகட்டும் முறையைக் கைவிடும்படி அரசு வெளியிட்ட உத்திரவை மதியாது வடிகட்டும் முறையினை மேற்கொண்ட பள்ளி கள் எத்தனை ?

(இ) அவைகளின்மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட நட வடிக்கை என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) & (இ) செலெக்‌ஷன் பரீட்சையில் மாணவர்களை நிறுத்தவேண்டாம் என்று அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளுக்கு மட்டுமே கல்வித் துறை நெறியாளர் அந்தரங்க ஆணை அனுப்பினர். எனவே அரசாங்க ஆணையை மதிக்காமலிருந்த பிற நிறுவனங்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது என்ற கேள்விக்கே இடமில்லை.

(a) & (b) : The Director of Public Instruction has issued confidential instructions only to Government High Schools not to detain pupils. The question of any institution disregarding the orders or of Government taking any action on such an institution does not arise.

**புலவர் கா. கோவிந்தன் :** அரசாங்கம் ஒரு உத்தரவு வருக் கின்ற நேரத்தில் அது அரசுத் துறையால் நடத்தப்படுகின்ற பள்ளிக்கு மட்டும்தான் பொருந்தும், மற்ற பள்ளிகளுக்குப் பொருந்தாது என்ற நடைமுறையை மாற்றி எல்லாப் பள்ளி களுக்கும் பொருந்துமாறு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது கல்வி இயக்குநர் பிறப் பித்த உத்தரவுதான். அரசாங்கம் பிறப்பித்த உத்தரவு என்றால் எல்லாப் பள்ளிகளுக்கும் பொருந்தும். கல்வி இயக்குநர் பிறப்

பித்த உத்தரவை சில பள்ளிகள் பின்பற்றவில்லை. எனினும் இந்தப் பிரச்னையை மாநில கல்வி ஆலோசனைக்குழு பரிசீலனை செய்த போது இதுமாதிரி நிறுத்துவது என்பதே வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டார்கள். ஆகவே இதுதான் அரசாங்கத்தின் கொள்கை. இனி இவ்விதியை எல்லாப் பள்ளிகளும் அனுசரிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

*Sales Tax (detection of evasion)*

*46 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Commissioner of Commercial Taxes has been empowered to sanction any rewards to those who help detect evasion of sales tax; and

(b) if so, (i) how many persons received such rewards till 31st December 1962; and (ii) the total amount so disbursed?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) (i) Eight persons.

(ii) Rs. 1,674-93 nP.

**திரு. கே. ஏ. மதியழகன் :** விற்பனை வரி மூலமாக பலகோடி ரூபாய் ஏமாற்றப்படுகிறது, இவேட் செய்யப்படுகிறது என்று மேல் சபையில் திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பேசினார்கள். இவேட் செய்யப்படுவது மிக ஏராளமாக இருக்க, இப்படிக் கண்டு பிடித்தது மிகக் குறைவாக இருக்கக் காரணம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கேட்கப்பட்டிருக்கும் கேள்வி எவ்வளவு ரிவார்டாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தான். யார் யார் விற்பனை வரியை ஒளிப்பவர்களைக் கண்டுபிடித்துக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு வெகுமதி கொடுக்கப்படுகிறது. அதைத்தான் நான் சொன்னேன்.

*Sheep farm*

*47 Q.—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the progress made so far in the sheep farm in the Nilgiris district; and

(b) whether there is any proposal to shift the site already selected for the opening of sheep farm in the Upper Palani in the Madurai district?

THE HON. SRI P. KAKKAN : (a) Improved rams bred in the Sheep farm, Ootacamund, Nilgiris district, have been distributed to breeders in the Nilgiris and Coimbatore districts to improve their flocks. Remney Marsh andd Kulbishev rams have also been introduced and cross-breeding is being undertaken in order to further improve the quality and quantity of wool in the Nilgiris sheep.



Two hundred and seventy-nine Nilgiri and cross-bred rams have been distributed to private sheep breeders during the period from 1950 to 1962.

(b) No, Sir.

(அ) நீலகிரி மாவட்டம், உதகை செம்மறியாட்டுப் பண்ணையில் வளர்க்கப்பட்ட மேலான செம்மறியாடுகள் நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள ஆட்டுமந்தைக்காரர்களுக்கு, இனப்பெருக்கத்திற்காக வழங்கப்பட்டுள்ளன. ராம்லே மார்ஷ், குய்பிஷெவ் இனச் செம்மறியாடுகளும் இங்கு கொண்டுவரப்பட்டு, நீலகிரி ஆடுகளின் ரகத்தையும், ரோம அளவினையும் அதிகப்படுத்துவதற்காக கலப்பு இனச் சேர்க்கை முறையில் அவைகளைக் கொண்டு இனப்பெருக்கமும் செய்யப்பட்டு வருகிறது. 1950 முதல் 1962 வரை, 279 நீலகிரி கலப்பு இனச் செம்மறியாடுகள் ஆட்டுமந்தைக்காரர்களுக்கு வழங்கப்பட்டன.

(இ) இல்லை.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, யுத்த காலத்தில் கம்பளியின் தேவை அதிகமாக இருப்பதால், கம்பள ஆடுகளை அதிகமாக வளர்க்க சர்க்காரிடத்தில் திட்டம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதனால்தான் கலப்பு ரக ஆடுகளை அதிகப்படுத்த அரசாங்கம் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது.

**வேடந்தாங்கல் பறவை காப்பு சாலை (விடுதிகள் கட்டுதல்)**

***48 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், வேடந்தாங்கல் நீர்ப்பறவை காப்பு சாலையில் (Birds sanctuary) பறவைகளைப் பார்ப்பதற்கு வருபவர்கள் தங்குவதற்கு, விடுதிகள் கட்டுவதற்கு உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், எப்போது?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) ஆம்.

(இ) இவ்வருட முடிவில் கட்டி முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(a) Yes.

(b) The work is expected to be completed during 1963-64.

*Hotels (financial assistance)*

*49 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have given any financial assistance to any private hotels;

(b) if so, the names of such hotels; and

[8th August 1963

(c) the amount given to each hotel and the conditions under which it was given?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) & (c) Do not arise.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** மற்ற மற்றத் தொழில்களுக்கு உதவி செய்வது போல் ஹோட்டல் வைக்கும் தொழிலுக்கும் அரசாங்கம் உதவி செய்ய முன் வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அயல் நாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்கான விடுதிகள் நடத்தினால் அவர்களுக்கு உதவி செய்யலாமா என்பதை பற்றிச் சர்க்கார் பரிசீலனை செய்யும். அதுவும் சர்க்கார் நேரடியாக உதவி கொடுக்காது. இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் மூலம் உதவி கொடுக்க முடியுமா என்பது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அப்படிப்பட்ட ஓட்டல்கள் அமைப்பதற்கு ஏராளமாகச் செலவாகின்ற காரணத்தால் சமுதாயத்தில் வசதியும், வாய்ப்பும் படைத்தவர்களுக்குத்தான் அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆகவே, சர்க்காரே அது போன்ற காரியங்களை எடுத்துச் செய்வார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தப் பணத்தைக் கொண்டு இன்னும் லாபகரமாக மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்ற காரணத்தால் சர்க்கார் இந்தத் தொழிலை எடுத்துக் கொள்ளாது.

### *நீதிபதிகள் இடமாற்றம்*

*** 50 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட நீதிபதிகளையும் (District Judges) துணை நீதிபதிகளையும் (Sub-Judges) ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசாங்கம் கையாண்டுவரும் நடைமுறைக் கொள்கை என்ன?

(இ) அந்த நடைமுறை கொள்கை உறுதியுடன் பின்பற்றப் படுகிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) மாவட்ட நீதிபதிகளை மாற்றுவதை உயர்நீதி மன்றத்தைக் கலந்து, அரசாங்கம் முடிவு செய்கின்றது. நிர்வாக வசதியையும் பொது நலனையும் மனதிற் கொண்டு, உயர்நீதி மன்றம் அரசாங்கத்திற்கு உரிய சிபார்சுகள் செய்கிறது. கோடை விடுமுறையின்போது, பொதுவாக மற்ற அதிகாரிகளை மாற்றுகையில், இந்த நீதிபதிகளை மாற்றும் பிரச்னையும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

உப நீதிபதிகளை மாற்றுவதை, உயர்நீதி மன்றமே முடிவு செய்கிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.



8th August 1963]

(a) Transfers of District Judges from one place to another are being done by Government on the recommendations of the High Court. High Court's recommendations are generally based on administrative grounds and are in the public interest. Such transfers are being taken up in every summer vacation along with general transfers.

Transfers of Sub-Judges are made by the High Court.

(b) Does not arise.

### *State Warehousing Corporation*

* 51 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal to set up a State Warehousing Corporation as per Section 18 of the Warehousing Corporation Act, 1962 (Central) ; and

(b) if so, the details thereof?

**கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) & (இ) சென்னை மாநிலக் கிடங்கு வசதிக் கார்ப்பொரேஷன் 1956-ம் ஆண்டு விவசாயப் பொருள் (அபிவிருத்தி-கிடங்கு வசதிக்) கார்ப்பொரேஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 28/1956) 28-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. 1962-ம் ஆண்டு கிடங்கு வசதிக் கார்ப்பொரேஷன்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 43-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (g) பகுதியின்படி, சென்னை மாநிலக் கிடங்கு வசதிக் கார்ப்பொரேஷன் 1962-ம் ஆண்டு 58-வது மத்திய சட்டத்தின் கீழ் இம்மாநிலத்துக்காக அமைக்கப்பட்ட அரசாங்கக் கிடங்கு வசதிக் கார்ப்பொரேஷனாகக் கருதப்பட வேண்டும். 1962-ம் ஆண்டு 58-வது மத்தியச் சட்டத்தின் 18-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்படி, அப் பிரிவில் (1) முதல் (3) வரையுள்ள உட்பிரிவுகளில் என்ன சொல்லியிருப்பினும், இம் மாநில அரசாங்கம் கார்ப்பொரேஷன் ஒன்றை அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலைப் புரிந்துகொள்வதே கஷ்டமாக இருக்கிறது. இப்போது அவர்கள் சொன்ன மூன்று சட்டங்களில் இருக்கக் கூடிய வேற்றுமைகள் ஒற்றுமைகள் என்ன? 1962-ம் வருஷத்திய சட்டத்தின்படி செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்ற முடிவுக்கு வரவேண்டிய காரணம் என்ன என்பதை விளக்கினால் மற்ற அங்கத்தினர்களுக்கும் புரியும்.

**கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** 'வேர் ஹவுசிங் கார்ப்பரேஷன்' அமைக்க வேண்டியது அவசியம் என்ற முறையில் நம்முடைய சென்னை அரசாங்கம் பாதிச் செலவும் மத்திய அரசாங்கம் பாதிச் செலவும் ஏற்று இருபது இடங்களில் கிடங்குகள் கட்டியிருக்கிறோம். விவசாயிகளுக்கு நல்ல முறையில் மூட்டைகளை வைக்க உபயோகப்பட வேண்டுமென்ற முறையில்

[8th August 1963

பொருள்களை வைக்க அவர்களுக்கு 'நாமினல் ரேட்' என்று சொல்லக் கூடிய அளவில், மருந்து அடித்துக் கொடுப்பது எல்லாம் சேர்த்து 9 ந.பை. வாங்கப்படுகிறது. பாங்கியில் செக்யூரிட்டி டெபாசிட் வைக்கின்ற முறையில், ஒழுங்காக உதவுகின்ற முறையில் 'வேர் ஹவுசிங் கார்ப்பரேஷன்' பணியாற்றுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இன்னும் இதை விஸ்தரிப்பதற்குத் திட்டம் உண்டா?

கனம் திரு. ந. நல்ல சேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது அந்த எண்ணம் இல்லை. தற்போது 20 கிடங்குகள் இருக்கின்றன. அதை அதிகமாக்கும் எண்ணம் இல்லை.

*Industrial Estates*

* 52 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of Industrial Estates to be set up during the Third Five-Year Plan period; and

(b) the progress made so far in this direction?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Thirteen Industrial Estates, two sets of worksheds and two 'Developed plots' estates will be established during the Third Five-Year Plan period by Government. Eight schemes for the establishment of Industrial Estates by Co-operative Societies and private Companies have also been sanctioned.

(b) The schemes are under preliminary stages of implementation.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், அவைகள் எந்த எந்த ஊர்களில் என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேலைப் பட்டறை என்று சொல்வது, இலுப்பூர், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பாசமுத்திரம், தேனி, விருத்தாசலம், புதுக்கோட்டை, காரைக்குடி, அரக்கோணம், கோயில்பட்டி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், அம்பத்தூர், மாதவரம், சிவகங்கை, நாகர்கோயில்.

திரு. கே. ஏ. மதியழகன் : காஞ்சிபுரத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பது எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான ப்ரபோசல் இல்லை.

* 53 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Government propose to start an Industrial Estate at Dharmapuri in Salem district; and



8th August 1963]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) The question does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : தர்மபுரி பிற்போக்கான நிலைமையில் இருப்பதால் அங்கு ஒரு தொழிற்பேட்டையை அமைக்க அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பக்கத்தில் கிருஷ்ணகிரியில் அமைக்க இருக்கின்ற காரணத்தால் இதற்குத் தேவையில்லையென்று நினைக்கிறேன்.

*Bricks Control Order*

* 54 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to extend the Bricks Control Order 1963 to any area in addition to the Madras City and the Chingleput district; and

(b) if so, the details of the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தச் செங்கல் உற்பத்தி சென்னை நகரைச் சுற்றியிருக்கும் செங்கல்பட்டு பகுதியில் அதிகமாக நடைபெறுகிறது. இந்தப் பகுதிக்கு மட்டும்தான் கண்ட்ரோல் ஆர்டர் அமல் நடத்தப்படுகிறது. மற்ற ஜில்லாக்களிலும் கட்டடங்கள் அபிவிருத்தி அடைந்து கொண்டிருப்பதால் செங்கல் உற்பத்தி தாம் குறைந்து விலை ஏறுகிற காரணத்தால், தனி நபர் வீடுகள், அரசாங்கக் கட்டிடங்கள் . . . .

MR. SPEAKER : The hon. Member should not make a speech. He should mention only the salient points.

திரு. மீ. கலியாணசுந்தரம் : முக்கியமான நகரங்களிலும் செங்கல்லின் தரத்தை உயர்த்தவும், விலையைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான அவசியம் இல்லையென்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. கோ. சி. மணி : இப்போது செங்கலுக்கு விதித்திருக்கும் கட்டுப்பாடு விலையைப் பொறுத்ததா? அல்லது தயாரிக்கப்பட்ட செங்கல்லைப் பொறுத்து விலை நிர்ணயிக்கப்படுகிறதா?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : இதெல்லாம் கெஜட்டில் பிரசுரமாகியிருக்கிறது. விலை 60 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. தரம், எவ்வளவு அகலம், எவ்வளவு நீளம் என்பதெல்லாம் கூட கெஜட்டில் பிரசுரமாகியிருக்கிறது.

*Brick manufacturing units*

* 55 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Centre has issued licences for the starting of two brick manufacturing units

(i) one at Tirumazhisai village under the control of the Department of Industries; and (ii) the other at Poonamallee under the control of the Housing Board?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தச் செங்கல் தொழிற்சாலைகள் எப்போது உற்பத்தியைத் தொடங்கும் என்று கூற முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அயல்நாட்டிலிருந்து இயந்திரங்கள் வரவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இயந்திரங்கள் வந்தவுடன் அவற்றைப் பொருத்தி உடனடியாக வேலை தொடங்க வேண்டும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** நான் முன்பு கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும்போது அமைச்சர் அவர்கள், அவசியமில்லை என்று கூறினார்கள். கட்டுகிற கட்டடங்கள் உறுதியாக இருப்பதை முன்னிட்டாவது மற்ற ஜில்லாக்களில் கூட சட்டத்தை அமல் நடத்தா விட்டாலும் செங்கல்லின் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் உதவி செய்ய முன்வருவார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எந்தவிதமான உதவி வேண்டுமென்று கோரினால் அதை சர்க்கார் பரிசீலனை செய்யும்.

*Central and State Co-operative Institutions*

* 56 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to eliminate the individual shareholders from the Central and State institutions within the co-operative fold; and

(*b*) if so, the reasons therefor?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) ஆம்.

(இ) கூட்டுறவு இயக்கம் எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தியடைந்திருப்பதால், இந்த மத்தியச் சங்கங்களாக அமைகிற கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளிலிருந்து அனுபவமும் திறமையும் உள்ள நபர்கள் கிடைப்பது தான் இதற்குக் காரணம்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** மத்திய சங்கங்களில் தனிப்பட்ட பங்குதாரர்கள் இருந்தால் மத்திய சங்கத்திற்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமோ என்று அரசாங்கம் கருதுகிறதா? அதனால் தான் இந்த உத்தரவை பிறப்பித்திருக்கிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** ஆபத்து என்பதல்ல. ஆரம்ப காலத்தில் இதற்கு நல்ல ஆட்கள் தேவை என்ற முறையில் அவர்களை நியமித்து வந்தார்கள். இப்போது எல்லோரும் அதில் நல்ல முறையில் பழக்கப்பட்டு அனுபவம் பெற்றிருப்பதால் அதிலுள்ளவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.



*Scientific and Industrial Exhibitions*

* 57 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Indusutries be pleased to state whether there is any proposal to set up a permanent scientific and industrial exhibition at each district headquarters?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தொழில் வளர்ச்சி, விஞ்ஞானம் ஆகியவைகளில் அரசாங்கம் காட்டுகிற அக்கறையை விருத்தி செய்வதன் அவசியத்தை முன்னிட்டு இம்மாதிரி அமைப்பது அவசியம் என்று கருதவில்லையா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது தேசத்தில் பல 'ஸயன்டிபிக் அன்ட் இண்டஸ்ட்ரியல் ரிசர்ச்' முதலியவை செய்ய நாஷனல் லாபரட்ரீஸ் இருக்கின்றன. சாதாரணமாக கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும். அதனால் ஒவ்வொரு ஜில்லாவிலும் வைக்கமுடியாது. எக்ஸிபிஷன் வைக்கலாம். நம்முடைய இன்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மென்டில் சேல்ஸ் எம்போரியம் ஒவ்வொரு ஜில்லாவிலும் வைத்திருக்கிறோம். எந்தெந்த பண்டங்கள் நம் ராஜ்யத்தில் உற்பத்தியாகிறதோ அவற்றை விற்பனை செய்ய ஏற்பாடு செய்கிறோம்.

*Schools for adults*

* 58 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that sanction has already been accorded by the Government for the opening of adult schools in rural and urban areas during April, 1963; and

(*b*) if so, the reason for having ordered them to be stopped?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இம்மாதிரியான பள்ளிகள் நாடெங்கும் திறக்கப்பட்டது. என் தொகுதியில் கூட இரண்டு பள்ளிகள் திறக்கப்பட்டு மூடப்பட்டுள்ளன. அதற்கு யார் காரணம் என்று நான் அறியலாமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுபற்றி தனி கேள்வி கேட்டால் விடை அளிக்கலாம். பொதுவாக இம்மாதிரி முதியோர் பள்ளி அமைப்பதற்கு மத்திய ஆட்சியினர் உதவி அளிப்பதாக கூறியிருக்கிறார்கள். எவ்வளவு உதவி அளிப்பார்கள் என்று அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கிறது. அது தெரிந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

[8th August 1963

*Cement factories*

* 59 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) when the cement factory to be located near Karur in Tiruchirappalli district was licensed ; and

(b) when the factory is expected to commence production?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The licence to set up a cement factory at Karur in Tiruchirappalli district was granted on 17th June 1963.

(b) The license is taking active steps to set up the factory. But it is not possible now to predict when the factory will commence production.

* 60 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to expedite the opening of the two new cement factories already licensed at Karur in Tiruchirappalli district and at Sankaridurg in Salem district?

THE HON. SRI R. VENKATARAMAN : In respect of the cement factory near Karur, the land is under acquisition, and arrangements are being made to purchase machinery.

As regards the cement factory at Sankaridurg, the construction of buildings has been completed and installation of machinery is in progress. The factory is expected to go into production in September, 1963.

திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் : சங்கரிதுர்க் சிமெண்ட் பாக்டரியில் புகை போக்கிகளுக்கு பில்டர் போடாததின் காரணமாக விவசாயம் பாதிக்கப்படுமென்று சொல்கிறார்கள். அதனால் அந்த பாக்டரியில் பில்டர் போட அரசாங்கம் தகுந்த ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாக்டரி சட்டத்தின்கீழ் என்னென்ன விதிகளை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமோ அதன் பிரகாரம்தான் செய்வார்கள். அவ்வாறு செய்யவில்லை என்று சொன்னால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. ADJOURNMENT MOTION *re* THE ACTION OF THE POLICE IN THE TRANSPORT WORKERS STRIKE AT MADURANTAKAM.

MR. SPEAKER : The hon. Members, Sri K. R. Nallasivam and Sri M. Kalyanasundaram have given notice of an adjournment motion relating to a shooting incident in Madurantakam.



8th August 1963]

திரு. க. ர. நல்லசிவம் : செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் 7—8—1963-ம் நாள் எம்.கே.எம். பஸ் கம்பெனி ஊழியர்கள் நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவாகப் பொது மக்கள் அமைதியான முறையில் அர்த்தால் நடத்தியபோது போலீசார் தலையிட்டு தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் காரணமாக ஒருவர் படுகாயம் அடைந்ததாலும், சிலரைக் கைது செய்ய முயற்சிப்பதாலும் ஏற்பட்டிருக்கும் அவசர நிலை பற்றி விவாதிக்கச் சபை நடவடிக்கையை ஒத்தி வைக்கக் கோருகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : Sir, I have given notice of the following adjournment motion—

' That the business of the House be adjourned to discuss the following matter of urgent public importance, viz., the failure of the police to handle tactfully the tense situation arising out of the strike of the transport workers at Madurantakam, Chingleput district, leading to lathi charge and opening of fire on the unarmed crowd '.

அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் என் முக்கியமான நோக்கம். போலீஸ் துப்பாக்கியைக் கையில் எடுத்து அமைதியை நிலைநாட்டுவது என்ற நிலைமை இருக்கக் கூடாது என்பது என் தாழ்மையான வேண்டுகோள். அப்படியும், துப்பாக்கிப் பிரயோகம், லத்தி சார்ஜ் எந்த சந்தர்ப்பத்தில் நடந்திருக்கிறது என்று சொன்னால், எந்தத் தொழில் தகராறு இதற்குக் காரணமாக இருந்ததோ . . . .

திரு. ஜே. மாதா கவுடர் : ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர். சாதாரணமாக 41-வது விதியின் கீழ் இந்த சபையில் யார் ஒருவர் விஷயத்தை கவனத்திற்குக் கொண்டு வருகிறார்களோ, அவர்கள் நோட்டீஸில் என்ன கொடுத்திருக்கிறார்களோ அதை மட்டும் படித்து விட வேண்டியதுதான். மேற்கொண்டு அது பற்றிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. ஆனால் இப்போது அங்கத்தினர் மறுபடியும் பேசுகிறார். அது . . . .

MR. SPEAKER : The hon. Member is confusing this with a Notice under rule 41. This relates to an adjournment moiton.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சபாநாயகர் அவர்கள் சபையை நன்றாகப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எந்தத் தகராறு இதற்குக் காரணமாக இருந்ததோ அது தீர்க்கப் பட்டு உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. லேபர் கமிஷனர் பரிசீலனைசெய்து சுமுகமான நிலை ஏற்பட்டது. தொழிற்சாலைக்கும் இதைத் தெரியப்படுத்தியிருப்பார்கள். ஆக, அவசியம் இல்லாத முறையில் லத்தி சார்ஜும் துப்பாக்கிப் பிரயோகமும் நடந் திருக்கிறது என்பது என் அபிப்பிராயம். சமரசம் ஏற்பட்ட பின்னர் இம்மாதிரி நடந்திருக்கிறது என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. இது பற்றி ஆர்.டி.ஓ.-வை வைத்து விசாரணை நடத்தினால் பலன் அளிக்காது. போலீஸ் அத்து மீறி நடக்கும்

போது உயர்ந்த அதிகாரியை வைத்து விசாரணை நடத்தி சாட்சியங்கள் கேட்டு ஒரு முடிவிற்கு வருவது நலம். அப்படியானால் போலீசும் சரியாக நடந்துகொள்வார்கள். தொழிலாளர்கள், விவசாயிகள், பொது மக்கள் கூடிய வரை அமைதியான முறையில் மோதுதலை தவிர்க்கின்ற முறையில் இயக்கங்களை நடத்தவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். அதற்கு உதவி செய்யும் வகையில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(திரு. க. ர. நல்லசிவம் எழுந்தார்.)

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போதே விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதாயிருந்தால் அங்கத்தினர் அவர்கள் விவரங்கள் எல்லாம் சொல்லலாம். அதைத் தாங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

**கனம் சபாநாயகர் :** இதை அட்மிட் செய்த பிறகு தான் சொல்ல வேண்டும். "பாக்ட்ஸில்" போகாமல் சொல்லவேண்டும். "ப்ரொஸீஜரில்" ஏதாவது சொல்ல வேண்டும்.

**திரு. க. ர. நல்லசிவம் :** சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சொல்கிறேன்.

MR. SPEAKER : I must ask whether the other side is prepared to discuss the matter. I must also decide whether it comes within the scope of an adjournment motion.

அவர்கள் சொன்னால் நீங்களும் சொல்ல வேண்டுமா? சொல்லக் கூடாது. அர்ஜன்சியைப் பற்றி மட்டும் சொல்லவேண்டும்.

**திரு. க. ர. நல்லசிவம் :** பகிரங்க விசாரணை வேண்டும்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அவசரப் பிரேரணையைக் கொண்டு வந்த இரண்டு அங்கத்தினர்களும் இந்தப் பிரேரணை மூலமாகவே தங்களுடைய கருத்தை, தீர்ப்பைத் தெரிவித்துவிட்டார்கள். கனம் கம்யூனிஸ்ட்டு கட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்டும் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இது நேற்றுதான் நடைபெற்ற சம்பவம். இது பற்றி நேற்றே எனக்குத் தகவல் கிடைத்தது. இன்ஸ்பெக்டர்-ஜெனரல் இதுபற்றி என்னிடம் குறிப்பிட்டார்கள். கலெக்டர் அவர்களும் இதுபற்றிக் குறிப்பிட்டார்கள். இன்று காலையிலும் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் என்னிடம் வந்து இதுபற்றிப் பேசிவிட்டு தாம் நேராக ஸ்தலத்திற்குச் சென்று மேலும் ஏதாவது தகவல் இருந்
9-30 a.m. தால் வந்து கொடுக்கிறேன் என்று சொல்லி இன்று காலை என்னிடம் விடைபெற்றுக் கொண்டு போனார். பத்திரிகைகளில் கூட சில செய்திகள் வந்திருக்கின்றன. வேலை நிறுத்தம் ஒன்று இருந்தது. அதோடு ஒரு உண்ணாவிரதமும் இருந்தது. அதைப்பற்றி கூட இரண்டு நாட்களுக்கு முன்பு அவசரப் பிரேரபணைக்கு நோட்டீஸ் கொடுத்த உறுப்பினர்களில் ஒருவரான திரு. நல்லசிவம் அவர்களும் திருச்சியைச் சேர்ந்த வேறு ஒரு உறுப்பினரும் வந்து என்னிடம்





பேசினார்கள். அப்பொழுது நான் சொன்னேன் 'உண்ணாவிரதம் இருப்பது தொழிற் சங்கம் கையாளக்கூடிய முறை என்று நான் ஒப்புக் கொள்ள முடியாது. உண்ணாவிரதம் பற்றி தந்திகள் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன, உண்ணாவிரதம் இருப்பது சரியல்ல, அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது' என்று சொன்னேன். அவர்கள் 'சரி, அதை நிறுத்தச்சொல்லுகிறோம்' என்று சொன்னார்கள். உடனே தொழிலாளர் கமிஷனர் ஹெட்குவார்டர்ஸில் இல்லாததினால், உதவிக் கமிஷனரைக் கூப்பிட்டு விசாரித்தேன். என்ன நிலை? என்று கேட்டேன். அவர்கள் 'இதில் மேற்கொண்டு ஒரு தகராறு வருவதற்கே இடம் இல்லை. ஒரு விஷயத்தைத் தீர்த்து விட்டார்கள். மற்றொரு விஷயம் லேபர் ஆபிசரிடம் இருக்கிறது. இதில் வேலை நிறுத்தம் செய்வதற்குக் கூட இடமே இல்லை' என்று சொன்னார்கள். மேலும் போய்க் கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். நேற்று தகவல் என்னவென்றால் வேலை நிறுத்தமும் நின்றுவிட்டது; உண்ணாவிரதமும் நிறுத்தப்பட்டு விட்டது, கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னது போல.' ஆனால், சில பேர்கள் தூண்டப்பட்டு ஹர்த்தால் ஒன்றை நடத்திக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. அப்பொழுது உடனடியாக வந்து வேலை நிறுத்தமும் நிறுத்தப்பட்டு விட்டது; உண்ணாவிரதமும் நிறுத்தப்பட்டு விட்டது என்று சொல்வதற்கு வந்தார்கள். அதைச் சொல்லும் சமயத்தில் பஸ் வந்தது. அது போஸ்டல் மெயிலை ஏற்றிக் கொண்டு வந்தது. அந்த பஸ்ஸின் மீது கற்களை விட்டு எறிந்தார்கள். கற்களை விட்டு எறிந்தவர்களை 'வேண்டாம், நிறுத்துங்கள்' என்று போலீஸார் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் நிறுத்தவில்லை. ஸ்தலத்தில் இருந்த டெப்யூடி சூபரின்டெண்டெண்ட், ஒரு இன்ஸ்பெக்டர், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு அடிபட்டது. அதற்குப் பிறகு தடியடிப் பிரயோகம் . . .

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார், அமைச்சர் அவர்கள் மட்டும் விபரங்களுக்குள் போகலாமா? உறுப்பினர் விவரங்களுக்குள் போகக்கூடாது, விவாதிக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் முதலில் சொன்னார்கள். அவர் மட்டும் இப்பொழுது ஒருதலைப் பட்சமாக விவரங்களுக்குள் போகலாமா? என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர் கொடுத்த பிரேரபணையை மட்டும் படித்துவிட்டிருந்தால் கூட பரவாயில்லை. அதிலேயே ஒருதலைப்பட்சமாக கூறப்பட்டிருந்தது. அதற்கு மேலும் அவர்கள் பேசினார்கள். நான் மாத்திரம் பேசக்கூடாது என்று சொல்லுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்று தெரியவில்லை.

MR. SPEAKER : Are we taking up the adjournment motion for discussion now?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I will conclude and then leave it to you, Sir.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th August 1963

ஒரு டெபுட்டி சூபரின்டென்டன்ட், ஒரு இன்ஸ்பெக்டர், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் அடிபட்டார்கள். அதற்கு பிறகு தடியடிப் பிரயோகம் நடந்தது. தடியடிப் பிரயோகம் நடந்து பலன் இல்லாத காரணத்தினாலே, துப்பாக்கி பிரயோகம் நடந்தது. அதிலே ஒருவர் காயம் அடைந்தார். என்னிடம் வந்த தகவல்படி படுகாயம் என்று சொல்வதற்கில்லை. அது தான் தகவல். அதற்கு மேலே ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருப்பதினால், கலெக்டர் அவர்கள் உடனே ஒரு ஆர்.டி.ஓ-வை நியமித்து விசாரணை செய்ய வேண்டும். அம்மாதிரி விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக கலெக்டர் அவர்கள் சொன்னார்கள். இது தான் நிலைமை. இதிலே துப்பாக்கிப் பிரயோகம் இல்லாமலே இருப்பது தான் நலம். அது மாதிரி துப்பாக்கிப் பிரயோகம் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கவலையும் கூட. சில சமயங்களில் தவிர்க்க முடியாது என்றால், அம்மாதிரி துப்பாக்கிப் பிரயோகம் ஏற்படுகிறது. மேலும் விவரம் வேண்டுமென்றால், ஒரு அவசரக் கேள்வி கேட்டால், இப்பொழுது கூறியதை விட வேறு ஏதாவது அதிக விவரம் இருந்தால் சொல்லலாம். ஆர்.டி.ஓ. 'என்குயரி' இப்பொழுது நடக்கும். இந்த நிலையிலே இந்த ஒத்திவைப்புப் பிரேரபணைக்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The Hon. Minister is prepared to answer a Short Notice Question. Therefore, I do not think this is a matter of so much importance as to be taken up as an adjournment motion now.

## III. CALLING ATTENTION TO THE NON-SUPPLY OF ELECTRICITY TO PUMP SETS IN NORTH ARCOT DISTRICT—*cont.*

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு சுமார் 1,500 பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்குவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது, பாலாறு பேஸின் விதிப்படி. குறிப்பாக, அரக்கோணம் தாலுக்காவில் மட்டும் 500-க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு பாலாறு பேஸின் விதிப்படி பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கனெக்ஷன் கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

MR. SPEAKER: Has the hon. Member Pulavar Govindan got the notice with him?

**புலவர் கா. கோவிந்தன்:** என்னிடம் இல்லை. இரண்டு அங்கத்தினர்கள் கொடுத்த நோட்டீசையும் 'க்ளப்' பண்ணிவிட்டார்கள்.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, as early as in 1931, it was recognised that the Palar was over-burdened with irrigation beyond its capacity. The irrigation under the Palar



8th August 1963] [Sri V. Ramaiah]

Anicut System and the Palar Water Shed in the Madras State was, therefore, examined by a Committee known as the Palar Irrigation Committee. Based on the recommendation of the Com- mittee, in June 1961, the Government directed that no new irri- gation works should be constructed in the Palar Basin, nor any extension of works should be taken up and that there should be no conversion from 'dry' to 'wet' or from 'single crop' to 'double crop' wet. These directions are called the Palar Basin Rules. In effect, there was a total prohibition regarding the sinking of new wells in the Palar Basin.

During the Grow More Food drive in the late forties, the Palar Basin Rules were relaxed in favour of sinking of new wells or tube wells for irrigation of 'dry' lands in the basin and extension of irrigation to dry lands for an irrigated crop after a favourable North-East Mansoon. With a view to safeguarding the interest of the existing ayacut, it was considered necessary that the new wells must be 2,000 feet away from the spring heads of channels and that the Public Works Department should be consulted for the sinking of new wells near water resoures. This relaxation was in force up to April 1961. In the meanwhile, it was ordered in 1959, that deserving cases within a minimum distance of 2,000 feet might be reviewed favourably for supplying power to pumpsets.

On receipt of a number of representations, the question of further relaxation of the Palar Basin Rules was examined and orders were issued in May 1961, relaxing the rules further. According to these orders which are to be in force for a period of five years from 6th May 1961, new wells may be permitted for irrigating the lands in the Palar Basin, provided such wells are not less than two furlongs away from the spring heads of channels and one furlong away from the spring channel. The crops grown should, however, correspond to the classification of the land as registered and the horse-power of each pumpset should not exceed five. Permission to sink wells or install pumpsets in accordance with the above orders to be given by the Collector in consultation with the Exe- cutive Engineer, Public Works Department who will examine each case and decide on its merits.

With a view to safeguarding the protected water-supply schemes dependant on the Palar, the Government have in May 1963, issued orders, incorporating the following additional conditions in the Palar Basin Rules, as revised in 1961 :—

"In cases where the sub-soil water is the source for water- supply schemes, sinking of wells or tube wells with or without the installation of pumpsets is prohibited within a distance of 2,000 feet from either bank of the Palar river and also up and down streamsides to safeguard the protected water-supply schemes."

In so far as the extension of irrigation by sinking of new wells is concerned, the Collector of North Arcot has reported that no applications have been received for the issue of clearance certi- ficates, nor for the installation of oil engine pumpsets. Consequent

on the extension of electricity to rural areas, the ryots are intensively taking to the installation of electric pumpsets and the Electricity Board necessarily insists on the production of clearance certificates from the Collector so as to satisfy the conditions of the Palar Basin Rules in force. The number of applications has of late increased and every effort is being made by the Collector to dispose them off with the least possible delay or inconvenience to the ryots. At the District Development Council meeting held during December 1962, it was resolved that instead of insisting on the production of a clearance certificate for every individual case, villages which did not have any spring channel or spring head within a distance of one furlong and two furlongs respectively might be excluded from the scope of the Palar Basin Rules. The Collector of North Arcot has reported that he has accordingly asked the Executive Engineer, Public Works Department, to prepare lists of such villages taluk-wise and that as and when the list for each Taluk is finalised, it is being communicated to the Superintending Engineer, Vellore Electricity System, asking him not to insist upon clearance certificates in the case of applicants from such villages. Out of the 3,153 applications received during 1962 and up to 30th June 1963 for the issue of clearance certificates for installing pumpsets in North Arcot District, 1,171 cases are reported to have been disposed of. Taking Arkonam taluk alone, of the 410 applications received, 133 cases have been disposed of. The remaining cases are reported to be under scrutiny by the local officers.

The restrictions imposed by the Palar Basin Rules were discussed at a Conference held in the Secretariat on 1st June 1963 with the concerned officers and certain representatives of the public from North Arcot. The representatives enumerated the difficulties the ryots had to undergo for obtaining permits for installation of pumpsets in the Palar Basin. They were of the view that the rules should apply only to the area on both the banks of the Palar and not to its tributaries or the spring heads or spring channels. It has been decided at the Conference that the Commissioner of Land Revenue and Food Production and the Chief Engineer (Irrigation) should visit the District, hear representations locally and suggest measures for affording the relief asked for by the ryots. The reports of the Chief Engineer (Irrigation) and the Board of Revenue in the matter are awaited.

It may thus be seen that the question of further relaxing the Palar Basin Rules is under the consideration of the Government.

## IV.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI T. M. NALLASAMY: Mr. Speaker, Sir, I rise to present **the Seventh Report of the Committee on Estimates on District Administration.**



## V.—NON-OFFICAL RESOLUTIONS

### (1) Conduct of Examination for State Services by the Madras Public Service Commission in Tamil also.

* **திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, "அரசாங் கத்தின் வேலைகளுக்காக இம்மாநிலத்தின் மொழியிலும், அதாவது தமிழிலும் தேர்வு நடத்துமாறு சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷனு க்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென இம்மன்றம் அரசினருக்குச் சிபாரிசு செய்கிறது" என்கிற தீர்மானத்தை நான் பிரேரேபிக் கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நான் அதை ஆமோதிக்கிறேன்.

MR. SPEAKER: Resolution moved—

"That this House recommends to the Government to issue instructions to the Public Service Commission to conduct examination for appointments to the Services of the State in the Regional Language of the State also, viz., Tamil."

**திரு. இராம. அரங்கண்ணல்:** இப்பொழுது நான் இங்கே கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானம் நம்முடைய ஆளும் கட்சியினர் மனதார வரவேற்க வேண்டிய ஒரு தீர்மானம் என் பதை நாமெல்லோரும் நன்றாக அறிவோம். நாடெங்கும் தமிழ் மணம் கமழ வேண்டும் என்கிற ஆர்வம் தமிழகத்திலே இருக்கிற எல்லோருக்கும் இன்றைய தினம் அதிகரித்து வருகிறது. அதிலும், நம்முடைய ஆளும் கட்சியினர் 'எல்லாம் தமிழில் முடியும்' என் கிற கருத்துக்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டு வருகிற சூழ்நிலை யின் காரணமாக, அரசாங்க அலுவலகங்களில் தமிழே ஆட்சி மொழியாக நிலவ வேண்டும் என்கிற நல்ல கருத்துக்கு அவர்கள் மாறி வருவதையும் நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். இந்த நிலையில் அரசாங்கத்துக்கு ஆட்களைப் பொறுக்குகிற பப்ளிக் சர்விஸ் கமிஷன் இயற்றி இருக்கிற விதிகளில் தமிழுக்கும் சரியான இடம் கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய தீர்மானத்தின் கருத்து. தமிழுக்கு இப்பொழுது இடம் கொடுக்கப்படவில்லையா? என்று கேட்கலாம். தமிழுக்கு இப்பொழுது இடம் அளிக்கப்பட் டிருக்கிறது. ஆனால் அந்த இடம் போதாது. இன்னும் அதிக முக்யத்துவம் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தீர் மானத்தின் நோக்கம் ஆகும். அதே நேரத்தில் ஆங்கிலத்தை அகற்றி விடவேண்டும் என்று நான் சொல்லவில்லை. வெளி உலகத் தொடர்புக்கும், மற்றைய இந்தியப் பகுதிகளோடு தொடர்பு கொள்வதற்கும் ஆங்கிலம் அவசியமாக இருக்கிற காரணத்தினால், ஆங்கிலம் இருக்கலாம். அப்படி ஆங்கிலம் இருக்க வேண்டுமானால், உயர்தர உத்தியோகங்களுக்கு, அதாவது ஏ- கிளாஸ், பி-கிளாஸ் சர்விஸ்களுக்கு இருக்கலாம். அப்படி ஆங் கிலம் இருக்கிற காலத்தில், அதோடு கூட தமிழும் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தீர்மானத்தின் சாரமாகும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், எம்.ஏ. டிகிரி

ஸ்டாண்டர்டுக்கு கம்பல்சரி சப்ஜக்டாக ஆங்கிலத்தை வைத்திருக்கிறார்கள். அதிலும் க்ரூப் 1 செர்விஸ்களுக்கு, ஆங்கிலத்லேயே, கம்போஸிஷன், பொது அறிவு ஆகிய ஸப்ஜெக்டுகளுக்கு கம்பல்சரியாக விடை எழுத வேண்டும் என்று வரையறை செய்து இருக்கிறார்கள். அடுத்தபடியாக விருப்பப் பாடங்கள் என்று சொல்லி அவைகளுக்கும் ஒரு வரையறை செய்து இருக்கிறார்கள். அதில் குரூப் ஏ-யில் ஆங்கிலம், சமஸ்கிருதம், பர்ஷியன், அரபு, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, இந்தி ஆகிய எல்லா மொழிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. குரூப் பி-யிலும் இப்பொழுது நான் சொன்ன அத்தனை மொழிகளும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. குரூப் சி-யிலும் இப்பொழுது நான் சொன்ன அத்தனை மொழிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதோடு கூட, குரூப் டி என்று ஒன்று இருக்கிறது. அந்த குரூப் டி-யில் எல்லாம் ஆங்கிலத்தில் தான் பதில் அளிக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. நான் குறிப்பிட விரும்புவது, தமிழ் நாட்டிலே தமிழில் ஆட்சி நடத்தப் போகிற நாம், மற்ற மொழிக்காரர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்க வேண்டியது அவசியம் என்று சொன்னாலும், தமிழுக்கு ஒரு முக்கியமான இடம் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால், தமிழும் கட்டாயமாக இருக்கும் படிச் செய்ய வேண்டும். ஆகவே குரூப் ஏ-யில் ஆங்கிலத்தில் கட்டுரை எழுத வேண்டும், பொது அறிவுக்கு ஆங்கிலத்தில் விடை அளிக்க வேண்டும் என்று இருப்பதில் தமிழையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதே மாதிரி குரூப் டி-யில் ஆங்கிலத்தில் மட்டும் விடை அளிக்க வேண்டும் என்று இருக்கிறது. அதைத் தமிழிலும் விடை அளிக்கலாம் என்று திருத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். உயர்நிலை அதிகாரிகளுக்கு ஓய்வு நேரத்தில் தமிழில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று நமது அரசாங்கம் உத்திரவு இட்டிருக்கிறது. அதே போல் பி. ஏ. டிகிரி ஸ்டாண்டர்ட் பரீட்சைகளுக்கும் இருக்கிறது. அங்கும் குரூப் டி-யைப் பொறுத்த வரையில், ஆங்கிலத்திற்குப் பதில் தமிழ் என்று திருத்தம் செய்யவேண்டும். மேலும் கம்பல்சரி சப்ஜெக்டுகள் போன்ற காம்போஸிஷன், பொது அறிவு இவைகளுக்கும் தமிழில் விடை அளிக்கலாமென்று பி. ஏ. ஸ்டாண்டர்டுக்கும் உத்திரவு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அடுத்தபடியாக, குரூப்- III சர்வீஸைப் பொறுத்தவரையில், அதாவது பி. யூ. சி. படித்தவர்களுக்காக வைக்கும் பரீட்சைகளில் பொது அறிவு ஆங்கிலத்தில் விடை அளிக்கப்படவேண்டும் என்று இருக்கிறது. அங்கேயும் தமிழில் விடை அளிக்கலாம் என்று உத்தரவு போட வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதே போல் ஆப்ஷனல் சப்ஜெக்டுகளைப் பொறுத்த வரையிலும் தமிழிலே விடை அளிக்கலாம் என்று இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.



எஸ்.எஸ்.எல்.சி. ஸ்டாண்டர்டு பரீட்சையைப் பொறுத்த வரையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதலாம் என்று முதல் விதியில் இருக்கிறது. இரண்டாவது விதியில் ஆங்கிலத்தில் சுருக்கி எழுத வேண்டும் என்று இருக்கிறது. ஆங்கிலத்தில் சுருக்கி எழுதத் தெரிய வேண்டும் என்பது போல, தமிழிலும் ஏதாவது பெரிய மனுக்களை சுருக்கி எழுதவேண்டும் என்ற திருத்தம் செய்ய வேண்டும். மூன்றாவது விதியில், மேற்கூறிய பரீட்சைக்கு ஆங்கிலத்தில் கேள்வித்தாள் தயாரிக்கப்பட்டு, தமிழிலே கூட விடை எழுதலாம் என்று இருக்கிறது. அதற்குப் பதிலாக தமிழிலேயே கேள்வித்தாள் அமைக்கப்பட்டு, தமிழிலேயே விடை அளிக்க வேண்டும் என்ற திருத்தத்தை அரசினர் கொண்டு வர வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். இந்தக் கருத்துக்களை எல்லாம் ஏற்றுக் கொண்டு, ஆளும் கட்சியினர் எதிர்ப்பு சொல்லாமல், திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் கொண்டு வந்தது என்று கருதாமல், பரந்த மனப்பான்மையோடு, இந்த என் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

* **திரு. வை. சங்கரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னால் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசிய அங்கத்தினர் தமிழுக்கு அதிக இடம் கொடுக்க வேண்டும், ஆங்கிலத்தை விலக்க வேண்டாம் என்று தெரிவித்தார்கள். இந்த இரண்டு கருத்துக்களையும் பற்றி மாறுபட்ட அபிப்பிராயம் அரசாங்கத்துக்கோ, சபைக்கோ கிடையாது. ஆனாலும், தீர்மானத்தின் நோக்கம் என்னவென்றால், இன்றைக்கே பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீட்சைகளைத் தமிழிலேயே வைக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. நம் அரசாங்கத்தின் கருத்தும் சீக்கிரத்திலேயே தமிழ் ஆட்சி மொழியாக விளங்க படிப்படியாக ஆவன செய்ய வேண்டும் என்பதுதான். அவ்விதம் தான் காரியங்கள் நடை பெற்று வருகின்றன. தமிழுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பதில் அரசாங்கத்திற்கு மாறுபட்ட அபிப்பிராயம் கிடையாது. ஆனால், தீர்மானத்தின் உட்கருத்தைப் பார்த்தால், அதை எப் பொழுது செய்வது என்பதில் கருத்து வேறுபாடு தெரிகிறது.
நடைமுறையில் அதை எப்பொழுது கொண்டுவருவது என்பதில்
அபிப்பிராயபேதம் ஓரளவு ஏற்படும். நடைமுறையிலே கொண்டு
வருவதில், அமுலில் கொண்டு வருவதில் வித்தியாசம் இருக்கிறது.
இப்பொழுது உள்ள நிலையில், சாதாரணமாக பப்ளிக் சர்விஸ் கமி
ஷன் பரீட்சைகளுக்கு ஆங்கிலப் பயிற்சி வேண்டி இருக்கிறது. பல
துறைகளிலும் மாவட்ட அலுவலகங்களில் கொஞ்சம் கொஞ்சமாக
தமிழ் புகுத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப கட்டத்திலேயேதான்
தற்போது இருக்கிறோம். இப்பொழுதே திடீரென்று தமிழை
எல்லாத் துறைகளிலும் கொண்டுவருவதென்றால், அது பல சிக்கல்
களை ஏற்படுத்தும், நடை முறையில் கஷ்டங்களை ஏற்படுத்தும்.
நாளாக ஆக அதைக் கொஞ்சம் கொஞ்சமாக சிக்கல்கள் ஏற்படா
மல் இருக்கும் வகையில் பரப்ப ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
அப்படி இல்லாமல் அவசரப்பட்டு இப்பொழுதே பப்ளிக் சர்வீஸ்
கமிஷன் பரீட்சை பூராவும் தமிழிலேயே என்று செய்தோமானால்.

அது தமிழும் இல்லை ஆங்கிலமும் இல்லை என்கிற இரண்டுங் கெட்டான நிலைதான் ஏற்படும். ஆகவே, இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம், தமிழை எப்போது பூரணமாக உபயோகப்படுத்த முடியும் என்பதுதான். அதைத் தீர யோசித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தின் கருத்தை லட்சிய பூர்வமாக யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். சீக்கிரத்திலேயே பிராந்திய மொழியில் நம் தாய் மொழியில் அலுவல்கள் நடைபெற வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுத்தான் வருகிறது. ஒரு உதாரணம் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். உண்ண இலையில் உட்கார்ந்தவுடனேயே மோரும், ஊறுகாயும் கொண்டுவா என்றால் எப்படி? மற்ற உணவுப் பண்டங்கள் வந்த பிறகு கடைசியில் மோர் கொண்டு வருகிறோம் என்று சொல்லுவார்கள். இதை அவர்களும் உணர்ந்து இருப்பார்கள் என்றுதான் நினைக்கிறேன். இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்த அதை அரசாங்கம் தற்போதைக்கு ஏற்கமுடியவில்லை என்றால், உடனே "நாங்கள் எல்லாம் தமிழிலே இருக்கவேண்டும் என்று சொன்னோம், அதை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை" என்று ஒரு "ஸ்டண்ட் ப்ளே" பண்ணுகிற மாதிரி வேண்டுமானால் செய்யலாம். இன்னொரு உதாரணமும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இங்குள்ள மாதர்கள் தவறாக நினைக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். பிள்ளை பிறந்தவுடனேயே அவன் என்ஜினியராக வேண்டும் என்று தாய் சொன்னால், அவன் வளர்ந்து, படித்து; படிப்படியாக எந்த துறைக்கு ஏற்றவன் என்று பார்த்துச் செய்யலாம் என்று தகப்பன் பதில் சொன்னால் எப்படியோ அப்படியேதான் இதற்கும் நான் பதில் சொல்ல வேண்டி இருக்கிறது. பிள்ளை என்ஜினியராக வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், அவன் வளர்ந்து, படித்து வந்த பிறகுதானே அதைப்பற்றி யோசிக்க வேண்டும்? அதே முறையில் தமிழ் எல்லாத் துறைகளிலும் வரக்கூடிய கட்டம் வரப் போகிறது, ஆனால் அது எப்போது என்பதுதான் பிரச்னை. இன்றைக்கு மாவட்ட அலுவலகங்களில் பல துறைகளில் தமிழ் புகுத்தப்பட்டு வருகிறது. தற்போதைக்கு ஆங்கிலமும் வேண்டி இருக்கிறது. அதை இன்றைய நிலையில் பரீட்சையிலிருந்து அறவே ஒழிக்க முடியாது. ஆங்கிலப் பயிற்சியும் வேண்டி இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. பப்ளிக் சர்விஸ் கமிஷன் ரிபோர்ட்டுகளிலிருந்து, ஆங்கிலத்தின் தரம் எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். இந்த சமயத்தில் திடீரென்று எல்லாம் தமிழிலேயே செய்ய வேண்டுமென்றால், அது பல சிக்கல்களை உண்டாக்கும். கட்டிடம் கட்ட வேண்டுமென்றால், முதலில் அஸ்திவாரம் போட்டாக வேண்டும். அஸ்திவாரம் பலமாக அமைக்கப்பட வேண்டும். தீர்மானம் கொண்டு வந்த நண்பர் கோரிக்கை எப்படி இருக்கிறது என்றால், அஸ்திவாரம் இருக்கட்டும், கட்டிடத்தை இப்பொழுதே கட்டி முடித்து விடுவோம் என்பதுபோல் இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை அடிப்படை லட்சியத்தில் ஒத்துக் கொண்டாலும், உடனடிக் கோரிக்கையாக இருப்பகால் ஆட்சேபிக்கிறேன். உடனடியாக தமிழே



எல்லாக் காரியங்களுக்கும் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று சொல்வது சரியாகாது. அப்படி இருக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுவது தற்போதைக்குப் பொருத்தமாக இருக்காது. வெளியிலே சென்று "நாங்கள் தமிழிலே இருக்க வேண்டும் என்று கேட்டோம், அரசாங்கம் அதை மறுத்துவிட்டது" என்று சொல்ல வேண்டுமானால் எதிர்க்கட்சி "ஸ்டண்ட்" ஆக உபயோகிக்கலாம். ஆகவே, அம்மாதிரிப் பயன் படுத்தாமல், விவேகத்தோடு இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வற்புறுத்துவது விவேகம் இல்லை, புத்திசாலித்தனம் இல்லை என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, தமிழக அரசில் 10-00 a.m. பணி புரிய அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுகள் தமிழிலும் நடைபெற வேண்டும் என்ற தீர்மானத்தை, எதிர்க் கட்சியிலிருந்து ஒருவர் கொண்டு வர, அந்தத் தீர்மானம் வேண்டாம் என்ற கருத்துப்பட ஆளும் கட்சியிலிருந்து ஒருவர் பேச, ஆக இந்தக் காட்சியை வெளிநாட்டார் யாராவது இங்கே இருந்து பார்ப்பாரானால் இது தமிழ் நாடு அரசு தானா, இங்கே இப்படிப் பேசுகிறவர்கள் தமிழர்கள் தானா என்று சந்தேகிக்கக் கூடிய ஒரு நிலை இருக்கிறது என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தீர்மானம் தமிழில் நடைபெறவேண்டும் என்று கூட இல்லை. தமிழிலும்கூட நடைபெற வேண்டும் என்று தான் இருக்கிறது. எப்படி இருந்திருக்க வேண்டும்? உண்மையில் அத்தனை பேர்களுக்கும் தமிழார்வம் பொங்கி வழிகிறது என்று கூற வேண்டுமானால், 'தமிழில் நடைபெற வேண்டும்', 'தமிழில் தான் நடைபெற வேண்டும்' என்று இருந்திருக்க வேண்டும். அப்படிக் கூட இல்லை. அப்படி இருந்தும் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து இன்னும் காலம் செல்லட்டும் என்று சொல்லுகிறார்கள். எந்தக் காலத்தை எதிர் நோக்கியிருக்கிறார்கள்? தமிழக அரசில் தமிழ் ஆட்சி மொழி என்று ஏற்றுக்கொண்டு, அதை நடைமுறையில் படிப்படியாகக் கொண்டு வந்திருக்கிறோம். மாகாண நிலையிலும், மாவட்ட நிலையிலும் பல துறைகளில் இன்றைக்கு தமிழ் ஆட்சி மொழியாக விளங்கி வருகிறது. இந்த நிலையில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கக் கூடிய அரசில் அலுவலகங்களுக்கு அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழில் தேர்வு நடத்தினால் என்ன கெட்டுப் போய்விடும் என்று ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக இன்னொரு நிலையை மறந்து விடக் கூடாது. நம் கல்வி அமைச்சர், 'பயிற்சி மொழியாகத் தமிழைக் கொண்டு வந்திருக்கிறோம் கல்லூரிகளில், எதிர் கட்சியில் இருக்கிறவர்கள் எல்லோரும் கூப்பாடு போட்டார்கள், ஆனால் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்க மாணவர்கள் முன் வரவில்லை' என்று குற்றச்சாட்டைக் கூறி வருகிறார்கள். எப்படி வருவார்கள்? தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கக் கூடியவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது?

தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படித்தால் எதிர் காலத்தில் உத்தியோகம் நிச்சயமாக இருக்கிறது என்று உறுதி மொழி தர முடியவில்லை. பாருங்களேன், இப்போது தமிழக அரசின் அலுவலகங்களில் பணி புரிகிற அலுவலர்களைத் தேர்தெடுக்கும் தேர்வுகள் தமிழிலும் நடைபெற வேண்டும் என்ற தீர்மானம் வந்து, அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் கூட ஆளும் கட்சிக்கு இல்லை என்றால் இத்தகைய நடவடிக்கைகளைப் பற்றி தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்க நினைக்கும் மாணவர்கள் பார்த்தால் அவர்களுக்கு எப்படித் துணிவு உண்டாகும்? ஏதோ ஒரு சில மாணவர்கள் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்க முன் வந்திருக்கிறார்கள் என்றால் அவர்களைத் தியாகிகள் என்று அல்லவா சொல்லவேண்டும்? தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் உருவாக வேண்டும், அதற்கு எங்களை பலி கொடுத்தால் கூடப் பரவாயில்லை என்ற நிலையில், அரசிடமிருந்து எத்தகைய உறுதி மொழி இல்லாமலிருந்தாலும் கூட, அவர்கள் முன் வந்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் தியாக சிந்தனையோடு வந்திருக்கிறார்கள் என்று பாராட்ட அல்லவா வேண்டும். மற்றவர்கள் முன் வரவில்லையென்றால், நீங்கள் இதற்கு என்ன வழி வகுத்தீர்கள்? அதை முன்னிட்டாவது இந்தத் தேர்வுகள் தமிழிலும் நடைபெற வேண்டும் என்ற தீர்மானத்தை என் நிறைவேற்றித்தர வேண்டும் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்தத் தீர்மானத்தை அரசியல் கண் கொண்டு பார்த்து விட்டார் நண்பர் சங்கரன். எதிர்க் கட்சியைச் சேர்ந்த நாங்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இதை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுவது நாங்கள் எங்கள் கட்சிக்கு வலிவு தேடிக் கொள்ளும் நடவடிக்கை என்ற சுட்டிக்காட்டி அவர் சொல்லியிருக்கிறார். அவருக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். எங்கள் கட்சியை வளர்த்துக்கொள்ள இது ஒன்று மட்டும் இருக்கிறது என்று நினைக்க வேண்டாம். இதைத் தவிர எத்தனையோ வழிவகைகள் இருக்கின்றன. அவைகளால் வளர்த்துக்கொள்ள முடியும். அப்படிப்பட்ட எண்ணம் இருந்தால், அதற்காகவே எமது நண்பர் அரங்கண்ணல் அவர்களை இப்போதே வாபஸ் வாங்கி கொள்ளச் சொல்லுகிறேன். நாளையோ அல்லது நாளை மறுநாளோ கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் இதே தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி வைக்கிறேன் என்று உறுதிமொழி தருவாரானால், அதை கனம் கல்வி அமைச்சர் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்வாரானால், இப்போதே இந்தத் தீர்மானத்தை நாங்கள் வாபஸ் வாங்கிக் கொள்கிறோம். அரசியல் நோக்கத்தைப் புகுத்தாமல் இந்தத் தீர்மானத்தை நல்ல முறையிலே ஆதரித்து இந்தச் சபை இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். இதுவும் கொள்கையின் விளைவாகத்தான். நேற்று, இந்தத் தீர்மானத்தை பிரேரே-



பித்திருக்கிற அங்கத்தினரைச் சார்ந்திருக்கிறவர்கள் அபிப்பிராயத்திற்கு எதிராகப் பேசினேன். இன்றைய தினம் ஒரு சில கருத்துக்களை ஆதரித்துப் பேசுகிறேன். இதனுலேயே நான் பிரிவினையை ஏற்றுக்கொள்வதாக இல்லை. அவர்கள் பிரிவினை என்று சொல்லுவதாலேயே நல்ல கருத்துக்கள் இடம் பெருமல் போய் விடுகின்றன. பிரிவினையோடு இந்தப் பிரச்சனைகள் இணைக்கப்படுகிற காரணத்தினால் தமிழுக்குரிய இடம் கூட கிடைக்காமல் போகிறது. மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய அதிகாரம் கிடைக்க வேண்டும் என்று மற்றவர்கள் கூட வற்புறுத்த முடியாமல் போகிறது. பிரிவினையோடு இணைத்துப் பேசுவதால் அத்தகைய நல்ல காரியங்களைச் செய்ய முடியாமல் போய்விடுகின்றது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குப் பரிகாரம் பிரிவினை அல்ல. நேற்றுக் கூட பல பிரச்சனைகளைச் சொன்னார்கள். அவைகளுக்கெல்லாம் பதிலளிப்பதற்கு எனக்கு இப்போது நேரம் இல்லை. தமிழிலும் சர்விஸ் கமிஷன் பரீட்சை எழுத வாய்ப்பு இருக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. இன்று நேற்று அல்ல; இது புதிதாகப் பிரேரேபிக்கப்பட்டுள்ள ஒரு தீர்மானம் அல்ல. பல முறை இங்கே வற்புறுத்தப்பட்டிருக்கக் கூடிய விஷயம். பல முறை பேசப்பட்டு இங்கே நிராகரிக்கப் பட்டுள்ளது. 1956-ல் ஆட்சி மொழி தமிழ் மொழி என்று சட்டம் இயற்றப்பட்டபோதே இந்தப் பிரச்னைகள் பேசப்பட்டு வற்புறுத் தப்பட்டு வந்திருக்கிறது. அப்போது என்னுடைய கட்சி பிரதான எதிர்க் கட்சியாக இருந்தது. அப்போது என்னுடைய கட்சியிலே மிகத் திறமையாக ஆங்கிலம் பேசக் கூடிய அறிஞர்களும் உண்டு. இருப்பினும் அப்போதே என்னுடைய கட்சி முடிவு எடுத்தது. அப்போதெல்லாம் இந்த மன்றத்தில் ஆங்கிலத்தில் தான் எல்லாம் நடக்கும். தமிழில் ஒரு ஸ்பீச் பார்க்க முடியாது. அப்படி இருந்தும் தமிழிலேயே பேசுவது, எல்லா நடவடிக்கைகளுக்கும் தமிழிலேயே வற்புறுத்துவது என்பது முதன் முதலாக அன்றைக்குச் சட்டசபையில் தமிழில் பேசிய, பேச வேண்டும் என்று வற்புறுத்திய பெருமை கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு. படிப்படியாகத் தான் எதையும் ஆதரிக்கிறோம். உயர் நீதி மன்றத் தீர்ப்பு வரையில் தமிழில் இருக்க வேண்டும். நீதி மன்றத்தில் வாதாடுவது எல்லாம் தமிழில் இருக்க வேண்டும் என்ற நிலைமை வர வேண்டும். ஆங்கிலத்தில் பேசுவதை விட்டு தமிழில் பேச வேண்டுமென்று வந்தால் பல வக்கீல்களின் மரியாதை போய்விடும் என்று எண்ணலாம். எல்லாம் ஆங்கிலத்தில் நடப்பதால், தமிழில் எடுத்துச் சொல்ல முடியாததால் கஷ்டம் இருக்கிறது. நீதி மன்றங்கள் உட்பட தமிழிலேயே நடத்தக் கூடிய திறமை தமிழர்களுக்கு உண்டு என்பது என்னுடைய அனுபவ பூர்வமானது. கல்டிவேட்டிங் டெனண்ட்ஸ் ப்ரொட்டெக் ஷன் ஆக்ட் அமலில் இருக்கிறது; லேபர் லெஜிஸ்லேஷன் அமலில் இருக்கின்றன. ஆங்கிலம் தெரியாத தொழிலாளர் பிரதிநிதிகள், விவசாயிகளின் பிரதிநிதிகள் 500 ரூபாய், 600 ரூபாய் ஃபீஸ் வாங்கி கொண்டு வரும் வக்கீலை தோற்கடித்து விட்டு வெற்றி பெற்று வருவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆங்கிலம் தெரிந்தவர்கள்

அறிஞர்கள், பெரியவர்கள் நிலை மாறிவிட்டது. ஆங்கிலத்தின் ஆதிக்
கம் இருக்கிறது. அந்த ஆதிக்கம் மாற வேண்டும். அதற்குப்
பதிலாக தமிழ் ஆதிக்கத்திற்கு நாம் பாடுபடவேண்டும் என்று நான்
தெரிவித்துக் கொள்கிறேன். தமிழில் எஸ்.எஸ்.எல். சி., வரை
படித்து விட்டுப் பாஸ் செய்துவிட்டு, திடீரென்று சர்விஸ் கமிஷனில்
உட்கார்ந்து ஆங்கிலத்தில் எழுத வேண்டும் என்று வற்புறுத்தப்
பட்டால் அது எப்படி நியாயமாகும்? சில வசதி உள்ளவர்கள்,
ஆங்கில அனுபவம் உள்ள குடும்பத்தில் இருக்கக் கூடிய பிள்ளைகள்
மட்டும் ஆங்கிலத்தில் எழுதி பாஸ் செய்ய முடியும்? விவசாயி
கள் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள், பிற்பட்ட சமூகத்தினர் குடும்
பத்தில் உள்ள பிள்ளைகள், பிற்பட்ட சமூகத்தினர் குடும்பத்தில்
உள்ள பிள்ளைகள் ஹரிஜனப் பிள்ளைகள் ஆகிய இவர்களுக்கெல்லாம்
ஆங்கிலத்தில் பயிற்சி பெற சந்தர்ப்பம் கிடையாது. ஏதோ ஒரு
டிஸ்டிரிக்ட் போர்ட் ஸ்கூலில் படித்து பாஸ் செய்து விட்டு, சர்விஸ்
கமிஷன் பரீட்சையை ஆங்கிலத்தில் எழுது என்று வைப்பதால்
எத்தனை பேர்கள் தேற முடியாமல் போகிறது. இதனால் எத்தனை
பேர்களுக்குச் சர்க்கார் உத்தியோகம் பெற வாய்ப்பில்லாமல்
போகிறது. வேண்டுமானால் தேர்ந்தெடுத்த பிறகு, நான் இதைப்
பற்றி முன்பு ஒரு முறை கூடச் சொல்லியிருக்கிறேன்,
அட்மினிஸ்ட்ரேஷன் பற்றி நிர்வாகப் பாடங்களைப் பற்றி 6 மாத
காலம் அவர்களுக்கு ஸ்டைஃபண்டு கொடுத்து ஒரு பயிற்சி
அளிக்கலாம். ஆனால் அதை ஒரு வடிகட்டும் முறையாக
ஆக்கிவிடக் கூடாது. அந்த முறையில் பயிற்சி கொடுக்கும்
முறையை ஆலோசனை செய்து, சர்விஸ் கமிஷன் பரீட்சை
யைத் தமிழிலும் நடத்த வேண்டுமென்பது நல்ல யோசனை
என்பதால், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கொண்டு
வந்த தீர்மானம் ஆனாலும் கூட நான் இதை ஆதரிக்கத்
தயங்கவில்லை. ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட, இன்றைய
கட்சிக் கட்டுப்பாட்டை உத்தேசித்து இந்தத் தீர்மானத்தை
எதிர்ப்பார்களே தவிர, மற்றபடி பேசக்கூடிய விஷயங்களில்
நியாயம் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளக்கூடியவர்கள் பலர்
ஆளுங்கட்சியில் கூட இருக்க முடியும் என்பது என்னுடைய நம்பிக்
கை. ஆகையால் தான் சொல்கிறேன், பிரச்சனை அதிகப் பட்ச
வலிமை ஏற்படுத்தக் கூடிய முறையில் பிரேரேபிக்க வேண்டுமே
தவிர, ஒரு தனிப்பட்ட கட்சிக்கு மட்டும் ஒரு தனிக் கௌரவம் ஏற்
பட வேண்டும் என்று எந்தக் கட்சி பேசினாலும், அதனால் நாட்டுக்கு
நன்மை இருக்காது. அந்தக் கட்சிக்கே கூட, காலக்கிரமத்தில்
அதனால் நன்மை இருக்காது. 'கலியாணசுந்தரம் கட்சி 15
இலிருந்து 4 ஆகி, 4 இலிருந்து 2 ஆகி, அந்த இரண்டும் ஸைஃபர்
ஆகிவிடும்' என்று சொல்லி நண்பர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்
என்று கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம். மகிழ்ச்சி அடை
யட்டும். எண்ணிக்கையைப்பற்றி கவலை இல்லை. எண்ணிக்கை
எவ்வளவு இருந்து என்ன? மண்வெட்டி பெரிதாக இருக்கலாம்.
மண்ணைத்தான் வெட்டி எடுக்க முடியும். உளி பாறையைத் தகர்த்து
விடுமே! எண்ணிக்கையினால் மட்டுமா பெருமைபடுவது? தேர்தல்





முறை எப்படி இருக்கிறது? தேர்தலில் எல்லா முறைகளையும்
கையாண்டு விடுவது என்றால், கம்யூனிஸ்டுக் கட்சியும் சில ஸ்தா
பனங்களைப் பிடிப்பதில் கஷ்டம் இல்லை, மொத்த வோட்டுகளில் 46
சத விகித வோட்டுத்தான் ஆளுங்கட்சி வாங்கியிருக்கிறது. ஸ்தா
னங்கள் பெற்றிருக்கிறது. ஒரு கட்சி எத்தனை ஸ்தானங்களைப்
பெற்றிருக்கிறது என்பதை வைத்து, அதிலே பெருமைப்பட்டுக்
கொண்டிருப்பதா? 'கலியாணசுந்தரம் பேசியது மனத்திற்கு
வருத்தத்தைக் கொடுத்தது. அதற்குப் பதில் ஏதாவது சொல்லி
யாக வேண்டும்' என்று பேசியதாகத்தான் கொள்ள வேண்டியிருக்
கின்றது. நான் யார் மனதும் வருத்தப்பட வேண்டும் என்பதற்
காகப் பேசவில்லை. சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் பேசி
னேன். மனது புண்படப் பேசவில்லை. அப்படிப் பேசித் திருப்தி
யடைய முடியாது. (திரு. மு. கருணாநிதி--குறுக்கீடு) நான்
ஒன்றும் சண்டை போடவில்லை. மரியாதைக் குறைவான வார்த்தை
களை நான் உபயோகித்திருந்தால் கனம் உதவி சபாநாயகர் அவர்
களே, தாங்கள் அதை அனுமதித்திருக்க மாட்டீர்கள். கருத்து
கொஞ்சம் கூர்மையாக இருந்திருக்கலாம். உண்மையைச்
சொன்னால் நோகத்தான் செய்யும். ஒரு கட்சியைப் பற்றி ஏளனம்
செய்வது சரியல்ல. எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று
நான் வெட்கப்படவில்லை. என்னுடைய கட்சியின் கொள்கை
என்ன, கருத்து என்ன என்று தான் பார்க்க வேண்டும்.

SRI V. KRISHNAMOORTHY : Is it relevant to the speech, Sir?

SRI M. KALYANASUNDARAM : Yes, it is relevant, Sir.

'தமிழ் வரவேண்டும்' என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைப்
பேச வைத்திருப்பதே கம்யூனிஸ்டுக் கட்சிதான் என்று நான்
பெருமைப்படுகிறேன். காங்கிரஸ் கட்சியை சோஷலிசத்தைப்
பற்றி முதன் முதலாகப் பேச வைத்ததே கம்யூனிஸ்டுக் கட்சிதான்
என்பதிலே எங்களுக்குப் பெருமை உண்டு. காங்கிரஸை சோஷலி
சத்தைப் பற்றிப் பேச வைத்திருக்கிறதே அதுவே கம்யூனிஸ்ட்
கட்சியின் பெருமை. வெளிநாட்டுக் கொள்கை என்று சொன்ன
வர்கள் 'சோஷலிச சமுதாயம்' என்று பேசக்கூடிய அளவுக்கு
வந்திருக்கிறார்கள் என்றால், அதிலே எங்களுடைய கட்சிக்குப்
பெருமை உண்டு தமிழுக்கு முதல் இடம் வேண்டும் என்று
நாங்கள் சொல்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்
கள் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், ஆங்கி
லம்தான் இருக்க வேண்டும். அதற்காக அரசியல் சட்டத்தைத்
திருத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களை, 'தமி
ழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், என்று பேச வைத்தது
எங்களுடைய கட்சியே தவிர, வேறு அல்ல. எங்களுடைய
கட்சி அங்கத்தினர்களின் எண்ணிக்கையைக் கண்டு நான் வருத்
தப்படவில்லை. நான் யார் மனதையும் புண் படுத்துவதற்காகப்
பேசவில்லை என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை
முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் கொண்டு வந்திருக்கும் இந்த தீர்மானம் தற்போதைக்கு அவசியமில்லாத தீர்மானம என்கிற என்னுடைய கருத்தை நான சொல்லிக் கொள்கிறேன். பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீட்சை எழுதி சர்க்கார் உத்தியோகத்திற்கு வரக்கூடியவர்கள் தமிழிலும் பதில் எழுதலாம் என்ற வகையில தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள் இதைக் கொண்டு வந்ததின் நோக்கம், சர்க்கார் உத்தியோகத்திற்கு வரக்கூடியவர்களுக்காகப் பரிந்து பேசி அவர்களுடைய வோட்டுக்களையும் பிடிக்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டுதான் இந்த அவசர நிலையில் இந்த தீர்மானம் வந்திருக்கிறதே அல்லாது, தமிழ்மொழி வளர்ச்சி அடையவேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு அல்லது, தமிழ் மகன் தமிழிலேயே பாஸ் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்திருப்பதாக இல்லை என்று நாம் நன்றாகத் தெரிந்திருக்கிறோம்.

தமிழுக்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் தான் பரிந்து பேசுவதாக நினைத்துக் கொண்டு, அவர்கள் மாத்திரம் தான் சேர, சோழ, பாண்டியன் பரம்பரையில் பிறந்தவர்கள் போலவும், இங்கே காங்கிரஸ் கட்சியில் உட்கார்ந்து கொண்டிருக்கும் நாங்கள் ஏதோ அன்னிய நாட்டிலிருந்து இங்கு வந்து ஆட்சி செய்வது போலவும், அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் தமிழர்கள் தான். நாங்களும் தமிழில் எவ்வளவு ஆர்வம் கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் தமிழை ஆட்சி மொழியாக்குவதற்குச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். மற்றவர்கள் சொல்லாதிருக்கும்போதே நாங்களாகவே அதைக் கொண்டு வந்தோம் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தாய் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்தது நம்முடைய மாநிலம் தான் என்கிற பெருமை காங்கிரஸ் கட்சிக்கு உண்டு. இதற்காக நன்றி தெரிவித்தால், தங்கள் பக்கத்தில் இருந்து ஏமாந்து கொண்டிருக்கும் மக்கள் தங்கள் பக்கத்தில் இல்லாமல் போய்விடுவார்களோ என்கிற பயத்தினால்தான் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி எந்தவிதமான சந்தேகமும் இல்லை. பத்தாவது வரையில் தமிழில் படித்துவிட்டு வந்தவர்கள் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் கேட்கும் ஆங்கிலக் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்ல முடியும் என்பதை நாங்கள் புரிந்திருக்கிறோம். நன்றாகப் பதில் சொல்ல முடியாது என்பதை நாங்கள் புரிந்திருக்கிறோம். தமிழில் படித்துவிட்டு வந்தவர்களிடம் தமிழில் கேள்வி கேட்கலாம். இதையெல்லாம் படிப்படியாக கொண்டு வரலாம் என்று சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது. இந்த அவசர நிலையில் இதற்கு ஒரு தீர்மானம் போட்டுவிட்டால் போதுமா? தமிழில் பாண்டித்தியம் வர வேண்டும் அல்லவா? உதாரணத்திற்குச் சொல்கிறேன். சென்னையிலே பாரிஸ் கார்னருக்குப் பக்கத்தில் ஒரு பஸ் நிலையம் இருக்கிறது. அங்கு போய்ப் பார்த்தால், பஸ் நிலையத்திற்குப் பெயர் 'பேருந்து நிலையம்' என்று போட்டிருக்கிறது. இதுவா தமிழ்? பேருந்து நிலையம் எத்தனை இருக்கின்றன ?' என்று பப்ளிக் சர்விஸ் கமிஷனில் ஒரு கேள்வி கேட்டால் மாணவனால் பதில் சொல்ல முடியுமா? அவன் 'திரு, திரு' என்று விழிப்பான். 'பேருந்து நிலையங்கள் இந்த நாட்டிலேயே இல்லை' என்று பதில் சொல்லிவிடுவான். ஜீரோ மார்க்தான் அவனுக்குக் கிடைக்கும்.



சென்னை நகரத்தின் நிலை இப்படி என்றால் மாவட்டத்தின் நிலை என்ன? 'மாவட்டச் சிறு கோட்டப் பொறியாளர் அலுவலகம்' என்று போட்டிருக்கிறது. அது யாருக்குப் புரியும்? புலவருக்காவது புரியுமா? (திரு. ப. உ. சண்முகம் : புலவருக்குப் புரியும்.) புலவருக்குத் தெரிந்தால் மட்டும் போதாது. (திரு. ப. உ. சண்முகம் : எல்லோருக்கும் புரியும்). மாணவர்களுக்குப் புரிகிறதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லாம் தமிழ்தானே என்று பப்ளிக் சர்விஸ் கமிஷன் கமிட்டியார் இம்மாதிரி ஒரு கேள்வியைப் போட்டுவிட்டால் அந்தத் தமிழ் படித்த மாணவனுடைய கதி என்ன என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகையால்தான் சொல்கிறேன், அவசர காலத்தில் இதெல்லாம் செய்யக்கூடிய காரியம் அல்ல. தமிழ்ப் பண்பு எங்களுக்கும் இருக்கிறது. தமிழ் பற்று எங்களுக்கும் இருக்கிறது. நாங்களும் தமிழர்கள்தான். பச்சைத் தமிழர்கள்தான். எங்களுக்குத் தெரியாத ஒன்றை அவர்கள் தான் சொன்னது போலவும், நாங்கள் ஏதோ தமிழருக்குச் சேவை செய்யாமல் யாருக்கோ ஒரு காரியத்தைச் செய்யக்கூடிய மாதிரி அரசாங்கத்தை நடத்திக் கொண்டு போகிறோம் என்பது போலவும், மக்களுக்கு உண்மைக்குப் புறம்பாக எடுத்துச் சொல்வதற்காகத்தான் இந்தத் தீர்மானம் பயன்படுமே அல்லாது, வேறு எதற்கும் பயன்படாது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது அரசாங்கம்தான் தமிழ் போதனாமொழிக் கல்லூரியை வைத்திருக்கிறது. தமிழ் மூலம் பாடங்கள் போதிப்பதற்காக அந்தக் கல்லூரியை ஏற்படுத்தினோம். ஆனால், போதிய பிள்ளைகள் அங்கு வந்து சேரவில்லை. அதற்கு அரசாங்கம் என்ன செய்ய முடியும்? எதிர்க்கட்சி அங்கத்தினர்களுடைய பிள்ளைகள் எத்தனை பேர்கள் அதில் படிக்கிறார்கள் என்பது தெரியவில்லை. (திரு. ப. உ. சண்முகம் : கல்லூரியில் படிக்கக்கூடிய வயதில் பிள்ளைகள் இல்லையே.) உங்களுக்குப் பிள்ளைகள் இல்லை யென்றால் உங்களுடைய தலைவர்களுடைய பிள்ளைகளையாவது படிக்க வைக்கலாமே. அனுப்பமாட்டார்கள். ஆனால், மக்களிடத்தில் சொல்வீர்கள், "தமிழில் கல்லூரி வைக்கச் சொன்னோம், தமிழ்க் கல்லூரியில் படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டோம், 'இல்லை' என்று அமைச்சர் சொல்லிவிட்டார்" என்று. அப்படிச் சொல்வதற்குப் பயன்படுமே அல்லாது உண்மையாக நெஞ்சில் கை வைத்து, இருதய சுத்தியோடு, 'தமிழில் கல்லூரி வைத்தால் நல்லது அதில் எங்களுடைய பிள்ளைகளைப் படிக்க அனுப்புகிறோம்' என்று நீங்கள் முன் வந்திருக்கிறீர்களா? உங்களுக்குக் கல்லூரியில் படிக்க வைக்கக்கூடிய வயதில் பிள்ளைகள் இல்லை யென்றாலும், உங்கள் தலைவர்களின் பிள்ளைகளையாவது

[திரு. ஜே. மாதா கவுடர்] [8th August 1963

தமிழ்க் கல்லூரியில் படிக்க வைப்பீர்களா? ஆங்கிலக் கல்லூரிக்கு அனுப்புவீர்கள். இவர்களுடைய குழந்தைகளை ஆங்கில மீடியம் ஸ்கூல்களுக்கு அனுப்பி வைக்கிறார்களே தவிர தமிழ் மீடியம் ஸ்கூல்களில் இவர்களுடைய பிள்ளைகள் படிக்கிறது இல்லை. இந்த நிலைமையில் அரசியல் காரணத்திற்காகவோ தங்களுடைய கட்சியின் செல்வாக்கை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவோ அவசர கோலமாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, எதையெதையோ சொல்லி இதை நிறைவேற்றிவிடலாமே தவிர நிச்சயமாக இது நம்முடைய குழந்தைகளுக்கு, வருங் காலச் சந்ததியினர்களுக்குப் பயன் அளிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் குறிப்பாக பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரிட்சைகளில் போய் இதைப் புகுத்துவதானது யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிற கதையாகத்தான் முடியும் என்று சொல்லிக் கொண்டு படிப்படியாக அரசாங்கமே தமிழை ஆட்சிமொழியாக மாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே இப்போது இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று வற்புறுத்த விரும்புகிறேன். அவசர கோலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை அவர்களே வாபஸ் பெற வேண்டும், சர்விஸ் கமிஷன் பரிட்சையைத் தமிழில் கொண்டு வர வேண்டுமென்று வற்புறுத்துவது சரி அல்ல என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய துணை அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் கொண்டு வந்திருக்கிற சர்விஸ் கமிஷன் தேர்வுக்குத் தமிழ் மொழியையும் ஈடுபடுத்த வேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அலுவலர்களுக்காக நடத்தப்படுகிற தேர்வுகளில் இப்போது ஆங்கிலம் தேர்வு எழுதுகின்ற மொழியாக இருந்து வருகிறது. சில பகுதிகளைத் தமிழிலும் எழுதலாம் என்று இப்போது இருக்கிறது. சில பகுதிகளை ஆங்கிலத்தில் மட்டும் எழுத வேண்டுமென்றும் இருக்கிறது. ஆங்கிலத்தில் மட்டுந்தான் விடை எழுத வேண்டுமென்று இருக்கிற பகுதியைத் தமிழிலும் எழுதலாம் என்று ஆக்குவதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கமே தவிர ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டு, எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் தெரிவித்தது போல முழுக்க முழுக்க தமிழிலேயேதான் தேர்வை நடத்த வேண்டுமென்று வற்புறுத்துகிற தீர்மானம் அல்ல இது. தமிழை மட்டுமே தேர்வு மொழியாக ஆக்க வேண்டும் என்று நாங்கள் கூறினால் அவர் எழுப்பிய ஐயப்பாடுகளும் வேறுபல இன்னல்களும் ஏற்பட்டு விடுமோ என்று நினைக்க இடமேற்படும். இந்தத் தீர்மானத்தின் நோக்கம் ஆங்கிலத்தை அறவே அகற்றுவது அல்ல. மேலும் இந்த மாநில அரசாங்கம் திட்டவட்டமாகக் கொண்டிருக்கிறது, "தமிழ்தான் இந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாக வேண்டும்." என்கிற கொள்கையை அந்த அடிப்படையில் என்றைக்காவது ஒரு நாள் தமிழில்தான் இந்த மாநில அரசாங்கத்தின் நிர்வாகம் அனைத்தும் நடைபெறக்கூடும். அரசியல் செயலாக இருந்தாலும், பொருளாதாரச் செயலாக இருந்தாலும் தமிழிலேயே



8th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

தான் நடைபெறும்படியாகச் செய்ய வேண்டுமென்பது இந்த
அரசாங்கத்தின் கொள்கை. அந்தக் கொள்கையைத்தான் படிப்
படியாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். இதில் ஒன்றும்
கருத்து மாறுபாடு இருக் நியாயம் இல்லையென்று நான் கருது
கிறேன். தமிழ்தான் இந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாக
இருக்க வேண்டுமென்ற முடிவை இந்த மன்றம் முன்னமேயே
செய்திருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிற
போதும் திடீரென்று எடுத்த எடுப்பிலேயே எல்லாத் துறைகளி
லும் தமிழை நிர்வாக மொழியாகக் கொண்டு வந்துவிடவில்லை.
படிப்படியாகத்தான் கொண்டு வருகிறோம். தமிழை நிர்வாக
மொழியாகக் கொண்டு வந்துவிட்ட அலுவலகங்களிலும்கூட ஆங்
கில மொழியை அறவே அகற்றிவிடவில்லை. ஆங்கிலத்தோடு
கூடத்தான் தமிழ் இருந்து வருகிறது. தமிழும் சிலபல அலுவல்
களுக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை ஒட்டித்தான்
தமிழை நிர்வாக மொழியாக ஏற்படுத்தும் கொள்கையை ஒப்புக்
கொண்டிருக்கிற நாம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி
யிருக்கிறது. தமிழ் தெரிந்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிர்
வாகத்தில் அமர்வதற்கு வசதி அளித்தால்தான், தமிழிலேயே ஒரு
காலத்தில் நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்றால் அது இயல்வ
தாகும். ஏதோ ஐந்தாவது வகுப்பு வரை தமிழ் படித்துவிட்டு
பிறகு தமிழ்ப் பயிற்சியே இல்லாமல் ஆங்கிலத்திலேயே பயின்ற
அரசாங்க அலுவலர்களிடத்தில் தமிழிலேயே ஆட்சி நடைபெறச்
செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகவே நன்கு
தமிழ் தெரிந்தவர்கள் நிர்வாகத்தில் அமர்வதற்கு ஊக்கமும்,
அதற்கான வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தித் தரவேண்டும். அந்த
முறையில் தமிழிலும் தேர்வு எழுதுவதற்கு இது ஒரு வாய்ப்பே
தவிர ஆங்கிலத்தை அறவே நீக்கிவிட்டு தமிழில் மட்டும் எழுத
வேண்டுமென்பது இந்தத் தீர்மானத்தின் நோக்கம் அன்று.
ஆங்கிலத்தில் எழுத விரும்புகிறவர்கள் ஆங்கிலத்திலும் தொடர்ந்து
தேர்வு எழுதலாம். தமிழில் இயல்பாகவே ஊக்கமும், தனி ஆர்வ
மும் உடையவர்கள் தமிழில் எழுத விரும்பினாலும் தமிழிலும் இனி
எழுதுவதற்கு இந்தத் தீர்மானம் வகை செய்கிறது. பஸ் ஸ்டாண்டு
என்பதற்குப் பேருந்து நிலையம் என்று எழுதினால் யாருக்கு புரி
கிறது என்று கனம் காங்கிரசு உறுப்பினர் கேட்டார். அவ்வாறு
தமிழில் மட்டும்தான் போட வேண்டுமென்று யார் சொல்கிறார்
கள்? அதனடியிலேயே பஸ் ஸ்டாண்டு என்று சில காலத்திற்கு
ஆங்கிலத்திலும் போடலாம். பொறியியல் என்பது இப்போது
புரிந்த ஒன்றாக ஆகிவிட்டது. ஆங்கிலப் பயிற்சி ஒன்று மட்டும்
தான் தெரியும் என்று உள்ளவர்களைக் கொண்டு படிப்படியாக
தமிழிலேயே நிர்வாகத்தை நடத்தக்கூடிய காலத்தை எட்டிப்
பிடித்துவிடுவோம் என்று எண்ணுவது இயலாத காரியம், தமிழி
லும் நன்றாக எழுத முடியும் என்ற கருத்துடையவர்களுக்கு, தமி
ழிலே நல்ல பயிற்சியும் ஊக்கமும் உடையவர்களுக்கு ஆங்கிலத்
தோடுகூட தமிழிலும் எழுதுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டு
மென்றுதான் இந்தத் தீர்மானம் வற்புறுத்திக் கூறுகிறது. இதை
ஏற்றுக் கொள்வதனால் எந்தக் கேடும் ஏற்பட நியாயமில்லை.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th August 1963

அதற்கு மாறாக தமிழில் நல்ல ஆர்வமும், பயிற்சியும் உடையவர்களுக்குத் தமிழிலும் எழுத வாய்ப்பு அளித்து, நிர்வாகத்தில் அவர்களும் வந்து அமர்வதற்கு இடமளித்தோமானால் தமிழ் ஆட்சி மொழியாவதற்கு எளிதாக வழிவகை ஏற்படக்கூடும். இன்றைக்கு நகராட்சி மன்றங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் மற்ற வேறு பல துறைகளைவிட அதிகமான அளவுக்குத் தமிழ் ஆட்சி பெற்று, தமிழ்ச் சொற்கள் ஆங்காங்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் அதற்கு முக்கியமான ஒரு காரணம் தமிழிலே மிக்க ஆர்வமும், தமிழில் புதுப் புதுச் சொற்களைக் கண்டுபிடிப்பதில் அதிக ஊக்கமும் உற்சாகமும் உடைய திரு. ராமலிங்கனார் அவர்கள் அத்துறையின் ஆணையராக இருந்ததுதான் என்றால் மிகையாகாது. ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடித்து கடந்த பத்தாண்டு காலமாக அதிகமாக அவர்கள் ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் வழங்க வழிவகை செய்த காரணத்தினால்தான், அங்கெல்லாம் தமிழ் ஆட்சி, மற்ற துறைகளைவிட அதிகமான அளவுக்கு வழங்குகின்றன.

தமிழிலும் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வுகளை எழுதலாம் என்கிற இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதனால் நாளை முதல் எல்லா அலுவலகங்களிலும் தமிழிலேயே நிர்வாகம் நடைபெற வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. இன்று முதல் அதற்கான முயற்சியை எடுத்தால்தான், தமிழிலும் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வுப் பரீட்சை எழுதுவதற்கான வாய்ப்பையாவது கொடுக்க முன்வந்தால்தான், இன்னும் ஐந்து, பத்து பதினைந்து ஆண்டுகளில் 1990-இல் இல்லாவிட்டாலும் 2000 கி.பி. என்ற அளவிலேயாவது எல்லா அலுவல்களையும் தமிழில் ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படும். ஆகவேதான் இன்றைக்கே சர்விஸ் கமிஷன் தேர்வு ஆங்கிலத்தோடுகூட தமிழிலும் எழுதுவதற்கு வாய்ப்பை உண்டாக்கித் தர இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்படியே இந்தத் தீர்மானம் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டால் தமிழிலேயே எல்லோரும் தேர்வு எழுத முன் வந்துவிடுவார்கள் என்று சொல்வதற்கும் இல்லை. தமிழில் எழுத விரும்புகிறவர்களுக்கு இது ஒரு வாய்ப்பை அளிக்கும்.

இப்போது ஆங்கிலத்தில் மட்டும் எழுத வேண்டும் என்று இருக்கிறது. தமிழில் எழுதத் தடை இருக்கிறது. இனி ஆங்கிலத்தில் எழுதக் கூடாது என்று ஆங்கிலத்திற்குத் தடை விதிக்கும் தீர்மானம் அல்ல இது. தமிழுக்குள்ள தடையை நீக்கும் தீர்மானம் இது. ஆங்கிலத்திலேயேதான் எழுதுவேன் என்கிறவர்களுடைய வாய்ப்பைப் பறிக்கும் தீர்மானம் அல்ல இது. அப்படி விரும்புகிறவர்கள் இனியும் ஆங்கிலத்தில் எழுதலாம். தமிழில் எழுத விரும்புகிறவர்களுக்கும் அவ்வித ஒரு வாய்ப்பை இனி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கோருகிற தீர்மானம்தான் இது. ஆகவே இந்தத் தீர்மானத்தை எவ்வித கருத்து வேறுபாட்டுக்கும் இடம்



8th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கொடுக்காமல் ஆதரித்து ஏற்க வேண்டுமென்று எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் நான் விரும்பிக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசிய போதும், அதை ஆதரித்து எதிர்க் கட்சித் தலைவர் பேசியபோதும் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வுக்குத் தமிழ் இப்போதும் உபயோகப்பட்டு வருகிறது என்பதை உணர்ந்து குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த விவாதத்தில் கலந்துகொண்ட மற்ற உறுப்பினர்கள் பேசும்போதும், கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் பேசும்போதும்கூட எல்லாம் ஆங்கிலத்திலேயேதான் எழுத வேண்டுமென்று இருப்பது போன்ற கருத்து இருப்பதாகத் தெரிந்தது. அது தவறான கருத்து என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் இந்தத் தீர்மானம் தமிழிலும் பரீட்சை எழுதலாம் என்பது. இதை அப்படியே ஏற்றுக்கொண்டால் என்ன பொருள் ஏற்படும்? என்ன நிலைமை ஏற்படும் என்பதை நாம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

அதைப் பற்றிக் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 10-30 a.m.
குறிப்பிட்டார்கள், ஒரு விளக்கம் கூறினார்கள். அந்த விளக்கத்தைக் கேட்ட பிறகு அது ஏற்றுக்கொள்ளக் கூடாத நிலை என்றுதான் எனக்குப் புலப்படுகிறது. முதலில் இப்போது இருக்கிற விதிகளை நான் வாசிக்க விரும்புகிறேன். அதை நான் ஆங்கிலத்திலேயே வாசித்துவிடுகிறேன். அதைத் தமிழ்ப்படுத்தி வாசிக்க வேண்டிய அவசியமில்லை. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள், தாங்கள் இருந்தபோது முதல் முதலாகத் தமிழைக் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். அவர்கள் இருந்த காலம் வேறு. 1962-இல் விதிக்கப்பட்ட சர்க்கார் உத்தரவை இப்போது நான் படிக்கிறேன்.

'Tre posts under the Government have been divided into two broad groups—technical and non-technical. For direct recruitment to technical posts, a competitive examination comprising an oral test in the shape of an interview is conducted by the Commission with the assistance of the Head of the Department concerned or a representative nominated by him'

டெக்னிகல் போஸ்டுக்கு 'ஓரல்' இண்டர்வ்யூ உண்டு

'In the case of the posts under "non-technical", other than certain Ministerial posts, the selection is made on the basis of a competitive examination comprising a written test and an oral test in the shape of an interview conducted by the Madras Public Service Commission. In the case of most of the Ministerial posts, selection is made only on a written test.

[Sri M. Bhaktavatsalam] [8th August 1963

' The gazetted and non-gazetted posts coming under non-technical category have been grouped into seven convenient groups for purposes of holding of competitive examinations by the Commission.

(i) *Group I.*—Selection to posts in the following services comes under this :—

Madras Civil Service (Executive Branch),

Madras Commercial Taxes Service,

Madras Co-operative Service,

Madras Survey and Land Records Service,

Madras Registration Service,

Madras Transport Service.

The examination is of the M.A. Degree standard. The detailed scheme is given elsewhere. Under compulsory subjects there are two papers to be answered in English. Four optional subjects must be taken of which one must be from this Group Language and Literature, i.e., English, Sanskrit, Persian, Arabic, Tamil, Telugu, Malayalam, Urdu, Kannada and Hindi.'

நான்கு பேப்பர் உண்டு. மூன்று தமிழில் எழுதலாம். ஒன்று மட்டும் ஆங்கிலத்தில் எழுதவேண்டும்.

' The remaining three subjects may be chosen from the Group B, C and D. Subjects under Groups B and C relate to language to be answered in the respective language '.

மூன்று தமிழிலே எழுதலாம். ஒன்று ஆங்கிலத்திலே எழுத வேண்டும்.

' Group D to be answered in English consists of subjects like Indian History, Politics, Mathematics, Physics, Chemistry, etc. If a candidate chooses one from each Groups B, C and D, he will answer three papers in any one of the languages specified and one paper in English.

(ii) *Group II.*—Most of the Subordinate Services come under this Group II. The examination is of the B.A. degree standard. The scheme of examination is similar to Grouup I.

(iii) *Group I-A.*—Posts in Madras Forest Service (Assistant Conservator of Forests) come under this.

*Group V.*—Madras Ministerial Service (Audit clerks in the Local Fund Audit Department).



8th August 1963] [Sri M. Bhaktavatsalam]

*Group VI.*—Posts under Madras Forest Subordinate Service (Forest Apprentices) come under this. The medium of examination is English. There is no test in any other language for these Groups.

(iv) *Group III.*—Posts in Madras Co-operative Subordinate Service—Senior Inspectors (Scheduled Castes, Scheduled Tribes and Backward Classes), Junior Inspectors of Co-operative Societies, etc., come under this. The examination is of Pre-University standard. Language translation and composition is one of the compulsory subjects in the examination.

(v) *Group IV.*—Most of the Ministerial posts other than Madras Secretariat Service come under this. The examination is of S.S.L.C. standard (written test only). The examination consists of the following four papers :—

(1) An essay paper in two parts, the first part being essay in Tamil and the second part in English.

(2) A paper in precis writing in English.

(3) A paper in General Knowledge which will be set in English, the candidates being given the option of answering it either in English or in Tamil.

(4) A translation paper in two parts, the first part being translation from Tamil into English and the second part from English into Tamil.

(vi) The candidates belonging to the linguistic minorities in the State may, if they so desire, offer any one of the following languages as the medium in the place of Tamil—Teugu, Kannada, Malayalam, Urdu, Hindi and English. This concession is subject to the condition that, if selected, they should pass a test in Tamil within a prescribed period. '

இதுதான் இப்போது இருக்கிற நிலைமை. இந்தத் தீர்மா
னத்திலே 'தமிழையும் சேர்க்க வேண்டும்' என்று போட்டிருப்
பது அவ்வளவு தெளிவாகக் கருத்தைத் தெரிவிக்கவில்லை.
எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய விளக்கத்தில் இருந்து
தெரிவது என்னவென்றால், தற்போது மூன்று பேப்பர்கள் தமி
ழில் எழுதலாம் என்று இருப்பதோடு ஆங்கிலத்தில் எழுதப்
பட வேண்டிய நாலாவது பேப்பரையும் தமிழில் எழுத வழி
செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று தெரிகிறது.
மூன்று பேப்பர்களைத் தமிழில் எழுத வாய்ப்பு இருக்கும்போது
ஏன் ஆங்கிலத்தில் எழுத வேண்டிய ஒரே பேப்பரையும் தமி
ழில்தான் எழுத வேண்டும் என்று சொல்ல வேண்டும்? தமிழில்
புலமை வேண்டும், திறன் வேண்டும். அது மட்டுமன்றி

[திரு. எம். பக்தவத்சலம்] [8th August 1963

மாகாண ஆட்சியைப் பொறுத்த மட்டில் வேகமாகத் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்பதை நிறைவேற்றி வருகிறோம். ஆனால் ஆங்கிலத்தில் ஒரு பேப்பர் கூட எழுதக் கூடாது என்று சொல்வது சரியல்ல. இப்போது கோவையில் பி.ஏ. வகுப்பில் கலை இயல் பாடங்கள் தமிழில் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறு தமிழில் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுத்த அந்தச் சமயத்திலேயே அவர்களுக்கு ஆங்கிலத்தை விசேஷமாகச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பயிற்சி மொழித்திட்டத்தின் இன்றியமையாத பாகம் அது. தமிழ் நாடு பாரத நாட்டில் இருக்கிறது. மற்ற மாநிலங்கள் இருக்கின்றன. மத்திய ஆட்சி மொழியைப் பொறுத்த மட்டில் அது ஒரு அரசாங்க மொழி. அரசியல் அமைப்புச் சட்டத்தில், 1965-க்குப் பிறகு இந்தி என்று இருக்கிறது. இப்போது ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் சங்கடம் ஏற்படும், ஆங்கிலத்தை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று வற்புறுத்தினோம். அதை ஏற்றுக் கொண்டு பார்லிமெண்ட் சபையில் சட்டம் நிறைவேற்றியிருக்கிறார்கள். நிறைவேற்றப்பட்ட சட்டம் இந்தியை வைக்க அல்ல, ஆங்கிலத்தை நீடிக்கத்தான். வேறு தவறுதலான கருத்து வெளியிலே தெரிவிக்கப்படுகிறது. யாரோ பெரியவர் சொல்கிறார் என்று சில பேர் சொல்கிறார்கள். அந்த நிலைமை இல்லை. ஆங்கிலத்தை வைக்கத்தான் சட்டம். இப்போது இருக்கிற நிலைமையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும். மத்திய ஆட்சியில் ஆங்கிலம் என்றால் நமக்கும் அதில் பங்கு இருக்கிறது. மாகாண ஆட்சிக்கும் மத்திய ஆட்சிக்கும் தொடர்பு இருக்கிறது. ஆகவே ஆங்கிலத்தில் எழுத முடியாது என்று சொன்னால் மற்ற விவகாரங்களை எல்லாம் எப்படிச் செய்வது? இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் தமிழைப் பயிற்சி மொழியாக்கி விசேஷமாக அவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஒரு பாடத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னால் தாய் மொழியில் சொன்னால் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். அது எல்லோரும் ஒத்துக்கொள்கின்ற கருத்து. புரிந்து கொண்ட பிறகு அதைத் திருப்பி வெளிப்படுத்த, தமிழிலும் தெரிவிக்கத் தயாராக இருக்கவேண்டும். ஆங்கிலத்திலும் தெரிவிக்கத் தயாராக இருக்கவேண்டும். இப்போது பெரிய உத்தியோகஸ்தர்கள் எல்லாம் தமிழை அதிகமாகப் படிக்காதவர்கள், தமிழிலே பயிற்சி பெறாதவர்கள். தமிழ் ஆட்சி மொழியரக இருக்கும்போது அவர்களால் எப்படிச் சரியாகத் தங்களுடைய பணியைச் செய்ய முடியும் என்பதைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இப்போது ஒன்றை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன். ஐ.ஏ.எஸ். பாஸ் செய்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழில் புலவர்கள் அல்ல. அவர்கள் ஆங்கிலம் நன்றாகப் படித்தவர்கள். அவர்கள் தமிழைப் புறக்கணிக்கவில்லை என்பதும் தெரிகிறது. அவர்கள் ஆங்கிலத்தைக் கையாண்டு ஆங்கிலத்தில் எழுதித் தேறியவர்கள். ஆனால் இப்போது அவர்கள் மிக அழகாக சுத்தமான தமிழில் எழுதுகிறார்கள். இதற்குப் பயிற்சி



8th August 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

வேண்டியதில்லை. கருத்து இருந்தால் தமிழில் எழுத கஷ்டம் இல்லை. பல சீனியர் ஆபீசர்கள் நல்ல தமிழில் எழுதுவதை நான் பார்த்திருக்கிறேன். அதுபற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் என் மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எழுதுவது வேறு விஷயம். முதலில் புரிந்து கொள்வது முக்கியம். பயிற்சிமொழி பற்றி புலவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கல்லூரிகளில் பாடம் சொல்லிக் கொடுப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். நான் கோவைக்குச் சென்றிருந்தபோது சில பெற்றோர்களும், ஒன்றிரண்டு மாணவர்களும் என்னைச் சந்தித்துப் பேசினார்கள். நாங்கள் பாஸ் செய்துவிட்டோம், எங்கே உத்தியோகம் என்று கேட்கிறார்கள். சர்வீஸ் கமிஷனுக்கு அப்ளிகேஷன் போட்டீர்களா என்று கேட்டால், இல்லை என்கிறார்கள். அவர்கள் வீடு தேடிச் சென்று உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இதை அங்கத்தினர்கள் யாராவது ஏற்றுக் கொள்வார்களா? தமிழில் படித்திருக்கிறார்கள் என்பதற்காக வீடு தேடிச் சென்று பெரிய உத்தியோகங்களை கொடுக்கவேண்டுமென்றால் என்ன அர்த்தம்? எதற்கு சர்வீஸ் கமிஷன் இருக்கிறது? பத்து பேர்கள் படித்துவிட்டால் போதுமா? எவ்வளவோ பேர்கள் படிக்கவேண்டுமென்று விரும்புவார்கள். தமிழில் படித்து புரிந்து கொண்டார்கள் என்பதற்காக அவர்கள் ஆங்கிலத்திலும் எழுதத் தயாராயிருக்கவேண்டும். இதை நான் அந்தப் பெற்றோர்களிடமும், மாணவர்களிடமும் சொன்னேன். தமிழில் பயிற்சி பெற்று பாஸ் செய்ததால் ஏதாவது தடை இருந்தால் சொல்லுங்கள், அதை நிவர்த்திக்கிறேன். அதனால் ஏதாவது கஷ்டம் இருந்தால் கவனிக்கிறோம்—அப்படியில்லாது ஒன்றுமே செய்யாமல் உத்தியோகம் கொடுங்கள் என்று சொன்னால் அது நியாயமா? வீட்டைத் தேடிச் சென்று உத்தியோகம் கொடுக்க முடியுமா? எல்லோரும் படிக்க விரும்புகிறார்கள், இவர்கள் மட்டும் படித்தால் போதாது என்று தெரிவித்தேன். தமிழ் படித்தவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இல்லை. தமிழ் படித்தால் அவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. இந்த சமயத்தில் அதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழில் படித்து பாஸ் செய்துவிட்டேன், ஏன் உத்தியோகம் கொடுக்கவில்லை என்று கேட்கிற மனப்பான்மை நல்லதல்ல. நீங்கள் தமிழுக்கு மரியாதை, மதிப்பு செலுத்துகிறவர்கள் அல்ல என்பது உங்கள் போக்கிலிருந்து தெரிகிறது என்று அவர்களிடமே சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கும்போது ஆங்கிலத்தில் எழுதுவதைத் தவிர்த்து தமிழில் எழுதும்படி விதிகளை மாற்ற வேண்டுமென்றார்கள். அப்படி மாற்றுவது சரியல்ல. மத்திய ஆட்சியில் ஆங்கிலம் வேண்டுமென்று சொல்கிறோம். அதற்கு நம் உத்தியோகஸ்தர்கள் தயாராயிருக்கவேண்டும். டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களுக்கு எவ்வளவோ உத்தியோகஸ்தர்கள் செல்கிறார்கள். தமிழ் உத்தியோகஸ்தர்கள் பலர் உயர்ந்த பதவிகளில் பணியாற்றி வருகிறார்கள். ஆகவே அதற்கு இடையூறு இல்லாதிருக்கவேண்டும். ஆங்கிலம் படிக்காமல் உத்தியோகத்திற்கு செல்லலாம் என்று இருக்கக்கூடாது.

நான் தமிழை எதிர்ப்பதாக நினைப்பது தவறு. அது அல்ல நிலைமை. ஜப்பான் மாதிரி இல்லை நம் நாடு. தமிழ் நாடு தனி அரசாக போனால் வேறு மொழி பற்றி கவலையில்லை. அப்போதும் வேண்டியிருக்கும். இன்று ஆங்கிலம் உலக மொழியாக விளங்குகிறது. ரஷ்யா போன்ற நாடுகளில் ஆங்கிலத்தை கட்டாய படிப்பாக வைக்கிறார்கள். ஆட்சி நம் ஆட்சிதான். திராவிடஸ்தான்கூட இல்லை, தமிழ் நாடு என்றிருந்தால் உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தமட்டில் தமிழ் போதும் என்று சொல்லலாம். இப்போது தமிழ் மட்டும் போதாது. ஆங்கிலத்தில் எவ்வளவு படித்தாலும், முதன்மையாக தேறினாலும் தமிழிலும் திறன் வேண்டும். தமிழை தாய் மொழியாகக் கொள்ளாதவர்களை புறக்கணிப்பதற்கில்லை. அவர்கள் மொழியில் எழுதி அவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டாலும் தமிழில் டெஸ்ட் பாஸ் செய்யவேண்டுமென்று இருக்கிறது. இந்நிலையில் இத்தீர்மானத்தின் கருத்தும் தெளிவாக இல்லை; தமிழ் ஏற்கனவே இருக்கிறபோது தமிழை சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொல்வதும் அர்த்தமற்றது. எதிர்க் கட்சியினர் கூறிய விளக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. இத்தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. எதிர்க்கட்சியினர் கொண்டு வந்தார்கள் என்பதற்காக நான் சொல்லவில்லை. நல்ல தீர்மானமாக இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம். நிர்வாகத் துறையில் இவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னால் தமிழுக்கு எதிரி என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இதை பிரேபித்த அங்கத்தினர் அவர்கள் இதை வற்புறுத்தக் கூடாது. இதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும். இதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. இதை ஏற்றுக் கொண்டால் அர்த்தமற்ற நிலைமைக்குக் கொண்டு போய் விடும் என்று கூறி, அங்கத்தினர் அவர்கள் இதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இராம அரங்கண்ணல்:** துணைத் தலைவர் அவர்களே, நான் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தின்மீது ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், எங்கள் கழக உறுப்பினர்களும், அமைச்சர் அவர்களும் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். தமிழால் எல்லாம் முடியும் என்ற எண்ணம் இருக்கிற காரணத்தினால், தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டுமென்ற ஆர்வத்தோடு கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தின் உள்கருத்தையும், இதில் பொதிந்து இருக்கிற ஆர்வ உணர்ச்சியையும் வேண்டாமென்று சொல்லி பேசியவர்களும் வேண்டுமென்று எடுத்துச் சொன்னவர்களும் நன்றாக உணர்ந்து பேசினார்கள். அந்த உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். ஆனால் இத்தீர்மானம் ஏதோ ஒரு அரசியல் ஸ்டண்ட்டுக்காக கொண்டு வரப்பட்டது என்று மதுரை உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஸ்டண்டை நம்பி அரசியலை நடத்துவது என்பது மிகமிக தவறு. அந்தத் தவறான காரியத்தில் ஆழ்ந்து குளித்துக் கொண்டிருக்கிறார்கள், அவரும் அவரைச் சார்ந்த கட்சியும். திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல கொள்கைகளை நம்பி வாழ்





கிறது. நல்ல கொள்கைகளைக்கொண்டு இயக்கத்தை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் நாங்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், அங்கத்தினர் பிரேரணை பிரேரேபித்த பிறகு ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் பேசி அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு எல்லோரும் பேசிய கருத்தை ஒட்டி அவர்கள் திரும்ப பதில் சொல்லும் முறையில் பேசுவது முறையா?

**கனம் உதவி சபாநாயகர்:** அங்கத்தினர் அவர்கள் கிளப்பிய ஒழுங்குப் பிரச்னை சரியானதல்ல. இம்மாதிரி "சப்ஸ்டான்டிவ் மோஷன்" பிரேரேபித்த அங்கத்தினருக்கு பதில் சொல்ல உரிமை உண்டு. அதன்படித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஆகவே அதற்காகக் கொண்டு வரப்பட்டதல்ல இத்தீர்மானம். ஸ்டண்ட் செய்யவேண்டுமென்ற ஆசையோடு கொண்டு வரப்படவில்லை. நல்ல உணர்ச்சியோடு, தமிழில் காரியங்கள் நடக்கவேண்டுமென்று, ஆர்வத்தோடு கொண்டுவரப்பட்ட தீர்மானம் இது. திரு. மாதா கவுடர் அவர்கள் சொன்னார்கள், பல இடங்களில் தமிழ்ப் பெயர்களைக் காணும்போது அவை புலவர்களுக்குக்கூட புரியாததாக இருக்கிறது என்று. அப்படிச் சொன்னதன் மூலம் அவர் புலவர்களை மட்டும் அவமானப்படுத்தவில்லை. தன்னையும்தான் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த தமிழ் நாட்டையுமே அவமானப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் வளர வேண்டுமென்று சொல்லும்போது, அதற்கு ஆதரவான கருத்துக்களைச் சொல்லும்போது, தமிழ் மலர்ந்து மணம் வீச வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் அதற்கு ஆதரவாக ஆளும் கட்சியினர் இருக்கவேண்டுமே தவிர, கிண்டல் செய்வதும், கேலியாகப் பேசுவதும், தவறான வியாக்கியானங்கள் சொல்வதும், ஸ்டண்ட் வேலை என்று சொல்வதும் மிகத் தவறான போக்காகும். எல்லாக் கருத்துக்களையும் எதிர்த்துக் கொண்டுதான் அரசியல் கட்சிகள் வாழ வேண்டுமென்ற அவசியமில்லை. அதேபோல் எல்லாக் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டுதான் நாம் அத்தனை பேர்களும் வாழ வேண்டுமென்ற அவசியம் இல்லை. பொது உணர்ச்சியும், பொது நோக்கமும் யாரிடம் இருந்தாலும் அதைப் பாராட்டுகிற பெருந்தன்மை வேண்டும். அவ்வகையில் நம் சபை முதல்வர் காட்டுகிற பெருந்தன்மையை நான் மதிக்கிறேன். அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். இத்தீர்மானத்தின் முழுக் கருத்தும் தெளிவாக இல்லை என்று சொன்னார்கள். கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்ன நேரத்தில் தமிழ் பல பரீட்சைகளுக்கும் இருக்கிறது, ஒரு பரீட்சைக்குத்தான் ஆங்கிலம் இருக்கிறது என்று கருத்திலே விளக்கி எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அந்த பதில் [illegible]

[திரு. இராம அரங்கண்ணல்] [8th August 1963

வாக்கவில்லை என்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாஸ்டர்ஸ் டிகிரி ஸ்டாண்டர்டு தேர்வில் மற்ற ஸப்ஜக்ட்களை ஆங்கிலத்தில் மட்டும் எழுதவேண்டும், அதற்குப் பிறகு இருக்கிற ஆப்ஷனல் ஸப்ஜக்ட் எல்லாவற்றையும் தமிழிலே எழுதுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். 'டி' ஒன்று மட்டும் ஆங்கிலத்தில் இருக்கிறது—மீதி இருக்கிற மூன்று பிரிவு ஸப்ஜெக்ட்களிலும் தமிழில் எழுதலாம் என்று அவர்கள் சொன்னார்கள். விதியிலே கூறப்பட்டிருக்கிறது என்னவென்றால்

"Four optional subjects must be taken of which one must be from Group A. The remaining three subjects may be chosen as follows :—

One each from Groups B, C and D, or

One from Group B and two from Group D, or

One from Group C and two from Group D, or

All the three from Group D."

**Group D** என்று சொன்னால் ஆங்கிலம். இதன்படி ஆங்கிலத்தில் எல்லாவற்றையும் எழுதலாம் என்று இருக்கிறது. அதையொட்டித்தான் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்தபொழுதே நான் சொன்னேன். அந்த 'டி' பிரிவில் ஆங்கிலத்தில் எழுதலாம் என்று இருக்கிறது, அதேபோல தமிழிலும் எழுதலாம் என்று இருக்க வேண்டும். தமிழிலே எழுதுபவர்களுக்கு வாய்ப்பு குறைவாக ஏற்பட்டு, ஆங்கிலத்தில் எழுதுபவர்களுக்கு வாய்ப்பு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஒருவர் வேலைக்குப் போக வேண்டும் என்று சொன்னால், கம்பல்சரி ஸப்ஜக்ட்ஸ் காம்பொஸிஷன், ஜெனரல் நாலட்ஜ் ஆங்கிலத்தில் எழுதுகிறார். அதற்கு அடுத்தபடியாக இருக்கிற 3 ஆப்ஷனல் ஸப்ஜக்ட்ஸ் ஆங்கிலத்தில் எழுதுகிற வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்பு குறைக்கப்பட்டு, ஆங்கிலத்தில் பொதுவான விஷயங்களை எழுதலாம், அதற்கு அடுத்தபடியாக இருக்கிற விஷயங்கள் எல்லாவற்றையும் தமிழிலே எழுதவேண்டும் என்று பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் உத்தரவிடவேண்டும் என்பதுதான் என்னுடைய தீர்மானத்தின் முக்கியமான நோக்கம். 'மாஸ்டர்ஸ் டிகிரி ஸ்டாண்டர்டு, பாச்சலர்ஸ் டிகிரி ஸ்டாண்டர்டு' பொறுத்த அளவிலே இதுதான் என்னுடைய கருத்தாகும். ஆங்கிலத்தின் தரம் குறைந்துவிடுமோ என்று சில பேர் அச்சத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆங்கிலத்தின் தரம் குறையக்கூடாது என்பதற்காகத்தான், ஆங்கிலத்தில் அறிவு பரிமளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஜெனரல் நாலட்ஜ், காம்பொஸிஷன் ஆகிய பரீட்சைகளை ஆங்கிலத்திலும் எழுதலாம், மற்ற பரீட்சைகளை தமிழிலே எழுதவேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். பி. யு. ஸி., எஸ். எஸ். எல். ஸி. ஆகிய பரீட்சைகளுக்கு ஆங்கிலமும், தமிழும் இருக்கிறது. ஆங்கிலத்தில் கேள்வித் தாள்கள் தரப்படுகின்றன. அதை மாற்றி தமிழில் கேள்வித் தாள்களைத் தரலாம் என்ற கருத்தினை இந்தத் தீர்மானத்தின் மூலம் வற்



8th August 1963] [திரு. இராம. அரங்கண்ணல்]

புறுத்த ஆசைப்பட்டேன். ஆனால், நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்த அளவுக்குத் தேவையில்லை என்று சொன்னார்கள். அவர்கள் நல்ல முறையிலே தெளிவு படுத்தி, எந்த வகையிலே தமிழை ஆட்சி மொழியாக ஆக்கவேண்டும், தமிழை எந்தெந்த இடத்திலே எப்படி எப்படியெல்லாம் அமர்த்தி, தமிழ் அன்னையை வீற்றிருக்கச் செய்து, அந்தக் காட்சியை ஆனந்தமாகக் காண வேண்டும் என்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி முயற்சிகள் எடுத்துக்கொள்வதற்கு என்னுடைய தீர்மானம் ஒரு தூண்டுதலாக அமையும் என்று நான் கருதுகிறேன். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் "தமிழை ஆதிகாலத்திலிருந்தே வளர்ப்பவர்கள் நாங்கள், 'சோஷலிஸம்' எங்களைத் தவிர யாருக்கும் உரியதல்ல என்றெல்லாம் சொல்லியிருப்பார்கள் !" ஆனால், தமிழை யார், எந்த அளவுக்கு உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் வளர்க்கிறார்கள் என்பதை நாடு புரிந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி நான் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. இந்தத் தீர்மானம் வேண்டாம் என்று மறுத்துச் சொல்லியிருக்கிறார்கள் நம்முடைய அமைச்சர் அவர்கள். இப்பொழுது தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். படிப்படியாகக் கொண்டுவரலாம் என்று அவர்கள் கட்சியைச் சார்ந்த திரு. சங்கரன் அவர்கள் சொன்னார்கள். கனம் அமைச்சர் அவர்கள் இப்பொழுது தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலிருந்து நான் மாறுபடுகிறேன். என்னுடைய தமிழ் உணர்ச்சி கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன உறுதியை, அந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ள முடியாமல் என்னைத் தடுக்கிற காரணத்தினால், இந்தத் தீர்மானத்தை நான் வலியுறுத்துகிறேன் என்று சொல்லி முடிக்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்வுகளில், சில தேர்வுகள் ஆங்கிலத்தில் கட்டாயம் எழுதித் தீரவேண்டும் என்று இருப்பதுபோல, இது தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இருக்கிற அலுவலகங்களுக்காக அமைந்திருக்கிற தேர்வுக் குழுவாக அமைந்திருக்கிற காரணத்தினால், தமிழில் எழுதித்தான் தீரவேண்டும் என்று சில பாடங்கள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு சில பாடங்கள் இருக்கின்றன. நான் இப்பொழுது விவரித்ததிலிருந்து, சில பாடங்கள் தமிழ் அல்லது வேறு ஏதாவது ஒரு மொழியில் எழுத வேண்டும் என்று இருக்கிறது. 'தமிழிலே' என்று இன்னும் இல்லை. ஏனென்றால், இங்கே சிறுபான்மையோர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டும். தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு நாம் இடம் அளிக்க வேண்டும். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தமிழிலே [illegible] பாஸ் செய்யவேண்டும், கட்டாயமாக பாஸ் செய்யவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That this House recommends to the Government to issue instructions to the Public Service Commission to conduct examinations for appointments to the Services of the State in the regional language of the State also, viz., Tamil".

The Resolution was put and lost.

## (2) RECOGNITION OF ALL THE FOURTEEN LANGUAGES AS THE OFFICIAL LANGUAGES OF THE INDIAN UNION.

* **திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 'இந்திய அரசியல் அமைப்பின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பதினான்கு மொழிகளையும் 343-வது விதியின்கீழ் யூனியன் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்வதற்கும், அது வரையில் இந்திய யூனியன் அரசாங்கக் காரியங்கள் எல்லாவற்றிற்கும் ஆங்கிலத்தையே வைத்திருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இச்சபை கருதுவதை யூனியன் அரசாங்கத்துக்குத் தெரிவிக்குமாறு அரசினருக்குச் சிபார்சு செய்கிறது' என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** நான் அதை வழிமொழிகிறேன்.

MR. DEPUTY SPEAKER: Resolution moved—

"That this House recommends to the Government to convey to the Union Government that this House is of opinion that steps should be taken to recognise all the fourteen languages enumerated in the Eighth Schedule of the Constitution as the Official Languages of the Union under Article 343 and till such time English shall be retained for all official purposes of the Indian Union".

**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்ற நேரத்தில் மிகத் தெளிவாகவும், மிக விளக்கமாகவும் தெரிந்துள்ள நெடு நாட்களாக இந்த நாட்டை அலக்கழிக்கின்ற இந்தப் பிரச்னையைப்பற்றி திரும்பவும், திரும்பவும் அந்த வாதங்களையே நான் எடுத்து வற்புறுத்தாமல், இந்தப் பிரச்னை இன்றைய நிலையிலே எந்தக் கண்ணோட்டத்தோடு இருக்கிறது என்பதை இந்தச் சபை முன்பு வைப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். நான் இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்திருப்பதின் முக்கியமான நோக்கம், இந்தியா சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து, ஏன் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலிருந்து, இந்தப் பெரிய ஒரு பூபாகத்திற்கு ஒரு மொழி தேவை தானா, ஒரு தேசிய மொழி இருக்கவேண்டுமா, அரசியல் மொழி இருக்கவேண்டுமா என்று விவாதம் தொடங்கி, அரசியல் நிர்ணய சபையில் ஒரு பெரிய உருவெடுத்து, ஒரு விவகாரமாக முற்றி, முடிவாயிற்று. அந்தி தினத்திலிருந்து, நாம் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இந்தி மொழியை நாட்டினுடைய ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளுவதா, அல்லது கொஞ்ச நாட்களுக்கு அதைத்



தள்ளிப் போடுவதா என்பதில் பெரிய விவாதம் ஏற்பட்ட அந்த சமயத்தில் விடுதலை பெற்ற வீரர்கள், இந்த நாட்டில் இருக்கிற பெரியவர்கள் ஒரு அடிப்படையான உண்மையை மறந்துவிட்டார்கள். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கே இருக்கிற பெரியவர்கள், மந்திரிமார்களாக வீற்றிருக்கிறவர்கள், தியாகம் செய்தவர்கள் வருந்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சுயராஜ்யம் வந்த நேரத்தில் நாம் அதற்குக் கொண்டிருந்த சித்தாந்தத்திற்கும், உத்திரப் பிரதேசம், பீஹார், ராஜஸ்தான் போன்ற இந்தி பேசுகின்ற பிராந்தியத்தில் இருக்கின்றவர்கள் கொண்டிருந்த அர்த்தத்திற்கும் ஒரு பெரிய மோதல் ஏற்பட்டது. அரசியல் நிர்ணய சபையில் இந்தப் பெரிய பூபாகத்திற்கு என்ன மொழி என்று கேட்டார்கள். இந்திதான் அந்தத் தேதி முதற்கொண்டு வரவேண்டும் என்று ஒரு குழு வாதம் செய்தது. இந்தி இப்பொழுதே வந்துவிட முடியுமா, இன்னும் கொஞ்ச காலம் கழித்து வரலாம் என்று இன்னொரு குழு வாதம் செய்தது. இரண்டு வாதங்களும் காங்கிரஸ் கூடாரத்தில் மோதி, ஒரே ஒரு வாக்கு அதிகம் பெற்றதினால் இன்றைக்கு இந்தி இந்த நாட்டினுடைய அரசியல் மொழி என்று ஒத்துக்கொள்ளப்பட்டு, அதற்கு 1965-ம் ஆண்டு வரையில் வாய்தா கொடுப்பது என்று அரசியல் நிர்ணய சபை நிர்ணயித்திருக்கிறது. இதை கனம் அமைச்சர் 11-00 a.m.
அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். இதைப்பற்றி நம்முடைய முன்னாள் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். 'ஒரு வாக்கிலே ஜெயித்தது' என்று சொல்லுகிறார்களே, அந்தப் பிரச்னைதான் இது. அன்றைக்கே இந்தியைத் திணிக்க வேண்டும் என்று இந்தி வெறியர்கள் பிடிவாதம் செய்தார்கள். பதினைந்து வருஷ காலம் கொஞ்சம் தள்ளிப் போட்டு இப்பொழுது அதை எல்லா மொழிகளுக்கும் மேலாகத் திணிக்க வேண்டும் என்று பார்க்கிறார்கள். நமது இந்தியா ஒரு பெரிய பூபாகம் ஆயிற்றே. பல்வேறு மொழிகள் இருக்கின்றனவே என்பதை எடுத்துச் சொல்ல அன்று தவறிவிட்டார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமை என்ன? சாதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு இருக்கிற நிலைமை ஆங்கிலம், அத்துடன் இந்தி. ஆனால் 1965 முதற்கொண்டு வரப்போகிற நிலைமை என்ன? இந்தி, அத்துடன் விரும்புகிற சில காரியங்களுக்கு ஆங்கிலம்—இதுதான் நிலைமை. இந்த நிலைமை நமது மாநிலத்திற்கு உகந்ததா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடிப்படை உண்மையை நாம் மறந்து விடுவதற்கில்லை. சென்ற 20 வருஷ காலமாகவே நாங்கள் இந்தப் பிரச்னையில் தொடர்ந்து பங்கு எடுத்து வந்திருக்கிறோம். இந்த மாமன்றத்திலே திருவுருவப் படத்திலே வீற்றிருக்கும் ஆச்சாரியார் அவர்கள், அன்று இந்தி மொழியைக் கொண்டு வந்த நேரத்திலே, நாங்கள் சேர்ந்திருக்கிற இயக்கத்தைச் சேர்ந்த ஆயிரம் ஆயிரம் பேர்கள் பங்கு கொண்டு சிறை சென்று தாளமுத்து, நடராசன் என்ற இரண்டு வாலிபரை தத்தம் செய்து தீவிரமான அறப்போராட்டத்திலே நாங்கள் ஈடுபட்டிருந்தோம். அதே ஆச்சாரியார் அவர்கள் "பாவமன்னிப்பு" கேட்பது போல, இன்று இருபது வருஷங்களுக்கு பின்னர் அந்த நிலைமையை உணர்ந்து, வேறு பாதையில்

[திரு. கே. ஏ. மதியழகன்] [8th August 1963

இப்பொழுது வந்துகொண்டு இருக்கிறார். இதற்கிடையிலே நம்முடைய சர்க்காருக்கும் எங்களுக்கும் இதிலே பெரிய வித்தியாசம் இருந்தது என்று சொல்ல முடியாது? அவர்களும் ஆட்சி மொழிக் கமிஷன் இடத்தில் இந்தி உடனே வரக் கூடாது, ஆங்கிலம்தான் நீடிக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். ஆட்சியாளரும் எதிர்க்கட்சிகள் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு மெமோராண்டம் அனுப்பினோம். அப்படி அனுப்பிய மெமோராண்டத்திலே என்ன சொல்லப்பட்டு இருக்கிறது? வெளிநாட்டுப் புத்தகங்களில் இருந்து மேற்கோள் சொன்னால் அது அனாவசியம் என்று நமது அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே நமது மாநில சர்க்கார் கொடுத்த மெமோரண்டத்திலிருந்து அவர்களுடைய கருத்துக்களையே அடிப்படையாக வைத்துக்கொண்டு, அதிலிருந்து ஓரிரண்டு சொற்றொடர்களை என்னுடைய தீர்மானத்திற்கு ஆதாரமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதலிலே,

"The Indian nation has always been and will always continue to be multi-lingual. This is not a skeleton to be hidden away in the national cupboard."

என்று சொல்லி யிருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** "இண்டியன் நேஷன்" என்பதை கனம் அங்கத்தினர் ஒப்புக் கொண்டால் போதும். மற்றப்படி எது வேண்டுமானாலும் பேசட்டும் (சிரிப்பு).

**திரு. கே. ஏ. மதியழகன்:** நாங்கள் ஒத்துக் கொள்ளுகிற வகையிலே நிலைமை இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும். அன்றைக்கே "மல்டி லிங்குவல்" என்று சொன்னார்கள். இந்தி வெறியர்கள் முதல் படை எடுப்பை 1947-ல் செய்தார்கள். பிறகு இந்தி 1965-லிருந்து வரவேண்டும் என்ற முறையிலே இரண்டாவது படை எடுப்பைச் செய்தார்கள். இப்பொழுது மூன்றாவது படை எடுப்பைச் செய்திருக்கிறார்கள். அதாவது இந்திக்கு எல்லோரையும் அடிமைப்படுத்த வேண்டும் என்பதுதான் அது. ஆளும் கட்சியினருடைய ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டுதான் அண்மையிலே ஆட்சி மொழிச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி யிருக்கிறார்கள். நாற்பத்திரெண்டு சத விகித மக்கள் பேசுகிற மொழியாக இருக்கலாம் என்ற வாதத்தை எல்லோரும் அறிந்துதான் இருக்கிறார்கள். அந்த மொழி லாயக்கா என்பதைப் பற்றி நாம் பார்க்க வேண்டும். ஓர் அங்காடி மொழியை—பஜார் மொழியை பத்து கோடி திராவிட மக்களின்மீது பலவந்தமாக திணிப்பதற்கான முயற்சிகள் நெடு நாட்களாகவே நடந்துகொண்டுதான் இருக்கிறது. சென்ற ஏழெட்டு வருஷக் காலமாக ஆங்கிலம்தான் இருக்கிறது என்று நாம் எண்ணினாலும், நம்முடைய அனுபவத்திலே எதைப் பார்த்தோம்? ரெயில்வே ஸ்டேஷன்களில் உள்ள போர்டுகளில் என்ன மொழி எழுதப்பட்டிருக்கிறது? பிற காரியங்களிலும் என்ன செய்யப்படுகிறது? இந்தி வெறியர்கள் பாராளுமன்றத்திலே பெரும் கூச்சல் போட்டார்கள். இந்தியா பூராவும் அவர்கள் பிரதேச எல்லை என்றார்கள். கனம் உதவி சபாநாயகர் அவர்களே,



8th August 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

என்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன், பாராளுமன்றத்திலே, ஸேத் கோவிந்த தாஸ் அவர்கள் "எதற்கு நமக்கு ஆங்கிலம் வேண்டும், நேருஜி சர்வ தேச விவகாரங்களில் வேண்டுமானால் யோசனை சொல்லட்டும், இந்தி மொழியில் க, க்க, என்ற எழுத்துக்களுக்கு சரியான உச்சரிப்புகூடத் தெரியாத நேருவுக்கு இந்தியில் பிரவேசப் பரீட்சையிலேகூட தேறமுடியாத நேருவுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது இந்திபற்றி கருத்துத் தெரிவிக்க?" என்று கேட்கிற அளவுக்கு அங்கே இந்தி வெறியர்கள் உச்ச எல்லையை அடைந்தார்கள். நம்முடைய ராஜ்ய சர்க்கார் சார்பில் மொழிக் கமிஷனுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மெமோராண்டத்திலும்கூட இந்தி வெறியர்களின் ஆதிக்கம் எவ்வளவு பயங்கரமான உருவத்தை எடுக்கப் பார்க்கிறது, எவ்வளவு பெரிய ஆதிக்கத்தை அவர்கள் நிலை நாட்ட விரும்புகிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள்.

"Memorandum submitted by the Government of Madras on the Report of the Official Language Commission".

என்ற அறிக்கையிலே, 32-வது பாராவிலே சொல்லியிருப்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 32-வது பாராவில் கீழ்க் கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

"It has been pointed out earlier in this Memorandum that 'the impact of the language problem of India has to be borne in the educational field, by the Government and Legislatures and the people of the non-Hindi regions; and that the States of the Hindi region have no burden to bear and little contribution to make towards a solution of the problem.' This comment is applicable to the administrative field no less than to the educational field. From the point of view of the Hindi-speaking people, the sooner the official language of the Union is changed from English to Hindi the better. Their young men will find it so much easier to secure employment in all offices and institutions much more easily than at present. They could also feel pride and satisfaction about the promotion of their mother-tongue for uses above and beyond the regional limits. All this benefit would accrue to them without any exertion on their part or the slightest inconvenience. They do not have to face the problems of readjustment of their educational system to a new situation. In these circumstances, it is not surprising that the Pan-Hindi enthusiasts are impatient. It is not also surprising that the tactless manner in which expression is given to this impatience should arouse apprehensions, cause irritation and at times even evoke hostility in non-Hindi regions. What is, however, surprising to the Madras Government is the failure of the Official Language Commission to realize that it was its duty to take note of this situation and to make recommendations calculated to restrain the impatience displayed in the Hindi region and to allay the apprehension aroused thereby in the non-Hindi regions."

[திரு. கே. ஏ. மதியழகன்] [8th August 1963

இதிலிருந்து என்ன தெரிகிறது? நமது ராஜ்ய சர்க்கார் மொழிக் கமிஷனை எச்சரித்திருக்கிறார்கள். இந்திக்கு ஆதிக்கம் கொடுத்தால் இந்த மாநில மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதை விளக்கிச் சொல்லி யிருக்கிறார்கள். எதைக் குறித்து அவர்கள் பயந்தார்களோ அந்த நிலைமைதான் இப்பொழுது வந்து கொண்டு இருக்கிறது. இதனால் இந்தி வெறியர்களுக்குத்தான் லாபம்; அவர்களுடைய பிள்ளைக் குட்டிகளுக்குத்தான் எல்லாச் சலுகைகளும் சந்தர்ப்பங்களும் இனி கிடைக்கும். இதிலே வெறித் தனம் கொண்டு இருக்கிறார்கள். ஆகையால் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்ற சென்னை சர்க்காருடைய எச்சரிக்கையை பொருட்படுத்தாமல்தான் காரியங்கள் நடைபெறுகின்றன. 1959-ல் பாராளுமன்றத்தில் திரு. பிராங் அந்தோணி ஒரு தீர்மானம் கொண்டுவந்த காலத்தில் அதாவது ஆங்கிலமும் ஒரு தேசியமொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில், பிரதமர் நேரு அவர்கள் கீழ்க்கண்ட வாக்குறுதியை அளித்தார்கள்: "இந்தி பேசாத பிராந்திய மக்கள் எவ்வளவு காலத்திற்கு விரும்புகிறார்களோ அவ்வளவு காலத்திற்கு இந்தி படிக்க வேண்டியது இல்லை, இந்தி படிக்காவிட்டால் பரவாயில்லை, தேவநாகரி லிபி வேண்டாம், ஆங்கிலம்தான் இருக்கும்" என்று வாக்குறுதி அளித்தார்கள். மறைந்த கோவிந்த வல்லப பந்த் அவர்களும் ராஜேந்திர பிரசாத்தும் அதே கருத்தை உறுதிப் படுத்தினர். அவ்வளவு பேரும், இந்த மாநில சர்க்காரும், மற்ற வர்களும், அந்த வாக்குறுதி காப்பாற்றப்படும் என்று நம்பி இருந்தார்கள். இதே மன்றத்திலேகூட அது பேசப்பட்டது. வாக்குறுதிக்கு என்ன கதி ஏற்பட்டது? சுருக்கமாகச் சொல்லுகிறேன். "English may be used for officail purposes" 1965-ல் இந்தி வந்து விடாது; ஆங்கிலமும் உபயோகிக்கலாம். என்ன பொருள்? ஆங்கிலத்தை மரண தண்டனைக் கைதிபோல் ஆக்கிவிட்டார்கள்; பண்டித நேரு அவர்களின் வாக்குறுதி சட்டத்தில் எப்படிச் சேர்க்க முடியும் என்று அவர்களே கேட்கிறார்கள். ஆனால், நம் நிதி அமைச்சர் சொல்லுகிறார்கள், அது எல்லாம் சட்டத்தில் இருக்கிறது என்று. "May" என்றால் என்ன, "shall" என்றால் என்ன, இரண்டுமே ஒன்றுதான் என்று லால் பகதூர் சாஸ்திரி சொல்லுகிறார்கள். நான் கூடத் தனிப்பட்ட முறையில் கேட்டபோது சொன்னார்கள், "may"-க்கும், "shall"-க்கும் தகராறு கிடையாது என்று. அப்படியானால் 'shall" என்று ஒத்துக்கொள்வதிலே என்ன தகராறு? இதற்குப் பெயர் ஒருமைப்பாடா? உலகத்திலே எங்காவது இந்த அதிசயத்தைப் பார்த்து இருக்கிறோமா? தலைமேல் கத்தி தொங்குகிறது. கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வருத்தத்தோடு தங்கள்மூலம் சொல்லுவேன். இந்த ஆண்டு ஏற்பட்ட அதிசயமான நிகழ்ச்சி, பண்டித நேரு தன்னுடைய வாக்குறுதியிலிருந்து தவறி இருக்கிறார், இந்தி வெறியர்களின் சிறைக் கைதியாகி விட்டார் என்பதுதான்! இதே மன்றத்திலே கனம் சுப்பிரமணியம் அவர்கள் பேசினார்கள்; அப்பொழுது சொன்னார்கள்:



8th August 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

"The point for consideration now is this. Should we assume even now that those assurances that have been given now would be broken? That means, that we doubt the *bona fides* of those who gave those assurances. If those assurances are not kept up, I am afraid—whatever may be the constitutional provisions—God alone should save the country".

இப்பொழுதே அந்த வாக்குறுதிகளைச் சந்தேகிக்க வேண்டுமா? அப்படிச் சந்தேகம் வரக்கூடுமானால், எவ்வளவுதான் அரசியல் சட்டம் இருந்தாலும், வாக்குறுதி மீறப்படுமானால், இந்த நாட்டை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று 1960-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள், ஐந்தாம் நாள், இதே மன்றத்திலே நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் சொல்லி இருக்கிறார்கள். வாக் குறுதி சட்டத்தில் புகுத்தப்படுமா என்ற அச்சம் இருந்தது. அதே செப்டம்பர் திங்கள் ஐந்தாம் நாள் மொழிப் பிரச்சினையை விவாதித்து, எதிக்கட்சித் தலைவர் திரு. ராமசாமி முதலியார் தீர்மானத்தை நிறைவேற்றிய காலத்தில், என்ன நடந்தது? உங்கள் மூலம் அந்த தீர்மானத்தை இப்பொழுது சபை முன்னால் வைக்க விரும்புகிறேன்.

"The policy of the Madras Government on the Official Language be taken into consideration and on such consideration, this House recommends to the State Government that the Central Government be requested to undertake appropriate legislation in order to implement the Prime Minister's assurances regarding the continued use of the English language for the official purposes of the Indian Union".

இதே மண்டபத்தில் நேருவின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் நடந்தது என்ன? வியாக்கியானம் சொன்னார்களே தவிர, வேறொன்றுமில்லை. ஆகவே, இன்றையதினம் மாநில மக்களுடைய பல உரிமைகள் குறைக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட மொழி பேசுகிறவர்கள் மற்றவர்களை அடக்கி ஆளும் தன்மைதான் ஏற்பட்டிருக் கிறது. இதற்குப் பெயர் 'சமவாய்ப்பு' Equality of opportunity ஆகுமா? ஒரு குறிப்பிட்டவர்கள் ஆதிக்கம் அடைகிறார்களே தவிர, எங்கே ஒருமைப்பாடு இருக்கிறது? பண்டித நேரு இன்று வெறித் தன்மைக்கு கட்டுப்பட்டுப் போய் இருக்கிறார்கள். இப்பொழுது, 14 தேசிய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். அதே காலத்தில் ஆங்கிலமும் இருக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையை எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இதே மண்டபத்தில் இரண்டு வருஷங்களுக்கு முன்பு சொல்லி இருக்கிறார்கள்: "இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று ஒரு நாளாவது நமது நிதி அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கக்கூடாதா? அவர்கள் அதைத் தள்ளி விடட்டும் ஒப்புக்கொள்ளாமல் போகட்டும். என்றாலும் நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் இந்திய தேச ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தினோம் என்ற மனச்சாந்தியாவது

அவருக்கு ஏற்பட்டிருக்கக் கூடும்." இம்மாதிரி அறிஞர் அண்ணா
கனம் சுப்பிரமணியம் அரசியல் நிர்ணய சபையிலே பேசாதது
குறித்து இதே மன்றத்திலே பேசினார்கள். இன்றைக்கு எவ்வளவு
பெரிய ஆபத்து ஏற்படும் வகையில் காரியங்கள் நடப்பதைப்
பார்க்கிறோம்? நம் தமிழ் இலக்கிய இலக்கணம் செறிந்த மொழி,
தொன்மையான மொழி. இன்றைக்கு பஜார் மொழியாகிய ஒரு
அங்காடி மொழி ஆட்சி மொழியாக வரக்கூடும் என்றால், ஏன்
இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளாக பெருமையோடு இருக்
கும் மொழி ஆட்சி மொழியாக இருக்க முடியாதா? இந்தியால்
முடியும் என்றால், அது தமிழால் முடியாதா? ஆயிரம் மடங்கு
அதிகமாக தமிழால் அவற்றைச் சாதிக்க முடியும். முன்பு மொழிக்
கமிஷன் அறிக்கையில், சாட்சியத்தில் சொன்னதைச் செய்ய,
சொல்ல ஏன் இன்று, ஏழு வருஷத்தில் தைரியம் இல்லாமல் போய்
விட்டது? மாநிலத்திற்கு மாநிலம் பரிமாறிக் கொள்ள ஒரே
மொழி வேண்டுமென்றால், அது ஏன் இந்தியாகத்தான் இருக்க
வேண்டும். உலகத்தில் வெவ்வேறு நாடுகள் பங்கு கொள்ளும்
மாநாடுகள் நடைபெறவில்லையா?

பாண்டுங் மாநாட்டில் பல ஆசிய நாடுகள் கலந்து கொண்டன.
சீனாக்காரன் எழுந்து அறுபது கோடி மக்கள் சீனமொழி பேசு
கின்றனர், ஆகவே ஆசியாவின் பொது மொழியாக சீன மொழியை
ஒத்துக் கொள்ளுங்கள் என்று கூறியிருந்தால் சம்மதம் தெரிவித்
திருக்க முடியுமா? ஆகவேதான் இன்று வற்புறுத்தும் தமிழ்
மொழி உட்பட்ட 14 மொழிகளும் ஆட்சிமொழியாக ஆகவேண்டும்
என்று நான் என்னுடைய இந்தத் தீர்மானத்தை நம்முடைய சபை
யின் சார்பாக வற்புறுத்தி, அரசியல் சட்டத்திலே நேரு அவர்க
ளுடைய வாக்குறுதி உறுதிப்படுவதற்கும், தமிழ் மொழியை மத்திய
ஆட்சி மொழியாக ஆக்குவதற்குச் சகல நடவடிக்கைகளும் எடுப்
பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கும், முயற்சிக்க வேண்டும்.
எதிர்க் கட்சிக்காரர்களாகிய நாங்கள் கொண்டு வருகிறோம்
என்று இல்லாமல், நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து, இதயத்
தின் ஒலியில் நம்பிக்கை வைத்து, எதிர்கால வெள்ளத்தை முன்ன
தாகவே எண்ணி, பெருமையுடன், இன்னும் கூடச் சொல்லுவேன்;
நீங்களே கொண்டு வருவதானால், சர்க்கார் சார்பிலேயே இத்தகைய
தீர்மானத்தைக் கொண்டுவருவதானால் கொண்டு வாருங்கள், என்று
தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கருத்தை மத்திய சர்க்கார்
ஒத்துக்கொள்ளாத காரணத்தினால், மத்திய சர்க்காருக்கு தென்ன
கத்தின் இதய ஒலியை உணர்த்துவதற்கு தியாகப் பாதையில்
புறப்பட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது
நண்பர் கருணாநிதி அவர்கள் தலைமையில் திரு. என். வி.
நடராஜன் மற்றும் பல பேர்கள் கொண்ட போராட்டக் குழு
அமைத்து, இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதத்தில் தமிழகத்
தின் கோடிக்கணக்கானோர் இதய ஒலியை ஆட்சியாளர்களுக்கு
உணர்த்தவும், இந்தி வெறிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், அதனால்
ஏற்படக்கூடிய சகல கஷ்ட நஷ்டங்களை ஏற்பதற்கும், தியாகம்
தனைச் செய்யவும், சிறைச்சாலையின் சித்ரவதையைத் தாங்கிக்





கொள்ளவும், தடியடி படவும், துப்பாக்கிக்கு மார்பு காட்டவும்
பல்லாயிரக் கணக்கான வீர வாலிபர்கள் அறிஞர் அண்ணா அவர்கள்
தலைமையில் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்கள் என்று கூறி,
இந்தத் தீர்மானத்தைச் சகலரும் ஆதரித்து நிறைவேற்ற வேண்டும்
என்று தங்கள் மூலமாகக் கேட்டு, என்னுடைய உரையை முடிக்
கிறேன். வணக்கம்.

* **திரு. சி. பொன்னுசாமி** : கனம் துணைத் தலைவர் அவர்களே,
இப்போது நமது எதிர்க் கட்சி நண்பர் மதிப்புக்குரிய மதியழகன்
கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை நான் நிராகரித்துச் சில
வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் பாஷையின்
முக்கியத்துவத்தைப் பற்றி, தமிழ் மொழியைப் பற்றி எவ்வளவு
தூரம் அக்கறை எடுத்துக் கொள்ளுகிறார்களோ அதைவிட விசேஷ
அக்கறை உள்ள மக்கள் தமிழ் நாட்டில் கோடிக் கணக்காக இருக்
கிறார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது என்று அவர்
களுக்கு நான் ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன். தமிழில்
பாண்டித்தியம் படைத்தவர்கள் லட்சம் லட்சமாக, கோடிக்
கணக்கில் மலிந்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்
கூடாது. ஒரு மொழிக்கு எவ்வளவுதான் உயர்வு கொடுக்க
வேண்டுமோ அதைவிட அளவு கடந்து இந்த சர்க்கார், தமிழ்
நாட்டு சர்க்கார், தமிழ் மொழிக்கு. இனிய மொழிக்கு, தேன்
மொழிக்கு, மதிப்புக் கொடுத்து வருகிறது என்று என் போன்றவர்
கள் கருதும்போது நாங்கள் மிக மிக மகிழ்ச்சி அடைகிறோம். இப்
போது வந்திருக்கும் தீர்மானத்தைப் பார்த்தால் பிற்கால சந்ததி
களுக்கு ஒரு பாஷை வெறியை ஊட்டுவதாக இது இருக்கிறதே
தவிர, தேச ஒற்றுமைக்குப் பாதுகாப்புக் கொடுப்பதாக இருக்
கிறது என்று யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. அது மட்டு
மல்லாமல் அவர்களுடைய கட்சிக்காரர்களால் பாராளுமன்றத்
தில் ஒன்று பேசப்படுவதும், இங்கே சட்ட சபையில் ஒன்று பேசு
வதும், வெளியே கருத்துக்களை வேறு விதமாகப் பேசுவதுமான
நிலைமை இருக்கிறது. மனிதருள் மாணிக்கம் பண்டித நேரு அவர்
கள் இந்தத் தேசம் முழுவதும் ஒன்று, பாரத நாடு ஒன்று என்ற
நிலையில் எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்ற
காரணத்தினால் மேற்கொண்டு பத்து வருஷம் ஹிந்தியோடு
இங்கிலீஷ் துணை மொழியாக இருந்து வரவேண்டுமென்று சொல்லி
யிருக்கும்போது, மத்திய சர்க்காருடைய பெருந்தன்மையைப்
பாராட்ட வேண்டியிருக்க, இது போன்று மாறுதலாக ஒரு தீர்மா
னம் வர வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்
கிறேன். தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசிய கனம் அங்கத்
தினர் மதியழகன் அவர்கள் குறிப்பிடும்போது பத்து கோடி மக்கள்
என்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் 3½ கோடி மக்கள் இருக்
கும்போது பத்து கோடி மக்கள் என்றால் அவர்கள் கனவு கண்டு
கொண்டிருக்கும் திராவிட நாடாக இருக்கும் என்று யூகித்துக்
கொள்கிறேன். நான்கு மாநிலங்களை—கன்னடம், கேரளம்,
ஆந்திரா, தமிழ் நாடு ஆகிய நான்கை எடுத்துக்கொண்டால்,

[திரு. சி. பொன்னுசாமி] [8th August 1963

இந்த நான்கு மாநிலங்களிலும் நான்கு பாஷை பேசும் மக்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன். ஆகவே, இப்படி இருக்கும் நிலையில் பார்த்தால், இங்கே நம் தமிழுக்கு ஆக்கம் கொடுக்கவேண்டும் என்பதற்காக பல கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக வைத்தாலும், அவைகளில் சேருவதற்கு மாணவர்கள் முன் வரவில்லை. அதற்காக தமிழ் மொழி க்ஷிணித்துவிடும் என்று அர்த்தமில்லை. அதற்கு ஆக்கம் கொடுக்க இன்னும் பல பல வழிகள் இருக்கின்றன. அதை சர்க்கார் எடுத்து நடத்தி வருகிறார்கள் என்பதை நாம் அறிவோம். பிற்கால சந்ததிகள் பல பாஷைகளைக் கற்று இருந்தால்தான் உலகில் ஆங்காங்கு செல்ல முடியும். இன்றைய தினம் பல மொழிகளைக் கற்று இருக்கக்கூடியவர்கள் இந்த நாட்டிலே நல்ல நிலையில் வாழ்க்கை நடத்திக்கொண்டு வருவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வட நாடு அந்தக் காலத்திலிருந்து, உதாரணமாக வங்காளம், பம்பாய் எல்லாம் அந்தக் காலத்திலிருந்து அன்னியரோடு அதிகமாகத் தொடர்பு கொண்டிருந்த காரணத்தினால் அங்கே பெரிய பெரிய தொழிற்சாலைகளும் பெரிய பெரிய கோடீஸ்வரர்களும் இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மொழிப் பிரச்னையைப் பெரிய பிரச்னையாக வைத்து பிற்கால சந்ததிகள் கஷ்டப்படக் கூடிய நிலைமையை ஏற்படுத்திவிடக் கூடாது என்று, குறிப்பாக மூன்று பாஷைகளாவது தெரிந்து எல்லோரும் நல்வாழ்வு வாழ, இன்டெக்ரிட்டி, தேச ஒற்றுமை பாதுகாக்கப்பட, ஆங்கிலம் போன்ற பாஷைகளைப் படித்துக் கொண்டு பல நாடுகளுக்குச் சென்று பழக ஏதுவாக இருக்கும் என்று மத்திய சர்க்காரும், அதை அனுசரித்து மாநில சர்க்காரும் மொழிப் பிரச்னையில் கவனம் செலுத்தி நல்ல முறையில் நடந்து வருகிறார்கள். ஆகவே, இது போன்ற தீர்மானங்கள் அவசியம் இல்லை என்று நான் கருதி இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசி முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் எனது மதிப்புக்குரிய நண்பர் கனம் மதியழகன் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற மொழிச் சிக்கலானது, பல்வேறு வகையான உருவத்தில் சில மாநிலங்களில் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மொழிச் சிக்கலைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், இந்த நாட்டுக்கு பொது மொழி வேண்டுமென்ற கோரிக்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பேயே இருக்கிறது. இதிலே வேடிக்கையான நிலை என்ன என்றால் தேசீய மொழியாக ஹிந்தி இருக்கவேண்டு என்று தீர்மானம் இயற்றி, நடைமுறையில் கொண்டுவரவேண்டு மென்ற இதே காங்கிரஸ் ஸ்தாபனத்தின் எதிர்ப்பு ஆரம்ப ஆகியது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களோ சுதந்திரா கட்சியைச் சேர்ந்தவர்களோ ஆங்கிலம் வேண்டுமென் சொல்லுவதைவிட, காங்கிரஸ்சில் இருக்கிறவர்கள் அந்தக் காலத் லேயே ஆங்கிலம் வேண்டுமென்று கோரி ஒரு கடுமையான கிளர்ச்



8th August 1963] [திரு. க. ர. நல்லசிவம்]

செய்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையில் பார்க்கும்போது மொழிச் சிக்கலுக்கு மீதி உள்ளவர்கள் எப்படிப் பொறுப்போ, அதைவிட ஆளும் கட்சிக்கு அதிகப் பொறுப்பு இருக்கிறது என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்குப் பேசும்போதுகூட பல நண்பர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். மொழியில் மாற்றம் சுலபமாக நடைபெறுவதில்லை, வேகமும் கூடாது, படிப்படியாகச் செய்ய வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். அவர்களுக்குக் குறிப்பாக ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வெள்ளைக்காரன் தங்களுக்குத்தான் ஆளத் தெரியும், தான் போய்விட்டால் ஆட்சி நல்ல முறையில் நடக்காது, ஆட்சிப் பொறுப்பை இந்த நாட்டு மக்களிடத்தில் ஒப்படைத்தால் நல்ல முறையில் நடத்தமாட்டார்கள் என்று ஒப்படைக்காமல் காலம் தாழ்த்தி வந்தார்கள். அவர்களோடு சண்டையிட்டு, உயிர்த் தியாகம் செய்து பின்னால் சுதந்திரம் பெற்றோம். இன்றைக்கு நமது முதல் அமைச்சராக இருக்கிறவர், பல மொழி தெரிந்தவர் அல்ல. இருந்தாலும் நம் நாட்டினுடைய பிரதம மந்திரியாக இருக்கும் சந்தர்ப்பம் கூட வந்திருக்கிறது என்ற செய்தியை பத்திரிகைகளில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவருக்கு இந்தத் தேசத்திலிருக்கும் அத்தனை மொழி 11-30
களும் தெரியுமா? எத்தனை மொழிகளில் விற்பன்னராயிருக்கிறார்? a.m.
இருந்தாலும், அவருக்கு இருக்கும் திறமைதான் அந்த அளவுக்கு அவரை உயர்த்துவதற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவே, மொழி ஒரு பிரதானமாக, நாட்டு நடப்புக்கு வேண்டிய ஒரு முக்கியமான அம்சமாக இருந்தபோதிலுங்கூட, அதற்கு மிகப் பிரதானமான முக்கியத்துவத்தைக் கொடுப்பது அவசியமற்றது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் நடவடிக்கையைப் பார்க்கும்போது, இந்த நாட்டிலே இருக்கும் சகல மொழிகளையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்வதால் பெரிய ஆபத்து ஒன்றும் வந்துவிட முடியாது.

ஆங்கிலம் கடந்த பல ஆண்டுகளாக ஆட்சி மொழியாக இருந்திருக்கிறது. ஆங்கில மொழியில் எவ்வளவு பேர் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருக்கிறார்கள்? தமிழுக்குச் சரியான வார்த்தைகள் ஆங்கிலத்தில் கிடையாது, புரிவது கிடையாது, குழப்பம் ஏற்படுகிறது என்று சொல்கிறோம். ஆங்கிலத்திலுள்ள ஆயிரம் ஆயிரம் வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரிந்தவர்களாக எத்தனை பேர்கள் இருந்துவிட முடியும்? அந்தத் துறையிலே ஞானம் உள்ளவர்கள் எத்தனை பேர் இருக்க முடியும்? ஒரு சத விகிதத்தினர்தான் ஆங்கிலம் தெரிந்தவர்களாக இந்த நாடு பூராவும் இருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையிலே, இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கும் நிலையைப் பார்க்கும்போது, நாட்டுக்கு ஒரு மொழிதான் பொது மொழியாக இருக்கவேண்டுமென்று சொல்வதைவிட, இந்த நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்காக, நாமெல்லாம் ஒரே ஜாதி, ஒரே இனம், ஒரே பண்பாடுடையவர்கள் என்று செய்வதற்காக ஏன் இந்தத் தியாகத்தைச் செய்யக்கூடாது? ஒரு மொழிக்குப் பதிலாக பல மொழிகளை தேசீய மொழிகளாக்கும்போது, பல்வேறு சிக்கல்கள் வரத்தான் செய்யும். பெல்ஜியம்,

[திரு. க. ர. நல்லசிவம்] [8th August 1963

கனடா ஆகிய நாடுகளில் ஒன்றிரண்டு மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. ஐக்கிய நாட்டுச் சபையில் அங்கத்தினர்கள் தங்கள் தங்களுடைய மொழிகளிலேதான் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். உலக அரங்கில், வல்லமை வாய்ந்த சபையில் பல்வேறு மொழிகளில் பேசி நல்ல காரியங்களை உருவாக்க முடிகிறது என்றால், பரந்து விரிந்து, பல்வேறு பேதங்கள் மலிந்திருக்கும் நம் நாட்டில் 14 மொழிகளை ஏன் நாம் ஆட்சி மொழிகளாகக்கூடாது என்று நான் கேட்கின்றேன்.

இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த கனம் உறுப்பினருக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இங்கிருந்து நாம் ஒரு குரல் கொடுப்போம். உண்மையிலேயே இந்தக் குரல் சரியான குரலாக இருந்து, இதை வற்புறுத்திச் சொன்னால், அதற்கு நாடு பூராவும் ஆதரவு கிடைக்க முடியும். நாம் எந்த ஜனங்களுடைய மொழியைப் பொது மொழியாக்கிக்கொள்ள சிரமப்படுகிறோமோ, அந்த ஜனங்கள்கூட என்னுடைய இந்தக் கருத்துக்கு ஆதரவு கொடுப்பார்கள். ஹிந்தியைத் தேசிய மொழியாக்கவேண்டுமென்று சொல்கிற அந்த ஜனங்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய பிராந்தியத்தில் ஆட்சி மொழியாக ஹிந்தி முழுக்க முழுக்க இருக்கவேண்டுமென்பதுதான் அவர்களுடைய பிரதான கோஷம். ஆனால், அரசியல் நன்கு தெரிந்தவர்கள்தான் தங்களுடைய மொழி தங்களுடைய பிராந்தியங்களில் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று சொல்வதோடு, தங்களுடைய மொழியே நாடு பூராவும் இருக்கவேண்மென்று விரும்புகிறார்கள். சாதாரண மக்கள், தங்களுடைய மொழி, தங்களுடைய ராஜ்யத்தில் ஆட்சி மொழியாக இருந்தால் போதும் என்றுதான் சொல்கிறார்கள். அந்த மாதிரி கருத்து நாட்டிலே வலுவடைந்தால், வடக்கில் இருப்பவர்கள் யாரும் ஒன்றும் செய்ய முடியாது. அதைப்பற்றி அஞ்சவோ, ஆத்திரப்படவோ அவசியம் இல்லை. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்களில் ஆத்திரப்பட்டுப் பல்வேறு காரியங்கள் செய்கிறார்கள். தீர்மானம் பிரேரேபித்தவர்கள் இன்னொன்றையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு ஆட்சி மொழியாக இருக்கும் ஒரு மொழி தொடர்ந்திருப்பதற்கு ஒரு காலம் தேவை என்று சொல்வதைவிட, இந்த நாட்டின் 14 மொழிகளும் இன்றே தேசிய மொழியாகவேண்டுமென்று ஏன் அதற்காக ஒரு போராட்டம் நடத்தக்கூடாது? அப்படி ஒரு போராட்டம் வந்தால், அதற்கு எங்களுடைய சோஷலிஸ்டுக் கட்சி, அகில இந்திய அடிப்படையில், முழு ஆதரவு அளிக்கும் என்று என்னைப் பொறுத்த வரையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வெறும் வாய்ச்சொல்லாக நான் இதைச் சொல்லவில்லை. அதிகாரபூர்வமாகத் தெரிந்து கொண்டதற்குப் பின்னால் சொல்கிறேன். 14 மொழிகளும்தான் தேசிய மொழிகளாகவேண்டுமென்று ஒரு போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் துவக்குமானால், நிச்சயமாக அகில இந்திய அடிப்படையில் சோஷலிஸ்டுக் கட்சி பரிபூரணமான ஆதரவு கொடுக்கும்.



8th August 1963] [திரு. க. ர. நல்லசிவம்]

"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள்-இவள்

செப்பு மொழிபதி னெட்டுடை யாள், எனிற்
சிந்தனை ஒன்றுடை யாள்."

என்று பாரதி பாடினான். ஹிந்தியைப் பொறுத்தோ, வேறு
எதைப் பொறுத்தோ அவன் எண்ணிப் பாடவில்லை. இந்தத்
தேசத்திற்கு ஒரே உயிர்; ஒரே சிந்தனை தான். '18 மொழிகள்'
என்று பாடியிருக்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள
வேண்டும். இன்றைக்கு வரும் தொல்லையை வைத்துக்கொண்டு
அன்றைக்கே இதைப் பாடினாரோ என்று நினைக்க வேண்டிய சூழ்
நிலையில் இருக்கிறோம். 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாகி
விட்டால், இன்றைக்கிருக்கும் தொல்லையைவிடக் குறைந்த
தொல்லையாகத்தான் இருக்கும். இந்தத் தொல்லை இருக்
காது. ஆகவே, நான் கேட்டுக் கொள்வதெல்லாம்,
நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில்,
வேறு பிரதேசத்தைப்பற்றிக் கவலை இல்லை—தமிழக சர்க்கார்
இந்தத் தீர்மானத்தை கவனிக்க வேண்டும். தீர்மானத்தைக்
கொடுத்தவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். ஆங்கிலம் இந்த
நாட்டில் ஆட்சிமொழியாக இருக்கும் வரையில் 14 மொழிகளும்
நிச்சயமாக முன்னேறப்போவதில்லை. ஆங்கிலம் இருக்கும் வரை,
ஹிந்தியோ, தமிழோ இன்னும் மற்றுமுள்ள அத்தனை மொழிகளும்
நல்ல முறையில் வாழ முடியாது. ஆற்றில் இறங்காமல் நீச்சல்
கற்றுக்கொள்ள முடியாது. பொறுப்பிலே கொண்டுவந்து
மொழியை வைக்காமல், அதற்கு 'இந்த வார்த்தை கிடையாது,
அந்த வார்த்தை கிடையாது' என்று சொல்லிக்கொள்வதில் பயன்
இல்லை. 'போகம்', 'யோகம்' என்கிற தமிழ் வார்த்தைகளுக்கு
ஆங்கிலத்தில் சரியான வார்த்தைகள் இல்லை என்று அறிஞர்கள்
சொல்கிறார்கள். அந்த வார்த்தைகள் அனுபவத்தில் இருக்கின்றன.
ஆங்கிலத்தில் விஞ்ஞனத்துறை வார்த்தைகள் அதிகம் இருக்
கின்றன. ஏனென்றால், விஞ்ஞானத் துறையில் முன்னேறி வரும்
நாடுகள் ஆங்கிலம் பேசும் நாடுகளாக இருக்கின்றன. நாம் மெய்
ஞானத் துறையில் முன்னேறியிருப்பதால், மெய்ஞானம் சம்பந்த
மான வார்த்தைகள் நம் மொழியில் அதிகமாக இருக்கின்றன. நம்
நாட்டில் விஞ்ஞானம் சம்பந்தமான அத்தனை வார்த்தைகளும்
இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதேபோல், அந்த
நாடுகளில் மெய்ஞான சம்பந்தமான வார்த்தைகள் அத்தனையும்
இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இப்படித்தான் நிலைமை
இருக்கிறது. நம்முடைய தாய் மொழி உயர்ந்தது. அது இந்த
மாநில மொழியாக மட்டுமல்ல. இந்த தேசத்தின் ஆட்சி மொழி
யாகி, பாராளுமன்றத்தில் ஏறுவது பற்றி எல்லோரும் பெருமை
கொள்வார்களே தவிர, யாரும் சிறுமை அடையமாட்டார்கள்.
'இராணுவத்திற்கு என்ன செய்வது? மத்திய சர்க்கார் நிர்வாகத்
திற்கு என்ன செய்வது? என்று கேட்கக்கூடும். நான்கைந்து
மொழிகளை வைத்துக்கொண்டு ஆட்சி நடக்கும் நாடுகளில் என்ன

முறையைக் கடைப்பிடிக்கிறார்களோ, அதே முறையை இங்கும் கடைப்பிடிக்கலாம். இதையெல்லாம் கவனத்தில் வைத்துக் கொண்டு, ஒன்று—மத்திய சர்க்காருக்கு இதை அறிவிக்க வேண்டும். இரண்டாவது—14 மொழிகளும் தேசிய மொழியாக்கப் படவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் அணிவாகக் கேட்கவேண்டும். 'ஆங்கிலம் கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக வரும்' என்கிற வார்த்தைகள் இருக்கிற வரையில், ஆங்கிலம் அப்படியேதான் இருந்து கொண்டிருக்கும். ஹிந்தியும் வந்துகொண்டேதான் இருக்கும் என்பதை எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, இன்றைக்கே, இப்பொழுதே, இந்த நிமிஷத்திலேயே 14 மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்கவேண்டும் என்ற கருத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காகத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, தமிழையும் அதோடு தொடர்புடைய மற்ற மொழிகளையும் தேசிய மொழிகளாக்கவேண்டும் என்று கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

இந்தி ஆட்சி மொழியாகிவிடுமானால் தமிழ் அழியாது என்ற கருத்தை ஆளுங்கட்சியிலிருக்கும் தோழர்கள் அளித்து வருகிறார்கள். மொழி என்று சொன்னால், ஏதோ ஒரு பருப்பொருள் போலவும், அந்தப் பொருள் அழித்தும் அழியாது நிலை பெற்றிருப்பது போலவும் பேசி வருகிறார்கள். காரணம், மொழியினுடைய இயல்பை அறியாத காரணத்தால் என்று நான் கருதுகிறேன்.

சங்க காலத்தில் 'குறிஞ்சிப் பண்' என்று ஒரு பாட்டு இருந்தது என்று சொல்வார்கள். கடும் வேகத்தோடும் பசியோடும் வரும் யானையை அடித்து விரட்ட முடியாது ஆடவர்கள் இருக்கும் நேரத்தில், தினைப் புனத்தைக் காக்கும் மகளிர், குறிஞ்சிப் பண்ணைப் பாடினால், அந்த யானை, பசியை மறந்து அடங்கி ஒடுங்கி விடும் என்று கூறும் காட்சியைச் சங்க நூல்களில் காண்கிறோம். அந்தக் குறிஞ்சிப் பண் இப்பொழுது இருக்கிறதா? அழிந்து விட்டது. காரணம், அப்பண்ணைப் பாடுவார் இல்லை. பாட்டு அழிந்து விட்டது. அதைப்போல், மொழியை வழங்குகிறவர்கள் அழிந்துவிட்டால் மொழி இல்லை. ஆகவே, மொழியினுடைய அழிவும் வாழ்வும் மொழி வழங்குகின்றவர்களுடைய அழிவிலும் வாழ்விலும் இருக்கிறது என்பதை ஆளுங் கட்சித் தோழர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.





இரண்டு நாட்களுக்குமுன், இந்த மன்றத்தில் ஆளுங் கட்சியில் உள்ள ஒரு பெரியவர் ஒரு பாட்டைத் தங்களுக்கு ஆதரவாக எடுத்துக் காட்டினார்கள். இந்திய நாட்டினுடைய ஒருமைப் பாட்டை உணர்த்துவதற்காக—

"வடாஅது பனிபடு நெடு வரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்"

என்ற பாட்டை எடுத்து, இமயம் முதல் குமரி வரையிலும் ஓர் ஆட்சி நிலவப் பாடுபட்டார்கள் என்று கூறினார்கள். அதை எதற்குக் காட்ட வேண்டுமோ, அது எதற்காகப் பாடப்பட்டதோ, அதற்கு மாறான நிலையில் காட்டப்பட்டதாகும். அந்தக் காலத்தில், தமிழ் வழங்குகின்ற ஆட்சி, தமிழ் வழங்குகின்ற முறை இமயம் முதல் குமரி வரையிலும் இருந்தது. இதைப் இப்பொழுது சொல்வதாக நீங்கள் நினைக்க வேண்டாம். சங்க இலக்கியங்களில் கூறியதாக மட்டும் நினைக்க வேண்டாம். இது உலகத்தில் உள்ள எல்லா மொழிகளின் இலக்கணத்தையும் ஒப்பிட்டிருக்கும் மொழி வல்லுநர்கள் கண்ட முடிவாகும். பலுசிஸ்தானத்தில் இமய மலைச் சாரலில் வழங்கப்படுகின்ற ஒரு மொழியானது தமிழ் மொழியின் அடிப்படையில் தோன்றிய மொழி என்று மொழி நூல் வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள்.

சேரன் செங்குட்டுவன் தந்தை, "குமரியொடு வட இமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்" எனப் பாராட்டப் பெறுவதை நோக்க, சங்க காலத்தில் இமயம் முதல் குமரி வரை தமிழ் வழங்கியது என்பது இலக்கியங்களில் காணப்படுகிறதே, அந்த நிலை இப்போது இருக்கிறதா? தொல்காப்பியர் சொல்கிறார்

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்",

என்று. அந்த நிலையாவது இருக்கிறதா? அது வேண்டாம். நம் காலத்தில் நம்மோடு வாழ்ந்த பாரதியார்

நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு

என்று தமிழ்நாட்டின் எல்லையாக வரையறுத்திருக்கிறாரே. அது இப்போது இருக்கிறதா? வடவேங்கடத்தை விடமாட்டோம் என்று போராடினோம். திருத்தணியைக்கூட விட்டுவிட்டு அதைத் திருப்பிப் பெறுவதற்கு நாம்பட்ட பாடு நமக்குத்தான் தெரியும். ஆகவே, இன்றைக்கு நம்முடைய வட எல்லையாக திருத்தணியோடு திருப்தி அடைய வேண்டிய நிலையில் இருக்கிறோம். அது போகட்டும்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென்றோர்—மணி
யாரம் படைத்த தமிழ்நாடு

என்று பாரதியார் பாடினாரே. அந்தச் சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகள் வாழ்ந்த நாடு இன்றைக்குத் தமிழ் எல்லைக்குள் இருக்கிறதா ? இல்லையே. இவை எல்லாம் வேண்டாம். இப்போது தமிழ்நாடு என்று சொல்கிறோமே, அந்தத் தமிழ் நாட்டின் எல்லைக்குள்ளேயாவது முழுவதும் தமிழ் வழங்கப் படுகிறதா ? தமிழர்கள் என்று இருக்கிறார்கள். வீட்டிற்குள் தெலுங்கு பேசுகிறார்கள். தமிழர்கள் என்று எத்தனை மராட்டியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்தால் மராட்டிதான் பேசுகிறார்கள். உருது பேசுகின்றவர்கள் எத்தனை பேர் தமிழர்கள் என்று தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். இன்னும் தமிழ்நாட்டிலேயே பிறந்து வளர்ந்து ஆங்கிலம் பேசுகின்றவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். இந்த நிலை எல்லாம் எப்படி உண்டாயிற்று ? ஆட்சி பீடத்தில் எந்த மொழி அமர்கிறதோ அந்த மொழியே மற்ற மொழிகளை எல்லாம் கட்டாயம் அழித்துவிடும் என்பதை உறுதிசெய்ய இவற்றையெல்லாம்விட வேறு சான்றுகள் எதுவுமே வேண்டாம்.

குமரி முதல் இமயம் வரை தமிழ் ஆட்சி நடைபெற்றது ஒரு காலம் என்றால் பிற்காலத்தில் தமிழோடு சமஸ்கிருதம் கலந்து தமிழ் ஆட்சி குன்றியது. தமிழ் மொழியோடு சமஸ்கிருதம் கலந்து தெலுங்கு தோன்றியது. மலையாளம் தோன்றியது. விஜய நகர மன்னர்களின் சாம்ராஜ்யம் செல்வாக்கு பெற்றிருந்த காலத்தில் இங்கே தெலுங்குமொழி அதிகம் பரவிற்று. மாராட்டிய மன்னர்கள் ஆண்ட காலத்திலே மராட்டி வந்து ஆதிக்கம் பெற்றது. முஸ்லிம் ஆட்சியின் விளைவாக உருதுமொழி ஊடுருவிற்று. ஆங்கிலேயர்கள் காலத்தில் தமிழிடையே ஆங்கிலம் ஆதிக்கம் பெற்றது. இனி வருகிறது இந்தி மொழி என்று சொன்னால், அதுவும் அது ஆட்சிமொழியாகிவிட்டால் என்ன நிலைமை ஏற்படும் ? இதைத்தான் வரலாற்று உண்மையை மறந்துவிடாமல் அறிஞர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற அரசுகளுக்குத் தமிழ் அரசு அடி பணியாத நிலையாவது இப்போது இருக்கிறது. இந்த நிலையே கூடப் போதும். ஆனால் வட அரசு இந்தி மொழியையே நிர்வாக மொழியாகக்கொண்டு இயங்குகிற அளவுக்கு மாறிவிட்டால் இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்றாகிவிட்டால் நம்முடைய தமிழ் அழிந்தேவிடும் என்பதை நம்முடைய பெரியவர்கள் நன்றாக உணர வேண்டும். அதை உணராத ஒரு காரணத்தினால்தான் என்ன என்னவோ நிலைகள் ஏற்படுகின்றன. திரு. மாதா கவுடர் அவர்கள் பேசும்போது, கோட்டம், வட்டம் என்றெல்லாம் போடுகிறார்கள், ஒன்றுமே புரியவில்லை என்று சொன்னார். அந்தச் சொல்லே தெரியவில்லையென்றால் தமிழின் நிலை எப்படியாகிக்கொண்டிருக்கிறது என்று பாருங்கள். அந்தச் சொல் நாமே உருவாக்கிக்கொண்ட சொல்லா ? இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் வழங்கப்பட்ட சொல் என்று கூடச் சொல்லவேண்டாம். ராஜராஜ சோழன் காலத்துக் கல்வெட்டுக்களை எடுத்துப் பார்த்தால் போதும்



கோட்டம், வட்டம் என்கிற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நமக்கு இப்போது டிஸ்ட்ரிக்ட் என்று சொல்ல வேண்டும், இல்லையானால் ஜில்லா என்று சொல்ல வேண்டும். தாலுக் என்று சொல்ல வேண்டும், இல்லையானால் தாலுக்கா என்று சொல்ல வேண்டும். மாவட்டம், கோட்டம் என்று சொன்னால் அதை அவர்கள் விரும்பவில்லை. இப்பேர்ப்பட்ட நிலை இப்பொழுதே ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் இந்தி ஆட்சி மொழியாக இடம் பெற்றுவிட்டால்—நம்முடைய நண்பர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும், நிச்சயமாகத் தமிழ் அழிந்தே போகும். அதற்காகத்தான் தமிழுக்கு மட்டும் அல்ல தேசிய மொழியாகிய பதினான்கு மொழிகளுக்குமே இந்தியோடு ஆட்சி மொழியாக இருக்கும் தகுதியைக் கொடுங்கள் என்று வேண்டுகிறோம். அந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தத் தீர்மானத்தை நாங்கள் கொடுத்திருக்கிறோமேதவிர வேறு ஒரு சிக்கல் ஏற்படுத்துவதற்காக அல்ல என்று கூறி இந்தத் தீர்மானத்தை இம்மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேடைப் பேச்சுபோல இல்லாமல் பல கருத்துக்களைச் சுருக்கமாகச் சொன்னேன். தமிழ் வரலாற்றுச் சான்றுகளை எண்ணிப் பார்த்து தமிழ் பேசுபவர்களுடைய எண்ணிக்கை குறைந்தால் தமிழ் மொழி அழிந்து போகும், இந்தி மொழி ஆட்சிமொழியாகிவிட்டால் இந்தி பேசுபவர்களுடைய எண்ணிக்கைதான் அதிகமாகும். தமிழ் பேசுபவர்களுடைய எண்ணிக்கை குறையும். அது நமது தமிழ் மொழியையே அழிப்பதற்குக் காரணமாகிவிடும். ஆகவே தமிழ் மொழி அழியாதிருக்க, தமிழ் பேசுபவர்களுடைய எண்ணிக்கை குறையாமல் இருக்க இந்தத் தீர்மானத்திற்கு ஆக்கம் தரவேண்டுமென்று கோரி என் கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** அநேக அங்கத்தினர்கள் இந்த விவாதத்தில் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருப்பதினால், ஒவ்வொரு அங்கத்தினரும் சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டுமென்று கோரி என் கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய தீர்மானம் அவசியம் இல்லாத ஒன்று என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் இந்த நாட்டின் தேசிய மொழி என்று குறிப்பிடத்தகுந்த மரியாதைக்குரிய மொழிகளாக அரசியல் அமைப்பிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மொழிகள் 14. அதிலே நாம் இன்பமாகக் கருதும் தமிழும் ஒன்று. மேலும் ராஜ்ய புனருத்தாரணம் செய்தபோது தமிழர்களாகிய நாம் பெரும்பாலும் இருக்கிற நம்முடைய ராஜாங்க மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டுமென்று நாம் எப்படி விரும்பினோமோ அப்படியே இன்றைக்குத் தமிழ் மொழி நம்முடைய தமிழ்நாடு அரசாங்க மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. நம்முடைய இந்தி

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [8th August 1963

அரசியல் அமைப்பிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற 14 மொழிகள் மட்டும்தான் இந்த நாட்டில் இருப்பதாக எண்ணக் கூடாது. பாரதியார் கண்ட பதினெட்டு மொழிகள் மாத்திரம் அல்ல. இன்னும் வரிவடிவம் காணப்படாது, மக்களால் பேசப்பட்டு வழக்கத்தில் இருக்கக்கூடிய மொழி ஏறக்குறைய 200 உண்டு. நம்முடைய தமிழ்நாட்டிலேயே சௌராஷ்டிர பெருமக்கள் வழக்கத்தில் பேசி வருகிற மொழியும், கொங்கணம் போன்ற மொழியும் வரிவடிவம் இல்லாமல் பேச்சு வழக்கில் இருக்கக்கூடிய மொழியாக இருக்கிறது. இப்படி இந்த தேசத்தில் உள்ள அத்தனை மொழிக்காரர்களும் தங்கள் தங்கள் மொழி இந்திய அரசின் நிர்வாக மொழிகளாக ஆகவேண்டும் என்று கருதக் கூடிய நிலைமை வந்துவிட்டால் இந்த நாட்டின் சிதைவைத் தவிர வேறேதேனும் உண்டா என்று கருதிப் பார்க்கவேண்டும். நண்பர் கொடுத்திருக்கும் தீர்மானம் தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு வழி அளிக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன். தமிழுக்கு ஒரு பெரிய முக்கியத்துவம் காட்டுவது ஒன்றுதான் இந்தத் தீர்மானம் என்று இதை சிலாக்கித்து பேசிய புலவர் கோவிந்தன் குறிப்பிட்டார் நம்முடைய தமிழ் மொழியை ஒட்டிய தொடர்புடைய மொழிகளாகவே 14 மொழிகளும் இருக்கின்றன என்பதையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் பலமுறை உச்சரிக்க வேண்டுமென்று நான் விரும்பினேன். இந்த மாநிலத்தில் வழங்கக்கூடிய மொழிகள் வேறு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மொழிகள் அல்ல. நம்முடைய தேச மொழிகள்தான் . அவற்றை ஒன்றொடொன்று ஒப்பிட்டுப் பார்த்தால் இலக்கண அமைப்பைச் சிந்தித்துப் பார்த்தால் அவை ஒவ்வொன்றுக்குமிடையே உள்ள ஒற்றுமை புலப்படும். இவை எல்லாம் இந்த மாநிலத்தில் நிர்வாக மொழி என்று கொண்டால் நிர்வாகத்தை அத்தனை மொழிகளிலும் நடத்த முடியுமா? ஆகவே தான் இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டுதான்—நம்முடைய அரசியல் அமைப்பில் 14 மொழிகள் இடம் பெற்றிருக்கின்றன. தமிழ் மொழிக்கு எல்லா விதமான மரியாதையும் கொடுக்கப்பட்டு, நம்முடைய மாநில நிர்வாக மொழியாகவும் செயல்படுவதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மறுக்க முடியாது. திராவிட நாட்டு அமைப்பிலே நம்பிக்கை வைக்கக்கூடிய நண்பர்கள் திராவிட நாடு என்று அவர்கள் கோரக்கூடிய பகுதியில் தமிழ் மொழி மட்டும் வழங்கவில்லை, துளுவும் சேர்ந்து ஐந்து மொழிகள் வழங்கக்கூடிய பகுதியே திராவிட நாடு என்ற அமைப்பில் வருகிறது. ஆகையால் இந்த ஐந்து மொழிகளுமே இங்கே ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்றால் அப்போது எந்த ஒருவகையான சமரசமும் ஏற்படாது என்பதை உணர வேண்டும். இதைச் சிந்தித்துப் பார்த்து அத்தகைய ஒரு நிலை ஏற்படுமானால் அப்போது அவர்கள் எத்தகைய ஒரு முடிவை எடுப்பார்கள் என்பதற்கான பதிலை இந்தச் சபைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.



8th August 1963] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

தேசியத்தில் நம்பிக்கையுள்ள நாங்கள், காங்கிரஸ் கட்சியினர் இந்த நாட்டிலுள்ள எல்லா மொழிகளும் ஆங்காங்கே அதற்குரிய வளத்தைப் பெறவேண்டும் என்றும், நாட்டுக்கு என்று பொது மொழி தேவை என்பதையும் வெகு காலத்திற்கு சுதந்திரத்திற்கு முன்பே உணர்ந்திருந்தோம். ஏற்கனவே பொது மொழியாக இருக்கக் கூடிய ஆங்கிலம் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில பட்டதாரிகளால்தான் கையாளப்பட்டு வந்தது. இன்றையதினம் கொடுத்திருக்கும் தீர்மானத்தில் தமிழ் மொழியும் இந்தியாவின் பொது மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்று இருந்தாலும் அவர்களுடைய உள்ளார்ந்த எண்ணம் தமிழ் மொழி என்பதல்ல, இந்திக்குப் பதிலாக ஆங்கிலமேதான் நீடிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தக் கூடிய ஒன்றாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன். இந்த தேசத்தைப் பொறுத்தமட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் துணை நிற்கக் கூடிய சுதந்திரக் கட்சியினரில் பெரும்பாலோர் படித்தவர்கள், எல்லா விதமான வசதிகளோடும் இருக்கக் கூடியவர்கள். அந்தக் கட்சியினர் ஆங்கிலம் மாத்திரம் இருந்தால் போதும் என்று நினைக்கலாம். ஆனால், இந்த நாட்டில் ஏறத்தாழ 75, 80 சதவிகிதம் மக்களால் புரிந்து கொள்ளக் கூடியதும் சுலபமாக, ஐந்தாறு, மாதங்களில் கற்றுக் கொள்ளக்கூடிய பாஷை இந்தியாகும். இது சுதந்திரப் போராட்ட காலத்தில் சிறை சென்ற எல்லோருமே அறிந்த ஒன்றாகும். இந்திதான் இந்த நாட்டின் பொது மொழியாக வேண்டுமா என்ற சர்ச்சை அரசியல் சட்டத்தை வகுக்கும்போது ஏற்பட்டது. மெஜாரிடியினர் தீர்ப்பை மதிக்கும் ஜனநாயகம் இருக்கும் வரையில், மெஜாரிடி மக்களால் பேசப்படுகிற, பெரும்பாலோரால் புரிந்துகொள்ளக் கூடிய இந்தி மொழிதான் இந்தியாவின் பொதுமொழியாக வேண்டுமென்று எல்லோராலும் அன்று ஒப்புக் கொள்ளப்பட்டது. புனித விவிலிய நூலில் கூறப்பட்டுள்ள டவர் ஆப் பேபல் போல எல்லோரும் சேர்ந்து பேசக்கூடிய மன்றங்களில் பல பாஷைகளில் பேசினால் யாருக்கும் புரியாத நிலைமைதான் ஏற்படும் என்பதை உணர வேண்டும். நூற்றுக்கு மேற்பட்ட தேசங்களின் சபையான ஐக்கிய நாடுகள் சபையில் கூட 4, 5 மொழிகள்தான் கையாளப்படுகின்றன. பாராளுமன்றத்திலும் அவரவர்கள் மொழியிலே பேசுவதில் தடை ஒன்றும் கிடையாது. நூற்றுக் கணக்கான மொழிகள் பேசப்படும் இந்த நாட்டில் பாராளுமன்றத்தில் பேசப்படுபவைகளில் அப்படியே பாராளுமன்ற ஏடுகளில் பதிவு போடுவதற்கென்று தேசிய மொழிகளாக உள்ள 14 மொழிகளிலும் அச்சடிக்கவேண்டுமென்ற நிலை வருமானால் அது எளிய வளருகின்ற தேசத்திற்கு உரியதா என்பதைத் தீர்க்கமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய தமிழ் மொழி பழமையானது, தொன்மையானது, ஆகவே தமிழுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், சமஸ்கிருதம் தமிழைவிடப் பழமையானதாயிற்றே, அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாமா என்று கேட்கலாம். ஆகவே, நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்க ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள காலம் வரை பெரும்பாலோரால்

பேசக்கூடிய, சுலபமாகக் கற்றுக் கொள்ளக் கூடிய இந்தி மொழி தான் பொது மொழியாக இருக்க வேண்டுமென்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இன்று பி. ஏ. பட்டதாரிகள் கூட ஆங்கிலத்தைச் சரியான முறையில் கையாளுவதற்கு முடியாத நிலைமை இருக்கிறது. ஆங்கிலமே அரசாங்க மொழி எனில் சிறு பான்மையோர் பெரும்பான்மையோரை ஆளும் நிலை ஏற்படும். அது ஜனநாயகமாகுமா? அதே சமயத்தில் இந்தியைச் சுலப மாகக் கற்றுக் கொள்ள முடிகிறது. ஆகவே, போராட்ட காலத் திலிருந்தே காங்கிரஸ் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு இணங்க தமிழுக்கு வேண்டிய அளவுக்குப் பாதுகாப்பை அரசாங்கம் அளித்து வருகிறது. தமிழுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டுவிட முடியாது. ஆகவே, இது போன்ற தீர்மானங்கள் எல்லாம் நாட்டின் ஒருமைப்பாட்டைச் சிதைவுபடுத்தும் என்று, கூறி, இது போன்ற தீர்மானம் இப்போது அவசியமில்லை என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சிச் செயலாளர் கொடுத்துள்ள தீர்மானத் தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தத் தீர்மானம் அரசாங்கத் தரப்பில் இருந்து வந்திருக்க வேண்டும். அரசாங்கத்தார் இந்தக் காரியத்தைச் செய்யத் தவறி யிருந்தபோதிலும் எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் இதிலே அக்கரை காட்டக்கூடிய முறையில் இந்தத் தீர்மானத்தைக் கொடுத் திருக்கிறோம். அரசாங்கத் தரப்பிலே இருந்து இந்தத் தீர்மானத் தைக் கொடுத்திருந்தால் நாங்கள் இருக்கின்ற குறைபாடுகளை யெல்லாம் எடுத்துத் தெள்ளத் தெளிவாக வைத்திருப்போம். ஆனால் இப்போது எங்கள் கட்சியிலிருந்து கொடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தின் நல்ல நோக்கங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி எல்லோருடைய ஆதரவையும் தேடுகின்ற முயற்சியிலே நான் இங்கே ஈடுபட இருக்கிறேன்.

மொழியானது அரசியலுக்கு அப்பாற்பட்டது. அது இந்த மன்றத்திலேயே பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. திராவிட நாடு வேண்டுமா, வேண்டாமா, நிலத்தைப் பங்கு வைக்க வேண்டுமா, வேண்டாமா என்பதெல்லாம் அரசியல். ஆனால் மொழி என்று சொல்லுகின்ற சமயத்தில், எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும், எந்த மொழி அதிகார மொழியாக இருக்க வேண்டுமென்ற கொள்கையை விவாதிக்கின்ற சமயத்தில் எல்லாம் இந்த மாமன்றம் எப்பொழுதுமே ஒரு நிலையான கொள்கையைத் தான் இதுவரை கடைப்பிடித்து வந்திருக்கின்றது என்பதை நான் கூற விரும்புகிறேன். மொழியானது அரசியலுக்கு அப்பாற்பட்டது. கட்சிப் பூசல்களுக்கும், தகராறுகளுக்கும் அப்பாற்பட்டது. என்னுடைய அருமை நண்பர்கள்கூட சென்ற ஆண்டுக்கு முன்ன தாக இந்தச் சபையிலே இந்தப் பிரச்னையை விவாதித்த சமயத் தில் நல்ல கருத்துக்களையெல்லாம் கூறியிருக்கிறார்கள். இந்த நாட்டு





க்கு ஒரு பொது மொழி தேவைதான். அகில இந்திய மொழி தேவை தான. ஆனால் அது எந்த மொழியாக இருக்கவேண்டும் என்றால் யாருடைய மனத்தையும் புண்படுத்தாத வகையிலே இருக்க வேண்டும். அந்த வகையிலே இரண்டு மொழிகளை இந்திய யூனியன் அபிஷியல் லாங்வேஜ் ஆக இருக்க வேண்டுமென்ற கொள்கையை அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறோம். மொழிக் கமிஷன் ஏற் படுத்திய சமயத்தில் இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அறிக்கையைத் தாக்கல் செய்தோம். அந்த அறிக்கையில் கொடுத்த மெமோராண்டத்தை லாங்வேஜ் கமிஷன் ஏற்காத காரணத்தால் மீண்டும் பாராளுமன்றக் கமிட்டி ஏற்படுத்தினார்கள். இரண்டா வது மெமோராண்டமும் கொடுத்தோம். நாம் கொடுத்த அத்தனை யோசனைகளையும் அந்தக் கமிட்டி ஏற்றுக்கொண்டது. அதனை ஏற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் பாராளுமன்றத்தில் நம் முடைய பண்டித நேரு அவர்கள் ஒரு உறுதி மொழி கொடுத்தார் கள். நம்முடைய மாமன்றத்திலே எல்லாக் கட்சியினரும், சுதந் திரக் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும், அதே போன்று எங்களுடைய பகுதியிலே இருக்கின்றவர்களும், காங்கிரஸ் சார்பி லும் முன்னாள் நிதியமைச்சர் சுப்பிரமணியம் கொடுத்த தீர் மானத்தை ஆதரித்தோம். அதற்கு ஒரு திருத்தத்தை திரு. வி. கே. ராமசாமி முதலியார் கொடுக்க அதன் பேரில் அனைவரும் சேர்ந்து ஏகோபித்த ஒரு தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டது. அந்த முறையில் இப்போது நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய தீர்மானம் அரசாங்கத் தரப்பிலிருந்து வந்திருக்கவேண்டும். இன்றைக்கு நிலைமைகள் மாறியிருக்கலாம். இன்றைக்கு முன்பு இருந்த அமைச்சர் இங்கு இல்லாமல் இருக்கலாம். டாக்டர் பி. சுப்ப 12-00 noon ராயன் இன்று இல்லாமல் இருக்கலாம். மறைந்த டாக்டர் சுப்ப ராயன் அவர்கள் பேசிய பேச்சுக்கள் எல்லாம், இந்த மன்றத்தில் விவாதித்த விவாதங்கள் எல்லாம் இந்த மன்றத்தில் இருக்கிறது. இப்படியிருக்கிற நிலையில்தான் நாங்கள் எங்கள் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம். அரசாங்கம் ஏற்கெனவே என்ன தீர்மானம் நிறைவேற்றிற்றோ ஏறக்குறைய அதே அளவில்தான் எங்கள் தீர் மானமும் இருக்கிறது. தவிர எந்தவிதத்திலும் எங்கள் தீர்மானம் அதற்கு மாறுபட்டதாக இல்லை என்பதை தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றத்தின் கௌரவத்தைக் காப் பாற்ற வேண்டியது இந்த மன்றத்திலுள்ள அத்தனை பேர்களுடைய கடமையாகும். இங்கு விவாதித்து முடிவு எடுக்கப்பட்டதை இம்மன்றத்தில் இருக்கிறவர்களும் ஏற்கனவே இது குறித்து விவா தித்தவர்களும் சேர்ந்து அதை ஆதரிக்கும் நிலையில் இருக்கிறோம். 5—9—1960-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ன?

"This House recommends to the State Government that the Central Government be requested to undertake appropriate legisla- tion in order to implement the Prime Minister's assurances regard- ing the continuous use of the English Language for the official purposes of the Indian Union."

என்பதுதான்.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [8th August 1963

பண்டித நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப் பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். நம் நிதி அமைச்சர் அவர்கள் சாதுரியம் மிக்கவர்கள். ப்ரைம் மினிஸ்டர் அவர்கள் கொடுத்த அஷ்யூரன்ஸ் இந்தச் சட்டத்திலேயே இருக்கிறது என்று வாதாடக்கூடிய திறன் படைத்தவர்கள் என்பதை நான் அறிவேன். இந்தச் சட்டத்தின் பதிப்பை மன்றத்தில் வைத்திருந்தால் நன்றாகயிருந்திருக்கும். பண்டித நேரு அவர்கள் தனிப்பட்ட முறையிலும் சரி, பாராளுமன்றத்திலும் சரி என்ன சொன்னார்கள்? பாராளுமன்ற விவாதத்தின்போது ப்ராங் ஆந்தனி அவர்கள் ஆங்கிலத்தை எட்டாவது ஷெட்யூலில் ஒரு மொழியாக சேர்க்க வேண்டுமென்று கூறியபோது பண்டித நேரு அவர்கள் ஒரு அஷ்யூரன்ஸ் கொடுத்தார்கள். அதுபற்றி சொல்லிக் கொண்டு வரும்போது சொல்கிறார்கள். . .

"So I would have it as an alternate language as long as people require it and the decision for that I would leave not to the Hindi-knowing people but to the non-Hindi knowing people."

அதோடு நின்று விட்டார்களா? அடுத்த மொழிப் பிரச்னை வந்த போது மீண்டும் அதுபற்றி விவாதித்தார்கள். அப்போது பண்டித நேரு அவர்கள் சொன்னார்கள். . .

"Whatever I said then, of course, I hold by it completely."

என்று. நான் கூறுவது என்னவெனில் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறாரா? அதை சட்டத்தில் கொண்டு வந்து வைத்திருக்கிறார்களா? என்று கேட்க விரும்புகிறேன். வேறு எதுவும் இல்லை. நாங்கள் கொடுத்திருக்கிற தீர்மானம் அரசாங்கத்தை ஆதரிக்கிற தீர்மானம்தான். எதிர்க்கிற தீர்மானம் அல்ல. நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதி பற்றி விவாதிக்கும்போது இம்மன்றத்தில் 1960-ல் முன்னாள் தலைவராக இருந்த திரு. சுப்ரமண்யம் அவர்கள் கூறினார்கள், "1965-க்குப் பிறகும் ஆங்கிலம் நமக்கு நிர்வாக மொழியாக இருந்து வரவேண்டுமென்று". அதோடு "பை லிங்க்வல் பார்முலா எவ்வளவு காலத்திற்கு அவசியமோ அவ்வளவு காலத்திற்கு இது நீடித்திருக்கவேண்டும் என்ற கருத்தைத்தான் நான் வலியுறுத்தி வந்திருக்கிறேன். அந்தக் கருத்தை என்னுடைய சார்பாக மட்டுமல்லாமல் இந்த சபையில் செய்த முடிவின் அடிப்படையில் தமிழ் மக்களின் சார்பாகத் தெரிவித்திருக்கிறேன்" என்றும் கூறியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் மேலும் சொன்னார்கள், "நம்முடைய முடிவை செயல்படுத்துவதற்கு அரசியல் சட்டம் தடையாக இருந்தால் அந்தக் காலத்தில் அரசியல் சட்டத்தை திருத்தியாக வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்த தயாராக இருக்கிறோம்" என்றும் கூறி இருக்கிறார்கள். பின்னர் கடைசியாக சொன்னார்கள், "இப்போதே உறுதி கொடுக்கிறேன், சென்னை சர்க்காரே முன்வந்து ஏற்றுக் கொண்ட முடிவுகளை நிலைநிறுத்தும் முறையில் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டுமென்று ஏகோபித்துச் சொல்வதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள விரும்பு



8th August 1963] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

கிறோம்" என்றும் கூறியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் இப்போதுள்ள நிதியமைச்சர் என்ன பதிலளிக்கிறார்கள்? இத் தீர்மானம் மூலம் ஸ்டாட்டஸ் கோ நீடிக்கட்டும் என்றுதான் கூறுகிறோம். முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்களே, இந்த மொழி விவகாரம் சர்ச்சைக்குரிய விவாதமாகவே இருக்கிறது. நான் உங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன், நாட்டிற்காக உழைக்கிற முறையில், நாட்டுக்காக நன்மை தேடுகிற முறையில் கொடுக்கப் பட்டிருக்கிற வாக்குறுதியை நிறைவேற்ற நாங்கள் உங்களோடு பாடுபட தயாராயிருக்கிறோம் என்று அரசாங்கத்திற்கு சொல்ல விரும்புகிறேன். இந்த மாமன்றம் மட்டும் அந்த முடிவை எடுக்கவில்லை. வங்காளத்திலுள்ள இரண்டு சபைகளும் அந்த முடிவை எடுத்தார்கள். அப்போது வங்காளத்தில் முதல் அமைச்சராக இருந்த டாக்டர் பி. சி. ராய் அவர்கள் மூலம் தீர்மானம் என்னவென்றால்,

"If Hindi was to be made the sole official language, Bengali must be given equal status."

என்றுதான். தமிழுக்கும் அதேபோல் "ஈக்வல் ஸ்டாட்டஸ்" இருக்கவேண்டும். நாங்கள் 14 மொழிகளையும் யூனியன் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்வது வங்காள காங்கிரஸ் கட்சி முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திற்கு மாறுபட்டதாக இல்லை. அதைப்போன்றுதான் இதுவும் இருக்கிறது. போராட்டம் நடத்தப் போகிறோம், அதற்காகத்தான் இத்தீர்மானத்தை இங்கு கொண்டு வந்திருக்கிறோம் என்று ஆளும் கட்சியில் உள்ளவர்கள் தயவு செய்து நினைக்க வேண்டாம் எங்கள் போராட்டம் வேறு, அது வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்யும் பொறுப்பு அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று அரசியல் சட்டத்தை திருத்துங்கள், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள். கொடுத்த வாக்குறுதியை மீறி இப்போது இப்படி சட்டம் செய்வது முறையா? பதில் அளிக்கையில், பண்டித நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதி இச்சட்டத்தில் இருக்கிறது என்று சாதுரியமாகச் சொல்வார்கள். அவர்கள் வாதத்தில் நான் மிகுந்த பற்றுள்ளவன். அவரது வாதத் திறமையை நான் படித்துப் படித்து பாராட்டியவன். இந்தச் சட்டத்தில் மூன்றாவது பிரிவில்

"Notwithstanding the expiration of the period of fifteen years from the commencement of the constitution, the English language may, as from the appointed day, continue to be used, in addition to Hindi."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. "மே" க்கும் "ஷால்" க்கும் உள்ள வித்தியாசம் பற்றி மதியழகன் அவர்கள் திறமையாக எடுத்துக் காட்டினார்கள். இந்தியாவில் இந்தி தெரியாதவர்கள் ஏறக்குறைய 50 சதவிகிதம் இருக்கிறார்கள். இந்திதான் ஆட்சி மொழியாக வந்தா தீரும் என்று சொன்னால் பிரிந்து போய் விடுவோம் என்று அன்று டாக்டர் ராய் அவர்கள் சொன்னார்கள். கனம்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [8th August 1963

சுப்ரமணியம் அவர்கள் "இந்திதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று சொன்னால் நாட்டை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டுமென்று" சொன்னார்கள். அதற்கு என்ன சொல்கிறார்கள் ஆளும் கட்சியில் உள்ளவர்கள்? டாக்டர் ராய் அவர்களை நாங்கள் அப்படிச் சொல்லச் சொன்னோமா? ஆக இம்மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை, எடுத்த முடிவை செயல்படுத்தவேண்டியது இந்த மன்றத்தில் உள்ளவர்களாகிய நம் கடமையாகும். இதில் கட்சி பாகுபாடு ஒன்றும் கிடையாது. காங்கிரஸ், கம்யூனிஸ்ட் என்ற அமைப்புக்களைப் பற்றி பேசவேண்டியதில்லை. திரு. கல்யாண சுந்தரம் அவர்கள்கூட ஒரு அமென்ட்மென்ட் முன்னர் கொடுத்திருந்தார்கள்.

Add—

"Legislative measures under Article 343 (3) of the Constitution for the use of English as subsidiary official language of the Union Government without fixing time-limit."

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆங்கிலம்தான் இந்தியாவின் அபிஷியல் லாங்குவேஜ் ஆக அசோஷியேட் லாங்குவேஜாக சம அந்தஸ்துடன் காலவரையறை நிர்ணயிக்காமல் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அத்தீர்மானம் எல்லாக் கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாம் நிறைவேற்றிய தீர்மானத்தின் பேரில்தான் சொல்கிறேனே அல்லாது இந்தியை வைத்துத்தான் எங்கள் கழகம் வளரவேண்டுமென்ற அவசியம் இல்லை. நாங்கள் இந்திப் போராட்டத்தை ஆரம்பிக்கிறோம். எதற்காக? உங்கள் உறுதிமொழியை நீங்கள் நிறைவேற்றிவிடுங்கள், அதை நிறைவேற்றிவிட்டால் என் போராட்டம்? எங்களுக்கென்ன உங்களைப் பார்த்தால் பிடிக்கவில்லையா? அல்லது அமைச்சர்களாக இருக்கிற உங்களைப் பார்த்தால் எங்களுக்குப் பிடிக்கவில்லையா? நீங்கள் கொடுத்த உறுதி மொழிகளை நீங்களே காப்பாற்ற மறுக்கிறீர்களே? அமைச்சர்களெல்லாம் உறுதிமொழி கொடுத்தார்களே? பாராளுமன்றத்தில் நமது பிரதம மந்திரி அவர்கள் கொடுத்த உறுதி மொழியைக் காப்பாற்றாமல் காற்றில் பறக்கவிட்டு, தாய் மொழியாகிய தமிழ் மொழியை அடக்குகிற வகையில் இந்தியை ஆட்சி மொழியாகக் கொண்டுவருவது எந்த அளவுக்கு நியாயம்? இந்தி ஆட்சி மொழியாக வந்தால், ஹைகோர்டில் இந்தி வரும். சுப்ரீம் கோர்டில் இந்தி வரும். சட்டங்களெல்லாம் இந்தியில் வரும். மற்ற துறைகளிலும் இந்தி வரும். அத்தனை துறைகளிலும் இந்தி புகுந்துவிடுமேயானால், நாம் எப்பேர்ப்பட்டவர்களாக இருப்போம்? 'ஸெகண்டு கிளாஸ் ஸிடிஸன்' என்ற நிலை கூட இல்லாமல் போய்விடுமே? இந்தச் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிற தீர்மானத்தை ஆதரித்துத்தான் ஏற்கனவே அமைச்சர் அவர்கள் கொண்டிருக்கிற கருத்தை ஆதரித்துத்தான், ஏற்கனவே கொண்டிருக்கிற அத்தனை முறைகளையும் பின்பற்றித்தான் நாங்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்



8th August 1963] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

கிறோமே தவிர, வேறு முறையில் அல்ல என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கிற நிதி அமைச்சர் ஏற்கனவே நிதி அமைச்சராக இருந்தவருடன்கூட பணியாற்றியவர். அவர் எல்லாம் தெரிந்த வல்லுநர். அரசாங்கத் தரப்பில் ஏற்கனவே கொடுத்த தீர்மானத்தை வலியுறுத்துகிறோம் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். அரசியல் சட்டத்தை அமெண்டு செய்கிறோம் என்று சொல்லட்டும். இந்தத் தீர்மானமே தேவையில்லை. அரசியல் திட்டம் திருத்தப்பட்டால், இந்தத் தீர்மானத்திற்கோ அல்லது இந்திப் போராட்டத்திற்கோ அவசியம் கிடையாது. நாம் எல்லோரும் ஒரு சேர வடக்கே பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். சீனன் நம்மிடையே வருவதற்குத் தயாராக இருக்கிறான். எல்லையில் அத்தகைய பயங்கரத்தை மனதிலே வைத்துக்கொண்டு, டெல்லியில் இருப்பவர்கள் தென்னகத்தைப் பார்த்து முறைக்கவேண்டுமா? நாம் அனைவரும் வடக்கே சீனனைப் பார்த்து முறைப்போம் என்று சொல்லி, எமர்ஜென்ஸி என்று கூறிவிட்டு, தமிழ் மக்களைப் பார்த்து 'இந்தி வருகிறது' என்று சொல்லுகிறார்கள். இந்தி வெறியை நிலைநிறுத்துவதற்கு, இந்தி ஆதிக்க உரிமையை நிலைநிறுத்துவதற்கு முயற்சி நடக்கிறது. எப்படி வெள்ளைக்காரன் அன்று அங்கு இருந்தானோ, அதைப்போல 'நாங்கள் அங்கு இருக்கிறோம். எங்கள் மொழியை படித்துத்தான் நீங்கள் உத்தியோகத்திற்கு வரவேண்டும். நீங்கள் இந்தியில் சட்டம் படித்துத்தான் தொழில் நடத்தவேண்டும். இந்தி மொழியை நீங்கள் கற்றுத்தான் தீரவேண்டும்' என்று சொல்லுகிற முறையில் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. இதைத் தவிர வேறு என்ன பெருங்குறை இருக்க முடியும்? ஆகவே, இந்தச் சபையின் மானத்தைக் காப்பாற்றவேண்டியது நிதி அமைச்சர் அவர்களுடைய கடமையாகும். இந்தச் சபையின் தீர்மானத்தை நிலைநிறுத்தவேண்டியது அவருடைய கடமையாகும். ஏற்கனவே கொடுக்கப்பட்ட உறுதி மொழியை, ஏற்கனவே இருந்த அமைச்சர்கள் கூறிய அஷ்யூரன்ஸ் எல்லாவற்றையும் எப்படி நீங்கள் நிறைவேற்றப் போகிறீர்கள் என்று தெட்டத்தெளிவாகச் சொல்லிவிடுங்கள். என்னுடைய எதிரிலே இருக்கிற காங்கிரஸ் அங்கத்தினர்கள் என்னுடைய விரோதிகள் அல்ல. என்னுடன் உடன் பிறந்தவர்கள் போலத்தான் இருக்கிறார்கள். மொழி விஷயத்திலே எந்தவிதமான ஆவேசத்திற்கும் அவசியம் கிடையாது. அனை வரும் நீங்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்தோம். அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களின் திருத்தத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். கனம் கலியாணசுந்தரம் அவர்கள் கருத்தை உள்ளடக்கிய தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறீர்கள். ஒருமுகமாக இருந்து போராடி சொன்னால்தான் நம்முடைய மொழி அழிக்கப் படுவதைத் தடுக்கமுடியும். இந்தி மொழி இந்த நாட்டில் வந்து அமுல்படுத்தப்பட்டால், நாட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று நான் சொல்ல மாட்டேன். ஏற்கனவே இருந்த நிதி அமைச்சர் அவர்கள் இந்தியாவினுடைய ஒருமையை ஆண்டவன்

தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னார். அவர் வாயின் மூலம் சொன்னது போலவே இந்த நாட்டின் எதிர் காலம் இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். இந்தத் தீர்மானங்களை ஆதரிக்க வேண்டியது தமிழ் மகனைப் பிறந்த ஒவ்வொருவனுடைய கடைமையும் ஆகும். இந்த மன்றத்தில் தீர்மானிக்கப்பட்ட விஷயத்தை ஆதரிக்க வேண்டியது இந்த மன்றத்திலுள்ள அத்தனை அங்கத்தினர்களுடைய கடைமையும் ஆகும் என்று சொல்லிக் கொண்டு, எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து, அதை வற்புறுத்தி, இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய திரு. மதியழகன் கொண்டுவந்திருக்கும் இந்தத் தீர்மானம் இப்பொழுது அவசியமில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். பாரத நாடு, பாரத மக்கள் என்று சொல்லுகிறோம். ஆனால், பாரத மக்களுக்கு ஒரு பொது மொழி வேண்டுமென்றால், அந்த மொழி ஆங்கிலமா இந்தியா என்ற நிலையை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிலே இருக்கும்பொழுது ஆங்கிலத்தைப் புகுத்த வேண்டுமென்று நினைத்தார்கள், ஆங்கிலம் வந்ததன் காரணமாக தமிழ் அழிந்துவிடுகிறது என்றெல்லாம் பேசிய நண்பர் தம்சமயம் நாட்டினுடைய நிலைமையை நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். பாரத மகன் என்று ஒருவன் இருந்தால் பாரதத்திற்கு என்று ஒரு மொழி தனியாக வேண்டாமா? அது எந்த மொழி? அது தமிழ் மொழியாக இருக்கவேண்டுமா அல்லது இந்தி மொழியாக இருக்க வேண்டுமா? பாரதம் என்ற நாடு இருக்கிறது. பாரத தேசத்தில் நாம் இருக்கவேண்டுமென்று சொன்னால், பாரத மகன் அன்னிய நாட்டில் தலைநிமிர்ந்து பேசவேண்டுமென்று சொன்னால், பாரத நாட்டினுடைய மொழி, உனது பொது மொழி என்ன என்று கேட்டால், ஆங்கிலம் என்று சொல்லுவதற்கு வெட்கமாக இருக்காதா? அந்தப் பொது மொழி இந்தி என்று நாம் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறோம். முன்பு இங்கு இருந்த நிதி அமைச்சர் கொண்டுவந்த தீர்மானத்தைப் பற்றியெல்லாம் பேசினார்கள். அந்தத் தீர்மானம் அமுல் நடத்தப்படவில்லை என்று குறை கூறினார்கள். இந்த மன்றத்தில் நாங்கள் என்ன தீர்மானம் கொண்டு வந்தோம்? ஆங்கிலம் நீடிக்கும் என்று சொன்னோம். ஆங்கிலம் தான் இருக்கும் என்று நாங்கள் சொல்லவில்லை. பிரதம மந்திரி வாக்குறுதி கொடுத்தார்கள். அதையெல்லாம் ஏதோ காற்றில் பறக்கவிட்டுவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். என்ன வாக்குறுதி கொடுத்தார்கள்? ஆங்கிலமும் நீடிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அன்று அரசியல் நிர்ணய சபையில் 15 ஆண்டுகள் வரையில் ஆங்கிலம் இருக்கும். பிறகு இந்தி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதன்படி பார்த்தால் 1965-ம் ஆண்டுக்குப் பிறகு ஆங்கிலம் இருக்க முடியாது





என்று ஏற்படும். ஆங்கிலம் மறுபடியும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தைத் திருத்தியிருக்கிறோம். ஆங்கிலத்திற்கு பாதுகாப்பு கொடுத்திருக்கிறோமா, இல்லையா? அதே நேரத்தில் இந்தி மொழி வளர்ச்சி அடையவேண்டும். வளர்ச்சி அடையும் வரையில், 1965-ம் ஆண்டுக்கு மேலும்கூட ஆங்கில மொழி நீடிக்கும் என்று அரசியல் சட்டத்தைத் திருத்தியிருக்கிறோம். நாம் எதை காற்றில் பறக்கவிட்டிருக்கிறோம்? தமிழ் நாட்டில் இந்தி அரக்கி வருகிறாள் என்றெல்லாம் குழந்தைகளுக்கு பூச்சாண்டி காட்டுவதுபோல், "இந்தி அரக்கி, இந்தி அரக்கி" என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். படித்தவர்கள், உலகம் தெரிந்தவர்கள் இப்படி பேசுவார்களா என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் எந்த விதமான தீர்மானத்தையும் போட்டு ஆங்கிலம்தான் இருக்கவேண்டும் என்று இந்த மன்றத்தில் சொல்லவில்லை. சென்ற ஐந்து ஆண்டுகளிலும் நான் இங்கு அங்கத்தினராக இருக்கிறேன். 1957-ம் ஆண்டிலிருந்து இருக்கிறேன். அதுமாதிரி ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை. ஆங்கிலமும் இருக்கும், இந்தியும் இருக்கும், அதற்காகப் போராடுகிறோம். ஆங்கிலத்தை நீடிப்பதற்கு சட்டத்தைத் திருத்த வேண்டியிருந்தாலும் திருத்தலாம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். திடீரென்று ஆங்கிலத்தை அழித்துவிட்டு இந்தி வந்துவிடுகிறது என்று சொன்னால் அதைத் திருத்துவதற்குக்கூட நாங்கள் முற்படுவோம் என்று சொல்லவில்லையா? நாங்கள் சொன்ன வார்த்தையை எதை காற்றில் பறக்கவிட்டோம்? தாளமுத்து அவர்கள் இந்திப் போராட்டத்தில் செத்துவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆசாரியார் உங்களைக் காலை வாரிவிட்டுவிடுவார். சோஷலிஸ்டு அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள்கூட உங்கள் பக்கத்தில் வருகிறார் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு நான் எச்சரிக்கிறேன். ஆசாரியார் அந்தக் கட்சிக்கு வந்தாலும் காலை வாரிவிட்டு விடுவார்கள். ஆசாரியார் ஒரு காலையும், திரு நல்லசிவம் அவர்கள் ஒரு காலையும், ஆக உங்கள் இரண்டு கால்களையும் வாரிவிட்டுவிடுவார்கள். ஆசாரியார் வந்து உங்களுக்கு உதவி செய்வார் என்று நீங்கள் நினைக்கவே வேண்டாம் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆசாரியார் உறவு செய்து, உங்கள் காலை வாரி விட்டுவிடுவார். நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்துவிடுவார். ஆசாரியார் நிச்சயம் உங்களை அழித்துவிடுவார், அதற்காக உங்களிடம் சேர்ந்துகொண்டிருக்கிறார் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக வரவேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். பதினான்கு மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக வரவேண்டுமென்றால், அந்த வாதத்தை ஒப்புக் கொண்டால் இந்த மாநிலத்தின் நிலை என்ன? மாநிலத் திற்கு வாருங்கள். தமிழ் நாட்டில், தமிழ் மாநிலத்தில் தமிழ் மட்டும்

[திரு. ஜே. மாதா கவுடர்] [8th August 1963

ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று கூக்குரல் போட்டீர்களே? தமிழ் நாட்டில் கன்னடியர்கள் இல்லையா? மலையாளிகள் இல்லையா? தெலுங்கர்கள் இல்லையா? அந்த மொழிகளையெல்லாம் தமிழ் நாட்டில் ஆட்சி மொழிகளாகக் கொண்டுவரவேண்டும் என்று நீங்கள் சொல்லவில்லையே? தமிழ் நாட்டில் தமிழ் மொழிதான் ஆட்சி மொழியாக வரவேண்டும் என்று நீங்கள் சொல்லவில்லையா? மத்திய ஆட்சிக்கு மட்டும் 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக வரவேண்டும் என்று கேட்கிறீர்களே? பாரதத்தில் 14 மொழிகள் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள், அதனால் அங்கே 14 மொழிகளையும் வைத்துவிடவேண்டும் என்று சொல்லுகிறீர்களே? தமிழ் நாட்டில் பல மொழிகள் பேசக்கூடியவர்கள் இல்லையா? ஆகவே, தமிழ் நாட்டில் அந்த மொழிகள் எல்லாம் ஆட்சி மொழிகளாக வரவேண்டும் என்று நீங்கள் என்றைக்காவது சொல்லியிருக்கிறீர்களா? உங்களுக்கு அம்மாதிரி சொல்ல தைரியம் இருக்கிறதா? அப்படிச் செய்தால் தமிழர்கள் உங்களை சும்மா விடுவார்களா? இதையெல்லாம் அரசியல் நோக்கத்திற்காகத்தான் நீங்கள் கொண்டு வருகிறீர்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இமயம் முதல் குமரி வரை தமிழ் இருந்தது, இல்லை என்று சொல்லுவதற்கு இல்லை. தமிழ் பண்பாடு இருந்தது, தமிழ் செல்வாக்கு இருந்தது. இன்றைக்கும் இருக்கிறது. மத்திய சர்க்காரில் இருக்கக்கூடியவர்களில் தமிழர்கள் இருக்கிறார்கள். அங்கு செல்வாக்கை நாங்கள் வைத்திருக்கிறோம். அதைக் குறைத்தது யார்? தமிழ் பகுதி செல்வாக்கை குறைத்தது யார்? திராவிட முன்னேற்றக் கழகம்தான். 4 மாகாணங்கள் போதும் என்று சொல்லி செல்வாக்கைக் குறைத்திருக்கிறது. அப்படி செல்வாக்கைக் குறைத்து குண்டுசட்டியில் குதிரை ஓட்ட நீங்கள் வந்துவிட்டீர்களே அல்லாது, காங்கிரஸ்காரர்கள் வரவில்லையே? இமயம் முதல் கன்னியாகுமரி வரை தமிழர்கள்ஆண்டுதான் இருக்கிறார்கள் என்பதை நான் எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்களாலும் அங்கே போக முடியவில்லை, போகின்றவர்களையும் காலைப் பிடித்து இழுத்தால் என்ன அர்த்தம்?

'பெருந்து நிலையம்" என்று நான் குறிப்பிட்டதை புலவர் எடுத்துச் சொன்னார்கள். பள்ளியிலே படிக்கும் மாணவர்களிடம் "பெருந்து நிலையம், கோட்டப் பொறியாளர் நிலையம்" என்றெல்லாம் சொன்னால், அவர்களுக்குப் புரியுமா? ரஷ்யாவிலும், மற்ற அயல் நாடுகளிலும் மக்கள் சந்திர மண்டலத்தை சுற்றி வருகின்ற நேரத்திலே, கரையான் தின்ற ஓலைச் சுவடிகளைப் பார்த்துக் கொண்டு இருந்தால் எப்படி நாம் முன்னேற முடியும்? விஞ்ஞானத் துறையில் நாம் முன்னேற வேண்டாமா? "கோட்டப் பொறியாளர் நிலையம்" என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? கல்வெட்டுக்களில் இருப்பதையெல்லாம் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தால் போதுமா? அந்நிய நாட்டார்க்குச் சமமாக நாமும் முன்னேற வேண்டாமா? ஆகவே இந்த ஆராய்ச்சியை எல்லாம் விட்டு விட்டு, கரையான் தின்ற ஓலைச் சுவடிகளையெல்லாம் விட்டு விட்டு, நாம் முன்னேற்றப்



8th August 1963] [திரு. ஜே. மாதா கவுடர்]

பாதையில் செல்வதற்கு இந்தத் தீர்மானம் அவசியமில்லை, ஆகவே இதை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு—தீர்மானத்தைக் கொண்டு வந்த திரு. மதியழகன் அவர்கள் இப்பொழுது இங்கே இல்லை, அதை வாபஸ் வாங்குவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது—என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. மு. கருணாநிதி: அன்புமிக்க சட்டமன்றத் துணைத் தலைவா அவர்களே, எங்களுடைய கட்சியின் செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் இந்த மாமன்றத்தில் வைத்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறைந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்களை இங்கே கூறுவதற்கு நான் விழைகிறேன். நாங்கள் மொழிப் பிரச்சனையைப் பற்றி பேசுகிற நேரத்திலும், தமிழ் மொழிக்கு நாங்கள் காட்டுகிற அன்பையும், மரியாதையையும் செலுத்துகின்ற வேளையிலும், தமிழ் அன்னையின்பால் நாங்கள் செலுத்துகிற நன்றி உணர்ச்சியை விளக்குகின்ற நேரத்திலும், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு, அவர்களையும் அறியாமல் உத்வேகத்தில் அவர்களையும் மறந்து, தமிழையும், தமிழ் அன்னையையும், தமிழ் அன்னை நமக்குத் தந்திருக்கிற பல்வேறு இலக்கியங்களையும், காப்பியங்களையும் இழித்துக் கூறுகிற அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதை எண்ணி எண்ணி நான் மனம் உடைந்துள்ளேன். நேற்றைய தினம் புலவர் படிப்புப் படித்த அம்மையார் திருமதி குழந்தையம்மாள்கூட சேரர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும், சோழர் காலத்திலும் நிலையற்ற ஆட்சி இருந்தது, அவர்கள் மண்ணுக்கும், பெண்ணுக்கும், பொன்னுக்கும் போராடினவர்கள் அல்லவா, அப்படிப்பட்ட கொடிய மிருகத்தனமான ஆட்சியா நமக்கு வேண்டும் என்று கேட்டு, அவர்கள் பேச்சைத் துவக்கினார்கள். நான் இன்று காலை சர்க்கார் அங்கீகாரம் பெற்ற ஒரு பள்ளிக்கூடப் புத்தகத்தைப் படித்தேன். அண்மையில் எழுதப்பட்டது. அதிலே ஒரு அழகான குறிப்பு என்னுடைய உள்ளத்தைத் தொட்டது. அதிலே ஒரு இடத்திலே பொற்கைப் பாண்டியனின் நீதி நெறியைக் கண்டு மக்கள் அவனைப் போற்றினார்கள், இயற்கைக் கையைத் துண்டித்துக் கொண்ட பாண்டியன் பொன்னால் கை செய்து வைத்துக் கொண்டான், அதனால் அம்மன்னன் பொற்கைப் பாண்டியன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான் என்றும், இன்னொரு இடத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பெரும் புகழ் பெற்று விளங்கினார்கள் என்றும் அந்த மன்னர்கள் வழி வந்த பேகன் வீரம் மிகுந்த மன்னனாக விளங்கினான் என்றும், அவன் சிறந்த படைகளைப் பெற்று வீரத்திற் சிறந்தவன் என்றும், மயிலுக்குப் போர்வைப் போர்த்தினான் என்ற சம்பவத்தைக் குறிப்பிட்டு, அவன் ஈகையிலும் சிறந்து விளங்கினான், புலவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் அளவற்ற செல்வத்தை வாரி வழங்கும் பண்பு படைத்தவன் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. இதை யார் எழுதினார்கள்

என்றால், நேற்றைய தினம் சேரன் காலமும், பாண்டிய மன்னன் காலமும், சோழ மன்னன் காலமும் மிருகத்தனமான காலம் என்று சொன்ன அதே குழந்தை அம்மாள் தான் இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தின் பெயர் "திராவிட மணி மலர்". அம்மையார் அவர்கள் இதைப் படித்துப் பார்த்தால், முன்னுக்குப் பின் முரணான வாசகங்களை எடுத்துக் கூறுகிறார்கள் என்பதை அவர்களே உணர முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், நண்பர் மதியழகன் தந்திருக்கிற தீர்மானத்தின் அடிப்படைக் கருத்தை அவர் முன் மொழிந்த நேரத்திலும், அதை ஒட்டி பின்னர் பேசிய நண்பர்களும், அந்தத் தீர்மானத்தை ஆதரித்து நல்ல விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். மொழிப் போராட்டம் தமிழகத்திலே 1938-ம் ஆண்டு தொடங்கியது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இந்த மாமன்றத்திலே அமைச்சராக வீற்றிருந்த காலை, கட்டாய இந்தியை தமிழ் சிறார்கள் மீது திணித்த காலத்திலே அதனை எதிர்த்து 1,300 பேர்கள் சிறைச்சாலைக்குச் செல்லவும், நான் இல்லையென்றால் காங்கிரஸ்காரர்கள் ஜெயிக்க முடியாது என்று வெற்றிக் களிப்படையும் பெரியார் ராமசாமி அன்றையதினம் இந்தியை எதிர்த்து பெல்லாரிச் சிறைச்சாலைக்குச் செல்லவும், கருக்கொண்ட தாய்மார்கள் காராக்கிருகங்களில் அடைபடவும், இரு இளம் வாலிபர்கள் பிணமாக தள்ளப்படவும் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதற்குப் பிறகு கட்டாய இந்தி திரும்பப் பெறப் பட்டது. அதனைத் தொடர்ந்து 1948-ல் கல்வி அமைச்சராக திரு. அவினாசிலிங்கனார் வீற்றிருந்த காலை மீண்டும் கட்டாய இந்தி திணிக்கப்பட்டு, அதனை எதிர்த்து தமிழகம் போர்க் கோலம் பூண்டதும், மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள், நாவலர் சோமசுந்திர பாரதி, உமாமகேஸ்வரன் பிள்ளை, இவர்கள் ஈடுபட்டு நாட்டிற்கு ஒரு பொது மொழி தேவை யென்றால் அது ஆங்கிலமாக இருக்கட்டும் என்று அப்படிப்பட்ட சான்றோர்கள்கூட தங்களுடைய பொன் மொழிகளை தந்திருக்கிறார்கள். அதன் பின்னர், 1950-ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபைக் கூடி, இந்தியாவின் ஆட்சி மொழியாக எதை அமைத்துக் கொள்வது என்ற எண்ணம் எழுந்த காலை, ஆங்கிலேயர்கள் வெளியேற இருந்த நேரத்திலே ஆங்கில மொழியின் மீது அப்பொழுது ஏற்பட்டிருந்த வெறுப்பின் காரணமாக "அவசரக்கோலம் அள்ளித் தெளி" என்பது போல, இந்தி தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும், பதினைந்து ஆண்டுக் காலத்திற்கு ஆங்கிலம் இருக்கலாம், அதற்குப் பிறகு அந்த இடத்தை இந்தி மொழி ஆக்கிரமித்துக்கொள்ள வேண்டும் என்று அரசியல் சட்டத்தை வகுத்தார்கள். அதுகண்டு தமிழகம் கொந்தளிப்பு அடைந்த நேரத்தில் மொழிப் பிரச்னைப்பற்றி ஏற்படுகின்ற குழப்பங்களைத் தீர்ப்பதற்காக பாராளு மன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிலே காலம் சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்களும், வங்கத்





தைச் சேர்ந்த சுநீத் குமார் சாட்டர்ஜி அவர்களும் இருந்தார்கள். அந்தக் குழுவின் அபிப்பிராயங்களைக்கூட எதிர்த்து அவர்கள் தங்களுடைய மறுப்புரைகளை எழுதி உள்ளார்கள். காலம் சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்கள் நம்முடைய மரியாதைக்குரியவர்கள். சுநீத்குமார் சாட்டர்ஜி வங்கத்துப் பெரியார். அவர்கள் மறுப்புக் குறிப்பு எழுதும்பொழுது ஒன்றை வெளியிட்டார்கள். மொழியைப் பொறுத்த வரையில் இந்த அரசியல் அமைப்புப் பிரிவையே மாற்றி அமைக்க வேண்டும் என்று மாநில சர்க்காரிடமிருந்து தமக்கு ஒரு கடிதம் வந்திருப்பதாக டாக்டர் சுப்பராயன் அந்தக் குறிப்பிலே கூறியிருக்கிறார். இதைத் தொடர்ந்துதான் மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்கள் ஒரு வாக்குறுதி தந்தார்கள். "இந்தி விரும்பாத மக்கள் மீது இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது" என்ற வாக்குறுதியைத் தந்தார்கள். இது திருப்தி அளிக்காததால், 1956-ம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 28-ம் நாள், சென்னை நகரத்தில், திரு. ராஜகோபாலாச்சாரியார், பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், திரு. பி. டி. ராஜன், ராஜா முத்தையா செட்டியார், திரு. ம. பொ. சிவஞானம், திரு. விஸ்வநாதன், ரா. பி. சேதுப் பிள்ளை, மு. வரதராசனார், தியாகராஜ முதலியார் ஆகியவர்கள் அடங்கிய குழு, "இந்த நாட்டுக்கு ஆட்சி மொழி ஆங்கிலமாகவே இருக்கட்டும், இந்தி தேவையில்லை" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்திற்குப் பிறகு, 1959-ம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், நாலாம் நாள், பாராளு மன்றத்திலே, இந்திய பிரதமர் நேரு இன்னொரு அழுத்தம் திருத்தமான வாக்குறுதியை, 12-30 p.m.
நம்பிக்கைக்கு பொருத்தமான வகையில், தந்தார்கள்: "1965-க்குப் பிறகும் ஆங்கிலம் கூட்டு ஆட்சி மொழியாக Associate Official Language ) இருக்கும். எவ்வளவு காலம் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்பதை இந்தி தெரியாத மக்களே தீர்மானிக்க வேண்டும்" என்று வாக்குறுதி அளித்தார்கள். ஆனாலும் அந்த உறுதி பட்டுப்போய் விடுமோ என்ற அச்சமும் இருந்தது. 1960-ம் ஆண்டு இந்திய ஜனாதிபதி, மறைந்த டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள், மாநில சர்க்கார்களுக்கு ஒரு தாக்கீதினைக் கொடுத்திருந்தார். தாக்கீதில் குறிப்பிட்டிருந்தது என்ன? "1965-க்குப் பிறகு இந்தி ஆட்சி மொழியாக, அதிக வேகமாக இந்தி பிரசாரம் நடைபெற்றாக வேண்டும்" என்பதுதான். அதைக் கண்டு தமிழகம் கொதிப்படைந்தது. நான் சேர்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் போர்க் கொடி உயர்த்தி, தாக்கீது அனுப்பிய டாக்டர் பிரசாத் தமிழகத்தில் ஆகஸ்ட் 15-ம் நாள் உலா வரும்பொழுது, கருங்கொடி காட்டுவது என்று தீர்மானம் எடுத்தது. இதற்கிடையில் பிரசாத் ஹைதராபாத்தில், இந்தி பிரசார கூட்டத்தில் குறிப்பிட்டார்: "எதிர்காலத்தில் மொழிக் கொள்கை விவாதிக்கப் படும்போதும், பரிசீலிக்கப்படும் போதும், இந்தி பேசாத மக்களின் உணர்ச்சிகளையும், கஷ்டங்களையும் நாங்கள் மனதில் கொள்வோம், அசட்டை செய்ய மாட்டோம் என்று உறுதி கூறுகிறேன்" என்று, ஆகஸ்ட் திங்கள் மூன்றாம் நாள் வெளியிட்டார்கள். இந்த உறுதிமொழி பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் பாராளுமன்றத்

திலே, ப்ராங்க் அந்தோணி அவர்கள் கேட்டார், தலைமை அமைச்சர் நேரு கொடுத்த வாக்குறுதி குடியரசுத் தலைவரின் உத்தரவில் இருக்கிறதா என்று. அதற்கு மறைந்த மாவீரர் கோவிந்தபல்லப் பந்த் அவர்கள், "பிரதமர் வாக்குறுதியிலிருந்து மாறுபடும் எண்ணம் சிறிதும் இல்லை. அந்த உறுதி மொழிகளுக்கேற்பவே அரசின் நடவடிக்கைகளும் இருக்கும் என்று குடியரசுத் தலைவரின் உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது" என்று பதிலுரைத்தார்கள். அதைத் தொடர்ந்து, பத்திரிகை நிருபர்களுக்கு மதிப்பிற்குரிய, முன்னாள் நிதி அமைச்சர், திரு. சுப்ரமணியம் அவர்கள் அளித்த பேட்டியில், நிருபர்களிடம், "இப்போது ஆங்கிலம் இருந்து வருகிறது. 1965-க்குப் பிறகு ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி வரவேண்டும் என்று இருந்தது. இங்குள்ள கட்சித் தலைவர்களைக் கலந்து கொண்டு 1965-ம் ஆண்டு வரைதான் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்ற தேதி நிர்ணயம் போக வேண்டும். அதற்குப் பிறகும் ஆங்கிலம் நீடித்து இருக்க வேண்டும் என்பதுடன் தேதி நிர்ணயமின்றி இந்திய சர்க்காரில் இரு மொழிகளும் இருக்க வேண்டும் என்று நாம் சொன்னோம். கௌஹாத்தி காங்கிரசில் அதை நான் வற்புறுத்தினேன். இந்தக் கருத்தை மத்திய அரசும், பிரதமரும், பார்லிமென்டரி கமிட்டியிலுள்ள அங்கத்தினர் அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்" என்று தெரிவித்திருக்கிறார்கள்.

இவைகளுக்கு எல்லாம் பிறகு, இந்திய மண்ணை கம்யூனிஸ்ட் சீன வெறியர்கள் ஆக்ரமித்த நேரத்தில், பண்டித நேரு அவர்கள் தான் கொடுத்த உறுதி மொழிகள் போதாது என்றோ என்னவோ, ஒரு விளம்பரத்தை, இந்தி பேசாத மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் எல்லா ஏடுகளுக்கும், என்ன காரணத்தாலோ என்னவோ, இது வரை எதிர்க் கட்சி ஏடுகளுக்கு பணம் தந்து அந்த விளம்பரத்தையும் அளிக்காதவர்கள், இந்த விளம்பரத்தை எதிர்க்கட்சி ஏடுகளுக்கும் தந்து இருக்கிறார்கள். ஆட்சி மொழி சட்டத்தின் கீழ் என்ன ஆகிறது? பண்டித நேரு அவர்களே தெரிவித்திருக்கிறார்கள், நான் கொடுத்த உறுதி மொழிகள் இந்த சட்டத்திலே இணைக்கப் படமுடியவில்லை என்று. ஆனாலும், நம் அமைச்சரவர்கள், கடற்கரைக் கூட்டத்தில், "இந்த சட்டம் இல்லாவிட்டால் இந்தி அல்லவா ஆட்சி மொழியாகி விடும்; ஆங்கிலத்தை நீடிக்கச் செய்யவே இந்த சட்டத்தை பாராளுமன்றத்திலே செய்திருக்கிறார்கள்" என்று கூறி இருக்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால், சந்தேகம் தீருவதற்காகக் கேட்க விரும்புகிறேன். இதுவரையிலும் ஆங்கிலம் தான் காரியாம்சத்தில் ஆட்சி மொழியாக இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது இந்தி இருக்கலாம் என்று இருப்பதால், இதுவரை இருந்த தன்மை தொடர்ந்து ஆங்கிலத்திற்கு நீடிக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன். அந்த நிலை இருக்கிறதா? இல்லை. இந்தி தான் ஆட்சி மொழியாக இருக்கும்; உபகரணமாக, உதவியாக ஆங்கிலம் இருக்கலாம் என்பதுதான் இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு ஆங்கிலம் போய் இருக்கிறது.



என்பதைப் பற்றிப் பேசும் நேரத்தில், ஆளும் கட்சி உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆங்கிலத்தின் மேல் மோகம் ஏற்பட்டிருக்கிறது என்கிறார்கள். குறிப்பாக, திரு. செல்வராஜ் அவர்கள், ஆங்கிலம் கற்பது கடினம், இந்தி கற்பது சுலபம், அதனால்தான் ஆங்கிலத்தை விட இந்தி வெகு வேகமாக பரவுகிறது என்று சொல்லுகிறார்கள். கனம் நிதி அமைச்சரே அதை மறுக்கிறார்கள். நிதி அமைச்சர் "பயிற்சி மொழிப் பிரச்சினை," என்ற நூலில் "பல மொழிகள் பேசப்படுகின்ற நம் நாட்டில், மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்படுள்ள இந்தி மொழியைத் தென்னிந்தியாவில் உள்ளவர்கள் பல வருஷங்களாகக் கற்றுக் கொண்டு வந்திருந்தாலும், இன்று கூட அந்த மொழியை நம்மால் சரியாகக் கையாளமுடியவில்லை. அதற்குப் பதிலாக ஆங்கிலத்தைத்தான் நாம் பயன் படுத்திக் கொள்ள முடியும். வேறு வழி எதுவும் கிடையாது. தேச ஒற்றுமையிலும், ஒன்று பட்ட முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட எல்லா அறிஞர்களும் இதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அந்த நூலில் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு இணைந்து நிதி அமைச்சர் சொல்லுகிறார்கள், "இந்தி மொழியின் உற்சாகிகளுக்கு ஆங்கிலத்தின் மீது அறியாமையினால் ஏற்பட்ட வெறுப்பினால் போர் தொடுக்கிறார்கள் என்றால், நம்மிலே சிலரும் அவர்களுடன் சேர்ந்து கொள்வது விவேகம் அல்ல" என்று.

நேற்றையதினம் கனம் நிதி அமைச்சர், கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் உபதேசம் செய்த யோசனையைக் கேளுங்கள் என்று எங்களுக்குச் சொன்னார்கள். நேற்று இரவெல்லாம், "கேட்கலாமா, கேட்கலாமா" என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன், ஏதோ ஒரு குறிப்பைப் பார்க்கப் போன சமயத்தில், இந்த நூலில் நிதி அமைச்சரவர்களே சொல்கிறார்கள், கம்யூனிஸ்ட்கள் ஆபத்தானவர்கள் என்று. "கம்யூனிஸ்ட் கட்சியினரின் நாட்டுப் பற்றை நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருக்கிறோம். அவர்களுக்கு மொழிப் பற்றும் கிடையாது. நாட்டுப் பற்றும் கிடையாது" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது கேட்கிறேன்; நிதி மந்திரியாரே! நிதி மந்திரியாரே! அப்படிப்பட்டவர்களின் யோசனையையா எங்களைக் கேட்கச் சொல்கிறீர்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவர்களுக்கு ஆசியல் அறிவு அதிகமாக உண்டு என்பதற்காகச் சொன்னேன்.

**திரு. மு. கருணாநிதி:** அது இல்லாத காரணத்தினாலோ என்னவோ அப்படிச் சொல்லியிருக்கிறீர்கள்! அல்லது கம்யூனிஸ்டுகளைப் பற்றி எழுதி இருக்கிறீர்கள்.

மொழிச் சட்டம் பற்றிய இந்த நிலை 1975-ம் ஆண்டு மேலும் புனராலோசனை செய்யப்படும். பாராளுமன்றத்திலும் மாநிலங்கள் அமையிலும் இருந்து 30 பேர்கள் கொண்ட ஒரு குழு மறுபடி

யும் மொழியைப் பற்றி கூடி உட்கார்ந்து பிரச்சினைகளை ஆராய்ந்து, புனராலோசனை செய்யும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேரு போன்ற ஜனநாயக வாதிகளும், நல்ல நீதிமான்களும் இருக்கிற இந்த நேரத்திலேயே பெற வேண்டிய நீதியைப் பெறவில்லையென்றால், 1975-ம் ஆண்டுக்குப் பிறகும் நேரு அவர்கள் வாழட்டும், வாழவேண்டும் என்று வேண்டுகிறேன். ஒருவேளை இயற்கை கொடுமை செய்து விட்டால் நான் மிக உருக்கத்தோடு, தமிழ்த்தாயின் மீது உள்ள அக்கறை காரணமாக, நம் நாட்டின் மீது வைத்திருக்கிற விஸ்வாசம் காரணமாகக் கேட்கிறேன். இப்போதே பண்டித நேரு அவர்களால் இந்தி வெறியர்களின் கூச்சல் காரணமாக தன்னுடைய வாக்கையே காப்பாற்ற முடியவில்லையானால், அவருக்குப் பிறகு நாதி யார்? 1975-ல் இதை விட இந்தி வெறியர்கள் அதிகமாகி, இன்னும் அவர்கள் பலம் பெற்று, வலிவு பெற்று, மூர்க்கத்தனமாக அந்த வெறியர்கள் ஒரு தீர்மானத்தை நிறை வேற்றுவார்களானால் இந்த நாட்டுக்கு நாதி யார்? நம் அமைச்சர் அவர்கள் அந்தக் குழு எல்லோரையும் கலந்து தான் எந்த முடிவினையும் எடுக்கும் என்று சொல்லக் கூடும். ஒருமைப்பாட்டுக் குழு ஏன் எங்களை அழைத்துக் கேட்கவில்லை என்று நேற்று கேட்டேன். அதற்கு நிதி அமைச்சர் அவர்கள், சூதாட்டத்தைக் தடுக்கிற சட்டம் கொண்டுவரும்போது சூதாடிகளைக் கேட்டுக்கொண்டு செய்வதா, விபசாரத்தை ஒழிப்பதற்காகச் சட்டம் கொண்டு வரும்போது விபசாரிகளைக் கேட்டுத் தான் செய்வதா என்று கேட்டார்கள். ஆனால் செய்தி பார்த்தேன், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களே விபசாரத் தடையினால் பாதிக்கப்பட்ட விபசாரிகளை பேட்டி கண்டார் என்று நானும் படித்திருக்கிறேன். ஒருவேளை பண்டிதருக்கு உள்ள பெருந்தன்மை நம் மாநிலத்தில் உள்ள மந்திரிகளுக்கு இல்லையோ என்னவோ . . . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பெருந்தன்மை பற்றியது அல்ல. அது வேறு விஷயம். வேறு ஒன்றும் சரியான உதாரணம் இல்லாததால் அதை விளக்குகிற முறையில் தான் சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி: அப்படியா? அந்தோ தமிழே! உன் மீது அனுதாபப்படுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விபசாரத்தடைச் சட்டம் பற்றி அவர்களைக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்று எதிர் கட்சி உதவித் தலைவர் சொன்னால் நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு வேறு யாரையும் இழுக்க வேண்டியதில்லை. நேரு அவர்களையும் இழுக்க வேண்டியதில்லை.

திரு. மு. கருணாநிதி: நான் அவர்களைக் கேட்டுத் தான் ஆக வேண்டும் என்றால் கேட்கத் தயாராக இருக்கிறேன் என்று நம் நிதி அமைச்சர் கூறுகிறார். யாரைக் கேட்டுத் தான் ஆகவேண்டும் என்று அவர்கள் விளக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களை நிச்சயமாகக் கேட்கத் தான் வேண்டும். அதை விட வேறு உதாரணம் தெரியவில்லை என்று சொல்லும்போது, உள்ளபடியே தமிழின் மீது அனுதாபம் காட்ட வேண்டுமே தவிர வேறு இல்லை.





நல்ல அருமையான முதிர்ந்த உதாரணங்களை அமைச்சரிடத்தில் எதிர்பார்த்தேன். மற்றவர்கள் அவரிடமிருந்து கற்றுக்கொண்டு நடந்து கொள்ளக் கூடிய முறையில் இந்தச் சபையை நடத்திச் செல்ல வேண்டியவர் இப்படிப்பட்ட உதாரணத்தைக் கையாண்டார் என்பது உள்ளபடியே என் மனத்தை உறுத்தியது. அப்படிப்பட்டவர்களைத் தான் அமைச்சர்கள் சந்திப்பார்கள் என்றால் சந்திக்கட்டும். அதைப் பற்றிக் கவலை இல்லை. அமைச்சர் அவர்கள் கட்சிக் கூட்டத்தில் பேசிய பேச்சு ஒன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி புத்தகத்தில் வெளி வந்திருக்கிறது. 'காமராஜ் இங்கே அமைச்சராக இருக்கிற வரையில் எந்த விதமான ஆபத்தும் வராது, ஆகவே ஹிந்தி ஆதிக்கம் பற்றி கவலை வேண்டாம்' என்று பேசியிருக்கிறார். இதைத் தெரிந்துதானோ என்னவோ ஹிந்தி வெறியர்கள் காமராஜரை இங்கே இருந்தால் எங்கே ஒரு வேளை தங்களுடைய முயற்சிக்குத் தடை ஏற்படுமோ என்று அங்கே இழுக்கப் பார்க்கிறார்கள் போலும்! ஒரு வேளை அப்படிப் போய் விட்டால் அந்த இடத்தை அலங்கரிக்க எல்லாத் தகுதிகளையும் பெற்றுப், பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கக் கூடிய அமைச்சர், பக்தவத்சலம் அவர்கள் என்று கூறப்படுகிறது. காமராஜர் எப்படி தமிழைக் காக்க, ஹிந்தியை ஒழிக்கப் பாடுபடுவார் என்று கனம் அமைச்சர் பக்தவத்சலம் நம்புகிறாரோ, அதில் பாதியாவது பக்தவத்சலம் பாடுபடுவார் என்று நம்பிக்கை ஏற்படத் தக்க விதத்தில் கனம் மதியழகன் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆளும் கட்சியில் இருக்கிற அத்தனை பேரும் ஏற்றுக்கொண்டு, ஒரு முகமாக அங்கதே அனுப்பி வைத்து நம் மொழியைக் காப்பாற்ற, நம் வருங்கால உரிமைகளைக் காப்பாற்ற, தமிழகம் இருள் அடைந்து போகாமல் ஒளி பெற்றுத் திகழ அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சா. கணேசன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நம் முன்னே கொண்டுவரப் பெற்று இருக்கிற கனம் உறுப்பினர் மதியழகன் அவர்களின் தீர்மானம் நன்கு சிந்திக்கப்படவேண்டிய ஒன்று. எப்போதுமே நான் சொல்வதுண்டு; சபையின் முதல்வர் அவர்களும் அதைப் பாராட்டி ஏற்றுக்கொண்டதும் உண்டு. மொழி சம்பந்தப்பட்ட வரையிலே மோகமோ, வெறியோ கூடாது. அதைப் போலத்தான் உதாசீனமும் கூடாது. நடு நிலையில் நின்று எது சரி, எப்படிச் செய்வது நன்மை பயக்கும் என்பதை நன்றாக, தீர்க்கமாக ஆய்ந்து, அதன் வழியிலே முடிவு எடுப்பதுதான் பயன் தரத் தக்கது. நன்மைத் தரத் தக்கது: அதுவும் ஆட்சி நெறியிலே மொழி என்று வருகிறபோது எல்லோருமே கொஞ்சம் குழப்பத்தை உண்டாக்குகிறோம் என்று சொன்னால் யாரும் என்னை கோபித்துக் கொள்ளக் கூடாது. தாய் மொழி என்பது ஒரு பகுதி; பொது மொழி என்பது மற்றொரு பகுதி; ஆட்சி மொழி என்பது வேறொரு பகுதி. இந்த மூன்றுக்கும் உள்ள முக்கியமான, அடிப்படையான, வேறுபாட்டை நாம் நன்றாக மனத்திலே கொண்டுவிட வேண்டும். தாய் மொழி பற்றிய 12-40 p.m.

அளவிலே யாருக்கும் எவ்விதமான வரையறை வேறுபாடுகளும் மனத்திலே தோன்றுது. பொது மொழியையும் ஆட்சி மொழியையும் போட்டு ஒரு குழப்பம் செய்வது இயல்பாகப் போய் விட்டது. ஹிந்துஸ்தானியைப் பொறுத்த வரையிலே அதைப் பொது மொழி என்று சொன்னுல் என்னைப் பொறுத்தவரையில் துளியும் ஆட்சேபணை இல்லை. ஆட்சி மொழி என்பதற்கு எண்ணிக்கை மட்டும் பிரதானம் இல்லை என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும். பேசுகிற போது சில கனம் உறுப்பினர்களில் ஒருவர் சொன்னதைக்கேட்ட கனம் அமைச்சர் இவர் சொல்வதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா என்று என்னிடம் கேட்டார்கள். மற்றவர்கள் மனதைப் புண்படுத்துதல் நல்லதல்ல. அதைவிட ஒரு மொழியினரைப் புண்படுத்துவது முற்றிலும் தவறு. அது பாபம், அதைவிட கடினமான வார்த்தை சொல்ல என்னுல் முடியாது. "கறையான் தின்ற ஓலைச்சுவடிகளை விட்டு விட்டு, விஞ்ஞானத்தில் வளர்ந்து வரும்படி" இங்கு அந்த கனம் உறுப்பினர் யோசனை கூறினர்கள். இங்கே ஒன்றை மறந்து விடப்பட்டது. பழமை இல்லாமல் புதுமை அரும்பாது. பழமையின் அடிப்படையில் தான், உரத்தில்தான் புதுமை வளர வேண்டும். கீழ்ப் பகுதியே வேண்டாம், மூன்றுவது, நான்காவது அல்லது ஐந்தாவது மாடி தான் வேண்டும் என்று சொல்லுகிறவர்களுக்கு வணக்கம். அவ்வளவு தான் கூறமுடியும்; தரையில் அடிமனையைக் கட்டிய பிறகு தான் மாடிக்குச் செல்ல முடியும்; செல்லலாம். இதை மனத்தில் கொள்ளவேண்டும். தனக்கு இருக்கிற ஆர்வத்தில் சொன்னுரென்றுல் அப்படியே விட்டு விடலாம். அப்படிச் சொன்னபோதே என்ன பலன் என்று யோசித்தாரா என்று நான் புரிந்து கொள்ள முடியவில்லை. கறையான் தின்ற ஓலைச்சுவடிகளை விட்டு விட்டு விஞ்ஞானத்தில் வளர்ந்து வரவேண்டுமென்றுல் கறையான் எது. ஓலைச்சுவடி கூட இல்லாத ஒரு மொழி ஆட்சி மொழியாக வேண்டுமென்று சொல்லும்போது விஞ்ஞானத்தில் வளர்ந்து வருகிற ஆங்கிலத்தை விட்டு விடவேண்டுமென்று எப்படிக் கருதினுர் என்பது தான் புரியவில்லை. நான் ஒரு மொழிக்கும் விரோதி அல்ல. ஹிந்தி மொழி கூடாது என்று கூறுகிறவன் அல்ல. ஹிந்தி மொழியின் முக்கியத்துவத்தை உணருகிறேன். ஆனுல் அதே நேரத்தில் ஹிந்தி மொழியின் தகுதியையும் உணருகிறேன். முக்கியத்துவம் வேறு, தகுதி வேறு. இதை மறந்து விடப்படாது. முதலில் இந்தி என்றுதான் ஆரம்பமாகியது. இந்தி பிரசார சபா ஆரம்பித்த காலத்தில் அதிலே பணி செய்யும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. பிறகு ஹிந்து-முஸ்லீம் பிணக்கு உண்டாகிய காரணத்தினுல், ஹிந்தி, உருது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். பின்னுல் வட நாட்டில் பெரும்பாலான அளவில் பேசப்படுகிற காரணத்தினுல் பெர்ஷிய மொழிக் கலப்புடன் அரபு லிபியில் எழுதப்பட்ட உருது மொழி அதையும், சமஸ்கிருதம், பிராக்ருதம், எல்லாவற்றையும் சேர்த்து ஹிந்துஸ்தானி என்று பெயர் வைத்தார் காந்தியடிகள். அதைக் கூட ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள் இந்தி வெறியர்கள். முதலில் 'பஹலி கிதாப்' என்று இருந்தது. இப்போது கிதாப் என்பதைத் தூக்கி விட்டு 'புஸ்தக்' என்று போட்டிருக்கிறுர்கள். 'கிதாப்' என்பது உருது



மொழியில் 'நூல்' என்பதற்குரிய சொல். 'புஸ்தக்' என்று போட்டிருக்கிறுர்கள், இப்படிப் பல உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போக முடியும். ஆனுல், நேரம் இல்லை. ஆகவே, இந்த மாதிரி வெறி, மொழி விஷயத்தில் இருக்கக் கூடாது என்பதை மட்டும் வற்புறுத்துகிறேன். ஹிந்துஸ்தானி என்பதைப் பொது மொழியாக வைத்துக் கொள்ளலாம் என்று ஏன் விரும்பினேம்? பேசும் பல மொழிகளுக்குள்ளே பேசுபவர்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தைக் கருத்தில் கொண்டு, அந்த மொழி தேசத்திற்குப் பொது மொழியாக இருக்கலாம் என்று ஏற்றுக் கொண்டோம்.

எண்ணிக்கை (ஃபிகர்ஸ்) ஆகிய "1, 2, 3" போன்றவை இந்தியாவில் வழக்கத்தில் இருந்து வருகின்றன. அவை 'இந்தியன் 'ஃபிகர்ஸ்'- தான். இவை அரேபியா மூலமாக மேலை நாடுகளுக்குச் சென்றதால், இவற்றுக்குப் பெயர் 'அராபிய எண்' என்று வந்துவிட்டது. கர்நாடக சங்கீதம் என்று எப்படி வழங்கப்படுகிறதோ அது மாதிரி. தமிழ்நாட்டு இசை கர்நாடகம் வழியாக மற்றப் பகுதிகளுக்குப் போனதால் அந்த இசைக்குக் கர்நாடக இசை என்ற பெயர் வந்ததே தவிர, கர்நாடகத்திலே மட்டும் தோன்றி வளர்ந்த இசை அல்ல. மலையாளத்திற்கு மெட்ராஸிலிருந்து யாராவது ஒரு பெண் வந்தால், "பாண்டிச்சி வந்தது" என்று சொல்வார்கள். அப்படிப் பெயர் கொடுப்பது மரபு. 1, 2, 3 ஆகிய எண்கள் 'ஸயண்டிஃபிக்' ஆக அமைந்தவை. இந்திய வரிவடிவ அடிப்படையில் வந்திருக்கின்றன என்பதற்கான காரணங்கள் பழங்காலக் கல்வெட்டுகளிலிருந்து தெரியும். 1, 2, 3, ஆகியவற்றிலுள்ள கோடு ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பொருள் இருக்கிறது. இந்த எண்களை தேவநாகரி லிபி எண்களாக மாற்ற வேண்டும் என்ற பிரச்சினை வந்தபோது நான் அதிருஷ்டவசமாக அங்கே இருந்தேன். டாக்டர் சுப்பராயன் அவர்களைப் பார்த்து, கண்டிப்பாக எதிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர் எதிர்த்துக்கொண்டே இருந்தார். இப்பொழுது அரசியலமைப்பில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது? 'அராபிய எண்ணும் இருக்கலாம்' என்று இருக்கிறது. பெரும்பான்மைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, மிகப் பெரும்பான்மையினரால் அறியப்படுகிற அராபிய எண் என்று வழங்கப்படுவதற்கு இரண்டாவது இடம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது, அரசியலமைப்பிலே. (கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படியல்ல.) நான் நன்றுகப் பார்த்துவிட்டு வருகிறேன். இப்பொழுது வேண்டுமானுலும் பாருங்கள். "தேவநாகரி லிபியில் எண்ணும் எழுத்தும் இருக்கும். எண் அராபி லிபியிலும் இருக்கலாம்" என்று இருக்கிறது. (கனம் திரு. எம். பக்தவத்சலம் குறுக்கீடு) நான் தவறுக இருந்தாலும் கவலை இல்லை. ஆனுல், இப்படி ஒரு வெறி கொண்ட நிலை இருக்குமானுல், தேசிய ஒருமைப்பாட்டை எங்கே காண முடியும்? அரசியல் மொழி, அல்லது ஆட்சி மொழி, என்பதற்கு அந்த மொழியைப் பேசுபவர்களின் எண்ணிக்கை மட்டும் பிரதானம் இல்லை. தகுதி பிரதானம் ஆகும். தகுதி இல்லாமல் எண்ணிக்கையினுல் மட்டுமே [illegible]

நடக்காது. ஹிந்தி மொழி உலகம் தோன்றிய காலந்தொட்டு இதுவரையில் எங்காவது, எப்பொழுதாவது ஆட்சி மொழியாக இருந்திருக்கிறதா? எந்தக் கலை நூலையாவது பெற்றிருக்கிறதா? கேவலம், சாதாரண இலக்கியத்தையாவது அந்த மொழி பெற்றிருக்கிறதா? (கனம் அங்கத்தினர் ஸ்ரீ கிருஷ்ணசாமி நாயுடு: குறுக்கீடு) 'கேவலம்' என்ற சொல்லுக்கு 'ஒப்பற்ற' என்கிற பொருளும் இருக்கிறது. காப்பிய நூல் எது இருக்கிறது? என்று சொல்லட்டும். (கனம் அங்கத்தினர் ஸ்ரீ கிருஷ்ணசாமி நாயுடு: துளசிதாஸ் இராமாயணம்) இப்படிச் சொல்வார்கள் என்று தெரியும். அது உண்மையல்ல. அது அவதி மொழியில் எழுதப்பட்டது. நான் இராமாயணத்தில் மிகவும் ஈடுபாடுடையவன். துளசிதாஸ் இராமாயணம் அவதி மொழியில் எழுதப்பட்டது. **Oudh** என்கிற இடத்தில் வழங்கப்பட்ட மொழியின் பெயர் அவதி மொழி. மிதிலையில் வழங்கப்பட்ட மொழியின் பெயர் 'மைதிலி' என்பதாகும். ஹிந்தியிலே ஒன்றும் இல்லை என்று சொல்லிவிடுவார்களே என்பதற்காக அவதி மொழியில் துளசிதாஸ் இயற்றிய ராமாயணத்திலுள்ள எல்லாச் சொற்களையும் 'ஹிந்தி ஸப்த கோஷ்' என்பதில் சேர்த்துக் கொண்டு, இவற்றையும் ஹிந்தியாக்கிவிட்டிருக்கிறார்கள். துளசிதாஸ் இராமாயணம் அவதி மொழியில் வெளிப்பட்டது. அது ப்ராக்ருத மொழியிலிருந்து வந்தது என்பதைச் சாதாரண புத்தகங்களிலிருந்துகூடத் தெரிந்து கொள்ள முடியும். ப்ராக்ருதத்தின் அடிப்படையில் எழுந்த மொழி அது. இதுதான் உண்மை நிலை.

அப்படி 'ஹிந்தி' என்று சொல்கிறார்களே, அவர்கள் அத்தனை பேரும் இந்தி பேசுகிறார்களா? நான் இந்தி விரோதி அல்ல. 'ஹிந்தி வேண்டும்' என்று சொல்கிறவன்.

பல்வேறு மொழிகளைக் கொண்டது ஹிந்தி என்பதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அவதி, மைதிலி, பஞ்சாபி, குர்முகி, உருது, புஷ்டு ஆகியவற்றையெல்லாம் சேர்த்து 'இந்தி' என்று சொல்கிறார்கள். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் திராவிட மொழிகள் எனப்படும். பாஞ்ச திராவிடம் என்னும்போது, மராத்தியும் அதில் வந்துவிடும். அதையும் திராவிட மொழி என்று சொல்லிவிடலாம். ஆனால் இப்படிச் சொல்லலாமா? நான் சொல்லியவற்றுக்கெல்லாம் 'ஹிஸ்டாரிகல், ரிகார்டட் எவிடென்ஸ்' இருக்கின்றன. அவற்றை வைத்துத்தான் சொல்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 'ந்யூமரல்ஸ்'-ஸைப்பற்றி அரசியலமைப்புச் சட்டத்தின் 343-வது ஆர்ட்டிகிளில் (1)-வது பிரிவில் கூறப்பட்டிருப்பதாவது—

"343 (1) The Official Language of the Union shall be Hindi in Devanagari script. The form of numerals to be used for the official purposes of the union shall be the international form of Indian numerals."

இதைக் கனம் அங்கத்தினருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.





**திரு. சா. கணேசன்:** அந்த வாதத்தில் நான் இறங்கவில்லை. நான் கூறியதும் உண்மைதான். அது அந்த ஆர்டிக்கிளின் கடைசிப் பகுதியாக இருக்கிறது. இத்தனை பாஷைகளையும் ஒன்றாகச் சேர்த்து, அதை 'ஹிந்தி' என்று சொல்கிறோம் இராஜா ராம் மோகன் ராய் தம்முடைய மத சித்தாந்தத்தை ஸ்தாபித்து, அதைத் தேசம் முழுவதிலும் பிரசாரம் செய்வதற்கு ஹிந்திதான் பொது மொழியாக, 'லிங்வா ஃப்ராங்கா', அல்லது 'காமன் லாங்வேஜ்' என்றெல்லாம் சொல்கிறார்களே, அப்படிப் பொது மொழியாக அமையவேண்டும் என்பதற்காக அறிஞர்கள் சம்மேளனத்தை சிறப்புக் கூட்டத்தைக் கூட்டினார்கள். பஞ்சாப், டில்லி, ஆஜ்மீர், காசி, அலஹாபாத், நாகபுரி முதலிய இடங்களிலிருந்தும், இன்னும் பல்வேறு பிராந்தியங்களிலிருந்தும் ஹிந்தி பேசக்கூடிய பேராசிரியர்கள் பலரை அழைத்திருந்தார்கள். பேராசிரியர்கள் எல்லோரும் கூடினார்கள். ஒரு சோதனை போல, ஒரு அறிக்கையைக் கொடுத்து, அதை எல்லோரும் அவரவர்கள் ஹிந்தியிலே எழுதிக் கொண்டு வரும்படியாகச் சொன்னார்கள். அப்படியே எழுதிக் கொண்டுவந்தார்கள். அது எப்படியிருந்தது? காரைக்குடிக்காரன் பேசுவது மதுரைக்காரனுக்காவது புரியவேண்டுமல்லவா? அப்படிக்கூட இல்லை. அலஹாபாத்காரன் எழுதிய பனாரீஸ்காரனுக்குப் புரியவில்லை. பஞ்சாபிக்காரனுக்குப் புரியவில்லையென்றால் கூடப் பரவாயில்லை. பக்கத்திலிருப்பவனுக்கே காசிவாசிக்கே புரியவில்லை. உச்சரிப்பு புரியவில்லை என்றாலும் பரவாயில்லை. சொல்லே புரியவில்லை. இதை நான் சொல்லவில்லை. புஸ்தகம் இருக்கிறது. அதைப் பாருங்கள். ஆக, இராஜாராம் மோகன் ராய் அவர்கள் ஏழெட்டு வகையாக இருந்த வாசகங்களைப் பார்த்துவிட்டு, தலையில் அடித்துக்கொண்டு, 'இது நமக்கு கட்டுபடியாகாது, இது நமக்கு பொருந்தாது," இங்கிலீஷ் மே பி அவர் லாங்வேஜ்' என்று தீர்மானித்து, தம்முடைய சித்தாந்த புத்தகங்களை எல்லாம் ஆங்கிலத்தில் எழுதினார்கள். இராஜாராம் மோகன் ராய் என்ன, அறிவில் குறைந்தவரா? திறமையில் குறைந்தவரா? அல்லது இந்தி விரோதியா? இல்லையே! காரிய காரணத்தை மட்டும் வைத்து, தமக்கு அது பயன்படாது என்று முடிவு செய்தார். இவற்றையெல்லாம் நாம் மனத்திலே கொள்ள வேண்டும்.

அதற்கு மேலே, ஹிந்திக்காரர்கள் சொல்வதைப் பார்க்கும்போது, சில சமயங்களில் நமக்கு வேடிக்கை மாதிரித் தோன்றலாம். பிராந்திய மொழிகளுக்கு அதிக ஊக்கம் கொடுப்பது போல் அவர்கள் செய்வதற்குக் காரணம் என்ன? பிராந்திய மொழி வளரக் கூடாது என்று சொன்னால் இந்தியை எதிர்ப்பதற்கென்றே ஒரு கட்சி சேர்ந்துவிடும். அந்த அச்சத்தால்தான் பிராந்திய மொழிக்கு ஆக்கம் தருவது போலப் பேசுகிறார்கள். கனம் அங்கத்தினர்களில் பலர் "இந்தியா" என்பது ஒரு தேசம் அல்லவா? அதற்கு ஒரு மொழி வேண்டாமா?" என்று பேசுகிறார்கள். இது ஒரு மாயாவாதம் என்றுதான் தோன்றுகிறது. இந்தியாவில் 14 மொழிகள் இருக்கின்றன. அவற்றில் 'அஃபிஷியல் லாங்வேஜ்' என்று சொல்லப்படுவதற்கு வேண்டிய தகுதி எதற்கு உள்ளது

என்று பார்க்கவேண்டும். மொழி என்றால் அது விஷயங்களை விளக்கமாகச் சொல்லத் தகுதியுடையதாக இருக்கவேண்டும். சொற்கள் திராணி உடையதாக இருக்கவேண்டும். குழப்பம் வந்துவிடக் கூடாது. பழங்கால சாசனங்களை எடுத்துப் பார்த்தால் அவை ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் எழுதப்பட்டிருக்கும். செப்புப் பட்டயங்கள், கல் வெட்டுக்கள், ஓலைச் சுவடிகள் இவற்றில் எல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் போட்டிருந்தார்கள். இதற்குக் காரணம் என்ன? 'நாற்றம்' என்ற சொல் 'நல்ல மணம்' என்ற பொருளில் வழங்கி வந்தது. இப்போது அதே சொல்லுக்குப் பொருள் 'சாக்கடை வீச்சம்' என்பதைக் குறிக்கும்படியாக வந்துவிட்டது. சில சொற்களின் பொருள் காலத்தால் மாறிவிடக்கூடும். ஆனால், எண்ணுவானுடைய எண்ணம், கருத்து மாறுபடக்கூடாது என்பதற்காகப் பல மொழிகளிலே எழுதி வைத்திருந்தார்கள். சிலோனில் பார்த்தால், அங்கு சீன மொழி, அரபி மொழி, தமிழ் மொழி ஆகிய மூன்றிலும் ஒரு சாசனம் இருக்கிறது. அதை அச்சிட்டும் வைத்திருக்கிறார்கள். ஆனால், 'சிங்கள' மொழியில் இல்லை. இப்படியெல்லாம் பார்க்கும்போது, ஹிந்தியிலே மொழி வளம் கிடையாது. இப்பொழுது புதிது புதிதாக, கொல்லுப் பட்டரையில் தயாரிப்பது போல, அவசரம் அவசரமாகச் சொற்களைத் தயார் செய்கிறார்கள். சில வார்த்தைகள் எல்லோருக்கும் புரிவது போல் இருக்கவேண்டும் என்பதற்காக முயற்சி செய்கிறார்கள். ஒரு உதாரணம் தருகிறேன். 'வாட்டர்வே' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு எப்படி ஹிந்திச் சொல் தயாரிக்கிறார்கள் என்று பார்ப்போம். 'வாட்டர்' என்றால் 'தண்ணீர்'. அதாவது, ஜலம். 'வே' என்றால், 'வழி' அல்லது 'பாதை'. ஆகவே, 'ஜலபாதை' என்று போட்டார்கள். ரிகார்டு இருக்கிறது. அதை வைத்துப் பேசுகிறேன். 'ஜலபாதை' என்பதற்கு நம் நாட்டில் என்ன பொருள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. (சிரிப்பு). 'வாட்டர்வே' என்றால் 'ஜலபாதையா'? இப்படி, பாக்டரியில் பொருள்களைத் தயாரித்துக் குவிப்பதைப்போல், சொற்களைத் தயாரித்துவிட்டால் மொழி வளர்ந்துவிடுமா? வளமுள்ளதாகிவிடுமா? இந்தமாதிரி ஒரு
1-00 p.m. குழப்பமான நிலைமையை ஏற்படுத்தி வருகிறார்கள். இது நல்லதல்ல. இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலம் வந்து தமிழை அழித்து விட்டது என்று யாராவது சொன்னால் அதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு சொல்கிறேன். உண்மையைச் சொல்ல வேண்டும். ஆங்கிலம் வந்ததனால் தான் அதைப் பார்த்து நன்கு உணர்ந்து ஆங்கிலத்தில் உள்ளது போலவே ஒவ்வொரு துறையிலும் தமிழை வளர்க்க வேண்டுமென்ற விழிப்பு உண்டாயிற்று. தமிழில் ஒரு பொருளுடைய பல சொற்கள் இருக்கின்றனவே, அவற்றில் உள்ள நுட்பமான வேறுபாடுகள் என்ன என்கிற ஆராய்ச்சியே பிறந்தது என்று சொல்வேன். உதாரணமாக காண், நோக்கு, பார், என்ற சொற்களை நோக்கும்போது காண் என்றால் see, நோக்கு என்றால் look, பார் என்றால் அறிவினாலே சிந்தித்துப் பார். அதனாலே தான் அறிவினாலே சிந்தித்துப் பார்க்கிறவர்களுக்கு பார்ப்பனர் என்ற



சொல் உண்டாயிற்று . . . என்பதாக எல்லாம் நுணுகி ஆராய்ந்து அறிந்து தமிழை வளப்படுத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலம் வந்திராவிட்டால் இந்தமாதிரி பல துறைகளில் ஆராய்ச்சி நடத்தி தமிழை வளப்படுத்தியிருக்க முடியாது. இதை நான் மனப்பூர்வமாக உணருகிறேன். ஆகவே சொல்கிறேன்.

எந்த மொழி வேண்டுமானாலும் வரட்டும். வேறு ஒரு மொழி வருவதனால் நம்முடைய தமிழ் மொழி அழிந்துவிடும் என்று யாராவது கருதினால் எனக்கு இந்தத் தமிழ் மொழியே வேண்டாம் என்று சொல்லிவிடுவேன். வேறு ஒரு மொழியினால் ஒரு மொழி அழிந்துவிடும் என்று ஏற்படுமானால் அந்தச் சப்பையான, தொப்பையான ஒரு மொழியா நம்மைக் காப்பாற்றப் போகிறது? எந்த மொழி தன்னை அமுக்கினாலும், அழிக்க முயன்றாலும் தான் அழியாது எல்லா மொழிகளையும் வென்று எல்லாவற்றுக்கும் மேலாக நிற்குமோ அந்த மொழி தான் மொழி. அத்தகைய ஆற்றல் நிரம்பியது நம்முடைய தமிழ் மொழி என்கிற நம்பிக்கை எனக்குப் பூரணமாக உண்டு.

ஆனால் இந்தி என்ற ஒன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்துவிடுமானால் இந்தி கல்லாதவர்களுடைய நிலைமை எல்லாம் என்னாகுமென்று பார்க்கவேண்டும். எல்லோரும் சம உரிமை, சம சந்தர்ப்பம் என்கிற நிலை மாறி இந்தி கற்றவர்கள் மட்டுமே ஆட்சியில் அமர்வதற்கும், இந்தி கற்காத, அல்லது பேச்சு மொழியாகக் கூடக் கொள்ளாத நம்முடைய பிராந்திய மக்களைப் போன்றவர்கள் உரிமை பறிபோவதற்குமே வாய்ப்பு ஏற்பட்டுவிடும். இன்றைக்கு இந்திதான் ஆட்சி மொழி என்று இல்லாத காரணத்தினால் நமக்கு உரிமை இருக்கிறது. நம்முடைய தலைமுறையினருக்கு பல இந்திய சர்விஸ்களில் சேர்ந்து பணியாற்ற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இன்றைக்கு இந்தி மொழி மட்டும் தான் இந்திய அரசின் ஆட்சி மொழி என்று ஏற்பட்டுவிட்டால் நம்முடைய வருங்காலச் சந்ததிகளின் நிலைமை என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதிலே கட்சிக் கொள்கை என்பதே கிடையாது. இருதய சுத்தியுடன் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். எது மக்கள் சமுதாயத்திற்கு நன்மை அளிக்கும், எது மக்கள் சமுதாயத்தில் எந்தப் பகுதியினருக்கும் பாதகம் இல்லாமல் சமசந்தர்ப்பத்தைத் தரக்கூடியது என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் ஆங்கிலம் இருப்பது தான் சிறப்பு. இப்போதுள்ள நிலைமை தொடர்ந்து இருக்க வேண்டுமானால் எல்லா இடத்திலும் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கப்படுவதற்குத் தான் முதன்மையான ஆதரவைக் கொடுக்க வேண்டும். நம்முடைய மாநிலத்தில் தமிழ் வழங்கப்படுவதற்கும் இந்திய அரசியல் மற்ற பிராந்திய மொழிகளோடு ஆங்கிலமும் சிறப்பாக வழங்கப்படுவதற்குமே ஆதரவு அளிக்க வேண்டும். இது தான் வருங்காலச் சந்ததிகளுக்கு நன்மை பயக்கும் என்பதில்—கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் சொந்தமான அந்தரங்க சுத்தியோடு பார்த்தாலும்—கருத்து மாறுபாட்டுக்கு இடமே கிடையாது.

"அது புரியவில்லை, இது புரியவில்லை" என்று சொல்வதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. புரிந்து கொள்ளவேண்டுமென்ற அக்கறையும் ஆர்வமும் இருந்தால் புரியாதது, புரிந்து கொள்ள முடியாதது எதுவும் இல்லை. ஒன்றை அறிந்து கொள்ள முடியாததனால் அதுவே வேண்டாம் என்று சொல்வதும் அறிவுடைமையாகாது. முதன் முதலில் இந்தச் சட்ட சபைக்கு வந்தபோதும் கூட ஒன்றும்தான் புரியவில்லை. எங்கே உட்காருவது, என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று ஒன்றும் தெரியவில்லைதான். அதற்காக அப்படியே வெளியில் இருந்தபடி போய்விட்டோமா? உள்ளே நுழைந்து உட்கார்ந்தால் எல்லாம் புரிகிறது. ஆகவே புரியாது என்கிற பிரச்சினை இல்லை. இங்கே—என்னுடைய இதய பூர்வமாக நான் உணர்ந்ததைச் சொல்கிறேன். நம்முடைய தேசத்திற்கும், நம்முடைய வருங்காலச் சந்ததிகளுக்கும் இப்படிச் செய்வது தான் நன்மை பயக்கும் என்று நான் உணர்கிற காரணத்தினால்—இந்த அடிப்படையான தூய, உண்மையான நம்பிக்கையிலே நான் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய துணை அவைத் தலைவர் அவர்களே! திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட மன்றச் செயலாளர் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த ஆட்சிமொழித் தீர்மானத்தை ஆதரிக்கும் வகையில், சில கருத்துக்களை வழங்க விரும்புகிறேன். இந்த ஆட்சிமொழி தீர்மானத்தைப் பற்றிய கருத்துக்களை ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் எடுத்து இந்த மன்றத்தின் முன் வழங்கி இருக்கிறார்கள். இந்தியா ஒரே ஒரு அரசியல் அமைப்பின் கீழ் இருக்கிற காலம் வரையில், அதனுடைய ஆட்சிமொழிப் பிரச்சனை திட்டவட்டமாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனையாகும். அந்த அடிப்படையில் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தாரும் இந்த பிரச்சினையை அணுகுகிறார்கள். வீட்டு மொழியைப் பற்றி இப்போது நாட்டிலே எத்தகைய தகராறும், பிரச்சினையும் இல்லை. அந்த அந்த மாநில நிர்வாகங்களைப் பொறுத்த வரையிலும் அந்த அந்த மாநில மொழியே நிர்வாக மொழியாக—ஆட்சி மொழியாகவேண்டுமென்ற அளவுக்கு கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இப்படிப் பார்த்தால் பன்னிரண்டு வட்டாரங்களில் பன்னிரண்டு மாநில மொழிகள் நிர்வாக மொழியாக இருந்து வருகின்றன. இப்போது நம்முடைய மாநில ஆட்சி மொழி தமிழ்தான் என்பதில் எவ்வித ஐயப்பாட்டுக்கும் இடமில்லை.

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையில், ஆட்சி மொழிக் குழுவின் 1956-ம் ஆண்டு அறிக்கையில் உள்ள நிலைமையை எடுத்துப் பார்த்தால்—இந்தியாவில் மொழிகளாகவும், கிளை மொழிகளாகவும் இருக்கக்கூடியவைகள் எல்லாம் சேர்த்து 723 மொழிகள் இருக்கின்றன. இவற்றில் கிளை மொழிகள் மட்டும் 544 இருக்கின்றன என்றும், மொழிகளாக 179 அமைந்து இருக்கின்றன என்றும், அதில் இருந்து 14 மொழிகளைத் தேர்ந்தெடுத்து இந்தியாவின் தேசிய மொழியாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன



என்றும் அறியக் கிடக்கின்றன. அந்தப் பதினான்கு மொழிகளில் சமஸ்கிருதம், உருது என்ற இரண்டையும் தவிர மற்ற பன்னிரண்டு மொழிகளும் அந்த அந்த வட்டார மொழிகளாக இருக்கின்றன.

இன்றைக்கு தமிழ், தமிழ்நாட்டு அரசாங்கத்தின் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்பதில் பிரச்சினை இல்லை. தமிழ்நாட்டு அரசாங்கத்தின் ஆட்சிமொழி தமிழ்தான். ஆந்திரப்பிரதேச அரசாங்கத்தின் ஆட்சி மொழி தெலுங்குதான். கேரள மாநிலத்தின் ஆட்சி மொழி மலையாளம்தான். அந்த அந்த மாநிலங்களைப் பொறுத்த அளவுக்கு, அந்த அந்த மாநிலங்களில் வழங்கப்படுகிற மொழியை; ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்கிற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இப்போது இந்தியாவின் ஆட்சி மொழியாக எது இருந்தால் நல்லது என்பதைப் பற்றித்தான் நாடெங்கும் பிரச்சினைகள் எழும்பியிருக்கின்றன. ஆங்கிலம் இந்த நாட்டு மொழியாக இல்லாமல் இருக்கலாம். இந்த நாட்டை ஆங்கிலேயர்கள் பிடித்து ஆண்ட காலத்தில் தங்கள் அதிகாரத்தின் துணை கொண்டு ஆங்கிலத்தை இந்த நாட்டு ஆட்சிமொழியாக ஆக்கியிருக்கலாம். அப்படி ஆக்கப்பட்ட ஆங்கில மொழி தான் இது வரையிலும் இந்த நாட்டின்—துணைக்கண்டத்தின் பொது நிர்வாக மொழியாக இருந்து வருகிறது. அகில இந்தியாவுக்கும் மட்டும் அல்ல, அகில உலகத்திற்கும் கலை இயலை அளிக்கும் மொழியாக, பௌதிக இயலை அளிக்கும் மொழியாக உலகத்தில் எந்த மூலையில் எந்த அறிவியல் கருத்துத் தோன்றினாலும் உடனேயே அதனை உலகத்திற்கு அறிமுகப்படுத்துகின்ற மொழியாக, சிறந்த இலக்கியங்கள் எந்த மொழியில் இருந்தாலும் அவற்றை மொழி பெயர்த்து அகில உலகத்திற்கும் விளம்பரப்படுத்துகின்ற மொழியாக இருக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள ஆங்கிலம், இன்று நம்முடைய ஆட்சி மொழியாக இருக்கிறது. இந்த ஆட்சி மொழியை அகற்றி வேறு ஒரு ஆட்சி மொழியை அந்த இடத்தில் வைப்பதற்குச் சொல்லப்படுகிற ஒரே ஒரு காரணம், இது அந்நிய மொழி என்பது ஒன்றேயாகும். இது அந்நிய மொழி. ஆகவே ஆட்சிமொழியாக இருப்பதற்குத் தகுந்த மொழி அல்ல என்று சொல்லி, அந்த இடத்தில் இந்தியை வைப்பதற்குச் சொல்லப்படுகிற காரணம், அது ஒரு பெரிய இலக்கிய வளம் நிறைந்த மொழி என்பது அல்ல, அறிவியல், கலை இயல் ஆகிய எல்லாக் கருத்துக்களையும் அது கொண்டிருக்கிறது என்பதல்ல; பெரும்பாலான மக்களால் பேசப்படுகிற மொழி என்ற ஒரே ஒரு காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு அதுவே இந்திய நிர்வாக ஆட்சிமொழியாக இருக்கத்தக்கது என்று பேசப்படுகிறது. அப்படியே அதை ஆட்சிமொழியாக ஆக்குவதன் மூலமாக நமக்கு ஏற்படுகிற ஏற்றமும் எழுச்சியும், சீரும், சிறப்பும் என்னவென்று நாம் ஆராய்ந்தறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். பெரும்பாலான மக்கள் இந்தி பேசுகிறார்கள் என்பதற்காக அதை ஆட்சி மொழியாக்குவதைக் காட்டிலும் அது ஆட்சிமொழியானால் நிர்வாகத்தை இப்போது போல இந்திமொழியில் திறம்பட நடத்த முடியுமா? இந்தியத் துணைக்கண்டத்தில் இந்தி மொழி எந்தக் காலத்திலும் எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாகப் பேசப்பட்டு

தும் இல்லை. அவரவர்கள் பற்று வைத்து, அவரவர்கள் அன்பு வைத்து தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி இன்பம் கொள்ள அவரவர்களுக்கு என்று ஒரு மொழி இருக்கிறது. இவர்கள் அத்துணைப்பேரும் ஒரு அரசின் கீழ் வரவேண்டியபோது எந்த ஒரு சாராருடைய மொழியையும் தேசிய மொழி என்று ஒப்புக்கொள்வதற்கில்லை. அந்த அடிப்படையில் நமக்கு ஒரு மொழி வேண்டுமென்று சொல்லுகிறபோது அந்த இடத்தில் இந்தி வந்து உட்கார இடமில்லை. தமிழகம் என்று எடுத்துக் கொண்டால் இங்குள்ள மூன்றரை கோடி மக்களுக்கு தாய் மொழியாகப், பற்றையும் பந்தத்தையும், பாசத்தையும் பிணைத்துக் கொண்டிருக்கும் மொழியாக தமிழ் விளங்குகிறது. அப்படியேதான் ஆந்திரர்களுக்கு தெலுங்கு இருக்கிறது. மாராட்டியர்களுக்கு மராட்டி இருக்கிறது. வங்காளிகளுக்கு வங்காளம் இருக்கிறது. குஜராத்திகளுக்கு குஜராத்தி இருக்கிறது. இந்திக்காரர்களுக்கு இந்தி இருக்கிறது. இன்னும் வரிவடிவம் இல்லாத எத்தனையோ மொழிகள் எத்தனையோ வகுப்பார்களிடத்தில் வழங்கி வருகின்றன. இந்த மொழிகளில் வளமற்ற, தகுதியற்ற ஒரு மொழியை எடுத்து அதை எல்லார்க்கும் பொது மொழி என்று வைப்பது என்றைக்கும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவாகாது. எல்லோருக்கும் பொதுவாக இதுவரை இருந்து வருகிற ஆங்கிலமே, பொதுமொழியாக நீடிக்கலாம். ஆக இந்திய அரசியல் அமைப்பின் கீழ், இந்த தேசத்திலுள்ள அத்துணைப் பகுதிகளும் ஒன்றாக இணைந்து இருக்கவேண்டுமென்று சொன்னால், இந்திய அரசின் ஆட்சி மொழியாக இந்தப் பதினான்கு மொழிகளும், தொடர்பு மொழியாக (Link Language) ஆங்கிலமும் இருக்கவேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், ஆட்சிமொழி, தாய்மொழி தமிழாக அமைந்து, மற்றைய மாநிலங்களைப் பொறுத்தவரை அந்தந்த மாநில மொழிகள் ஆட்சி மொழிகளாக அமைந்து ஆங்கிலம் இருக்கிற இடத்தில் 14 மொழிகளும் உட்காரக் கூடிய நிலைமை ஏற்பட்ட பிறகும் கூட, ஆங்கில அறிவு தேவையில்லையா என்று கேட்டால், இன்றுள்ள உலகச் சூழ்நிலையில் அகில உலகத் தொடர்புக்கு, வாணிகத் தொடர்புக்கு, அறிவியல் தொடர்புக்கு, உலக அறிவியல் முன்னேற்றங்களை எல்லாம் நம்முடைய மொழிகளிலே கொண்டு வருவதற்கு என்றென்றும் நமக்கு ஆங்கிலம் வேண்டும். அந்த வகையில்தான் இன்று நம்முடைய தமிழகத்தில் ஆங்கில மொழிப் பயிற்சி தேவை என்று உணர்ந்து மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைச் சொல்லிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். வேறு சில மாநிலங்களிலும் நான்காவது வகுப்பு, ஐந்தாவது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர். ஆகவே, இந்தி ஆட்சி மொழியாகும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று வைத்துக் கொண்டாலும் உலகத் தொடர்புக்கு, அறிவியல் தொடர்புக்கு ஆங்கிலம் கற்றே தீர வேண்டும். ஆங்கிலத்தைப் பற்றிச் சொல்லப்படும் ஒரே ஒரு குறைபாடு அது அந்நிய மொழி என்பதாகும். மற்ற வகையிலே ஆங்கிலத்தின் சிறப்புகளையெல்லாம் எல்லோரும் எடுத்துச் சொல்கிறார்கள்.





நேரம் இடம் தராத காரணத்தால் மொழி வளங்களைப் பற்றியும், மற்றவைகளைப் பற்றியும் இப்போது சொல்லாது விடுகிறேன். அந்த ஆங்கிலமானது இந்தியாவினுடைய மொழிகளான 723 மொழிகளோடு ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியதாகும். இந்தியை எடுத்துக் கொண்டால், அதில் ஏராளமாகக் காணப்படுகிற அரபிச் சொற்களுக்கும், பாரசீகச் சொற்களுக்கும் தாயகம் இந்த நாடு அல்ல. 'இந்து' என்ற சொல்லே அரபிச் சொல் என்று மொழிநூல் வல்லுனர்கள் கூறியிருக்கிறார்கள். அது இந்திய மண்ணிலே தோன்றிய சொல் ஆகாது என்ற வகையில் இந்தியும் மற்றப் பலமொழிகளும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான் இந்திய மண்ணில் இறங்கி உருவாகியிருக்கின்றன என்று மொழிநூல் அறிஞர்களும் மற்றவர்களும் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஐயாயிரம் ஆண்டுகளாக 719 மொழிகளும் இருந்தனவா என்றால் இல்லை. நாளுக்கு நாள் கிளர்ந்து எழுந்து பல மொழிகள் ஒன்றோடொன்று கலந்து இன்று இத்தனை மொழிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இத்துணை மொழிகளில் ஆங்கிலமும் தேசிய மொழிகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டிய மொழியாகும். ஆங்கிலமும் இந்த நாட்டின் தேசிய மொழியாகத்தான் கருதப்பட வேண்டுமென்பதைப் பல பேரறிஞர்கள் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். பல இலட்சக்கணக்கான ஆங்கிலோ-இந்தியர்களுக்குத் தாயகம் இந்த நாடுதான். அவர்களுடைய தாய் மொழியாகக் கருதப்படக்கூடிய ஆங்கிலமும் இந்த நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாகத்தான் கருதப்படவேண்டும். இதைப்பற்றிப் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் வந்த வழக்கிலே தீர்ப்பு அளிக்கும் வகையில் தலைமை நீதிபதியாக இருந்த திரு. சக்ளா என்பவர் மிகத் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்.

> "ஆங்கிலம் சட்டப்படியும், முறைப்படியும் இந்த நாட்டைச் சேர்ந்த மொழிகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டும். மற்றைய மொழிகளைப் போலவே இந்திய மொழிகளில் ஒன்றாகக் கருதப்படவேண்டும். அது இந்தியாவில் சிறுபான்மை சமூகத்தினரால் பேசப்படக் கூடிய மொழி. ஆங்கிலம் இந்தி இரண்டையும் எடுத்துக் கொண்டால் ஆங்கிலம் மக்களிடையே தொடர்பான அளவுக்கு இந்தி மொழித் தொடர்பு இல்லை. இந்தியாவில் உள்ள மக்களில் முக்கால் பங்கினருக்கு மேல், அதாவது இந்திப் பேசாத மாநிலங்களைச் சேர்ந்த மக்களுக்கு ஆங்கிலத்தைவிட இந்தி மொழியே வேற்று மொழியாகக் கருதப்படக் கூடிய நிலைமையில் இருக்கிறது" என்று மிகத் தெளிவுபடக் கூறியிருக்கிறார்.

'The English language is, legally and constitutionally, as much an Indian language as Hindi or any other of the languages of India, since it is the language of a recognised Indian minority. So far as the $\frac{3}{4}$th of the people of India, represented by the non-Hindi speaking people, are concerned, it would be correct to say that for them Hindi is more of a foreign language than is English.' என்று கூறியிருக்கிறார்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th August 1963

பாராளுமன்ற உறுப்பினர் பிராங்க் அந்தோணி கொண்டு வந்த தீர்மானத்தைப் பற்றிக் கனம் உறுப்பினர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குப் பதில் சொல்லுகின்ற வகையில் கூடப் பண்டித நேரு எடுத்துச் சொல்லுகின்ற போது—

'English is and should be considered mother-tongue of the Anglo-Indian community. The constitution had recognised the Anglo-Indians as Indian Nationals'.

அதாவது "ஆங்கிலம், ஆங்கிலோ-இந்தியர்களின் தாய் மொழியாகக் கருதப்படுகிறது; கருதப்படவேண்டும். அரசியலமைப்புச் சட்டம் ஆங்கிலோ-இந்தியரை இந்திய தேசிய இனத்தவராக ஒப்புக்கொண்டிருக்கிறது" என்று ஆக்கம் தரும் வகையில் கூறியிருக்கிறார். மற்றொரு முறை ஹைதராபாத்தில் 1955-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ஆம் தேதியன்று ஒரு கூட்டத்தில் பேசும்போது கூட, ஆங்கிலத்தை இந்திய மொழிகளின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாததைச் சுட்டிக்காட்டி, அது பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்றும், அது ஆங்கிலோ-இந்தியரின் தாய் மொழி என்றும் கூறி அதற்காக விளக்கத்தை எடுத்துக் கூறினார். அந்த முறையிலே, இந்திய மொழிகளிலே ஒன்றுதான் என்ற வகையிலே ஆட்சிக்கு பயன்படுகிற அளவுக்கு உள்ள மொழிதான் ஆங்கிலமாகும். அது தேசிய உணர்ச்சியை ஊட்டுவதற்கான மொழி என்றோ, தாய் மொழிக்கு மாறாக அந்த மொழி வந்து விட வேண்டுமென்றோ யாரும் கூறவில்லை. இந்தியை ஆட்சி மொழியாக வைத்துக் கொண்டாலும் அகில உலகத் தொடர்பு கொள்ள என்றென்றைக்கும் ஆங்கிலம் இருந்தே தீரவேண்டும். இந்தியைப் படித்தாலும், கூடவே ஆங்கிலத்தையும் படித்தே தீரவேண்டும். ஆங்கிலத்தை அகற்றி அந்த இடத்தில் இந்தியை உட்கார வைப்பதன் காரணமாக எதிர்காலத்தில் ஏற்பட இருக்கின்ற கேடுகளை எண்ணித்தான் ஆங்கிலமே நீடிக்க வேண்டுமென்று கூறுகிறோம். ஆங்கிலத்தின் இடத்தில் திறமையற்ற, வளமற்ற இந்தி உட்காரும் தகுதி நிலை நாட்டப்படும் என்றால், அந்த இடத்திலே இந்தி மொழியோடு கூட மற்றப் பதினென்கு தேசிய மொழிகளும் இடம் பெறவேண்டுமென்று கோருவதுதான் இங்கு தரப்பட்டிருக்கிற தீர்மானத்தின் நோக்கமாகும்.

இந்தி ஆட்சி மொழியாக வேண்டுமென்பதற்குக் கூறப்படும் முக்கியமான காரணம் அது இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகிற மொழி என்ற ஒன்றுதான். புள்ளி விவரங்கள் அடிப்படையில் பார்த்தால்கூட இந்தி பேசப்படுகிற 42 சதவிகிதத்தினர் பெரும்பான்மையினர் ஆகமாட்டார்கள். இந்தி பேசுகிறவர்கள் 60 சதவிகிதம் என்றும் மற்ற மொழிகள் பேசுகிறவர்கள் 40 சதவிகிதம் என்றும் இருந்தால் பெரும்பான்மை என்று கொள்ளலாம். அந்த 42 சதவிகிதம் என்ற கணக்கும்கூட இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி, ஆகிய நான்கு மொழிகளும் சேர்ந்து பேசுகின்ற மக்கள் தொகைதான். இந்த நான்கு மொழிகளையும் பேசுகின்ற மக்களின் தொகைதான் 14,99,44,311 என்று



8th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஆட்சி மொழி அறிக்கையிலேயே புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். 1951-ஆம் ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கைக் கணக்குப்படி மொத்த மக்கள் தொகை 35,68,79,394. ஆக, 36 கோடி மக்களில் 15 கோடி மக்கள் இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளையும் பேசுகின்ற மக்களாக இருக்கிறார்கள். அதிலே, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி பேசுகின்ற மக்கள் எண்ணிக்கை 2,21,44,593. ஆகவே, இந்தி பேசுகின்ற மக்கள் தொகை 12,77,99,718 என்ற கணக்கு வருகிறது. அந்த 12 கோடி மக்களும் ஒரேமாதிரியான இந்தி பேசுகிறார்களா என்றால் இல்லை. மொத்தம் 81 வகை இந்தி மொழிகள் பேசப்படுகின்றன. அந்த 81 வகையிலே முக்கியமாகக் கருதப்படக்கூடியவை, மார்வாடி மேவதி, ஜெய்புரி, ஜோத்புரி, அவதி, கரிபோலி, பிரஜ்பாஷா, கன்னோஜ்வதி, பண்டேலி, பங்காரு, போஜ்புரி, மகதி, மைதிலி, என்பவையாகும் இவற்றில் 'கரிபோலி' என்னும் ஒரு வகை இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது. எத்துணை சதவிகிதத்தினர் இன்ன இன்ன வகை இந்தியைப் பேசுகின்றனர் என்ற புள்ளி விவரத்தையெல்லாம் கொடுக்க நேரம் இல்லாத காரணத்தால் விடுகிறேன். இந்திப் பேராசிரியரும் சமஸ்கிருத மொழிப் புலமை பெற்றவரும், வங்க மொழிப் பேராசிரியரும், பன் மொழிப் புலவர் என்று பெயர் பெற்றவரும், திராவிட மொழிகளைக் கற்றறிந்தவரும், மொழி ஆராய்ச்சியில் 40 ஆண்டு காலம் ஈடுபட்டவரும் இந்திப் பிரசார சபையின் தலைவராக இருந்தவரும், இந்தியில் நான்கு புத்தகங்கள் எழுதி ரத்னாகர என்ற விருது பெற்றவரும், அரசியலில் அதிகம் ஈடுபடாதவருமான டாக்டர் சுனித்குமார் சாட்டர்ஜி அவர்கள், "1951-ஆம் ஆண்டில் 80 லட்சம் மக்களால்தான் 'கரிபோலி' இந்தி பேசப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. கெர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினர் வெளியிட்ட அறிக்கை, இதனைத் தெளிவுபட எடுத்துக்காட்டியுள்ளது. கரிபோலி 80 லட்சம் மக்கள் பேசுகிற ஒரு மொழி. அறிவியல் அறிவு பெறக்கூடிய ஆற்றல் அதற்கு இல்லை. ஆட்சிமொழியாகக்கூடிய ஆற்றல் அதற்கு இல்லை. பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழி என்ற ஒரு தகுதியை வைத்துக்கொண்டு, உண்மை இல்லாத தகுதியை வைத்துக்கொண்டு, ஆட்சி பீடத்தில் ஏறுவது என்றால் அதில் என்ன நீதி இருக்கிறது? அது மட்டுமல்ல, இந்தியை விட வளமான மொழிகள் பல இருக்கின்றன. ஆகவே 14 மொழிகளையும் யூனியன் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொண்டு ஆங்கிலத்தை அகில இந்தியத் தொடர்பு கொள்வதற்குள்ள மொழியாகவும், அகில உலகத் தொடர்பு கொள்வதற்குரிய மொழியாகவும், அறிவியல் வளர்ச்சிக்குப் பயன்படும் மொழியாகவும் வைத்துக் கொள்வோம். அரசியல் சட்டம் திருத்தப்பெற்று இந்தி மட்டுமல்லாது 14 மொழிகளும் யூனியன் மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். 45 லட்சம் மக்கள் தொகை கொண்ட சுவிட்ஸர்லாந்தில் மூன்று மொழிகள் ஆட்சிமொழிகளாக இருக்கின்றன. அதேபோன்று 14 மொழிகளையும் யூனியன் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ள

வேண்டும். 14 மொழிகளிடையே தொடர்பு ஏற்படுத்தும் தொடர்பு மொழியாக (Link Language) ஆங்கிலமே இருந்துவரவேண்டும். சாதாரண மக்களால் முடியாவிட்டாலும், வல்லுநர்களை வைத்துக் கொண்டு 14 மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஆக்க வேண்டிய வழிவகைகளை காண வேண்டும். அதற்குரிய வழிவகைகளை நிச்சயமாக வல்லுநர்களைக் கொண்டு காணமுடியும். பிற மாநிலங்களோடு அல்லது மத்திய ஆட்சியோடு ஏற்படுகிற தொடர்பு சில இடங்களில் சில பேர்களுக்குத்தான் ஏற்படும். இங்குள்ள தாசில்தாருக்கும் அலகாபாத்திலுள்ள தாசில்தாருக்கும் தொடர்பு ஏற்படப் போவதில்லை. இங்குள்ள மாவட்ட ஆணையாளருக்கும் அலகாபாத்திலுள்ள ஆணையாளருக்கும் தொடர்பு ஏற்படப்போவதில்லை. ஆக, அந்தந்த வட்டார மொழிகளை வைத்துக்கொண்டு அந்தந்த வட்டார வேலைகளைக் கவனித்து பிற மாநிலங்களோடு அல்லது அகில உலக தொடர்பு வைத்துக்கொள்ள ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளலாம். சிக்கல்கள் எதுவும் இன்றி எல்லா மக்களையும் திருப்திப்படுத்தலாம் இதன் மூலம். ஆங்கிலத்தின் உதவி எங்கு தேவையோ அங்கு அது பயன்படட்டும். இதை எளிதாகச் செய்ய முடியும். மும்மொழிக் கொள்கையை வைத்து மூன்று மொழிகளின் இலக்கணம், இலக்கியம் இவற்றை படிப்பதை விட்டு இரண்டு மொழிகளான தாய்மொழி அதாவது வட்டார மொழி, ஆங்கில மொழி ஆகியவற்றை மட்டும் படிப்பது என்பது எளிதான செயல் என்பது மட்டுமல்லாமல், அது பயன்தாத்தக்கதாகவும் இருக்கும். இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதனால் நல்லதொரு நிலைமையை உருவாக்கமுடியும். குழப்பங்களையும், மாச்சரியங்களையும் தவிர்க்க இத்தீர்மானம் வழிவகை ஏற்படுத்தும். இதை ஏற்றுக் கொள்வதினால் நம் எதிர்காலம் நன்றாக அமையும், சிக்கல்கள் தீரும், அறிவு ஆற்றல் வளரும் என்று கூறி, இதை ஆதரித்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இம்மன்றத்தைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** உதவி சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சி செயலாளர் கொண்டுவந்த தீர்மானம் குறிப்பிட்டதொரு யோசனையைக் கூறுகிறது என்றால் அதையொட்டி நடைபெற்ற விவாதத்தில் பொதுவாக மொழிப் பிரச்னையே கையாளப்பட்டது. மொழி என்பது ரொம்ப முக்கியமானது. நம் அங்கங்களில் நாக்கு, பேசுவதற்கு, கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு மட்டுமல்லாது உண்ணும்போது ருசியை உணர நாக்கு வேண்டியிருக்கிறது. நாக்கு இல்லை என்றால் பேச முடியாது. உண்டால் அதை அனுபவிக்க முடியாது. அதே மாதிரித்தான் மொழியும். மொழி இல்லை என்றால் நம் கருத்துக்களை யாரிடமும் தெரிவிக்க முடியாது. ஊமையாகத்தான் இருக்கவேண்டும். நாக்கு இருந்தும் நாக்கு இல்லாதது போல்தான் இருக்கவேண்டும். ருசி பார்த்துக் கொண்டிருக்கலாமே தவிர கருத்துக்களை வெளிப்படுத்த முடியாது. மொழி இல்லையெனில் நாக்கைப் பெற்றும் அது பயனற்றதாகிவிடும்.





அவ்வளவு முக்கியமானது மொழி. ஆனால் நாக்கைப் பற்றியும் நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். மொழி அவசியம் என்றாலும் நாம் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர மொழி நம்மை பயன்படுத்திக் கொள்ளலாகாது, என்பதை மொழி பற்று உள்ளவர்களும் மொழியை உணர்ந்தவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அந்தக் கருத்தை மனதில் வைத்துக்கொண்டுதான் இப் பிரச்னையை ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பிட்ட ஒரு யோசனையைத் தெரிவிக்கும் இத்தீர்மானத்தை பரிசீலித்து அதை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்று இந்த மன்றம் முடிவு செய்யவேண்டியிருக்கிறது. இத்தீர்மானப்படி 14 மொழிகளும் தேசிய மொழிகள், அவற்றை அரசியல் சட்டம் 343 ஆர்டிகிள்படி அதை ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்பது ஒன்று. அது ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருந்தால் ஆங்கிலம் வேண்டாம் என்றாகும். சுதந்திரக் கட்சித் தலைவர் அவர்கள் அதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆகையால் அவர்கள் பழைய கருத்தை விட்டு விட்டு, ஆங்கிலத்தை விடவே முடியாது என்ற கருத்தை விட்டு விட்டு, 14 மொழிகள் இருந்தால்போதும், ஆங்கிலம் வேண்டாம் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். ஆங்கிலம் வேண்டாம், 14 மொழிகள் இருந்தால் போதும் அவற்றை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தவேண்டும் என்பதுதான் தீர்மானம். இதில் ஆங்கிலத்திற்கு இடமில்லை, அதை சுதந்திரக் கட்சித் தலைவர் ஏற்றுக் கொள்கிறார் என்பதைக் காண்கிறேன். மற்ற ஒரு விஷயம். இந்த 14 மொழிகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறவரையில் ஆங்கிலத்தை இந்திய யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கு வைத்துக் கொள்ளலாம் என்பதுதான் மதியழகன் அவர்கள் தீர்மானம். ஆங்கிலத்தையும் வைத்துக் கொள்ளலாம் என்பதுதான் இதன் கருத்து. ஆங்கிலம்தான் இருக்கவேண்டுமென்று இதில் இல்லை. இப்போதுள்ள சட்டப்படி இந்தியை கொஞ்சம் கையாளலாம். திருத்தப்பட்ட சட்டத்திற்கு முன்பு 1965 வரைதான் ஆங்கிலமும் ஆட்சிமொழியாக இருக்கும். 1965-க்குப் பிறகு இந்திதான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்ற நிலை இருந்தது. அது இப்போது மாற்றப்பட்டிருக்கிறது.

(கனம் சபாநாயகர் தலைமை)

ஆனால், இந்தத் தீர்மானத்தின்படி ஆங்கிலம்தான் இருக்க 1-30 p.m.
வேண்டும், அதை எடுக்கக்கூடாது என்று இல்லை. 14 மொழிகளும் ஏற்றுக்கொள்ளப்படுகிற வரையிலே ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று இருக்கிறதே தவிர, ஆங்கிலம்தான் இருக்கவேண்டும் என்று இல்லை. ஆகையால், கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் கூட இந்தியே கூடாது என்ற கொள்கையைக்கூட மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்தி கூடாது, இந்தி போர்க்கொடி, போராட்டம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் நிலையில்கூட இப்பொழுது கொஞ்சம் மாறுதல் இருக்கிறது என்று எதிர்க்கட்சியின்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th August 1963

செயலாளர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தின் வாசகத்திலிருந்து தெரிய வருகிறது. இந்தி இருக்கவே கூடாது, ஆங்கிலம் மாத்திரம்தான் இருக்க வேண்டும் என்ற நிலை மாறி 14 மொழிகள் ஏற்றுக்கொள்ளப்படுகிற வரையில் ஆங்கிலமும் இருக்கட்டும், இந்தியும் இருக்கட்டும் . . . .

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே இந்தி ஆட்சிமொழியாக இருப்பதற்கு ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தி ஆட்சி மொழியுடன் அந்த ஒரு ஆட்சி மொழிமட்டும் அல்லாமல் ஆங்கிலமும் அந்த இடைக்காலத்திலே இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. நாங்கள் அதை மறுக்கிறோம் என்பது அல்ல. புதியதாக ஏதோ சொல்லுவது போலச் சொல்லுகிறார்கள். நான் அப்படி ஒன்றும் மறுத்துச் சொல்லவில்லை.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தில் 'அதுவரையில் இந்திய யூனியன் அரசாங்கக் காரியங்கள் எல்லாவற்றுக்கும் ஆங்கிலத்தையே வைத்திருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தையும் என்பது இல்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த கனம் உறுப்பினர் பின்னால்கூட விடையளிக்கப் போகிறார்கள். அப்பொழுது அவர்கள்தான் வியாக்கியானம் கூறவேண்டும். அவர்களுடைய கருத்துத்தான் என்னுடைய கருத்து. நான் எவ்வாறு இதை பொருள்படுத்திக்கொண்டேனோ அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். துணைத் தலைவர் அவர்களுக்கு வேறு கருத்து இருக்கலாம். ஆனால் செயலாளர் திரு. மதியழகன் கூறியதிலிருந்து இந்தியும் இருக்கலாம், ஆங்கிலமும் இருக்கலாம் என்றுதான் நான் புரிந்துகொண்டேன். இந்தி ஒழிப்புப் போராட்டத்திற்குக்கூட அவசியம் இருக்காது. அதில் கொஞ்சம் முரண்பாடு இருக்கிறது. அது கொஞ்சம் மாறியிருக்கிறது. இந்தியும் இருக்கட்டும் என்று இப்பொழுதுகூட சொன்னார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தி மாநிலங்களில் இந்தி இருப்பதைப்பற்றி ஒன்றும் ஆட்சேபனையில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி மொழியே கூடாது என்று சொல்லவில்லை. இந்தி மொழி மட்டும் ஆதிக்க மொழியாக இருப்பது கூடாது, நம்முடைய தாய்மொழி தமிழ் மொழி வளரவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைத் திட்டம். அதை வைத்துக்கொண்டு 'இந்திக்கு என்ன போராட்டம்?' என்று சொல்லுவது இங்கே திசையை திருப்புவதற்கு பயன்படுமே தவிர, வேறு அல்ல. இந்தப் பிரச்னையை தெளிவு படுத்தியிருந்தும், திருப்பி திருப்பி அமைச்சர் அவர்கள் இம்மாதிரி சொல்லுவது சரியல்ல.



8th August 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் உருக்கமாகப் பேசுகிறார்கள். தெளிவாகப் பேசுகிறார்கள். நான் தவறுதலாக எடுத்துக்கொள்ளுவதில்லை. எனக்கும் நன்றாகப் புரிகிறது. இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்துவிட்டு கனம் அங்கத்தினர் உட்கார்ந்த உடனேயே நான் கேட்டேன். என்னுடைய மனதை திடப்படுத்திக்கொள்ளுவதற்கு நான் கருதியது சரிதானா என்று கேட்டேன். எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. ஓரளவுக்கு இரு கட்சியினரும், சுதந்திரா கட்சியினரும், திராவிட முன்னேற்றக் கட்சியினரும் இந்தியை கண் எடுத்தும் பார்ப்பதில்லை என்று சொன்ன நிலையிலிருந்து, ஆங்கிலம் தான் இருக்கவேண்டும் என்று சொன்ன நிலை இல்லாமல், கொஞ்சம் மாறுதல் அடைந்திருப்பது பற்றி என்னைப் பொறுத்தமட்டில் மகிழ்ச்சி (குறுக்கீடு). மாறுதல் இல்லை என்று சொன்னால் வைத்துக்கொள்ளட்டும். 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக இருக்கவேண்டும் என்பதற்கு, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஸ்விட்சர்லாந்தில் 3 மொழிகள் ஆட்சி மொழிகளாக இல்லையா என்று கேட்டார்கள். அங்கே அவர்களுடைய ஜனத்தொகை எவ்வளவு, அந்த ஜனத்தொகைக்கு 3 மொழிகள் என்றால், நம் நாட்டில் இருக்கிற ஜனத்தொகைக்கு எவ்வளவு மொழிகள் இருக்கவேண்டும் எனக் கணக்குப் பார்ப்பது இல்லை. அப்படிக் கணக்குப் பார்த்து, இன்னும் 2 மொழி வேண்டும், 16 மொழி, 18 மொழி வேண்டும் என்று கணக்குப் பார்ப்பதற்கு இல்லை. இப்பொழுது மத்திய ஆட்சியைப் பொறுத்த மட்டில் நமக்கு மத்திய ஆட்சியில் அக்கறை இருக்கிறது. நம்முடைய மாநிலத்தோடு நிற்பதில்லை. மத்திய ஆட்சியில் நமக்கு அக்கறை இருக்கிறது, பங்கு இருக்கிறது, தொடர்பு இருக்கிறது. இப்பொழுது 14 மொழிகளும் மத்திய ஆட்சியில் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்றால், கனம் அங்கத்தினர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் ரொம்பவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மத்திய ஆட்சியிலிருந்து எழுதுபவர்கள் என்ன மொழியில் வேண்டுமானாலும் எழுதலாம். அங்கே போகின்ற உத்தியோகஸ்தர்களுக்கு எல்லாம் அங்கே எந்த மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றனவோ அந்த மொழிகளில் பாண்டித்தியம் வேண்டும், ஓரளவு அந்த மொழிகளையெல்லாம் படித்திருக்கவேண்டும். என்று சொல்லுவது ஒன்று. அல்லது ஏதாவது ஒரு மொழியிலே பாண்டித்தியம் இருந்தால் போதும் என்று சொல்லுவது மற்றொன்று. இரண்டு அல்லது மூன்று மொழிகள்தான் ஆட்சி மொழிகளாக இருக்கவேண்டுமென்றால் அந்த மூன்று மொழிகளையும் படித்தாகவேண்டும் என்று உத்தியோகஸ்தர்களை வற்புறுத்தலாம். ஒருவர் 14 மொழிகளையும் படித்தாக வேண்டும் என்று யாரும் எதிர்பார்ப்பதற்கில்லை. ஏதாவது ஒரு மொழியைத்தான் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கும். பதினான்கு மொழிகளில் ஏதாவது ஒரு மொழி தெரிந்தால் போதும், அவர்கள் உத்தியோகத்திற்கு வரலாம், அவர்கள் அரசாங்கத்தில் பொறுப்பு ஏற்றுக்கொள்ளலாம் என்றுதான் ஏற்படும். அதை கனம் அங்கத்தினர் ஒப்புக்கொள்ளு

வார்கள் என்று நினைக்கிறேன். 14 மொழிகளையும் கற்றுணர்ந்தவர்கள்தான் கையாளக்கூடியவர்கள்தான், உத்தியோகம் வகிக்க வேண்டும், மற்ற பொறுப்பு வகிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்களும், இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த கனம் உறுப்பினர் அவர்கள்கூட கூறமாட்டார்கள் என்று நினைக்கிறேன். 14 மொழிகளையும் கற்றுணரவேண்டிய அவசியமில்லை, ஏதாவது ஒரு மொழி கற்றுணர்ந்தால் போதும். இந்தியிலோ, மராத்தியிலோ, குஜராத்தியிலோ எழுதலாம். ஒரு பைலில் நோட் எழுதும்போது சூபரிண்டெண்டெண்டு தெலுங்கில் எழுதலாம், அஸிஸ்டெண்டு செகரடரி குஜராத்தியில் எழுதலாம், அதற்கப்புறம் செகரடரி இந்தியில் எழுதலாம், மினிஸ்டர் எழுதுவது பெங்காலியில் இப்படியெல்லாம் நிலைமை வரும். இதையெல்லாம் எப்படி அர்த்தம் செய்துகொள்ளுகிறது? நாமும் அரசாங்கம்தான். நமக்கும் அக்கரை இருக்கிறது. இதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும், உணரவேண்டும். அங்கத்தினர் அவர்களுடைய திட்டத்தில் ஆங்கிலம் கூட இல்லை. ஆங்கிலமும் சேர்த்துக்கொண்டால் 15 மொழிகளாகும். ஆங்கிலத்தையும் சேர்த்தால்கூட, எந்த மொழியில் வேண்டுமானாலும் எழுதலாம். அப்பொழுது என்ன நிலை வரும். 'பேபல் ஆப் டங்ஸ்' என்ற நிலை ஏற்படும். ஆட்சி எப்படி நடக்கும்? பேசுவதற்கு அழகாக இருக்கிறது, 14 தேசிய மொழிகள் என்று. தேசிய மொழிகள் என்று அடிக்கடி நம்முடைய பிரதம மந்திரி அவர்களும் வற்புறுத்தி வருகிறார்கள். எல்லாம் சரிசமமான உரிமையைப் பெற்றிருக்கக்கூடிய மொழிகள் தான். ஆனால், 14 மொழிகளையும் நம்முடைய ஆட்சி மொழிகளாக வைத்துக்கொள்ளுவோம் என்றால், அது எப்படி பொருந்தும்? எப்படி ஆட்சி நடத்துகிறது? அதைத்தான் கனம் அங்கத்தினர்கள் தயவு செய்து சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று நான் கோருகிறேன். அது சாத்தியம் அல்ல. ஆட்சி ஒழுங்காக நடப்பதற்கு 14 மொழிகள் ஆட்சிமொழிகளாக இருப்பது என்பது சாத்தியமல்ல. இதையெல்லாம் உணர்ந்துதான் இந்தி என்று அவர்கள் சொன்னார்கள். பெரும்பாலோர் இந்தி இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்திலும் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் என்ன சொன்னோம்? இந்தி மட்டும் இருந்தால் நாம் பாதிக்கப்படுவோம் என்று சொன்னோம், ஏராளமான பேர்கள் தமிழ் நாட்டில் இந்தி கற்றுக்கொண்டிருக்கிறார்கள், அதிகமாக இந்தி படிக்கிறார்கள். அப்படிப் படித்தாலும், பிரயோகம் செய்வது வேறு விஷயம். அதிலே பாதகம் ஏற்படும். இந்தியிலேயே விவகாரங்களை கையாள்வது என்றால், ஆங்கிலமும் இருக்கவேண்டும் என்று நாம் கூறினோம். அப்பொழுது இந்த மன்றத்தில் விவாதம் நடந்தது, முடிவு ஏற்பட்டது. அப்பொழுது இருந்த எதிர்க்கட்சித் தலைவர் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னோம். அதெல்லாம் எங்கே போயிற்று என்று கேட்டார்கள். அப்படியே இந்த சட்டத்தில் இருக்கிறது. 'ஆபிஷியல் லாங்குவேஜஸ் ஆக்டில்' அப்படியே இருக்கிறது.





அப்பொழுது அந்தத் திருத்தத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன கோரினார்கள்? ஆங்கிலமும் இருக்கவேண்டும், இதற்கு 'ஸாடபிள் லெஜிஸ்லேஷன்' செய்யவேண்டும் என்று கோரினார்கள். அதுதான் அப்பொழுது கோரினது. அந்த 'ஸாடபிள் லெஜிஸ்லேஷன்' இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். 'அப்பொழுது இந்த மன்றத்தில் தலைவராக இருந்து, கல்வி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இதையெல்லாம் சொன்னார்களே' என்று கூறினார்கள். நான் கேட்டுக்கொள்கிறேன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை. கனம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அடிக்கடி சென்னைக்கு வருகிறார்கள். அவர் வருகிற சமயம் பார்த்து முன்னாலேயே நான் வேண்டுமானாலும் தெரிவிக்கிறேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், கனம் சி. சுப்பிரமணியம் அவர்களும் கலந்து பேசி—எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம்—இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டம் இங்கு முன்பு நிறைவேற்றப்பட்டிருக்கிற தீர்மானத்திற்கு உகந்ததாக இருக்கிறதா, அதற்கு போதிய அளவு சட்டம் இடம் கொடுக்கிறதா, அதற்கு முரண்பாடாக இருக்கிறதா, இல்லையா என்பதை முடிவு செய்துகொள்ளலாம். அவர்கள் வேறு கருத்துச் சொல்லுவதாயிருந்தால் என்னிடம் சொல்லட்டும். நானும் கனம் சி. சுப்பிரமணியத்தோடு பேசியிருக்கிறேன். இந்த மசோதாவின் விவாதத்தின் பொழுதே நான் அவருடன் பேசியிருக்கிறேன். அதை அவர்கள் எவ்வாறு கருதுகிறார்கள் என்பதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். அவர்கள் அங்கேயே இருக்கிறவர்கள். அப்பொழுது மசோதாவாக இருந்தது. பின்னாலே அந்த மசோதாகூட திருத்தப்பட்டிருக்கிறது. திருத்தப்படுவதற்கு முன்பே எவ்வாறு நம்முடைய தேவைகளை பூர்த்தி செய்கிறது என்பதை கனம் சுப்பிரமணியம் அவர்கள், ஆராய்ந்து உணர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய கருத்து எனக்குத் தெரியும். நான் சொல்வதில் ஐயம் இருந்தால், கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கனம் சி. சுப்பிரமணியம் அவர்களிடம் பேசிக்கொள்ளலாம்.

SRI V. KRISHNAMOORTHY : Sir, on a point of information—

MR. SPEAKER : The hon. Member should resume his seat.

SRI V. KRISHNAMOORTHY : Sir, I am entitled to raise a point of information.

MR. SPEAKER : The hon. Member is not entitled to raise a point of information. He should resume his seat.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும். நாம் இருக்கவேண்டும் என்று சொன்னோம். காலவரையின்றி 'இருக்கவேண்டுமென்று சொன்னோம். அதற்குரிய சட்டம் தான் இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆனால், எவ்வளவு நாட்களுக்கு ஆங்கிலம் இருப்பது, என்பதை முடிவு செய்ய கமிட்டி போடப்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th August 1963

போகிறார்கள், இந்தக் கமிட்டி தொடர்ந்து ஆங்கிலம் இருக்க வேண்டுமா, இல்லையா என்பதை முடிவு செய்யவேண்டியது என்பதைப்பற்றி கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். சமீபத்தில் புதிதாக நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டத்தின் பிரிவுகளை எடுத்து விளக்க விரும்புகிறேன். மூன்றாவது செக்ஷன் தான் ஆங்கிலம் தொடர்ந்து இருப்பதற்கு இடம் கொடுக்கிற பிரிவு. அதை நான் வாசிக்கிறேன்.

"Notwithstanding the expiration of the period of fifteen years from the commencement of the constitution, the English language may as from the appointed day, continue to be used, in addition to Hindi,—

(a) for all the official purposes of the union for which it was being used immediately before that day; and

(b) for transaction of business in Parliament.'

இந்த மூன்றாவது பிரிவு இருக்கிறதே, இது 'அப்சொல்யூட்டாக' இருக்கிறது. இதற்கு 'புரோவிஸோ' ஒன்றும் இல்லை. கமிட்டி போடுவது எல்லாம் இதற்கு புரொவிஸோவாக இல்லை. புரோவிஸோ இருந்தால் இதற்குக் கட்டுப்பட்டது என்று சொல்லலாம். நான் படித்தேனே, அது தான் ஆங்கிலம் தொடர்ந்து இருப்பதற்கான செக்ஷன். அந்த செக்ஷன் தனியாகத் தான் நிற்கிறது. அதற்கு வரம்பு ஒன்றும் இல்லை. கமிட்டி போட வேண்டும் என்று சொல்லுவது நாலாவது செக்ஷனிலே இருக்கிறது. நாலாவது செக்ஷனிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? ஹிந்தி எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதை ஆராய்வதற்கு ஒரு குழு அமைத்து, அந்தக் குழு சிபாரிசு செய்த பிறகு ஜனாதிபதி உத்தரவு போடலாம் என்று இருக்கிறது. பின்னர் இந்த சட்டம் பார்லிமெண்டிற்கு வந்த காலத்தில் மாகாணங்களைக் கலந்து ஆலோசித்துத்தான் மாற்றப்படும் என்று செய்திருப்பதாக நான் நினைக்கிறேன். ஆகவே முன்பு கொடுத்த வாக்குறுதி மீறப்பட்டு விட்டது என்றோ அல்லது ஆங்கிலம் தொடர்ந்து இருப்பதற்கு குந்தகமாக இந்தச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது என்றோ சொல்வதற்கு நியாயம் இல்லை. ஆங்கிலம் காலவரையறை இன்றி இருக்கவேண்டும் என்று கூறினார்கள். அதற்குரிய வகையிலே தான் இந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, பிரதம மந்திரி அவர்கள் உறுதி கொடுத்தார்களே, அது என்னவாயிற்று என்று கேட்டார்கள். அந்த உறுதி இந்தச் சட்டத்திலே அமைக்கப்பட்டிருக்கிறதா, "மே" என்று தானே போட்டிருக்கிறது, "shall" என்று போடவில்லையே என்றெல்லாம் சொன்னார்கள். "மே" போடவேண்டுமா அல்லது shall போட வேண்டுமா என்பதைப்பற்றி எல்லாம் சட்ட நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். shall என்று போட்டால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. "மே" என்று போட்டாலும் ஆங்கிலத்தில் நடத்தலாம். நாம் "மே" க்குப்பதில் shall போட வேண்டும் என்று எண்ணுகிறோம். ஆனால் சட்ட ஞானம் உள்ளவர்



8th August 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

கள் "மே" என்றால்கூட shall என்று தான் அர்த்தம் என்று சொல்லுகிறார்கள். பார்லிமென்ட் "மே" என்று சொன்ன பிறகு அரசாங்கம் "மே நாட்" என்று சொல்ல முடியுமா? ஆகவே "மே" போட்டால் என்ன, shall போட்டால் என்ன? என்னுடைய மதிப்பிற்குரிய சகாக்களைக் கேட்டால் கூட சொல்லுவார்கள், உத்தரவுபோடும் பொழுது "மே" என்று தான் போடுகிறோம். மந்திரி "மே" என்று போட்ட பிறகு 'மே நாட்' என்று காரியதரிசி சொல்லுவாரா?

"shall என்று போட்டால் சில சங்கடங்கள் இருக்கும் என்று நான் சொன்னேன். ஹிந்தியோடு கூட இங்கிலீஷ் இருக்க வேண்டும் என்பது சட்டம். ஆனால் "shall என்று போட்டால், தனியாக எதையும் ஆங்கிலத்தில் எழுதக்கூடாது, ஆங்கிலத்தில் எழுதினால் ஹிந்தியிலும் எழுத வேண்டும் என்பது சட்ட நிபுணர்களின் கருத்து. "மே" போடுவதினாலே பாதகம் ஒன்றும் இல்லை.

உறுதியைப் பற்றிச் சொன்னார்கள். பிரதம மந்திரி அவர்களும், உள்நாட்டு அமைச்சர் அவர்களும் மீண்டும் உறுதி கொடுத்திருக்கிறார்கள். முன்பு கொடுத்த உறுதியை ஒட்டி ஹிந்தி பேசத் தெரியாத மக்கள் விரும்புகிற வரையிலும் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்ற உறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த உறுதியைச் ஏன் சட்டத்திலே கொண்டு வரவில்லை என்று கேட்கிறார்கள். சட்டத்திலே கொண்டு வருவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. ஹிந்தி பேசாத பிராந்தியங்கள் இவை என்று சட்டத்திலே போட்டால், ஆந்திரா வேண்டாம் என்று சொல்லலாம், கேரளம் வேண்டாம் என்று சொல்லலாம், மைசூர் வேண்டாம் என்று சொல்லலாம். இத்தனை பேர்கள் வேண்டாம் என்று சொல்லுகிறார்களே, அதனாலே சங்கடங்கள் வரலாம். 1965-லே ஆங்கிலம் போய் விடும், ஹிந்தி தான் இருக்கும் என்பதை இப்பொழுது மாற்றவில்லையா? மேலும் உறுதியை எல்லாம் சேர்த்து சட்டத்தில்போட்டாலும் பின்னர் மெஜாரிட்டி இருந்தால் சட்டத்தை மாற்றிக்கொள்ளலாம். ஆனால் உறுதிமொழி அப்படிப் பட்டதல்ல. பிரதம மந்திரி அவர்களும், உள்நாட்டு அமைச்சர் அவர்களும் உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த உறுதியை யாரும் மாற்ற முடியாது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஆங்கிலம் இருக்க வேண்டும், ஆங்கிலத்தை எடுக்கக் கூடாது என்று நாம் கூறுவது போல, அந்த உறுதியை மறக்க யாராலும் முடியாது. இது தான் இப்பொழுதைய நிலைமை. இந்தச் சட்டத்தை பொறுத்த மட்டில் நம்முடைய தேவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. நாம் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று சொன்னோம். ஹிந்தியே கூடாது என்று கனம் அங்கத்தினர் மதியழகன் தீர்மானத்தில் இல்லை. ஹிந்தியே கூடாது என்பது வேறு விஷயம். ஆங்கிலமே கூடாது என்று வட நாட்டிலுள்ள ஹிந்தி வெறியர்கள் சொல்லுகிறார்கள். ஆங்கிலத்தை நாம் ஓரளவு கையாள முடியும். இது வரையிலும் கையாண்டு வந்திருக்கிறோம். சில பேர், "ஆங்கிலம் எதற்கு, மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லையே" என்று

[திரு. எம். பக்தவத்சலம்] [8th August 1963

சொல்லுகிறார்கள். அதுவும் ஓரளவு உண்மை தான். கனம் மதியழகன் அவர்கள் 14 மொழிகளும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆங்கிலம், ஹிந்தியோடு தமிழையும் சேர்த்துக் கொள்ளுங்கள், தமிழை விட பழமையான மொழி எங்கே இருக்கிறது என்று சொன்னால் கூட இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதற்கு நான் தயங்கி இருப்பேன். நேற்று சுதந்திரா கட்சித் தலைவர் 'நியூடரல்' ஆக இருந்ததுபோல் நானும் ஒரு வேளை 'நியூட்ரல்' ஆக இருப்பேனோ என்னமோ. ஹிந்தி, ஆங்கிலம் தமிழ் மூன்றுமே இருக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லி இருக்கலாம். ஸ்விட்ஸர்லாந்தில் மூன்று மொழிகள் இருக்கின்றன. அதை விட்டு விட்டு பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும் என்று சொன்னால் அது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விஷயம். நடைமுறையில் ஆட்சியை நடத்த முடியுமா? நான் அதிகமாக மன்றத்தின் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இதனால் நம்முடைய மொழிக்கு ஆபத்து ஒன்றும் இல்லை. மத்திய ஆட்சியில் பங்கு கொள்வதற்கும் பாதகம் இல்லை. நம்முடைய பயத்தைத் தவிர்க்கக் கூடிய அளவுக்கு ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும். பதினான்கு மொழிகளும் இருக்க வேண்டும் என்று சொல்லுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு தீர்மானம். ஆகையால் இந்தத் தீர்மானத்தை கனம் அங்கத்தினர் வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். வழி தெரியவில்லை என்பதற்காக, 'டெஸ்பெரேட்டாக'ப் போய் ஏதோ ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து விட்டு, அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மன்றத்தைப் பற்றி ஒரு தவறுதலான கருத்துக்கு வெளியிலே இடம் ஏற்படும். ஆகவே இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த அங்கத்தினரை வாபஸ் வாங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அப்படி வாபஸ் வாங்கவில்லை என்றால், நான் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. பதினான்கு மொழிகளிலே எந்த மொழியின் மீதும் வெறுப்பு ஏற்பட்டு, அதனால் இதை எதிர்க்கிறோம் என்று யாரும் கருதக் கூடாது. பதினான்கு மொழிகளை வைத்து ஆட்சி நடத்துவது சரியல்ல என்ற காரணத்தால், இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கு இல்லை என்று கூறிக் கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

— —

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்திருக்கிற, தீர்மானத்தைப் பற்றி நல்ல வகையில், உற்சாகமாக பல அங்கத்தினர்கள் நல்ல பல கருத்துக்களை எடுத்து வழங்கி இருக்கிறார்கள். இந்தக் கருத்து அரங்கத்தில் கடைசியாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று வாதங்களை எடுத்துச் சொன்னார்கள். அந்த வாதங்களுக்கு மட்டும் என்னுடைய சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த தீர்மானத்தைச் சபை ஏற்கவேண்டாம என்று அமைச்சரவர்கள் சொல்லி இருந்தாலும், மீண்டும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். என்னுடைய இந்த தீர்மானத்தை நிறைவேற்றிய பெருமை இந்த



8th August 1963] [கே. ஏ. மதியழகன்]

மாமன்றத்திற்கு வேண்டுமென்று மரியாதையாகவும், வணக்கமாகவும் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆங்கிலமும் இருக்கிறது என்று சாமர்த்தியமாகவும், சாதுரியமாகவும் எடுத்துச் சொன்னார்கள். 1965-ம் வருஷம் ஜனவரிமாதம் 26-ம்தேதி காலை முதல் ஆங்கிலம் கிடையாது. அதுதான் இன்றைக்கு இருக்கும் நிலைமை. 1975-ம் வருஷம் ஏதோ ஒரு உத்தியோகஸ்தருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுப்பது போல செய்திருக்கிறார்கள். மூன்றாவது செக்ஷன், நான்காவது செக்ஷன், ஐந்தாவது செக்ஷன் இவை பற்றிச் சொன்னார்கள். மூன்றாவது செக்ஷன் என்ன சொல்லுகிறது?

" Notwithstanding the expiration of the period of fifteen years from the commencement of the Constitution, the English language may, as from the appointed day, continue to be used, in addition to Hindi;—

(a) for all the official purposes of the Union for which it was being used immediately before that day ; and

(b) for transaction of business in Parliament."

ஆகவே, இந்தி தான் ஆட்சி மொழியாக விளங்கும். அதுதான் மூன்றாவது செக்ஷன். அங்கே தான் அபாயகரமான விபத்து இருக்கிறது. அதற்கு அடுத்த செக்ஷனுக்கு அழைத்துச் செல்லுகிறேன். அதைத்தான் கத்தி தொங்குகிறது தலைக்கு மேல் என்று சொன்னேன். அதற்கு மேல் வருகிறது நான்காவது செக்ஷன்

" Section 4.—After the expiration of ten years from the date on which section 3 comes into force, the President may appoint a Committee consisting of thirty members, of whom twenty shall be members of the House of People and ten shall be members of Council of States in accordance with the system of proportional representation by means of the single transferable vote ".

கருணாநிதி எடுத்துச் சொன்னது போல, லோக சபையிலிருந்தும், ராஜ்ய சபையிலிருந்தும் 30 பேர்களைப் பொறுக்கி எடுத்து ஆராயச் செய்வார்கள் பத்து வருஷம் கழித்து ஜனாதிபதி ஒரு கமிட்டியை நியமிக்கலாம். அந்தக் கமிட்டி எதற்கென்று திட்ட வட்டமாக சொல்லுகிறார்கள். இந்த செக்ஷன் தூக்குக் கயிறு என்று நான் சொல்லுகிறேன். நாலாவது செக்ஷனில் இரண்டாவது உட்பிரிவு என்ன சொல்லுகிறது?

"It shall be the duty of the Committee to review the progress made in the use of Hindi for the official purposes of the Union and submit a report to the President making recommendations thereon."

1947-ல் முதலில் ஆபத்து வந்தது. இரண்டாவது ஆபத்து 1965-ல். மறுபடியும் ஆபத்து 1975-ல் வருகிறது. அது வரையில் ஹிந்தி எவ்வளவு வந்திருக்கிறது, வளர்ந்திருக்கிறது. எவ்வளவு வற்புறுத்தலாம், புகுத்தலாம் என்று பார்ப்பார்கள். ஆகவே தான், It is the duty of the Committee to review the progress made என்று

[கே. ஏ. மதியழகன்] [8th August 1963

இருக்கிறது. இந்தப் பகுதிதான் மிக ஆபத்தான பகுதி. மற்ற மொழிகள் இருப்பது போல பாவனைக்கு இருக்கலாமே தவிர, ஆங்கிலத்திற்கு பழைய நிலை வராது. பிறகு என்ன ஆகும்?

திரு. சுப்ரமணியம் சென்னை வரும்போது அவரைச் சந்தித்து உறுதிமொழியிருக்கிறதா என்பதில் அவர் கருத்தைக் கேட்கச் சொன்னார் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் இருவரும், கனம் சுப்பிரமணியமும், கனம் டி. டி. கிருஷ்ணமாசாரி அவர்களும், இந்த உயிர் பிரச்சினை விவாதிக்கப்படும் நேரத்தில், பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. கனம் சுப்பிரமணியம் ஜர்மனியிலும், கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆஸ்திரேலியாவிலும் இருந்தார்கள். அவ்வளவு அக்கறையற்றவர்கள் இந்த பிரச்சினையில் என்ன சொல்லுவார்கள் என்பதும் தெரியும். May என்றால் என்ன. Shall என்றால், என்ன? இரண்டும் ஒன்றுதான் என்று சொல்கிறார்கள் அமைச்சர். அவர்கள் புதிதாக உதாரணங்கள் கொடுத்த பாணியிலே நானும் உதாரணம் கொடுக்கலாம் என்றால், நிதியமைச்சர் கழுதையைப் பார்த்துக் குதிரை என்று சொல்லுகிறார். அதை ஒத்துக் கொள்ளாத என்னை குருடன் என்கிறார். May க்கும் Shall க்கும் வித்தியாசம் இல்லையென்றால், நாங்கள் கேட்கும் வார்த்தையையே போட்டிருக்கக் கூடாதா? பாராளு மன்றத்திலே கூட நல்ல எண்ணத்தை இந்தி வெறியர்கள்—இந்தி உற்சாகக்காரர்கள், அமைச்சர் நல்ல வார்த்தையை உபயோகிக்கிறார்கள்--தாக்கி இருக்கிறார்கள். இதுதான் விவகாரம். அதை சாதுரியமாக, சாமர்த்தியமாக மாற்றிச் சொல்வது சரியாகாது. இதையெல்லாம் சொன்னால், அமைச்சர் babel of tongues என்றுதான் சொல்லுவார்கள் என்கிறார்கள். விவகாரத்தை, தொங்கும் கத்தியை, எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியுமா? மரண தண்டனை ஆங்கிலத்திற்கு 1965-ல் இருக்கிறது? எங்கே அஷ்ஷூரன்ஸ் இருக்கிறது? நேரு அஷ்ஷூரன்ஸ் எப்படிச் சேர்க்க முடியும் என்று கேட்டார்? கனம் சுப்பிரமணியமும் கனம் பக்தவத்சலமும் அஷ்ஷூரன்ஸ் இருக்கிறது என்கிறார்கள்? நாங்கள் யாரை நம்புவது? May யும் shall ம் ஒன்றுதான் என்றால், ஏன் ஆங்கிலத்தில் இரண்டு சொற்களும் இருக்கின்றன? ஆங்கிலப் புலவர்களைக் கூட்டி முடிவு காணுங்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆங்கில இலக்கியத்திலேயே அப்படித்தான் இருக்கிறது. எவ்வளவோ கோளாறுகள் இருக்கின்றன.

**திரு. கே. ஏ. மதியழகன் :** "Shall" என்று போட ஏன்
2-00 p.m. தயக்கம்? ஏன் சிறைக் கைதியாக்க வேண்டும், ஆங்கிலத்தை? வெறித்தனமாக சிலர் நடந்துகொண்டால், நேருவும், லால்பகதூர் சாஸ்திரியும் அவர்களுக்கு பணிவானேன்? இதனால் கிளர்ச்சியில் ஈடுபடுகிறார்கள் அல்லது வேறு காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்றால் 'வரட்டும், பார்க்கிறேன்' என்று தெம்பாக, தைரியமாகச் சொல்லுகிறார்கள். நமது முதல் அமைச்சர் அவர்கள் இங்கே



8th August 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

இல்லை. அவர் இந்த நேரத்தில் இருக்கவேண்டுமென்று நான் பிரியப்பட்டேன். எதற்கு எடுத்தாலும் 'ஆகட்டும், பார்க்கலாம்' என்று சொல்லும் முதல் அமைச்சர் காமராசர், போராட்டம் நடத்தப் போகிறோம் என்பதைப் பற்றி 'வரட்டும், பார்த்துவிடுகிறேன்' என்று சொல்லுகிறார். 'ஆகட்டும், பார்க்கலாம்' என்று சொல்லக் கூடியவர் 'வரட்டும், பார்த்து விடுகிறேன்' என்று சொன்னதற்கு அவரை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இந்தப் பிரச்னை ஏதோ ஒரு கட்சிப் பிரச்னை அல்ல. தனிப்பட்ட . . .

MR. SPEAKER: Without replying, the hon. Member is wasting time. He should come to the point.

**SRI K. A. MATHIALAGAN :** Sir, I am not wasting the time. I am only replying. இது ஒரு முக்கியமான பிரச்னை. பல கோடிக்கணக்கான மக்களை, அவர்களுடைய மொழி உணர்வினை, அவர்களுடைய தன்மானத்தினை பாதிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுடைய தன்மானத்தை மதிக்காது போனால், அவர்களுடைய உணர்வை, சிறப்பை அறியாது போனால், இந்த ஜனநாயக உணர்ச்சிகளை மதிக்கவில்லையானால், லட்சக்கணக்கான மக்களுடைய லட்சியத்தைப் பிரதிபலிக்கவில்லை என்ற நிலை ஏற்படுமானால், மீண்டும் சொல்லுகிறேன் இந்த நாட்டுச் சிறைக்கூடங்களை நிரப்ப எத்தனைவிதமான இடர்பாடுகளையும் ஏற்றுக்கொள்ள, வேறு வேறு விதமான தண்டனைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ள எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் போர்ப்படை திரண்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, இன்னமும் சொல்லுகிறேன், வேண்டுமானால் சர்க்கார் சார்பிலேயே இத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வந்து டில்லியில் இருக்கும் அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை வற்புறுத்தி எனது உரையை முடிக்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That this House recommends to the Government to convey to the Union Government that this House is of opinion that steps should be taken to recognise all the fourteen languages enumerated in the Eighth Schedule of the Constitution as the Official Languages of the Union under Article 343 and till such time English shall be retained for all official purposes of the Indian Union".

The Resolution was put and declared lost.

A poll was demanded and the House divided this :—

**AYES.**

| | | | |
|---|---|---|---|
| 1 Sri V. R. Nedunchezhiyan | | 7 Sri A. K. Subbiah | |
| 2 ,, M. Karunanithi | | 8 ,, V. S. S. Mani | |
| 3 ,, K. A. Mathialagan | | 9 ,, M. Rajangam | |
| 4 ,, Saw. Ganesan | | 10 ,, Kanchi Manimozhiar | |
| 5 ,, A. P. Dharmalingam | | 11 ,, M. Shanmugam | |
| 6 ,, Rama Arangannal | | 12 ,, N. Rajangam | |

[Mr. Speaker] [8th August 1963

AYES—*cont.*

13 Sri K. S. Mani
14 „ N. Chinnamunusami Chetty
15 „ S. Madhavan
16 „ T. P. Alagamuthu
17 „ S. Mani
18 „ V. R. Periannan
19 „ P. V. Sriramulu
20 „ M. Kamalanathan
21 „ C. G. Viswanathan
22 „ S. Muthulingam
23 Pulavar K. Govindan
24 Sri C. Manickam
25 „ T. Chinnasamy
26 „ M. R. Krishnamurthy
27 „ A. Thangavelu
28 „ Munu Adhi
29 Sri S. Murugaiyan
30 „ P. U. Shanmugham
31 Srimathi Jagadhambal Velayutham
32 Sri M. S. Mani
33 „ K. Thirupathy
34 „ C. K. Chinnaraji
35 „ R. Nallamuthu
36 „ N. P. Sengottuvelu
37 „ S. Arumugham
38 „ M. V. Karivengadam
39 „ A. G. Balakrishnan
40 „ R. Narayanan
41 „ S. Ramaswamy
42 „ V. Krishnamoorthy
43 „ S. J. Ramaswamy
44 „ R. Sampangi

NOES.

1 Sri K. Parthasarathy
2 „ R. Krishnaswamy Naidu
3 „ K. S. Abdul Azeez
4 „ M. Alagiriswamy
5 „ C. M. Ambikapathi
6 „ L. Anandan
7 „ S. Angamuthu Naicker
8 „ K. S. Ardhanareeswara Gounder
9 „ A. Appavoo Thevar
10 „ A. Arumugam
11 „ R. S. Arumugam
12 „ V. S. Arunachalam
13 „ A. B. Balagan
14 „ A. M. P. S. Balagangadharan
15 The Hon. Sri M. Bhaktavatsalam
16 „ P. Kakkan
17 „ V. Ramaiah
18 The Hon. Srimathi Jothi Vencatachellum
19 Sri P. Ramachandran
20 S. Chinnayyan
21 „ A. S. Dhakshinamoorthy Gounder
22 „ M. Dhandayuthapani Pillai
23 „ A. Doraiswamy
24 „ V. Ellamma Naidu
25 „ T. P. Elumalai
26 „ G. Gomathisankara Dikshithar
27 „ K. S. G. Haja Sheriff
28 „ P. Jayaraj
29 „ T. Kadambavanasundaram
30 „ A. K. Kaliappa Gounder
31 „ T. Karcha Gowder
32 Sri C. Kothandarama Bhagavathar
33 „ M. Kulandaiswamy Gounder
34 „ T. Manavalan
35 „ M. Maruthanayagam Pillai
36 „ J. Matha Gowder
37 „ M. P. Muthukaruppannaswami Gounder
38 „ P. K. Muthuvellappa Gounder
39 The Hon. Sri N. Nallasenapathi Sarkarai Manradiar
40 „ G. Bhuvarahan
41 „ S. M. A. Majid
42 Srimathi P. K. R. Lakshmikantham
43 „ A. S. Ponnammal
44 „ R. Krishnaveni
45 „ Lakshminarasamma
46 „ Parvathi Arjunan
47 „ N. K. Ranganayaki
48 Kumari D. Sulochana
49 Sri K. Narayanaswami Pillai
50 „ N. Duraipandi
51 Sri K. P. Palaniswamy
52 „ K. N. Palaniswami Gounder
53 „ G. D. Perumal Raju
54 „ K. Ponniah
55 „ S. Ponnusamy
56 „ R. Rajagopalswamy Naicker
57 „ G. Rajaram
58 „ A. Ramachandra Rayer
59 „ N. Ramachandra Reddy
60 „ A. L. Ramakrishna Naidu
61 „ S. Ramalingam
62 „ V. Ramanathan



8th August 1963]

NOES—*cont.*

63 Sri R. Rangaswamy
64 „ S. Sadasivam
65 „ B. Parameswaran
66 „ K. T. Kosalram
67 Dr. B. Natarajan
68 Sri K. R. Sambandam
69 „ V. Sankaran
70 „ M. S. Selvarajan
71 „ A. Senapathi Gounder
72 „ R. Sengaliappan
73 „ N. Shanmugasundaram
74 Sri SV. RM. Sivaraman Ambalam
75 „ S. Sivasubramaniam
76 „ C. Srinivasan
77 „ Soundaravel Servai
78 „ A. R. Subbiah Mudaliar
79 „ R. Subramaniam
80 „ N. Subramaniam Chettiar
81 „ K. B. Palani
82 „ T. S. Swaminatha Odayar
83 „ M. D. Thiagaraja Pillai
84 „ A. P. C. Veerabahu

Neutral—*Nil.*

Ayes : 44. Noes : 84.

The Resolution was lost.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned. 2-10 p.m.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

158. *The Finance Accounts of the Government of Madras for the year* 1961–62. [*Laid on the Table of the House under Article* 151 (2) *of the Constitution of India.*]

159. *Notification issued with G.O. Ms. No.* 1984, *Home, dated 19th June* 1963 *amending Rule* 294-A *of the Madras Motor Vehicles Rules*, 1940 *regarding permits issued under section* 42 *of the Motor Vehicles Act*, 1939 *for the stage carriages and goods vehicles belonging to Neyveli Lignite Corporation Limited.* [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

160. *Notification issued with G.O. Ms. No.* 367, *Home, dated 31st January* 1963 *amending Rule* 339 *of the Madras Motor Vehicles Rules*, 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

161. *Notification issued by the Collector of Coimbatore, dated 19th April* 1963 *regarding the removal of Sri K. Thirumalaiswami Gounder from the office of the President of Devanurpudur Panchayat, Udumalpet taluk, Coimbatore district with immediate effect.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

[8th August 1963

**B. Reports, Notifications and Other Papers.**

*37. *Speech of the Hon. Minister for Finance presenting the First Supplementary Estimates for 1963–64 to the Legislature on 7th August 1963 (English and Tamil).*

38. *Seventh Report of the Committee on Estimates on District Administration.*

* Laid on the table of the House on 7th August 1963.



APPENDIX I.

[*Vide* Answer to Short Notice Question No. 1 on page 249 supra.]

The following measures have been taken by Government for the rehabilitation of displaced goldsmiths :—

(1) (*a*) Four Industrial Co-operative Societies for the manufacture and sale of 14 carat gold ornaments, silver vessels and precision parts in metal, etc., with goldsmiths as members have been organised at Madras, Madurai, Coimbatore and Tiruchirappalli. The scheme is expected to provide employment for 50 persons at each centre and involves a total expenditure of Rs. 6,12,800.

(*b*) The question of setting up a co-operative gold refinery for the manufacture of 14 carat gold for supply to the four industrial co-operatives of displaced goldsmiths and to individual goldsmiths is under active consideration.

(2) Orders have been issued to the Employment Exchanges to register the goldsmiths thrown out of employment and who seek assistance, without regard to their age and educational qualifications and sponsor such candidates against suitable vacancies notified by the Government Departments. The periorities in the matter of placement in vacancies in Government Offices have also been revised giving the goldsmiths the highest priority after war service candidates. Orders have also been issued to the effect that candidates who possess qualifications approximating to the prescribed ones may be nominated by the Employment Exchanges for various appointments.

(3) Instructions have been issued for the grant of loans up to Rs. 2,000 under the State Aid to Industries Act for setting up even common-place and processing industries in relaxation of the existing policy of granting such loans only for such of those industries as produce essential consumer goods and other articles or ancillary parts to feed larger industries that are in short supply. Loans to the extent of Rs. 2,18,000 have been sanctioned to the goldsmiths up to the 15th July 1963 under the scheme.

(4) A scheme for the disbursement of a loan up to Rs. 1,000 for a single member in a family of displaced goldsmiths to enable him to set up a petty trade has also been sanctioned by Government. The loan will be sanctioned on the personal security to be furnished by the applicant and it will be disbursed in two equal instalments. A provision of Rs. 5 lakhs has been made for this scheme for the present. Loans to the extent of Rs. 1,44,800 have been sanctioned under the scheme up to 15th July 1963.

(5) Orders have been issued to the effect that displaced goldsmiths should be admitted in all Industrial Training Institutes relaxing the age limit and educational qualification, provided they are otherwise qualified.

(6) Preference will be given to the displaced goldsmiths in the matter of admission in the Workshop Wings for training in Blacksmithy and Carpentry in the Rural Extension Training Centres at T. Kallupatti, Bhavanisagar, S. V. Nagaram and Pattukkottai.

(7) When selecting candidates for drivers' training schemes in the State Transport, preference will be given to goldsmith applicants.

(8) Provision has been made for giving training to the displaced goldsmiths in the following units under the Industries Department to the extent indicated against each :—

(*a*) Training Centre for the manufacture of Art Plates at Kumbakonam—15 goldsmiths.

(*b*) Training Centre for Bell Metalware, Nachiarkoil—15 goldsmiths.

(*c*) Training Centre for Art Metal Work, Swamimalai—10 goldsmiths.

(*d*) Training Centre for the manufacture of Locks at Dindigul—12 goldsmiths.

The total cost involved in the schemes mentioned at (*a*), (*b*) and (*c*) above is Rs. 64,860 recurring and Rs. 69,000 non-recurring. A recurring expenditure of Rs. 46,000 has been sanctioned for the scheme mentioned at (*d*) above.

(9) Instructions have been issued to the Commissioner, Corporation of Madras, Commissioners of Municipalities and Executive Officers of Township Committees to give preference to displaced goldsmiths in the matter of grant of licence under the Madras Municipalities and Madras Public Health Acts for running petty business involving grant of licence.

(10) Orders have been issued relaxing the age limit of educationally qualified candidates belonging to the goldsmiths community up to 3 years in the matter of admission in Polytechnics and Engineering Colleges from 1963–64, as in the case of candidates belonging to Scheduled Castes and Scheduled Tribes.



## APPENDIX II

[*Vide* Answer to Starred Question No. 41 on page 257 supra.]

(*a*) 88

(*b*) and (*c*) *A statement showing the particulars up to the end of* 1962, *is given below* :

| *District.* | *Name of the Express Route.* | *Number of buses.* | *Seating capacity of the bus.* | *Number of days on which spare buses were utilised.* | *Seating capacity of the spare bus.* | *Difference in the seating capacity.* *Additional seating capacity.* | *Difference in the seating capacity.* *Reduction in seating capacity.* | *Remarks.* |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| State Transport Authority. | 1. Madras—Krishnagiri. | 4 | 49 each | 35 | 53 | 4 | .. | .. |
| | 2. Madras—Nellore .. | 2 | 51<br>63 | .. | .. | .. | .. | .. |
| | 3. Madras—Chidambaram. | 2 | 45<br>46 | .. | .. | .. | .. | .. |
| | 4. Madurai—Salem .. | 4 | 45 each | 103 | 43 | .. | 2 | .. |
| | 5. Tiruchirappalli—Tiruvannamalai. | 2 | 49 each | .. | .. | .. | .. | .. |
| | 6. Ootacamund—Calicut | 2 | 33<br>34 | 76 | 24 | .. | 10 | .. |
| | 7. Salem—Mossur .. | 1 | 48 | 40 | 45 | .. | 5 | .. |
| Chingleput .. | 8. Madras—Vellore (via) Mount. | 1 | 51 | .. | .. | .. | .. | .. |
| | 9. Madras—Vellore (via) Aminjikarai. | 2 | 51 each | .. | .. | .. | .. | .. |
| North Arcot .. | 10. Vellore—Tirupattur .. | 4 | 49<br>59<br>48<br>52 | 14<br>4<br>4<br>4 | 44<br>45<br>38<br>38 | ..<br>..<br>..<br>.. | 5<br>14<br>10<br>10 | ..<br>..<br>..<br>.. |
| South Arcot .. | 11. Chidambaram—Salem. | 3 | 39<br>43<br>39 | 17<br>14<br>12 | 45<br>39<br>4 | 6<br>..<br>.. | ..<br>4<br>.. | ..<br>..<br>.. |
| | 12. Madras—Gingee .. | 2 | 48<br>47 | 7<br>2 | 43<br>43 | ..<br>.. | 5<br>4 | ..<br>.. |
| | 13. Cuddalore—Tiruchirappalli. | 4 | 43<br>39<br>37<br>43 | 35<br>7<br>5<br>43 | 42<br>42<br>50<br>42 | ..<br>3<br>13<br>. | 1<br>..<br>..<br>1 | ..<br>..<br>..<br>.. |
| | 14. Cuddalore—Salem .. | 1 | 44 | 7 | 50 | 6 | .. | .. |
| | 15. Tiruvannamalai—Madras. | 2 | 60<br>55 | 12<br>.. | 39<br>.. | ..<br>.. | 21<br>.. | ..<br>.. |
| Madurai .. | 16. Madurai—Dindigul .. | 3 | 40<br>42<br>43 | 34<br>..<br>.. | 64<br>48<br>49 | 24<br>6<br>6 | ..<br>..<br>.. | ..<br>..<br>.. |

| District. | Name of the Express Route. | Number of buses. | Seating Capacity of the bus. | Number of days on which spare buses were utilised. | Seating capacity of the spare bus. | Difference in the seating capacity. Additional seating capacity. | Difference in the seating capacity. Reduction in seating capacity. | Remarks. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| Madurai—*cont.* | 17. Madurai—Virudunagar. | 1 | 40 | 70 | 59 | 19 | .. | .. |
| | | | | | 59 | 19 | .. | .. |
| | | | | | 49 | 9 | .. | .. |
| | | | | | 4 | 9 | . | .. |
| | | | | | 65 | 25 | .. | .. |
| | | | | | 59 | 19 | .. | .. |
| | 18. Madurai—Palani .. | 2 | 43 | 72 | 45 | 2 | .. | .. |
| | | | 43 | .. | 48 | 5 | .. | .. |
| | 19. Dindigul—Lower-camp. | 2 | 40 | 43 | 64 | 24 | .. | .. |
| | | | 45 | .. | 44 | .. | 1 | .. |
| .. | | | | .. | 47 | 2 | .. | .. |
| | | | | .. | 59 | 14 | .. | .. |
| | | | | .. | 48 | 3 | .. | .. |
| | | | | .. | 47 | 2 | .. | .. |
| | 20. Madurai—Rajapalayam. | 2 | 49 | 31 | 44 | .. | 5 | .. |
| | | | 49 | .. | 50 | 1 | .. | .. |
| | | | | .. | 62 | 13 | .. | .. |
| | 21. Madurai—Theni .. | 2 | 44 | 47 | 59 | 15 | .. | .. |
| | | | 41 | .. | 49 | 8 | .. | .. |
| | | | | .. | 45 | 4 | .. | .. |
| | | | | .. | 49 | 8 | .. | .. |
| | 22. Dindugul—Palani .. | 2 | 50 | 15 | 47 | .. | 3 | .. |
| | | | 49 | .. | 47 | .. | 2 | .. |
| Ramanathapuram | 23. Madurai—Devakottai. | 2 | 49 each | 37 | 59 | 10 | .. | .. |
| | | | | .. | 49 | .. | .. | .. |
| | | | | .. | 39 | .. | 10 | .. |
| | | | | .. | 44 | .. | 5 | .. |
| | | | | .. | 65 | 16 | .. | .. |
| .. | 24. Madurai—Keelakarai | 1 | 45 | 7 | 48 | 3 | .. | .. |
| | 25. Madurai—Mandapam. | 3 | 49 | 15 | 55 | 6 | .. | .. |
| | | | 44 | .. | 49 | 5 | .. | .. |
| | | | 49 | .. | 38 | .. | 11 | .. |
| Tirunelveli .. | 26. Tirunelveli Junction—Tuticorin. | 1 | 43 | 22 | 47 | 4 | .. | .. |
| | 27. Tuticorin—Kovilpatty. | 1 | 44 | 11 | 38 | .. | 6 | .. |
| | | | | | 47 | 3 | .. | .. |
| | 28. Tirunelveli Junction—Courtalam. | 1 | 33 | 46 | 44 | 11 | .. | .. |
| | | | | | 49 | 16 | .. | .. |
| | | | | | 58 | 25 | .. | .. |
| | | | 46 with effect from 5-6-1962. | | 44 | .. | 2 | .. |
| | | | | | 49 | 3 | .. | .. |



| District. | Name of the Express Route. | Number of buses. | Seating capacity of the bus. | Number of days on which spare buses were utilised. | Seating capacity of the spare bus. | Difference in the seating capacity. Additional seating capacity. | Difference in the seating capacity. Reduction in seating capacity. | Remarks. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| Tirunelveli—*cont.* | 29. Tirunelveli Junction—Palangudi. | 2 | 43 (each) | 12 | 44 | 1 | .. | .. |
| | | | | 36 | 58 | 15 | .. | .. |
| | | | | 3 | 49 | 6 | .. | .. |
| | | | | 2 | 49 | 6 | .. | .. |
| | | | | 1 | 58 | 15 | .. | .. |
| | | | | 2 | 49 | 6 | .. | .. |
| | | | | 1 | 58 | 15 | .. | .. |
| | | | | 3 | 44 | 1 | .. | .. |
| | | | | 9 | 49 | 6 | .. | .. |
| .. | | | | 1 | 44 | 1 | .. | .. |
| .. | | | | 1 | 44 | 1 | .. | .. |
| .. | | | | 1 | 49 | 6 | .. | .. |
| | | | | 4 | 49 | 6 | .. | .. |
| | | | | 3 | 58 | 15 | .. | .. |
| .. | | | | 6 | 49 | 6 | .. | .. |
| | 30. Courtallam—Srivilliputhur. | 2 | 50 | 22 | 44 | .. | 6 | .. |
| | | | 9 | 49 | 49 | .. | 1 | .. |
| | | | | 2 | 49 | .. | 1 | .. |
| | | | 44 | 3 | 49 | 5 | .. | .. |
| | | | | 16 | 38 | .. | 6 | .. |
| | | | | 28 | 44 | .. | .. | .. |
| | 31. Madurai—Tuticorin. | 3 | 50 | 17 | 58 | 8 | .. | .. |
| | | | | 1 | 44 | .. | 6 | .. |
| | | | | 7 | 58 | 8 | .. | .. |
| | | | 49 | 1 | 44 | .. | 6 | .. |
| | | | | 2 | 64 | 15 | .. | .. |
| | | | | 9 | 50 | 1 | .. | .. |
| | | | | 2 | 62 | 13 | .. | .. |
| | | | | 9 | 48 | .. | 1 | .. |
| | | | 46 | 1 | 49 | 3 | .. | .. |
| | | | | 10 | 48 | 2 | .. | .. |
| | | | | 12 | 48 | 2 | .. | .. |
| | 32. Tirunelveli Junction—Tiruchendur. | 1 | 50 | 7 | 45 | .. | 5 | .. |
| | | | | 5 | 49 | .. | 1 | .. |
| | | | | 6 | 39 | .. | 11 | .. |
| | | | | 4 | 39 | .. | 11 | .. |
| | | | | 7 | 59 | 9 | .. | .. |
| | 33. Tirunelveli Junction—Nagarcoil. | 2 | 44 | 16 | 37 | .. | 7 | .. |
| | | | 46 with effect from 17-11-62. | 10 | 35 | .. | 11 | .. |
| | 34. Tirunelveli Junction—Madurai. | 2 | 50 | 8 | 58 | | | 8 introduced with effect from 19-5-62. |

| District. | Name of the Express Route. | Number of buses. | Seating capacity of the bus. | Number of days on which spare buses were utilised. | Seating capacity of the spare bus. | Difference in the seating capacity. Additional seating capacity. | Reduction in seating capacity. | Remarks. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| Tirunelveli—cont. | 34. Tirunelveli Junction—Madurai—cont. | | 44 | .. | .. | .. | Introduced with effect from 3-11-62, | |
| Kanyakumari, | | Nil, | | | | | | |
| Salem | 35. Salem—Krishnagiri. | 2 | I 46 | 7 | 45 | .. | 1 | .. |
| | | | | 7 | 44 | .. | 2 | .. |
| | | | | 37 | 46 | .. | .. | .. |
| | | | II 48 | 19 | 45 | .. | 3 | .. |
| | | | 54 | 5 | 44 | .. | 10 | .. |
| | 36. Salem—Cuddalore. | 1 | 55 | 17 | 40 | .. | 15 | .. |
| | 37. Salem—Tiruchirappalli. | 2 | I 43 | 27 | 34 | .. | 9 | .. |
| | | | | 3 | 49 | 6 | .. | .. |
| | | | II 58 | 8 | 45 | .. | 13 | .. |
| | | | 54 | 5 | 51 | .. | 3 | .. |
| Tiruchirappalli. | 38. Tiruchirappalli—Tirupathur. | 2 | 60 (each) | .. | .. | .. | .. | .. |
| | 39. Thanjavur—Madurai. | 3 | 40 | .. | .. | .. | .. | .. |
| | | | 40 | .. | .. | .. | .. | .. |
| | | | 42 | 10 | 50 | 8 | .. | .. |
| | 40. Tiruchirappalli—Salem. | 2 | 50 | | | | | |
| | | | 50 | 3 | 49 | .. | 1 | .. |
| Thanjavur, | | Nil. | | | | | | |
| Coimbatore | 41. Coimbatore—Salem, | 2 | 45 | 25 | 43 | .. | 2 | .. |
| | | | 51 | .. | .. | .. | .. | .. |
| | 42. Erode—Palani. | 3 | 49 | 5 | 45 | .. | 4 | .. |
| | | | 47 | 10 | 53 | 6 | .. | .. |
| | | | 50 | 11 | 42 | .. | 2 | .. |
| The Nilgiris | | Nil. | | | | | | |

ABSTRACT.

| | |
|---|---|
| Total number of Express buses operated in the Private Sector up to the end of 1962. | 88 |
| Total number of days on which spare buses plied in place of Express buses in 1961 and 1962. | 1,476 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Saturday, 10th August 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. Chellapandian) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Bus routes*

*81 Q.—SRI T. P. ALAGAMUTHU: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) how many new routes have been opened during 1961-62 by the Development Wing (transport), districtwise; and

(b) how many permits have been granted among them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) and (b) A statement[a] is placed on the Table of the House.

**திரு. து. ப. அழகமுத்து:** டெவலப்மென்ட் விங்காக ஓப்பன் செய்யப்பட்ட பல ரூட்களில் ஸ்டே முடிவு செய்யப்படாமல் இருக்கிறது. அந்த ஸ்டே நீக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஒவ்வொன்றும் அப்போதைக் கப்போது பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுத்துக் கொள்ளப் பட்டு வருகிறது.

**திரு. எஸ். முத்துலிங்கம்:** பஸ் பெர்மிட் டிரான்ஸ்பர்ஸ், இதுவரை யார் அனுமதி பேரில் அமுல் நடந்து வந்தது? இப்போது யார் அதிகார வரம்பிற்கு உட்பட்டிருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதுபற்றி இப்போது தகவல் இல்லை.

**திரு. எம். தண்டாயுதபாணி:** தஞ்சை ஜில்லாவில் புது பஸ் ரூட்கள் ஆரம்பிப்பது நிறுத்தப்பட்டிருப்பதின் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஜீப் ரூட்கள் யோசிக்கப் பட்டது நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது நெருக்கடி நிலை யில் ஜீப் கிடைப்பதில்லை. மற்றபடி, பொதுவாக யோசிக்கப்பட்ட ப்ரப்போசல்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று சொல்வதற் கில்லை.

---

[a] Printed as Appendix I on pages 573-574.

[10th August 1963

**திரு. சி. பொன்னுசாமி:** திருநெல்வேலி மாவட்டத்தில் ஏரல் கிராமத்திலிருந்து திருச்செந்தூருக்கு பஸ் ரூட்டுக்குப் புதிதாக அப்ளிகேஷன் போட்டால் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் கவனிக்கப்படாமல் இருக்கிறது. அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** பஸ் ரூட்கள் அவசியம் என்று மக்கள் மகஜர் கொடுத்து அந்த ரூட் சர்க்காரால் சாங்க்ஷன் செய்த பிறகு அதே பஸ் ரூட்டில் வேறு முதலாளிகள் பஸ் ஓட்டுகின்ற காரணத்தினால் ஹைகோர்ட்டிற்கு ரிட் போட்டு ஸ்டே செய்கிறார்கள். மக்களுக்காக ரூட் என்பதால், ஹைகோர்ட்டில் ரிட் முடியும் வரை பஸ் ஓட்டுவதற்கு சர்க்கார் அனுமதிப்பார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வழக்குமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டால் அதற்குட்பட்டுத்தான் அரசாங்கம் காரியங்கள் நடத்த வேண்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** சில பேர்களிடத்தில் ஏராளமாக பஸ் ரூட்கள் இருப்பதால் ஐந்து ரூட்களுக்கு மேல் கொடுக்கக்கூடாது என்ற ஒரு உச்சவரம்பை சர்க்கார் கொண்டுவர முயற்சிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த உப கேள்வி இக்கேள்வியிலிருந்து எழவில்லை.

**திரு. எஸ். முத்துலிங்கம்:** இதுவரையில் டெப்டி டிரான்ஸ்போர்ட் கமிஷனரிடம் அங்கீகாரத்திற்கு வந்துள்ள பெர்மிட்டுகள் எவ்வளவு? எவ்வளவு அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது? அங்கீகாரம் செய்யப்படாதது எவ்வளவு? அதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. எம். தண்டாயுதபாணி:** அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ஜீப் பஸ்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்கள். கடந்த ஒரு ஆண்டு காலமாக தஞ்சை ஜில்லாவில் புதிய பஸ் ரூட்கள் ஆரம்பிக்கப்படவில்லை. காரணம் சர்க்காரிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். அது உண்மையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு தஞ்சைக்கு ஒரு பஸ் ரூட்டும் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போடவில்லை.

**திரு. சி. பொன்னுசாமி:** பல பாகங்களில் பொது மக்கள் பஸ்ஸில் இடம் கிடைக்காமல் காத்துக் கொண்டிருக்கும் பரிதாபத்தைக் காண்கிறோம். ஆகவே, புதிதாக பெர்மிட் கொடுக்கும்போது காம்பட்டிட்டிவ் முறையில் யார் கேட்டாலும் கொடுக்கக்கூடிய முறையில் ரூட் கொடுக்க உத்தேசம் உண்டா?



10th August 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** போக்குவரத்துத் தேவைக்கேற்றவாறு புது ரூட்கள் அளிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** எக்ஸ்ப்ரஸ் பஸ்கள் ஓடும் மார்க்கங்களில் புதிதாக பஸ் பெர்மிட்டுகள் கொடுக்கக்கூடாது என்று அரசாங்கம் கருதுகிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு ஒன்றுமில்லை.

**திரு. ஆ. தங்கவேலு:** இப்போது பஸ் பெர்மிட்கள் ஒருவர் பெயரிலிருந்து வேறு ஒருவர் பெயருக்கு மாற்றுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து:** சபை முன் வைக்கப்பட்டிருக்கும் பதிலில் அனுமதிக்கப்பெற்ற பெர்மிட்களின் எண்ணிக்கை, கொடுத்த பெர்மிட்டுகளின் எண்ணிக்கை என்று கூறப்பட்டிருக்கிறது. இரண்டும் ஒரே அர்த்தத்தில்தான் உள்ளது. என் கேள்வி, 'ஓப்பன் செய்யப்பட்ட புது பஸ் ரூட்கள் எவ்வளவு?' என்பதாகும். அதை விளக்குவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விடையில் அளிக்கப்பட்டிருக்கும் தகவல் தவிர வேறு குறிப்பான தகவல் என்னிடம் இப்போது இல்லை.

**கனம் சபாநாயகர்:** 'அனுமதிக்கப்பட்ட', 'கொடுக்கப்பட்ட' என்பதின் அர்த்தத்தைக் கேட்கிறீர்களா? அதை கனம் அங்கத்தினர் படித்துத் தெரிந்து கொள்ளலாம் அல்லது ப்ரைவேட்டாகக் கேட்டுக் கொள்ளலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** முதலில் ரூட் அப்ரூவாகிறது. கிராண்ட் செய்வது பின்னால் வருகிறது.

*Compulsory National Savings Scheme*

* 82 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Union Government have consulted the State Government regarding the Compulsory National Savings Scheme; and

(*b*) what portion of the collections in the State under the scheme, is proposed to be allötted for the State Finance?

The Hon. Sri M. BHKKTAVATSALAM: (a) Yes Sir. The State Governments were informally consulted, and

(*b*) It has been indicated that the State Governments will collect and utilise the proceeds of the Compulsory Deposit Scheme relating to Land Revenue Payers. The Government of India will be collecting and appropriating the proceeds from the schemes relating to the other categories of persons

[10th August 1963

**திரு. கே. பொன்னையா :** தொழிலாளர்கள் வாங்கும் போனஸில் ஒரு பகுதியை மீதம் செய்யவேண்டுமென்று முதலாளிகள் சொல்கிறார்கள். அதுவும் இத்திட்டத்தில் சேருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது புதிய திட்டம். யார் யார் கொடுக்க வேண்டும், யார் யாருக்கு விலக்குண்டு என்பது விளக்கப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் அளிக்கலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கட்டாய சேமிப்புத் திட்டத்தை சட்டமாகக் கொண்டுவந்து சட்டம் இயற்றிய பிறகு, சட்ட விரோதமாகக் கட்டாய சேமிப்பு நிதி கேட்பது சரியல்ல என்று கிளர்ச்சி செய்யும் அரசியல்வாதிகள்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரசாரம் செய்வது ஒரு விஷயம். அதை ஆட்சேபிப்பதற்கில்லை. சட்டவிரோதமாக யாராவது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அது கவனிக்கப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ப்ராவிடன்ட் பண்டிலிருந்து கடன் கொடுப்பது போல் இந்தக் கட்டாய டெப்பாசிட் தொகையிலிருந்தும் கடன்கள் வழங்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுபற்றி தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஆ. தங்கவேலு :** நடைமுறையில் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டம் கட்டாயச் சேமிப்புத் திட்டமா ? கட்டாய வரி விதிப்புத் திட்டமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுபற்றி அங்கத்தினர் அவர்கள் தனக்கு வேண்டிய விளக்கத்தை வைத்துக் கொள்ளலாம். இக்கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** கட்டாயச் சேமிப்பு நிதி ஆரம்ப ஆசிரியர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் ஒன்றும் உத்திரவு இடவில்லை.

ஹரிஜன காலனிகள் (தென்னாற்காடு).

* 83 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் தென் கடலூர் மாவட்டத்தில் ஹரிஜனங்களுக்காக் கட்டப்பட்ட காலனி வீடுகள் குடிபுகுமுன் விழுந்துவிட்டனவா ?

(இ) எவ்வளவு காலனிகளில் எவ்வளவு வீடுகள் அவ்வாறு சேதமாயின ? அதற்குக் காரணமென்ன ?



10th August 1963]

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(a) No, Sir, and

(b) Does not arise.

**திரு. செ. மாதவன் :** இப்பொழுது ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்குப் பணம் கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டதா ? அதற்குப் பதிலாக ஹரிஜனங்களுக்குக் கடன் கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. பூரணமாக எடுத்துவிடவில்லை. கூட்டுறவு முறையிலே காலனிகள் கட்டலாம் என்று யோசித்தோம். ஆனால் நெருக்கடி காரணமாக அந்த யோசனை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. பொன்னையா :** ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு வீட்டு மனை வாங்கிக் கொடுத்து, அஸ்திவாரம் போட்டு, மற்றபடி டவுன் பிளானிங் எல்லாம் செய்து கொடுக்கக்கூடிய ஒரு பாலிஸி சர்க்காரிடம் இருந்ததே ? அது என்னவாயிற்று ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அஸ்திவாரம் போட்டு இடம் கொடுப்பதற்குத்தான் யோசித்தோம். அதற்கும் அதிகமாக செலவு ஆகிறது. அதனால் இடம் மட்டும் வாங்கிக்கொடுக்கவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது.

**திரு. க. தா. பெருமாள் ராஜு :** கோபிசெட்டிப்பாளையம் தாலுகாவில், சத்தியமங்கலத்தில் உக்ரம் என்ற ஊரில் ஹரிஜனங்களுக்கு 60 வீடுகள் கடன் தவணையின் பேரில் கட்டிக் கொடுக்கப்பட்டவை நல்ல முறையில் இல்லை, விழுந்துவிட்டன. ஆனால், கடன் தொகையை வசூலிக்க நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். அதை வஜா செய்ய சர்க்கார் முன்வருமா ? அல்லது, அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளை ரிப்பேர் செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தக் கேள்வி தென்னாற்காடு ஜில்லாவைப் பற்றியது. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

**திரு. சி. பொன்னுசாமி :** ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் மத்திய சர்க்கார் மானியத் தொகை எவ்வளவு ? மாநில சர்க்கார் மானியத் தொகை எவ்வளவு ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு ரூபாய் 1,000 கொடுக்கப்படுவதில் ரூபாய் 750 இனாமாகவும், ரூபாய் 250 கடனாகவும் கொடுக்கப்படுகிறது. அந்த ரூபாய் 750-ல் பாதி, ரூபாய் 375 மத்திய சர்க்கார் சப்ஸிடியாகக் கொடுக்கிறார்கள்.

[10th August 1963

**புலவர் கா. கோவிந்தன் :** ஹரிஜன இலாகாவில் ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு தாசில்தார், ஒரு பிர்க்காவுக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இருக்கிறார்கள். அவர்களால் ஹரிஜன நல இலாகா வேலையை முழுவதும் சரிவரச் செய்ய முடியவில்லை.. ஆகவே, ஒரு டெப்யூடி தாசில்தார், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு ஒரு ப்யூன் ஆகிய உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஹரிஜன நல இலாகா வேலையை ஜில்லாதோறும் கவனிப்பதற்கு ஏற்கனவே தாசில்தார் கிரேடில் உத்தியோகஸ்தர்கள் போடப்பட்டிருந்தார்கள். எல்லா ஜில்லாக்களுக்கும் டெப்யூடி கலெக்டர் கிரேடில் அதிகாரிகள் இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கேயெல்லாம் அதிக உத்தியோகஸ்தர்களுக்குத் தேவை இருக்கிறதோ, தாசில்தார் டெப்யூடி தாசில்தார் அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தேவை இருக்கிறதோ அதை எல்லாம் கவனித்து ஜில்லா கலக்டரைக் கேட்டு அனுமதி வாங்கிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

**திரு. செ. மாதவன் :** இப்பொழுது ரூரல் ஹவுஸிங் ஸ்கீமின் கீழ் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொள்ளுவதற்கு சில பகுதிகளில் மட்டும் கடன் கொடுக்கப்படுகிறது. எல்லா யூனியன்களிலும் கேட்கக்கூடியவர்களுக்கெல்லாம் கடன் கொடுப்பதற்கு இந்தத் திட்டத்தின்கீழ் இடம் ஏற்படுத்தப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கிராமாந்திர வீடு கட்டும் திட்டம் ஹரிஜனங்களுக்கு மட்டும் இல்லை, ஜாதி இந்துக்களுக்கும் உண்டு. இந்தத் திட்டத்தின் கீழே எல்லோருக்கும் கடன் கொடுப்பதற்கு இப்பொழுது அரசாங்கத்தின் நிதி நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பது கனம் அங்கத்தினருக்கே தெரியும்.

### *Chief Professor in Tamil in Presidency College*

* 84 Q.—SRI N. MAHALINGAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Madras Public Service Commission called for interview for the posts of Chief Professor in Tamil in the Presidency College and selected any person;

(b) the qualifications prescribed under the rules; and

(c) the qualification of the selected candidate ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes Sir.

(b) The qualifications prescribed are :—

(i) The first or second-class degree of M.A. or B.A. (Hons.) or B.Sc. (Hons.) of a University in the State of Madras in the subject specified in respect of which application is made or any other qualification, Indian or foreign, equivalent to it;

(ii) the subject should have been taken as the main subject for the degree course.



10th August 1963]

(iii) experience in teaching the subject to college classes for not less than five years.

(iv) that the candidate has done advanced research work in that subject.

(v) preference will be given to a candidate who possesses experience in teaching 'Honours and Post-graduate classes', and

(c) the qualifications of the selected candidate is "M.A. in Tamil (Second Class) of the University of Madras".

(அ) ஆம்.

(இ) நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளாவன :—

( i) விண்ணப்பம் அனுப்பப்படுகிற பாடத்தில் தமிழ்நாடு பல்கலைக் கழகம் ஒன்றில் எம்.ஏ., அல்லது பி.ஏ. (ஹானர்ஸ்), அல்லது பி. எஸ்.சி. (ஹானர்ஸ்) பட்டத்தில் முதல் வகுப்பில் அல்லது இரண்டாவது வகுப்பில் தேறியிருத்தல் அல்லது அதற்குச் சமமான இந்திய அல்லது வெளிநாட்டுத் தகுதி.

(ii) பட்டப் படிப்பில் இந்தப் பாடத்தை முக்கிய பாடமாக எடுத்திருக்க வேண்டும்.

(iii) இப்பாடத்தைக் கல்லூரி வகுப்புகளுக்கு ஐந்தாண்டுகளேனும் கற்பித்த அனுபவம் உள்ளவராயிருக்க வேண்டும்.

(iv) இப்பாடத்தில் அபேட்சகர் சிறப்பு ஆராய்ச்சி செய்திருக்க வேண்டும்.

( v 'ஹானர்ஸ்-பட்டமேற்படிப்பு வகுப்புகளுக்கு' ஆசிரியாக இருந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன் சலுகை காட்டப்படும்.

(உ) தேர்ந்தெடுக்கப்பெற்ற அபேட்சகர் சென்னை பல்கலைக் கழகத்தின் "தமிழ் எம்.ஏ. (இரண்டாம் வகுப்பில்) தேறியுள்ளார்.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்தத் தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு நியமனம் செய்யும் விஷயத்தில் தமிழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற தமிழ் ஆசிரியர்கள் அநேகம் பேர்கள் இருக்கும்பொழுது, அப்படி இருக்கிற அந்தப் பட்டத்தை அந்த நியமனத்திற்கு வரையறை செய்யாமல், அதற்குக் குறைவான பட்டத்தை வரையறை செய்ததற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உயர்ந்த பட்டத்தை மட்டும் தகுதி என்று போட்டிருந்தால், அந்தப் பதவிக்கு சில பேர்கள் மனு போடாமலேயே இருந்து விடலாம், அல்லது அதற்குத் தகுந்த நபர் கிடைக்காமல் இருக்கலாம். அதனால் இது குறைந்த பட்ச தகுதி என்று தான் போடப்பட்டு இருக்கிறது. இருந்தாலும், அதிகபட்ச தகுதி உடையவர்கள் மனுப்போட்டிருந்தால், அவர்களைத்தான் சாதாரணமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பப்ளிக் சர்வீஸ் கமிஷன், தேர்ந்தெடுப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அபேட்சகர் இரண்டாம் தரத்தை உடையவர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வந்த விண்ணப்பங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் எவரேனும் உண்டா, முதல் தரத்தில் வெற்றி பெற்றவர்கள் எவரேனும் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இதையெல்லாம் ஆராய்ந்து முடிவு செய்திருக்கிறார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இதை ஆராய்ந்து முடிவு செய்வதற்கு அவர்களுக்கு உதவி அளிப்பதற்காக இதிலே தேர்ச்சி பெற்றவர்கள் இரண்டு பேர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஒருவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 'ஸ்பெஷலிஸ்டு இன் டமில்' திரு. ஜி. சுப்பிரமணியப் பிள்ளை. மற்றொருவர் சென்னை பல்கலைக்கழகத்தின் சார்பாக டாக்டர் வரதராசனார். இருவரும் இருந்து, நம்முடைய கல்வி இலாகாவைச் சார்ந்த ஒருவரும் இருந்து எல்லோரும் ஏகமனதாக இந்த முடிவு செய்திருக்கிறார்கள். இதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

### மாணிக்கஸ்வாமி தேவஸ்தானம்

* 85 **கேள்வி.—திரு. கோ. சி. மணி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கும்பகோணம் தாலுகா, சிவபுராணி கிராமம், மாணிக்கஸ்வாமி தேவஸ்தானத்துக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்களை அதன் மானேஜிங் டிரஸ்டி சுமார் ஐந்து வருடங்களுக்குள் அந்நிலங்களில் விற்பனை செய்துள்ளாரா ?

(இ) அப்படியானால் மொத்தம் எவ்வளவு நிலம் விற்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, and

(b) 5·13 acres of lands have been sold during the last ten years.

**திரு. கோ. சி. மணி :** தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான நிலங்களை மானேஜிங் டிரஸ்டி விற்பதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த ஆலயங்கள் அறநிலைய இலாகாவின் மேற்பார்வைக்கு வந்தது 1961-ல் தான். இந்த நிலங்கள் விற்கப்பட்டது எவ்வளவு தூரம் நியாயம் என்பதையெல்லாம் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கு நிர்வாக அதிகாரிகள் கவனம் செலுத்திவருகிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆலயங்களில் பக்தி என்ற பெயரால் இப்படிப்பட்ட மோசடிகள் நடப்பதைத் தடுப்பதற்கு அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சரியான விதிமுறைகள் இருக்கின்றனவா ? 1961-ம் ஆண்டில் ஆலயம் அறநிலைய இலாகாவின் மேற்பார்வையின்கீழ் வந்தது என்று சொல்லுகிறார்கள். இந்த மோசடியைத்தவிர, இதற்கு முன்பு இப்படி மோசடிகள் நடைபெற்றனவா, இல்லையா ?



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதிலே மோசடி இருப்பதாக இன்னும் ஏற்படவில்லை. சிறு, சிறு கோவில்கள் அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் கீழ் வராதவை பரிசீலனை செய்யப்பட்டு, இந்த இலாகாவின் கீழ் சேர்க்கப்படுகின்றன. அப்படிச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றால், அதற்கு முன்பு மோசடி நடந்தது என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. ஏதாவது தவறு நடந்தால், சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தச் சட்டம் போதாது என்று அங்கத்தினர்களுக்குப்பட்டால், அவர்கள் வேறு சில யோசனைகள் திருத்துவதற்குக் கொடுக்கலாம்.

**திரு. சா. கணேசன் :** இம்மாதிரி ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களையோ அல்லது வேறு ஸ்தாவர சொத்துக்களையோ விற்கின்றபொழுது, அதனால் பெறுகின்ற பணத்தை மீண்டும் இது மாதிரி ஸ்தாவர சொத்துக்களிலேயே போட்டு அதனுடைய வருமானத்தை அந்த ஸ்தாபனங்கள் பயன்படுத்தவேண்டும் என்ற வரையறை உண்டா ? இல்லாவிட்டால், அப்படிப்பட்ட வரையறையை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** ஸ்தாவர சொத்துக்களை விற்க வேண்டும் என்ற நிமித்தம் ஏற்பட்டால், அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் அங்கீகாரத்தின் பேரில்தான் விற்பதற்கு அனுமதிக்கப்படுகிறது. அப்படி அனுமதி இல்லாமல் விற்றால், அது செல்லாது. அப்படி விற்கவேண்டிய நிமித்தம் ஏற்பட்டு, விற்றால், அதில் கிடைக்கின்ற பணத்தை எந்தவிதமாக மீண்டும் இன்வெஸ்டு செய்வது என்பது குறித்து, குறிப்பாக ஸ்தாவர சொத்துக்களில் தான் இன்வெஸ்டு செய்யவேண்டுமென்ற வரையறை ஏற்படுத்துவது காரிய சாத்தியமாக எப்பொழுதும் இருக்காது. ஆகையினால் அறநிலையப் பாதுகாப்பு இலாகா அதை கவனித்து எந்த வகையிலே இன்வெஸ்டு செய்வது என்று உத்திரவிடுகிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தேவஸ்தானங்கள், மடாலயங்கள் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு இருக்கிற சொத்துக்களை அதனுடைய கர்த்தாக்கள் பாரதீனப் படுத்துவதைத் தவிர்ப்பதற்காக திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் புதியதாக சட்டம் கொண்டுவரவேண்டும் என்று தன்னிடம் கலந்து பேசியதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது சம்பந்தமாக ஏதாவது சட்டம் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப் பற்றி ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரியிடம் பேச வேண்டிய நிமித்தம் இல்லை. மத்திய அரசாங்கம் ஒரு கமிஷனை நியமித்தார்கள். அந்தக் கமிஷன் ஆராய்ந்து சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. அதை ஒட்டி சட்டம் வரும் என்று எதிர்பார்க்கலாம். அந்தச் சட்டத்தை சீக்கிரம் இயற்றுங்கள் என்று மட்டும் மத்திய அமைச்சரிடம் சொல்லி இருக்கிறேன். ஆனால் நம்முடைய மாகாணத்தைப் பொருத்தவரையில் அந்தச் சட்டத்திற்கு அவசியம் இல்லை என்று சொல்லலாம். இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டத்தை ஒட்டி

[10th August 1963

தான் மத்திய ஆட்சியில் செய்யப் போகிறார்கள். இங்கே இருக்கிற சட்டத்தின் கீழ் எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப் பட்டு வருகிறது.

**திரு. கோ. சி. மணி:** இந்த மாணிக்கஸ்வாமி தேவஸ்தானத்தின் டிரஸ்டி விற்ற நிலத்திற்குப் பதிலாக வேறு ஏதாவது ஸ்தாவர சொத்தையோ அல்லது இதர சொத்தையோ வாங்கியிருக்கிறார் என்று பரிசீலனையிலிருந்து தெரிய வருகிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அற நிலையப் பாதுகாப்பின்கீழ் வந்த பிறகு இதைப் பரிசீலனை செய்யும்படி நிர்வாக அதிகாரிக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது. பரிசீலனை செய்து வருகிறார் என்று கூறினேன். அதற்கு மேல் என்னிடம் தகவல் இல்லை.

*Madurai Municipal Council (increase of seats)*

* 86 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) whether the Government have taken any decision regarding the representation of Madurai Municipal Council to increase the number of seats in the Council on population basis; and

(b) if so, the decision taken thereon?

THE HON. SRI S. M. A. MAJID: (a) & (b) No.

(அ) & (இ): இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்:** மதுரை முனிசிபாலிடியை கார்ப்பொரேஷனாக மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அப்படி உத்தேசம் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன்:** பொதுவாக, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலே இருக்கின்ற வார்டுகள் சரியாக இல்லை, இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்ற கருத்தை இந்த அமைச்சரவை ஏற்றுக் கொள்கிறதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** வார்டுகள் பிரிவினை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை.

**திரு. சி. பொன்னுசாமி:** தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலை நடந்துகொண்டு இருப்பதனால், அங்கு மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. ஆகவே, அங்கேயுள்ள நகரசபை ஸ்தானங்களை அதிகரிப்பதற்கு உத்தேசம் உண்டா? அப்படியானால் எப்பொழுது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஏற்கனவே இருக்கிற எம்.டி.எம். சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் அதிகபட்சமாக முனிசிபல் கவுன்சிலுக்கு 36 ஸீட்டுகள்தான் கொடுக்கலாமென்ற அடிப்படையில் இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்தினாலொழிய 36-க்கு அதிகமாகக் கொடுக்க முடியாது. சட்டத்தைத் திருத்துவது பற்றி சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.



10th August 1963]

**திரு. ஜே. மாதா கவுடர்:** நகர சபைகளின் வார்டுகளைத் திருத்தி அமைப்பதை அடுத்து வரும் நகர சபை தேர்தலுக்கு முன்பாகப் பரிசீலித்து, எல்லா வார்டுகளையும் திருத்துவதற்கு சர்க்கார் யோசிக்குமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அது பரிசீலனையில் இருக்கிறது. எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்:** ஸ்தல ஸ்தாபனத் தேர்தலுக்கு முன்னதாக மதுரை நகரசபையைப் பொறுத்தவரையில் வார்டுகளை அதிகமாக்குவது பற்றிய முடிவு எடுக்கப்படுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** சட்டத்தைத் திருத்தினாலொழிய ஒன்றும் செய்வதற்கில்லை. சட்டத்திலே 7-வது பிரிவின்கீழ் 36 ஸீட்டுகள் கொடுக்கலாமென்று இருக்கிறது. அந்த மாக்ஸிமம் எண்ணிக்கை மதுரையில் இருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிக்கிட்டு, நகரசபைத் தேர்தலை இப்பொழுது நடத்தாமல் இருப்பதற்குக் காரணம் வார்டுகளை எல்லாம் பிரிக்க வேண்டுமென்றும், வாக்காளர் ஜாபிதாவைத் தயாரிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். அப்படி வார்டுகளைப் பிரிப்பதற்கும், வாக்காளர் ஜாபிதாவைத் தயாரிப்பதற்கும் ஒரு காலவரையறையைக் குறிப்பிட முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** என்னைப்பற்றிக் குறிப்பிட்டதனால் நான் குறுக்கிட வேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் கோரியபொழுது தான் நான் நிலைமையை எடுத்து விளக்கினேன். அப்பொழுது கனம் அங்கத்தினர் வார்டுகளைப் பிரிக்க வேண்டாமா என்று கேட்டார்கள். அப்படிப் பிரிக்க வேண்டுமா, வேண்டாமா, என்ற பிரச்சனை ஆலோசனையில் இருப்பதனாலே காலதாமதம் ஆகிறது என்று சொன்னேன். இப்படிப் பிரிக்கப் போகிறோம் என்று நான் சொல்லவில்லை.

தேசிய ஒருமைப்பாடு

* 87 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கப் பாட புத்தகங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் திட்டமேதேனும் சர்க்காரிடம் உண்டா?

(இ) அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) No. The Government do not have any specific schemes to make use of text-books for the promotion of national integration. However, the Committee on emotional integration appointed by the Government of India has recommended *inter alia* that,

[10th August 1963

(1) If the text-book is to play a constructive role in promoting emotional integration, the writers of text-books must be chosen with the greatest care.

(2) Highest priority should be given, in programmes for emotional integration, to the proper writing, illustration and production of text-books at all levels of education.

These are generally acceptable to Government. In this view, the Government have already approved the appointment of Screening Committees for the selection of text-books.

**திரு. க. ர. நல்லசிவம் :** சர்க்கார் இதுபோன்ற பாடப் புத்தகங்களை வெளியிடாவிட்டாலும் கூட, தனி நபர்கள் "இந்தியா நம் வீடு", "மா வீரர்கள்" இதுபோன்ற புத்தகங்களை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். தேசீய உணர்வை ஊட்டுகிற புத்தகங்களை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் வைப்பதற்குத் திட்டவட்டமான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிற இத்தகைய நல்ல புத்தகங்கள் டெக்ஸ்ட் புக் கமிட்டியின் பரிசீலனையில் வைக்கப்படுகின்றன. அதோடு இந்த டெக்ஸ்ட் புத்தகங்களைப் பரிசீலனை செய்வதிலே கூட ஒரு ஸ்கிரீனிங் கமிட்டி வேண்டுமென்று அரசாங்கம் யோசித்து முடிவு செய்திருக்கிறது. நல்ல புத்தகங்களாக இருந்தால் அவ்வாறு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள முடியுமோ, அவற்றில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு தான் வருகிறது.

**திரு. சா. கணேசன் :** தேசீய ஒருமைப்பாட்டை வளர்க்க பாடப் புத்தகங்களைப் பயன்படுத்திக் கொள்ளுவது என்பதை விட்டுவிட்டு பொது ஒழுக்கம், அறவுணர்வு, அறிவு, இவற்றை வளர்த்து பிரிவினை உணர்ச்சி ஏற்படாத வகையிலே, செம்மையாக இருக்கக் கூடிய, நிரந்தரமானதாக இருக்கக்கூடிய, பாடப் புத்தகங்களைத் தயாரிப்பது பயனுள்ளதாக இருக்கும். அப்படித்தான் பல ஆண்டுக் காலங்களாக நடந்து வந்திருக்கிறது என்பதை ஏற்று, பொதுவானதாக, எந்தவிதமான பிரசார நோக்கமும் இல்லாத, ஒழுக்கம் முதலியவற்றை வளர்க்கக்கூடிய, நிரந்தரமான பாடப் புத்தகங்கள் பயனுள்ளதாக இருக்குமென்று அரசாங்கம் கருதுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் முதலிலே சொன்ன கருத்தை விலக்கிவிட்டு, மற்ற கருத்துக்களை எல்லாம் ஏற்றுக்கொள்கிறேன். அதிலேகூட பிரசாரமே கூடாது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒழுக்கத்துக்கும், நன்னடத்தைக்கும் பிரசாரமே கூடாது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இது இரண்டைத் தவிர மற்ற கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** பிரிவினை உணர்ச்சி கூடாது என்று சொல்லக்கூடிய பாடப் புத்தகங்களை பிரசுரம் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்களே, பிரிவினை கோரும் தி.மு.க. கட்சியிலிருந்து சுதந்திராக் கட்சி பிரிந்து விட்டதா ? (சிரிப்பு.)

MR. SPEAKER : The question is not admissible.



10th August 1963]

**திரு. சி. பொன்னுசாமி :** தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிக் குறிப்பிடும் அறிக்கையில் கலப்பு மணம் மிகவும் முக்கியமானது என்று சொல்லியிருக்கிறார்களே . . .

MR. SPEAKER : The original question is about national integration through text-books.

**திரு. சா. கணேசன் :** நான் பிரசாரம் என்று சொன்னது . . . . . .

**கனம் சபாநாயகர் :** விளக்கம் கூடாது. உப கேள்விதான் போடலாம்.

**திரு. சா. கணேசன் :** ஓரளவு விளக்கத்தைச் சொல்லாமல் உப கேள்வி போட முடியாது. ஒழுக்கத்தைப் பற்றிய பிரசாரத்தை நான் குறிப்பிடவில்லை. எந்தவிதமான கட்சிக் கொள்கை, கோட்பாடு, அப்படிப்பட்ட பிரசார நோக்கம் இல்லாமல் புத்தகங்கள் இருக்க வேண்டும், அவற்றைத் தயார் செய்ய வேண்டும். தேச ஒருமைப்பாடு வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. அதுவும் கூட பிரசாரம் செய்கிற நோக்கம் இல்லாமல், பிரிவினை, மற்றும் எந்தவிதமான கோட்பாடுகளும் இல்லாத நிலைமையிலே நிரந்தரமான பயனுள்ளதாக இருக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுவாக அங்கத்தினர்கள் கூறும் சீரிய கருத்துக்களை நான் ஒப்புக் கொள்ளக்கூடும் என்றாலும், முற்றிலும் அவர்கள் சொல்லுவதை ஒப்புக் கொள்ளு- 9-00 a.m.
வதற்கில்லை என்பதற்காக வருந்துகிறேன். முக்கியமாக, பிரசாரம் இருக்கக் கூடாது, கோட்பாடு இருக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள். கனம் எதிர்க் கட்சி அங்கத்தினர்களோ பிரிவினைக் கோரிக்கையை விடவில்லை. பிரிவினை கூடாது என்று சொல்லுவது ஒரு கட்சிப் பிரசாரமாக இருக்கிறது என்று நினைத்துக் கொள்வதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

**திரு. க. ர. நல்லசிவம் :** தலைவர் அவர்களே, குழந்தைகள் ஐந்தாவது வகுப்பிலிருந்து, பத்தாவது வகுப்பு வரை படிக்கும் வகுப்புகளில்தான் பிரிவினைப் பிரசாரம் அதிகமாக பயன்படுத்தப் படுகிறது. ஆகவே, தேசீய ஒருமைப்பாட்டை வளர்க்கக்கூடிய புத்தகங்களை ஐந்தாவது முதல் பத்தாவது வரையிலாவது வைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆரம்பப் பள்ளிகளுக்காக சில புத்தகங்களை அரசாங்கமே தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு ஆக்கி இருக்கிறது. மற்றபடி சில புத்தகங்கள் அவற்றின் தகுதி பற்றி பரிசீலனை செய்யப்பட்டு, டீடெய்லட் ஸ்டடிக்கோ நான் டீடெய்ல்ட் ஸ்டடிக்கோ, லைப்ரெரி ஸ்டடிக்கோ ஏற்றுக்கொள்ளக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, பாடப் புத்தகங்கள் மூலம், தேசீய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி விட முடியும் என்று அரசு கருதுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு அரசாங்கம் கருதவில்லை. பாடப்புத்தகங்கள் மூலம் சொல்லக்கூடாது என்பதையும் ஒப்புக் கொள்ளவில்லை.

*மருத்துவ பரிசோதனை (மாணவர்கள்).*

* 88 **கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆண்டுதோறும் சர்க்கார் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களை மருத்துவப் பரிசோதனை செய்ய திட்டமுண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இல்லை. மாணவர்களை ஆண்டு தோறும் மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டம் எதுவும் இல்லை. எனினும் அரசாங்க உயர்நிலைப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மாணவர்களை மருத்துவப் பரிசோதனை செய்வது அவசியமெனக் கருதினால், அதற்காக அவர்களிடமிருந்து தகுந்த கட்டணம் பெற்றுக்கொண்டு மருத்துவப் பரிசோதனை நடத்துவிக்கலாம். பல்கலைக் கழக ரெகுலேஷன்களின்படி, பி.யு.சி. படிக்கும் மாணவர்களுக்கும் மூன்றாண்டுப் பட்டப் படிப்பின் முதல் ஆண்டு வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கும் மருத்துவப் பரிசோதனை நடத்த வேண்டும். அவ்வாறே அரசாங்கக் கல்லூரிகள் அனைத்திலும் மருத்துவப் பரிசோதனை நடந்து வருகிறது.

No. There is no scheme for annual medical inspection of students. However, the Head masters of Government High Schools have the discretion to conduct the medical inspection of pupils, whenever necessary after levying suitable medical inspection fees. According to the University Regulations, it is necessary to conduct the medical inspection of pupils studying in the P.U.C. and the first-year class of the three-year degree course and this is being conducted in all Government colleges.

*தொழிலகக் கார்ப்பரேஷன் அளித்துள்ள நிதி உதவி*

* 89 **கேள்வி.—திரு. ந. ப. செங்கோட்டுவேலு :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சென்னை தொழிலக கார்ப்பரேஷன் இதுவரை எந்தெந்தத் தொழிலுக்கு எவ்வளவு பண உதவி அளித்துள்ளது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது சம்பந்தமாக ஓர் அறிக்கை[a] சபைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

A statement[a] is placed on the table of the House.

**திரு. ந. ப. செங்கோட்டு வேலு :** ஸார், அப்படி அளிக்கப்படும் உதவிக்கு எத்தனை சதவிகிதம் வட்டி ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஏழரை சதவிகிதம்.

---

[a] 574–576-ம் பக்கத்தில் 'இரண்டாவது இணைப்பு' ஆக அச்சிடப்பட்டிருக்கிறது.

[a] Printed as Appendix II on pages 574–576 infra.





**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்த அறிக்கையிலே தேயிலை உற்பத்தித் தொழிலுக்கு உதவி இல்லை என்று இருக்கிறது. அந்தத் தொழிலுக்கு மானியம் வேண்டும், கடன் உதவி வேண்டும். ஆகவே அவை கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்கார் கொடுக்கிறதில்லை; மட்ராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் என்ற போர்டு இருக்கிறது. அந்த போர்டு பரிசீலனை செய்து, எந்தெந்தத் தொழில்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்கிறது. பரிசீலனை செய்து தேயிலைத் தொழிலுக்குக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், அது பற்றி சர்க்காரிடத்தில் மனுச் செய்தால், அது பரிசீலனை செய்யப்படும்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** தலைவர் அவர்களே, சமீபத்திலே தனிப்பட்டவர்கள் மனுச் செய்து, நூற்புத் தொழிலுக்கு உதவி அளிக்க மறுத்தது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஏதாவது சில தொழில்கள் நன்றாக வளர்ந்துவிட்டன என்றால், குறைவான நிதிவசதி இருக்கும்போது, அதற்கே மீண்டும், மீண்டும் அதிகமாகக் கொடுக்கப்படுவது சரி இல்லை. மெட்ராஸ் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் புதுத் தொழில்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக வைத்திருக்கிறோம். ஆனால், சாதாரணப் பாங்குகள் வசதி அளிக்கத் தயங்கினால், அதற்கு உத்தரவாதம் அளிக்கிறோம். டெக்ஸ்டைல் தொழில் நன்றாக வளர்ச்சி அடைந்து இருக்கிறது. நேரிடையாகக் கடன் உதவி கொடுக்கத் தேவையில்லை. ஆனால், பாங்கிகளுக்குக் கௌண்டர் காரண்டி கொடுப்போம் என்று தீர்மானம் செய்திருக்கிறோம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷனிலிருந்து பஸ் தொழிலுக்கு கடன் வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அமைச்சர் ஆலோசித்து அந்தத் தொழிலுக்கும் வசதி அளிக்க முன்வருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பஸ் தொழிலும் நன்றாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. பெரிய ரிஸ்க் இருப்பதாகவும் சொல்ல முடியாது. அதற்குப் பண உதவி கொடுப்பதற்கில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், டெக்ஸ்டைல் தொழில் நல்ல வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆகவே அதற்கு அதிகமாக கடன் கொடுக்கத் தேவையில்லை என்று சொன்னார்கள். வைத்திருக்கிற அறிக்கையில், மொத்தத் தொகையில் 4 கோடி ரூபாய்க்கு மேலாக அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வேறு வகைகளுக்குத் திருப்பி இருக்கக்கூடாதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வளர்ச்சி அடைந்ததே கடன் கொடுத்ததால்தான். நாலு கோடி அளவுக்கு உதவி அளித்ததால்தான் 140 மில்கள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. புதிதாகத் தொழில் ஆரம்பிக்கும் பல வகைகளுக்கு உதவி அளிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** தலைவர் அவர்களே, நூற்புத் தொழிலுக்கு, கார்ப்பொரேஷன் காரண்டி கொடுத்தால் பாங்குகள் பணம் கொடுப்பார்கள் என்று தெரிவித்தார்கள். அதில் எந்தவிதமான சிரமமும் இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதில் ஒன்றும் சிரமம் இருப்பதாகத் தெரியவில்லை. அம்மாதிரிக் கடன் வாங்க முன் வந்திருக்கிறார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்த கார்ப்பொரேஷன் கடன் கொடுக்கும் தொழில்கள் லிஸ்டில் தேயிலை இல்லை. இந்த நாட்டின் தேயிலை தரம் உயரவில்லை. ஆகவே, போதிய அளவுக்கு அன்னிய நாட்டோடு போட்டி போடமுடியவில்லை என்பது தெரிந்திருப்பதால், அரசாங்கமே இந்த கார்ப்பொரேஷனுக்கு சிபாரிசு செய்து, வசதி செய்து கொடுக்க முன்வருமா ?

**கனம் சபாநாயகர் :** அதைப்பற்றித்தான் மனுப் போடுங்கள் என்று சொன்னார்களே ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கடன் கொடுப்பது என்பது இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் போர்டு செய்யும் வேலை. அவர்கள் ஒரு தொழிலுக்குக் கொடுக்க மறுத்தால், அதுபற்றி சர்க்காருக்கு அப்பீல் செய்தால் அது கவனிக்கப்படும். தேயிலைத் தொழிலுக்கு கிடையாது என்று அவர்கள் மறுத்தார்களா, சர்க்காருக்கு அப்பீல் செய்தார்களா என்பதெல்லாம் பற்றித் தெரியாமல் கேள்வி கேட்பது அவ்வளவு பொருத்தம் ஆகாது.

**திரு. மு. ஷண்முகம் :** தொழில் வளர்ச்சிக்கு நிதி உதவி செய்வதாகச் சொல்கிறார்கள். அளித்த உதவி சரியாகப் பயன்பட்டதா என்று அரசாங்கம் கவனம் செலுத்துகிறார்களா ? குறிப்பாக, விழுப்புரம் வனஸ்பதி தொழிலுக்குப் பல ஆண்டுகளுக்கு முன் உதவி அளித்திருந்தும், இதுவரை, ஏழு, எட்டு ஆண்டுகளாக அது பயன்படுத்தப்படாமல் இருந்து வருவதைப்பற்றி நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தக் கேள்வி இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் பற்றியது, அவர்கள் கொடுக்கும் பணத்தைப் பற்றியது. அது சரியாகச் செய்யப்படுகிறது, ஆடிட் செய்யப்படுகிறது, தணிக்கை செய்யப்படுகிறது. கனம் அங்கத்தினர் சொல்வது, சர்க்காரே நேரிடையாக 1948-ல் ஸ்டேட் எய்ட்டு இண்டஸ்ட்ரிஸ் ஆக்டின் கீழ் கொடுத்த தொகை பற்றியது. அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் இருக்கும் நிலையை விளக்குகிறேன்.

**திரு. ஆர். ரெங்கசாமி :** ஸார், இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷனிலிருந்து வெவ்வேறு தொழில்களுக்குக் கொடுக்கப்படுகிறதா ? அப்படி இருந்தால், ஹோட்டல் தொழிலுக்குக் கொடுக்க ஏற்பாடு உண்டா ?





**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** புதிய தொழில்கள், ரிஸ்க் அதிகமாக இருக்கும் தொழில்கள் இவைகளுக்குப் பண உதவி கொடுக்கவும், எந்தத் தொழிலுக்கு வேறு வசதி இல்லையோ, அப்படி இருக்கும் தொழிலுக்கு முதலிடம், ப்ரிபரென்ஸ், கொடுக்க வேண்டும் என்றும் பொதுவாக கார்ப்பொரேஷனுக்குச் சொல்லுகிறோம். ஹோட்டல் தொழில் அந்தவிதமான தொழில் என்று நினைக்கவில்லை.

### பள்ளிகளில் அரசியல் தலைவர்களின் படங்கள்

* 90. **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடங்களில் உள்ள திராவிடக் கழக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் படங்களை அகற்றும்படி சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளார்களா ?

(இ) அப்படியானல், அதற்கான காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, and

(b) Does not arise.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஸார், அமைச்சரவர்கள் "இல்லை" என்று சொன்னார்கள். பள்ளிக்கூடங்களில் யார் யார் படங்கள் வைக்கலாம் என்று அனுமதி அளித்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மகாத்மா காந்தி, ஜனாதிபதி, காலஞ்சென்ற படேல், பண்டித நேரு, இவர்களுடைய படங்களை வைக்கலாம் என்று அனுமதி இருக்கிறது. இவை ஸ்தலஸ்தாபனச் செலவில் செய்யலாம். மற்றவர்களுடைய படங்களை வைக்க, ஸ்தலஸ்தாபனம் அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்றுச் செய்ய வேண்டும். அதை ஸ்தலஸ்தாபனச் செலவில் செய்யக் கூடாது.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, முன் அனுமதி பெற்றுத்தான் சில படங்களை வைக்கலாம் என்றார்கள். அப்படி முன் அனுமதி இல்லாமல், ஏதாவது மாட்டியிருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதை அகற்ற ஏற்பாடு செய்யப்படுமா ? நடவடிக்கை எடுக்கப்படுமா ?

MR. SPEAKER : It is a hypothetical question.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆம், எடுத்துக் கொள்ளப்படும்; அம்மாதிரிப் புகார் வந்திருக்கிறது. சம்மந்தப்பட்ட கலெக்டரே அதைக் கவனித்து, என்ன நிலை என்று தெரிவிக்க உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

**திரு. வி. எஸ் எஸ். மணி :** ஸார், அரசியல் தலைவர்களுடைய படங்களைப் பள்ளியில் வைப்பதற்கு, பள்ளி மாணவர்கள் விருப்பத்திற்கிணங்க, வாக்கெடுப்பு எடுத்து, பெரும்பான்மையோர் விருப்பத்திற்கிணங்க படங்களை வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது முறையல்ல. அவ்வாறு செய்வதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, சில ஸ்தாபனங்களில் இப்போது இருக்கிற அமைச்சர்களுடைய படங்களை வைத்திருக்கிறார்களே, அவைகளும் அகற்றப்பட்டு விடுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றி கனம் அங்கத்தினரோ அல்லது வேறு யாரோ அரசாங்கத்திற்கு புகார் செய்தால் அதைப் பற்றிக் கவனம் செலுத்தப்படும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன நேரத்தில் அரசியல் தலைவர்களுடைய படங்களைப் பற்றி மட்டும் சொன்னார்கள். திருவள்ளுவர் படத்தை எல்லாப் பள்ளிகளிலும் வைக்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்குத் தனிக் கேள்வி வேண்டும். இந்தக் கேள்வி அரசியல் தலைவர்கள் படங்களைப் பற்றியது. மற்ற படங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் முன் அனுமதி பெறவேண்டும். அப்படி முன் அனுமதி கேட்கும் போது அது அரசாங்கத்தால் கவனிக்கப்படும். திருவள்ளுவர் அரசியல் தலைவர் அல்ல. அது வேறு விஷயம்.

**திரு. கரு. சீனிமச்சாமி :** ஸார், பள்ளிக்கூடங்களில் காந்தி, நேரு, பட்டேல் ஆகியவர்களின் படங்களையெல்லாம் வைக்க பஞ்சாயத்து யூனியன் பணம் செலவழிக்கலாம் என்று கூறினார்கள். அதோடு நேதாஜி போஸ் அவர்களின் படத்தையும் வைக்க பஞ்சாயத்து யூனியன் பணம் செலவு செய்வதற்கு அனுமதிக்குமா?

**கனம் திரு. எம், பக்தவத்சலம் :** அம்மாதிரி யோசனை அரசாங்கத்திற்கு வந்தால் அதை அரசாங்கம் கவனிக்கும்.

**திரு. சி. பொன்னுசாமி :** பிரிவினைத் தடைச் சட்டம் அமலான பிறகு பிரிவினைத் தலைவர்கள் படங்கள் இருந்தால் அவைகளை அகற்ற சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரிவினைத் தலைவர்கள் என்று பட்டம் சூட்டப்பட்டது ஒன்றும் இல்லை. பிரிவினையைச் சொல்லுகிறவர்கள் கூடத் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** நமது மாநிலத்தில் ஒவ்வொரு பள்ளியிலும் காந்திஜி அவர்களின் படத்தோடு கடவுள் படம் கட்டாயமாக இருக்கவேண்டும் என்று அரசாங்கம் ஒரு உத்தரவைப் போடுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கடவுள் படம் என்று ஒன்றும் இல்லை.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, எந்தப் பள்ளியிலிருந்தாவது மாநில அரசாங்கத்தில் இருக்கிற யாராவது ஒரு அமைச்சர் படத்தை வைக்கவேண்டுமென்று அனுமதி கோரி சர்க்காருக்கு மனு வந்திருக்கிறதா ?





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. செ. மாதவன் :** ஏற்கெனவே காங்கிரஸ் கட்சியில் இருந்தவரும், இப்போது காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக இருக்கிற பெரியார் ராமசாமி அவர்களுடைய படத்தை வைக்க இதில் இடம் ஏற்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது நான் அளித்த விடையைத் தவிர வேறு தகவல் இல்லை. அதைப் பற்றி ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி கேட்கலாம்.

**திரு. சா. ராமசாமி :** தலைவர் அவர்களே, கல்விச் சீரமைப்பு மாநாடுகளின்போது கல்வி இலாகா இயக்குனர் எந்தக் கட்சித் தலைவர் படமானாலும் வாங்கிக்கொள்கிறேன் என்று வாங்கிக் கொண்டு எல்லாக் கட்சித் தலைவர்களுடைய படங்களும் மாட்டப் பட்டிருக்கும்போது, குறிப்பிட்ட சில தலைவர்களுடைய படங்களை மட்டும் அகற்றவேண்டும் என்று அங்குள்ள பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களால் அறிவிக்கப்படுகிறது என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றித் தகவல் இல்லை. ஆனால் எனக்குத் தெரியும். சீரமைப்பு மாநாடுகளில் பல படங்கள் அளிக்கப்படுகின்றன. அதைப் பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** பொது ஸ்தாபனங்களுக்கு இலவசமாகக் கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்கும்போது, கட்டிக் கொடுக்கிறவர்களுடைய படங்களை மாட்டுவதற்கு சர்க்கார் அனுமதி கொடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு அரசாங்க அனுமதி கோரப்படும்போது கவனித்து தகுந்த உத்திரவு போட்டுக்கொண்டு வருகிறார்கள்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** தலைவர் அவர்களே, நமது ராஜ்யத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் நமது ராஜ்ய முதலமைச்சர் படத்தை வைக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

### *Panchayat Union Council Teachers*

*91 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have received representations from the teachers of Panchayat Union Councils about their hardships consequent to their frequent transfers ordered by the Management; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, and

(*b*) Suitable instructions have been issued by the Government.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இந்த விஷயமாக இம்மாதிரி அநீதிகள் நடந்தால் உபாத்தியாயர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க யாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்று அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சாதாரணமாக, கலெக்டர்களுக்கு இந்த அதிகாரம் இருக்கிறது. அவர்கள் கவனிக்கலாம். புகார் வரும்போது கலெக்டர்கள் கவனித்து வருகிறார்கள். ஆனால் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கே இந்தத் தொல்லை ஏற்படுகிறது. நேற்றைய தினம் என்னிடம் வந்த ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர் எப்படியாவது பள்ளிக்கூடங்களின் பொறுப்பை எங்களிடமிருந்து எடுத்துவிடுங்கள். இதுவே தொல்லையாகப் போய்விட்டது. வேறு காரியங்களைக் கூட கவனிக்க முடியாத நிலை ஏற்படுகிறது என்று பொறுப்புள்ள, அக்கறையுள்ள தலைவர் ஒருவர் கூறினார். இம்மாதிரி தலைவர்களுக்கும் தொல்லை ஏற்படுகிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பள்ளியில் இருக்கிற ஆசிரியர்களை முன்பெல்லாம் மாற்றுவது என்றால் அதற்குக் கல்விக் கண்காணிப்போர் சம்மதம் பெறவேண்டியிருந்தது. இப்போது அது இல்லாததால், பழி வாங்கும் நோக்கத்தில் மாற்றப்படுகிறார்கள். முன்பு இருந்த முறையையே இப்போது அமலாக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாற்றப்படும்போது பழி வாங்கும் நோக்கத்தோடு மாற்றப்படுவதாகச் சொல்ல முடியாது. அவசியம் இல்லாத நிலையில் மாற்றுவது தவறு. ஏதாவது தவறுகள் நடக்கின்றன என்று புகார்கள் வந்தால், அதில் வேறு ஏதாவது மாறுதல் வேண்டுமானால் அரசாங்கம் கவனித்து முடிவு செய்யவேண்டிய விஷயம். இதைப் பற்றிப் பஞ்சாயத்து ஆலோசனைக் குழுவிலும் யோசிக்கலாம். அப்போது இந்தக் கருத்துடைய அங்கத்தினர்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் நன்றாகப் பரிசீலனை செய்து இப்போது இருக்கிற நடைமுறையில் மாற்றம் வேண்டுமா என்று பார்த்து முடிவு செய்யலாம்.

**திரு. மா. இராசாங்கம் :** பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் ஆசிரியக் கணவன் மனைவிமார்கள் வெகு தொலைவில் மாற்றப்பட்டு பல பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். ஒரே பள்ளியில் வேலை கொடுக்க வாய்ப்பு இருந்தால் அவர்களுக்கு ஒரே இடத்தில் வேலை கொடுக்கவேண்டும் என்று பஞ்சாயத்து யூனியனுக்கு உத்தரவு போட அரசாங்கம் யோசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆசிரியத் தம்பதிகளை கூடிய வரையில் ஒரே இடத்தில் வைக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. அதை வற்புறுத்துகிறது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாத விஷயமாகப் போய்விடுகிறது.





**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, டெபுடி இன்ஸ்பெக்டர் சம்மதம் பெறாமல் இருக்கிற காரணத்தினால் இப்போது பஞ்சாயத்து யூனியன்களில் உள்ளவர்கள் டெபுடி இன்ஸ்பெக்டருக்கு மரியாதை கொடுப்பதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதனால் அவர்களுக்கு வேண்டியதை, உரியதைச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நாம் இயற்றியிருக்கிற சட்டத்தின் அமைப்பைப் பொருத்திருக்கிறது இது. சட்டத்தில் பொறுப்பு பஞ்சாயத்து யூனியனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று இப்போது எடுத்துக் காட்டப்படுகிறது. ஆனால், டெபுடி இன்ஸ்பெக்டர்களுக்கு மரியாதை வேண்டுமென்பதல்ல. ஆனால் டெபுடி இன்ஸ்பெக்டர்களுக்கு என்ன பொறுப்புக்களோ அதை வகிக்க பஞ்சாயத்து யூனியன் குறுக்கே நிற்கக் கூடாது. கல்வி அதிகாரிகள் தங்கள் பொறுப்பை வகிக்கத் தடை இருந்தால் அதைப் பற்றிப் பரிசீலனை செய்து என்ன மாற்றம் வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்யலாம்.

**திரு. து. ப. அழகமுத்து :** ஒரு பஞ்சாயத்து யூனியனிலிருந்து மற்றொரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒப்பந்த மாற்றம் செய்து கொள்ள விரும்பும் ஆசிரியர்களுக்கு ஒப்பம் அளிக்க பஞ்சாயத்து யூனியன்களில் மறுக்கிறார்கள். அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ஒருவருக்கொருவர் சம்மதம் பெற்று மாற்றிக்கொள்ளலாம். அது எல்லா வகையிலும் எல்லா ஸ்தல ஸ்தாபனங்களிலும் நடைமுறையில் இருக்கிற விஷயம். இதிலே பஞ்சாயத்து யூனியன் ஒப்புக்கொள்ளவில்லையென்றால் அந்த பஞ்சாயத்து யூனியனுக்குப் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இதில் சங்கடம்.

**திரு. ம. கமலநாதன் :** பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய டார்கெட் நிறைவேற்றப்பட ஆசிரியர்கள் உபயோகப்படுத்தப்படுகிற காரணத்தினால் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டில் பள்ளி நிர்வாகப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தேன். அதை உடனடியாக அமலுக்குக் கொண்டுவர முடியுமா ? அதைப்பற்றி ஆலோசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்தும் இந்தக் கருத்தைத் தெரிவித்திருப்பதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். பொதுவாக, பஞ்சாயத்து ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இந்தக் கருத்து விமரிசனம் செய்யப்பட்டு ஒரு முடிவு ஏற்படும் என்றால் அதில் அரசாங்கம் அனுதாபத்துடன் கவனம் செலுத்தும்.

**திரு. எஸ். சின்னய்யன்:** மாணவர்களுடைய எண்ணத்தை மாசுபடுத்தக்கூடிய ஆசிரியர்களை வெகு தூரத்தில் மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் சபாநாயகர்:** வெகு தூரத்தில் இருக்கும் மாணவர்களைக் கெடுக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்களா? (சிரிப்பு.)

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மாணவர்கள் வெகு தூரத்தில் இருந்தால் என்ன செய்வது? (சிரிப்பு.)

### *Irrigation Projects (Obligation of the beneficiaries)*

* 92 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that the beneficiaries of the irrigation projects fail to carry out their obligations like construction of field channels, maintenance of tank bunds, etc.; and

(*b*) if so, whether there is any proposal to bring in legislation to enforce them to carry out such obligations?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes, in some cases as regards the construction of field channels. As regards maintenance of tank bunds, no cases of failure on the part of beneficiaries to carry out obligations have been brought to the notice of Government.

(*b*) There are already two Acts in force in this State, viz., The Madras Compulsory Labour Act, 1858 and the Madras Irrigation Works (Construction of Field Bothies) Act, 1959 to enforce the beneficiaries of the irrigation projects to carry out their obligations for the maintenance of tank bunds and construction of field channels, etc.

In 1961, the Government of India have suggested that legislation might be undertaken to fix the responsibility for the construction and maintenance of field channels on beneficiaries and in default by the beneficiaries, to carry out the work by the Panchayats or by the Government. The suggestion of the Government of India is under consideration.

**திரு. செ. மாதவன்:** மத்திய சர்க்காரினுடைய திட்டக் குழு நம்முடைய மாநில சர்க்காருக்கு ஏதாவது யோசனை கூறியிருக்கிறதா? அதுபற்றி நம்முடைய மாநில சர்க்கார் தெரிவிக்க கருத்துக்கள் என்ன?

THE HON. SRI V RAMAIAH: In the last part of my answer, I have suggested what had taken place between the Government of India and ourselves.

ஒரு சட்டம் இயற்ற வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஒரு யோசனை சொன்னார்கள். அது இப்பொழுது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.



### ஆடுதுறையில் கலைக் கல்லூரி

*** கேள்வி.—திரு. கோ. சி. மணி:** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் ஆடுதுறையில் மூன்றாண்டுகளுக்குள்ளாக திருப்பனந்தாள் மடாதிபதியின் உதவியால் தனியார் கலைக் கல்லூரி ஒன்று நிறுவ சென்றதடவை இருந்த அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் நிறுவப்பட்ட குழு தற்போது என்ன நிலையில் இருக்கிறது?

(இ) அந்தக் கல்லூரியை நிறுவ முன்வந்த திருப்பனந்தாள் மடத்தினர் அதே நேரத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு கலைக் கல்லூரியை நிறுவி ஆடுதுறையை விட்ட காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The Government have no information.

### *Bus-stands and markets*

* 94 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether his surprise visits to the Municipal Bus-stand and daily market at Erode was an "On the spot survey" to carry out the recommendation of the Fact Finding Committee on Bus-stands and Markets headed by Mr. V. V. Ramaswamy Nadar, and

(*b*) whether a copy of the report of the Fact Finding Committee on bus-stands and markets under the chairmanship of Mr. V. V. Ramaswamy Nadar will be placed on the Table of the House?

THE HON. SRI S. M. A. MAJID: (*a*) The surprise visit has no connection with the recommendations of the Fact Finding Committee headed by Sri V. V. Ramaswamy Nadar. It relates only to Madras City.

(*b*) A copy of the report* of the Fact Finding Committee is placed on the table of the House.

(அ) அந்த திடீர் விஜயத்திற்கும், உண்மை காணும் குழுவினரது சிபார்சுகளுக்கும் ஒரு விதத் தொடர்பும் இல்லை. அது சென்னை நகரத்தை மட்டும் பொறுத்தது.

(இ) உண்மை காணும் குழுவினரது அறிக்கையின் பிரதி ஒன்று சபையின் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** மேசை மீது வைக்கப்பட்டிருக்கும் திரு. வி. வி. ராமசாமி நாடார் அவர்களைத் தலைவராகக் கொண்ட பஸ் ஸ்டாண்டு, மார்க்கெட் நிலவர அறிவிப்புக் குழுவின் அறிக்கையில் சில சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அறிக்கை கொடுக்கப்பட்டு மூன்று வருஷங்கள் ஆகின்றன. அந்த சிபார்சு

* Printed as Appendix III on pages 577–606 infra.

களில் உடனடியாக நிறைவேற்றப்படக் கூடிய சிபார்சுகள் என்னென்ன நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, 'லாங் டர்ம்' சிபார்சுகளைப் பொறுத்த வரையில் என்னென்ன ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கமிட்டியினுடைய சிபார்சுகள் சர்க்காருக்கு அதிகப் பணச் செலவு ஏற்படுத்தக்கூடிய அளவிலே உள்ளன என்பதைக் கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகையால், இது சம்பந்தப்பட்டுள்ள முடிவு எடுப்பதற்காக நகராட்சி கமிஷனுருடைய அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கிறது. அங்கிருந்து இன்னும் முடிவான தகவல் வரவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நகராட்சி மன்ற மேயர்கள், சர்க்கார் சுகாதார அதிகாரி ஆகிய எல்லோரையும் கலந்து கொண்டுதான் அறிக்கை தயாரித்தார்கள். அறிக்கையினுடைய சிபார்சுகளை நிறைவேற்ற அதிகப் பணச் செலவு ஆகும் என்பதனுல் இந்த அறிக்கையின் சிபார்சுகளை அமைச்சர் அவர்கள் மறுக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** மறுக்கவில்லை. கார்ப்பரேஷன் கமிஷனரிடமிருந்து கிடைத்த பதிலின் மீது நன்ருகப் பரிசீலனை செய்து, அதன் பிறகு ஒரு முடிவு எடுக்கப்படும் என்றுதான் நான் சொல்கிறேன்.

### விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்பில் பயிற்சி

* 95 **கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விளையாட்டுச் சாமான்கள் தயாரிக்க ஜப்பானிய நிபுணர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) அப்படியானல், அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(உ) பயிற்சி நிலையம் எந்த இடத்தில் அமைக்கப்படும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) உண்டு.

(இ) ரூபாய் 70,280.

(உ) சென்னை.

**திரு. கரு. சீமைச்சாமி :** என்ன என்ன விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்படும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது எப்படிச் சொல்ல முடியும்? இங்கே ஜப்பானிய நிபுணர்கள் வந்து பயிற்சி அளிப்பார்கள். அப்படிப் பயிற்சி அளிக்கின்றவர்கள் பல



விளையாட்டுக் கருவிகளைக் கொண்டுவருவார்கள். அவற்றுக்கான மாடல்கள், டிஸைன்கள், ட்ராயிங்ஸ் எல்லாம் போட்டுக் கொண்டு வருவார்கள். அவற்றைப் பார்த்து சுலபமாகச் செய்ய முடியும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்தத் தொழிற்சாலை உதகமண்டலத்தில் துவக்கப்படுவதாக இருந்தது என நான் அறிகிறேன். அதைத் திடீர் என்று சென்னைக்கு மாற்ற என்ன அவசியம் ஏற்பட்டது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் சற்றுக் கனவு கண்டிருக்கலாமோ என்னவோ!

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** தலைவர் அவர்களே, பயிற்சிச் சாலையில் எத்தனை பேர் பயிற்சி பெறுவார்கள்? பயிற்சியில் கால அளவு எவ்வளவு?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஐம்பது பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். ஆறு மாத காலம் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின்போது 60 ரூபாய் ஸ்டைபெண்டு கொடுக்கப்படும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் அங்கத்தினர் கண்ட கனவை அமைச்சர் அவர்கள் நனவாக்குவதற்கு முயற்சி செய்வார்களா? (சிரிப்பு.)

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தக் கனவை நானே கண்டால் செய்யலாம் (சிரிப்பு.)

### *Fire Station (Dharmapuri)*

* 96 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to open a fire station at Dharmapuri in Salem District; and

(*b*) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, and

(*b*) It will take some time, as according to the existing Priority List, Fire Stations have to be opened in five other places before a Fire Station is opened at this place.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையங்களை கிராமப் புறங்களுக்கு விஸ்தரிக்க உத்தேசம் உண்டா? நகரப் புறங்களிலிருந்து கிராமத்திற்குத் தீயணைக்கும் வண்டி வருவதற்குள் பல வீடுகள் எரிந்து சாம்பலாகிவிடுகின்றன. சென்ற தடவை போலீஸ் மானியத்தின் மீது பேசும்போதுகூட நான் குறிப்பிட்டேன். பெரம்பலூர், அரியலூர், குளித்தலை பகுதிகளில் எங்காவது ஓரிடத்தில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கிராமப் புறங்களில் தீயணைக்கும் படைக்கு அவசியம் இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், கிராமப் புறங்களைவிட நகரப் புறங்களில் தான் அதிக அவசியம் இருக்கிறது. இன்னும் சில நகரப் பிராந்தியங்களில் தீயணைக்கும் படை அமைக்கப்படவில்லை. அதை அமைத்துவிட்ட பிறகு, பெரம்பலூர் போன்ற பகுதிகளை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. சீ. ராமசாமி:** தீயணைப்பு நிலையங்கள் முனிசிபல் பகுதிகளில்தான் இருக்கவேண்டும் என்ற விதி இருக்கிறது. அதைத் தளர்த்தி ஓரளவு பெரிய கிராமங்களிலும் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பு கூறியதுபோல், நகரப் பிராந்தியங்களில் தீயணைப்பு நிலையங்களை அமைத்துவிட்டு, அதற்குப் பிறகு கிராமப் புறங்களில் அமைப்பதுபற்றி எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. மா. இராசாங்கம்:** முனிசிபல் நகரங்களில் தீயணைக்கும் நிலையங்களை ஏற்படுத்துவது என்ற அடிப்படையில், கம்பம் முனிசிபாலிடியில் ஒன்றை நிறுவுவதாக இருந்தது. அது இன்னும் நிறுவப்படாமல் தாமதத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுடைய உறுதிமொழிக்குப் பிறகும் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கம்பத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் வைத்து விடுவோம் என்று அமைச்சர்களில் யாரும் உறுதி கூறவில்லை. நகரப் பிராந்தியமாக இருப்பதால் சீக்கிரமாக அமைக்கப்படும்.

**திரு. க. தா. பெருமாள் ராஜு:** கோபிசெட்டிப்பாளையம் முனிசிபாலிடியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று சர்க்காருக்கு விண்ணப்பம் ஏதாவது வந்திருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும். ஆனால், சீக்கிரத்திலேயே முனிசிபல் பகுதிகளிளெல்லாம் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று நான் முன்பே சொன்னேன்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** தீயணைப்பு நிலையங்களை கிராமப் புறங்களில் ஏற்படுத்துவதில் சற்றுத் தாமதம் இருந்தாலும், பஞ்சாயத்து யூனியன் இருக்கும் இடங்களிலாவது ஏற்படுத்துவதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** முன்பு கூறியதுபோல, இன்னும் நகரப் பிராந்தியங்களிலேயே அமைக்க வேண்டியிருக்கின்றன; அது முடிந்த பிறகு கிராமப் புறங்களில் அமைப்பது பற்றி எடுத்துக்கொள்ள வேண்டும்.





**திரு. இரா. நெடுஞ்செழியன்:** பெரிய அளவில் தீயணைக்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பு வசதி இல்லையென்றாலும், ஆங்காங்கு இருக்கும் காவல் நிலையங்களிலுள்ள போலீஸ்காரர்களுக்குத் தீயணைப்பு முறைகளிலும் பயிற்சி அளித்து, சிறிய முறையிலே அந்தப் பணியை ஆங்காங்கே ஏற்றுக்கொள்வதற்குத் திட்டம் தீட்டப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதுபற்றியெல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** இப்பொழுது, 100, 150 மைல் தொலைவில் உள்ள இடங்களில் தீயணைப்புப் படையினர் இருந்து கொண்டிருக்கிறார்கள். தீ விபத்து ஏற்பட்டால், தகவல் கிடைத்து வருவதற்குள்ளாக சாம்பலாகி விடுகிறது. ஆகவே, ஐம்பது மைல் தொலைவில் உள்ள இடங்களில் இருக்கக்கூடிய மேஜர் பஞ்சாயத்துப் பகுதிகளில் தீயணைப்புப் படைகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பு கூறியதுபோல், கூடியவரைக்கும் அதிகமான இடங்களில் தீயணைப்பு நிலையங்களை வைக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

### மின் வசதி (கோட்டூர் பஞ்சாயத்து)

*97 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோட்டூர் பஞ்சாயத்து கூட்டுமன்றத் தொகுதிக்கு மின்வசதி செய்து கொடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

THE HON. SRI R. VENKATARAMAN : Kottur Panchayat which was under the jurisdiction of supply of Messrs. South Madras Electric Supply Corporation Limited, was recently surrendered to be taken over by the Madras State Electricity Board. The Board will consider the extension of supply of electricity to the villages under the Kottur Panchayat Union in due course.

**திரு. ஆ. கு. சுப்பையா:** ஸார், கோட்டூர் பஞ்சாயத்து யூனியனுக்கு அரசாங்கத்தில் இருந்து கடன் கொடுக்கப்பட்டதா? கொடுக்கப்பட்டது என்றால் எவ்வளவு? 9-30 a.m.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்போது கோட்டூர் பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்திலுள்ள மின்சார விநியோகக் கம்பெனியை மின்சார போர்டார் எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே கடன் கொடுக்க ஒன்றும் அவசியமில்லை. போர்டே அந்த வேலையை எடுத்துக் கொள்ளும் என்று சொல்ல விரும்புகிறேன்.

[10th August 1963

*Health Co-operative Societies*

*98 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the number of Health Co-operative Societies that are functioning in our State, districtwise with their location;

(b) whether they are subsidised by the Government; and

(c) if so, to what extent and on what conditions?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) இந்த ராஜ்யத்தில் ஆறு கூட்டுறவு மருத்துவச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் இருக்குமிடங்கள்—

இராமநாதபுரம் ஜில்லா—தளவாய்புரம்.

நீலகிரி ஜில்லா—ஷோளூர் கொலகோம்பை.

தஞ்சாவூர் ஜில்லா—திருநாவுகேசுவரம்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா—ஆமூர்.

சேலம் ஜில்லா—தலைவாசல்.

(இ) & (உ) (i) தளவாய்புரத்திலுள்ள சங்கத்திற்கு ஆஸ்பத்திரி கட்டிடம் கட்டுவதற்காக அந்தச் செலவில் ஒரு பாதிக்கு ரூபாய் பதினைந்தாயிரம் (ரூ. 15,000) மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மருந்து, சிப்பந்திச் செலவு வகைக்கு 1961-62-வது வருஷத்திலிருந்து மூன்று வருஷங்களுக்கு இச் சங்கத்தின் வருமானத்தில் குறைவுபட்ட நிகரத் தொகைக்குச் சரியாக ஆனால் வருஷத்திற்கு ரூபாய் எட்டாயிரத்திற்கு (ரூ. 8,000) மேற்போகாமல் மானியம் கொடுக்கப்படுகிறது.

(ii) தலைவாசலிலுள்ள சங்கத்திற்கு மூன்று வருஷங்களுக்கு சிப்பந்திச் செலவு வகைக்கு ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரம் (ரூ. 9,900) மானியம் கொடுக்கப்பட்டது.

(iii) ஷோளூரிலுள்ள சங்கத்திற்கு 1-5-60 முதல் மூன்று வருஷங்களுக்கு சிப்பந்திச் செலவு வகைக்கு வருஷத்திற்கு ரூபாய் தொள்ளாயிரம் (ரூ. 900) மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(iv) மற்ற மூன்று சங்கங்களுக்கும் இதுவரை மானியம் கொடுக்கப்படவில்லை.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இந்தச் சங்கங்கள் நடைமுறைகள் யாவை என அறியலாமா ?

**MR. SPEAKER :** The question is too vague. Definite ஆகக் கேளுங்கள்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** அந்தச் சங்கங்களின் வேலைகள் என்னவென்று அறியலாமா ?

**கனம் சபாநாயகர் :** நடைமுறையை வேலையென்று கனம் அங்கத்தினர் மாற்றிவிட்டார்கள் (சிரிப்பு).



10th August 1963]

**நிலமற்ற விவசாயத் தொழிலாளர்**

*99 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு நில மளித்து குடும்பம் ஒன்றிற்கு ரூ 500 மானியம் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து நமது மாநில சர்க்காருக்கு தாக்கீது ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) அப்படியானால், அந்தத் திட்டம் எப்போது அமுலுக்கு வரும் ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) & (இ) இந்திய அரசாங்கம் தெரிவித்த யோசனையின் மேல் இம் மாநிலத்திலுள்ள 50,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள தரிசு நிலத்தில் நிலமற்ற 10,000 விவசாயக் குடும்பங்களைக் குடியேற்றும் திட்டம் மாநில அரசாங்கத்தின் யோசனையில் இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான முடிவு விரைவில் எடுக்கப்படும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தரிசு நிலங்கள் எந்த எந்த மாவட்டத்தில் இருக்கின்றன என்பதைப்பற்றி விவரம் கூற முடியுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** எல்லா மாவட்டத்திலும் இருக்கக்கூடிய தரிசு நிலங்களுக்கும் இப்போது சர்வே நடந்து கொண்டிருக்கிறது.

**ஸ்தல ஸ்தாபன பாடசாலைகள்**

*100 **கேள்வி.—திரு. ஆ. கு சுப்பையா :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனி நபர்களால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு சர்க்காரால் கொடுக்கப்படும் சகலவிதமான சலுகைகளும் ஸ்தல ஸ்தாபன பாடசாலைகளுக்கும் கொடுக்கப்படுகின்றனவா ?

(இ) இல்லை என்றால், காரணமென்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) & (இ) இல்லை. அரசாங்க உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கும் அரசாங்க மானியமும் ஸ்தல ஸ்தாபனங்களில் கீழுள்ள பள்ளிகளுக்கு கொடுக்கும் அரசாங்க மானியமும் வித்தியாசப்படுகின்றன. இதன் முக்கிய காரணம், ஸ்தல ஸ்தாபனங்கள், சில கல்வி வசதிகள் செய்து தர வேண்டுமென்று சட்டப்படி கடமைப்பட்டிருக்கின்றன. இச் செலவில் ஒரு பகுதியை உள்ளூரில் வரி விதித்துத் திரட்டிக் கொள்ள அவைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(a) & (b) No. The main reason for the difference in the Government grants payable to schools under aided managements and local bodies is that the latter have certain statutory responsi-

bilities for provision of educational facilities and have been given powers to raise local resources to meet a part of the expenditure thereon.

MR. SPEAKER : Questions are over.

[Note.—**An asterisk * at the commencement of a speech indicates revision by the member**]

## II.—CALLING ATTENTION TO SHORTAGE OF SUGAR AND BLACK-MARKETING IN ITS SALE.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Agriculture to a matter of urgent public importance, viz., the acute shortage of sugar in the State and the prevalence of black-marketing in the sale of sugar.

* THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, the scarcity of sugar which the hon. Member has referred to is not a problem peculiar to Madras State but it is a general problem affecting all the States in India including States like Uttar Pradesh and Bihar which account for the bulk sugar production in India.

During the year 1961-62, i.e., the sugar year commencing from 1st November, 1961 and ending with 31st October, 1962, there was a carry over of 16 lakh tons of sugar for the entire country which judged by the carry overs of previous years was considered to be very large and the Government of India therefore imposed a cut to restrict the offtake of cane in the factories thereby reducing the production of sugar during 1961–62. However when it came to be known that the expectation regarding the out-turn of cane and the recovery were not going to be fully realised due to adverse seasonal conditions during that year, the cut was removed and the factories were allowed to utilise practically all the cane standing in the field by readjustment of quotas. Even so the production during 1961-62 was very much below what was anticipated and the carry over stock which was 16 lakh tons in the beginning of 1961-62 got reduced to 10 lakh tons on 1st November 1962.

The year 1962–63, i.e., sugar year commencing from 1st November 1962 has not been a normal year in so far as sugarcane production is concerned not only for Madras State but also for the other States in India. States like Uttar Pradesh and Bihar which account for the bulk of sugar production in the country and which usually export sugar to other States, have been particularly hard hit by the shortfall in cane production. This shortfall has resulted in general shrinkage of sugar production in the country. Anticipating a shortfall in cane production during 1962–63 speculative pressures were brought to bear by interested parties on the free market price of sugar towards the end of January 1963, and with a view to curb the rising trend in prices the Government of India made a release of 2·25 lakh tons of sugar for the entire country as against the normal release of 2 lakh tons, in the month of February, 1963, followed by a similar release of 2·25 tons in March 1963. In spite of these large releases sugar price continued



to rise beyond the levels prevailing during the pre-January period. Therefore in the last resort, with a view to conserving supplies and ensuring equitable distribution of sugar at fair prices to consumers the Government of India promulgated the Sugar Control Order, 1963. Under the scheme of regulation envisaged by this order :

(*a*) ex-factory prices have been fixed in all regions including the Southern Region consisting of Madras, Andhra Pradesh, Mysore and Kerala;

(*b*) The Government of India will allocate every month quotas of sugar to each State after taking into consideration the supplies available and the off-take of individual States during the last control period when the system of allotment of monthly quotas was in vogue and restrictions on Inter-State movement existed;

(*c*) The State Government will sub-allocate the quotas allotted to them to different areas or districts in the State and nominate licensed sugar dealers to take delivery of the allocated quantity of sugar from particular factories;

(*d*) The State Government will fix the price at which sugar will be sold at wholesale and retail levels after taking into consideration the charges incurred in bringing sugar to the areas of consumption plus a reasonable margin for expenses and profit.

Subsequent to the promulgation of the Sugar Control Order, the Government of India have also imposed a ban on the inter-State movement of sugar as a further step to conserve supplies and ensure fair and equitable distribution of sugar to the consumers.

Under the powers derived from the Sugar Control Order, the State Government have fixed a margin of Rs. 2 per bag weighing one quintal for retailers over the wholesale price and Re. 1 for wholesalers exclusive of transport costs. In the State so far 104 wholesalers and 10,035 retailers have been appointed to deal in sugar. The dealers who handle more than 50 quintals of sugar at a time are also obliged to take a licence under the Madras Sugar Dealers' Licensing Order, 1962, which has been issued under the powers vested in the State Government under section 3 of the Essential Commodities Act, 1955. The dealers who have been appointed as sugar retailers and wholesalers are bound to sell sugar only at the controlled price failing which action can be taken against them under the Defence of India Rules. In addition they are also expected to maintain accounts showing the quantities received and sold and the balance remaining at the end of each day's transaction and these accounts are open for inspection by officers of the Revenue and Commercial Tax Departments. Nominations are withdrawn in cases where dealers fail to maintain these accounts or commit any other irregularity which in the opinion of the authorities concerned would render the continuance of the dealer (as a nominated wholesaler or retailer as the case may e) undesirable. With all these stringent measures and the threat of punishment against

[Sri P. Kakkan] [10th August 1963

those who do not conform to the Statutory prices fixed for the sale of sugar the scope for blackmarketing has been considerably reduced.

The quota for Madras State has been fixed as 11,000 tons per month. Till the 16th of July 1963, the Government of India were releasing quotas on a monthly basis. But now the systems of monthly allocation has been changed and the Government of India have indicated releases for the next four months up to the end of October, including a special allotment of 1,100 tons for Deepavali. The allotment made by the Government of India at 11,000 tons per month does not fully represent the present level of consumption in the State. It is based upon the offtake during the previous control period with some adjustment, taking into consideration the supplies available during the current sugar year. The offtake in Madras State at the present level of consumption is in excess of 1,30,000 tons and will probably be asmuch as 1,45,000 tons per year. The ten factories in Madras State including the defunct mill at Melpatti can produce if seasonal conditions and cane supplies are normal, about 1,20,000 tons. The State is therefore dficit in sugar production and to maintain the present level of consumption it is necessary to import sugar from other States. Even for the 11,000 tons allotted by the Government of India, some quantity has to be obtained from Andhra factories to make up for the deficit in sugar production in the local factories. But it is expected that with the new sugar factory being commissioned at Mohanur in Salem district and the expansion of the Pugalur Factory, the level of production of the local factories would go up to 1,40,000 tons during 1963–64. But this is only a tentative target based on the assumption that cane production would be normal, seasonal conditions will be good and there will be no large scale diversion of cane for the manufacture of jaggery. During the current year the factories had to face the abnormal situation of restricted supplies due to diversion of cane for jaggery manufacture even by growers who have been traditionally supplying cane to the factories. The sugar production in Madras Factories during 1961–62 was of the order of 1,15,000 tonnes up to the end of February 1963 during the current sugar year the factories have produced about 86,000 tonnes of sugar.

## III.—GOVERNMENT BILL.

### THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) AMENDMENT BILL, 1963.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That leave be granted for the introduction of the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963."

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1963."

The motion was put and carried and leave was granted.



10th August 1963]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## IV.—ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEES.

### (1) COMMITTEE ON ESTIMATES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That this House recommends to the Legislative Council that they do nominate five Members of the Council to associate with the Committee on Estimates of this House for the year 1963–64 and communicate to this House the names of the Members so nominated."

MR. SPEAKER : The question is—

" That this House recommends to the Legislative Council that they do nominate five Members of the Council to associate with the Committee on Estimates of this House for the year 1963–64 and communicate to this House the names of the Members so nominated."

The motion was put and carried.

### (2) COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That this House recommends to the Legislative Council that they do nominate five Members of the Council to associate with the Committee on Public Accounts of this House for the year 1963–64 and communicate to this House the names of the Members so nominated."

MR. SPEAKER : The question is—

" That this House recommends to the Legislative Council that they do nominate five Members of the Council to associate with the Committee on Public Accounts of this House for the year 1963–64 and communicate to this House the names of the Members so nominated."

The motion was put and carried.

## V.—GOVERNMENT MOTION.

### AMENDMENT TO SCHEDULE TO THE MADRAS MOTOR VEHICLES (TAXATION OF PASSENGERS AND GOODS) ACT, 1952 (MADRAS ACT XVI OF 1952).

* THE HON SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That the following draft of a rule proposed to be made by the Governor of Madras under sub-section (2) of section 4 of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952) amending the Schedule to the said Act, be approved.

*Draft Rule.*

In the Schedule to the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952, sub-rules (3), (4) and (5) of rule 1 shall be omitted.

The rule in so far as it relates to the omission of sub-rule (5) of rule 1 shall be deemed to have come into force on the 1st April 1962."

Sir, this amendment relates to collection of composition fee from transport vehicles plying between Andhra Pradesh and Madras States.

The Government of Madras have decided in consultation with the Government of Andhra Pradesh that the principles of "Single Point Taxation" be adopted with effect from 1st April 1962 in respect of tax collected under the Madras Motor Vehicles Taxation Act and necessary notifications have been issued by the two Governments. The Government of Andhra Pradesh have issued orders omitting sub-rules (3), (4) and (5) of rule 1 in the Schedule to the Andhra Pradesh Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952, with retrospective effect from 1st April 1962 so as to enable them to collect tax under that Act from inter-State vehicles going from this State. In order to fall in line with the Andhra Pradesh Government, this Government also propose to omit sub-rules (3), (4) and (5) of rule 1 in the Schedule to the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952, to enable the collection of tax under that Act from 1st April 1962 in respect of inter-State vehicles coming from the Andhra Pradesh State.

According to section 4 (2) of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, the Schedule may from time to time be amended by rules made by the Government and approved by the Legislative Assembly of this State.

So I commend this motion for the acceptance of the House.

MR. SPEAKER: The question is—

"That the following draft of a rule proposed to be made by the Governor of Madras under sub-section (2) of section 4 of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952) amending the Schedule to the said Act, be approved.

*Draft Rule.*

In the Schedule to the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952, sub-rules (3), (4) and (5) of rule 1 shall be omitted.

The rule in so far as it relates to the omission of sub-rule (5) of rule 1 shall be deemed to have come into force on the 1st April 1962."

**The motion was put and carried.**

No. 61422



**VI.—FIRST SUPPLEMENT[illegible]RY STATEMENT OF EX[illegible]DITURE FOR 1963–64—GENERAL DISCUSSION.**

MR. SPEAKER: The h[illegible] Member Sri C. [illegible] Viswanathan may now speak.

***திரு. செ. கொ. விஸ்வநாதன்:*** [illegible]நாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு துணை அறிக்கை மீது நான் சில கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என கருதுகிறேன். மருத்துவத் துறையின் மேல் பெற்றிருக்கிற மானியத் தொகை மீது மருத்துவத் துறை தன் பணிகளை நன்கு நிறைவேற்றியிருக்கிறதா என்று பார்க்கும்போது அதிகப்படியான மருத்துவ மனைகளை கட்டுவதினால் மட்டும் இத் துறை வெற்றிகரமாக நடைபெறுகிறது என்று சொல்வதற்கில்லை. கிராமப்புறங்களில் உள்ள மருத்துவ மனைகளிலும், தாலூகா தலைமை மருத்துவ நிலையங்களுக்கும் வருகிற நோயாளிகள் இட வசதி இன்றி தரையில் படுக்கும் நிலை இன்னும் இருந்து கொண்டு தானிருக்கிறது. மாவட்ட மருத்துவ மனையிலானாலும் சரி அல்லது தாலூகா பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளிலானாலும் சரி இன்னும் தரையில் பாயைப் போட்டு தலையணைகூட இல்லாமல் படுத்து வரும் நிலை இன்றும் இருக்கிறது. இதை அரசாங்கம் கவனித்து ஒன்றும் செய்யவில்லை. சென்ற மருத்துவ மானியக் கோரிக்கை மீது பேசும்போதுகூட நான் கூறினேன். நோயாளி களுக்கு உணவிற்காக அளிக்கப்படும் தொகை ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்று நினைக்கிறேன். நோய் காலத்தில் அவர்களுக்கு வேண்டிய உணவை இந்த ஒரு ரூபாயில் அவர்கள் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். டி.பி. நோயாளிகளை எடுத்துக் கொண் டால் அவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவை அளிக்கவேண்டி யிருக்கிறது. அவர்களுக்குப் போடப்படும் இன்செக்ஷன்ஸ் காரண மாக அவர்களுக்கு நல்ல பசி எடுத்தும் அவர்களுக்கு ஒரு ரூபாய் மதிப்புள்ள உணவுதான் போடப்படுகிறது. போடப்படுகிற இன் செக்ஷனுக்கும் கொடுக்கப்படுகிற உணவிற்கும் வித்தியாசம் இருப் பதால் அவர்கள் நோய் தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதோடு மருத்துவ மனைகளில் அத்தியாவசியமான மருந்துக்கள்கூட வைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பெருவாரியாக இருக் கிறது. சாதாரணமாக வெளியில் 4 அல்லது 5 பைசாவிற்கு கிடைக்கக்கூடிய மாத்திரைகள்கூட மருத்துவ மனைகளில் இருப்ப தில்லை. மாத்திரை இல்லை நாளைக்கு வாருங்கள் என்று சொல்லக் கூடிய நிலை இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. இந்நிலைமைகளை சீர்தூக்கிப் பார்த்து குறைகளைப் போக்குவதற்கு வேண்டிய வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய ஆட்சியின் மேற்பார்வையில் செங்கற்பட்டுக்கு மூன்று மைல்கள் அப்பாலுள்ள திருமணி என்ற இடத்தில் சென்ட்ரல் லெப்ரசி ரிசர்ச் சானிட்டோரியம் என்ற மருத்துவ மனை இருக்கிறது. இம் மாநிலத்தில் உள்ள பெருவியாதிக்காரர்கள் செங்கற்பட்டிலிருந்து மூன்று மைல்கள் நடந்து சென்று அந்த மருத்துவ மனையில் சேர்ந்து அவர்கள் நோயைப் போக்கிக் கொள்ள விண்ணப்பிக்கும் போது இடவசதி இல்லை என்ற குறை நெடுநாட்களாக இருந்து வருகிறது. இந்த மருத்துவ மனைக்கு நம் மாநில சர்க்கார் 3¼

லட்சம் ரூபாய் ஒதுக்கி அந்த மானியத் தொகையைப் பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள், நம் மாநிலத்தைச் சார்ந்தவர்கள் அங்கு போகும்போது இடவசதி தாவில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே நம் மாநில சர்க்கார் தனியாக பெரும் தொகை ஒதுக்கி தனியாகவே பெரிய வார்ட்கள் கட்டி அங்கு நம் மாநிலத்திலிருந்து வருபவர்களுக்கு அதிகப்படியான இடவசதி தருவதால் ஓரளவு இந்த பெரு வியாதிக்காரர்களுக்கு நல்ல வசதியைத் தேடித் தர முடியும். நடக்க முடியாமல் நடந்து செல்கிறவர்களுக்கு அங்கு இடவசதி இல்லை என்ற நிலை இப்போதிருக்கிறது. ஆகவே சர்க்கார் இதைக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்து பஸ் போக்குவரத்து குறித்துள்ள நிலைமையை எடுத்துக்கூற விரும்புகிறேன். சென்னை நகருக்கு வருகிற பஸ்கள் ஓரளவு புதிய வண்டிகளாக இருந்தாலும் ஒரு ரோவில் நாலு பேர்கள் அமரக்கூடிய சீட்களை அமைத்திருக்கிறார்கள். ஒரு சீட்டில் நாலு பேர்கள் அமரும்போது, பஸ் வேகமாக வரும் போதும், திருப்பங்களில் திரும்பும்போதும், நிறுத்தும்போதும் பிரயாணிகள் மிகவும் கஷ்டப் படவேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். சர்க்கார் பஸ்களில் சீட்கள் அமைந்திருக்கிற முறையிலும் ப்ரைவேட் பஸ்களில் அமைந்திருக்கிற முறையிலும் அதிக வித்தியாசம் இருக்கிறது. அதில் சீட்கள் அமைந்திருக்கிற விதத்தில் ஒருவர் மேல் ஒருவர் உராய்ந்து கொண்டு உட்கார வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே சர்க்கார் இதை மறுபரிசீலனை செய்து எந்த விதத்தில் பிரயாணிகளுக்கு வசதியாக சீட்டை அமைக்க முடியும் என்று பார்த்து அதற்குத் தக்கபடி வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில பஸ்கள் ஒரு ஆண்டுதான் ஓடலாம் என்றிருக்கிறது. அப்படியிருந்தும் பழைய பஸ்கள் சில ரூட்களில் ஓடிக்கொண்டே இருக்கின்றன. தெரிந்தோ தெரியாமலோ ஓடிக் கொண்டிருக்கின்றன, அவ்விதம். சேசிஸ் நம்பர், என்ஜின் நம்பரை மாற்றி தவறுதலாக பலயிடங்களில் பஸ்களை ஓட்டிக் கொண்டிருக்கிற, பழைய பஸ்ஸிலே திரும்பத் திரும்ப பெயின்டை அடித்து ஓட்டிக் கொண்டிருக்கிற நிலை கிராமப்புறங்களில் ஓடுகிற பஸ்களில் இருக்கிறது. அதை பரிசீலித்து எந்தெந்த நகரத்தில் அப்பேர்பட்ட பஸ்கள் ஓடுகின்றன என்று பார்த்து தக்க பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த இரண்டு இலாகாக்கள் சம்பந்தப்பட்ட வரையில் என் கருத்துக்களைக்கூறி இதோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. ர. நல்லசிவம்**: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த உபமான்யக் கோரிக்கை மீது நான் இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். போலீசார் குடியிருப்புகளில் மின்சாரம் போடுவதற்காக என்று மாவட்டப் பகுதிக்கும், நகரப் பகுதிக்கும் சேர்த்து 7 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போலீசாருக்கு இன்று அவர்கள் விடுதிகளில் மின்சாரம் போடு





வதைவிட பல மாவட்ட பகுதிகளில் போலீசாருக்கு என்று சர்க்காரால் கட்டிக் கொடுக்கப்பட்ட விடுதிகள் அநேகமாக கிடையாது. ஆகவே மாவட்டப் பகுதிகளில் போலீசார் அவர்கள் தங்கள் சம்பளத்தில் ஒரு பெரும் பகுதியை வீட்டிற்காக இழந்து விட வேண்டியிருக்கிறது. மீதி உள்ளவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருப்பதைப் போன்று கிராமப்புறங்களில் உள்ள போலீசாருக்கும் இத்திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர் ஹோம் கார்ட்ஸ் சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட தொகை அனுமதித்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரை பஞ்சாயத்து ஊழியர்கள் போன்றவர்கள்தான் இதில் அதிகமாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தக் குறைபாட்டை பரிசீலித்து மக்கள் மத்தியில் இருந்து ஹோம் கார்ட்ஸ்க்கு ஆள்களைச் சேர்த்து அவர்களுக்கு பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதிகாரிகளை இதுபற்றி கேட்கும்போது அவர்கள் சொல்லுகிறார்கள், பொது மக்களைக் கேட்டால் அவர்கள் தங்களுக்கு வேலை இருக்கிறது, இதில் பங்கெடுத்துக் கொண்டால் தங்கள் வேலைகள் கெட்டு விடும் என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். ஆகவே இதுகுறித்து பரிசீலித்து பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களை பெரும் பகுதி சேர்க்காமல் கிராமங்களிலுள்ள வாலிபர்களை இதில் சேர்ப்பதற்கு, அதில் அவர்கள் சேர உற்சாகம் அளிக்கக் கூடிய விதத்தில் ஒரு ஏற்பாடு செய்தால்தான் இதனால் நாம் எதிர்பார்க்கிற பலனைப் பெற முடியும். பின்னர், விவசாயத் துறையில் வாழைக்கு நோய் வந்தால் அதை பரிசீலிக்க ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. சில நாட்களுக்கு முன்னர் விவசாய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கிடங்குகளை ஆழமாக வெட்டாததினால்தான் இந்த நோய் வருகிறது என்று. நானும் வாழை விவசாயம் செய்யக் கூடியவன்தான். மேடான பூமியிலும்கூட இந்த நோய் வருகிறது. இதுபற்றி விவசாய அதிகாரிகளிடமும் சொல்லியிருக்கிறேன். வாழை ஒரு வருஷ விவசாயம். இந்த விவசாயம் கெட்டு விட்டால், ஐந்து ஏக்கர் வாழை விவசாயம் வைத்திருந்தால், இரண்டு ஆண்டுகள் அந்தக் குடும்பம் தலை தூக்க முடியாது. வெற்றிலைக் கொடிக்காலுக்கு இருந்த பரிசோதனைத் திட்டம்போல் இதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். திருச்சி, கோவை, சேலம் ஒரு பகுதியில் இந்த வாழை விவசாயம் செய்பவர்கள் இருக்கிறார்கள். மேலை நாடுகளுக்குக்கூட நாம் இதை அனுப்பும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த வாழை நோயைத் தடுக்க சரியான பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சிறிய நீர்ப்பாசன திட்டங்களை பொறுத்த வரையில் மத்திய சர்க்காரும் சரி, மாநில சர்க்காரும் சரி அதிகமாக கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். எங்கள் பகுதியில் ஈரோடு தாலுகாவில் 2, 3 திட்டங்களை 2, 3 தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்திருக்கிறார்கள். 10-00 a.m.

[திரு. க. ர. நல்லசிவம்] [10th August 1963

பெரும்பள்ளம் போன்ற திட்டங்களை பரிசீலனை செய்திருக்கிறார்கள். ஆனால், இன்னும்கூட அந்தத் திட்டங்கள் நடைமுறையில் நிறைவேற்றப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களை கொஞ்சம் சீக்கிரமாக நிறைவேற்றிக்கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தண்ணீரைக் குறைப்பதற்கு சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். பொதுவாக, குறைந்த தண்ணீரை வைத்துக் கொண்டு நமது ராஜ்யத்தில் வெள்ளாண்மை செய்யப்படுகிற பிரதேசம் கீழ்பவானி பிரதேசம். அங்கு இருக்கக்கூடிய ஆலோசனைக் குழு அங்கத்தினர்கள்கூட வந்திருக்கிறார்கள். 25 சத விகிதம் தண்ணீர் வெட்டு இருக்கப் போவதாக அவர்கள் தெரிவித்தார்கள். (குறுக்கீடு) 15 சத விகிதம் வெட்டினாலும்கூட வெள்ளாண்மை செய்வது மிகவும் கஷ்டமாகப் போய் விடும். சாதாரணமாக 2,300, 2,400 க்யூசெக்ஸ் வரையில் ஆரம்பகாலத்தில் தண்ணீர் விடுவார்கள். அங்கு இருக்கக்கூடிய தண்ணீரின் அளவை அனுசரித்து எவ்வளவு அதிகமாக தண்ணீர் விட முடியுமோ அவ்வளவு அதிகமாக விடுவார்கள். காவேரியில் தண்ணீர் இல்லை என்று சொல்லுகிறார்கள். நாங்கள் நிச்சயமாக அது குறித்து அனுதாபப்படுகிறோம். அவர்களுக்கு உதவவேண்டுமென்ற அக்கறை எங்களுக்கும் இல்லாமல் இல்லை. காவேரிப் பிரதேசத்தில் வருஷம் பூராவும் சாகுபடி செய்யக்கூடிய நஞ்சைப் பகுதி. ஒரு பகுதி தண்ணீரைக் குறைத்துவிட்டாலும் அங்கெல்லாம் ஓரளவுக்கு வெள்ளாண்மை செய்துவிடமுடியும். ஆனால், எங்கள் பக்கத்தில் ஓடைக்கல், வெங்கக்கல் நிறைந்த மேடான பகுதி. இந்தப் பகுதியில், நீர்க்கசிவான பகுதியில் போதிய தண்ணீர் இல்லாவிட்டால் நெல் பயிர் வைப்பது சாத்தியமாக இராது. காவேரியில் தண்ணீர் நெருக்கடி இருக்கிறது. இருந்தாலும் எங்கள் அணையில் பூர்ணமாக தண்ணீர் இருக்கும்பொழுது எங்களுக்குத் தேவையான தண்ணீரைக் கொடுப்பதுதான் நியாயம். இத்தனை நாட்கள் காவேரிக்கு தண்ணீர் விட்டீர்கள். நாங்கள் அனுதாப உணர்ச்சியுடன் இருந்தோம். மறுபடியும் ஆகஸ்டு 15-ம் தேதிக்குப் பிறகும் தண்ணீரை வெட்டினால், எங்கள் வாழ்வு வெட்டப்படும். நீங்கள் கொஞ்சம் இது விஷயத்தில் எங்களுக்கு கருணை காட்ட வேண்டும். 4, 5 வருஷங்களாக விவசாயிகள் கடன்பட்டிருக்கிறார்கள். 100 ஏகரா வைத்திருந்தாலும், 2 ஏகரா வைத்திருந்தாலும், 1,000 ஏகரா வைத்திருந்தாலும், எங்கெல்லாம் கடன் கிடைக்கிறதோ அதையெல்லாம் வாங்கி மண்ணைப் பொன்னாக்கலாம் என்ற நம்பிக்கையில் ஏராளமாக கடன் பட்டிருக்கிறார்கள். 25 சத விகிதம் தண்ணீரை வெட்டிவிட்டால், சுமார் 40 சத விகிதம் நிலங்கள் சாகுபடிக்கு வராமல் போய்விடும். இதனால் பெரிய சிக்கல் ஏற்படும். 2 லட்சம் ஏகராவை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து தண்ணீர் விடுகிறார்கள். ஏராளமாகத் தண்ணீர் இருந்தாலே ஒரு லட்சம் ஏகராவில் சுமார் 80 ஆயிரம் ஏகரா தான் சாகுபடி செய்ய



10th August 1963] [திரு. க. ர. நல்லசிவம்]

முடியும். தண்ணீரைக் குறைத்துவிட்டால், ஒரு லட்சம் ஏகராவில் 40,000, 50,000 ஏகராதான் சாகுபடிக்கு வரும். 15 சத விகிதம் தண்ணீர் குறைந்துவிட்டால், சுமார் 30, 40 சத விகிதம் நிலங்கள் தண்ணீர் இல்லாமல் சாகுபடி செய்யப்படாமல் நின்று போய் விடும். இதனால் பெரிய தொல்லைகள் ஏற்படும். மறுபடியும் ஒரு வருஷ காலத்திற்கு தண்ணீர் கிடையாது. விவசாயிகள் இதனால் மிகவும் கஷ்டப்படுவார்கள். ரெவின்யூ அமைச்சர் அவர்கள் விவசாயிகளின் கஷ்டத்தை நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் இதை நன்றாகப் பரிசீலனை செய்து, நேரிடையாக வந்து பார்த்து தண்ணீரைக் கொஞ்சம்கூட வெட்டாமல் எங்களுக்கு முழுத் தண்ணீரும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. வெ. எல்லம நாயுடு**: கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டுக்கான உபமான்யக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். நடப்பு ஆண்டிலே ஒதுக்கப்பட்ட நிதியையும், செலவு செய்யப்பட்ட நிதியையும் பார்க்கும்பொழுது, முக்கியமாக விவசாயத் துறையிலே, பாசனத் துறையிலே இன்னும் நாம் அதிகமாக கவனம் செலுத்தியிருக்கலாம். நல்ல முறையில் பல பாசன வசதிகளை செய்துகொண்டு வருகிறோம். குட்டைகள் மராமத்து, சிறிய குளங்கள் கட்டுதல் போன்ற சிறிய பாசன திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஆங்காங்குள்ள மாவட்ட கலெக்டர் மேற்பார்வையில் சிறுபாசன இன்ஜினியர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட மேற்படி வேலைகளைத் துவக்கத்தில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இதைப்பற்றி மாவட்டத்திலுள்ள ஜில்லா அபிவிருத்தி குழுவில் சொல்லும்போதுகூட, போதிய ஆட்கள் இல்லை, எஸ்டிமேட் தயாரிக்க முடிவதில்லை, இரண்டு மாதங்களுக்கு ஒரு எஸ்டிமேட்தான் தங்களால் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். அதனால் வேலைகள் மிகவும் தாமதப்படுகின்றன. ஆகவே, சூப்பர்வைசர் போன்ற உத்தியோகஸ்தர்களை கொஞ்சம் அதிகப்படுத்தி, இந்த வேலைகளைச் சற்று துரிதமாகச் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக எனது தொகுதியில் சென்ற ஆண்டிலே பல வேலைகளை எடுத்துச் சொன்னேன். அமைச்சர் அவர்களும் அதற்கு ஆதரவு அளித்து எஸ்டிமேட் தயாரிக்கும்படி சொல்லியுள்ளதாகக் கூறினார்கள். இன்னும் அந்த வேலைகளை எடுத்துக்கொள்ள சாத்தியப்படவில்லை. போக்குவரத்துத் துறையிலும் அப்படித்தான் தாமதம் இருக்கிறது. எனது தொகுதியில் தொண்டாமுத்தூர், அட்டபாடி மலைப் பிரதேசம். அங்கே ஏறக்குறைய 4,000, 5,000 ஏகர் நிலங்கள் விவசாயம் செய்யப்படுகிறது. அங்கு எந்த விதமான போக்குவரத்து வசதியும் இல்லை. 10, 15 மைல்களுக்கு இப்பாலுள்ள கிராமங்களிலிருந்து தான் விவசாயிகள் வந்து விவசாயம் செய்யவேண்டும். ரோடு வசதிகூட இல்லாமல் இருந்த இந்தப் பிரதேசத்தில் இப்பொழுது

ரோடு வசதி செய்யப்பட்டிருக்கிறது. கோவையிலிருந்து வட்டபாடி ஆனைக்கட்டி வரையில் இந்த ஆண்டிலாவது ஒரு பஸ் போக்கு வரத்துக்கு ஏற்பாடு செய்தால் விவசாயிகளுக்கு நல்ல உறுதுணையாக இருக்கும். இப்பொழுது கேரள அரசாங்கம் அட்டபாடி பிரதேசத்தில் ஆனைக் கட்டிக்கு அடுத்த இடங்களில் பல வேலைகளைச் செய்து நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. அங்குள்ள காடுகள் வெட்டப்பட்டு, அவை விவசாயத்திற்கு லாயக்காக்கப் பட்டு, அவர்கள் பாசன வசதி செய்துதர முற்பட்டால், கீழே உள்ள பிரதேசத்தில் உள்ளவர்கள் நமது தமிழ் நாட்டில் அவிநாசி தாலுகா, கோவை தாலுகாவில் உள்ள விவசாயிகள் சற்று ஏமாற்றம் அடைவார்கள். முன் ஜாக்கிரதையாக அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு ஆவனவற்றைச் செய்து கொடுக்கவேண்டும். அங்குள்ள சிறிய ஏரிகளையெல்லாம் உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டும். அவிநாசி தாலுகாவில் தோளப்பாளையம், கோவை தாலுகாவில் 24 வீரம்பாண்டி, சின்னதடாகம் கிராமங்கள் இதனால் பாதிக்கப்படும். இந்தப் பிரதேசங்களில் போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதோடுகூட, சிறிய நீர்த்தேக்கங்களை அந்தப் பகுதிகளில் கட்டிக் கொடுப்பதற்கு ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நாட்டு அவசர நிலைமையை உத்தேசித்து, ஆஸ்பத்திரிகள் கட்டுவதுகூட சில இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. சுகாதார அமைச்சர் அவர்கள் பட்ஜெட் விவாதத்தின்போது மிகவும் தேவையான இடங்களில் ஆஸ்பத்திரிகளை நிறுத்த வேண்டிய அவசியமில்லை என்று சொன்னார்கள். இருந்தாலும்கூட, ஆஸ்பத்திரிக் கட்டிடங்கள் உடனே துவக்கப்படவில்லை. பல யூனியன்களில் சாங்ஷன் ஆகியுள்ள பிரைமரி ஹெல்த் செண்டர்ஸ் வேலைகள் துவக்கப்படவில்லை. அதற்குக் காரணம் கட்டிடம் கட்டுவதை அரசாங்கம் நிறுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் குறிப்பாக கொண்டாமத்தூர் பஞ்சாயத்து யூனியன், மற்ற யூனியன்களிலும் பிரைமரி ஹெல்த் செண்டர்ஸ் உடனே ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தத் துறையிலே நல்ல முறையிலே பல பணிகளைச் செய்திருந்தாலும்கூட, இன்னும் சிறிது அவசரமாக மற்ற வேலைகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராம அதிகாரிகள், கிராம அதிகாரிகளின் கீழே பணிபுரியும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் இவர்களுடைய நிலைமையைப்பற்றி பட்ஜெட் உரையில்கூட குறிப்பிட்டார்கள். அமைச்சர் கவனிப்பதாகச் சொன்னார்கள். அவர்களுடைய குறைகளை கூடிய சீக்கிரம் களையவேண்டும். அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதோடுகூட, குறைவான ஆட்கள் உள்ள இடங்களில் சிறிது அதிகமாக ஆட்களை நியமித்து அவர்கள் நல்





வாழ்வு வாழச் செய்யவேண்டும். அவர்கள் கிராமப் பஞ்சாயத்துகளில் பணி புரிவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பஞ்சாயத்து வரிவசூல் செய்வது தாமதப்படுகிறது. இப்பொழுதுள்ள தலையாரிகள், வெட்டியான்கள் கொஞ்சம் படிப்பு குறைவாக உள்ளவர்கள். இனிமேல் நியமிக்கப்படுபவர்கள் நல்ல படிப்பு உள்ளவர்களாகவும், வாலிபர்களாகவும் இருக்கவேண்டும். இப்பொழுது உள்ளவர்களில் மாறுதல் வரும்பொழுது, படித்த வாலிபர்களை அந்த வேலைகளில் நியமித்து, சற்று சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராம அதிகாரிகளுக்கு, கர்ணம், மணியக்காரர்கள் போன்றவர்களுக்கு ஊதியத்தை அதிகப்படுத்தவேண்டும். இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கும் படியானது, அவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமானது சற்றும் போதாததாக இருக்கிறது. அவர்களைக் கேட்டால் எங்கள் சம்பளத்தை வைத்துக்கொண்டு நாங்கள் வாழ்க்கை நடத்துவதா, அல்லது உங்கள் வேலைகளை செய்வதா? என்று கேள்விதான் எழுகிறது. ஆகவே, அவர்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த சந்தர்ப்பத்தை அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சி. மாணிக்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையை ஒட்டி, எனது தொகுதியைப் பற்றிய சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் நவலை, எலவடை, தாளநத்தம், கந்தக்கவுண்டனூர், கருத்துப்பட்டி, ஐயம்பட்டி, ஆத்தூர், குரும்பப்பட்டி, கொலகம்பட்டி, மருதிப்பட்டி, கோட்டப்பட்டி, சிக்கனூர், நரிப்பள்ளி, செல்லம்பட்டி ஆகிய கிராமங்கள் நல்ல விவசாயம் செய்யக் கூடிய இடங்கள். மேல் கண்ட இடங்களில் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுத்தால் விவசாய மக்கள் நல்ல பயனை அடைவார்கள். இந்த இடங்களிலெல்லாம் ஏழை விவசாயிகளும், தாழ்த்தப்பட்ட மக்களும் பின் தங்கிய வகுப்பினரும் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் இந்த இடங்களைப் பற்றி ஏதாவது அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் செய்தால் யாரும் கவனிப்பதே இல்லை. இந்த கிராமங்களில் உள்ள மக்கள் எனக்கும், இந்த தொகுதியிலுள்ள எம். பி. அவர்களுக்கும் ரிப்போர்ட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக, கடத்தூர் அருகே முத்தனூர் ஏரி இருக்கிறது. அந்த ஏரியைப் பழுது பார்க்க வேண்டுமென்று எத்தனையோ ரிப்போர்ட்டுகள் செய்த போதிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதே போல் சுங்கரப்பட்டி ஏரி இருக்கிறது. அதையும் பழுது பார்க்கவில்லை. எந்த அதிகாரியிடத்தில் போய்ச் சொன்னாலும் என்ன என்று கேட்பது கிடையாது. தர்மபுரியிலிருந்து பொம்மிடிக்கு போகும் வழியில் கத்தரிக்காய் பாலம் இருக்கிறது. இது பஸ் போவதற்கு ரொம்பவும் குறுகலாக இருக்கிறது. ஆகவே இதை விரிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும்

[திரு. சி. மாணிக்கம்] [10th August 1963

வாணியாற்றில் ஒரு அணைக் கட்டு கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரூர் ஏரியை ஆழப்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சார இலாகா சம்பந்தமான ஒரு சம்பவத்தை இந்தச் சபையில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதைப் பற்றி பெருமாள் கவுண்டர் என்பவர் என்னிடம் சொல்லி இருக்கிறார். அவர் மோட்டார் வாங்கி ஒரு வருஷக் காலம் ஆகியும் கூட, லைன் கொடுத்து நான்கு மாதங்கள் ஆகியும், இன்னும் கனெக்ஷன் கொடுக்காமல் ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார். இதை எல்லாம் தயவுசெய்து உடனடியாக கவனித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

*** திரு. ம. கமலநாதன் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கல்வித் தலைப்பின் கீழ் சில கல்லூரிகளுக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்கும் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கும் தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பொதுவாக, ஆரம்பத்தில் பள்ளிக் கட்டிடங்களைப் பற்றி பேசுகிற நேரத்தில் இந்தச் சட்டசபை ஆரம்பித்த நாளிலிருந்து இங்கே என்னைப் போன்றே இந்த மன்றத்தில் உள்ள அனுபவம் வாய்ந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எல்லாம் இந்த ஆரம்பப் பள்ளிகள் கட்டிடத்திற்கான தொகை, புதிதாக சேர்க்கப்படும் மாணவர்கள் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது, பழைய மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இதுவரையிலும் ஆரம்பப் பள்ளி கட்டிடங்களைப் பற்றிய நினைவே எழாதது வருந்தத் தக்கது. அடுத்த உப மான்யக் கோரிக்கையிலாவது இதற்கான தொகையை ஒதுக்குவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

பொது சுகாதாரத்தின் கீழ் மாநிலம் முழுவதிலும் அம்மை ஒழிப்புத் திட்டத்தை தீவிரமாக அமுலாக்குவதற்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அம்மை ஒழிப்பு தேசீய திட்டத்தின் கீழ்—இப்பொழுது என்னுடைய தொகுதி மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே குத்தப்படும் ரஷ்யன் லிம்ப் ஆனது அதிக சக்தி வாய்ந்ததோ என்னமோ தெரியவில்லை. குத்திய பிறகு மூன்று மாதங்களுக்கு கையை தூக்க முடியாத நிலையிலே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனால் அம்மை குத்திக் கொள்வதற்கு மக்கள் பயப்படுகிறார்கள். அப்படி அம்மை குத்திக் கொள்ளாதவர்கள் மீது பிராஸிக்யூஷன் செய்வதற்கு அங்கே உள்ளவர்கள் முயற்சி செய்கிறார்கள். நான் ஊத்தங்கரை பஞ்சாயத்து யூனியன் கூட்டத்திற்குச் சென்ற பொழுது, இந்த வலி பொறுக்காமல் ஆறு வயது குழந்தை ஒன்று இறந்து விட்டதாகச்



10th August 1963] [திரு. ம. கமலநாதன்]

சொன்னார்கள். ஆகவே இந்த அம்மை ஒழிப்பு தேசீய திட்டத்திற்காக உபயோகிக்கப்படும் மருந்தை மனதில் கொண்டு இந்தத் திட்டத்தை நல்ல முறையில் அமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடை வளர்ப்புக்காக ஏராளமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. காட்டிலாகாவினர் ஏரிகளிலே எல்லாம் மரங்களை நடுகின்றனர். எல்லா கிராமங்களிலும் மேய்ச்சல் தரை இல்லாத காரணத்தினால், தண்ணீர் தேங்காத காலங்களிலே ஏரிகளில் புல்லை மேயக்கூடிய வசதி இல்லாமல் போகிறது. ஆகவே காட்டிலாகாவினர் ஏரிகளிலே மரங்களை நடுகின்ற நேரத்திலே மேய்ச்சல் தரைக்கு ஓரளவுக்கு இடம் விடும் நோக்கத்துடன் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கால்நடைகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற முறையிலே ஏராளமான தொகை ஒதுக்கி இருக்கிறோம். இன்று நமது கிராமப் புறங்களில் உள்ள கால்நடைகள் எலும்பும் தோலுமாகக் காட்சி அளிக்கின்றன. நான் பொது விவாதத்தின் போதே இதைப் பற்றிக் குறிப்பிட்டேன். கால்நடைகளை அபிவிருத்திச் செய்கின்ற நேரத்திலே, நல்ல ப்ரீடுகளை உண்டாக்க வேண்டும் என்ற நினைவிலே நாம் பலாத்காரத்தில் கூட ஈடுபடலாமென்று சொன்னேன். நமது எதிர்க்கட்சி உபதலைவர் அவர்கள் பேசும்போது இந்த மன்ற பெண் உறுப்பினர் திருமதி பார்வதி அர்சுனன் அவர்கள் "வெளி நாட்டுப் பயணம்" என்ற நூலில் அப்படிப்பட்ட கால் நடைகளைக் கொன்று கூட விடலாம் என்று எழுதி இருப்பதை எடுத்துக் காட்டினார். அவைகளைக் கொல்லக் கூட வேண்டியது இல்லை. நமது கிராமப் புறங்களில் இருக்கும் மிகக் கேவலமான நிலையில் உள்ள கால்நடைகளை, அவைகள் காளைகளாக இருந்தால் அவற்றின் ஆண்மைத்தனத்தை இழக்கச் செய்து, செயற்கை முறையிலே இன அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்தால், உண்மையிலேயே கிராமப்புறங்களில் உள்ள கால்நடைகள் நல்ல கால் நடைகளாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த முறையில் உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய பாசனத் திட்டங்களுக்காக ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிருஷ்ணகிரி வட்டத்திற்கோ அல்லது சேலத்திலுள்ள மற்ற பகுதிகளுக்கோ அதிகமான தொகை ஒதுக்கவில்லை. இராமநாதபுரத்திற்குத் தான் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின்கீழ் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நீர்த் தேக்கத்தின் கீழ் இருக்கிற ஏரிகளின் கீழுள்ள ஆயக்கட்டுகளிலே உள்ளவர்கள் இரு போக நஞ்சைத் தீர்வை ஏற்கனவே கட்டி வருகிறார்கள். இப்பொழுது போடப்பட்டிருக்கிற ஸ்பெஷல் செஸ் வேறு இருக்கிறது. ஒவ்வொருவரும் ஆறு ஆண்டுகளுக்கு ஸ்பெஷல் செஸ் என்ற வகையில் ஏக்கருக்கு ரூ. 200-க்கு மேல் கட்ட

[திரு. ம. கமலநாதன்] [10th August 1963

வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது விவசாயத்தில் அவர்கள் எப்படி அதிகமான அக்கறை காட்ட முடியும் என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். விவசாயத் துறையில் சேலம் மாவட்டம் பின்தங்கி இருக்கிறது. திட்டங்கள் போட்டால் மட்டும் பயனில்லை. அவற்றை நிறைவேற்றக் கூடியவர்கள் யார் என்பதைப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு விவசாய அதிகாரி இருந்தும், ஒரு மேஸ்திரி இருந்தும் கூட திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட்டுகளை அனுப்புவதிலும், ரிட்டர்ன்கள் தயாரிப்பதிலுமே அவர்கள் காலத்தைக் கழிக்கிறார்கள். திட்டங்களை நிறைவேற்றுவதற்கு போதிய நேரம் அவர்களுக்குக் கிடையாது. ஆகவே மேஸ்திரி போன்ற பணியாட்களை அதிகமான அளவுக்கு நியமிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஓரளவுக்கு விவசாயத்தை தீவிரமான முறையிலே நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது நிதி அமைச்சரவர்களுக்கு தெரியும். கிருஷ்ணகிரியில் கல்லூரி அமைப்பதுபற்றிக் குறிப்பிடப்பட்டது. அதுபற்றி இந்த உப மானியக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அதைப்பற்றி ஒன்றும் இல்லை. இது முதல் துணை மானியமாக இருப்பதால், இனி இரண்டாவது, மூன்றாவது துணை மானியங்கள் வரலாம். அப்படி வரும்போதாவது அமைச்சரவர்கள் கவனம் செலுத்தி இந்தக் கோரிக்கையை, கிருஷ்ணகிரியில் கல்லூரி அமைப்பதுபற்றி யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். துரதிர்ஷ்டவசமாக முதல் அமைச்சர் அவர்கள் வடக்கே போய்விட்டால் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நாளைக் காலையில் வந்து விடுவார்கள் (சிரிப்பு.)

**திரு. ம. கமலநாதன்** : அவர்கள் பதவியிலிருந்து போவதாக இருந்தால், மற்றொரு அமைச்சர் நியமிக்கும்போது சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு . . . .

**கனம் சபாநாயகர்** : துணை மானியக் கோரிக்கைகளைப் பற்றிப் பேசவேண்டும். இப்பொழுது பேசுவதெல்லாம் ஜெனரல் பட்ஜெட் டிஸ்கஷன் போல் ஆகிவிட்டது.

**திரு. ம. கமலநாதன்** : இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், எங்கள் மாவட்டத்திற்கும் மந்திரி சபையில் பிரதிநிதித்துவம் இல்லாததால்தான் நாங்கள் சொல்வதெல்லாம் சாதாரணமாகப் போய்விடுகிறதோ என்னவோ என்று தோன்றுவதால்தான். ஆகவேதான் அமைச்சர் ஒருவர் எங்கள் மாவட்டத்திலிருந்து இருக்கவேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.



10th August 1963]

MR. SPEAKER: I request the hon. Members to speak about the specific subjects covered by the supplementary Demands and not about general things as if this is a discussion on the General Budget.

**திரு. ஜே. மாதா கவுடர்** : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1963-64-க்கு ஆன முதல் துணை மதிப்பீட்டை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். துணை மதிப்பீட்டில் அதிகமாகத் தொகை, நிதி கேட்டிருப்பதெல்லாம் நாட்டின் தற்காப்பு முயற்சிக்கு என்பது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைக்கு நாட்டின் தற்காப்புத் தான் மிக மிக அவசியமும் அவசரமும் ஆனது. நாட்டின் தற்காப்பு கவனிக்கப்பட்டதன் பிறகுதான் நம்முடைய மாநிலங்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பது பற்றி சிந்திக்க வேண்டும். தற்காப்பிற்குத் தான் முதல் இடம். மற்றவை இரண்டாந்தரமானவைதான். அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது மிக மிக வரவேற்கத்தக்கது. கல்லூரிகளில் மாணவர்களை அதிகப்படியாக தேசீய மாணவர் படையில் சேர்க்க வேண்டும் என்பது மிக மிக முக்கியமானதும், வரவேற்கத்தக்கதும் ஆகும். மாணவர்களிடம் தேசீய மனப்பான்மையை ஏற்படுத்தி, மாணவர்களைத் தேசத்தின் காவலர்களாக இருக்க வேண்டுமென்று இளைஞர்கள் உள்ளத்தில் புகுத்தி விட்டால் நாட்டின் தற்காப்பு நல்ல நிலையில் அமைந்து விடும். ஆகவே அதுவும் வரவேற்கத் தக்கதே.

தூத்துக்குடி துறைமுகம் வருமா, வராதா, ஏதோ காங்கிரஸ்காரர்களே அது வராது என்று நினைத்திருந்தாற்போலவும் பேசப்பட்டு வந்தது. இன்றைக்கு அதற்கும் ஏற்பாடு செய்து அதற்கு மத்திய சர்க்கார் ஒரு சீப் எஞ்ஜினியரையும் நியமித்திருக்கிறார்கள். அது மிக மிக வரவேற்கத்தக்கது. ஆகவே குறைபாடுகள் சொல்லுவதற்கே முடியாமல் எல்லாக் குறைகளையும் நிவர்த்தி செய்து விடுகிறார்கள். இதை இந்தத் துணை மதிப்பீட்டில் கண்கூடாகப் பார்க்கிறோம்.

அதே நேரத்தில், பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஜனத்தொகை அடிப்படையில் 40 ந.பை. வீதம் மானியத் தொகை கொடுக்கப்படுகிறது. அதை நான் பொதுவாக வரவேற்கிறேன். ஆனால் அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. இதுபற்றி இரண்டு மூன்று ஆண்டுகளாகவே நான் எடுத்துச் சொல்லி வருகிறேன். ஜனத்தொகை அடிப்படையில் கொடுப்பது அவ்வளவு சரியல்ல என்பது என்னுடைய கருத்து. இதை ரெவின்யூ அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சாலை மானியம் கொடுக்கும்போது ஜனத்தொகை அடிப்படையில் ப்ளெயின்களுக்கும் மலைப் பிரதேசங்களுக்கும் ஒரே மாதிரி கொடுப்பது அவ்வளவு சரியாகாது. மலைப் பிரதேசங்களில் இந்த 40 ந.பை. யை வைத்துக் கொண்டு எப்படி சாலை அமைக்க முடியும்? இந்தச் சிக்கலை தங்கள் மூலம் ரெவின்யூ அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சாதாரணமாக

மலைப் பிராந்தியத்தில் சாலை அமைக்க வேண்டுமானால் ஒரு மைலுக்கு ரூ. 10,000 செலவு ஆகும். அதே வேலைக்கு ப்ளெயின்களில் ரூ. 3,000, 2,000 இருந்தால் போதும். கப்பியோ அல்லது மண் ரோடோ போட்டுவிடலாம். மலைப் பிரதேசத்திலே பாறைகளை வெட்டிக் கொண்டு போகும் போது அதிகப்படியான செலவு ஏற்படும். அந்த மாதிரி மலைப் பிரதேசத்திற்கும், ப்ளெயின்களுக்கும் ஒரே மாதிரி கொடுப்பதனால், இந்த 40 ந.பை.யே கொடுப்பதனால், எவ்வளவு ஐந்தாண்டு திட்டங்கள் போட்டாலும், ப்ளெயின்கள் ஒரு ஐந்தாண்டில் அடையும் வளர்ச்சியை, மலைப் பிரதேசங்களில், குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் ஒரு 25 ஆண்டுத் திட்டம் இருந்தால்தான் அடைய முடியும். அவர் எங்களுக்கு ஒரு 25 ஆண்டுத் திட்டம் தான் போட வேண்டும். அவர்கள் ஐந்தாண்டில் அடையும் வளர்ச்சியை நாங்கள் 25 ஆண்டில்தான் அடைய முடியும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே ரெவின்யூ அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது என்னவென்றால் பர் காபிடா கணக்கு, தலைக்கு இவ்வளவு என்று கணக்கு போடும்போது ப்ளெயினுக்கும், ஹில்ஸுக்கும் வெவ்வேறாகப் போடவேண்டும். இது பற்றி இரண்டு மூன்று தடவை இந்த மன்றத்திலேயே குறிப்பிட்டு இருக்கிறேன். அன்றைக்கு நிதி அமைச்சராக இருந்தவர் அதை ஒரு பாலிசியாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ப்ளெயின்களுக்கு ஒரு ரோடு போடுவதென்றால் பாதி மானியம், பாதி மக்கள் பங்கு என்று வைத்தால், மலைப் பிரதேசங்களுக்கு 20 சத விகிதம் பொது மக்கள் பங்கு என்றும், 80 சத விகிதம் சர்க்கார் பங்கு என்றும், அப்படி மலைப் பிராந்தியங்களுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஏன்? மக்களால் அதிகப்படியான கண்டிரிப்யூஷன் கொடுக்க முடியாது என்பதால் தான். அதிகச் செலவாகும் என்பதால்தான். ஆகவே, அந்த தீர்மானத்தை ஒட்டி, இன்றைக்கு பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கும்போதும், ப்ளெயினுக்கு 40 பைசா என்றால் மலைப் பிரதேசங்களுக்கு 80 பைசா என்று வைக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் மலைப் பிரதேசங்களில் ரோடுகளை அமைக்க ஏதுவாக இருக்கும். இதை ரெவின்யூ அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பாலிடெக்னிக் பொறுத்த வரை, அதில் அதிகமான மாணவர்கள் சேர வசதி செய்து கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. மூன்றாவது திட்டத்தின் பிற்பகுதியில், சர்க்கார் துறையில் நீலகிரியில் ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்படும் என்று சென்ற நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. நாம் இப்பொழுது மூன்றாவது திட்டத்தின் பிற்பகுதியில் இருக்கிறோம். ஆகவே, தயவுசெய்து, இதைப்பற்றிக் கவனம் செலுத்தி, நீலகிரியில் ஒரு பாலி டெக்னிக் ஏற்படுத்த, இந்த மானியக் கோரிக்கையில் இல்லாவிட்டாலும், அடுத்து வரும் மானியக் கோரிக்கையில் எங்களுடைய மாவட்டத்தில், சர்க்கார் துறையில், ஒரு பாலிடெக்னிக் அமைக்க





கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதை அடுத்த கல்வி ஆண்டிலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஹில் அலவன்ஸ் சம்பந்தமாக எந்த விதமான மாற்றமும் செய்யப்படவில்லை. அது ஒன்று மாத்திரம் அப்படியே இருக்கிறது. இங்கெல்லாம் பேசிச் சம்பளத்தை மாற்றி அமைத்த நேரத்தில், ஹில் அலவன்ஸைப் பற்றி மறந்து விட்டோம். அதனால், அங்கு இருக்கும் ஆசிரியர்களுக்கு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. ஏதாவது ஒன்றைச் செய்யும் போது, மலைப் பிரதேசம் என்பதை மறந்து விடுகிறார்கள். விலைவாசி உயர்வைப் பார்த்து அடிப்படைச் சம்பளத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று உயர்த்தினோம். மலையிலே வாசம் செய்ய வேண்டியவர்களுக்கு, விலைவாசி ஏற்றம் ஒரு பக்கம், கம்பளி உடை, உலன் ட்ரஸ் வேண்டி இருப்பது மறு பக்கம். அவர்களுக்கு, ஆசிரியர்களுக்கும், மற்ற என்.ஜி.ஓ. களுக்கும் ஹில் அலவன்ஸ் மாற்றப் படாமல் இருக்கிறது. ஆகவே, நிதி அமைச்சர் அவர்கள் அதை உடன்டியாக கவனித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொற்கொல்லரைப் பொறுத்தவரை, அவர்களுக்கும் கடன்கள் கொடுப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. உதவி கொடுக்கும் போது, அவர்கள் அதே வேலையைத்தான் செய்யவேண்டும், அவர்களை ஒரு தனிச் சமூகமாக வைத்துக் கொண்டு இருக்க வேண்டும், அவர்கள் தொடர்ந்து பொன்வேலைதான் செய்ய வேண்டும் என்றில்லாமல், அவர்கள் மாற்றுத் தொழில்களும் செய்ய வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்; வியாபாரத்திற்குப் போகலாம், விவசாயத்திற்குப் போகலாம். அப்படிச் செய்தால் அவர்களுடைய பிரச்சினை ஓரளவுக்குத் தீரும். என் தொகுதியில், கூடலூரில் ரெவின்யூ பூமிகளைக் கொடுக்கச் சொல்லி சர்க்காருக்கு விண்ணப்பங்கள் போடுங்கள் என்று சொன்னேன். அவர்கள், விவசாயமோ அல்லது ஏதாவது சிறு பொட்டிக் கடையோ வைத்து தங்கள் கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். திருப்பித் திருப்பிச் சர்க்காருக்குத் தொல்லை இல்லாமல் இருக்கும். ஆகவே, அம்மாதிரி விண்ணப்பம் செய்திருக்கும் கேசுகளில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். அதையும் இந்த நேரத்தில் கவனித்து, அதற்கு ஆவன செய்யவேண்டுமென்பதைப் பற்றி 10-30 a.m. அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று விரும்பி, அடுத்த மான்யக் கோரிக்கை வரும்போது இதையெல்லாம் கவனத்தில் வைத்துக்கொண்டு, அடுத்த பட்ஜெட்டைத் தயாரிக்கும்போது, ரிவைஸ்ட் பட்ஜெட்டானாலும், பட்ஜெட்டானாலும் மலைப் பிரதேசத்திற்கும் ப்ளெயின்களுக்கும் இருக்கும் பாகுபாடுகளைப் பார்த்து எப்படிச் செய்யவேண்டுமென்று பார்த்துச் செய்யவேண்டும். அதை அடுத்த மதிப்பீட்டிலாவது நான் பார்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[10th August 1963

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த முதல் உப மானியக் கோரிக்கை மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று பல திட்டங்கள் அரசாங்கத்தில் தீட்டப் பட்டிருக்கின்றன. அதில் மைனர் இர்ரிகேஷன் ஸ்கீம் என்றும் ஏற்பாடு செய்து அதற்கு வேண்டிய அலுவலர்களை ஏற்பாடு செய்து அதைப் பரிசீலிக்கவும், அமலாக்குவதற்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்த டிபார்ட்மெண்டில் அதிகக் கால தாமதம் ஏற்படுவதால் இன்னும் வேண்டிய பணியாளர்களை ஏற்படுத்தி யாவது அந்தத் திட்டங்கள் சீக்கிரம் நிறைவேற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசினருக்கு நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

பொற்கொல்லர்கள் விஷயத்தில் கடன்கள் வழங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இதிலே வட்ட ரீதியாக கடன்களுக்கு யாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும், எந்த முறை யைக் கையாளவேண்டும் என்று சரியான பிரசாரம் இல்லாததால் அநேகருக்கு இந்தக் கடன் பெற வசதி இல்லாது இருப்பதால் இதை விரிவாக வட்ட ரீதியாக உத்திரவுகள் அனுப்பி அதைப் பற்றிப் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு லோக் கல் போர்டு கிராண்ட் என்று தொகை கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகை ஜனத்தொகையின் பேரில் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஒரு பஞ்சாயத்து யூனியனில் 50 பஞ்சாயத்துக் களும் இருக்கின்றன, ஒரு பஞ்சாயத்து யூனியனில் 10 பஞ்சாயத் துக்களும் இருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்தில் எவ்வளவு தூரம் ரோடுகள் இருக்கின்றன, எவ்வளவு தூரம் பராமரித்து வருகிறார்கள் என்று கணக்கிட்டு அந்தத் தொகையைப் பங்கிட்டுக் கொடுத்தால் நல்ல முறையில் ரோடுகள் போட்டு, பஞ்சாயத்துக்கள் அபிவிருத்தி அடைச் சாதகமாக இருக்கும் என்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கல்வியைப் பொறுத்தவரையில் இப்போது ஆங்காங்கு அதிகமாகப் பள்ளிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடந் தேறி வருகின்றன. இப்போது மாவட்ட ரீதியில் ஒவ்வொரு டிஸ்ட் ரிக்ட் எஜுகேஷனல் ஆஃபீசருக்கும் ஒரு ஜீப் சப்ளை செய்யப் பட்டுள்ளது. ஆனால் அதே சந்தர்ப்பத்தில் மூன்று மாவட்டங்கள் உடைய இன்ஸ்பெக்டெர்ஸ் ஆஃப் கேர்ள்ஸ் ஸ்கூல்ஸ்ஸுக்கு ஜீப் இல்லாமல் அவர்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்வதால் 30 நாட்களில் 15 அல்லது 20 நாட்கள் பஸ் பிரயாணத்திற்கே சரியாகப் போய் விடுகிறது. அவர்களால் வேலையைச் சரியாகச் செய்ய முடியவில்லை. அவர்களுக்கும், இப்போது செகண்டரி எஜுகேஷனில் இருக்கிற ஸ்பெஷல் டி.இ.ஓ. அவர்களுக்கும் ஜீப் சப்ளை செய்ய அரசாங்கம் முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



10th August 1963] [திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்]

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் கனம் அமைச்சர் அவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களின் நிலையைப் பற்றி 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் யோசனை செய்து முடிவு எடுப்பதாகச் சென்ற கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக ஏப்ரல் மாதத்திலாவது முடிவு எடுக்கவேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொள்வதோடு, கிராம உத்தியோகஸ்தர்கள் கவுரவ உத்தியோகஸ் தர்கள் என்று அரசாங்கமே ஒத்துக்கொள்வதால் அவர்களுக்கு ஏற்ற பயணப்படியையும் கொடுக்கவேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காட்டிலாகா பற்றி சில குறிப்புகள் சொல்ல ஆசைப்படுகிறேன். காடுகளில் அநேக கால்நடைகள் மேய் கின்றன. அதற்குத் தக்க குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருக் கிறது. அதற்காகப் பல குளங்கள் ஏற்கெனவே வெட்டியிருந்தும் பராமரிப்பு இல்லாமல் சீர்கேடான நிலையில் இருப்பதால் கால் நடைகளுக்கு தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிற காரணத்தினால் ஏற்கெனவே இருக்கும்படியான குளங்களைச் சீர்படுத்தி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்றும் மேலும் மேய்ச்சல் தரை இல்லாத கிராமங்களில் மேய்ச்சல் தரை உண்டு பண்ணி கால் நடை வளர்ப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் காட்டிலாகா அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் விஷயத்தில் சில குறிப்புகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் டைமிங்ஸ் அநேகமாக ஒருவருக்கும் சரியாகத் தெரிவதில்லை. அதற்கு அச்சிட்ட டைம்-டேபிள் ஒன்றை விற்பனைக்கு ஏற்பாடு செய்தால் நல்ல சேல்ஸ் ஆகும் என்றும், பொது ஜனங்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்றும் நான் கருதுகிறேன். ஆகையால் இந்த ஏற்பாட்டைச் செய்ய முன்வருமாறு கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர் களே, இந்த உப மான்யக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்போது தீவிர விவசாய உற்பத்தி செய்ய வேண்டுமென்று இருப்பதால் மின்சாரம் தேவைப் படுகிறது. அந்த மின்சாரத்தினைக் கொடுப்பதற்கு இப்போது பல திட்டங்கள் சாங்ஷன் ஆகியிருந்தாலும் . . .

**கனம் சபாநாயகர் :** மின்சார போர்டு வரவு செலவுத் திட்டம் அப்புறம் வருகின்றது. இப்போது மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசலாம்.

**திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர் :** என்னுடைய தொகுதி ரொம் பவும் வரண்ட பிரதேசம். ஒரு பாரெல் தண்ணீர் 1¼ ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள் புஞ்சைப்புளியம்பட்டியில். இப்போது குளம் குட்டைகளை அதிகமாக அமைத்தால் ஓரளவு தண்ணீர்

*[திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்]* [10th August 1963

கிடைக்கும். அதற்கு, கூடிய சீக்கிரம் கட்டுவதற்காக சூபர்வைசர்கள் போன்றவர்கள் ரொம்பவும் குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதிகமாக சூபர்வைசர்ஸ் போட்டு அந்தக் குட்டைகளையெல்லாம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என் தொகுதியில் 3-4 வருஷங்களுக்கு முன் குளம் கட்டுவதற்கு சுமார் 10 ஸ்கீம்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதில் ஒன்றுதான் இப்போது வந்திருக்கிறது. இப்போது மொட்டணம் குளம் கட்டும் வேலை நடந்துகொண்டிருக்கிறது. பாக்கியெல்லாம நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதாவது ஒரு டன் விளைச்சலுக்கு ரூ. 8,000 செலவழித்தால்தான் கட்ட முடியும் என்று சொல்லு காலத்தில் எங்கள் ஜில்லா போன்ற இடங்களில் ரூ. 7,000 அல்லது ரூ. 8,000 செலவழித்தால் தான் கட்ட முடியும் என்று சொல்லுகிறார்கள். அதை மாற்ற வேண்டிய அளவுக்குச் செலவு செய்து குளம் குட்டைகளைக் கூடிய சீக்கிரம் அமைக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இப்போது பாசனம் என்றால், தண்ணீர் பாய்ச்சி நெல் பயிர் செய்யும் பாசனத்தை விட குளம் குட்டைகள் அமைத்து, 30,000 ஏக்கர் பாசனம் என்றால் 4-5 பகுதிகளாகப் பிரித்து குளம் குட்டைகளை அமைத்துத் தண்ணீர் கொடுத்தால் 2 லட்சம் அல்லது 3 லட்சம் ஏக்கர் தோட்டத்துப் பாசனம் கிடைக்கும். அதிலும் வருஷம் ஒன்றுக்கு மில்லெட்ஸ் 6-7 பொதி கிடைக்கும். வருஷம் ஒன்றுக்கு புகையிலை ஒரு ஏக்கராவுக்கு மூன்று நான்கு பாரங்கள் வரை கிடைக்கக்கூடும். அதனால் சென்ட்ரல் எக்ஸைஸ் மூலம் அரசாங்கத்திற்கு அதிக வருவாய் கிடைக்கும். அப்படியில்லையென்றால், என்னுடைய தொகுதியில் லோயர் பவானி அணைக்கட்டு இருக்கிறது. சில இடங்களில் பம்ப் செட் வைத்து, வாய்க்கால் வெட்டித் தண்ணீர் கொடுக்கிறார்கள். அதேபோல், என்னுடைய தென் தொகுதியில் தென் பக்கம் ஓரமாக குளம் குட்டை அமைத்து, பம்ப் செட் வைத்து லோயர் பவானி வாய்க்காலிலிருந்து தண்ணீர் கொடுத்தால் அதுவே போதுமானது. கிணறுகளில் தண்ணீர் வந்துவிடும். அப்பொழுது என்னுடைய தொகுதியில் 40 ஆயிரம் ஏக்கராக்களுக்குமேல் தண்ணீர் வசதி பெறும். கிணற்றிலிருந்து பாசனம் செய்யலாம்.

என்னுடைய தொகுதியில் ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அந்த ரோடுகளையெல்லாம் கூடிய சீக்கிரத்தில் செப்பனிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். தாளவாடி பிர்காவிலும், நம்முடைய நண்பர் திரு. மாதா கவுடர் அவர்கள் சொன்னது போல், குத்தியாளத்தூர் போன்ற ஊர்களிலும் ரோடு வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. அதனால் பஸ்ஸின் ஸ்பிரிங் அடிக்கடி ஓடிந்து போகிறது. ஆகவே, அதற்காகவும் அதிகத் தொகை ஒதுக்கி, ரோடுகளைச் சரியான முறையில் மராமத்து செய்வதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



10th August 1963] *[திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்]*

பஞ்சாயத்து யூனியன்களில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிப்பதாக இருந்தது, யுத்த நெருக்கடியின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. சுகாதார முறைப்படி மக்கள் வாழ்வதற்கு அது ஜனங்களுக்குத் தேவையாக இருப்பதால், அவற்றையும் தொடர்ந்து நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

***திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் உப மானியக் கோரிக்கையை வரவேற்று நான் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

இந்த உப மானியக் கோரிக்கையில் விவசாயத் துறைக்கு ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிக்கையிலே கண்டேன். என்னுடைய தொகுதியாகிய ஈரோடு தொகுதியில், கீழ்ப் பவானி வாய்க்கால் பிரதேசத்தில் சிறிய நீர்த் தேக்கத் திட்டங்கள் பல இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றைக் கூடிய விரைவில் அமல் நடத்தி, அவற்றுக்கு வேண்டிய காரியங்களைக் கவனிக்க வேண்டுமென்று விவசாய அமைச்சர் அவர்களையும், மராமத்து இலாகா அமைச்சர் அவர்களையும் நான் இந்தச் சபையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அது அன்றியும், தமிழ்நாட்டிலே குறிப்பாக இந்த ஆண்டில் பருவ மழை மிகவும் தவறிவிட்டது. ஆகையால், மேட்டூர், லோயர் பவானி முதலிய நீர்த் தேக்கங்களில் வெகுவாகத் தண்ணீர் குறைந்த நிலையிலே இருக்கிறது. அதை உத்தேசித்து, 'வகுத்தலும் வல்ல தரசு' என்ற திருக்குறளிலுள்ள நிலைமைக்கு இணங்க, நீர்த் தேக்கங்களில் தண்ணீர் இருக்கும் அளவைப் பொறுத்துப் பல பகுதிகளுக்கும் அதை நீர்ப்பாசனத்திற்காகப் பகுத்துக் கொடுத்திருக்கிற நிலையில் அரசாங்கம் முனைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிந்தேன்.

நேற்று, கோவை மாவட்டக் கலெக்டருடைய தலைமையின் கீழ் ஈரோடிலே விவசாய கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்கு நான் சென்றிருந்தேன். அப்பொழுது அங்கு சில கருத்துக்கள் கூறப்பட்டன. சாதாரணமாக இந்தச் சபையிலே கூட கூறப்பட்டது. 'சோழ நாடு அல்லது தஞ்சை மாவட்டத்திற்குத் தண்ணீரை விட்டுவிட்டு, கொங்கு நாட்டைப் புறக்கணிக்கிறார்கள்' என்று கூடக் கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் கூறினார்கள் என்று நான் நினைக்கிறேன். அப்படி ஒன்றுமில்லை.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் சண்டை இழுக்க ஆரம்பிக்கிறாரா ?

**திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** (முன் வரிசையைக் காண்பித்து) அவர் கேட்கிறார். என்னை வம்புக்கு இழுக்க வருகிறார். (சிரிப்பு).

அந்த ஒரு வகையிலே நிச்சயமாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீர்த் தேக்கத்திலே உள்ள நீரைப் பல பகுதிகளுக்கும் பகுத்துக் கொடுக்கும் முறையை வைத்துக் கொண்டுதான் இப்பொழுது செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நேராகக் கோவை மாவட்டக் கலெக்டர் வாயிலாக அறிந்துகொண்டு வந்திருக்கிறேன். சாதாரணமாக, கீழ்ப் பவானி ஆயக்கட்டுப் பகுதியில் இப்பொழுது உழவு செய்யும் சமயம் ஆகும். இந்தச் சமயத்தில் 2,300 க்யூஸெக்ஸ் அளவுக்குத் தண்ணீர் விடப்படுவது வழக்கம். ஆனால், நீர்த் தேக்கத்தில் தண்ணீர் குறைவாக இருப்பதால் 1,800 க்யூசெக்ஸ் அளவுக்குத்தான் அதிக அளவாக விட முடியும் என்று எக்ஸிக்யூடிவ் என்ஜினியர் அவர்கள் சொன்னார்கள். அங்கு வந்திருந்த விவசாயப் பெருமக்களும் அதைப் பூரணமாக ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது—'மழை தவறிவிட்டது, ஆகையால் நீர்த் தேக்கத்தில் நீர் இல்லை, பகுத்துத்தான் நமக்குக் கிடைக்கும்' என்கிற நிலையிலே பூரணமாக அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அந்த வகையிலே வெள்ளாமை செய்யக்கூடிய பகுதியில் கால் பகுதியைப் பயிரிடாமல் போட்டுவிட்டு, ஏனைய பகுதியில் விவசாயம் செய்ய விவசாயப் பெருங்குடி மக்கள் முனைந்து மகிழ்ச்சியுடன் முன்வந்தார்கள். அந்த அளவு அரசாங்கம் நல்லதொரு முயற்சியில் ஈடுபட்டு, இப்பொழுது செயலாற்றுகின்ற ஒரு நிலைமை கண்டு நான் மிகவும் உவகை உள்ளத்தோடு அதை வரவேற்கின்ற நிலையில் இருக்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது இந்தப் புத்தகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. 'விவசாயத் துறை' என்றால் பொதுவாக எல்லாவற்றையும் பேசிவிடக் கூடாது. 'ஸப்ளிமெண்டரி டிமாண்ட்ஸ்'ல் என்ன குறிப்பிட்டிருக்கிறதோ அதைப்பற்றித்தான் கனம் அங்கத்தினர் பேச வேண்டும்.

**திரு. ஏ. எஸ் தட்சிணாமூர்த்தி கவுண்டர்:** இந்த ஆண்டில் இருக்கும் நிலைமை ஒரு புறமிருந்தாலுங்கூட, சிறிய நீர்த் தேக்கங்களைக் கட்டுவதற்கு இந்த உப மானியக் கோரிக்கையில் வருகின்ற தொகையை ஒதுக்க வேண்டும் என்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஐந்தாறு நீர்த் தேக்கங்களினுடைய திட்டங்கள் உருவாகி இப்பொழுது மேலே வந்துவிட்டன என்று கூட நான் நினைக்கிறேன். அவைகளை நமது விவசாய அமைச்சர் அவர்கள் கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றித் தருவார்கள் என்று நான் நம்புகிறேன். வணக்கம்.

* **திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உப மானியக் கோரிக்கையில் ஹோம் கார்ட்ஸ் சம்பந்தமான செலவுக்காகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஹோம் கார்ட்ஸ் ட்ரெயினிங்கில் சென்னையில் நான் ஒரு சிறு குறை சொல்லக்





கேள்விப்படுகிறேன். ரைஃபிள் போதிய அளவு இல்லாத காரணத்தால் 'டர்ன்ஸ்'ல் ட்ரெயினிங் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் ஓரளவு தாமதம் ஏற்படுகிறது. போதுமான ரைஃபிள்கள் இல்லை, அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை, ட்ரெயினிங்குக்கு அவற்றை உபயோகப்படுத்த முடியவில்லை என்ற குறை இருக்குமானால் அதை நிவர்த்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மருத்துவத் துறையில் பல அபிவிருத்திகள் சம்பந்தமாகச் செலவினங்கள் கோரப்படுகின்றன. மதுரை மருத்துவ மனையில் ந்யூரோ ஸர்ஜரி டிபார்ட்மெண்ட் தனியாகத் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு தேவையை சென்ற ஒன்றரை ஆண்டுகளாக நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சீக்கிரத்திலே அதை பூரணமாக அமல் படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேற்கொண்டு இதில் காலதாமதம் இல்லாமல் சீக்கிரத்தில் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னும் இரண்டு தேவைகளைச் சொல்லியிருக்கிறேன். முதலாவது, ஸ்டெம் லாண்ட்ரி மதுரை மருத்துவ மனையில் இல்லாத காரணத்தால் மிகவும் சிரமமாக இருக்கிறது. பல தொத்து நோய் உள்ளவர்கள் உபயோகித்த பெட் ஷீட் முதலியவற்றை சாதாரண நோய் உள்ளவர்களுக்கும் போடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் 'இன்ஃபெக்ஷன்' ஏற்பட ஏதுவாகிறது. இதுபோன்ற ஒரு பெரிய மருத்துவ மனையில்—சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியை விட அதிக பெட் ஸ்ட்ரெங்ஃத் உள்ள மருத்துவ மனையில்—ஸ்டீம் லாண்ட்ரி கூடிய சீக்கிரத்தில் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மதுரை மருத்துவ மனையில் ஆபரேஷன் தியேட்டர் இன்னும் ஏர்-கண்டிஷன் செய்யப்படவில்லை. அதற்கும் கூடிய சீக்கிரத்தில் ஏற்பாடு செய்யவேண்டும். மதுரையிலுள்ளது போன்ற ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் எர் கண்டிஷன்ட் ஆபரேஷன் தியேட்டர் இல்லாமலிருப்பதனால் கோடைக் காலங்களில் ஆபரேஷன் செய்வது கஷ்டமாக இருக்கிறது. ஏர் கண்டிஷன் இல்லாத தியேட்டரில் 'ரிஸ்க்' அதிகமாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, அங்கு ஏர் கண்டிஷன்ட் ஆபரேஷன் தியேட்டர்கள் ஏற்பட வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்னொரு 'அனுமலி' இருக்கிறது. மதுரை ஆஸ்பத்திரியிலுள்ள அஸிஸ்டெண்ட் ஸர்ஜென்களுக்கு ஹௌஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. சென்னை நகரத்தில் ஸிட்டி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. சென்னை நகரத்தைவிட மதுரையில் வீடு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அப்படிக் கிடைத்தாலும் வாடகையும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, சென்னை நகரத்தில் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்களுக்கு வீட்டு வாடகை

[திரு. வை. சங்கரன்] [10th August 1963

அலவன்ஸ் கொடுப்பது போல், மதுரை போன்ற மிக முக்கியமான நகரங்களில் உள்ள அஸிஸ்டென்ட் ஸர்ஜென்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தக் குறை வேலை செய்யக்கூடியவர்களிடையே டிஸ்கரேஜ்மெண்ட் ஏற்படக்கூடிய முறையில் இருப்பதால், மதுரையை விட்டுச் செல்ல அவர்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இந்த வேறுபாட்டை நீக்கி, அவர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்னை இருக்கிறது. இந்த இடத்தில் கண்டிப்பாகச் சொல்லவேண்டியிருக்கிறது. பொற்கொல்லர்களுடைய பிரச்னையைச் சொல்ல நினைக்கிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் 3,000 பொற்கொல்லர் குடும்பங்கள் இருக்கின்றன. சர்க்கார் பல வகைகளில் அப்படிப்பட்டவர்களுக்கு உதவி கொடுத்திருக்கிறார்கள் என்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. கூட்டுறவு சங்கங்கள் அமைத்தால் பலருக்கு வேலை கிடைக்கும். ஆனால், உடனடியாக வேலை இல்லாதிருப்பவர்களுக்கு உடனே வேலை கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமலிருப்பதால், இப்பொழுது அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களின் மூலம் தொழில்கள் துவங்கத் தலைப்பட்ட பின்பு அவர்கள் வாழ்க்கைக்கு வசதி கிடைக்கும். ஆனால், அதிலும் இப்போதைக்கு உடனடியாக வேலை கிடைக்காத நிலையில் இருக்கிறார்கள்.

அதோடு லோன் சம்பந்தமாக ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் மதுரை போன்ற நகரத்தில் ஒரு லட்சம் கொடுக்கலாம். அதிகமானால் இதன் மூலம் நூறு நூற்றைம்பது பேர்கள் பயனடையக்கூடும். இதுவரை பதினைந்து பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஐம்பது பேர்களுக்குக் கொடுக்கலாம் என்று கலெக்டர் சொன்னார்கள். அகபட்சம் நூறு நூற்றைம்பது பேர்களுக்கே கொடுக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும் இது ஒரு கணிசமான நிவாரணமாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. காரணம், என் தொகுதியில் மட்டும் இந்தத் தங்கக் கட்டுப்பாட்டினால் கிட்டத்தட்ட மூவாயிரம் பேர்களுக்கு மேல் வேலை இழந்திருக்கலாம். ஆகவே கணிசமான அளவில் உதவி செய்ய வேண்டுமென்றால் நான் முன்பே பல தடவை சொல்லியிருக்கிறேன்—உதாரணமாக மதுரையை எடுத்துக்கொண்டால் டி.வி.எஸ்., ஹார்வி மில் போன்ற பெரிய தொழில் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு அரசாங்கத்தினுடைய தயவு வேண்டியிருக்கிறது. ஆகவே கலெக்டர் அவர்கள் அந்தத் தொழிலதிபர்களை அழைத்து வைத்துப் பேசி, இப்படி வேலை இழந்தவர்களில் ஒரு ஐம்பது பேர், நூறு பேர்களுக்கு அவரவர்கள் ஒவ்வொருவரும் வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டால் அவர்கள் கொடுக்க முன்வரமாட்டார்கள் என்று சொல்ல முடியாது. இவ்வாறு செய்வதுதான் வேலை



10th August 1963] [திரு. வை. சங்கரன்]

இழந்து தவிக்கிறவர்களுக்கு உடனடியாக நாம் அளிக்கிற கணிசமான நிவாரணமாக இருக்கும். இல்லாவிடில் அவர்களைப் பார்ப்பதற்கே பரிதாபகரமாக இருக்கிறது. அவர்களைப் பார்க்கும்போது அவர்களுக்கு என்ன சமாதானம் கூறுவது என்றே புலப்படவில்லை. மேலும் வேலை இழந்து நிற்கிற அவர்களுக்கு வேலை இல்லாத காரணத்தினாலேயே வேறு பல பிரச்சினைகளும் துன்புறுத்துகின்றன. குறிப்பாக குழந்தைகள் படிப்பதற்கு வசதி, புத்தகம், துணி மணி வாங்க வசதி, வீட்டை விட்டு வெளியேற்றிவிடாத பாதுகாப்பு இவை எல்லாம் உடனடியாக இந்தச் சமயத்தில் நாம் அவர்களுக்குச் செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படி அவர்களுக்கு எல்லாவித சலுகைகளையும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள உப மானியக் கோரிக்கையின் இரண்டொரு விஷயங்களைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக ஸ்தல ஸ்தாபன மானியமாக பஞ்சாயத்துக்களுக்கு ஜன விகிதாசாரத்தின் அடிப்படையில் கொடுப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி பார்த்தால் இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தில் கீழ்செஞ்சியில் இருக்கக்கூடிய மக்களுக்கு இந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகிற தொகை போதாது என்று சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால் கீழ்செஞ்சியில் இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்கள் சாலை போடுவதற்கு கற்களோ, இதர பொருள்களோ வாங்கவேண்டுமென்று சொன்னால் மலைப் பிரதேசங்களுக்கு அல்லது திருச்சி போன்ற இடங்களுக்குச் சென்று வாங்கிவரவேண்டிய நிலைமை இருக்கிறது. இதனால் அதிகமாகச் செலவாகிறது. ஆகவே நிச்சயமாக கீழ்செஞ்சியின் நிலைமையைக் கவனித்து தலைக்கு ஒரு ரூபாய் வீதமாவது கொடுக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விசேஷ சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் தஞ்சை ஜில்லாவில் அறந்தாங்கி தாலுக்காவில் கிட்டத்தட்ட 24 ஏக்கராவுக்கு மேல் பாசன வசதி பெறுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது நிறைவேற்றப்பட்டால் 638 டன் அரிசியை உற்பத்தி செய்ய முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி பல நீர்ப்பாசன வேலைகள் மேற்கொள்ளப்பட்டால் உண்மையிலேயே ஆயிரக்கணக்கான டன் அரிசியை உற்பத்தி செய்ய வாய்ப்பு ஏற்படும். அந்த ஜில்லாவில் அதற்குப் போதுமான வசதிகள் இருக்கின்றன. உதாரணமாக எடுத்துக்கொண்டால் இறவைப் பாசனத் திட்டங்களை அந்தத் தாலுக்காவில் நிறைவேற்ற முடியும். ஆதனூர், கள்ளிமேடு, மங்கலூர் போன்ற கிராமங்கள் பாசன வசதியற்ற மேட்டுப் பிரதேசமாக இருக்கின்றன. அவர்கள் எல்லாம் இறவைப் பாசனத் திட்டத்தின் அடிப்படையில் பாசன வசதி செய்து தரவேண்டுமென்று பல ஆண்டுகளாகக்

கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நினைவில் எடுத்துக் கொண்டு அந்தத் திட்டத்தை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கந்தபுரிச்சான் வடிகால் என்ற திட்டத்தை சுமார் பத்து லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றிவிட்டார்கள். ஆனால் உபயோகத்திற்கு அந்த வடிகால் இன்னும் திறந்துவிடப்படவில்லை. இதை அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் கவனித்து உடனடியாக இவ்வாண்டாவது அந்த வடிகாலைத் திறந்துவிடவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாநிலத்தில் குடிமராமத்து மூலமாக நிறைய ஏற்பாடு செய்யப்பட்டு பாசன வசதி நல்லமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த குடிமராமத்து வேலைகள் எவ்வாறு நல்லமுறையில் செய்யப்பட்டிருக்கிறதோ அதுபோல தஞ்சை ஜில்லாவில் நிறையக் குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்கள் எல்லாம் தூர்ந்து போய் இருக்கின்றன. அந்தக் குளங்களையும் மராமத்து செய்து கொடுத்தால் தண்ணீர் இறைத்து பயிர் வைக்கக் கூடிய நிலைமை ஏற்படும். அதையும் செய்து கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கால்நடை பராமரிப்பு சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் நல்ல இன மாடுகளை வளர்ப்பதற்கும், பாதுகாப்பதற்கும் வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டாலும்கூட கால்நடைகளுக்கு வரக்கூடிய வியாதிகளைத் தடுப்பதற்கு இன்றையதினம் அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்னமும் சில வியாதிகள் வந்தால் தடுக்க முடியாத நிலைமையே இருக்கிறது. கால்நடைகள் இறந்து போகின்றன.

அதுபோலவே கோழி வளர்ப்புக்காக ஆயிரம் ரூபாய் வீதம் கடன் கொடுக்கப்படுகிறது. கோழி வளர்ப்பு மிகவும் அவசியம். ஆனால் கோழிகளுக்குச் சட்டென்று வருகிற வியாதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு தீவிரமான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற
11-00 a.m. துணை மானியக் கோரிக்கைகள் மீது ஒரே ஒரு கருத்தை வற்புறுத்துவதற்காகத்தான் நான் இந்த மன்றத்தின் முன்னாலே இப்போது நிற்கிறேன். போலீஸ் மானியத்தில், ஊர்க்காவல் படைக்காகவும், போலீஸ் கான்ஸ்டபிள்கள், தலைமை கான்ஸ்டபிள்கள் ஆகியோருடைய இல்லங்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்காகவும் சில லட்ச ரூபாய்களைக் கோரியிருக்கிறார்கள். அவர்கள் கோரியிருக்கிற இந்தக் கோரிக்கைகள் அத்தனையும் ஆதரிக்கிற நேரத்தில், சென்னை நகரப் பிரதிநிதி என்ற முறையில் ஊர்க்காவல் படை ஆரம்பித்த அந்தத் தேதிக்கும் இன்றைய தினத்தில் இருக்கிற நடைமுறைகளுக்கும் இடையே உள்ள விவரங்களை இந்த



மன்றத்தில் குறிப்பிடுவதற்காகத்தான் நான் இந்த விவாதத்தில் உங்கள் அனுமதியோடு கலந்து கொள்கிறேன். ஊர்க்காவல் படை மக்களது உடைமைகளையும், உரிமைகளையும், சமாதானத்தையும், ஒழுங்கையும், அமைதியையும் காப்பாற்றுவதற்காக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் எதிர்க் கட்சியைச் சார்ந்தவாகளும் சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றி அது இப்போது வெற்றிகரமாக நடந்துவருகிறது. அதில் ஒன்றும் விவகாரம் இல்லை. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்—'அவர் அலங்காரமாகத்தான் பேசுவார், இப்படித்தான் எப்போதும் பேசுவார் என்று எங்களுக்குச் சமாதானம் சொன்னால் அது சரியல்ல என்று கனம் நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த இரண்டு மாதங்களாக சென்னை நகரிலே ஒரு பீதி, ஒரு பயம், அச்சுறுத்தல், அமைதியின்மை ஏழை எளியவர் இல்லங்களிலே நிலவிக் கொண்டு வருகிறது. எங்காயினும் ஒரு மாறுதல் ஏற்பட்டால் அது நன்றாகத் தெரியும். இந்தச் சபையிலே ஏதேனும் மாறுதல் ஏற்பட்டாலும் அதனுடைய அடையாளங்கள் நன்றாகத் தெரியும். அதேபோல் இன்றைக்கு நம்முடைய தமிழகத்தின் தலைமை போலீஸ் கமிஷனர் மாறியிருக்கிறார்கள். அவ்வாறு அதிகாரி மாறியிருக்கிறார் என்பதை அறிவிப்பதற்காகவோ, என்னவோ, நூற்றுக் கணக்கான பேர்கள், ஆயிரக் கணக்கான பேர்கள்—ஏழை மக்கள் கைது செய்யப்படுகிறார்கள். சிறைச்சாலையிலே அடைக்கப்படுகிறார்கள். காரணம் இல்லாமல், விவரம் இல்லாமல் இந்த மாதிரியான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட இதைப்பற்றி விளக்கிக் கூறினார்கள். நாட்டிலே சட்டமும் அமைதியும் பாதுகாக்கப்பட வேண்டியது ஒன்றுதான். அதற்காக, சட்டத்தின் பெயரால், அமைதியைக் காக்கவேண்டுமென்பதின் பெயரால் ஏழை மக்களை அச்சுறுத்துவதும், நூற்றுக் கணக்கான பேர்கள் கைது செய்யப்படுவதும் சரிதானா? முன்பு கைது செய்யப்பட்ட எண்ணிக்கைக்கும் இப்போது அந்த எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்பதற்கான புள்ளி விவரத்தை நாங்கள் காட்ட முடியும். இந்தக் கமிஷனர் பதவியேற்றதும் போலீஸ் ஸ்டேஷன்கள் எல்லாம் ஜரூராகி ஏழை எளியவர்களை எல்லாம் விவரம் இல்லாமலே கைது செய்து பாதுகாப்பிலே வைக்கிறார்கள். இதன் காரணமாக மக்களிடத்திலே மிகுந்த பீதி ஏற்பட்டிருக்கிறது. இரவு 12 மணிக்கு கவுரவமானவர்களாக இருந்தாலும் கூட சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் கூட சினிமா பார்த்து விட்டுச் செல்கிறவர்களைப் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அவர்கள் தங்கள் கையிலே சினிமா டிக்கட்டைப் பத்திரமாக வைத்துக் கொள்ளவேண்டிய நிலைமை இருக்கிறது. நான் இருக்கும் தொகுதியில், ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் ஊமைகளையும் ஏழைகளையும் மிகவும் இம்சிக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு இத்தனை கேஸ்கள் பிடிக்க வேண்டுமென்ற காரணத்தாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ இந்த மாதிரிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [10th August 1963

இதற்குக் கமிஷனரே காரணமா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. இது எப்படி நடைபெறுகிறது என்பதும் எங்களுக்குத் தெரியாது. எவ்வளவோ குற்றங்கள் நாட்டிலே நடைபெற வில்லையா? அங்கெல்லாம் இந்தப் போலீசாரைக் காணோமே. என்னுடைய தொகுதியிலுள்ள விவரத்தையே சொல்லுகிறேன். மயிலாப்பூர் தொகுதியிலும், என்னுடைய தொகுதியிலும், திருவெல்லிக்கேணி தொகுதியிலும் விவரம் இல்லாமல் ஏழை மக்கள் கைது செய்யப்படுகிறார்கள். இதைப் பற்றி இதற்கு முன்பு கூடப் பல முறை இந்த மன்றத்தில் பேசியிருக்கிறோம். அவ்வாறு கைது செய்யப்படுகிற மக்களை 14 நாட்கள் வரை எந்தவிதக் காரணமும் காட்டாமல் சிறையிலேயே அடைத்து வைத்திருக்கலாம். அந்தக் காரணத்தைக் கொண்டுதான் நாங்கள், கமிஷனருக்கு 'மாஜிஸ்டிரியல் பவர்' இருக்கக்கூடாது என்று வற்புறுத்தி வந்திருக்கிறோம். நான் உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். வெங்கலம் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர் மணி அவர்களுடைய ஊரைச் சேர்ந்த சின்னசாமி, முத்துகிருஷ்ணன், கலியமூர்த்து ஆகியவர்கள் கொத்தவால்சாவடியில் காய்கறி வாங்கி கிண்டியில் விற்றுக்கொண்டிருந்தார்கள்.

MR. SPEAKER: The hon. Member is giving too much of details which are far away from the subject under discussion.

SRI K. A. MATHIALAGAN: I am only drawing the attention of the Hon. Minister by stating the facts of a particular incident.

MR. SPEAKER: It is very irrelevant.

SRI K. A. MATHIALAGAN: Sir, it is relevant to the matter under discussion.

MR. SPEAKER: But the hon. Member is giving more details which are irrelevant.

SRI K. A. MATHIALAGAN: I am only illustrating the case, Sir.

MR. SPEAKER: It is not good. The hon. Member should confine his remarks to the subject under discussion and avoid irrelevant remarks.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இவ்விதம் சாதாரண கைது செய்துவிட்டு வெளியே விட மறுக்கிறார்கள். அதற்காக எம்.எல்.ஏ. ஜாமின் கொடுக்கும் நிலைமை இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 'இன்ஸ்டிடியூஷன் ஆப் லா அண்டு ஆர்டர்' என்று சொல்கிறார்கள். இவர்களுக்கே காவலர்கள் போட வேண்டுமென்ற முறையிலே காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் நல்ல ஒரு நிம்மதி இருக்க வேண்டுமென்ற முறையில் இந்த நிலைமைகள் மாறவேண்டும். அரசியல் கிளர்ச்சிகளில் கலந்து கொண்டு ஜெயிலுக்குச் சென்றவனை, 'அவன் ஏற்கனவே ஜெயிலுக்குச் சென்றவன்' என்று



10th August 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

சொல்லிக் கைது செய்வது சரியல்ல. அரசியல் காரணங்களுக்காக இந்த மாதிரி ஒரு பீதியை உண்டு பண்ணுகிறார்களோ என்ற எண்ணம் மக்கள் மத்தியில் நிலவுகிறது. இந்த நிலைமைக்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்—போலீஸ் அமைச்சர் அவர்கள் இங்கே இருந்தால் நன்றாக இருந்திருக்கும், அவர்கள் நாளைய மறுதினம் வருவார்கள் என்று குறிப்பிட்டார்கள்—'டிபாக்டோ' போலீஸ் அமைச்சரும், 'டிபாக்டோ' முதலமைச்சருமான கனம் நிதியமைச்சர் அவர்கள் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதை நான் பலமாக மறுக்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அவர்கள் இந்தக் காரியத்திலே ஈடுபட்டு, ஏழை எளியவர்கள், சாதாரணக் குடிமக்களுடைய பீதியைப் போக்கவேண்டுமென்றும், அவர்களது இல்லங்களிலே இருக்கும் அழுகுரலையும், நிம்மதியற்ற தன்மையையும் கவனித்துத் தீர்க்க வேண்டுமென்றும் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சபை முன் வைத்திருக்கும் துணை மதிப்பீட்டின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சாதாரணமாக, துணை மதிப்பீடு வரும்போதே நல்ல காரியங்களுக்காகத்தான் வரும் என்ற முறையிலே இந்தத் துணை மதிப்பீட்டையும் நம்முடைய கனம் நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே சமயத்தில் வரவு செலவுக் கணக்குகளைப் போடும்போது ஆபீசர்கள் இன்னும் சற்றுக் கவனத்தோடு போட வேண்டும். அதிகமாகத் துணை மதிப்பீடுகள் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லாமல் செய்தால்தான் அந்தத் துறைகளுக்குத் தலைமை வகிக்கும் ஆபீசர்கள் கவனத்தோடு இருப்பார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டைப் பார்த்தேன். பட்ஜெட் 'வேரியேஷன்ஸ்' மூன்று பர்சென்ட் இருக்கலாம். ஆனால் இப்போது அதிகரித்துக்கொண்டே போகிறது என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். இவ்வாறு துணை மதிப்பீடுகளைக் கொண்டு வருவதைப் பார்க்கும்போது அனுமதி வாங்கிக் கொள்வது சுலபமாக இருக்கிறது என்ற காரணத்தால் துணை மதிப்பீடுகள் கொண்டு வரப்படுகின்றனவோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தாமல் மிக அத்தியாவசியமான காரியங்களுக்கும், நல்ல காரியங்களுக்கும் மட்டுமே இந்தத் துணை மதிப்பீட்டைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் இலாகாவிலே கான்ஸ்டபிள்கள், ஹெட் கான்ஸ்டபிள்கள் ஆகியவர்களின் முன்னேற்றத்திற்காகக் கொஞ்சம் அதிகம் பணத்தை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. போலீஸ் இலாகாவிலே பணியாற்றுகிறவர்களுக்கு எந்த அளவுக்கு வசதி

[திருமதி டி. என். அனந்தநாயகி] [10th August 1963

களைச் செய்து தருகிறோமோ அந்த அளவுக்கு அந்த நிர்வாகத்திலே ஊழல் இல்லாமல், லஞ்சம் இல்லாமல் இருக்க ஏதுவாக இருக்கும்.

அதே சமயத்தில் மின்சாரத்திற்கு பணம் கொடுப்பதால் எட்டு மணி அல்லது ஒன்பது மணிக்கு மேல் லைட் போடக்கூடாது என்று கெடுபிடி இருப்பதாக என் தொகுதியில் உள்ள போலீஸ் லைனில் உள்ள சில மாணவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். பரீட்சை சமயங்களில் மாணவர்கள் படிக்க 10 மணி 11 மணி ஆகலாம், அப்போது வேண்டுமானால் சிறிது அதிகமாக பணம் அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம், அவர்கள் தரத் தயார். குறிப்பிட்ட அளவிற்கு அரசாங்கம் வாங்கிக் கொண்டு மேற்பட்ட யூனிட்டிற்கு அவர்கள் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். பரீட்சை சமயங்களில் எட்டு மணி வரைதான் லைட் போடலாம் என்று சொல்வது சரியல்ல. பின்னர் ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸில் இருப்பவர்கள் வெகு நாட்களாக வீட்டு வாடகை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆனால் பல பேர்களுக்கு வீட்டு வசதியில்லை. ஆவடியில் இருப்பவர்களுக்கு வாடகை கொடுக்கிறோம். ஆனால் வெளியிலிருந்து வருபவர்களுக்கு வாடகைப் பணம் தருவதில்லை. முதல் அமைச்சர் அவர்கள் என் தொகுதிக்கு வந்திருந்தபோது ஒரு ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸாரின் மனைவி தனது குறையைத் தெரிவித்தார். அந்த வீட்டு வாடகை எங்களுக்கும் கொடுத்தால் தேவலை என்று சொன்னார்கள். அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் "பார்க்கலாம்" என்று கூறினார்கள். இந்தத் துணை மதிப்பீட்டில் அது வரவில்லை, ஆகவே அடுத்த துணை மதிப்பீட்டிலோ அல்லது அடுத்த வரவு செலவுத் திட்டத்திலோ இதையும் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகப்படியாக பொறியியல் கல்லூரியில் அதிக சீட்கள் ஒதுக்கியிருக்கிறோம். அதற்காக பணம் கேட்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். பொறியியல் கல்லூரிகளில் மட்டும் அல்ல, இன்று சாதாரணக் கல்லூரிகளில் கூட மாணவர்கள் இடம் கிடைக்காது அவதிப்படுகிறார்கள். ஆர்ட்ஸ் காலேஜில் 30 இடங்கள் கூட்டியதற்கு ஆயிரத்திற்கு அதிகமான அப்ளிகேஷன்ஸ் வந்து தேர்ந்தெடுப்பதற்கு திணறியிருக்கிறார்கள். ஒன்றாம் வகுப்பிலிருந்து காலேஜ் வரை பிள்ளைகளை சேர்க்கும் விஷயத்தில் சென்னை மக்கள் படும் அவதிக்கு கணக்கு வழக்கு கிடையாது. ஸ்ரீவைகுண்டம், மாயவரம் காலேஜ்களில் இடம் இருக்கிறது என்றுதான் பத்திரிகையில் செய்தி வருகிறது. சென்னையில் உள்ளவர்கள் எல்லாம் வெளியிடங்களுக்கு பிள்ளைகளை அனுப்பி படிக்க வைப்பதற்கு வசதி உள்ளவர்களாக இருக்கிறார்களா? இல்லை. அதற்கு அதிகப்படியான பணம் வேண்டும். ஆக ஒன்றாம் வகுப்பிலிருந்து காலேஜ் வரை புது நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த நெருக்கடி வரவேற்கத்தக்கதே. ஏனெனில் பிள்ளைகள் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள், கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என்பதால் இது வரவேற்கத்



10th August 1963] [திருமதி டி. என். அனந்தநாயகி]

தக்கதே. ஆனால் சீட்களை 3, 5 என்று கூட்டினால் போதாது. வட சென்னையை எடுத்துக் கொண்டால் அங்கு ஒரு பெண் கல்லூரி மிக மிக அவசியம். வட சென்னையில் உள்ள மக்கள் ஏழைகள், அவர்கள் பெண்களைப் படிக்க வைப்பதே கஷ்டம், அவர்கள் பத்தாவது வரை படித்துவிட்டு காலேஜுக்கு அனுப்பவேண்டுமென்றால் நாள் ஒன்றுக்கு பஸ்ஸுக்கு ஒரு ரூபாய் செலவு செய்து அவர்களால் போவது மிக மிக கஷ்டம். ஆகவே வட சென்னையில் ஒரு பெண்கள் கல்லூரி ஏற்படுத்த வேண்டியது மிக மிக அவசியம். இந்தத் துணை மதிப்பீட்டிலேயே சேர்ந்திருக்கலாம். கனம் அமைச்சர் அவர்கள் பெண்கள் கல்விக்கு தாராளமாக உதவி செய்யும் மனம் படைத்தவர்கள். ஆகவே அடுத்த முறையாவது இதற்கு வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே ஆரம்பித்தாலும் மிக்க உதவியாக இருக்கும். தங்கக் கட்டுப்பாடு காரணமாக உதவிப் பணம் 5 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அங்கத்தினர் அவர்கள் சென்ற பொது வரவு செலவுத் திட்டத்திலும் பேசியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்போது இந்த பெண்கள் கல்லூரிபற்றி சொல்லவில்லை. அப்போது சொல்லாமல் இப்போது சொல்லி அடுத்த துணை மதிப்பீட்டில் சேர்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அதே சமயத்தில் துணை மதிப்பீட்டில் சேர்க்க வேண்டிய செலவை எதிர்பார்த்து முதல் பட்ஜெட்டிலேயே போட்டிருக்கவேண்டுமென்றும் சொல்கிறார்கள்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** நான் தாழ்மையோடு கூறிக் கொள்கிறேன், சென்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போதும் நான் இதைப்பற்றி பேசினேன். அதிகமான அங்கத்தினர்கள் பேசும்போது அதை மறந்து விடுவார்களோ என்றுதான் இப்போது இதைத் தனியாகச் சொன்னேன். அடுத்த திட்டத்திலாவது இதைச் சேர்த்துக்கொண்டால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். இந்தத் தங்கக் கட்டுப்பாட்டினால் பொற்கொல்லர்கள் மிக மிக அவதிப்படுகிறார்கள். இந்தத் தங்கக் கட்டுப்பாட்டினால் மிக மிக தாக்கப்பட்டவர்கள் பொற்கொல்லர்கள்தான். இன்று பல குடும்பங்கள் நசித்து விட்டன. இந்த ஐந்து லட்சம் ரூபாயை எவ்வளவு அவசரமாக வாங்குகிறோமோ அதே அவசரத்தில் இவர்களுக்காக தொழிற்சாலைகள் துவங்க துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் அவர்கள் வேலை கேட்டு வந்தால் அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். இச் சபையிலும் கூறப்பட்டது அதுபற்றி. ஆனால் அங்கு சென்று வேலை கேட்கும்போது எங்களுக்கு உத்தரவு இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள் சுலபமாக. இன்று அவர்களில் பலபேர்கள் வேலை இன்றி என் தொகுதியில், சுண்டல், மசால்வடை சுட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எவ்வளவு அவசரமாக இதைக் கொண்டு வருகிறோமோ அதை விட அவசரமாக அவர்களுக்கு தொழிற்சாலைகள் துவங்கப்படவேண்டும். அவர்கள் நாசூக்கான வேலை செய்பவர்கள்.

அதோடு அரசாங்கத் தொழிற்சாலைகளிலும் டெலபோன்ஸ் போன்றவற்றில் படிப்பு சிறிது குறைவாக இருந்தாலும், அவர்களை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது, அதிகாரிகளைக் கூப்பிட்டு ஒரு அவசர மகாநாட்டைக் கூட்டினாலும் சரியாகயிருக்கும். ஆக அவர்களுக்கு வேண்டிய தொழிற்சாலைகளை அமைத்து அவர்கள் மறு வாழ்வு பெறச் செய்யவேண்டும், அவ்வாறு செய்தால்தான் அவர்கள் குடும்பங்கள் சாகாமல் பிழைக்கும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குறிய அவைத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள துணைமான்யக் கோரிக்கைகள், துணை மதிப்பீடுகள் பற்றிக் கொண்டு வரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேபணைகளையொட்டிச் சில கருத்துக்களை வழங்க நான் விரும்புகிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கைகள் காரணமாக 3 கோடி 50 லட்சம் ரூபாய் கனம் நிதி அமைச்சர் அவர்களால் கேட்கப்பட்டிருக்கிறது. மதிப்பீடுகளையும், கணக்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மதிப்பீடுகளுக்கும் கணக்குகளுக்கும் இடையில் அதிக வேறுபாடு இல்லாத நிலையில் திட்டங்கள் தீட்டப்படவேண்டுமென்ற கருத்து, பொருளாதார நிபுணர்களால் வற்புறுத்தப்பட்டு வருகிற தன்மையைப் பார்க்கிறோம். வேறுபாடே இல்லாமல் சரியான வகையில் மதிப்பீடுகளை, கணக்குகளை அமைக்க முடியாது என்றாலும், சிறிய வேறுபாடுகள் இருப்பது தவிர்க்கமுடியாததுதான் என்றாலும் அதிகமான வேறுபாடுகள் இல்லாத அளவிற்கு நிதிநிலை தீட்டப்பட வேண்டிய தன்மையிருக்கிறது. இதைத்தான் பொதுக்கணக்குக் குழுவும் அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளாக அதிகப்படியான வேறுபாடு இருந்து வருகிறது. அதனை நீக்க உள்ளபடியே முயல்தல் வேண்டும். இந்தத் துணைமதிப்பீட்டுக் கோரிக்கைகளில் சொல்லப்பட்டிருக்கிற வகையில், சில புதிய பணிகளை மேற்கொள்ள இருப்பதாலும், ஏற்றுக் கொண்ட சிலபல பணிகளில் எதிர்பாராத செலவு ஏற்பட்டு விட்டதாலும் 3 கோடி 50 லட்சம் ரூபாய் இந்த மான்யக் கோரிக்கையில் கேட்கப் படவேண்டிய அவசியம் வந்திருக்கிறது என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்பாராத வகையில் சிலபல செலவினங்கள் வளர்ந்திருக்கின்றன. காவல் துறையைப் பொறுத்த வரையில் துணை மான்யக் கோரிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அகப் படையை ( Home-guard ) திட்டமிட்டிருந்ததைவிட அதிகமாகப் பெருக்குவதற்கும் அவர்களுக்குச் சீருடை வழங்கவும் தொகை வேண்டப்படுகிறதென்று கூறப்பட்டிருக்கிறது. இந்த முயற்சி வரவேற்கத்தக்க ஒன்றுதான். காவலர் இல்லங்களில் மின்சார வசதி ஏற்படுத்தித் தரவும் காவல் துறையில் இருப்பவர்களுக்கு வீட்டு வாடகைப்படி அளிக்கவும் மான்யக் கோரிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. காவலர்க்கு அத்தகைய வசதிகள் ஏற்படுத்தித் தருவதும் வரவேற்கத்தக்க ஒன்று



தான். காவல் துறையினரைப் பற்றி எனக்கு முன்னதாக பேசிய உறுப்பினர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டார்கள். அதில் அரசினர் ஓரளவு கவனம் செலுத்த வேண்டும். சென்னை நகரைப் பொறுத்த வரையில் சந்தேகத்தின்பேரில் அன்றாடம் நூற்றுக்கணக்கானவர்களை பிடித்துச் செல்கிற கொடுமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அத்தனைக்கும் காரணம் காவல் துறையிலுள்ள மேல் அதிகாரிகள்தான் என்று சொல்லாவிட்டாலும் காவலர்கள் சந்தேகத்தின் பேரில் வீட்டில் இடம் இல்லாததினால் வெளியே தாழ்வாரத்தில் படுத்திருப்பவர்களையும் சாலை ஓரத்தில் நடைபாதையில் படுத்திருப்பவர்களையும் அல்லது 11, 12 மணிக்கு தெருவில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பவர்களையும் பிடித்துச் செல்கிற நிலைமை தொடர்ந்து நடந்து வருகிறது என்பதோடு சில நாட்களாக அது அதிகமாகவும் இருந்து கொண்டிருக்கிறது. நாள்தோறும் சட்டசபை அங்கத்தினர்களாகிய நாங்கள் நூற்றுக்கணக்கானவர்கள் சார்பாக அவர்களை விடுவிக்க வேண்டிய பெரும் பொறுப்பிற்கு ஆளாக வேண்டியிருக்கிறது. குற்றம் செய்தவர்கள் பல பேர்கள் விடுபடுகிற நிலை ஏற்பட்டாலும், குற்றம் செய்யாத ஒருவன் தண்டிக்கப்படக்கூடாது என்பது நீதித் துறையில் கையாள வேண்டிய ஒரு முறையாகும். அம்முறையில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படாவிட்டாலும் குற்றம் செய்யாத நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாது. ஆனால் இன்று சந்தேகத்தின் பேரில் பிடித்து இரண்டு வார கால தண்டனை பெறும் அளவிற்கு நிரபராதிகள் ஆளாகிறார்கள். காவலர்கள் தாங்கள் சிலபல வழக்குகளைக் கண்டு பிடித்தோம் என்று பெருமை தேடிக் கொள்வதற்காக அப்படிப் பிடித்தால்தான் தங்கள் திறமையைக் காட்டிக் கொள்ளமுடியும் என்று வழக்குகளை உருவாக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படுகிறது. அதற்காக குற்றம் செய்யாவிட்டாலும் குற்றவாளிகளை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் காவல் துறையினருக்கு ஏற்படுகிறது என்பதினால் அத்தகைய முயற்சியில் நிரபராதிகளைக் குற்றவாளிகளாக மாற்றிக் கூண்டில் நிறுத்தித் தண்டனை வாங்கித் தருகிற நிலைமை இருந்து வருகிறது. குற்றம் செய்பவர்கள் சென்னை நகரத்தில் அறவே இல்லை, அவர்களைப்பற்றி சந்தேகப்படவே கூடாது என்று நான் சொல்லவில்லை. அப்பேர்ப்பட்ட சந்தேகத்திற்கு உள்ளாகிறவர்கள் குற்றங்கள் செய்பவர்கள் ஆகியவர்களைக் கண்டுபிடித்து ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டுவது காவல் துறையின் பெரும் பொறுப்புத் தான். ஆனால், குற்றம் புரிந்தவர்களாக அல்லது புரியக்கூடியவர்களாகச் சந்தேகப்பட்டுப் பிடித்துச் சென்றாலும் கூட அவர்கள் இன்னாரை எனக்குத் தெரியும் என்று சொன்னால், காவல் துறையினரிடத்தில் அவருடைய முகவரியைக் கொடுத்தால், உடனே அந்த முகவரிக்குச் சென்று 'அந்த நபர் உண்மையிலேயே சந்தேகத்திற்கு உரியவர்தானா, அல்லது உங்களுக்கு அறிமுகம் ஆனவர் தானா' என்பதை உடனே விசாரித்து சிலபல மணி நேரத்திற்குள் அவர்கள் சந்தேகப்படக்கூடியவர்கள் அல்ல என்று தெரியவந்தால் அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை காவல் துறையினர்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th August 1963

எடுக்க வேண்டும். சில நாட்கள் கழித்துத்தான் காவலர்களால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டுத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி சில குடும்பங்களுக்கு வந்து சேருகிறது. சந்தேகத்தின்பேரில் பிடித்துக்கொண்டு போனாலும் கூட, அவர்கள் முகவரி கொடுக்கும்பொழுது எனக்கு இன்னாரைத் தெரியும் என்று சொல்லும்பொழுது, அவர்களை விசாரித்துச் சந்தேகத்திற்கு உரியவரா இல்லையா என்று தீர்மானித்து, அந்த வழக்கு உண்மையான வழக்கா இல்லையா என்று ஆராய்வதற்கு இடம் ஏற்படுவதற்கு அரசினர் பெரும் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு அரசினர் முயற்சி செய்தால், சென்னை நகரத்தில் பீதி ஏற்படாமல் இருப்பதற்கும் அச்சம் தோன்றாமல் இருப்பதற்கும் வழிவகை ஏற்படும். அதை அரசினர் முக்கியமாக கவனிக்கவேண்டுமென்று வற்புறுத்திக்கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித்துறையிலே கல்வி பெற வேண்டும் என்றிருக்கும் ஆவலும், அந்த ஆவலை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பும் வசதியும் மிகக்குறைவாக இருக்கின்றன. ஆகவே தான் அந்த ஆவலை நிறைவேற்ற முடியாத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. சில இடங்களைச் சில மருத்துவக் கல்லூரிகளிலும், பொறிஇயல் கல்லூரிகளிலும் கூட்டியிருப்பது வரவேற்கத்தக்கது என்றாலும் கூட, அந்த நெருக்கடி நிலைமையை மேலும் வளர்க்காமல் விரிவாக்குவதற்கான திட்டத்தை நீட்டி, எந்த வகையிலே அதிகமான அளவுக்குச் சேர மாணவர்கள் விரும்புகிறார்களோ, அந்த அளவுக்கு வசதியைப் பெருக்கி அவர்களைச் சேர்ப்பதற்கான முயற்சியில் அரசினர் ஈடுபடவேண்டும். மருத்துவக் கல்லூரிகளில் இடவசதி ஏற்படுத்துகிறபொழுது மற்ற பல வசதிகளையும் பெருக்க வேண்டும்.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இட நெருக்கடி அதிகமாக இருப்பதாகவும், வகுப்புகளில் மாணவர்கள் இருக்கவேண்டிய அளவுக்கு அதிகமாக இருக்கிற காரணத்தினாலே அவர்கள் பெற வேண்டிய கல்வித் தரத்தை சரியான முறையில் பெற முடியவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல. மருத்துவக் கல்லூரியில் இருக்கிற மாணவர்கள் தங்களுடைய மருத்துவத் தொழிலில் பயிற்சி பெறுவதற்காக, மருத்துவமனையில் நோயாளிகளிடத்தில் சென்று தங்களை பழக்கப் படுத்திக்கொள்ளுகிற முறையில், ஒரு நோயாளியினிடத்திலே 20, 25 மாணவர்கள் சென்று ஒருவர் மாற்றி ஒருவர் 'உனக்கு என்ன' என்று கேட்டு, ஒருவர் மாற்றி ஒருவர் பரீட்சை பண்ணவேண்டிய அவசியம் ஏற்படுகிற காணத்தினால், 2, 3 மாணவர்கள் பரீட்சை செய்த பிறகு அந்த நோயாளிகள் அந்த மாணவர்கள் மீது சீறி விழுகிறார்கள் என்றும், அந்த மாணவர்கள் அவர்களை நெருங்க முடியவில்லை என்றும் ஒரு சில மாணவர்கள் அந்த நோயாளிகளிடம் சென்று அவர்களுடைய நிலைமைகளை பழகிக்கொள்வதற்கு முடிகிறதே தவிர, பலரும் சேர்ந்து பழகிக்கொள்வதற்கு வாய்ப்பு வசதி ஏற்படவில்லை என்றும் சொல்லப்படுகின்றன. ஒரு நோயாளியைச்



10th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சுற்றி 20, 25 மாணவர்கள் நின்று அவருடைய தன்மையை அறிய வேண்டியிருக்கிறது. ஏற்கனவே அவதிப்படுகின்ற நோயாளிகள், இந்த மாணவர்கள் தங்களுடைய திறமையைப் பெருக்கிக்கொள்வதற்கு முயலும்போது மேலும் அவதிக்கு ஆளாகின்றனர். மாணவர்கள் பெறவேண்டிய கல்வித் தரத்தை பெறமுடியாமல் இருக்கும் நிலைமையை அரசினர் நன்றாக ஆராய்ந்து பார்த்து நெருக்கடி நிலைமையை தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை இந்த ஆண்டிலேயே எடுத்து நல்லதோர் சூழ்நிலையை உருவாக்க அரசினர் முன்வரவேண்டும்.

டில்லியிலுள்ள மதராசி சங்கம் நடத்துகின்ற பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு 9 லட்சம் ரூபாய் ஆகிறது என்றும், இதுவரையில் 2½ லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்றும், மேற்கொண்டு 6 லட்சம் ரூபாய் கட்டிடம் கட்டுவதற்கு தேவைப்படுகிறது என்றும் அதற்காகத் தமிழக மாநில அரசை அவர்கள் நிதி உதவி கேட்டிருக்கிறார்கள் என்றும், அதற்காக ஒரு லட்சம் ரூபாய் நிதி உதவி செய்ய தமிழக அரசு உத்தேசித்திருக்கிறது என்றும் நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. டில்லி அரசு அதற்கு ரூ. 90,000 தான் நிதி வழங்கியிருக்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது. டில்லியில் இருப்பவர்கள் கல்வி வசதி பெறுவதற்கு இது உதவியாக இருப்பதினாலும், அங்கேயிருந்து வேலை பார்ப்பவர்களுக்கு இது வசதி செய்கிற காரணத்தினாலும், இந்தக் கட்டிடங்களுக்கான முழு மான்யத்தையும் இந்தியப் பேரரசே அளிப்பதற்கான வகையில் இந்த மாநில அரசு டில்லி அரசுக்கு சிபார்சு செய்து, மதராசி சங்கத்திற்கு இந்த வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு ஒரு லட்சம் ரூபாய் நிதி அளித்திருக்கிறது. ஆனால், அந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 6 லட்சம் தேவைப்படுகிறது. டில்லி அரசு ரூ. 90,000 தான் தருகிறது என்று சொல்லப்படுகிறது. இது டில்லியில் இருக்கிற காரணத்தினாலே, அங்கே வேலை செய்கின்றவர்களுக்கு வசதியாக இருக்கிற காரணத்தினாலே, இந்தியப் பேரரசால் கொடுக்க இயலும் என்ற காரணத்தினால், இந்தச் சிபார்சைச் செய்ய ஏன் இந்த மாநில அரசு முன்வரக்கூடாது?

வர்த்தகவரி அலுவலகங்களுக்கு மேஜை நாற்காலிகள் வாங்குவதற்காக ரூ. 6,68,000 1962-63-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டது என்றும் அந்த ஆண்டில் அவை வாங்கப்படாததன் காரணமாக, அந்தத் தொகை செலவு செய்யப்படாததன் காரணமாக, இந்தத் துணைமதிப்பீட்டிலே இந்தக் கோரிக்கை வைக்கப்படுகிறது என்றும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த ஆண்டிலே ஒதுக்கப்பட்ட தொகை அந்த ஆண்டிலே செலவழிக்கப்படும், மேஜை நாற்காலிகள் அந்த ஆண்டிலே வாங்கப்படும் என்ற எண்ணத்தோடுதான் ஒதுக்கப்பட்டிருக்கவேண்டும். அந்த ஆண்டில் வாங்கப்படாமல் நிறுத்தப்பட்டுத் தொகை செலவு செய்யப்படாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? இந்தத் ஆண்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th August 1963

மதிப்பீட்டில் கொண்டுவருவதற்கான அவசியம் எந்த அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது? ஒரு ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை அந்த ஆண்டில் செலவழிக்கப்படாத அளவுக்கு வந்திருக்கிற இடையூறுகள் என்ன என்பதை அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன்.

சிறிய நீர்ப்பாசன திட்டத்தைப்பற்றிப் பலரும் சொன்னார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும், அதற்கான முயற்சிகளையெல்லாம் நாட்டிலே மேற்கொள்ளவேண்டும் என்று அரசினர் வற்புறுத்தி வருகிறார்கள். ஆற்றுப் பாசனத்தின்மூலம் நாட்டில் ஏற்படுகிற உழவைவிட கிணறு, ஏரி, குளம் ஆகியவற்றின் பாசனத்தின்மூலம் ஏற்படுகின்ற உழவுதான் அதிகம் என்று புள்ளிவிவரங்கள் எடுத்துச் சொல்லுகின்றன. சிறிய நீர்ப்பாசன திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு எத்தகைய தகுதிகளும், வாய்ப்புகளும் ஆங்காங்கு இருக்கின்றன என்பதை உறுப்பினர் பலரும் தெரிவித்தார்கள். சிறிய நீர்ப்பாசன திட்டங்களை இன்னும் தீவிரமான முறையில் மேற்கொள்ளுவதற்கு, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான வழி வகைகளைச் செய்வதற்கு அரசினர் முயலுதல் வேண்டும். ஆங்காங்கிருக்கிற வாய்ப்புகள் சிறிய வாய்ப்புகள் மூலம் பெரிய பலன் எங்கெங்கே ஏற்படமுடியும் என்பதை ஆராய்ந்து பார்த்து அவற்றை உடனே மேற்கொள்ளவேண்டும். விளைச்சலை ஏற்படுத்த வாய்ப்பு இருந்தும், நீர் இல்லாமல் இருப்பதன் காரணமாக விளைவைப் பெருக்குவதற்கு கஷ்டங்கள் இருக்கின்றன. அவைகளை போக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூன்றை உருவாக்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலே ராமனாதபுரம், நெல்லை மாவட்டங்களில் இரண்டு தீப்பெட்டி தொழிற்சாலைகளும், தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கியில் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையும் உருவாக்கும் திட்டம் தீட்டப்பட்டு, இப்பொழுது புதிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளை உருவாக்கி அதன் மூலம் தொழிலாளிகளுக்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தி தீப்பெட்டி உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சி செய்திருப்பது வரவேற்கத்தக்கதுதான். இருந்தாலும், இப்பொழுது இருக்கிற பல தீப்பெட்டித் தொழிற்சாலைகள் தங்களுடைய நிலையைக் காப்பாற்றிக்கொள்ள முடியாத அளவுக்கு பெரிய ஆபத்துக்கு உள்ளாகிவருகின்றன என்ற செய்திகளும் வந்து கொண்டிருக்கின்றன. கோவில்பட்டி தாலூகாவில் சில தொழிற்சாலைகள் நடத்தமுடியாத நிலைமை ஏற்பட்டு, மூடவேண்டிய அவசியம் ஏற்பட்டு அதன் மூலம் பல தொழிலாளர்கள் வேலையில்லா திண்டாட்டத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டத்திற்கு வந்து தொழிலாளர்கள் அந்தப் பகுதியில் அவதிப்படுகிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அம்மாதிரி குடிசைத் தொழில்களின் மூலம் செய்யப்படுகின்ற தீப்பெட்டி உற்பத்தி பாதிக்கப்படுகின்ற அளவுக்கு, இயந்திரத்தின் மூலம் தீப்பெட்டி செய்யப்படுகின்ற விம்கோ தொழிற்சாலையின் போட்டியும், அவர்களுக்கு



10th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இருக்கிற சிலபல சலுகைகளும் காரணமாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அத்தகைய சலுகைகளை பெறமுடியாத அளவுக்கு குடிசைத் தொழில்கள் வைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், விம்கோ தொழிற்சாலையுடன் போட்டிபோட முடியாத சூழ்நிலை இந்தத் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. குடிசைத் தொழில்களை நம்பி லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்வதன் காரணமாக, இயந்திரத் தொழிற்சாலைகளைவிட அதிகமான சலுகைகள் அளிப்பதன் மூலம் இந்தத் தீப்பெட்டி தொழிற்சாலைகள் நிலைபெற்று இருக்கவும், இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாகாத அளவிற்கு அந்த வேலையைத் தொடர்ந்து பெறுவதற்கு வசதி ஏற்படவும், இந்தப் பிரச்னையை அணுகிக் குடிசைத் தொழில்கள் அடிப்படையில் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு அதிக வசதிகள் ஏற்படுத்தித் தருவதற்கு முயலுதல்வேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மீன்துறையைப் பொறுத்தவரையில், சென்னை கடலோரத்தில் மீன் பிடிப்பதன் மூலம் தங்களுடைய வாழ்க்கையை நடத்தும் மீனவர்கள் சில சமயங்களில் பல தொல்லைகளுக்கு உள்ளாகிக் கொண்டுவருகிறார்கள். அவர்களுடைய படகை, வலையை அலைகள் அடித்துக்கொண்டுவந்து துறைமுகப்பகுதியில் சேர்த்துவிடுகின்றன. ஏழை எளிய மீனவர்கள் வைத்திருக்கிற வலைகளோ, அல்லது அவர்கள் வைத்திருக்கிற சிறுசிறு படகுகளோ கட்டுமரங்களோ துறைமுகப்பகுதிக்கு அடித்துக்கொண்டு வரப்பட்டால் காவல்துறையினர் அவைகளைக் கைப்பற்றிக் கொண்டுவிடுகின்றனர். அதன் காரணமாக அவர்கள் அவதிக்கு உள்ளாகிறார்கள். அவர்களே விரும்பி எடுத்துச் செல்லுவதில்லை; ஆனால், அலைகள் அல்லது புயல் காற்று சில சமயங்களில் அந்தப் படகுகளையும் வலைகளையும் துறைமுகப்பகுதிக்குக் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறது. அந்த நிலைமையை அறிந்து, அப்படிப்பட்ட பொருள்களை மீனவர்களாகவே கொண்டுவந்து சேர்க்கவில்லை, இயற்கையின் கொடுமையின் காரணமாக அவைகள் துறைமுகப் பகுதிக்கு வந்து சேருகின்றன என்பதை உணர்ந்து அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் மீது வழக்கு தொடுக்காமல் அந்த வலைகள், படகுகள் முதலியவற்றை கைப்பற்றாமல் அவர்களுக்கே வழங்குகின்ற முயற்சியில் ஈடுபடவேண்டும். மேற்கொண்டு கட்டிடங்கள் கட்டிவிடப்படுகிற 11-30 a.m.
துறைமுகத்தின் பகுதிகளில் மீன்கள் அதிகமான அளவுக்கு இருக்கின்ற காரணத்தால் அங்கே வலை வீசினால் மீன்களை அதிகமாக அரிக்கமுடியும் என்று சென்னை மீனவர்கள் கருதுகிறார்கள். அப்படி அங்கு மீன் பிடிக்கப்போகிறவர்களைத் துறைமுகத்திற்கு அருகே வந்து விட்டதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தி கைது செய்து விடுகிறார்கள், வழக்குத் தொடர்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. துறைமுகப்பகுதிக்குள் வந்து, அங்கு இருக்கிற பொருள்களைக் கொண்டு போகாமலும், அங்கே இருக்கிற பொருள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th August 1963

களைத் திருடாமலும் பாதுகாத்துக் கொள்ளுகிற அளவுக்கு காப்பாற்ற வேண்டுமென்றால் காவல்துறையினரை காவல் காக்கச் செய்து பாதுகாத்துக் கொள்ளலாம். ஆகவே துறைமுகத்திற்கு அருகே மீன் பிடிக்கின்ற உரிமையைப் பறிக்காமல் அதற்கான வசதிகள் செய்து தந்து, ஏழை எளியவர்களான மீன்தொழிலையே மட்டும் நம்பி வாழ்கின்றவர்களுக்கு அந்த வசதியைச் செய்வதற்கு அரசினர் முற்பட வேண்டும்.

பொற்கொல்லர்களின் நிலைமையைப் பற்றி உறுப்பினர்கள் பலர் எடுத்துத் தெரிவித்தார்கள். அவர்களுடைய கொடுமைகள் களையப் படுவதற்கு விரைவான நடவடிக்கைகளை அரசினர் மேற்கொள்ள வேண்டுமென்று ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் ஒரு முகமான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் தங்கக் கட்டுப்பாடு சட்டம் வந்ததன் காரணமாக ஏற்பட்டிருக்கிற கொடுமைகளையும் விபரீத விளைவுகளையும் நாம் நன்றாக அறிவோம். தங்கக் கட்டுப்பாடு சட்டம் எண்ணிய நோக்கத்தை நிறைவேற்றி இருக்கிறதா, இல்லையா என்பது ஐயப்பாட்டிற்கு உரிய ஒன்றாக இருக்கிறது. அந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறவில்லை என்று பொருளாதார நிபுணர்களும் மற்றவர்களும் சொல்லுகின்றனர். ஆனால் நோக்கம் நிறைவேறவில்லை என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அதனால் பல கொடுமைகளும் கஷ்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன. பொற்கொல்லர்கள் இந்த அவதிக்கு ஆளானதற்குக் காரணம் அரசாங்கத்தின் சட்டம்தான். அப்படி அவதிக்கு ஆளானவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டிய முழுப் பொறுப்பையும் இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிற அரசினர் ஏற்றுக் கொள்ளவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற அளவுக்கு அரசினர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்றால் இல்லை. பல லட்சக் கணக்கான பொற்கொல்லர்களின் குடும்பங்கள் அவதிக்கு உள்ளாகி இருக்கின்றன. எடுக்கப்பட்ட முயற்சி என்னவென்றால் ரூ. 5 லட்சம் கடன் உதவி தந்து ஆள் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரம் வீதம் 500 பேருக்குத் தருகின்ற அளவுக்குத் தான் இருக்கிறது. அவதிக்குள்ளானவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். சிலர் தங்கள் தொழில் திறனைப் பயன் படுத்தி, 14 காரட் தங்க நகைகளை செய்ய விரும்புகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் 14 காரட் தங்கத்தை பெறுவதற்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படவில்லை. பல கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். வேலையிழந்து தவிக்கின்ற நிலைமையில் இருக்கின்றவர்கள் ரூ. 100 லைசென்சு கட்டணம் தர வேண்டும் என்ற முறை ரத்து செய்யப் பட வேண்டும் என்ற கருத்தை பாதிக்கப்பட்டவர்களும் எடுத்துக் கூறி இருக்கிறார்கள், உறுப்பினர்களும் இங்கு கூறி இருக்கிறார்கள். இலவசமாக அவர்களுக்கு லைசென்சு வழங்குகிற திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழக சர்க்கார் இந்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ய வேண்டும். அதன் மூலமாக 14 காரட் தங்கத்திலே நகைகள்



10th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

செய்யலாமென்று விரும்புகிறவர்களுக்கு அந்த வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு அரசினர் முன்வரவேண்டும். அவதிப் படுகிறவர்களின் எண்ணிக்கையோ ஏராளம். ஆனால் வசதி ஏற்படுத்தித் தருவதற்கான திட்டம் போட்டிருப்பதோ மிக மிகக் குறைவு. இந்த ஆயிரம் ரூபாயிலும்கூட ரூபாய் 500 தான் முதலிலே கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக் கொண்டு தொழிலில் முயற்சி செய்து இடம் தேடி பல்வேறு வசதிகளையும் செய்து கொள்ள வேண்டும். அந்த ரூ 500-ஐ வைத்துக் கொண்டு தொழில் செய்து அதில் ஏற்படுகின்ற வளர்ச்சியைப் பார்த்து, மேற்கொண்டு ரூ. 500 பெறுவது என்ற முறையில் பல அவதிகள் இருக்கின்றன என்றும் பொற்கொல்லர்கள் சொல்லுகிறார்கள். தொழில் தொடங்குவதற்கு சுமார் 25 தொழில்கள் காட்டப்பட்டிருக்கின்றன. சில பல தொழில்களை எடுத்து நடத்தினாலும்கூட, கொடுக்கப்படுகிற ரூ. 500 ஆரம்பச் செலவுக்குக்கூட கட்டுப்படியாகாத அளவுக்கு இருக்கிறது. ஆகவே ரூ. 1000 முதலிலே கொடுத்து, அதைக் கண்காணிக்கிற அளவுக்கு வகை செய்ய முடியுமா என்பதை அரசினர் பார்க்க வேண்டும். தொழில் இழந்த பொற்கொல்லர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தர ஊராட்சி ஒன்றிப்புகளும், நகராட்சி மன்றங்களும் அரசாங்கத்தின் தரப்பிலே தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தனிப்பட்ட பொற்கொல்லர்களுக்கு கடன் உதவி அளித்து. அவர்களே தொழிலைத் தேடி அவர்களே பல வசதிகளை தேடிக் கொள்வதைவிட, ஊராட்சி மன்ற ஒன்றிப்புகள், நகராட்சி மன்றங்கள் ஆகிய இவற்றிடம் அந்தப் பொறுப்பை ஒப்புவித்து அதிகமான கடன் வசதி தந்து, அவர்களைக் கொண்டே தொழிற்சாலைகளை ஆங்காங்கே நிறுவச் செய்து அவதிக்குள்ளான பொற்கொல்லர்களுக்கு புனர் வாழ்வு ஏற்படுத்தித் தர அரசினர் முன் வந்தால் ஓரளவுக்கு அவர்களுடைய கஷ்டங்கள் குறைய வழி ஏற்படும். இந்த முறையில் மேற்கொள்வதற்கு அரசினர் திட்டங்கள் போடவேண்டும்.

ஊராட்சி மன்ற ஒன்றிப்புகளுக்கு சாலைகள் போடுவதற்கு இப்பொழுது மான்யம் ஒதுக்கி தரப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் ஒதுக்கித் தரப்படுகிறது என்றால் ஒவ்வொரு ஊராட்சி மன்ற ஒன்றிப்பிலும் இருக்கின்ற மக்கள் எண்ணிக்கைக்குத் தகுந்தாற் போல் ஆள் ஒன்றுக்கு 40 காசு ஒதுக்கித் தரப்படுகிறது. எல்லா ஊராட்சி மன்றங்களுக்கும் ஆங்காங்கே உள்ள மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் நாற்பது காசு என்ற வீதத்தில் தரப்படுகிறது. எல்லா ஊராட்சி மன்றங்களிலும் நிலைமைகள் ஒரே மாதிரியாக அமையவில்லை. ஆகவே மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் தராமல் அங்கங்கே இருக்கிற சாலையின் நீளத்தின் தன்மையையும் சாலையின் தன்மையையும் அதனுடைய தேவையையும் கணக்கிட்டு அதற்கு தகுந்தவாறு இந்த மான்யக் கோரிக்கையை திருத்துவதற்கான முயற்சியில் அரசினர் ஈடுபடவேண்டும். மதிப்பீட்டுக் குழுவினர்கூட இத்தகைய சிபாரிசை அரசினருக்குச் செய்திருக்கிறார்கள். இச் சிபாரிசை நடை முறையில் மேற்கொள்

வதற்கு ஏன் அரசினர் முன்வரக்கூடாது? இந்தத் திட்டங்களை மேற்கொள்ளுவதன் மூலமாக இந்தத் துணை மதிப்பீட்டு கோரிக்கையிலே கோரப்படுகின்ற துணை மான்யத்தை சீர்பட செலவழிப்பதற்கான முயற்சி செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்ளுகிறேன். குறிப்பாகப் பொற்கொல்லர்களின் அவதியைத் தீர்ப்பதற்கு மேலும் தீவிரமான திட்டங்களை எடுத்து விரைவாக அவர்களுக்கு புனர்வாழ்வு தருவதற்கான முழு முயற்சிகளிலே அரசினர் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, துணை மான்யக் கோரிக்கையின்மீது இந்த விவாதம் நடந்துக் கொண்டு இருக்கிறது. ரூபாய் 3½ கோடி அளவுக்கு இங்கே அனுமதி கோரப்படுகிறது. கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள், வரவு செலவுத் திட்டத்திலே எவ்வளவு செலவிடுவதற்கு இம்மன்றத்தின் அனுமதியை சர்க்கார் பெற்றிருக்கிறதோ அதற்கு மேலே ரூ. 3½ கோடி என்பதல்ல. இனங்கள் புதிய இனங்கள். மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்திலிருந்து இந்தச் செலவுகள் ஆக வேண்டும், அதற்காக அனுமதி பெறப்படுகிறது என்ற வகையிலே சில இனங்கள் இருக்கின்றன. ஆகவே வரவு செலவுத் திட்டத்திற்கு மேல் ரூ. 3½ கோடி இல்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள்.

துணை மான்யக் கோரிக்கையின்மீது விவாதம் என்றாலும்கூட, பொதுவான சில கோரிக்கைகளையும், கருத்துக்களையும், சில குறைகளையும், கனம் அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். அவற்றை எல்லாம் நான் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு இங்கே பதில் சொல்லுவது இந்த விவாதத்திற்குப் பொருத்தமில்லை என்றாலும், நான் அவற்றை கவனிக்கவில்லை என்று யாரும் கருதக் கூடாது. இங்கே தெரிவிக்கப்பட்ட யோசனைகள், கோரிக்கைகள், கருத்துக்கள் இவற்றின்மீது மேலும் கவனம் செலுத்தப்பட்டு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்னென்ன கோரிக்கைகளைச் சேர்க்க வேண்டும், மீண்டும் மற்றொரு துணை மதிப்பீட்டிலாவது அவற்றிற்கு இடம் தர வேண்டுமென்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். கிருஷ்ணகிரித் தொகுதியைச் சேர்ந்த அங்கத்தினர் வட சேலம் பகுதியிலே ஒரு கல்லூரியை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அரசாங்கமே அங்கே ஒரு கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று எதிர் பார்த்தது. வரவு செலவுத் திட்டத்திலேயும் இது இடம் பெறவில்லை, உப மான்யக் கோரிக்கையிலும் வரவில்லை அடுத்த உப மான்யக் கோரிக்கையிலாவது இது இடம் பெற வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதேபோன்று, வரவு செலவுத் திட்டத்திலே சேர்க்காமல் இந்த உபமான்யக் கோரிக்கையிலே இந்த இனங்களைச் சேர்ப்பது பற்றி குறை கூறிய திருமதி அனந்தநாயகி அவர்கள், வட சென்னையில் ஒரு பெண் கல்லூரி வைக்க வேண்டும், அடுத்த உப மான்யக் கோரிக்கையி





லாவது அதைக் கொண்டு வர வேண்டும் என்று தெரிவித்தார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன். கல்வி ஸ்தாபனங்களைப் பொறுத்த வரையில் இந்த மன்றம் அவற்றிற்கு துணைமதிப்பீட்டில் ஒப்புக்கொண்டு அனுமதிப்பாக இருந்தாலும், எந்த மாதத்திலும் அவற்றை அமைக்க முடியாது. கல்லூரி ஆண்டிலே, முதலிலே அமைக்கிறோம். ஜூலை மாதத்தில் அதைச் செய்கிறோம். ஜூலை மாதத்தில் செய்யவில்லை என்றால், அடுத்த பள்ளி ஆண்டு மறு ஜூலை மாதத்தில்தான். அதுவரை காத்திருக்க வேண்டும். அதற்குள் சாதாரண வரவு செலவுத் திட்டம் வந்து விடும். துணை மதிப்பீட்டில் போடவேண்டிய அவசியம் இருக்காது.

இன்னொன்று சொன்னார்கள். இவ்வளவு இனங்களும் ஏன் என்று சில அங்கத்தினர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். வேறு மன்றத்திலேகூட ஒரு அங்கத்தினர் அதைக் குறிப்பிட்டார்கள். வேறொரு இலாகா ஏன் இதில் இடம் பெறவில்லை என்று கேட்டார்கள். எல்லா இலாகாக்களும் இடம் பெறவேண்டும் என்பதில்லை. அதை ஒரு குறையாகக் குறிப்பிட்டார்கள். இன்னும் பலர் இதை ஏன் சேர்க்கவில்லை, அதை ஏன் சேர்க்கவில்லை என்று கேட்டார்கள். எல்லா இலாக்காக்களுக்கும் சரி சமமாக பங்கீடு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகியும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒன்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி தலைவராகவும் இருக்கிறார்கள். அவர்கள், இதையெல்லாம் முன்பே எதிர்பார்த்து முதல் பட்ஜட்டிலேயே ஏன் சேர்ந்திருக்கக்கூடாது, இத்தனை இனங்கள் துணை மதிப்பீட்டில் வரவேண்டிய காரணம் என்ன என்று கேட்டார்கள். அது சரியான வாதம் தான், அதற்கு விடை அளிக்க வேண்டியது அவசியம்தான். தவிர்க்கக் கூடாத முறையில்தான் இந்த இனங்கள் வந்திருக்கின்றன. ஸ்ரீமதி அனந்தநாயகி சென்ற அந்த அளவுக்கு கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் போகவில்லை. ஸ்ரீமதி அனந்தநாயகி சொன்னார்கள், வேண்டுமென்றே சில இனங்களை முதல் பட்ஜட்டில் போடாமல், துணை மதிப்பீட்டில் போட்டு விட்டால் சுலபமாக அங்கீகாரம் பெற்றுவிடலாம், என்று. அனுமதி பெறத்தகாத சில இனங்களை மூடி மறைத்து விட்டு, பின்னால் துணை மானியத்தில் போட்டு விடலாம் என்றுகூட ஒருக்கால் இருக்கலாம் என்று ஊகித்தார்கள். அது முழு பட்ஜெட்டாக இருந்தாலும், துணைமதிப்பீடாக இருந்தாலும், இந்த மன்றம் கண்ணும் கருத்துமாகத்தான் பார்க்கிறது. நம் மன்றத்தைப் பற்றி அவ்வளவு குறைவாக நினைக்கக் கூடாது ஸ்ரீமதி அனந்தநாயகி—அரசாங்கத்தைப் பற்றி நினைத்தால் சரி—நம் மன்றம் இன்றைக்கு இந்த துணை மதிப்பீட்டிற்கு இரண்டு மணி நேரம் ஒதுக்கி, பின்னால் மின்சார வரவு செலவு திட்டத்தை எடுத்துக் கொள்ள இருக்கிறோம். நாளைக்கு ஓட்டுப் போடும் போதுகூட— இதற்காக தனியாக 12-ம் தேதி ஓட்டுப் போடலாம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது? இதைப் பற்றிச் சொல்லலாம். முதல் பட்ஜெட்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1963

ஆனாலும், துணைமதிப்பீடு ஆனாலும், மன்றம் நன்றாகத்தான் கவனிக்கிறது. எப்படியாவது ஏமாற்றிவிடலாம் என்று அரசாங்கம் நினைக்கவில்லை, நினைத்தால்கூட மன்றம் அதற்கு இடம் கொடுக்காது என்று ஸ்ரீமதி அனந்தநாயகிக்கு உறுதியாகக் கூறுகிறேன்.

ஏன் இந்த நிலைமை, நிமித்தம் ஏற்பட்டது, முதல் பட்ஜட்டில் போடாமல், துணை மதிப்பீடாக வர? நான் நான் நிதி இலாகாவோடு கலந்து யோசித்து, இப்பொழுதே—இது ஆகஸ்ட் மாதம்—இந்த ஆகஸ்டு மாதத்திலேயே துணை மதிப்பீட்டை சபைமுன் வைக்கலாம் என்று தீர்மானித்தேன். முன்பெல்லாம் இரண்டு மூன்று மாதங்கள் கழித்து, எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றாகக் கொண்டுவருவது வழக்கம். பின்னால் வருவதை இப்பொழுதே கொண்டுபோகலாம் என்று தீர்மானித்தேன். இதற்கும் மேலாகப் பின்னால் வருவதை அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று, இப்போதைக்கு இந்த அளவில் அனுமதி கோரி இருக்கிறது. தவிர்க்க முடியாத வகையில்தான் துணை மதிப்பீடுகள் வருகின்றன. அப்படித் தவிர்க்கக் கூடாத நிலைமைக்குக் காரணம் வளர்ச்சிதான். பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. மற்றொரு காரணம், நெருக்கடி நிலை. அப்படிப் புதிய நிலை ஏற்படும்போது, அதைச் சமாளிக்க பல தவிர்க்க முடியாத செலவினங்க்ள் ஏற்படுகின்றன. திட்டங்களில், மற்றவைகளில் சில மாறுதல்கள் செய்கிறோம். அதனால் செலவு ஏற்படுகிறது. இம்மாதிரிப் பல காரணங்களால் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிற்கும் மேலாக துணை மதிப்பீடு வருகிறது. ஆனால், ஒன்று, கனம் அங்கத்தினர்களுக்குக் கூற விரும்புகிறேன். மிக நல்ல திட்டங்கள், முக்கியமான செலவுகள், அவசரமாகக் கருதப்படும் செலவுகள் ஏற்படுகின்றன. இன்னொரு வரவு செலவு திட்டம் சபை முன் வரும்வரை காத்திருக்க முடியாத செலவு இனங்கள் சில வருகின்றன. மதிப்பிற்குரிய என் சக அமைச்சர்கள் சில இனங்களை இப்போதே சபைமுன் வைத்து அங்கிகாரம் பெறவேண்டும் என்று கேட்கிறார்கள். சதாரணமாக, என் சகாக்கள் பொறுத்த மட்டில் ஒரு காரியத்திலும் நான் குறுக்கே நிற்கிறவன் அல்ல. சாதாரணமாக பைனான்ஸ் எதற்கும் முட்டுக்கட்டை போடும் என்பது சம்பிரதாயம், அதை நான் பின்பற்றுவது இல்லை. அவர்களுக்கே தெரியும் எது அவசரம், எது தள்ளிப்போடலாம் என்பதெல்லாம். ஆகவே கூடிய வரையில் சகாக்கள் கூறுவதையெல்லாம் நான் குறுக்கே நிற்காமல் அப்படி அப்படியே ஏற்றுக் கொள்ளத்தான் செய்கிறேன். இப்பொழுதுகூட ஒரு இனத்தை இப்பொழுது வேண்டாம், அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் பார்ட் ஸ்கீமில் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம் என்று வற்புறுத்தினால் அதற்கு மேல் அவர்கள் வலியுறுத்துவது இல்லை. இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், நாங்களும் வரவு செலவுத் திட்டத்திற்கு மேல் அதிகச் செலவுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்றுதான் செய்கிறோம். இன்றைக்கு 3½ கோடி ரூபாய் அளவில் துணை மதிப்பீடு வந்திருப்பதைப் பார்த்தால், இந்த இனங்கள் தவிர்க்கக் கூடாத வகையில் வந்திருக்கிறதே தவிர வேறு



10th August 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

வகையில் இல்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். "Variance" அதிகம் என்று சொன்னார்கள். அவர்கள் ஒரு கோணத்தில் சொல்லலாம். நாங்களும் அதை ஏற்றுக் கொள்ளுகிறோம். சகாக்களைக் கொஞ்சம் பொறுத்து இருங்கள் என்று கூடச் சொல்லுகிறேன். ஆனால், "Variance" எந்த அளவுக்கு அவசியம் என்பதைப் பொறுத்துத்தான் அளவுகோல் இருக்க முடியும். பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி பொதுவாகச் சொன்னார்கள். அதை நானும் ஏற்றுக் கொள்ளுகிறேன். எவ்வளவு தூரம் "Variance" இருக்க வேண்டும் என்பது எவ்வளவு தூரம் அவசியம் இருக்கிறது என்பதைப் பொறுத்தது. கோரி இருக்கிற தொகைகள், திட்டங்கள், அவசியமானது, தவிர்க்க முடியாதது, எதிர்பாராதது என்ற வகையில் இப்பொழுது இங்கே அனுமதி கோரி இருக்கின்றோம். ஒரு உதாரணம்; அதை கனம் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். அது எதிர்பாராதது, எதிர் பார்க்க முடியவில்லை. டெல்லியிலே நடைபெறும் ஒரு பள்ளிக்கு மானியமாக கொடுத்தது ஒரு லட்சம் ரூபாய். அது டெல்லியில் இருக்கும் பள்ளி என்று மாத்திரம் நினைக்கக் கூடாது. டெல்லியில் இருக்கும் நம் தமிழ் நாட்டு குழந்தைகளுக்காகவே நடத்தப்படும் பள்ளி; தமிழ் மக்களாலேயே நடத்தப்படும் பள்ளி. அங்கே 5,000 பிள்ளைகள் படிக்கிறார்கள், தமிழ் நாட்டுப் பிள்ளைகள். அவர்கள் அப்படி ஐந்து பள்ளிகள் நடத்துகிறார்கள். மெட்ராஸ் அஸோஸியேஷன் என்று வைத்து நடத்துகிறார்கள். அதை நானே பார்த்து இருக்கிறேன். பிள்ளைகள் அதிகமாக இருக்கிறார்கள். இடம் போதவில்லை. எப்படியாவது பள்ளி நடக்கவேண்டுமென்று, டென்ட் போட்டு நடத்துகிறார்கள். கட்டடங்கள் கட்டி வருகிறார்கள். டெல்லி, மத்திய சர்க்கார் அல்ல, டெல்லி அட்மினிஸ்ட்ரேஷன் எல்லோருக்கும் போல் உதவி கொடுத்திருக்கிறார்கள். ரூபாய் 90,000 கொடுத்திருப்பதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். அவர்கள் கட்டடத்திற்காக கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், நம் தமிழ் நாட்டு பள்ளிகளுக்கு கட்டடங்களுக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறோமோ அதைவிட அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் ஒரு விதி இருக்கிறது, வரம்பு இருக்கிறது. மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோல் நமக்கும் கொடுத்திருக்கிறார்கள். பள்ளிக்கூடக் கட்டடத்திற்காக நல்ல மனை கிடைத்திருக்கிறது. பல சலுகைகளைப் பெற்றுக் கட்டடங்களை கட்டி வருகிறார்கள். அந்தப் பள்ளி சிறந்த பள்ளியாக இருக்கிறது. பரீட்சைத் தேர்வைப் பார்த்தால் முதன்மையாக இருக்கிறது. பிள்ளைகளெல்லாம் தமிழ் நாட்டுப் பிள்ளைகள். படிப்பும் நன்றாக இருக்கிறது. அவர்கள் குறையெல்லாம் ஆசிரியர்கள் வேண்டும் என்பதுநான். போதிய ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. தமிழ் நாட்டிலிருந்தே வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இங்கிருந்து ஆசிரியர்கள் அங்கே போவது இல்லை. இங்கேயே அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படியே இங்கிருந்து ஆசிரியர்கள் அங்கு போனாலும், அவர்களுக்கும் கட்டடங்கள் கட்ட வேண்டி இருக்கிறது. ஆசிரியர்களுக்கு டில்லியில் வசதி இல்லாததால், தமிழ்

நாட்டிலிருந்தும் வராததால் சில ஸ்தானங்கள் காலியாக இருக்கின்றன என்று கூறுகிறார்கள். ஒன்று கவனிக்கவேண்டும் அங்கே படிக்கக்கூடிய இந்த 5,000 பிள்ளைகளுடைய பெற்றோர்கள் டில்லியிலே உத்தியோகம் பார்க்கிறார்கள். அப்படி தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனையோ பேர்கள் இந்தியா பூராவிலும் உத்தியோகத்தில் இருக்கிறார்கள். வெளி நாடுகளிலும்கூட வேலை பார்க்கிறார்கள். அவர்களெல்லாம் இங்கேயே இருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களைத் தேடிக்கொடுக்கும் பொறுப்பும் நமக்கு வந்து விடும். தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக்களைத் தேடிக் கொடுப்பதில் அரசாங்கத்திற்குத்தான் முழுப் பொறுப்பு என்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்களே அது போல. அதை மறுக்கவில்லை. வேலை வாய்ப்புக்களைத் தேடிக் கொடுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கவேண்டியதுதான். அந்தப் பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. அது வேறு விஷயம். அந்தக் குழந்தைகளை எடுத்துக் கொண்டால், அந்தக் குழந்தைகள் தமிழ் நாட்டிலேயே இருந்தால், அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் தமிழ் நாட்டிலேயே இருக்கிறார்கள் என்று எடுத்துக் கொண்டால், அவர்களெல்லாம் இங்கேயே படிக்கவேண்டும் என்றால், அவர்களுக்குக் கல்வியூட்டும் பொறுப்பு நம்முடையது. டில்லியிலே ஏதோ உதவி பெற்று பள்ளிகளை நடத்துகிறார்கள் என்றால் நம் பாரம் பெரிதும் நீங்கியிருக்கிறது. அதற்கு ஓரளவு உதவி அளியுங்கள் என்று கேட்கிறார்கள். அந்த அளவுக்குத்தான் நாம் அப்போதைக்கப்போது அளிக்கிறோம். இந்த ஆண்டிலே இவ்வளவுதான் முடியும், பின்னால் அடுத்த ஆண்டில் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். அங்கே நல்ல கட்டடங்களைக் கட்டுகிறார்கள். கட்டடம் பூராவிலும் பிள்ளைகள் வந்திருக்கிறார்கள். நான் 15 நாட்களுக்கு முன் அங்கே சென்றிருந்தபோது பார்த்தேன், கட்டடம் பாதி கட்டிக்கொண்டிருக்கும்போதே பிள்ளைகள் உட்கார்ந்துகொண்டு வகுப்பு நடக்கிறது. அவ்வளவு நெருக்கடி இருக்கிறது. இவ்வளவு தூரம் 9 லட்சம் ரூபாய் செலவழித்து நம் தமிழ் நாட்டுப் பிள்ளைகளுக்காக வசதி செய்யப்படுகிறது. நான் அமெரிக்கா போனபோது அங்கே பார்த்தேன், நம் பிள்ளைகளுக்குச் சம்பளம் இல்லாமல் படிப்புச் சொல்லிக் கொடுக்கிறார்கள், இலவசமாகப் பாடப் புத்தகங்கள் எல்லாம் கொடுக்கிறார்கள்; அமெரிக்காவில் இருக்கிறவர்கள் தங்கள் நாட்டினர், வேறு நாட்டினர் என்று கூடப் பார்ப்பதில்லை; மற்றவர்களுக்கு என்னென்ன சலுகைகள் இருக்கின்றனவோ, என்னென்ன சலுகைகள் அமெரிக்க குழந்தைகளுக்கு இருக்கின்றனவோ, அவைகளெல்லாம் நம் குழந்தைகளுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைப் பார்த்தேன்—இங்கே இருப்பது தமிழ் நாட்டுக் குழந்தைகள் தான்; இங்கே நாம் வேறு குழந்தைகளுக்கும் சலுகை அளித்துக் கொண்டு வருகிறோம்; அங்கே தமிழ் நாட்டுக் குழந்தைகள் படிக்கிறார்கள்; அந்தப் பள்ளிகளை டில்லிப் பிரதேசத்தில் இருக்கிற தமிழ் நாட்டினர்





நடத்துகிறார்கள். தமிழ் நாட்டிலே நாம் பள்ளிகளுக்கு உதவி அளிப்பதை விட டில்லி அட்மினிஸ்ட்ரேஷனில் அவர்களுக்கு உதவி கொடுத்திருக்கிறார்கள்; அவர்களும் தாராளமாகக் கொடுத்திருக்கிறார்கள்; அந்தப் பள்ளிகளை நல்ல முறையில் நடத்துகிறார்கள். இந்த ஆண்டில் ரூபாய் 1 லட்சம் அவர்களுக்கு உதவி அளித்திருக்கிறோம் என்றால் அது தவறு என்று கனம் அங்கத்தினர்கள் கருதக் கூடாது என்றுதான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் இந்த இனங்களில் சேராத விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவைகளுள் கல்லூரி பற்றியது ஒன்று. சேலம் கல்லூரி என்று எடுத்துக் கொண்டாலும், வட. சென்னையில் ஒரு பெண்கள் கல்லூரி வேண்டுமானாலும் ஒன்று கூற விரும்புகிறேன். கல்லூரி வேண்டுமானால் முதலில் ஸ்தலத்தில் இருக்கிறவர்கள் கொஞ்சம் அக்கரை எடுத்துக் கொள்ளவேண்டும். தனிப்பட்டவர்கள் ஹோதாவில் இந்த ஆண்டிலேயே கல்லூரிகள் அமைக்கப்பட்டன. புதிதாகக் கல்லூரிகள் அமைக்கப்பட்டதில் புகு முக வகுப்புகள் அமைக்கப்பட்டதில், குறைந்த பட்சம் 1,000 புது ஸ்தானங்கள் பிரத்தியேகமாக, முன்பு இருந்ததை விட அதிகமாகக் கிடைத்திருக்கிறது. அதற்குப் பிறகு பல்கலைக் கழகத்தின் அனுமதி பெற்று இன்னும், 1,000 ஸ்தானங்களை அவர்கள் கொடுத்தார்கள். ஆகையால் மொத்தத்தில் 2,000 ஸ்தானங்கள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. இருந்தாலும் நெருக்கடி இருக்கிறது. என்ஜீனியரிங் கல்லூரியில் நெருக்கடி, மருத்துவக் கல்லூரியில் நெருக்கடி, மற்ற கல்லூரிகளில் நெருக்கடி என்றால் நெருக்கடி இருக்கத்தான் செய்யும். கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் எத்தனை பேர்கள் மனுக்களைப் போட்டிருக்கிறார்கள் என்று பார்த்து உடனே கல்லூரிகளை அமைத்து விடவேண்டும், துணை மதிப்பீட்டில் அனுமதி வாங்கிவிட வேண்டும் என்று சொன்னால், அப்படி அமைத்து விட முடியாது. வேறு நாடுகளை எடுத்துக்கொண்டால் கூட, ஃப்ரான்ஸ் நாட்டில் ஒரு சிறந்த விவசாயக் கல்லூரியில் நான் போயிருந்தபோது பார்த்தேன், அந்தக் கல்லூரியில் 200 பேர்களைத் தான் சேர்க்க முடியும். அது ஒரு சிறந்த கல்லூரி; பாரிஸ் நகரில் அதில் சேர்வதற்கு பரீட்சை நடந்தது; மொத்தம் 1,000 பேர்கள் பரீட்சை எழுதுகிறார்கள். அந்த கல்லூரியில் இருக்கும் இடம் 200; அதற்கு 1,000 பேர்கள் பரீட்சை எழுதுகிறார்கள். அதே மாதிரி லண்டனில் வைத்தியப் பள்ளியில் 100 பேர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு 4,000 பேர்கள் மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தந்த ஆண்டில் கணக்குப் போட்டு உடனே கல்லூரிகளை அமைக்க முடியாது. கூடிய வரையில் இந்த நெருக்கடியைத் தவிர்க்க வேண்டும் என்று இதில் கவனம் செலுத்தவேண்டுமென்பதில் அரசாங்கத்திற்குக் கவலை உண்டு. உயர்ந்த படிப்பு படிக்க வருகிறவர்களுக்கு தடை இருக்கக் கூடாது என்பதில் அரசாங்கத்திற்கு அக்கரை இருக்கிறது. இதைப் பற்றி மீண்டும் தீவிரமாகச் சிந்தித்து இதற்கு ஒரு திட்டம் தயா

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1963

ரித்து, இந்த நெருக்கடியை எந்த அளவுக்கு அடுத்த ஆண்டில் போக்க முடியும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும், புதிய கல்லூரி வரவேண்டுமானால் அது உடனே நினைத்தவுடன் வர முடியாது. இதிலே இன்னொன்றும் கவனிக்க வேண்டும். சில மாணவர்கள், மன்னார்குடியில் இடம் இருக்கிறது அங்கே போய்ச் சேர்ந்து கொள்ளுங்கள் என்று சொன்னால், மன்னார்குடிக்குப் போக மாட்டேன், மாயவரத்துக்குப் போக மாட்டேன், சென்னையில் தான் இடம் வேண்டும், இங்கேயே தான் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்தக் காலத்தில் அநேகர் வேறு நாடுகளுக்குச் சென்று படிக்கிறார்கள். படிக்கவேண்டும் என்பதற்காகத் தான் கல்லூரிகள் இருக்கின்றன. அதோடு எனக்கு கெமிஸ்ட்ரிதான் வேண்டும், எனக்கு ஸுவாலஜி தான் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதுதான் வேண்டுமென்று விரும்புவதைப் பற்றி நான் குறை கூறவில்லை. நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பத்தை எடுத்துக் காட்டத்தான் விரும்புகிறேன். மாணவர்கள் ஆங்காங்கு இருப்பது நல்லது தான். பெற்றோர்களின் வறுமை நிலை இருக்கிறது. ஆகையால் இதை எவ்வளவு தூரம் சமாளிக்க முடியுமோ அவ்வளவு தூரம் சமாளித்து வருகிறோம். புதிதாகக் கல்லூரி அமைக்க வேண்டுமானால், சேலத்திலோ, கடலூரிலோ அல்லது வட சென்னையிலோ, எங்கேயிருந்தாலும், ஆண்கள் கல்லூரியாயிருந்தாலும், பெண்கள் கல்லூரியாயிருந்தாலும், ஸ்தலத்தில் இருக்கிறவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். முன்பே நான் கிருஷ்ணகிரி உறுப்பினருக்கு இதைத்தான் சொன்னேன். நான் கோவைக்குச் சென்றபோது ஒரு நண்பர், சட்ட மன்ற உறுப்பினர் என்னிடம் கூறினார். தனியாகக் கல்லூரி அமைப்பதென்றால் பல்கலைக் கழகம் ஏராளமாக எண்டௌமெண்ட் கேட்பதாகச் சொன்னார்கள். அவர்கள் கேட்பது நியாயம். ஏதாவது குறைக்கக் கூடுமானால் குறைக்கலாம். அந்த அளவுக்கு முடியவில்லை என்றால், நீங்கள் முதலில் நிதி திரட்டுங்கள்; திரட்டிய பிறகு அரசாங்கத்திடம் வாருங்கள்; திரட்டியிருக்கும் நிதியை வைத்துக்கொண்டு அரசாங்கமே ஒரு கல்லூரியை அமைக்க முடியுமா என்று பரிசீலிக்கத் தயாராயிருக்கிறோம் என்று சொன்னேன். அதைத்தான் கிருஷ்ணகிரி உறுப்பினருக்கும், சென்னை உறுப்பினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்களுக்கும் சொல்ல விருகிபுகிறேன். ஏதோ சொல்லிவிட்டோம், கல்லூரி என்று சொல்லி விட்டோம், ஏன் கொடுக்கவில்லை என்று கேட்பது சரியல்ல. ஒரு கல்லூரி அமைக்கவேண்டுமானால் முதலில் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும்—இனிஷியேடிவ் எடுத்துக்கொள்ளவேண்டும். நிதி திரட்ட வேண்டும். அதை அரசாங்கமே பயன்படுத்தி கல்லூரிகளை அமைக்க ஏற்பாடு செய்யலாம். நெருக்கடியை எந்த அளவுக்கு அகற்ற முடியுமென்று பார்க்கிறோம். இப்போது பல்கலைக்கழகத்திடம் சொல்லி, எங்கும் இம்மாதிரி கொடுப்பதில்லை, கல்லூரி முதல்வர்களெல்லாம் ஆட்சேபித்தார்கள் என்று சொன்னார்கள், சிண்டிகேட்



10th August 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

கூட முடிவு செய்ததாம், இருந்தாலும் பிரத்தியேகமாகச் சொல்லி அனுமதி கொடுத்து எவ்வளவு தூரம் சமாளிக்க முடியுமோ அவ்வளவு தூரம் சமாளித்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அதே மாதிரி இன்னொரு விஷயம்; இதில் இல்லாத விஷயம். லெப்ரஸி ஸானடோரியம் பற்றி செங்கற்பட்டு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். இருக்கிற நெருக்கடியையெல்லாம் சொன்னார்கள். இம்மாதிரி பிரச்சனைகள், குறைபாடுகள் எல்லாம் எப்போதும் அரசாங்கத்தின் கவனத்திலே இருந்துகொண்டு வருகின்றன என்பதைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

கனம் எதிர்க் கட்சித் தலைவர் மற்றொன்று குறிப்பிட்டார்கள். சேல்ஸ்-டாக்ஸ் ட்ரிப்யூனல் இருக்கிறது, அங்கே கட்சிக்காரர்கள் வருகிறார்கள். வசதி செய்து கொடுக்க சில தளவாடங்கள், நாற்காலி மேஜையெல்லாம் போடப்பட்டிருக்கிறது. அவைகளெல்லாம் போட வேண்டியது அவசியம். முன்பு ஒதுக்கப்பட்டது ஏன் செலவழிக்கப்படவில்லை, செலவு ஆகாததால் தான் இப்போது துணை மதிப்பீட்டில் வருகிறது என்று சொன்னார்கள். ஃபர்னிச்சர் போடவேண்டும் என்றால் ஃபர்னிச்சர் உற்பத்தி செய்யக் கூடிய அரசாங்க ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகளை உற்பத்தி செய்யக் கூடிய இண்டஸ்ட்ரியல் எஸ்டாப்ளிஷ்மெண்ட்ஸ் இருக்கின்றன. அல்லது சிறைகளில் இவைகளெல்லாம் செய்யப்படுகின்றன. இப்படி இருக்கும்போது கூடிய வரையில் ஏன் வெளியில் வாங்க வேண்டும் என்று எண்ணி, இவைகளிலிருந்து வாங்கவேண்டும் என்று போடுகிறோம். நமது தேவை அதிகப்படுகிறது. அவ்வளவையும் உடனடியாக சப்ளை செய்ய முடியாமல் போகிறது. அப்படிப் போகும்போது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், வெளியில் மார்க்கெட்டில் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறோம். இப்படியெல்லாம் இருப்பதால், நம் ஸ்தாபனங்கள் உற்பத்தி செய்கிற சாமான்களை வாங்கவேண்டும் என்ற நிபந்தனை வைப்பதால், ஒதுக்கப்பட்ட பணத்தை முற்றிலும் செலவு செய்ய முடியாமல் போகிறது, அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

பஸ்களைப் பொறுத்த வரையில், ஸ்டேட் ட்ராண்ஸ்போர்ட்டைப் பற்றித்தான் துணை மதிப்பீட்டில் கண்டிருக்கிறது. 12-0 noon
"பஸ் டைமிங்ஸ்" பற்றிக் கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார்கள். பஸ் 'டைம் டேபிள்' புத்தகம் போட்டாய் விட்டது. அவற்றில் சில பிரதிகளை இங்கே இப்பொழுது கொண்டுவந்திருக்கிறேன். கனம் அங்கத்தினர்களும் பார்க்கலாம். இதெல்லாம் எவ்வளவு தூரம் போட முடியும் என்று பார்த்து போட்டுக்கொண்டு வருகிறோம்.

பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கும் கனம் அங்கத்தினர் திரு. கமலநாதன் அவர்கள், "கல்விக்காகத் துணை மதிப்பீட்டில் மான்யம் எல்லாம் கேட்கிறீர்கள், ஆரம்பப்

பள்ளிகளின் நிலை என்ன?" என்று கேட்டார்கள். ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு இருக்கும் விகிதாசாரம் சரியில்லை என்றும் சொல்லப்பட்டது. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், "**per capita income**" அடிப்படையில் போடுவது கூடச் சரியில்லை என்று சொன்னார்கள். எது நியாயமாக இருக்கும்? யார் தேவை அதிகமாக மதிப்பிட்டு எடுத்துக் காட்டுகிறார்களோ, அவர்களுக்கு மட்டும், கொடுப்பதென்பதும் சரியல்ல. திறமையாக எடுத்துக் காட்டுகிறவர்களுக்கு மட்டும் கேட்கும் அளவு கொடுத்துவிட்டு, மற்றவர்களைப் பற்றி கவனம் செலுத்தாமலிருந்து விட்டால் அது சரியல்ல. அவர்களுக்குத் தொகையைக் குறைத்து பகிர்ந்து விடுவது நல்லதல்ல. எல்லோருக்கும் சரிசமமாகப் பகிர்ந்து கொடுக்கவேண்டும். 'பெர் காபிடா பேஸிஸ்' இலே கொடுக்கிறோம். அதே வகையில்தான் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கான கட்டடமும் முக்கியமான பிரச்னை. ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடங்களுக்கு நாம் ஒரு கணக்குப் போட்டு பணம் கொடுக்கிறோம். சென்ற வரவு செலவுத் திட்டத்தில் 30 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தோம். 'முப்பது லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கும்போது ஏன் 45 லட்ச ரூபாய் ஒதுக்கவில்லை?' என்று கேட்கக்கூடும். நாற்பத்து ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்து 40 லட்சம் ரூபாய் செலவு செய்து இருந்தால் 'ஏன் 45 லட்சம் ஒதுக்கினீர்கள்?' என்று கேட்கலாம். இதெல்லாம் சுமாராக, உத்தேசமாக மதிப்பிடுகிறோம். முப்பது லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தோம். நாற்பத்து மூன்று லட்சம் ரூபாய் வரையில் செலவு ஆயிற்று. எப்படியும் வளர்ச்சி அடைந்து கொண்டுதான் போகிறது.

'சில ஆஸ்பத்திரிகளில் இடம் போதவில்லை' என்று சொல்லப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பிறகு, 12,800 படுக்கைகள் தான் ஆஸ்பத்திரிகளில் இருந்தன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 2,099 படுக்கைகள் அதிகரிக்கப்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3,925 படுக்கைகளை அதிகரிக்கவேண்டுமென்று திட்டம் இட்டிருக்கிறோம். அதில் இப்போதே 1,915 படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆஸ்பத்திரிகளில் உணவு வழங்கப்படுவது பற்றிக் குறிப்பிடப்பட்டது. 1958-59-ம் ஆண்டில் மருந்துகள் சப்ளைக்கு ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. ஆனால், 1962-63-ம் ஆண்டில் ஒரு கோடியே 91 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆக, 81 லட்சம் ரூபாய் அதிகம். வியாதியஸ்தர்களுக்கு உணவு கொடுக்கும் விஷயத்தில், 1962-63-இல் 97 லட்சம் 80 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆக, இந்த இனத்திலும் செலவு உயர்ந்து கொண்டுதான் போகிறது. நாம் மதிப்பிட்டதைவிட பணம் சற்று அதிகமாகப் போனாலும் பரவாயில்லை என்று செய்கிறோம். அதனால்தான் துணை மதிப்பீடுகள் வரவேண்டியிருக்கின்றன.



கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். நானும் பார்த்திருக்கிறேன். எனக்குக்கூட அம்மாதிரி தோன்றுவதுண்டு. வியாதியஸ்தர்களைப் பார்க்க டாக்டர் வருகிறார். அவர் பின்னால் மாணவர்கள் வருகிறார்கள். வியாதியஸ்தரைச் சுற்றி ஐந்து, பத்து பேர் சூழ்ந்து கொள்கிறார்கள். இது வியாதியஸ்தர்களுக்குக் கொஞ்சம் சங்கடமாக இருக்கலாம். இருந்தாலும், மாணவர்கள் எப்படிக் கற்றுக் கொள்ளுவது? மாணவர்கள் நேராக உண்மையான வியாதியஸ்தர்களைப் பார்த்துத்தானே கற்றுக் கொள்ள வேண்டும்? 'போஸ்ட்-மார்ட்டம்' செய்தால் மட்டும் போதாது. வியாதியஸ்தர்கள் சிகிச்சை பெறும்போது, அவர்கள் என்ன சொல்கிறார்கள், அவர்களிடம் எவ்வளவு சாந்தமாகப் பழக வேண்டும் என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளுவதற்கு டாக்டருடன் மாணவர்கள் சென்று வியாதியஸ்தர்களைப் பார்த்துத்தானே தெரிந்துகொள்ள முடியும்? மாணவர்கள் நல்ல பயிற்சி பெற வேண்டியதும் அவசியம் வியாதியஸ்தர்களுக்கு சங்கடம் ஏற்படக்கூடாது என்பதும் முக்கியம். (திரு. இரா. நெடுஞ்செழியன்: ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் இந்த நம்பர் அதிகமாக இருக்கிறது.) உண்மைதான். நெருக்கடி தீர்ந்தால்தான் இந்த நிலை மாறும். இருந்தாலும், இதையெல்லாம் மனதிலே வைத்துக் கொண்டுதான் இந்தச் சங்கடங்களைப் போக்குவதிலே கவனம் செலுத்தி வருகிறோம்.

போலீஸ் லைனில் விளக்கு போடுவதை எல்லாரும் வரவேற்கிறார்கள். ஆனால், கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் பேசும்போது, 'இதற்கெல்லாம் ஒரு கணக்கு வைத்திருக்கிறார்களே' என்று சொன்னார்கள். உபயோகிக்கப்படும் மின்சாரத்திற்கான செலவைச் சர்க்காரே ஏற்றுக்கொள்ளுகிற நிலையில் இதற்கு ஒரு வரம்பு வைக்க வேண்டியிருக்கிறது. நாமே மின்சாரக் கட்டண 'பில்' லைக் கட்ட வேண்டுமென்றால் ஒரு மாதிரிதான். யாரோ கட்டி விடப் போகிறார்கள் என்றால் வேறு மாதிரிதான். போலீஸ்காரர்களை மட்டும் நான் சொல்லவில்லை. பொதுவாக எல்லோருமே—அமைச்சர்கள் உட்பட—அப்படித்தான். இதற்கெல்லாம் ஒரு வரம்பு இருக்கிறது. மாணவர்கள் படிக்கவேண்டியிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். மாணவர்களுக்கு, 9 மணிக்குமேலும் படிக்கவேண்டுமென்கிற ஆர்வம் இருக்கிறது என்பதைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்குத் தடை இருக்கக் கூடாது தான். ஆனால், இதெல்லாம் குறிப்பான விஷயங்கள். இவைகளையெல்லாம் பார்த்து, எப்படிப் பரிகாரம் தேடுவது என்பதிலே கவனம் செலுத்தலாம்.

ஊர்க்காவல் படை (ஹோம் கார்ட்ஸ்) பற்றி நான் முன்பே சொன்னேன். "ஹோம் காட்ஸ் என்பது என்ன", "விலேஜ் வாலண்டியர்ஸ். ஃபோர்ஸ்" என்பது என்ன என்பதிலே சில சமயங்களில் சிலருக்குக் குழப்பம் வந்துவிடுகிறது. 'அகப் படை' என்று

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1963

சொன்னாலும் 'ஊர்க்காவல் படை' என்று தான் வருகிறது. கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் பேசும்போது, விலேஜ் வாலண்டியர் ஃபோர்ஸை ஊர்க்காவல் படையாக வைத்துக்கொண்டார்கள். 'பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்கின்றவர்கள் தான் அதில் இருக்கிறார்கள், மற்றவர்கள் யாரும் இல்லை' என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் 'ஊர்க்காவல் படை' என்று குறிப்பிட்டது 'விலேஜ் வாலண்டியர் ஃபோர்ஸை'. விலேஜ் வாலண்டியர் ஃபோர்ஸ் வேறு. ஹோம் கார்ட்ஸ் வேறு. விலேஜ் வாலண்டியர் ஃபோர்ஸ் பஞ்சாயத்தின் பராமரிப்பில் இருக்கிறது. ஹோம் கார்ட்ஸ் போலீஸ் பராமரிப்பில் இருக்கிறது. விலேஜ் வாலண்டியர் ஃபோர்ஸுக்குக் 'கிராமத் தொண்டர் படை' என்று பெயர். அதிலே கூட, 'பஞ்சாயத்திலே வேலை செய்கின்றவர்கள்தான் இருக்கிறார்கள்' என்று சொல்வது சரியல்ல. நானே பார்த்திருக்கிறேன். கிராமத்திலுள்ள பலர், அங்கு நடக்கும் முக்கியமான சம்பவங்களிலும், விழாக்களிலும் பாட்ஜ்கள் போட்டுக்கொண்டு மிகுந்த உற்சாகம் காட்டுகிறார்கள். கிராமத்தவர்கள் பலர் இதில் அக்கறை எடுத்துக்கொள்வது நம் திருப்திக்கும் பாராட்டுக்கும் உரியது.

'ஹோம் கார்ட்ஸ்' பற்றி ஒரு கேள்விக்கு நான் விடை அளித்தேன். இப்பொழுது 10,000 பேர்களும், பின்னர் 10,000 பேர்களும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது திட்டம். இவர்களுக்கெல்லாம் போலீஸ் ட்ரெயினிங் கொடுக்கப்படுகிறது. இதிலே வழக்கறிஞர்களும், வியாபாரத் துறையில் ஈடுபட்டவர்களும், தொழில் துறையில் ஈடுபட்டவர்களும் இருக்கிறார்கள். இப்படி எல்லோரும் இதில் உற்சாகத்தோடு சேர்ந்திருக்கிறார்கள்.

'தேசீய மாணவர் படையினருக்கு (நாஷனல் கேடட் கோர்) ரைஃபிள்கள் போதிய அளவில் இல்லை' என்று ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். குறை இருக்கிறது. பற்றாக்குறை இருந்தாலும் கூடிய வரைக்கும் அதைச் சமாளித்து வருகிறோம். இது நல்ல பயிற்சி. முன்பு எதிர்பார்க்கக்கூடாத செலவினம் இது. இதை எவ்வளவு தூரம் அமைக்க முடியுமோ அந்த முறையிலே கவனம் செலுத்தி வருகிறோம்.

'ஹோம் கார்ட்ஸ்' படையைப்பற்றிக் குறிப்பிட்டபோதுதான், கனம் எதிர்க்கட்சிச் செயலாளர் அவர்கள், 'போலீஸ் கெடுபிடி' என்றார்கள். அப்படித்தான் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். சென்னை நகரத்தைப்பற்றி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும்போது, 'பல பேர் கைது செய்யப்படுகிறார்கள், இப்படி ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது' என்றெல்லாம் சொன்னார்கள். ஒன்று நான் இந்தச் சமயத்தில் கூற விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் 'ஏதோ இப்பொழுது புதிதாக போலீஸ் கமிஷனர் வந்திருக்கிறார், அவர்கள் வந்த பிறகு கெடுபிடி அதிகமாக இருக்கிறது' என்ற வகையில் குறிப்பிட்டார்கள். நான் மற்றவர்களைப் பற்றி



10th August 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

ஒப்பிட்டுச் சொல்லவில்லை. இப்பொழுதிருக்கிற போலீஸ் கமிஷனரைப்பற்றிக் குறிப்பிட்டதனால் நான் சொல்கிறேன். இந்தப் போலீஸ் கமிஷனர் மிகச் சிறந்த ஓர் அதிகாரி என்பதை நான் இப்பொழுது தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** காலத்தை நான் குறிப்பிடுகிறேனே தவிர, அந்தப் போலீஸ் கமிஷனரால் ஏற்பட்டது என்று நான் சொல்லவில்லை. I want to correct it Sir.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கூறியதை நான் தவறுதலாக எடுத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும், அவர்கள் கூறிய கருத்திலிருந்து சில தவறுதலான கருத்துக்கள் ஏற்படலாம். அப்படி ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுதிருக்கும் போலீஸ் கமிஷனர் மிகச் சிறந்த ஓர் அதிகாரி. எல்லாவிதத்திலும் திறமையும் பண்பும் ஒழுக்கமும் நிறைந்த ஓர் அதிகாரி. போலீஸ் அதிகாரிகளின் முக்கியமான நோக்கம் என்ன? அமைதியை நிலை நாட்ட வேண்டும். தவறு செய்கிறவர்களுக்குச் சற்றும் இடம் கொடுக்கக்கூடாது. அதிலே கண்டிப்பாக இருக்கவேண்டும் என்பதுதான் முக்கியமான நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் ரொம்பக் கண்டிப்பாக இருக்கிறவர், கண்ணும் கருத்துமாக இருக்கிறவர். ஆனால் கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட காரியத்தை மேல் அதிகாரியே தான் செய்திருக்க வேண்டுமென்பதில்லை. கீழ் இருக்கிற அதிகாரிகள் அத்தனைபேர்களும் ஒழுங்காக நடந்து கொள்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. கனம் மதியழகன் அவர்கள் போலீஸ் கமிஷனர் புதிதாக வந்திருக்கிறார் என்று குறிப்பிட்டதனால் தான் நான் இவற்றைச் சொல்கிறேன். இல்லாவிட்டால் சொல்லாமலேயே விட்டிருப்பேன். சில சமயம் கீழ் இருக்கும்படியான அதிகாரிகள் அத்துமீறி நடக்கலாம். தவறு நடக்கக்கூடும். ஆனால் இப்படி அத்துமீறி நடக்கிறவர்கள் அவ்வப்போது தண்டிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால் எப்போதுமே அமைதியை நிலைநாட்டுவதற்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. குழப்பத்தை உண்டாக்க விரும்புகிறவர்களுடைய காரியங்களை தகர்த்தெறிவதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. ஆனால் நிரபராதிகள் பாதிக்கப்படக்கூடாது. இது சம்பந்தமாக அவ்வப்போது அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து நிரபராதிகளின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாதவாறுதான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனாவசியமான கஷ்டம், தொந்தரவு மக்களுக்கு ஏற்படக்கூடாது என்பதில் அரசாங்கம் விசேஷ கவனம், அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதுபற்றி அரசாங்கம் மேலும் கவனம் செலுத்தும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இதில் அரசியல் ஒன்றும் இல்லை. அரசியல் கட்சியை இதிலே கொண்டுவந்து புகுத்த வேண்டாம். சாதாரணமாக அன்றாடம் எடுத்துக் கொள்ளப்படுகிற நடவடிக்கைகளுக்கு அரசியல் கருத்தைக்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1963

கொண்டுவரவேண்டியதில்லை. "தவறு நடந்து போய் விட்டது. நீங்கள் இதற்கு முன்னால் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை" என்று கேட்கலாம். தவறைச் செய்தது யாராக இருந்தாலும் கண்டிப்பாக அரசாங்கம் அவர் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தான் வேண்டும். எடுத்துக்கொண்டும் வருகிறது. ஆகவே இதில் அரசியல் விவகாரங்களுக்கு ஒன்றும் இடமில்லையென்று சொல்ல விரும்புகிறேன் .

திரு. நல்லசிவம் அவர்கள் கீழ்பவானி திட்டத்தில் நூற்றுக்குப் பதினைந்து வீதம் தண்ணீர் சப்ளையைக் குறைத்துவிட்டார்கள் என்று சொன்னார். ஆனால் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் கோவை மாவட்டத்தையே சேர்ந்தவராக இருந்தாலும், இதே கீழ் பவானி திட்டத்தில் அக்கறை உள்ளவராக இருந்தாலும் 'இருக்கக்கூடிய தண்ணீரை எல்லோரும் பகிர்ந்துகொள்ளத்தானே வேண்டும்', என்று சொன்னார். கோவையைப் பொறுத்த மட்டில் நான் பொறுமைப்படவில்லை. எனக்குப் பொறுமை இல்லை. குறையில்லை, குறைபடவும் பொறுமைப்படவும் இடமேயில்லை. ஆனால் ஒரு உண்மையை நாம் பார்க்கவேண்டும். கீழ்ப் பவானித் திட்டம் உருவாக்கப்பட்டபோது எவ்வளவு தண்ணீர் மிக அதிகமாக அவர்களுக்கு அளிக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டதோ அதற்கும் அதிகமாகவே அவர்கள் இப்போது பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். தங்களுக்கு உரியதைவிட அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டு வருகிறவர்கள்—அதுவும் இந்த ஆண்டு துரதிருடஷ்வசமாக பருவ மழை இல்லாத காரணத்தினால், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால் இருக்கக்கூடிய தண்ணீரை எல்லோரும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காகக் கொஞ்சம் குறைத்தபோது பெரிதாகக் கூக்குரல் இடுவது பயன் இல்லை. இவ்வாறு சந்தர்ப்பம் வரும்போது குறைத்துக்கொள்வதற்கு கோவை மக்கள் கொஞ்சமும் கூடத் தயங்கக்கூடாது என்று நான் இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாகத் தங்கக் கட்டுப்பாடு. தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம். நான் இல்லையென்று சொல்லவில்லை. அவர்களுக்கு உதவி செய்வதற்காக 5 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். இது போதுமா என்றால் போதும் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் இது குறிப்பிட்ட ஒரு திட்டம். இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ஐந்து லட்சம். அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக இதுபோல இன்னும் பல திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். இந்த ஒரு திட்டத்திற்காகத்தான் இப்போது ஐந்து லட்சம் மானியம் கோரப்பட்டிருக்கிறது. அதோடு அவர்களுடைய நலனுக்காக என்ன என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றிய ஒரு கேள்விக்கு தொழில் அமைச்சர்கள் அவர்கள் விடையளித்திருக்கிறார்கள், விளக்கியிருக்கிறார்கள். தங்கத்தில் வேலை செய்கிறவர்கள் எவ்வாறு 14 காரட்டில் வேலை செய்ய முடியும் என்றால் பதினான்கு காரட்டில் தான் வேலை செய்யவேண்டும் என்பது திட்டம். அமெரிக்காவில் உள்ளவர்கள் மிக அதிகமாக நகைபோட்டுக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். அமெரிக்காவில் உள்ள பெரிய பெரிய நகைக்கடைகளுக்குப் போனால் எந்த நகையும் 14 காரட்டுக்குமேல் செய்யப்படவில்லை. பதினான்கு காரட் அல்லது அதற்குக் கீழே தான் எல்லா நகைகளும் செய்யப்படுகிறது என்று சொல்கிறார்கள். அப்படி இருக்க தேசத்திற்கே ஒரு ஆபத்து, இந்த ஆபத்தைப் போக்க இந்தமாதிரியாக மக்கள் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கோரி ஒரு திட்டத்தைக் கொண்டுவரும்போது இதனால் தான் இந்தக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டது, பதினான்கு காரட்டில் நகையே பண்ண முடியாதே என்று சொல்வதில் என்ன பயன்? பொன்னிலே வேலை செய்து வந்தவர்கள் வேலையை இழந்துவிட்டார்களே என்றால் மண்ணிலே வேலை செய்கிறவர்கள் பலர் வேலையில்லாமலேயே திண்டாடுகிறார்களே. அவர்களுக்கு நாம் என்ன செய்கிறோம் என்று இன்னொரு பக்கத்தில் கேட்கலாம். பொதுவாக வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலேயே இருக்கக்கூடாது என்று நாம் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். மண்ணிலே வேலை செய்கிறவர்களுக்கு, இருக்கக்கூடிய மண்ணுக்கு ஏற்ப, விவசாய வசதிகளுக்கு ஏற்ப வேலையும் கொடுத்து வருகிறோம். தங்கக் கட்டுப்பாட்டினால் வேலை இழந்த பொற்கொல்லர்கள் விஷயமாக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையுமே எடுத்துக் கொள்ளவில்லையென்று சொல்வது, நினைப்பது சரியாக இருக்காது. அதிலே முழுக் கவனமும் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.



10th August 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

இன்னும் சிலபேர் எதற்காக இண்டஸ்ட்ரியல் கோவாப்ரேடிவ் என்று இவர்களுக்காக ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். பொற்கொல்லர்கள் நுட்பமான கலை வேலையில் இதுவரை ஈடுபட்டு வந்தவர்கள். இப்போது வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள் என்றால் அவர்கள் இதுவரை செய்து வந்த தொழிலுக்கு ஏற்பத்தானே வேலை அளிக்க முடியும்? மண்ணைக் கொடுத்து வேலை செய்யச் சொல்வதா? அவர்கள் நிலத்தில் போய் பாடுபட்டு வேலை செய்து, விவசாயம் செய்யத் தயாராய் இருந்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை . ஆனால் நாம் எது செய்வதாக இருந்தாலும் தடை செய்வது என்றால் என்ன பண்ணுவது? அப்ஸ்ட்ரக்ஷன் பண்ணிக்கொண்டே இருந்தால்—அதற்குச் சரியான தமிழ் தெரியவில்லை, சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன்—நாம் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது.

மேலும் வேறுசில குறைகளைப் பற்றி எல்லாம் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றியெல்லாம் கூட மேலும் கவனம் செலுத்துவோம் என்று கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத்தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள மதராசி சங்கம் நடத்துகிற பள்ளிக் கட்டடத்திற்கு நம்முடைய அரசு ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கியது

தவறு என்றோ, அதைக் கொடுக்கக்கூடாது என்றோ நான் கூற வில்லை. அந்தக் கட்டிடத்திற்கு ஒன்பதரை லட்சம் ரூபாய் ஆகிற தென்றும், இரண்டரை லட்சம் செலவு செய்யப்பட்டுவிட்டது என்றும் மேலும் தேவைப்படுகிற ஆறு லட்சத்தையும் அவர்கள் பெறுவதற்கு நம்முடைய அரசு, டெல்லி அரசை வற்புறுத்த வேண்டும் என்றுதான் சொன்னேன். கொடுக்கக்கூடாது என்று குறிப்பிடவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** டெல்லி அரசோடு ஒப்பிடும் போது நம்முடைய அரசு பேரரசு. அவர்களுடைய அரசு சிற்றரசு தான். பேரரசு சிற்றரசை எவ்வாறு இவ்விஷயத்தில் சொல்ல முடியும்?

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** நான் டெல்லி அரசு என்றபோது மத்திய அரசாகத்தைச் சுட்டிக்காட்டினேனே தவிர டெல்லி அட்மினிஸ்ட்ரேஷனை சொல்லவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மத்திய ஆட்சியில் இருந்து கொடுக்கக்கூடியதை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

MR. SPEAKER: Voting on Demands for Grants for Further Expenditure for the year 1963-64 will be taken up on Monday, the 12th August 1963.

## VII. THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1963-64 (DISCUSSION—*cont.*)

MR. SPEAKER: We will now continue the discussion on the Madras State Electricity Board Budget for 1963-64.

* **திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் அறிக்கையை வரவேற்று நான் ஒருசில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். நமது நாட்டிலே எவ்வளவோ முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக் கின்றன என்றால் அவற்றுக்கு எல்லாம் மூலகாரணம் மின்சார அபிவிருத்தி தான். மின்சார விஸ்தரிப்பு நம்முடைய மாநிலத் திலே நல்லமுறையில் நடைபெற்றிருப்பதனால் தான் மற்ற மாநிலங்களைவிட பலவகையில் நாம் முன்னேற முடிந்திருக்கிறது என்றால் மிகையாகாது. அதைக்கண்டு நாம் பெருமைப்பட வேண்டும். நம்முடைய ராஜ்யமானாலும் சரி, பிற ராஜ்யங் களானாலும் சரி மின்சாரம் இல்லாமல் அபிவிருத்தி அடையாது. ஆகவே எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக நாம் அதை உற்பத்தி செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகத் தொழில் துறையில் முன்னேற்றம் அடைய முடியும். அதை உணர்ந்துதான் நாம் பலவகையிலும் மின்சாரத்தைப் பெருக்கப் பாடுபட்டு வருகிறோம். நமது ராஜ்யத்தில் இன்னும் கிட்டத்தட்ட மூவாயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்துவிடுவோமேயானால் நமது லட்சியமே நிறைவேறிவிடும். அது நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அளவில் முடிவு அடைந்துவிடும் என்று நான் கருதுகிறேன். அந்த அளவு நமது ராஜ்யத்தின் மின்சார உற்பத்தித் திறன் விருத்தி அடைந்திருக்கிறது என்று சொன்னால் நாம் எல்லோரும் பெருமை அடையவேண்டும்.





நாம் ரூரல் பகுதிகளில் மின்சாரத்தை இந்த அளவுக்கு விஸ்தரித்திருப்பதை மற்ற ராஜ்யங்கள் ஒரு முன்னோடியாக வைத்துக்கொண்டிருப்பது நம்முடைய ராஜ்ய மின்சார போர்டின் பெருமையைக் காட்டுகிறது என்றுதான் நாம் சொல்லவேண்டும். நாம் ஆற்று நீரைக் கொண்டு மின்சார உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்கள் எல்லாம் அநேகமாக பூர்த்தியாகி விட்டன. மேலும் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று சொன்னால் அனல் மின்சார நிலையத்தை அமைத்துத்தான் உற்பத்தி செய்ய முடியும். அப்படிச் செய்தால் அந்த மின்சாரத் திற்கான விலை அதிகமாகிறது. ஆகவே, அதனை எப்படிச் செய்வது என்பது குறித்து யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் சிறிய சிறிய ஆற்றின் மூலமாக மின் சக்தி உற்பத்தியைச் செய்வது குறித்தும் ஆராய்ச்சி செய்து கொண் டிருக்கிறார்கள். உதாரணமாக, சுருளியாறு, வான தீர்த்தம் போன்றவற்றிலிருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்வது பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அது வரவேற்கக் கூடிய அம்சமாகும். இதிலிருந்து மின்சார உற்பத்தியில் நாம் முதன்மை யாக இருக்கிறோம் என்பதை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. மின்சாரத்தில் முதன்மையாக இருக்கிறோம் என்று சொன்னால் இன்று ராஜ்யத்தின் மற்ற எல்லா வகைகளிலும் முன்னேற்றத்தில் இருக்கிறோம் என்றுதான் அர்த்தமாகும்.

அடுத்து, நாம் பம்ப்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்து வருகிறோம். பதினாயிரத்துக்கு மேற்பட்ட பம்ப்பு செட்டு களுக்கு மின்சாரம் கொடுத்துள்ளோம். இருப்பினும் கூட இன்னும் சில இடங்களில் பம்ப்பு செட்டுகளுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்று புகார்கள் இருந்து வருகின்றன. எந்தப் பகுதியாக இருந் தாலும், பம்ப்பு செட்டுகளுக்கு உடனடியாக மின்சாரம் கொடுப் பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாகச் சொல்கிறேன். மதுரை அருகிலுள்ள கடைச்சந்தல் என்ற கிராமத்தில் இன்னும் மின்சாரம் கிடைக்கவில்லை. சென்ற வருஷம் கூட அதைப் பற்றிக் கூறியிருக் கிறேன். அந்த ஊர் மதுரைக்கும் அழகர் கோயிலுக்கும் மத்தியில் இருக்கிறது. அந்த இரண்டு இடத்திலும் மின்சாரம் இருந்தும் கடைச்சந்தல் கிராமத்தில் மின்சாரம் கொடுக்காது இருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

மின்சாரத்தை விநியோகம் செய்வதில் 8 தனிப்பட்ட நிறுவனங் களும், 5 ஸ்தல ஸ்தாபனங்களும் இருக்கின்றன என்று இதில் கூறப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தல ஸ்தாபனங்களிலே ஒன்று மதுரை என்று நினைக்கிறேன். இந்த ஸ்தல ஸ்தாபனங்களில்

[திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்] [10th August 1963

னின்றும் மின்சாரம் விநியோகிக்கும் பொறுப்பை மின்சார போர்டே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்து இருப்பதாகத் தெரிய வருகிறது. அவ்வாறு எடுத்துக் கொள்ளும்போது, மதுரையைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சாரம் விநியோகிக்கும் பொறுப்பு மதுரை ஸ்தல ஸ்தாபனத்திடம் இருக்கும் காரணத்தால் அதிக லாபம் கிடைக்கிறது. அந்த லாபத்தை வைத்துக் கொண்டு மதுரை நகருக்கு வேண்டிய தேவையான திட்டங்களை எல்லாம் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மதுரை மின் இயக்கத்தை எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் ஒன்றை மட்டும் செய்யலாம். மதுரை மின் இயக்கத்தால் யூனிட் ஒன்றுக்கு ஒரு அணா வீதம் வாங்கி யூனிட்டுக்கு மூன்றரை அணா வீதம் கட்டணம் வாங்குகிறார்கள். அதைக் கொஞ்சம் குறைத்து வாங்க வேண்டுமென்ற விதியை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது மதுரை மின்சார இலாகாவில் வேலை பார்க்கின்றவர்களுக்கும் மின்சார போர்டில் வேலை பார்க்கின்றவர்களுக்கும் இடையே சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. ஸ்தாபனம் தனியாக இருந்தாலும் வேலை பார்க்கின்றவர்களின் படிப்பு ஒன்றுதான். ஆகவே, அந்த வித்தியாசத்தை அகற்ற வேண்டும். மதுரை நகர சபையினர் மின்சார இலாகாவில் கொடுக்கும் அளவுக்குச் சம்பளத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு ராஜ்ய சர்க்கார் அங்கீகாரம் வேண்டியிருக்கிறது. அந்த அங்கீகாரத்தை ராஜ்ய சர்க்கார் தடை செய்யாமல் கொடுக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று கனம் மதுரை அங்கத்தினர் அவர்கள், 'ஒயர்மென், கண்டிராக்டர், சூப்பர்வைசர் ஆகியோர் லைசன்ஸ் ரின்யூவல் செய்ய வேண்டுமென்று சொன்னால் அப்ளிகேஷன் போட்டு ஆறு மாத காலம் வரை ரின்யூவல் வருவதில்லை' என்று சொன்னார்கள். இந்த லைசென்ஸ் வருஷத்திற்கு ஒரு முறை ரின்யூவல் செய்ய வேண்டியிருக்கிறது. அது காலதாமதமாக வருவதன் காரணமாக ஆறு மாதம் வேலை செய்ய முடியாமல் கஷ்டப்படும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. ஒரு மாதத்திற்குள்ளாக ரின்யூவல் அப்ளிகேஷனை சரிபார்த்து உடனடியாக லைசன்ஸை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நகரங்களிலே சிறு சிறு தொழில்களுக்கு மின்சாரம் சீக்கிரம் கொடுக்கப்படுவதில்லை. மிகுந்த காலம் கழித்துத்தான் அதற்குப் பர்மிஷன் வருகிறது. அந்த மாதிரித் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால் உடனடியாகக் கவனித்து ஆர்டர் கொடுக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறு தொழில்களுக்கு மாலை ஆறு மணி முதல் பத்து மணி வரை மின்சாரத்தை உபயோகிக்கக்கூடாது என்ற திட்டம்



10th August 1963] [திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்]

இருக்கிறது. மற்றப் பல தொழில்களுக்கும் அந்தக் கட்டுப்பாடு இருக்கிறது. சிறு தொழில்களுக்கு மின்சாரம் கொடுப்பதில் அந்த நான்கு மணி நேரத்தைக் குறைக்காமல் இருந்தால் சிறு தொழில்கள் வளர உதவிகரமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, இந்த மின்சார போர்டில் உத்தியோகம் பார்க்கின்ற ஊழியர்களுக்கும், தொழில் புரிகின்ற தொழிலாளர்களுக்கும் பிராவிடண்ட் பண்ட் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாகும் என்பதைக் கூறிக்கொண்டு, மின்சார உற்பத்தியில் நம்முடைய ராஜ்யம் முதன்மையாக நிற்கும் அளவில் பணி புரிந்து வரும் உயர்மட்ட உத்தியோகஸ்தர்களிலிருந்து அடித்தளத்தில் பணி புரிந்து வரும் தொழிலாளர்கள் வரைக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மின்சாரக் குழுவின் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கும் நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மின்சாரக் குழு தனியாக அமைக்கப்பட்டு, தனிப்பட்ட முறையிலே அந்தக் குழு இயங்குவதற்கு அதிகாரம் அளித்து நல்ல முறையிலே பணியாற்றி வருகிறது என்பதை எல்லோரும் ஒரு மனதாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

(திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் தலைமை)

பொதுவாக, மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் நல்ல அனுபவம் மிகுந்த ஒரு தலைவரைக் கொண்டும் ஆற்றல் மிகு உயர் அதிகாரிகளையும் மற்ற ஊழியர்களையும் கொண்டு மிகச் சிறந்த முறையிலே பணியாற்றி வருகிறது. இந்தக் குழு தனியாக அமைக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றி வருவதைப் பார்த்தால், மற்றப் பல காரியங்கள் சரியாக நடைபெற முடியாது இருக்கும் அத்தனையையும் மின்சார போர்டு போன்று தனிக் குழுவாக அமைத்தால் அதன் மூலம் காரியங்களைச் செய்வது சிறந்ததாக இருக்கும் என்று எல்லோரும் சொல்லக் கூடிய 12-30 p.m. அளவிற்கு அந்தக் குழு பணியாற்றி வருகிறது. குறிப்பாக இந்தக் குழு இந்த ஆண்டு ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது. அதற்காக நான் நம்முடைய பெரு மதிப்புக்குரிய அமைச்சர் கனம் வெங்கட்டராமன் அவர்களைப் பாராட்டுவதோடு அவர்களுடைய துணிவையும் பாராட்டுகிறேன். காரணம் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கு இரண்டும்கெட்டான் நிலை இதுவரை இருந்து வந்தது. இந்த அமைச்சர் அவர்களை நான் பாராட்டும்போது இதற்கு முன் இருந்த அமைச்சர் அவர்களுக்கு துணிவு இல்லை என்று நான் சொல்லவில்லை. இதற்கு முன்பெல்லாம் மின்சாரம் வழங்குகிற ஸ்தாபனத்தாரைப் போய்க் கேட்டால் சர்க்காரிடம் கடன் வாங்கிக் கொடுங்கள், உங்கள் பகுதிக்கு லைட் போட்டுத் தருகிறோம் என்று சொல்லி வந்தார்கள். எங்கள் மாவட்டத்தில் சவுத் மட்ராஸ் எலெக்ட்ரிசிடி கார்பரேஷன்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [10th August 1963

என்ற குழு இதுவரை இருந்து வந்தது. அதன்மூலம்தான் திருச்சி மாவட்டத்திலுள்ள பெரும் பகுதிக்கு மின்சக்தி வழங்கப்பட்டு வந்தது. இதுபற்றி அமைச்சர் அவர்களிடம் கூறியபோது அவர்கள் வேடிக்கையாக என்னிடத்தில் சொன்னார்கள், இந்தத் தடவை ஒரு அணு கூட எந்த மின்சாரக் குழுவிற்கும் தரப்போவதில்லை என்று. ஆகவே கண்டிப்பாக சொல்லிவிடுங்கள், போட முடிந்தால் போடட்டும் இல்லாவிட்டால் விட்டு விடட்டும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு தென் சென்னை மின் வழங்குபவர்களிடம் சொன்னேன். அமைச்சர் அவர்கள் இப்படி கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள் என்று சொன்னேன். முன்பிருந்த பழக்கம், கடன் கொடுக்க எப்படியாவது சிபார்சு செய்யுங்கள் என்று சொல்வார்கள். இப்போது அமைச்சர் அவர்களும் மின் இயக்க குழுவினரும் ஒன்று சேர்ந்து அவர்களுடன் பேசி நம் மாநிலத்திலுள்ள பல பகுதிகளில் இந்தக் குழுவே எடுத்து நடத்தி வருகிறது. இந்தத் தடவை நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு அதிகமாக மின்சக்தி வழங்க வேண்டுமென்று எல்லாத் தரப்பினரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், அதிகப்படியான பம்ப்பு செட்ஸ் வழங்கப் பட்டிருந்தாலும் கூட இன்னும் பல கிராமங்களுக்கு மின்சக்தி வழங்கப்படவில்லை. பல கிராமங்களில் இன்று தங்கள் வீட்டிற்கு விளக்கு போடமுடியாத ஏழை விவசாயிகள் கூட பம்ப்பு செட்ஸ் போட முன் வந்திருக்கிறார்கள். நீங்கள் வீட்டுக்கும் போட்டுக் கொள்ளுங்கள், அப்போதுதான் அதிகமாக வரும் என்று முன்பு இருந்தவர்கள் சொன்னதைப் போல் இப்போதும் ஒரு சில பகுதிகளில் சொல்வதாகத் தெரிகிறது. இந்தக் குழுவினர் இதைப் பரிசிலனை செய்து முதலில் பம்பு செட்ஸ்க்கு மின்சாரம் வழங்க முன்வரவேண்டும். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏறக்தாழ எல்லாக் கிராமங்களிலும் குடியிருக்கிற வீட்டிற்கு விளக்கு போட வசதி இல்லாதவர்கள்கூட பம்ப்பு செட்ஸ் வைத்து தண்ணீர் இறைக்க முன் வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த நெருக்கடி நேரத்தில், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக அதற்கு முதலிடம் அளித்து மின்சக்தி வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் இவர்களிடம் ஒப்புவிக்கப்பட்ட பல இடங்கள் போக மற்ற சில இடங்களை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தென் சென்னை மின் சக்தி ஸ்தாபனத்தாரிடம் கேட்டபோது அது எங்கள் பகுதியின் நடுவில் இருக்கிறது. நாங்கள் போட்டுக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். ப்ரயாரிட்டிப் பார்த்துத் தான் போட முடியும் என்று சொல்கிறார்கள். இவ்வளவு கிராமங்களையும் சரண்டர் செய்த பிறகு எந்தக் கிராமத்திற்கு எந்த ப்ரயாரிட்டி இருக்கிறது? அவர்கள் மழுப்புகிறார்கள். ஆகவே அந்தக் கிராமங்களை எடுத்துக் கொள்ள முன்வரவேண்டும். ஒரு சில கிராமங்களின் பெயரைச் சொல்ல விரும்புகிறேன். கூகூர், காந்தமங்கலம், ஆலங்கீழேடு, மேட்டுப்பட்டி இந்த நான்கு கிராமங்களுக்கும் மின்சக்தி வழங்கப்படாமல் இருக்கின்றன. சுற்றி



10th August 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

யிருக்கிற இடங்கள் எல்லாம் அவர்களது என்று கூறி இதை சரண்டர் செய்யாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் கூற விரும்புவது ஒன்று அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும் இல்லாவிட்டால் நாமே அதை எடுத்துக் கொள்ள முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது பல கிராமங்களில் மின்சக்தி வசதி இல்லாமல் இருக்கிறது. மேல் ஜாதிக்காரர்கள் என்று சொல்பவர்கள் இருக்கக்கூடிய பல கிராமங்களுக்கு மின்சக்தி வழங்கப்படுகிறது, வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் சேரிகளுக்கு மின் வசதி இல்லை. உதாரணமாக கரியமாணிக்கம், எதுமலை, பாலையூர், வாளாடி, எசனக்கோரை, அப்பாத்துரை என்று இப்படி பல கிராமங்கள் இருக்கின்றன. குடியானவர் தெருவில் விளக்கு இருக்கிறது. ஆனால் சேரிகளில், ஹரிஜனங்கள் இருக்கக் கூடிய இடங்களில் தெரு விளக்கு கூட கிடையாது. ஒரு போஸ்ட் போட்டால் விளக்கு எரிய முடியும். எதனாலோ இதற்கு முன்னால் இருந்தவர்கள் போடவில்லை. இலாபம் வராது என்பதற்காக செய்திருககலாம். அப்பகுதிகளுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க சர்க்காரும், குழுவும் கட்டாயப்படுத்த வேண்டும் இல்லாவிடில் ஹரிஜன நல இலாகா நிதியில் இருந்தாவது ஒரு தொகையை ஒதுக்கி சேரிகளுக்கு மின்சக்தி கொடுக்க முன்வர வேண்டும். வீடுகளுக்கு விளக்கு போட்டுக் கொள்ள அவர்களுக்கு வசதியில்லை. தெருக்களிலாவது அவர்களுக்கு விளக்கு போட்டுக் கொடுக்க ஹரிஜன நல இலாகாவோ அல்லது சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களோ உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இனி போடுகிற எல்லாக் கிராமங்களுக்கும் ஹரிஜன சேரிகளுக்கு மின்விளக்கு கொடுத்தால்தான் குடியானவர் தெருக்களுக்கு போடலாம் என்ற நிபந்தனை இருந்தால் நல்லது. இப்போது ஒரு புது விதி வைத்திருக்கிறார்கள். ஊராட்சிமன்றங்கள் விளக்குகள் போட்டுக் கொண்டால் பணம் கட்டாமல் விட்டு விடுவார்களோ என்று ஆர்.டி.ஓ. அனுமதி தேவை என்று புது விதி இருப்பதாக அறிகிறேன். அவர்கள் சர்ட்டிபிகேட் வந்த பிறகுதான் போட வேண்டுமென்று இருப்பதாக அறிகிறேன். ஆகவே மற்றவைகளுக்குள்ள நிதியை குறைத்து மின் விளக்குகளுக்கு எக்ஸெம்ஷன் கொடுக்குமாறு அவர்களை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத் துறை மிக நல்ல முறையில் இயங்க பணியாற்றுகிறவர்களுக்கு உதவிகள் செய்வதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டியதை விரைவில் அமுல் படுத்துவோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இந்த அறிக்கையில். உடனே அதை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சி. பொன்னுசாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சபை முன் வைக்கப்பட்டிருக்கும் மின்சார போர்டின் 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற

விரும்புகிறேன். நம் மாநிலம் வேகமாக எல்லாத் துறைகளிலும் முன்னேறுவதற்கு, குறிப்பாக விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும் வேகமாக முன்னேறி இம்மாநிலதிற்கு புகழைத் தேடித்தந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் இந்த இலாகாதான் என்று சொன்னால் மிகையாகாது. அந்நிலையில் இன்று அவ்வளவு வளர்ச்சி அடைந்து வருவதற்கு அவர்கள் பல நிறுவனங்களை நல்ல முறையில் கையாண்டு வருகிறார்கள். சமீபத்தில் ஏற்பட்டதைப் போன்று பற்றாக்குறை ஏற்படுவதானால் அதைக் கட்டுப்படுத்த புதிய முறைகளைக் கையாள வேண்டுமென்று திட்டமிட்டிருப்பதை வரவேற்கிறேன். அனல் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்றும், குறிப்பாக ஹோகெனக்கல் திட்டத்தை சீக்கிரமாக கொண்டு வர வேண்டுமென்றும், அதோடு சென்னையில் மகாபலிபுரத்தில் அணுசக்தி மின் நிலையத்தை சீக்கிரம் கொண்டு வரவேண்டுமென்றும் அதற்காக பலமான ஏற்பாடுகள் செய்து வருவதை வரவேற்று அவர்களைப் பாராட்டுகிறேன். மின்சாரக் குறைவு ஏற்படாமல் இருக்கவும், விவசாய மக்களுக்கு கஷ்டங்கள் ஏற்படாமல் இருக்கவும் நான் முக்கியமாக சொல்வது அனல் மின்சாரத்தை எங்கெங்கெல்லாம் சீக்கிரமாக அதிகப்படுத்த முடியுமோ அங்கங்கே அதை சீக்கிரமாக அதிகப் படுத்தவேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அனல் மின்சாரத்தோடு, அணுசக்தி மின்சாரத்தையும் அதிகப்படுத்தினால் நலமாகயிருக்கும். அதற்கு முதல் இடம் கொடுத்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற மாநிலங்களை விட நம் மாநிலத்தில் இதற்கு முதல் இடம் கொடுத்து அதிகப்படியாக செலவு செய்யப்படுகிறது என்பதை நினைக்கும்போது என் மனம் மகிழ்ச்சி அடைகிறது. 1972-ம் ஆண்டு முடியும்போது 2,000 மெகா வாட்ஸ் மின்சார உற்பத்தி ஏற்படும் என்று எதிர்பார்க்கிறார்கள். அப்போது பற்றாக்குறை இருக்காது என்று எதிர்பார்க்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, அவர்களுடைய நிலையைப்பற்றி பார்க்கும் பொழுது அவர்கள் வியாபாரத்திலே பெரிய நிபுணர்கள் என்று தெரிகிறது. வியாபாரத் துறையில் பெரிய நிபுணர்கள் கூட இவ்வளவு விசேஷமாக லாபம் பார்க்க முடியாது. சுமார் ரூ. 10,63,00,000 ரிசர்வ் பண்டு வைத்திருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல. மத்திய சர்க்கார், நம்முடைய மாநில சர்க்கார், மைசூர் ஆந்திர சர்க்கார் பாண்டு மூலம் சுமார் ரூ. 8,82,00,000 போட்டு வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்பொழுது அவர்களுடைய திறமையை நாம் பாராட்டவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட வரையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தூத்துக்குடியில் ஆழ்கடல் துறைமுக வேலை வெகு வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறது. ஒன்பது மாதங்களில் தட்டப்பாறை வரையில் 8 மைல் நீளத்திற்கு ரயில்பாதை போடப்பட்டிருக்கிறது. ஆனால்,





இன்னும் இந்த நகரத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லாமல் இருக்கிறது. பல கிராமங்களிலிருந்து கச்சா பொருள்கள் நகரத்திற்கு வரவேண்டிய நிலைமை இருக்கிறது. தூத்துக்குடி துறைமுகத்தின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, நகரத்தைச் சுற்றி பல சாலைகள் அமைக்கவேண்டுமென்பதற்காக ரூ. 90 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். பல துறைகளிலும் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதி வேகமாக முன்னேறிக் கொண்டு வருகிற நிலைமையில், திருநெல்வேலி-தூத்துக்குடி எலக்டிரிசிடி கம்பெனியையும் கலந்துகொண்டு, போர்டார் என்னென்ன கிராமங்களுக்கு மின்சாரவசதி செய்து கொடுக்கவேண்டும், கம்பெனியார் என்னென்ன கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதற்கு உடனடியாக திட்டம் வகுத்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் கலந்து கொண்டு, இந்தப் பகுதியில் ஒரு கிராமம் கூட மின்சார வசதி பெறாமல் இல்லை என்ற நிலை ஏற்படும்படிச் செய்ய, துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அல்லிகுளம், தேட்சலாபுரம், முள்ளக்காடு, முத்தையாபுரம் போன்ற இடங்களில், விவசாயிகள் பம்ப்பு செட்டுகள் வேண்டுமென்று ஒன்றிரண்டு வருஷங்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், இருந்தும் அவர்களுக்கு மின்சார வசதி கிடைக்கவில்லை. ஆகவே, அவர்களுக்கு துரிதமாக மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும்.

மின்சார போர்டார் தங்கள் சிப்பந்திகளுக்கும், ஆபீசர்களுக்கும், ஊழியர்களுக்கும், நல்ல முறையில் ஒரு திட்டம் வகுத்திருப்பதாக நான் தெரிந்து மகிழ்ச்சி அடைகிறேன். சிப்பந்திகளுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும், எல்லோருக்கும் நிரந்தரமான முறையிலே வாழ்க்கைக்கு வசதி அளிக்கக்கூடிய நிலைமையில் ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கவேண்டும். ஏனென்றால், போர்டார் கோடிக் கணக்கான ரூபாய்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் நிலைமையை மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படக்கூடிய அளவில் இருக்கிறது. ஆகையால் போர்டாரை குறை சொல்லமுடியாத அளவுக்கு சிப்பந்திகளுக்கு நல்ல முறையில் வசதிகள் செய்து கொடுப்பதற்கு நல்ல திட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, தேசத்தின் பாதுகாப்பிற்காக எந்தத் தொழில் செய்யப்பட்டாலும், அந்தத் தொழில்களிலெல்லாம் குறைந்த பட்ச கட்டண விகிதம் ஏற்படுத்தவேண்டும், அப்படி ஏற்படுத்தினால் மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை மனமாற வரவேற்று, பாராட்டி, வாழ்த்தி, ஆதரிக்கிறேன் என்று கூறிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. து. ப. அழகமுத்து**: கனம் தலைவர் அவர்களே, நமது மாநிலம் பெருமைப்படத்தக்க அளவில் பணியாற்றி வருகிற மின்சார போர்டு நிதிநிலை அறிக்கையின் மீது சில வார்த்தைகள் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நமது மாநிலத்தில் இப்பொழுது அதிகரித்து வருகிற தேவையை அனுசரித்து, மின்சார உற்பத்திக்கு

[திரு. து. ப. அழகமுத்து] [10th August 1963

எப்படியெல்லாம் வழி வகைகளைத் தேடமுடியும் என்பதை ஆராய்ந்து அறிந்து, அதற்கான நடவடிக்கைகளை நல்ல முறையில் போர்டார் எடுத்து வருவதை நான் நேரில் காண்கின்ற சில வாய்ப்பு பெற்று, உள்ளபடியே அதில் பெரு மகிழ்ச்சி அடைந்தேன். இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மின்சார உற்பத்தியின் அளவு முதலாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பக் காலத்தில் எவ்வளவு இருந்தது என்பதைப்பற்றியும், இப்போழுது எவ்வளவு இருக்கிறது என்பதைப்பற்றியும் மந்திரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல் ஐந்தாவது திட்ட ஆரம்ப காலத்தில் இருந்ததைப் போல தற்பொழுது 6 மடங்கு உற்பத்தி அதிகமாக ஆகியிருக்கிறது என்று அந்தக் கணக்கிலிருந்து தெரியவருகிறது. மொத்த உற்பத்தியில் 25 சத விகிதம் விவசாய காரியங்களுக்காக பயன்படுத்தப் படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில் தொழில் துறைக்காக எவ்வளவு சத விகிதம் உபயோகப்படுத்தப்படுகிறது, மற்ற வகையில் விளக்குகள் எரிப்பதற்காக எவ்வளவு மின்சாரம் செலவாகிறது என்பதையும் குறிப்பிட்டிருந்தால் நலமாக இருக்கும். உற்பத்தியாகின்ற மின்சாரத்தை உபயோகப் படுத்துகின்றவர்களின் தொகை முன்பிருந்ததைவிட இப்பொழுது நான்கு மடங்கு அதிகமாக இருக்கிறது. அதேபோல மின்சாரத்தினால் பயன் பெற்றிருக்கிற நகரங்கள், கிராமங்கள் முன்பு இருந்ததைப் போல் இப்பொழுது 8 மடங்கு அதிகமாக ஆகியிருக்கிறது. முன்பு பம்ப்பு செட்டுகள் இருந்ததைப்போல் இப்பொழுது 11 மடங்கு அதிகமாக இருக்கிறது. இவைகளெல்லாம் பெருமைப் படக்கூடிய விஷயம்தான். ஆனால் அதே சமயத்தில் கிராமங்களுக்கு அதிகமாக மின்சாரம் கொடுத்திருக்கிறோம் என்று கணக்குக் காட்டுகிறபொழுது, மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், வெறும் எண்ணிக்கைகளைக்கை மட்டும் அதிகப்படுத்திக்கொண்டு போனால் பிரயோசனம் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிடுவதற்கு விரும்புகிறேன். ஏனென்றால், கிராமங்களுடைய பூரண தேவையை உணர்ந்து, அறிந்து அதற்குத் தகுந்த மாதிரி முழு அளவிலே மின்சாரம் கொடுப்பதில்லை. அங்கு ஒன்றும், இங்கு ஒன்றுமாக லைட்கள் போட்டு, கணக்குத் தொகை அதிகமாக காட்டப்படுகிறதே தவிர, பூரணமாக அவர்கள் தேவையை பூர்த்தி செய்வதில்லை. அவற்றையெல்லாம் கவனித்து, அந்தக் குறையைப் போக்கி, கிராமங்களின் முழுத் தேவைக்கான மின்சார வசதியை செய்துகொடுக்கவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல பம்ப்பு செட்டுகள் வைக்கவேண்டும் என்று விவசாயிகள் அதிகமாக மனுக்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகப்படியான கனெக்ஷன் கொடுப்பதற்கு இந்த ஸ்தாபனத்தார் இன்னும் அதிகமான முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதுபோல், என்னுடைய தொகுதியிலே சர்க்கார் மின்சார ஸ்தாபனமும் செயல்படுகிறது. அதே சமயத்தில் தென் மதராஸ் மின்சார சப்ளை ஸ்தாபனமும் பணியாற்றுகிறது. அந்தக் கம்பெனியாரிடம் இருந்த பல பகுதிகளை



10th August 1963] [திரு. து. ப. அழகமுத்து]

இப்பொழுது சர்க்கார் ஏற்றுக்கொண்டு அவற்றை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் சிலவற்றிற்கு S.M.E.S. பிரையாரிடி லிஸ்டு பிரகாரம் சீக்கிரம் மின்சாரம் கொடுக்கக் கூடியநிலை இருந்து வந்தது. அவர்கள் அந்தப் பகுதிகளுக்கு இது வரை மின்சாரம் கொடுக்காததற்கு காரணம் சர்க்கார் கடன் கொடுக்காததினால்தான். அதனால் அந்தப் பகுதிகளுக்கு நாங்கள் மின்சாரம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம் என்று இதுவரை கூறிக்கொண்டு வந்தார்கள். அந்தக் கிராமங்களை இப்பொழுது சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற நிலையில், இன்னும் அவைகள் பிரையாரிடி லிஸ்டை எட்டிப் பிடிப்பது என்றால் மிகவும் காலதாமதம் ஆகும். முன்பே மின்சாரம் தேவைப்படுகிறது என்று மனுச் செய்துகொண்டும் இதுவரை கிடைக்காமல் இருந்த கிராமங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அவைகளுக்கெல்லாம் உடனடியாக மின்சார வசதி செய்து தருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். டி. ரெங்கநாதபுரம், செல்லிப்பாளையம், மருவத்தூர், கண்ணனூர் ஆகிய கிராமங்கள் முன்பே மனு செய்து கொண்டும் மின்சாரம் கிடைக்காமல் இருப்பதால், அவைகளுக்கு உடனடியாக மின்சார வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் மின்சார போர்டால் மின்சாரம் வழங்கப்படுகின்ற பல பகுதிகளில் அவர்கள் தேவைக்கு தகுந்தமாதிரி இன்னும் மின்சார வசதி கிடைக்கவில்லை. களரம்பட்டி, அம்மாபாளையம், லாடபுரம், ஆகிய ஊர்களுக்கும் வெங்கலம் தொகுதியிலும் இன்னும் போதுமான அளவுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. இப்பகுதியிலுள்ள விவசாயிகள் மேலும் மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று இந்த இலாகாவினரை அணுகினால், அவர்களுக்கு இலாகாவினர் சரியான பதில் கூறுவதில்லை என்ற புகார் என்னிடம் வந்திருக்கிறது. சாதாரணமாக புகார் வந்தாலும் அதை அலட்சியப் படுத்திவிடலாம். ஆனால், ஒரு பஞ்சாயத்து போர்டு தலைவர், எனது தொகுதியில் இருக்கிற மின்சார நிறுவனத்தின் உத்தியோகஸ்தர்களை அணுகினால், அவர்கள் மதியாமல் பேசுகிறார்கள் என்று எனக்கு ரிபோர்ட்டு அனுப்பியிருக்கிறார். "விவசாயிகளும் மனிதர்கள் தான்" என்று போர்டிலுள்ள அதிகாரிகள் உணர்ந்து நடக்கவேண்டுமென மின்சாரத்துறை தலைவர் அவர்களுக்கும் ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார். அம்மாதிரி நடைமுறையில் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் நடந்துகொள்ளாமல் இருப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

புலவர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இந்தத் துறையிலே பல பகுதிகள் இருக்கின்றன. எது எது, எப்படி எப்படி என்பதைத் தெரிந்து கொள்வதற்கு விவசாயிகளுக்கு முடிவதில்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளியில் இந்த டிபார்ட்மெண்டின் பல பகுதிகள் பல வேறு இடங்களில் இருக்கின்றன. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போவது என்றால், ஒரு மைல்

தூரம் சென்றால் தான் அந்த இடத்திற்குப் போக முடியும். ஆகவே, இந்த டிபார்ட்மெண்டின் பிரிவுகளெல்லாம் ஒரே இடத்தில் அமையக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டால் நலமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, எனக்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்:** கனம் தலைவர் அவர்களே, சபை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கும் மின்சார போர்டின் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் நாம் எவ்வளவுதான் மின்சாரம் உற்பத்தி செய்தாலும் கூட, அது பற்றாக்குறையாக இருந்துக்கொண்டே இருக்கிறது. காரணம் என்னவென்றால், விவசாயத்திற்கு மின்சாரம் அதிக அளவிலே தேவைப்படுகிறது. அது போன்று தொழிற்சாலைகளுக்கும் அதிக அளவிலே தேவைப்படுகிறது. நமது அமைச்சர் அவர்கள் பேசுகின்ற பொழுது, இந்தத் தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்யக் கூடிய அளவிலே திட்டங்கள் வகுத்திருக்கிறோம், அவற்றை விரைவிலே நிறைவேற்றி ஆக வேண்டுமென்று கூறினார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் இன்றைக்கு விவசாயத் துறையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக, கிட்டத்தட்ட 2 லட்சம் பம்ப்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்க இருப்பது மிகவும் வரவேற்கத்தக்க அம்சம். அப்படிப் பம்புச் செட்டுகள் கொடுக்கும்போது, மூன்று ஏக்கர் அல்லது ஐந்து ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு 3 குதிரைத் திறன் மோட்டார் தேவைப்படுகிறது என்றால், இலாக்காவிலே உள்ளவர்கள் 5 குதிரைத் திறன் எடுத்துக் கொண்டால்தான் கொடுப்போம் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி யார் யாருக்கு எவ்வளவு குதிரைத் திறன் வேண்டுமோ—5 குதிரைத் திறன் மோட்டார் கேட்டால் அதையும் அல்லது 3 குதிரைத் திறன் மோட்டார் கேட்டால் அதையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் விவசாயிகளுக்கு நல்ல சலுகைகளை செய்து கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு சில அங்கத்தினர்கள் ஏதோ எண்ணிக்கை அளவிலேதான் முன்னேற்றம் இருக்கிறது என்று கூறினார்கள். மற்ற மாநிலங்கள் வியக்கத்தக்க அளவிற்கு, எதிர்க் கட்சியினர் உள்ளூர வரவேற்கக் கூடிய அளவிற்கு, இன்றைக்கு மின்சாரம் மின்னல் வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இந்தியாவில் இருக்கிற அத்தனை மக்களும் அறிந்த உண்மை இது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சுமார் 17 கிராமங்களுக்கு இன்னும் மின்சாரம் வரவில்லை. அந்த மாதிரி வரவில்லை என்றால் அதற்காக அந்த இலாக்காவை நான் குறை கூறவில்லை. சேங்ஷன் ஆகி இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன. அப்படி இருந்தும் இன்னும் மின்சாரம் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அதற்குக் காரணம் பம்ப்பு செட்டுகள்



வைப்பதற்கு கிணறுகள் போதுமான ஆழத்தில் இல்லை என்று சொல்லுகிறார்கள். சில ஊர்களுக்கு மின்சாரம் கொடுத்தால் லாபகரமாக இருக்காது என்ற நிலைமையும் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு என்னுடைய தொகுதியிலே விராலிப்பட்டி ஸ்கீம், பாலமேடு ஸ்கீம், ஆகிய திட்டங்கள் போட்டு சேங்ஷன் ஆகி இருக்கிறது. நல்ல விவசாயம் செய்யக்கூடிய வகையில் சிலர்கள் இருக்கின்றனர், நல்ல மண் வளம் இருக்கிறது. ஆனால் அந்தப் பகுதி மக்கள் பம்ப்புச் செட்டுகள் வாங்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட பகுதி மக்களுக்கு அரசாங்கம் முன் வந்து தாராளமாக கடன் கொடுப்பதற்கு அதிகப்படியான பணத்தை ஒதுக்கவேண்டும். கனம் மின்சார அமைச்சர் அவர்கள் இதை நிதி அமைச்சர் அவர்களிடத்திலே கூற வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லுகிறேன். இந்த மாதிரி கிராமங்களுக்கு பம்ப்புச் செட்டுகள் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்பட்டாலும், தெரு விளக்குகள் போடுவதிலே காலதாமதம் ஏற்படக்கூடாது. சம்பந்தப்பட்ட இலக்காக்காவினருக்கு எந்த விதமான இலாபத்தையும் எதிர் பார்க்காமல் தெரு விளக்குகளைப் போட வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பித்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். சில இடங்களிலே வீடுகளுக்கு மின்சாரம் கொடுப்பதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில், இருளைப் போக்கி ஒளியைக் கொடுப்பதற்கும், இரவு நேரங்களில் கிராம மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவதற்கும் தெரு விளக்கையாவது போட்டுக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஹரிஜன மக்கள் வாழாத பகுதியே கிடையாது. சில இடங்களிலே ஜாதி இந்துக்கள் இருக்கும் இடங்களுக்கு மின்சார விளக்குகள் போட்டிருக்கிறார்கள். ஆனால் ஹரிஜனங்கள் வாழக் கூடிய பகுதிகளிலே விளக்குகள் கிடையாது. "நீங்கள் ஹரிஜன எம்.எல்.ஏ.-வாக இருந்தும் ஏன் விளக்கு போடவில்லை" என்று என்னைக் கேட்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவரைக் கேட்டால், நாங்கள் எழுதி அனுப்பியிருக்கிறோம், சேங்ஷன் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே எங்கெங்கே எல்லாம் ஹரிஜனச் சேரிகள் இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளுக்கு முதலாவதாக மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும். ஹரிஜனங்களுக்கு கட்டிக் கொடுத்திருக்கும் காலனிகளாக இருந்தாலும் சரி, அல்லது சேரிப்பகுதிகளாக இருந்தாலும் சரி, விளக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கனம் மின்சார அமைச்சர் அவர்களையும் கனம் ஹரிஜன இலாக்கா அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன். சேரிப் பகுதிகளில் வாழும் ஹரிஜனங்கள் விளக்கில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். போடித் தொகுதியில் நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கிறது. அதே போன்று திருவண்ணாமலைப் பகுதியிலும் நிலைமை மோசமாக இருக்கின்றது. இப்படிப்பட்டப் பகுதிகளுக்கு மின்சார விளக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது மின்சாரம் வழங்குவதிலே ஒரு குதிரைத் திறனுக்கு ரூ. 35 என்று குறைத்திருப்பது வரவேற்கத்தக்கது. மக்கள் அதை நல்ல முறையில் வரவேற்பார்கள். இதை

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [10th August 1963

மேற்கொண்டு குறைக்க முடியுமா என்பதைப் பற்றியும் அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதுவும் மகிழ்ச்சிக்குரிய அம்சமாகும். இன்னும் சில தாலூக்காக்களிலேயும் குறைப்பதற்கு ஏதுவாக இருக்குமென்று அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். என்னுடைய தொகுதியில் பாலமேடு பிர்கா, விராளிப்பட்டி கிராமம், நிலக்கோட்டையைச் சார்ந்த சுற்று வட்டாரங்கள் ஆகிய பகுதிகளுக்கு இந்த மாதிரி தளர்த்திக் கொடுத்தால் பின் தங்கிய மக்களுக்கு வசதியாக இருக்கும்.

மின்சார தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மதுரை ஜில்லாவில் சுருளியாறு திட்டத்தை பரிசீலனைக்கு எடுத்து இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க அம்சம். அதே போன்று மதுரை ஜில்லாவில் பெரிய குளம் தாலூகாவில் கோடைக்கானல் மலையிலிருந்து மஞ்சள் ஆறு உற்பத்தியாகி தண்ணீர் கீழே விழுந்துக்கொண்டு இருக்கிறது. இங்கேயும் இப்பொழுது ஒரு அணைக் கட்டு கட்ட சேங்ஷன் ஆகி இருக்கிறது. சுருளியாறு திட்டத்தைப் போன்று மஞ்சள் ஆறு திட்டத்தையும் எடுத்துக்கொண்டால் மின்சார உற்பத்தியை சற்று அதிகமாக்குவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது தனியார் தொழில் துறைக்கும் அதிகமாக மின்சார வசதி கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறோம். எங்கள் பகுதியில் ஒருவர்—அவர் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை—ரூ. 40,000 செலவு செய்து, தேவைப்படும் கருவிகளைக் கொண்டு வந்து ஓராண்டு காலம் ஆகிவிட்டது. தொழில் (விவசாயக்கருவிகள்) செய்யக்கூடிய அந்த நபர் அடிஷனல் லோடாக 30 ஹார்ஸ் பவர் கேட்டும் கொடுக்கவில்லை. ரூ. 40,000 செலவு செய்து, இன்னும் மின்சாரம் கிடைக்காமல் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார். தனியார் துறையிலும் சிறு சிறு தொழில்கள் நடத்துவதற்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பெரியாறு பாயக்கூடிய பகுதியில், 100 ஆண்டுகளுக்கு முன்பாகவே கிணறுகள் வெட்டி விவசாயம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பெரியாறுக்கு 2 பர்லாங் தூரத்திற்கு மேலுள்ளவர்கள்தான் பம்பு செட்டுக்கள் வைத்துக் கொள்ளலாம், அதற்குள்ளாக இருப்பவர்கள் பம்பு செட்டுகள் வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு உத்தரவு போட்டிருப்பதாக சொல்லுகிறார்கள். அதைத் தளர்த்தி நான்-இர்ரிகேஷன் சீசனிலாவது மதுரை ஜில்லாவிற்கு மின்சாரம் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை மின்சார அமைச்சர் அவர்களும், மராமத்துத் துறை அமைச்சர் அவர்களும் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதிலும் கூட அலங்காநல்லூரில் இரண்டு பர்லாங்குக்கு உள்ளே இருக்கிற கிணறுகளுக்கு கனெக்ஷன் கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லை. இதைப் பற்றிக் கேட்டால், அங்கேயிருந்து



10th August 1963] [திருமதி எ. எஸ். பொன்னம்மாள்]

பெர்மிஷன் வாங்கியிருக்கிறோம், இங்கேயிருந்து பெர்மிஷன் வாங்கியிருக்கிறோம் என்று சமயநல்லூரில் உள்ள அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகையினால், கனம் அமைச்சரவர்களும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் அதைத் தக்க முறையில் பரிசீலனை செய்து, 1-00 p.m. இந்தப் பெரியாறு கிணறுகளுக்கு, உடனடியாக மின்சாரக் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று ஏழை விவசாயிகள் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில், கீழே இருக்கும் சிப்பந்திகள் சரியாக வேலை செய்யவில்லை என்று புகார் சொல்லப்பட்டன. இந்த இலாகாவில் எந்த கோரிக்கையாக இருந்தாலும், அதிகாரிகளும், மற்றவர்களும் உடனடியாக கவனித்து, துரிதமாக வேலைகள் செய்யப்படுகின்றன. எடுத்த எடுப்பில் வீடுகளுக்கு லைட் போடுவது போன்ற வேலைகள் கிராமங்களில் நடந்து மின்சார வசதி கொடுக்க முடிகிறது. அதற்குக் காரணம் இந்த இலாகா அதிகாரிகளும் சிப்பந்திகளும் ஒத்துழைப்பதால்தான். இங்கே, அங்கே ஒருவர் இருவர் ஏதாவது தவறு செய்தால், அதை மேல் அதிகாரிகளிடம் அங்கே சொன்னால், அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து விடுவார்கள். அதை விட்டு இங்கே சபையில் ஒருவர் இருவர் செய்யும் குற்றங்களை எடுத்துச் சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்கவில்லை. அன்றைக்குச் சொன்னார்களே, 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்று, அந்த மாதிரி இதிலெல்லாம் பார்க்கக் கூடாது; ஒருவர் இருவர் செய்யும் தப்பை வைத்துக் கொண்டு மொத்தமாகக் குற்றம் சாட்டுவது சரியாகாது. சோறு, பதம் எல்லாம் வீட்டில் வைத்துக் கொள்ளவேண்டும். அதிகாரிகளுக்குச் சொன்னால், உடனடியா நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று கூறிக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியதலைத் தெரிவித்துக் கொண்டு, அந்த இலாகாவினரின் திறமையைப் பாராட்டி, என் உரையை முடிக்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஸார், ஆன் எ பாயிண்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்ப்ளநேஷன், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று திருச்செங்கோடு எலெக்ஷன் பற்றிச் சொன்னேனே தவிர, அதிகாரிகளைப் பற்றி சொல்லவில்லை என்பதை அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. மா. இராசாங்கம்:** கனம் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார போர்டின் 1963-64-ம் ஆண்டு வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு மின்சாரத்தோடு சமுதாயம் நெருக்கிய தொடர்பு கொண்டிருக்கும் வேளையில், இந்த அறிக்கையின் பேரில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நீர் மின்சாரம், அனல் மின்சாரம் ஆகிய இரண்டோடு, அணு மின்சாரத்தையும் அடைய நாம் முயற்சிகள் செய்ய இருக்கிறோம். நீர் மின்சாரம் பருவ மழையை எதிர் பார்த்திருக்கிறது. பருவ மழை விவசாயிகளையே சமயத்தில் கை விட்டு விடுகிறது. அது மின்சாரத்தை முன்கூட்டியே கை விட்டு விடும். மேலை நாடுகளில் வேறு

விதங்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகவும், பருவ மழை தவறினாலும் மின்சாரத்தை ஈடு செய்ய முடியும் வகையில் செய்வதாகவும் தெரிகிறது. நாம் பருவ மழையையே நம்பி இருப்பதால், நாம் எவ்வளவு திறமை காட்டினாலும் அவ்வளவையும் மீறி கட்டுபாடு ஏற்படுத்தவேண்டிய நிலைமை வருகிறது. ஆகவே, மின்சாரத்தைத் தயார் செய்யும் முறைகளை சற்று மாற்றி பலவழிகளில் தயார் செய்து விஸ்தரித்தால் செலவும் சிக்கனமாக இருக்கும், மின்சாரமும் கூடுதலாகக் கிடைக்கும். சொல்லுவார்கள்

"One form of energy can be converted into another form" "Law of conversion of energy" Light-Heat-Sound-Magnetism-Atom-water.

நாம் நீர் மின்சாரத்தையும், அனல் மின்சாரத்தையும் மட்டும் நம்பி இருக்கிறோம். 1958-ம் ஆண்டில் பேராசிரியர் அன்பழகன் கூறி இருக்கிறார்கள், அதையே மறுபடியும் கூற விரும்புகிறேன். உண்மையிலேயே கூவம் நதிப் பக்கம் போகும் போது நாம் மூக்கைப் பிடித்துக்கொண்டு போகிறோம். ஆனால், ஒரு அமெரிக்கப் பெரியார், கூவத்தைக் கண்டு மூளையைச் செலவழித்தார் "இந்தக் கழிவு நீரால் மின்சாரத்தை உண்டு பண்ண முடியுமானால், அதனால் நமக்கு இரட்டை லாபம் ஏற்படும்; கழிவு நீரால் மின்சாரம் கிடைக்கும், அதோடு இணைந்ததாக நாற்றத்தைப் போக்க முடியும், அந்தக் கழிவிலிருந்து உப பொருளாக உரப் பொருள் கூடக் கிடைக்கும்," என்று சொன்னார்கள்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்த நிபுணர் யார் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மா. இராசாங்கம்:** அதைப் பற்றி விளக்கத்தை நாளையே நான் நேரிடையாக சமர்ப்பிக்கிறேன். இந்த கழிவு நீரிலிருந்து மின்சாரம் எடுப்பதைப் பற்றி ஏன் சொல்லுகிறேன் என்றால், இன்றைக்கு ஒரு நகரத்திற்கு மின்சாரம் வேண்டுமென்றால் 100 200 மைலுக்கு அப்பாலிருந்து கொண்டு வரவேண்டி இருக்கிறது. ஒவ்வொரு நகரத்திலும் சாக்கடைத் திட்டம் இருக்கிறது. சாக்கடை நாற்றமும் அதிகமாக இருக்கிறது. நகரங்கள் நரகங்களாக ஆகிவிடுகின்றன. ஆகவே, அந்த சாக்கடை நீரைக் கொண்டு மின்சாரத்தை எடுத்துக் கொள்ளலாம். அப்படி ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடையலாம். அப்படி ஒரு வாய்ப்பு இருக்கும்போது, அதைச் செய்தால் அதனால் நமக்கு லாபமும் உண்டு. மேலும் ஒவ்வொரு நகரத்திலும் சாக்கடைத் திட்டங்கள் இருக்கின்றன; மின்சாரமும் வேண்டியிருக்கிறது. வேண்டிய மின்சாரத்தை அவரவர்களே உற்பத்தி செய்து கொள்ள ஏற்பாடு செய்யலாம். மேலும் நீர் மின்சாரத்தை அதிக தூரத்திலிருந்து கொண்டு வரவேண்டி இருக்கும்போது நிறைய வேஸ்டேஜ் ஏற்படுகிறது என்றும், குறைந்தது 3 சதவிகிதம் குறைவு ஏற்படுகிறது என்றும், மேல்வாரியாக கம்பங்களில் கம்பி வருவதால் அதிகக் குறைவு ஏற்படுகிறது என்றும், இதையே தரையில் உள்மார்க்கமாகக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று தெரிகிறது. முதலில் செலவு





கொஞ்சம் கூடுதலாக ஆனாலும், மின்சக்தி வேஸ்ட் ஆகாமல் இருக்கும். பிற்பாடு செலவு குறையும். ஆகவே பூமிக்கு அடியில் லைன்களைப் போட அரசாங்கம் இனிமேல் முன்வரவேண்டும்.

இதே சந்தர்ப்பத்தில், பெரியாறு மின்சார திட்டம் சம்பந்தமாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். பெரியாறு மின்சாரத் திட்டம் ரூ. 10½ கோடி அளவில் திட்டமிட்டு, அதை 9½ கோடியில் நிறைவேற்றித் தந்தார்கள், லாபத்தையும் சம்பாதித்துத் தந்தார்கள். வெற்றிகரமாக முடித்தார்கள். அந்தத் திட்டத்தில் இரண்டு குழாய்கள் இருக்கின்றன. மூன்றாவது குழாய் வேலை நடக்கிறது. அதே பாதையில் இண்டர்-ஸ்டேட் ரோடும் போகிறது. அந்த ரோடு மார்கத்தில் லாரிகள் போகிறதனால், அந்தக் குழாய்களுக்குத் திடீர் சேதம் ஏற்படலாம். லோயர் காம்ப் பெரியாறு பவர் ஹவுசில் திடீரென்று ஏதாவது ஏற்பட்டு விட்டால், செலவு செய்த 9½ கோடி ரூபாயும் நஷ்டமாகி விடும். ஆகவே, அந்தப் பக்கத்தில் மலையில் பாதை போட்டு, இருக்கும் ரோட்டை மாற்றி, லோயர் காம்ப் மின்சக்திக்கு தண்ணீர் வரும் குழாய்களுக்கு ஆபத்து ஏற்படாமல், நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அப்படி செய்வது அரசாங்கத்திற்கும் சற்று லாபமாகத்தான் இருக்கும்.

பெரியாறு திட்டத்தின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதில், அங்கு சுற்றுப் புறத்திலுள்ள கிராமங்கள் நல்லபடியாக உதவி அளித்திருக்கின்றன. அப்படி நல்ல உதவி அளித்தவர்களுக்கு, என் பகுதியை பொருத்தமட்டில் அரசாங்கம் அகல் விளக்காக எரிகிறது. அகல் விளக்கு சுற்றுப்புறத்திற்குத் தான் வெளிச்சம் கொடுக்கும், அதனுடைய அடிப்பாகம் இருட்டாகத்தானிருக்கும் அது போல் மின் உற்பத்தி செய்யும் லோயர் கேம்ப்பின் அடிதொட்டு கிடக்கிற கிராமங்கள் இருட்டாகவும் இருக்கும். அவர்கள் கிராமங்களில் மின்சாரமே இல்லை. மின்சார அமைப்பிலிருந்து திடீர் திடீரென்று வேண்டுகோள் வரும் 1,000 ஆட்கள் தேவை, 1,500 ஆட்கள் தேவை என்று திட்ட வேலைகளுக்குத் தடங்கல் இல்லாமல், அவ்வப்போது அந்தக் கிராமங்கள் ஆட்களை ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது. அப்படி உதவி செய்த கிராமங்களுக்கு, குள்ளப்பன்பட்டி, புத்தம் பட்டி, அப்பிப் பட்டி கருநாக்கமுத்திதேவன் பட்டி முதலிய மூன்று, நான்கு கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதாக அமைச்சர் வாக்குறுதி கொடுத்திருந்தும், அதிகாரிகள் அதைக் கவனிக்கிறோம் என்று சொல்லும் நிலையில் தான் சொல்லில்தான் இருக்கிறது. 'பார்க்கலாம்' என்ற நிலை வராமல், "செய்கிறோம்" என்ற நிலைக்கு வந்தால் மிக்கப் பாராட்டக் கூடியதாக இருக்கும். அதே நேரத்தில் இந்த மின்சாரத்தின் காரணமாக அங்கு ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. எப்படிப்பட்ட ஆபத்துக்கள் என்றால் லோயர் காம்பிலிருந்து ராஜபாளையத்திற்கு மலை வழியாக மின்சாரம் செல்லுகிற நோக்கில் மலையில் மரங்கள் வெட்டப்பட்டிருந்தாலும், மேல் பகுதியில் இருக்கும் மரங்கள் சரிந்து விழ ஏதுவாக இருக்கிறது. ஆகவே பெரிய சேதாரத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை இருப்பதால்

அவைகளை கவனித்து வந்தாலும் லோயர் காம்ப்பில் சரிவுகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. அவ்வப்போது வேலைகள் நடந்துக்கொண்டிருந்தாலும் பூர்த்தியாகாமல் இருக்கிறவைகளைப் பூர்த்தி செய்து மேலே இருக்கிற ரோடுகளை மாற்றி அமைத்தால் அரசாங்கத்திற்கும் மின்சார போர்டுக்கும் லாபமாக இருக்கும் என்று கூறி எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* திரு. ஆ. தங்கவேலு : கனம் சட்ட மன்ற தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டின் மின்சார இலாகா மான்யத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மின்சார இலாகா மிகவும் சிறந்த முறையில் பணியாற்றுகிறது என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்களும், எதிர் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் பாராட்டி பேசினார்கள். குறிப்பாக மின்சார போர்டின் தலைமையில் உள்ள திறமை வாய்ந்த தலைவர் அவர்களும், தலைமை என்ஜினீயர் அவர்களும், அவர்களுக்குக் கீழே உள்ள பணியாளர்களும் மிகவும் சுறுசுறுப்பாகவும், திறமையாகவும் பணியாற்றுவதால் தான் இவ்வளவு சிறந்த பாராட்டுதலை எல்லோராலும் பெற முடிந்தது. சர்க்கார் இலாக்காக்களில் எல்லோராலும் பாராட்டப்படக் கூடிய இலாகா ஒன்று இருக்கிறது என்றால் அது இந்த மின்சார இலாகாதான். அந்த அளவுக்கு கீழே இருக்கிற—மாவட்டத்திலே அல்லது அதற்குக் கீழே இருக்கிற பகுதியிலுள்ள மின்சார இலாகா சிப்பந்திகள் அவர்களைப் போல கூடுமான அளவு சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் பணியாற்றினால் இங்கே குறிப்பிட்ட குறைபாடுகள் இல்லாமல் அதிக அளவுக்கு நல்ல பெயரை பெற வசதியாக இருக்கும். குறிப்பாக கிராமப் பகுதிகளில் மின்சாரம் தேவை என்று விண்ணப்பம் போட்டால் கீழே உள்ள, மாவட்ட அல்லது டிவிஷனல் என்ஜினியர் ஆபீஸிலே அல்லது மற்ற இடங்களிலே 6 மாதம், 9 மாதம் அல்லது ஒரு வருஷம் என்று வருஷக் கணக்கில் கூட தங்கி விடுகிறது. அதே பேப்பர் தலைமை அலுவலகத்திற்கு வந்தால் இரண்டு வாரத்தில் திரும்பிப் போய் விடுகிறது. அந்த அளவு அங்கே குறை காணப்படுவதற்கு, கீழே உள்ளவர்கள் சுறுசுறுப்பாக, சிரத்தையாகப் பணியாற்றாததுதான். தலைமையில் உள்ளவர்கள் இந்தக் குறைபாடு நீங்க வேண்டுமானால், இவ்வளவு காலத்திற்குள்ளாக, இவ்வளவு நாட்களுக்குள்ளாக, அதாவது 15 நாட்களுக்குள்ளாக அல்லது ஒரு மாதத்திற்குள்ளாக அதை கவனித்து அவர்களுக்கு பதில் கொடுக்கவேண்டும் என்று நியதியை உண்டாக்கும் வகையில் தலைமையில் உள்ள தலைவர் அவர்களும், தலைமை என்ஜினீயர் அவர்களும் அதில் கவனம் செலுத்தவேண்டுமென்று அவர்களை நான் இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கிராமப் பகுதியில் மின்சாரம் கொடுப்பதில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக இந்த பஞ்சாயத்து யூனியன்களில் அநேக இடங்களில், மின்சாரம் இல்லாத பகுதிகளுக்குக் கூட மின்சாரம் உபயோகப்படுத்தக் கூடிய, பாட்டரியில் உபயோகப் படுத்தக் கூடியதல்லாத ரேடியோக்களை வாங்கிக் கொடுக்கிறா



கிறார்கள். அதிலே குறிப்பாக ஓலக்கூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள கிராமங்களுக்கு மின்சாரத்தில் உபயோகப்படுத்தக் கூடிய ரேடியோக்களை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அநேக கிராமங்களில் மின்சாரம் இல்லாத காரணத்தினால் இரண்டு, மூன்று ஆண்டுகள் கூட ரேடியோக்களை உபயோகப்படுத்த முடியாமல் அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மின்சாரம் வரும், வரும் என்று அவர்கள் காத்துக்கொண்டிருந்தது, விண்ணப்பம் போட்டுவிட்டு காத்துக் கொண்டிருக்கவேண்டிய நிலையில் ரேடியோக்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில் கீழ்சேவூர் என்ற ஊரில் மின்சாரத்தில் உபயோகப்படுத்தக் கூடிய ரேடியோ கொடுத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு தலைவர் தீர்மானம் போட்டும், பஞ்சாயத்து யூனியனுக்குச் சொல்லியும், மின்சார இலாகாவைச் சேர்ந்த அச்சரப்பாக்கம் உதவி என்ஜினீயரிடம் கேட்டும், 1½ ஆண்டுகாலமாகக் மின்சாரம் கிடைக்காததால் அவர்கள் வருத்தப்பட்டுக் கொண்டார்கள். நான் 6 மாதங்களுக்கு முன் அச்சரப்பாக்கம் உதவி என்ஜினீயரைச் சந்தித்துக் கேட்டேன். அவர்கள் சீக்கிரம் செய்து விடுவதாகச் சொன்னார்கள் அதற்குப் பிறகு இரண்டு முறைகள் கேட்டுக் கொடுப்பதாகச் சொன்னார்களே தவிர கொடுக்கவில்லை. மக்களுக்கு குறை என்ன என்றால், இது நெருக்கடியான சந்தர்ப்பம், யுத்தச் செய்திகளைக்கூட கேட்க வசதியில்லையே என்பதுதான். அதனால்தான் அவர்களும் வற்புறுத்திச் சொன்னார்கள். அதன் மீது அச்சரப்பாக்கத்திற்குச் சென்று சொல்லியும் கவனிக்கவில்லை. வேறு வழியில்லாமல் தலைமை என்ஜினீரிடம் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு சென்ற மார்ச் மாதம் பட்ஜெட் கூட்டத்தின் போது சொன்னேன். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் உத்தரவு அனுப்பினார்கள். அதன் பிறகு அச்சரப் பாக்கத்தில் இருக்கிற சூபர்வைசரும், உதவி என்ஜினீரும் கீழ்சேவூருக்குப் போய் பஞ்சாயத்துத் தலைவரையும் மற்றவர்களையும் கூப்பிட்டு, மின்சாரம் இரண்டு நாட்களுக்குள் கிடைக்கவேண்டுமானால் உடனே ஒரு விண்ணப்பம் எழுதிக் கொடுங்கள் என்று கேட்டார். நாங்கள் எழுதிக் கொடுத்து எத்தனையோ மாதங்கள் ஆகின்றன, எல்லா வேலையும் முடிந்து விட்டதாகச் சொன்னீர்கள், இப்போது புதிதாக விண்ணப்பம் கேட்கிறீர்களே என்று கேட்டார்கள். விண்ணப்பம் தொலைந்து விட்டது, உள்ளபடியே, மின்சாரம் கிடைக்க வேண்டுமானால் இன்னும் இரண்டு நாளில் ஏற்பாடு செய்கிறோம், எழுதிக் கொடுங்கள் என்று சொன்னார்கள். கிராம வாசிகள்தானே, நம்பி, அதிகாரிகள் சொல்லுகிறார்கள் என்று புதியதாக எழுதிக் கொடுத்தார்கள். அவ்வளவு தான் சமாசாரம். மாதங்கள் 6 ஆயிற்று. இன்னும் கொடுக்கவில்லையே என்று கேட்டால், இப்போது தானே விண்ணப்பம் கொடுத்திருக்கிறீர்கள் எங்கேயிருந்து கிடைக்கும் இவ்வளவு சீக்கிரம் என்று பழைய விண்ணப்பத்தை மாற்றி விட்டார்கள். நான் இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் அந்த அளவுக்கு கீழே உள்ளவர்கள்

[திரு. ஆ. தங்கவேலு] [10th August 1963

தவறு செய்யாமல் இருந்தால் இலாகாவிற்குக் கெட்ட பெயர் வரும் அளவில் இருக்காது. ஊருக்கு மின்சாரம் கொடுக்கா விட்டாலும், விளக்கு எரிவதற்கு மின்சாரம் கொடுப்பதற்கு கால தாமதம் ஆனாலும் பரவாயில்லை. யுத்த நெருக்கடியைப் பற்றித் தெரிந்து கொள்ள ரேடியோ அவசியம் தேவை என்று, அவர்களுடைய கருத்து என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரக் கட்டணம் உயரப் போவதாகவும், அதைப் பற்றி பரிசீலனை செய்துகொண்டிருப்பதாகவும் இங்கே தெரிவிக்கப்பட்டது. 1962-63-ம் ஆண்டு பட்ஜெட்டின்போதுகூட, 10 சதவிகிதம் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியபோது நான் விவசாயிகள் உபயோகப்படுத்தும் பம்ப்பு செட்டுகளுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஆனால் அந்த விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. மீண்டும் இப்போது மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதாக இருக்கிற நிலையில் விவசாயிகள் உபயோகப்படுத்தும் பம்ப்பு செட்டுகளுக்கு மட்டும் இந்த விதிவிலக்கு கொடுத்து, அதற்குக் கட்டணத்தை உயர்த்தாமல் இருக்கும்படி என்னுடைய வேண்டுகோளை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, அநேக கிராமங்களில் மின்சாரம் இருந்து தெரு விளக்குகள் இருக்கும் பகுதிகளில், கிராமங்களிலும், திண்டிவனம் போன்ற நகரங்களிலும் அநேக இடங்களில் பல்புகள் இல்லாமல் இருக்கின்றன. அங்கு உள்ளவர்கள் இது எமர்ஜென்ஸி நேரம், பல்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் சென்னையில் பார்த்தால் ஒரு இடத்தில்கூட பல்பு இல்லாமல் இல்லை. சென்னைக்கு எமர்ஜென்ஸி இல்லை, திண்டிவனத்திற்கும், கிராமத்திற்கும் மாத்திரம்தானா எமர்ஜென்சி? எமர்ஜென்சி என்றால் அங்கு உள்ளவர்கள் வாழ வேண்டாமா என்று தெரியவில்லை. ஏதோ அந்த நேரத்திற்குச் சொல்லுகிறார்களே தவிர உள்ளபடியே கவனித்து இந்தக் குறையை நீக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பணம் மட்டும் பூராவும் வாங்குகிறார்கள் தெரு விளக்குகளுக்காக. அநேக இடங்களில் பல்புகள் இல்லை என்பதை இந்த நேரத்தில் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வேலைகள் அநேக இடங்களில் தடைப்பட்டிருப்பதற்குக் காரணம், 'போதிய ஆட்கள் இல்லை, அதனால் பல்புகளை மாற்றவோ மற்ற வேலைகளைக் கவனிக்கவோ முடியவில்லை' என்று சொல்கிறார்கள். ஆகவே, ஆட்கள் நியமிக்கப்பட வேண்டியது அவசியம் என்று கருதினால், அந்த வேலைகளை உடனடியாகக் கவனிக்கப் போதிய ஆட்களை நியமிக்கும்படி நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அங்குள்ள சூபர்வைசர் என்ன சொல்கிறார் என்றால், 'எங்களுக்கு போதிய ஆட்கள் இல்லை. திண்டிவனம் நகரத்தையும் பக்கத்துக் கிராமங்களையும் பார்க்கவேண்டியிருக்கிறது திடீர் என்று காற்று, மழை வந்தால் எல்லா இடங்களுக்கும் போக வேண்டியிருக்கிறது' என்று சொல்கிறார். அவர் சொல்வதில் நியாயம் இருக்கிறது, ஆட்கள் எண்ணிக்கை குறைவாகத்தான்



10th August 1963] [திரு. ஆ. தங்கவேலு]

இருக்கிறது என்றுதான் எனக்கும் தென்படுகிறது. ஆகவே, மேலும் ஆட்களை நியமித்து அவர்கள் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு வேண்டிய வழிகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திண்டிவனம் தொகுதியில் மேலும் பல கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்காமல் இருக்கிறது. விண்ணப்பம் போட்டு வருஷக் கணக்கில் ஆகிறது. இதற்கு ஒரு வழி செய்யவேண்டும். அதாவது, மின்சார கனெக்ஷன் கொடுக்க வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டவர்களுக்கு மின்சார போர்டார் ஒரு உத்தரவு அனுப்பிவிடலாம். குறிப்பிட்ட இந்த ஆண்டில் இந்த மாதத்தில்தான் மின்சார கனெக்ஷன் கிடைக்கும் என்று வரையறுத்து ஒரு உத்தரவு அனுப்பிவிட்டால் மனுச் செய்துகொண்டவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள். அதிகாரிகளுக்கும் தொந்தரவு இருக்காது. ஆகையால், அதையும் கவனிக்க வேண்டும். எப்பொழுது மின்சார கனெக்ஷன் கிடைக்கும் என்பதற்கான காலத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* **திரு. ஆர். ராஜகோபாலசாமி நாயக்கர்:** கனம் தலைவர் அவர்களே, மின்சார போர்டின் 1963-64-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அமைச்சருடைய அறிக்கையைப் பார்க்கும் போது, மின்சாரத் துறை நமது ராஜ்யத்தில் நல்ல முறையில் முன்னேறி இருக்கிறது என்பது தெரிகிறது. அதே நேரத்தில், மூன்றாவது திட்டக் காலத்தின் இறுதியில் மேலும் முன்னேற்றம் ஏற்படவிருப்பதாகவும், இப்பொழுது இருப்பதைவிட ஏறத்தாழ எட்டு மடங்கு அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நம் ராஜ்யத்தில் எவ்வளவுதான் மின்சாரம் உற்பத்தி செய்தாலும், தேவை மேலும் மேலும் அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அணு மின்சார நிலையம் அமைப்பது, ஹொகைனக்கல் திட்டம் போன்ற திட்டங்களையெல்லாம் எடுத்துக்கொள்வது பற்றியும் சம்பந்தப்பட்ட ராஜ்யங்களுடனும் மத்திய அரசுடனும் பேசி ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

(கனம் சபாநாயகர் தலைமை)

இந்த ராஜ்யத்தில் மின்சாரத் துறையில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தும், இந்த ஆண்டில் சில தினங்களுக்கு மின்சார வெட்டு ஏற்பட்டுவிட்டது. அதற்குக் காரணம், இயற்கைக் கோளாறினால் நீர்த் தேக்கங்களில் தண்ணீர் இல்லாமல் போனதுதான். அதற்காக மூன்று இடங்களில் மின்சார நிலையங்கள் ஏற்படுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுவும் வரவேற்கத்தக்கதாகும்.

[திரு. ஆர். ராஜகோபாலசாமி நாய்க்கர்] [10th August 1963

கோவை ஜில்லா பெரிய தொழில் முன்னேற்றம் அடைந்த பிரதேசம் ஆகும். தொழில் முன்னேற்றம் மட்டுமல்லாமல், விவசாயத் துறையிலும் அது முன்னேற்றம் அடைந்த பகுதியாகும். ஆக, கோவை ஜில்லாப் பகுதியில் ஒரு அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அமைச்சர் அவர்களுடைய அறிக்கையைப் பார்க்கும்போது, மின்சார போர்டுக்கு நல்ல வருமானம் இருப்பதாகவும், நிதி நிலைமை நல்லபடியாக இருப்பதாகவும் தெரிகிறது. 'அடுத்த ஆண்டு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவேண்டியிருக்கும்' என்றும் அமைச்சர் அவர்கள் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அப்படி உயர்த்தவேண்டிய அவசியம் இருந்தால், சென்ற ஆண்டில் பத்து சத விகிதம் மின்சாரக் கட்டணம் உயர்த்தியிருப்பதையும் கருத்தில் கொண்டு, விவசாயத்தைப் பொறுத்த வரையில் கட்டண உயர்விலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

உடுமலைப்பேட்டை தாலுக்காவில், அமராவதித் தண்ணீர் பாயும் பிரதேசத்தில் சென்ற ஐந்தாண்டுகளாக விவசாயிகள் கிணற்றுக்கு மின்சாரம் வேண்டுமென்று மின்சார போர்டாருக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தும், இது வரையில் எந்தப் பயனும் ஏற்படவில்லை. காரணம் என்னவென்றால், அமராவதி வாய்க்கால் பாசனப் பிரதேசங்களில் கிணற்றுக்கு மின்சார மோட்டார் வைத்துத் தண்ணீர் இறைத்துப் பாய்ச்சினால், வாய்க்காலின் தண்ணீர் பாதிக்கப்படும் என்ற காரணத்திற்காக கிணறுகளுக்கு மின்சார சப்ளை கொடுக்காமல் இருக்கிறார்கள். அமராவதி வாய்க்காலில் ஆறு மாத காலம் தான் தண்ணீர் விடப்படுகிறது. பாக்கி ஆறு மாதங்கள் அங்குள்ள விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதனால், வாய்க்காலில் தண்ணீர் போகாத ஆறு மாத காலத்திற்காவது கிணறுகளுக்கு மின்சார சப்ளை கொடுத்தால் விவசாயிகள் நல்லபடியாக விவசாயம் செய்து முன்னேற முடியும். குறைந்தபட்சக் கட்டணம் ஒரு வருஷத்திற்கு இவ்வளவு என்று குறிப்பிடப்படுகிறது. ஒரு ஹார்ஸ் பவருக்கு 35 ரூபாய் என்று இருக்கிறது. ஆறு மாதங்களுக்கு எப்படி கொடுப்பது? கோர்ட்டில் போனால் பல சிக்கல்கள் ஏற்படும் என்று மின்சார போர்டார் யோசனை செய்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு மின்சார சப்ளையைக் கொடுக்க மின்சார போர்டார் முன்வந்தால் போதும். விவசாயிகள் எடுத்துக்கொள்ள காத்திருக்கிறார்கள். ஒரு ஹார்ஸ் பவருக்கு 35 ரூபாய் என்று இருக்கிறது. அந்த அடிப்படையில் ஆறு மாதங்களுக்கு ஹார்ஸ் பவருக்கு 35 ரூபாய் விதம் கொடுக்க விவசாயிகள் தயாராயிருக்கிறார்கள். ஆகையால் போர்டார் அவர்கள், அமராவதி நதிப் பாசனப் பகுதி விவசாயிகளுக்கு ஆறு மாத காலத்திற்கு மின்சாரம் கொடுத்து உடனடியாக சர்விஸ் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.



10th August 1963] [திரு. ஆர். ராஜகோபாலசாமி நாய்க்கர்]

அமைச்சர் அவர்கள், மூன்று சிறு திட்டங்களை ஏற்படுத்தப் போவதாகவும், அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய மின்சாரத்தைப் பயன்படுத்தும், வகையில், அந்தத் திட்டங்களை மின்சார போர்டார் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். நான் சென்ற பட்ஜெட் விவாதத்தின் போதும் சொன்னேன். அதற்குப் பதில், 'மின்சார போர்டாரின் பரிசீலனையில் இருக்கிறது' என்று சொன்னார்கள். அமராவதி நதி ஜீவ நதியாகும். அமராவதிக்கு மேல் அமராவதி பம்பாறு ஜல மின்சாரத் திட்டம் பல ஆண்டுகளாகப் பரிசீலனையில் இருந்து வருகிறது. குறைந்த செலவில் திட்டம் நிறைவேற்றினால், அதிலிருந்து மின்சாரம் அதிகமாகக் கிடைக்கும். இப்பொழுது இருக்கும் அமராவதி அணை இரண்டு நாள் வெள்ளத்திலேயே நிரம்பிவிடுகிறது. மற்ற நாட்களில் அந்த ஆற்றில் வரும் தண்ணீர் வீணாகப் போகிறது ஆகவே, அமராவதி அணைக்கு மேலே ஒரு அணை கட்டி, அங்கே ஜல மின்சாரத் திட்டத்தை அமைத்தால் இப்பொழுதிருக்கும் அமராவதிப் பாசனப் பகுதிக்குப் பலன் ஏற்படுவதோடு, மேற்கொண்டும் பல ஆயிரக்கணக்கான ஏக்கராக்களுக்குப் பாசன வசதி ஏற்பட ஏதுவாக இருக்கும். அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றும் வகையில் அதற்கென்று ஒரு டிவிஷன் அமைத்துப் பரிசீலனை செய்து, கூடிய சீக்கிரம் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அமைச்சர் அவர்களையும் மின்சார போர்டாரையும் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கடைசியாக ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்லி என் உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். மின்சார போர்டில் பல இடங்களில் கம்பி கண்டக்டர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. உடுமலைப் பகுதியில் அதனால் சென்ற ஒரு வருஷ காலமாகப் பல சர்விஸ்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. எட்டாம் நம்பர் கம்பி போன்ற பல நம்பர் கம்பிகள் (வயர்) கிடைக்காமல் ஒரு வருஷ காலமாகப் பல சர்விஸ்கள் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அத்தகைய கம்பிகளைக் கூடிய சீக்கிரம் வரவழைத்துக் கொடுத்து, விவசாயிகளுக்கு சர்விஸ் கொடுக்க வேண்டும். அந்தக் கம்பிகள் கிடைப்பதற்குத் தாமதம் ஆகுமானால், மாற்று வழிகளைக் கண்டு பிடித்து உபயோகித்து, விவசாயிகளுக்குக் கரண்ட் சப்ளை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த கனம் சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 12th August 1963. 1-30 p.m.

**The House then adjourned.**

## VIII—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. *Statutory Rules and Orders.*—Nil.

B. *Reports, Notification and other papers.*

* 39. *The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1963 with Annexure.*

* 40. *Annexure to the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill*, 1963.

* 41. *Annexure to the Madras Cultivating Tenants' Protection (Amendment) Bill*, 1963.

* 42. *Annexure to the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill*, 1963.

* 43. *Annexure to the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill*, 1963.

* 44. *Annexure to the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Bill*, 1963.

* 45. *Annexure to the Madras General Sales Tax (Second Amendment) Bill*, 1963.

46. *Notification issued with* G.O. Ms. No. 3390, *Industries, Labour and Co-operation (Labour), dated* 29th *June* 1963 *amending the Madras Employees' State Insurance (Medical Benefit) Rules*, 1954, *published with the Industries, Labour and Co-operation Department Notification, dated the* 16th *August* 1954, *at pages* 297 *to* 312 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated* 8th *September* 1954 *as subsequently amended, the same having been previously published as required by sub-section* (1) *of section* 96 *of the Employees' State Insurance Act*, 1948 (*Central Act XXXIV of* 1948).

* Circulated to Members on 8th August 1963.





## APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 81 on page 467 supra.]

| District. | Name of the route. | Number of permits approved. | Number of permits granted. | Nature of bus introduced. Regular bus. | Jeep Stage Carriage. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| Salem | 1 Tiruchengode to Karur. | 1 | 1 | Regular bus. | .. |
| | 2 Elur to Kolli Hills. | 1 | 1 | ,, | .. |
| | 3 Rasipuram to Velur. | 1 | 1 | ,, | .. |
| South Arcot. | 4 Vriddachalam to Kallakurichi. | 1 | 1 | ,, | .. |
| Coimbatore. | 5 Dimbam to Talavadi. | 2 | 2 | .. | Jeep Stage Carriage. |
| Madurai | 6 Madurai to Melavallur. | 2 | 2 | .. | ,, |
| Ramanathapuram. | 7 Kanniseri to Sivakasi. | 2 | 2 | .. | ,, |
| | 8 Sattur to Sivakasi. | 2 | 2 | .. | ,, |
| | 9 Virudhunagar to Krishnapuram. | 1 | 1 | .. | ,, |
| | 10 Paramakudi to Veerasolan. | 1 | 1 | .. | ,, |
| Total: | 10 routes. | 14 | 14 | permits. | |

(467-ம் பக்கத்திலுள்ள 81 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.)

அறிக்கை.

| மாவட்டம். | பஸ் மார்க்கத்தின் பெயர். | அனுமதிக்கப் பெற்ற பெர்மிட்டுகளின் எண்ணிக்கை. | கொடுத்த பெர்மிட்டுகளின் எண்ணிக்கை. | என்ன வகையான பஸ் ஓடுகிறது. ரெகுலர் பஸ். | ஜீப் பஸ். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| சேலம் .. | 1 திருச்செங்கோடு – கரூர். | 1 | 1 | ரெகுலர் பஸ். | .. |
| | 2 ஏலூர் – கொள்ளி மலை. | 1 | 1 | ,, | .. |
| | 3 ராசிபுரம்–வேலூர். | 1 | 1 | ,, | .. |

[10th August 1963

அறிக்கை—தொடர்ச்சி.

| மாவட்டம். | பஸ் மார்க்கத்தின் பெயர். | அனுமதிக்கப் பெற்ற பெர்மிட்டுகளின் எண்ணிக்கை. | கொடுத்த பெர்மிட்டுகளின் எண்ணிக்கை. | என்ன வகையான பஸ் ஓடுகிறது. ரெகுலர் பஸ். | ஜீப் பஸ். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| தென் ஆர்க்காடு. | 4 விருத்தாச்சலம்–கள்ளக்குறிச்சி. | 1 | 1 | ரெகுலர் பஸ் | .. |
| கோயம்புத்தூர். | 5 திம்பம்–தளவாடி. | 2 | 2 | .. | ஜீப் பஸ். |
| மதுரை. | 6 ம்துரை–மேல வல்லூர். | 2 | 2 | .. | ,, |
| இராமநாதபுரம். | 7 கன்னிசேரி–சிவகாசி. | 2 | 2 | .. | ,, |
| | 8 சாத்தூர்–சிவகாசி. | 2 | 2 | .. | ,, |
| | 9 விருதுநகர்–கிருஷ்ணபுரம். | 1 | 1 | .. | ,, |
| | 10 பரமக்குடி–வீராசோழன். | 1 | 1 | .. | ,, |
| மொத்தம்: | 10 மார்க்கங்கள். | 14 | 14 பெர்மிட்டுகள். | | |

## APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 89 on page 480 supra.]

STATEMENT SHOWING TOTAL AMOUNT DISBURSED TO EACH INDUSTRY FROM INCEPTION BY THE MADRAS INDUSTRIAL INVESTMENT CORPORATION.



10th August 1963]

| Type of industry. | Total amount disbursed. |
|---|---|
| (1) | (2) |
| | RS. |
| 1 (*a*) Manufacture of edible oil other than hydrogenated oil. | 1,20,000 |
| (*b*) Manufacture of hydrogenated oil .. | 6,50,000 |
| (*c*) Manufacture of salt .. .. .. | 1,79,403 |
| 2 Manufacture of bakery product .. | 4,92,575 |
| 3 Textile industry .. .. .. .. | 4,11,87,569 |
| 4 Paints, Varnishes, etc. .. .. .. | 90,000 |
| 5 Glass and glass products .. .. .. | 92,746 |
| 6 Plastic and brushes .. .. .. | 1,49,886 |
| 7 Sugar factories and refineries .. .. | 61,81,613 |
| 8 Electricity, gas and steam .. .. | 52,00,000 |
| 9 Manufacture of non-metallic mineral products except products of petroleum, coal—such as mica, tiles. | 3,25,000 |
| 10 Synthetic diamonds .. .. .. | 6,50,000 |
| 11 Tobacco manufacturing .. .. .. | 1,50,000 |
| 12 Printing, publishing and allied industries. | 26,88,465 |
| 13 Ink .. .. .. .. .. .. | 93,657 |
| 14 Fertilisers .. .. .. .. .. | 1,30,000 |
| 15 Light Engineering, screws, metalware utensils. | 7,89,948 |
| 16 Flower mills .. .. .. .. | 49,88,184 |
| 17 Surgical dressing .. .. .. .. | 12,67,157 |
| 18 Manufacture of clay products, tiles, bricks, etc. | 25,98,940 |
| 19 Paper board and straw board .. .. | 2,25,000 |
| 20 Glucose .. .. .. .. .. | 3,50,000 |
| 21 Transformer, switchgear and others .. | 5,78,641 |
| 22 Engine valves .. .. .. .. | 10,17,000 |
| 23 Vermicelli .. .. .. .. .. | 1,38,447 |
| 24 Manufacture of wagons .. .. .. | 27,23,931 |
| 25 Manufacture of rubber goods .. .. | 6,98,513 |
| 26 Manufacture of machine tools .. .. | 2,00,000 |
| 27 Manufacture of Heavy chemicals .. | 21,88,158 |
| 28 Button making .. .. .. .. | 2,00,000 |
| 29 Drugs and Pharmaceuticals .. .. | 1,50,000 |
| 30 Perfumes and toilets .. .. .. | 62,142 |
| 31 Basic metal industries, iron and steel castings, etc. | 12,00,000 |
| 32 Others (M. S. Rounds) .. .. .. | 7,24,631 |
| 33 Insecticides .. .. .. .. | 1,50,800 |
| 34 Electric lamps .. .. .. .. | 7,98,500 |
| 35 Electric motors .. .. .. .. | 44,638 |

[10th August 1963

*Supplementary statement showing total amount disbursed to each industry in the Madras Industrial Investment Corporation during the period from 1st January to 30th June 1963.*

| Type of Industry. | Number of applications. | Amount sanctioned. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | Rs. |
| 1. Manufacture of Bakery products, biscuit making including bakeries and Confectionaries. | 1 | 1,00,000 |
| 2. *Beverage Industries*— | | |
| Aerated and carborated water industries. | 1 | 1,20,000 |
| 3. *Manufacture of Textiles*— | | |
| Spinning, Weaving and Finishing of textiles. | 3 | 24,00,000 |
| 4. Heavy chemicals .. .. .. .. | 2 | 14,50,000 |
| 5. *Manufacture of non-metallic mineral products except products of petroleum and coals*— | | |
| Manufacture of structural clay products, Tiles, Bricks, etc. | 1 | 1,50,000 |
| 6. *Basic metal industries, iron and steel basic industries*— | | |
| Others: M. S. Rounds .. .. | 1 | 48,000 |
| 7. *Manufacture of metal products except machinery and Transport equipment*— | | |
| Metal containers .. .. .. .. | 1 | 1,00,000 |
| Welding .. .. .. .. .. | 1 | 5,00,000 |
| 8. Manufacture of Electrical machinery apparatus, appliances and supplies equipment for generation, transmission, distribution of electricity, including transformers and switchgears. | 1 | 10,00,000 |
| (Interim loan sanctioned on 21st November 1962. Confirmed on 21st March 1963.) | | |
| Others: | | |
| 9. *Electricity Gas and steam*— | | |
| Electric light and power, generation, transmission and distribution of Electricity energy. | 1 | 1,50,000 |
| | 13 | 60,18,000 |



10th August 1963]

APPENDIX III.

(*Vide* Answer to Starred Question No. 94 on page 489 supra.)

# REPORT OF THE FACT FINDING COMMITTEE TO ENQUIRE INTO THE ADEQUACY OR OTHERWISE OF THE SANITARY ARRANGEMENTS MADE IN BUS STANDS AND MARKETS IN MADRAS CITY.

## CHAPTER I.

In G.O. Ms. No. 1909, Local Administration, dated 6th November 1959, the Government constituted a Committee to enquire into the adequacy or otherwise of the sanitary arrangements made in the bus stands and the markets in Madras City, consisting of the following :—

1. Sri V. V. Ramaswamy, M.L.C., *Chairman*.
2. Sri C. R. Ramaswamy, M.L.A., *Member*.
3. Sri K. Vinayakam, M.L.A., *Member*.
4. Sri T. P. Srinivasavaradan, M.L.C., *Member*.
5. The Commissioner, Corporation of Madras, Member-*Secretary*.

The Committee, as indicated by the Government in their order cited was to be a Committee constituted for the purpose of finding out facts regarding the sanitary conditions that existed in the bus stands and the markets in Madras City. In the Government Order the Government outlined the reasons for appointing the Committee and also indicated the terms of reference of the Committee. The question of appointing the Committee was considered by Government in pursuance of a motion moved by Sri V. V. Ramaswamy, in the Legislative Council in February 1959, seeking to recommend to Government to appoint a Committee to enquire into the adequacy or otherwise of the sanitary arrangements made at various bus stands and markets in the State and to report on the need for the provision of such sanitary arrangements where none exists now. On the assurance given by the Government that a Committee would be constituted to go into the question of adequacy or otherwise of the sanitary arrangements available at various bus stands and markets in Madras City in the first instance, the resolution was withdrawn by the mover. This Fact Finding Committee was accordingly constituted by Government.

*Terms of reference.*—The Committee was requested to enquire into the adequacy or otherwise of the sanitary and water supply arrangements made in the existing (1) bus stands and (2) markets in Madras City and to recommend measures necessary for improving them. The Committee was also requested to make suggestions

[10th August 1963

to improve the general cleanliness and for the beautification of the bus stands in Madras City. The Committee was requested to submit its report to Government within a period of two months from the date of the Government Order cited above.

The first meeting of the Committee was held on the 25th November 1959 in the Office of the Member-Secretary. The Officers of the Corporation who are connected with the markets, bus stands and lorry stands were also present at this meeting. At the outset the Chairman explained the reason which impelled him to move a resolution in the Legislative Council. He said that as a member of the Estimates Committee, he happened to travel in a bus with the other members and visited a number of districts and that on account of his previous connection with local administration he was interested in looking into the conditions obtaining in the bus-stands and markets on the way. He found that generally the sanitary arrangements and other amenities provided in the bus stands and the markets were far from satisfactory. The responsibility for providing sanitary arrangements and the necessary amenities in the bus-stands and the markets, particularly in mofussil was mainly that of the local body concerned. He left that if the question of proving the amenities were to be left to the local body concerned there may not be a uniform standard and that the markets and bus-stands may not be maintained up to the standard required. He, therefore, felt that instead of suggesting to the local body concerned to take such steps as were necessary, would be better if the Government had the question gone into by a specially constituted body so that a report could be made which could serve as a guide to the local bodies in improving the markets and bus-stands. It was with this object that he moved the resolution in the Legislative Council which was seconded by Sri T. P. Srinivasavaradhan, M.L.C. It was explained by Government that instead of having a Committee to go into the question all over the State it would be better to take up the question of improvement of markets and bus-stands in Madras City to start with and that on the analogy of the suggestions that would be made for Madras City, recommendations could be made in respect of the other local bodies also. The Chairman felt that this was a reasonable procedure to solve the problem. On this assurance of the Government, he withdrew the resolution.

The Committee then discussed the procedure to be adopted in its work. The Member-Secretary furnished the Committee with a list of markets and bus stands in the City and with a copy of the Public Health Act and assured the members of the co-operation and technical assistance of the Officers of the Corporation of Madras. Considering the number of markets in Madras City the Committee felt that it would not be possible to visit all the markets and decided to visit about a half a dozen or so selected at random. The Health Officer of the Corporation of Madras agreed to select the markets for inspection by the Committee. He was requested



10th August 1963]

to select markets where sanitary conditions were reasonable as also some markets where sanitary conditions were bad so that a comparative study would be possible.

Accordingly, the Committee visited the following markets and bus-stands on the dates given below :—

| *Serial number.* | *Place of inspection.* | *Date of inspection.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | Moore Market .. .. .. .. .. | 7th December 1959. |
| 2 | Chintadripet Market .. .. .. .. | |
| 3 | Kothawal Bazaar Market .. .. .. .. | 16th Decembe 1959. |
| 4 | Corporation Fruit Market .. .. .. | |
| 5 | Mofussil Bus stand near Burmah Shell Building. | |
| 6 | Zam Bazaar Market .. .. .. .. | |
| 7 | Thannithorai Market .. .. .. .. | 28th December 1959. |
| 8 | Kabaleeswarar Mada Street (Pavement Market). | |
| 9 | Mandavalli Market .. .. .. .. | |
| 10 | Bus Terminus opposite to Mandavalli Market. | |
| 11 | Pondy Bazaar Market .. .. .. .. | |
| 12 | Corporation Mutton Stall, T. Nagar .. .. | |
| 13 | Pavement Market in Panagal Park .. .. | |
| 14 | T. Nagar Bus Terminus .. .. .. .. | |
| 15 | Elephant Gate Lorry stand .. .. .. | 22nd February 19[illegible]. |
| 16 | Lorry stand in Hood Wharf .. .. .. | |
| 17 | Mofussil Bus stand, Mint Street .. .. | |
| 18 | Government Transport Bus stand, Mint Street .. | |
| 19 | Seven Wells Market .. .. .. .. | |
| 20 | Mofussil Bus stand, Esplanade .. .. .. | |
| 21 | Bus-terminus in Pycrofts Road, Triplicane .. | |

The Chairman of the Committee could not accompany the Committee on inspection on 28th December 1959. He, therefore, along with Health Officer of the Corporation of Madras inspected separately the markets on 4th January 1960 which were inspected by the Committee on 28th December 1959.

The Committee met on the 10th December 1959 when it discussed the procedure that was to be adopted during the inspection and the points that had to be looked into. It also met on the 14th March 1960 when it held general discussions based on the inspections so far made and also drew up a programme of further meetings with the representatives of the Corporation of Madras. the Officers of Government dealing with markets, bus stands and lorry stands and such members of the public as may be desirous of meeting the Committee to give their suggestions regarding improvements to markets, bus-stands and lorry stands.

The Committee held four sittings on the following days :—

25th March 1960,

26th March 1960,

30th March 1960; and

4th April 1960.

The Committee met the representatives of the Corporation of Madras on the 25th March 1960. The Worshipful Mayor was unavoidably absent but sent his suggestions in writing. On the 26th March 1960, discussions were held with the representatives of the various Trades Associations in the City and the Joint Dirctor of Town Planning. On the 30th March 1960 the following Officers of the Government met the Committee :—

(1) The Director of Public Health.

(2) The Director of Government Transport.

(3) The Deputy Secretary to Government, Rural Development and Local Administration Department.

(4) Deputy Commissioner of Police (Traffic and Licensing).

Since it was felt that some of the representatives of the Trades Associations, for some reason or other, could not attend the sitting on the 26th March 1960, a further opportunity was given to them to meet the Committee on the 4th April 1960. After holding discussions with the representatives of the Trades Associations on the 4th April 1960, the Committee discussed the various points to be mentioned in the report and requested the Member-Secretary to prepare a report. The Committee again met on the 25th and 26th May 1960 to consider the draft report and finally met on 8th June 1960 to sign the report.

## CHAPTER II.

### CONDITIONS EXISTING IN THE MARKETS.

In all, the Committee visited 12 markets in Madras City. Of these, four were maintained by the Corporation and eight by the private owners. Of the four markets maintained by the Corporation, the Moore Market and the Fruit Market were composite markets while the remaining markets were either purely vegetarian or combined vegetable, meat and fish markets. The shortcomings noticed by the Committee in the markets visited by it, are discussed below under various heads :—

(1) *Adequacy of sanitary arrangements, particularly with regard to flushing arrangements.*—Even in markets maintained by the Corporation, the Committee observed that sanitary arrangements cannot be said to be either sufficient or maintained satisfactorily. In Moore Market for example, considering the amount of business transacted and the number of people that visited the market, the number of seats provided in the public convenience in the Moore Market cannot be said to be totally adequate; because of this or otherwise, it was found that the urinals were also used for passing stools. Though the Corporation had employed staff to keep the public conveniences clean and flushed, it was found that the state of cleanliness did leave a lot to be desired. It was explained to the Committee that the conservancy staff of the Corporation at these places had definite hours of duty and that there was nobody attending to the cleaning of



So far as the City bus-stands are concerned in most of the places the buses are parked on the sides of roads and this is generally not felt as very inconvenient. As for example, in the bus-stand in Parrys Corner, the time for which the buses halt is generally not more than a few minutes. In such places the amenities that are needed are not many. In these places the congestion of the travelling public is only during the rush hours in the morning and the evening. The travelling public generally do not wait for a long time at these bus-stands. It will therefore be enough, if, in these places, minimum amenities like proper shelters for the passengers to shelter them from sun and rain with some benches either of cement or of other material where the old, infirm and very young can sit while waiting for the bus, also public conveniences and urinals are provided. It will be necessary to provide public conveniences separately for the running staff and for the travelling public. Waiting sheds for running staff are necessary. Public conveniences for the running staff should be located adjoining the waiting shed so that the whole area can be earmarked for the use of the running staff only. Public conveniences for the passengers will have to be provided at a separate place and this should be a type of combined urinal and public conveniences. It goes without saying that all the standards which have been recommended for public conveniences in market with regard to sufficiency of water, appointment of conservancy staff should be maintained here also. In addition, attached to these public conveniences it is recommended that a room with a number of wash-basins should be provided so that the passengers could have a wash either after using the public convenience or while waiting for the bus. This room and the public convenience could be designed together in such a manner as to make it look attractive. In some places in the city like T. Nagar, Mandavallippakkam, Shenoynagar, etc., that is to say, at the outer edges of the city bus routes it will still be possible to find sufficient land for locating proper bus-stands. It will be necessary even now to earmark such places for bus-stands before the areas get built up. In this connection the Committee would like to point out the fact which was brought to its notice during the discusson regarding the bus-stand at T. Nagar, that in the Town-Planning Scheme, a large



10th August 1968]

area was provided for the establishment of a proper bus-stand at T. Nagar. A part of this area was Government land and a part was private land which was intended to be acquired for a bus-stand at T. Nagar. As T. Nagar got more and more built up, the owners of this private land wanted to put up buildings. The Government Transport Department was consulted at that stage by the Corporation whether this private land would be acquired by the Transport Department or whether the building applications could be sanctioned. Then, apparently, the Transport Department did not have any proposal for improving and building up a big bus-stand in T. Nagar and on their replying that they had no immediate proposal for acquiring those lands, the Corporation had to sanction buiding applications in all these private lands. Now that the Tranpsort Department has decided on having a good bus-stand at T. Nagar, it is faced with the problem of insufficiency of land. The Committee therefore feels that such a situation should not be allowed to happen again in the other areas in the City bus route termini and that a Master Plan should be drawn up for building proper bus-stands in all these termini and that the necessary land should be acquired and kept vacant for this purpose so that the bus-stands could be built up according to a phased programme.

These bus-stands at the terminals of the City bus-routes and the mufassal bus-stands in the City will have to be dealt with under the first category of bus-stands with regard to provision of amenities. Before considering what amenities are to be provided and how these bus-stands have to be built up the Committee would like to point out that so far as the two mufassal bus-stands are concerned (the one in Esplanade behind the Corporation Fruit Market and the other at Mint Street), the space in either of these places is not sufficient for providing even the minimum amenities. The mufassal bus-stand in Mint-Street, the Committee understands, will have to be shifted some where else very shortly as the area occupied by this bus-stand would be needed by the Corporation for a service road in connection with the building of overbridge over the railway-crossing in Tiruvottiyur High Road. The Committee, therefore, felt that it was necessary to consider the question of shifting these bus-stands somewhere else so that they can be built and maintained in a proper fashion. The Committee discussed the question with the Joint Director of Town-Planning, the Director of Transport, the Deputy Commissioner of Police (Traffic and Licensing), and also with the representatives of the Corporation, of the Trades Associations and of Bus Passengers' Association. The Joint Director of Town-Planning, the Director of Transport and the Deputy Commissioner of Police (Traffic) were of the view that time has come to consider the question of decentralising the mufassal bus-stands and shifting these bus-stands in the outskirts of the City. They favoured the establishment of three mufassal bus-stands—one in south near the Government Milk Factory, second in the north somewhere near Tiruvottiyur High Road and the third on the Poonamallee High Road near Kilpauk. According to them this would help in establishing properly constructed bus-stands with all the amenities necessary for the passengers and also help

in reducing the congestion in the City roads. They pointed out that in the City the roads were not wide enough, that any attempt at widening the roads would be a very costly affair, and that it was necessary to relieve the congestion of vehicles on the roads by taking the mufassal buses off the roads in the City. The Committee was also informed by them that there was a proposal sometime back to shift the mufassal bus-stand to the outskirts of the City which was considered by Government, but was dropped because of the representations made by legislators and others that this would cause hardship to the travelling public. The view that the shifting of the bus-stands to the outskirts would cause hardship to the travelling public was stressed by the representative of the Corporation and some of the Trades Associations also. They pointed out that at present public coming into Madras from outside the City travel in the mufassal buses up to the centre of the City. It was possible for them to get down en-route at the nearest point to their destination and where their destination lay beyond the mufassal bus-stand they only had to change into another bus or to take some other convenient vehicle to reach their destination. If bus-stands were shifted to the outskirts of the City one more charge would be imposed on such travelling public and this would naturally cost them a little more. It was pointed out by the Committee that the additional hardship involved in shifting of the bus stand to the outskirts had to be balanced against advantages which have been mentioned above. It was also pointed out that when bus-stands were shifted to the outskirts of the city, the Transport Department could arrange to run a sufficient number of connecting buses and also permit the carrying of some luggage in these connecting buses in order to reduce the hardship to the passengers. The Director of Transport stated that this would be possible. The Committee felt that it may cost the travelling public a little more if the bus-stands are shifted to the outskirts; but that when this was balanced against the other advantages that could be got by shifting the bus-stands to the outskirts, the disadvantage of having to spend a little more was not really worthy of consideration.

The Deputy Secretary to Government, Rural Development and Local Administration pointed out in recommending the shifting of the mufassal bus-stands the Committee was going beyond its terms of reference and that improving the existing conditions of the bus-stands should receive greater priority than planning improvements for the future. Strictly speaking such a view could be taken but, as the Committee feels that the provision of amenities in the mufassal bus-stands cannot be done satisfactorily in the space now available and that the sanitary condition in the bus-stands cannot be improved if the bus-stands were not shifted, it is necessary for this Committee to go into this question also and make proper recommendations. The Committee is, therefore, of the view that the shifting of the mufassal bus-stands to the outskirts of the City should be considered seriously and that it would be possible to reduce the hardship to the passengers by providing a sufficient number of connecting City buses and permitting the carrying of luggage in the City buses.





The amenities that will have to be provided at the bus-stands are listed below :—

(*a*) Provision of covered waiting-sheds separately for ladies and gentlemen;

(*b*) sufficient sanitary arrangements, like public conveniences, urinals and wash-basins and bath-rooms separately for the running staff and for the passengers;

(*c*) separate waiting sheds with tiffin room for the running staff;

(*d*) provision of retiring rooms on payment of reasonable charges for the passengers;

(*e*) facilities for parking cycles near the bus-stands;

(*f*) provision of cart-stand and taxi-stand near the bus-stand; and

(*g*) adequate drinking water-supply facilities.

The Joint Director of Town-Planning also pointed out that in the bus-stands there should be full safety to the passengers, there should be freedom of movement, the passengers should be provided with essential comforts, there should be adequate seating arrangements, lavatories, bath facilities, etc. Wherever possible there should be separate waiting rooms for women. And also since the buses would have to halt overnight in these bus-stands there should be a sufficient number of covered sheds where the buses could be parked for the night conveniently. He also suggested that the provision of separate rooms or dormitories with bath-rooms for the running staff who had to spend the night in the bus-stand. The Joint Director of Town-Planning pointed out that taking into account, the general climate of the country, as far as possible, coolers have to be installed and sufficient cool drinking water should be provided to the passengers and the running staff. Inside the bus-stand there should be well-demarcated route tracks so that buses bound for a particular destination might be parked in their respective places. The whole area of the bus-stand should be black topped.

For each route, there should be a booking office. There should also be left-luggage or cloak rooms for the passengers to store the heavy items of luggage. The retiring-rooms for the passengers should be of different sizes. Single-rooms for individuals and large rooms for families, all of them with attached bath rooms. These should be let on a fairly reasonable rent. Outside the bus stand, adequate provision should be made for taxi-stands and car-parks. Every bus-stand should be provided with a clock-tower. The passengers shelter should proivde a adequate protection from sun and rain. The whole area of the bus-stand should be enclosed with a high enough compound wall with an exit and an entrance.

The Joint Director of Town-Planning was also of the opinion that every bus-stand should be provided with permanent watchmen and sweepers and that an adequate number of passenger guides and supervisors should also be employed. Where buses have to halt

for the night apart from the provision of covered shelter for parking buses, it will be necessary to provide arrangement for properly clearing the buses before they are taken out on the road and for this purpose, there must be a washing platform with water facilities. This area should be little remote from the main traffic area. It would be desirable to have a small workshop attached to the bus-stand for attending to emergency repairs. First-Aid arrangements should be provided inside the bus-stand for attending to emergency cases. The Joint Director pointed out that the bus-stand should be designed so that along with the bus-stand, provision could be made for general merchandise stalls which could be rented out. With these rents and with the income from the bus-stand, the whole bus-stand could be made self supporting. These stalls should be outside the bus-stand though attached to it. Near the waiting-sheds it will be necessary to provide a small canteen, betel-stalls and stalls selling books and papers. The Joint Director was emphatically of the view that the shifting of the bus-stand to the outskirts and putting up of such a well-designed bus-stands is an urgent necessity, particularly in view of the very rapid increase of population in the City.

## CHAPTER VI.

### LORRY-STANDS.

Though the enquiry into the sanitary condition in lorry-stands was not specifically included in the Government reference to this Committee, the Committee felt that since lorry-stands were in a way similar to bus-stands, while dealing with bus-stands, it would be desirable to consider the conditions that existed in the lorry-stands and to suggest improvements wherever necessary.

There are two lorry-stands maintained by the Corporation in the City of Madras. One is near Elephant Gate Railway Overbridge which is called Elephant Gate Lorry-stand and the other is Hood Wharf Lorry-stand. The capacity of the Elephant Gate Lorry-stand is about 60 lorries and the capacity of the Hood Wharf Lorry-stand is 160 lorries. During the inspection and from the enquiries made at the time of the inspection the Committee found that while the lorry-stand at Elephant Gate was at least, partially used, the lorry-stand at Hood Wharf was not in use at all. There was no convenience for lorries parking at Hood Wharf Lorry-stand. At the Elephant Gate Lorry-stand also the full capacity was not being utilised and the Committee found that instead of the lorries using the lorry-stand for parking as was expected, many lorries were being parked on the road-margins thus adding considerably to the congestion on the roads and making it difficult for pedestrians to move about and also impeding considerably the conservancy work of the Corporation. The



Committee discussed with the Secretary of the Lorry Owners' Association, the reasons why lorries were still parked on the road-margins even though lorry-stands were available in the city.

It was pointed out that though at the Elephant Gate Lorry-Stand some amenities were made available, there were yet some very important amenities to be provided at this lorry-stand. In the Hood Wharf Lorry-stand, the amenities provided were most inadequate. The principal reason for the reluctance on the part of the lorry owners to use the Hood Wharf, it was said, was that the lorry-stand, as at present, was considered very unsafe. Petty thieving was said to be rampant in the locality and unless sufficient arrangements were made to safeguard lorries and goods left in the lorry-stand, the lorry owners were most reluctant to allow their lorries to be parked in that stand either with goods or without.

The Committee feels that building of lorry-stands and the provision of amenities therein should be considered on lines similar to those suggested for the bus-stands. In the lorry-stand also the entire area should be completely fenced off with a compound wall so that outsiders would not be able to get into the lorry-stand and pilfer parts and other goods from the lorries. The whole area of the stand should be black topped. Since the lorry owners generally prefer to run their lorries at night, the laden lorry reaches the City some time in the early hours of the morning. As soon as it reaches the destination, the driver of the lorry prefers to leave it in a safe place, to get some sleep. He, therefore, drivers to the lorry-booking office, parks the lorry on the road side, in the charge of a clerk or a watchman and goes to sleep. If, in the lorry-stand, properly covered sheds which could be locked were provided the owners and drivers of the lorries may prefer to use these sheds for locking up the laden lorries as soon as they reach the City. Even, otherwise, since lorries sometimes carry valuable merchandise, arrangements should be provided for keeping the lorries with their merchandise safely under lock and key. In every lorry-stand, just as suggested for the bus-stand, enough retiring-rooms, dormitories, etc., should be made available with attached bath-rooms for the use of the running staff of the lorries. It will also be necessary to provide sufficient godown accommodation attached to the lorry-stand where the goods brought by the lorries could be unloaded and stored for a few days before they are moved to the godowns inside the City. As suggested for the bus-stand, in every lorry-stand there should be a big enough area and proper arrangements for washing and cleaning the lorries. Water should be provided at this area under pressure. It will also be necessary to have a small workshop attached to each lorry-stand where minor repairs to the lorries could be carried out. At Elephant Gate Lorry-stand, the Committee noticed that there were number of stalls inside the lorry-stand and that these stalls had been leased out to people who were carrying on trades unconnected with lorries and the transport of goods by public carriers. The Committee felt that this should not be permitted and that all the stalls in the lorry-stand should be leased out only

to such trades as are connected with lorries and the transport of goods. A proper and well-run canteen catering to the ordinary needs of the running staff and panshops, small newspaper stalls, etc., should also be provided within the lorry-stand.

Even if all these amenities are provided, the lorry-owners may still prefer to leave the lorries parked on the road opposite their booking-offices or godowns in order to save some money which would otherwise be spent in transporting the goods from the lorry-stand to their godowns inside the city. Also, the Corporation at present maintains only two lorry-stands and obviously this number is totally inadequate for the number of lorries which enter the City. More lorry-stands would be necessary. The Committee is not prepared to say, at present, how many more lorry-stands will have to be put up. This number should be determined after taking a census of the lorries that enter Madras City every day. For most of the lorries the over-crowded and built-up area round George Town is the destination. All the lorry-stands should, therefore, be situated within easy reach of Georgetown and the neighbourhood, if they are to be popular. If wholesale markets are decentralised and built in different parts of the City, as suggested in Chapter IV, it may be worthwhile to consider the question of attaching one lorry-stand to each wholesale market. Thus, by attaching a lorry-stand to each wholesale market, it would be possible to make the wholesale market itself more popular. A stricter enforcement of law, probably with more restrictions with regard to the lorries entering crowded areas in the City, would be necessary to prevent the misuse of the road-margins by parking of lorries. It will be necessary to undertake legislation to change the law, as at present, to prevent the parking of lorries on the road-margins.

## CHAPTER VII.

### SUMMARY.

The Committee has made certain recommendations for the improvement of the sanitation in the markets and the bus-stands and for the provision of better amenities in these places. The Committee has grouped the recommendations under two heads—(1) the recommendations that could be given effect to almost immediately and which would considerably improve the sanitation in the markets and (2) the recommendations which consist of long-term proposals and which, by their very nature, would take some years to implement. The main recommendations made by the Committee under these two heads are briefly summarised and enumerated below.

### MARKETS.

***Recommendations that are capable of implementation in the near future.***

(1) The number of seats in the public-conveniences in the markets should be trebled. The public-conveniences in the markets should be provided with water from a well sunk separately



for the purpose through an overhead tank. Sufficient number of urinals of the types provided in many of the cinema theatres in the City should be attached to the public-conveniences. The public-conveniences in the markets could be preferably converted into paying types where each person pays a small charge of 2 nP. for using the public-convenience. Whether or not this is done, full-time scavengers (male and female) should be provided for each public-convenience.

(2) Where there are two rows of stalls facing each other the width of the passage between should be increased to 12 feet. Where there is only one row of stalls the width of the gangway may remain, as at present, as 8 feet. Each stall should be provided with sufficient storage space either in the form of a loft or as a cellar underneath the floor of the stall. Local bodies should be vested with powers to take action against the stall-holders encroaching into the passages between stalls.

(3) Special attention should be paid to eradicate the fly nuisance which is particularly noticeable in the meat and fish stalls. The rubbish heaps in and around the markets should be frequently treated with insecticides to prevent breeding of fish. The floor of the meat and fish stalls should also be frequently washed with insecticides to keep off the flies. Each stall-holder should be compelled to keep the meat or fish covered with wire mesh gauze lid to keep away flies. Cold storage facilities should be provided at least in the bigger markets so that the meat and fish could be kept fresh without decomposing.

(4) In every market sufficient conservancy staff should be employed to clean the market frequently at least once in one or two hours. Where it is possible to have adequate water-supply, water points should be provided at various places in the market from which water could be drawn at high pressure to flush the drains and the floor of the market.

(5) A greater number of spittoons should be provided in the market, if possible, one for each stall. A large number of rubbish bins should also be provided at various places in the market. The stall-holders should be asked to provide low-wooden platforms on which the vegetables, etc., put up for sale could be kept hygienically.

(6) The Corporation should be given greater powers over the private markets to ensure a higher standard of cleanliness. Each private market owner should be asked to deposit a sufficient amount, say Rs. 1,000 with the Corporation as a condition precedent to the granting of the licence so that any improvements that are necessary and which are not carried out by the owner of the market could be carried out by the Corporation from out of this deposit.

*Pavement markets.*

(1) Public conveniences should be provided by the Corporation at a place not too far away from the pavement market.

(2) Urinals with proper flushing arrangements should be provided near the pavement markets.

(3) A sufficiently large number of rubbish-bins should be provided at various places behind the stalls.

(4) The stall-holders should be encouraged to display the goods put up for sale on low-hand-carts or wheel-barrows. If this is not possible they should at least keep the vegetables on low-wooden platforms and not spread them on the floor of the pavement.

*Markets—Long-term proposals.*

(1) The Corporation should take steps to open more markets in the City so that at least one combined vegetarian and non-vegetarian market is provided for each division.

(2) In order to ensure that the standard of sanitation and cleanliness in the market is maintained at a fairly high level, all the private markets in the City should be acquired on phased programme so that the Corporation could improve them, provide all the necessary amenities and lease them out. In order to help the Corporation to do so, the Government should come to the aid of the Corporation by granting them assistance on more generous terms than is being done now.

(3) The wholesale trade should be decentralised and wholesale vegetable markets should be established at two or three places in the City. A lorry-stand should be attached to each wholesale market. These markets should be provided with proper and sufficient godown accommodation.

(4) The area now occupied by the mofussil Bus-stand in Esplanade should be used for a wholesale fruit market by shifting the mofussil bus-stand elsewhere. If this is not possible at least a portion of the open land nearby, known as 'Ordnance Lines', should be taken over from the Union Government in order to establish the wholesale fruit market there.

BUS-STANDS.

*(a) City Bus-stops.*

(1) Adequate number of shelters for the passengers should be provided.

(2) Combined public convenience, urinals and wash-places should be provided near the passenger-shelters.

(3) A separate waiting-shed should be provided for the running staff.

(4) Separate public convenience, urinals, etc., for the running staff should be provided adjoining these waiting sheds.

*(b) Bus-stands.*

At the terminals of the City bus routes where sufficient land is available a plan should be drawn up even now and necessary land purchased and kept free for building proper bus-stands.



*(c) Mofussil Bus-stands.*

(1) The mofussil bus-stands should be shifted from Esplanade and from Mint street and located in three places—one in the South near Saidapet, second in the West near Kilpauk and the third in the North near Tiruvottiyur High Road.

(2) The area of the bus-stands should be fenced off with a compound wall with an entrance and an exit and the entire area should also be black-topped.

(3) Covered waiting-sheds should be provided separately for ladies and gentlemen and sufficient sanitary arrangements like public conveniences, urinals and wash-basins should be attached to these sheds.

(4) Retiring-rooms should be provided on payment of reasonable charges for the passengers and these rooms should have attached bath-rooms.

(5) Separate waiting-sheds and retiring-rooms should be provided for the running staff with bath-rooms attached.

(6) There should be canteens separately for the passengers and for the running staff located near the respective waiting-sheds.

(7) There should be an adequate supply of cooled drinking water.

(8) There should be well demarcated route-tracks so that buses bound for any particular destination can be parked in their specified places.

(9) For each route, there should be a booking-office.

(10) There should be left luggage or cloak rooms for passengers to store their heavy items of luggage.

(11) There should be covered lock-up sheds for the buses that have to halt at the bus-stand overnight.

(12) There shoud be a large enough separate place where the buses could be cleaned and washed in the morning before they are taken out.

(13) There should be a small workshop attached to the bus-stand where minor repairs could be carried out.

(14) There should be a first-aid room in each bus-stand to attend to emergencies.

(15) The bus-stand should be provided with a sufficient number of watchmen and sweepers.

(16) Passenger-guides and supervisors should also be employed in the bus-stands.

(17) Inside the bus-stand there should be stalls selling pan-supari, books and newspapers.

(18) Each bus-stand should have a prominent clock-tower.

(19 Space for parking cars, taxi-stands, cart-stands and cycle-stands should be provided near the bus-stand but outside the compound.

LORRY-STANDS.

(1) The Corporation should take steps to open more lorry-stands in different places near enough to Georgetown which is the trade centre of the City.

(2) The area of the lorry-stand should be enclosed by a compound wall and the whole area should be black-topped.

(3) There should be a sufficient number of covered sheds where the lorries could be locked up for the night.

(4) There should be a sufficiently large enough area with water facilities where lorries could be cleaned.

(5) Retiring-rooms, dormitories, etc., with attached bath-room facilities should be provided for the running staff.

(6) Sufficient godown accommodation should be provided.

(7) A small workshop should be attached to each lorry stand where minor repairs to the lorries could be carried out.

(8) A proper and well-run canteen catering to the ordinary needs of the running staff and stalls like pan-suparis shops, small newspapers stalls, etc., should be provided in the lorry-stand.

CHAPTER VIII.

The Committee acknowledges with thanks the co-operation extended to it by the officers of the Government and the Corporation, the members of the Corporation Council and by the representatives of the Trades Associations. While it would be invidious to single out any particular person for special mention by the Committee, it however, wishes to place on record the help extended to it by the Health Officer of the Corporation of Madras, who was throughout with the Committee during the inspections and the discussions and helped the deliberations of the Committee by offering valuable advice and suggestions.

V. V. RAMASWAMI, M.L.C.,
*Chairman, Fact Finding Committee.*

*Members.*

1. K. VINAYAKAM, M.L.A.
2. C. R. RAMASWAMI, M.L.A.
3. T. P. SRINIVASAVARADHAN, M.L.C.

R. BALASUBRAMANIAN,
*Commissioner and Member-Secretary.*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 12th August 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*போலீஸ் அதிகாரிகளுக்கு வீடுகள் (துறையூர்).*

* 101 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து** : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துறையூரில் கட்டப்பட்டுள்ள போலீஸ் லைன் எப்போது கட்டி முடிக்கப்பெற்றது ?

(இ) அதன் அடிமனைக்கு எவ்வளவு கிரயம் கொடுக்கப் பட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : (அ) ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கு வீடு கட்டி 1-8-1959-ல் ஒப்புவிக்கப்பட்டது. இரண்டு ஹெட் கான்ஸ்டேபிள்களுக்கும் 18 போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்கும் வீடுகள் கட்டி 26-10-1961-ல் அவை ஒப்புவிக்கப்பட்டுள்ளன.

(இ) நிலக் கிரயத்துக்காக, ரூபாய் 11,837.50 அனுமதிக்கப்பட்டுள்ளது.

(a) The quarters for one Sub-Inspector was completed and handed over on 1st August 1959. The quarters for two Head Constables and 18 Police Constables were completed and handed over on 26th October 1961.

(b) A sum of Rs. 11,837.50 nP. was sanctioned towards the cost of land.

**திரு. வி. எஸ். எஸ். மணி** : போலீஸ் லைன் வீடு கட்டுவதில் சில விடத்தில் ஓடுகள் போட்டும், சிலவிடத்தில் டெரஸ் போட்டும் கட்டப்பட்டிருக்கிறது. மாநிலம் பூராவுக்குமாக ஒரு டைப் டிசைன் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : டைப் டிசைன் இருக்கிறது. ஆனால் மேலே ஓடுகள் போடுவதா அல்லது டெரஸ் கட்டுவதா என்பது அந்த, அந்த தலத்திற்கு ஏற்றபடி முடிவு செய்யப் படுகிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** புதிதாக போலீஸ் லைன் கட்டும்போது அந்த வீடுகளுக்கு மின்சார விளக்கு வசதியும் செய்து கொடுக்கப் படுகிறதா? போலீஸ்காரர்கள் உபயோகப்படுத்திக்கொள்கிற மின்சாரத்திற்கும் அவர்கள் கட்டணம் கட்டவேண்டாமென்று வசதி செய்து கொடுக்க முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** துணை மதிப்பீடு விவாதத்தில் இதுபற்றிப் பேசப்பட்டது. அப்பொழுதே சொன்னேன். புதிதாகக் கட்டப்படுகிற வீடுகளுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டுத்தான் வருகிறது.

**திரு. எம். எஸ். மணி :** துறையூரில் போலீஸ் லைன் கட்டுவதற்கு அடிமனைக்கு பதினோராயிரம் ரூபாய் கொடுத்தது தவறு என்கிற புகார் வந்திருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நில ஆர்ஜித சட்டப்படிதான் இந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. சட்டப்படி மதிப்பிடப் பட்டு, அதற்குப் பிறகு சொலேஷீயம் எல்லாம் நிர்ணயித்துக் கொடுக்கப்படுகிறது. ஆகவே இதில் எதுவும் ஆட்சேபணை இருப் பதாகத் தெரியவில்லை.

**திரு. முனு ஆதி :** போலீஸ் லைன் கட்டுவதற்கு மத்திய சர்க்கார் மானியம் தருகிறதா? அல்லது மாநில சர்க்காரே முழுச் செலவை யும் ஏற்றுக் கொள்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மத்திய சர்க்கார் கடன்தான் கொடுக்கிறார்கள்.

**திரு. ஆர். ரெங்கசாமி :** சிலவிடங்களில் போலீஸ்காரருக்கு லைன் மாத்திரம் கட்டிக் கொடுக்கப்படுகிறதே தவிர, போலீஸ் ஸ்டேஷன் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது.

### சேலம் இரும்பு தொழிற்சாலை.

*** 102 கேள்வி.— திரு. எஸ். ஆறுமுகம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சேலம் இரும்பு தொழிற்சாலையை எந்த இடத்தில் துவக்குவது என்பது பற்றி முடிவு செய்தாகிவிட்டதா? விவர மென்ன?

(இ) நிலம் சர்வே செய்யப்பட்டுவிட்டதா? இல்லையென்றால், காரணமென்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) இல்லை.



(இ) சாத்தியமான இடங்களில் லோடு டெஸ்டு (Load Test) நடந்துவிட்டது. இந்த இடங்களில் இப்போது கான்டூர் சர்வே (Contour Survey) நடந்து வருகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சார், நீண்டகாலமாகச் சேலத்து உருக்காலையைப்பற்றிப் பேசி வந்தாலும் மறுபடியும், மறுபடியும் டெல்லியில் இருந்து வரும் அறிக்கைகள் இதற்குச் சாதகமாக இல்லாமல் இருப்பது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பத்திரிகைகளில் இப்படி மாறி மாறிச் செய்திகள் கொடுத்தால்தான் பத்திரிகைகள் விற்கும். ஆகையால், பத்திரிகைச் செய்திகளைப் பற்றி அதிகக் கவனம் செலுத்த வேண்டியதில்லை. நான் இந்தச் சட்டசபையில் கொடுக் கிற தகவல்களை மட்டும் திட்டவட்டமாக எடுத்துக்கொள்ளும்படி யாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சேலம் உருக்காலையில் இருந்து 3 லட்சம் டன் இரும்பு கிடைக்கும் என்றும் அது 6 கோடி ரூபாய் மதிப்புடையதாக இருக்குமென்றும், இந்த இரும்பை வெட்டி எடுக்க நெய்வேலி மின் நிலையத்தில் இருந்து 400 மெகவாட் மின் சக்தி கொடுக்கவேண்டுமென்றும், அந்த 400 மெகவாட் மின் சக்திக்கு ரூபாய் 12 கோடியாகும் என்றும் கருத்துக்கள் டெல்லி யில் இருந்து வருகின்றன. அதுபற்றி கனம் அமைச்சர் அவர் களுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** டெல்லி கருத்துக்கள் என்று பத்திரிகையில் வரும் செய்திகளை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சொன்னேன். மேலும், அந்த டெல்லிக் கருத்துக்கள் என்று கனம் அங்கத்தினர் கொடுத்த புள்ளிவிவரங்கள் எல்லாம் தவறு.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** சேலம் இரும்புத் தொழிற்சாலை என்ற பெயரே நடமாடி வருவதால் சேலத்திலேயே இந்த இரும்புத் தொழிற்சாலையை நிறுவ அரசாங்கம் முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நிபுணர்கள் எங்கு அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்களோ அங்குதான் அமையும்.

### மதுரை நகரசபை.

*** 103 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரசபையில் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதத் தில் நகரசபை சொத்து மோசடியாகி இருப்பது உண்மையா?

(இ) ஆமென்றால், எவ்வளவு?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ஆம்.

(இ) மோசடியாகியுள்ள சொத்தின் மதிப்பு ரூபாய் 4,567-34.

(a) Yes.

(b) The total value of the materials involved will amount to Rs. 4,567.34 nP.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், இந்த மோசடி மதுரை நகர சபை கமிஷனருடைய கவனக் குறைவால் ஏற்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அது அவருடைய கவனக் குறைவால் ஏற்பட்டது என்று இப்போது ஒன்றும் முடிவு செய்ய முடியாது. அந்த விவரம் போலீஸ் விசாரணையில் இருந்து வருகிறது.

**திரு. நா. ராஜாங்கம் :** மோசடி சம்பந்தப்பட்ட வரையில் பொதுமக்களுடைய பிரதிநிதிகளும் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அப்படி என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை.

**திரு. எஸ். மாதவன் :** இந்த நகரசபையில் தமிழ் தெரியாத வடநாட்டுக்காரர் கமிஷனராக இருப்பதனால்தான் இந்த மோசடி நடைபெற்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கனம் அங்கத்தினர் அந்தக் கமிஷனருடன் தமிழில் பேசி வழக்கம் இல்லையென்று அறிகிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** மோசடி செய்தவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** போலீஸ் விசாரணையில் அது இருக்கிறது. அந்த விசாரணை முடிந்த பின்புதான் அவர்களுடைய அறிக்கையின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, இது போன்ற மோசடிகள் மற்ற முனிசிபாலிட்டியில் நடந்திருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அப்படி ஒன்றும் தகவல் இல்லை,

**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்தக் கேள்வியில் "சொத்து" என்று இருக்கிறதே, என்ன, என்ன பொருள் என்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நகரசபைக்குரிய தகடுகள், குழாய்கள் முதலியன.



**திரு. வை. சங்கரன் :** இதில் மோசடி செய்தவர் இம்மாதிரி பல தடவை வேறு இடங்களிலும் குற்றம் செய்திருக்கிற எக்ஸ்-கான்விக்ட் இல்லையா ? இது விஷயமாக கமிஷனர் பேரில் குற்றம் சொல்ல முடியாது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இது சம்பந்தப்பட்டவர் ஏற்கனவேயே பல தடவை இம்மாதிரி தவறு இழைத்தவர் தான். கமிஷனர் அவர்களுக்கு கலெக்டர் பி.ஏ. யிடமிருந்து டெலிபோன் வந்தது என்ற அளவில் இவ்விஷயத்தில் உதவி செய்யவேண்டுமென்ற நோக்கம் கமிஷனருக்கு ஏற்பட்டிருக்கலாம். இப்போது போலீஸ் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இது முடிந்த பிறகு இதுபற்றி ஆலோசனை செய்து தீவிரமாக நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்படும்.

**திரு. எஸ். மாதவன் :** இந்த மோசடியில் கமிஷனர் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்று நகரசபை கருத்து தெரிவித்திருக்கிறதா ? அப்படியானால் கமிஷனரை மாற்றுவார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அப்படி ஒன்றும் தெரியவில்லை. கமிஷனர்தான் இதுபற்றி அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்.

**திரு. எம். எஸ். மணி :** கலெக்டர் பி. ஏ. டெலிபோன் செய்தது போல அந்தக் குற்றவாளியேதான் கமிஷனருக்கு டெலிபோன் செய்தாரா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : Is it based on surmise or facts ? The hon. Member should take the responsibility to place the facts. He cannot surmise that this man is guilty or that man is guilty. Surmise should not be extended too much. This is not good.

### பாடப் புத்தகங்கள் எழுத ஆசிரியர் தேர்வு முறை.

*** 104 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தொடக்க நிலை வகுப்புகள் சிலவற்றிற்கான மொழிப்பாடப் புத்தகங்களை எழுதும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசு மேற்கொள்ளும் விதி முறைகள் யாவை ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் வெளியிடும் பாடப் புத்தக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு விசேஷ அல்லது குறிப்பான விதிகள் எவையும் இல்லை. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட மொழிகளில் திறமையும் புலமையும் பெற்றிருக்க வேண்டும்; பாடத் திட்டம் பற்றி நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். பாடப் புத்தகங்களைப் பரிசீலித்தல், தேர்ந்தெடுத்தல், அங்கீகரித்தல் ஆகியவற்றில் அனுபவம், புத்தகங்கள் எழுதும் தகுதியும் பெற்றிருக்க வேண்டும். மேற்சொன்ன பொதுவான விதிமுறைகளே பாடப் புத்தக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் பின்பற்றப்படுகின்றன.

[12th August 1963

There are no special or specific rules for the selection of authors of nationalised text-books. The general principles adopted are that the authors selected should have proficiency and scholarship in the languages concerned; first-hand knowledge of the syllabus, experience in the matter of scrutiny, selection and approval of text-books and competence to write books.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாட புத்தகங்களில் எந்தெந்த பாட புத்தகங்கள் அரசினர் வெளியிடுவதாக மேற்கொண்டுள்ளனர் என்பதை அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதுவரையிலே, அதாவது 1962-63-ல் இங்கிலீஷ் டெக்ஸ்ட் புக் 5, 6, 7-வது வகுப்பு, தமிழ் டெக்ஸ்ட் புக் 7-வது வகுப்பு, நான்-டீடைல்டு டெக்ஸ்ட் புக் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், உருது, கன்னடம் 7-வது வகுப்பு அதுவரையிலும் இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் அதாவது 1963-64-ல் தமிழ் டெக்ஸ்ட் புக் முதல், இரண்டாவது வகுப்புகளுக்கு இப்பொழுது அச்சிடப்படுகிறது. தமிழ் டெக்ஸ்ட் புக் மூன்று முதல் ஐந்தாவது வகுப்பு வரையிலே இனி அது விஸ்தரிக்கப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இன்னும் என்னென்ன பாட புத்தகங்களை அரசினர் ஏற்று வெளியிடுவதாக எண்ணம் உள்ளது என்பதை அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது மொழி பாட புத்தகங்கள் அச்சிடுவதாக இருக்கிறது. கணக்கு, விஞ்ஞானம் போன்ற பாடபுத்தகங்களை இப்பொழுது அரசினர் வெளியிடுவதாக உத்தேசம் இல்லை. இப்பொழுது மொழி பாட புத்தகங்களை வெளியிடுவது 7-வது வகுப்பு வரையிலே வந்திருக்கிறது. அதற்கப்புறம் மற்றவைகளை எடுத்துக்கொள்ளுவது பற்றி யோசிக்கப்படும்.

**திரு. வை. சங்கரன் :** தனியாரிடமிருந்து புத்தகம் வெளியிடுவதை அரசினர் ஏற்றுக்கொண்டிருப்பதன் அடிப்படை நோக்கங்கள் யாவை என்பதை அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அடிப்படை நோக்கம் நல்ல புத்தகங்களாக இருக்கவேண்டுமென்பதுதான். ஆட்சேபகரமான பகுதிகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது மட்டும் போதாது, நல்ல புத்தகங்களாகவும் இருக்கவேண்டும். சில சமயங்களில், இருக்கின்ற புத்தகங்களில் தேர்ந்தெடுப்பது என்றால், போதிய திருப்தியுள்ள புத்தகங்களாக கிடைக்காமல் போகலாம். சில லட்சியங்களை வைத்துக்கொண்டு அதற்கேற்ற வகையிலே புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் சர்க்கார் சில புத்தகங்களை பதிப்பிப்பது என்று இப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.



12th August 1963]

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, அரசினரால் வெளியிடப்படுகின்ற புத்தகங்கள் அடக்க விலைக்கே வெளியிடப்படுகின்றனவா ? அல்லது லாபம் வைத்து வெளியிடப்படுகின்றனவா ? அப்படியென்றால், அந்த லாபம் எதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதுபற்றி நான் குறிப்பாகச் சொல்லுவதற்கு என்னிடம் தகவல் இல்லை. மற்ற நாடுகளிலிருந்து காகிதம் ஓரளவுக்கு இலவசமாகக் கிடைக்கிறது. கூடியவரையில் புத்தகங்களை குறைந்த விலைக்கு விற்கவேண்டுமென்பதுதான் கருத்து. மற்ற புத்தகங்களை விட குறைந்த விலைக்குத்தான் விற்கப்படுகிறது. இருந்தாலும், கொஞ்சம் லாபம் வருவது நலம் தான். அப்படி லாபம் வந்தால் அதைக்கொண்டு ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக பாட புத்தகங்கள் அளிக்கலாம் என்பது அரசாங்கத்தின் உத்தேசம்.

**திரு. வை. சங்கரன் :** இப்படி வெளியிடப்படும் புத்தகங்களை விநியோகிப்பதற்கு ஒரு சில ஏஜெண்டுகள்தான் இருப்பதால், விநியோகத்தில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, தாமதம் இல்லாமல் கிடைப்பதற்கு பரவலாக அதற்கு ஏஜெண்டுகளை நியமிப்பது பற்றி அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அனுபவம் உள்ள ஏஜெண்டுகளிடமிருந்து டெண்டர்கள் கோரப்பட்டு, இரண்டு ஜில்லாக்களுக்கு மேற்படாமல் ஒருவருக்கு கொடுப்பது என்ற வகையிலே தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்தப் புத்தகங்களை அரசினரே வெளியிடுவதின் அடிப்படை நோக்கம் நல்லதாக இருந்தாலும், ஏழைக் குழந்தைகளுக்குத் தக்க தருணத்தில் புத்தகங்கள் கிடைப்பதில்லை. ஆகவே, அரசாங்கம் வெளியிடுகின்ற புத்தகங்களின் "டிராப்டை" அரசாங்கம் அங்கீகரித்து, அவைகளை வெளியார் அச்சிட்டு வெளியிடுவதற்கு முன்வந்தால் அரசாங்கம் அதை கவனிக்குமா ? அரசினர் வெளியிடும் விலையை விட குறைவான விலையில் தனிப்பட்டவர்கள் வெளியிடுவதற்கு தயாராக இருந்தால், அரசாங்கம் அந்தப் புத்தகங்கள் வெளியிடும் உரிமைகளை தனிப்பட்டவர்களிடம் அளிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஏழைக் குழந்தைகளுக்கு மட்டும் புத்தகங்கள் தாமதப்பட்டு கிடைக்கிறது என்று கனம் அங்கத்தினர் கூறுவதை நான் புரிந்துகொள்ள முடியவில்லை. கூடிய வரையில் தாமதம் தவிர்க்கப்பட்டு வருகிறது. ஆனால், தனிப்பட்டவர்களிடம் அச்சிடுவதையோ, பதிப்பிப்பதையோ ஒப்புவித்தால் மட்டும் இன்னும் புத்தகங்கள் சீக்கிரம் வந்துவிடும் என்று சொல்லுவதற்கில்லை. கூடியவரையில் புத்தகங்கள் குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற வகையில்தான் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

[12th August 1963

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இம்மாதிரி புத்தகங்களை விற்றுக் கொடுக்கவேண்டுமென்று உபாத்தியாயர்களை நிர்ப்பந்திப்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிள்ளைகள் அல்லவா படிக்க வேண்டும். ஆசிரியர்களை நிர்ப்பந்திக்கவேண்டிய நிமித்தம் ஒன்றுமில்லை. பிள்ளைகள் படிக்க வேண்டியதில்லை என்று சொன்னால், பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டியதில்லை.

*Political sufferers.*

* 105 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have directed the political sufferers who apply for a Government job to obtain a certificate only from the Tamilnad Congress Committee testifying as to the eligibility of the applicant?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes.

திரு. எஸ். மாதவன் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இன்று பல கட்சிகளில் இருப்பதினால், ஒரே கட்சியிடம் சான்றிதழ் வாங்கக்கூடிய வகையில் சட்டம் இயற்றக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இன்று பல கட்சிகளில் இருக்கலாம். ஆனால், அன்று ஒரு கட்சியிலே இருந்தவர்களாதலினால், அந்தக் கட்சியிடமுள்ள தகவல்களிலிருந்து உண்மையாகவே ஒருவர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவரா, தியாகியா என்று பார்த்து அவர்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : அரசியல் தியாகி என்று குறிப்பிடப்படுகிறது. 'தியாகம்' என்பதற்கு 'டெபனிஷன்' சொல்ல முடியுமா ? இதர கட்சியிலுள்ள தியாகிகளுக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசியல் தியாகிகள் என்பவர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர்கள், தியாகம் செய்தவர்கள். அந்த விடுதலைப் போராட்டம் காங்கிரஸ் மகாசபையினால் நடத்தப்பட்டது. காங்கிரஸ் மகாசபையினால் நடத்தப்பட்ட விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறை சென்றோ அல்லது வேறு தியாகம் செய்தவர்களோ இருந்தால், அவர்களுடைய பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவர்களுக்கு சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தியாகம் செய்தவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்களா என்று பார்த்து சலுகை அளிக்கப்படுகிறதா ? அப்படி தியாகம் செய்தவர்கள் பிற கட்சிகளில் இருந்தால், அவர்கள் மனுக்கள் போட்டால் அவர்களுக்கு உத்தியோகங்கள் அளிக்கப்படுகின்றனவா ?



12th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தியாகம் செய்தவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும், அவர்கள் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : காங்கிரஸ் மகாசபை சார்பிலே தியாகம் செய்த பெரியார் ராமசாமி அவர்கள் நிலம் வேண்டும் என்று மனு கொடுத்தாரா ?

MR. SPEAKER : It is question relating to an individual. It is not at all a question of general interest.

SRI K. A. MATHIALAGAN : Sir, it pertains to the main question.

MR. SPEAKER : It does not pertain to the original question. It pertains only to Periyar Ramaswami and not to political sufferers in general.

திரு. கே. ஏ. மதியழகன் : அது மறுக்கப்பட்டது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தியாகம் செய்தவர்களில் பல பேர்கள் மனு போடவில்லை. ஆகையினால், குறிப்பிட்ட ஒருவர் மனு போட்டாரா இல்லையா என்பதைப்பற்றியெல்லாம் தகவல் கிடையாது. பல பேர்கள் போடவில்லை. இன்று அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்று முன்பே சொன்னேன்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் தியாகிகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் இன்னும் எவ்வளவு காலத்திற்குக் கொடுக்கப்படும் ? போராட்டம் நடந்து ரொம்ப நாட்கள் ஆகிறதே ? அதற்கு ஒரு வரையரை ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிலம் கொடுக்கும் விஷயம் 1952-ஆம் ஆண்டோடு நிறுத்தப்பட்டு விட்டது. இப்பொழுது உத்தியோகம் கொடுக்கிற விஷயம் பற்றித்தான் கேள்வி. அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், அவர்களுடைய பெற்றோர்களுக்குக் கூட, அதுவரையில் கொடுப்பது என்று இப்பொழுது உத்தரவு இருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : அரசியல் தியாகிகளுக்கு பஞ்சாயத்து யூனியன்களில் சோஷல் வெல்பேர் வொர்க்கர் என்ற அளவிலே உத்தியோகம் கொடுக்கப்படுகிறது. அவர்களெல்லாம் அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகள் என்று நினைத்து பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளுக்கு கட்டுப்படாமலேயே இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு தனியாக பென்ஷன் கொடுப்பது, அல்லது வேறு தொழிற்சாலைகள் அமைத்து சலுகை கொடுப்பது போன்ற திட்டம் அமைத்து அதை அமுல் நடத்தினால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். அரசாங்கத்தின் யோசனை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பென்ஷன் கொடுப்பது வேறு விஷயம். இது உத்தியோகம் கொடுப்பது. அரசியல் தியாகிகளாக இருந்தாலும், தகுதியுள்ளவர்களுக்குத்தான் உத்தியோகம்

[12th August 1963

கொடுக்கப்படுகிறது. உத்தியோகஸ்தர்கள், அரசியல் தியாகிகளாக இருந்தாலும், கட்டுப்பாட்டுக்கும், ஒழுங்குக்கும் உட்பட்டுத்தான் வேலை செய்யவேண்டும். கனம் அங்கத்தினர் போன்ற பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு அவர்களைப் பிடிக்கவில்லை என்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. க. ர. நல்லசிவம் :** தற்போது தமிழ்நாடு காங்கிரசிடம் இருக்கக்கூடிய அரசியல் தியாகிகளின் பட்டியலில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களின் பெயர்கள் இருப்பதால், வேறு கட்சியில் இருப்பவர்கள் காங்கிரஸ் கமிட்டியிடமிருந்து அந்தப் பட்டியலை பெற சங்கோஜப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பட்டியலை சர்க்காரிடம் கொடுக்க முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சர்க்காரிடம் பட்டியலைக் கொடுக்க வேண்டியதில்லை. வேறு கட்சியில் இருக்கும் தியாகிகள் அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் சர்க்கார் காங்கிரஸ் கமிட்டியைக் கேட்டு, பரிசீலித்து தகுதியுள்ளவர்களுக்குச் சலுகை அளிக்கப் படும்.

**திரு. கே. பொன்னையா :** தலைவர் அவர்களே, நமது திட்டங் களாகிய கதர்த் திட்டம், மதுவிலக்குத் திட்டம், குடிசைத் தொழில் திட்டம், ஆகியவற்றில் எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு நம்பிக்கை இல்லையே, அவர்கள் இந்த உரிமையைக் கொண்டாடு வது நியாயமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவற்றில் எல்லாம் நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி ஒரு சாரரை வைத்துக் கொண்டு சொல்லிவிட முடியாது. யார் அந்த உத்தியோகத்திற்கு வந்தாலும் நம்பிக்கை வைத்துத்தான் செய்ய முடியும். நம்பிக்கை அற்றவர்களாக இருந்தால் உத்தியோகத்திற்கு லாயக்கற்றவர்கள் என்று கருதப்படுவார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அரசியல் தியாகிகளுக்கு 1952-ஆம் வருஷம் வரையில் நிலம் கொடுக்கப்பட்டு வந்தது. எத்தனையோ அரசியல் தியாகிகள் தங்கள் சொத்தையெல்லாம் இழந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால் மறுபடியும் அரசியல் தியாகிகளுக்கு நிலம் கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மேலும் அரசியல் தியாகி களுக்கு நிலம் கொடுப்பதற்கு நிலமும் இல்லை ; அரசாங்கத்திற்கு அந்த உத்தேசமும் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** சார், அன்று நாட்டில் சுதந்திரத்திற் காகத் தியாகம் செய்தவர்கள், இன்று நாட்டைப் பிரிக்க வேண்டு மென்று கூறும் துரோகக் கும்பல்களுடன் சேர்ந்து கொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் இந்தச் சலுகைகள் வழங்குவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நியாயம், நியாயம் இல்லை என்றெல்லாம் கனம் அங்கத்தினர்கள் அபிப்பிராயம் வைத்துக் கொள்ளலாம். நான் முன்பே கூறியபடி எந்தக் கட்சியில் இருந் தாலும் அன்று தியாகம் செய்தவர்களுக்கு இந்தச் சலுகை உண்டு.



12th August 1963]

**திரு. க. தா. பெருமாள் ராஜு :** சார், தியாகிகளுக்கு நிலம்
கொடுத்தும் கூட அதை அவர்களால் அனுபவிக்க முடியாத
நிலைமை இருக்கிறது. பிறர் அவர்களுக்குக் கொடுத்த நிலத்தை
அபகரித்துக் கொண்டு இடைஞ்சல்கள் செய்து கொண்டு வரு
கிறார்கள். அதைச் சர்க்கார் கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை
எடுத்துக் கொள்ளுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதையெல்லாம் கவனித்து சர்க்கார் நடவடிக்கை எடுக்க முடியாது. சில பேர் வழக்குகள் கூட வழக்கு மன்றத்திலே தொடுத்திருக்கிறார்கள். ஆகவேதான், நிலம் வழங்கும் திட்டம் 1952-ஆம் ஆண்டுக்குப் பிறகு தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசியல் தியாகிகள் என்ற முறையில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர் களின் எண்ணிக்கை இதுவரை எவ்வளவு என்ற புள்ளி விவரத்தை தர இயலுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** அரசியல் தியாகிகள் என்ற சலுகை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆகிய யூனியன் சேர்விஸ்களுக்கும் விரிவு படுத்தப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசியல் தியாகிகள் சிலர் ஐ.ஏ.எஸ்.-ஆக இருக்கிறார்கள். அதற்கு என்று தனியாக எதுவும் ஒதுக்கப்படவில்லை.

**திரு. முனு. ஆதி :** பெறுகின்ற நிலத்தை தியாகிகள் விற்று விடுகிறார்கள் என்று சொன்னால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சட்டம், விதிகள் என்னென்ன அனுமதிக்கிறதோ அந்த முறையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** அரசியல் தியாகி என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து அத்தாட்சி பெறும்போது, ஹைஸ்கூல் படிப்புக்கு என்று தனியான ஒரு சர்டிபிகேட்டும், கல்லூரி படிப்புக்கு என்று மறுபடியும் தனியாக ஒரிஜனல் சர்டிபி கேட்டும், பிறகு உத்தியோகத்துக்குப் போகிற போது இன்னொரு ஒரிஜனல் சர்டிபிகேட்டும் கோரப்படுகிற தகவல் அரசாங்கத்துக்கு வந்திருக்கிறதா ? பல முறை ஒரிஜனல் சர்டிபிகேட் வாங்காமல் அதற்குரிய 'ட்ரூ காப்பி' போதும் என்ற விதியினைச் செய்ய அர்சாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு தகவல் ஒன்றுமில்லை. இந்த முறையிலே சிறிது அசௌகரியம் இருக்கிறது என்ற போதிலும் ஒரிஜினல் சர்டிபிகேட்டைக் கோருவதின் காரணமாகத் தவறுதல் ஏற்படாமல் இருக்க வழி இருக்கும்.

[12th August 1963

**திரு. இராம. அரங்கண்ணல்:** அமைச்சர்களால் தியாகிகள் எத்தனை பேர்? அவர்களில் யாராவது தியாக மானியம் பெற்றிருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் நிலம் வாங்கிய அரசியல் தியாகிகள் சிலர்களுக்கு இந்தியாவைக் காட்டிக் கொடுக்கக் கூடிய துரோகக் கும்பல்களோடு சேர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அப்படி எல்லாம் பார்த்துக் கொண்டு போனால் அதற்கு முடிவே இல்லை. அன்று தியாகம் செய்தவர்கள் இன்று அந்தத் தியாகத்தை நினைத்து, பயன்படுத்தப் பார்க்கிறார்கள். அதுவே போதும்.

**திரு. வை. சங்கரன்:** நோய்வாய்ப்பட்டு வேலை செய்ய முடியாத நிலைமையில் இருக்கும்படியான அரசியல் தியாகிகளுக்குப் பென்ஷன் மாதிரி ஏதாவது தொகை கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு அரசினர் கொடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** தியாகிகளுக்கு, இருக்க வேண்டிய தகுதிகள் யாவை என அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தியாகிகள் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டு, தியாகம் புரிந்தவர்களாக இருக்க வேண்டும். தியாகத்துக்கு ஒரு அடையாளம் அவர்கள் சிறை சென்றவர்களாக இருக்கவேண்டும். குறிப்பிட்ட வேலைக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். வயது போன்றவற்றில் அவர்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி:** சார், நேதாஜியின் இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதுவும் அளிக்கப்பட்டுதான் வருகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** சார், தியாகிகள் என்று சர்டிபிகேட் பெறும்போதே மூன்று ஒரிஜினல் சர்டிபிகேட்டைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர்:** அரசியல் தியாகிகள் நாட்டின் சுதந்திரத்திற்காகச் செய்த சேவையை நினைத்துத்தான் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தில் வேலை



12th August 1963]

வாய்ப்புக் கிடைக்காமல் கஷ்டப்படுகிற தியாகிகளுக்கும் அவர்களுடைய நிலையை உத்தேசித்து சர்க்கார் வேலை கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்போது அமுலில் இருக்கும் முறையில் வேறு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவை கவனிக்கப்படும்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** தலைவர் அவர்களே, நிலங்கள் பெற்ற தியாகிகள் பலருக்கு இன்னும் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. அதனால் அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, இம்மாதிரி தியாகி நிலம் பெற்றவர்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** குறிப்பிட்ட தகவலைக் கேள்வி மூலமோ அல்லது சம்பந்தப்பட்ட கனம் அமைச்சர் அவர்களுக்கோ எழுதி அனுப்பினால் கவனிக்கப்படும்.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர்:** சார், விடுதலைப் போராட்டத்தில் எந்த எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்? அதில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கலந்து கொண்டனரா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டது காங்கிரஸ் ஒன்றுதான். அதற்குப் பிறகு அவர்கள் வேறு வேறு கட்சிகளில் சேர்ந்து கொண்டிருக்கலாம்.

**திரு. சி. பொன்னுசாமி:** பல தியாகிகள் நிலம் வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறும் இருக்கக்கூடும்.

**திருமதி எ. எஸ். பொன்னம்மாள்:** அரசியல் தியாகிகளுக்குப் பணம் கொடுக்கும் முறை இருக்கிறதா? அப்படியானால் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை பேருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது என்ற புள்ளிவிவரத்தை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரசியல் தியாகிகளில் கஷ்டப்படுகிறவர்கள் சிலருக்கு, மத்திய அரசினர் ஆராய்ந்து பணச் சலுகை கொடுக்கிறார்கள். அந்தப் பணத்தை மொத்தமாகக் கொடுக்கிறார்கள். மாதந்தோறும் பணம் கொடுப்பதாக இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு இலவச வைத்திய வசதி, இலவசக் கல்வி வசதி ஆகியவை அளிக்கப்படுகின்றனவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப் பற்றியெல்லாம் தனிக் கேள்வி வேண்டும்.

[12th August 1963

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், முன்பு அரசியல் தியாகி களுக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டபோது சிலருக்கு நல்ல நிலங் களும், சிலருக்கு மட்டமான நிலங்களும் கொடுக்கப்பட்டன. செல் வாக்குப் பெற்ற அரசியல் தியாகிகளுக்கு நல்ல நிலங்கள் கொடுக் கப்பட்டன என்றும், செல்வாக்கு இல்லாத அரசியல் தியாகிகளுக் குப் பிரயோசனம் இல்லாத நிலங்கள் கொடுக்கப்பட்டன என்பதும் உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவரவர்கள் பெறும் நிலம் கெட்டதா, நல்லதா, பயனுள்ளதா, பயனற்றதா என்பது அவரவர் கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

திரு. எம். எஸ். மணி : ஸார், விடுதலைப் போராட்டத்தின் போது திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்படவில்லை என் பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வரைக்கும் நல்லது. திராவிட முன்னேற்றக் கழகம் விடுதலைப் போராட்டத்தை எதிர் க்கவில்லை என்பது, பின்னால் பிறந்த திராவிட முன்னேற்றக் கழகத் திற்கு திருப்தி அளிக்கக் கூடியதுதான்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஸார், அமைச்சர் அவர்கள் மத்திய அரசிலிருந்து பணம் கொடுப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு கொடுக்கப்படுகிறது ? ஆண்டு ஒன்றுக்கா அல்லது ஐந்து ஆண்டு களுக்கு ஒரு தடவை கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரே முறையாகத்தான் கொடுக்கிறார்கள். அவரவர் நிலைமைக்குத் தகுந்தவாறு கொடுக் கிறார்கள். தேவைக்குத் தக்கவாறு கொடுக்கிறார்கள். நூறு ரூபாயாகவும் இருக்கலாம். 5,000 ரூபாயாகவும் இருக்கலாம். எல்லாவற்றையும் நன்கு பரிசீலனை செய்துதான் கொடுக்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : கொடுக்கப்படும் பணம் அரசாங்கத்தின் பணமா, அல்லது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலிருந்து கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசினர் கொடுக் கிறார்கள் என்று சொன்னேன். அதற்கு மேல் தகவல் வேண்டு மானால் கனம் அங்கத்தினர் தன்னுடைய நண்பர்களுக்குச் சொல்லி பார்லிமெண்டில் கேள்விகள் கேட்கச் சொல்லலாம்.

*Construction of bridge (Alangudi taluk)*

* 106 Q.—Sri P. MURUGAIYAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to construct a bridge across the Vellanad Kanmoi in Alangudi taluk on the cart track from Vallathirakottai in view of the fact that the agriculturists have to take a round about route during the rainy season to reach the fields, as the bank of the Kanmoi is lengthy?

The Hon. Sri M. BHAKTAVATSALAM :



12th August 1963]

திரு. பி. முருகையன் : ஸார், இந்தக் கண்மாய் சுமார் 7 மைல் கரையுடையதாக இருக்கிறது. விவசாயிகள் விவசாயம் செய்ய மழை காலத்தில் போவதற்குக் கஷ்டப்படுகிறார்கள் ; தற்போது ஏரியின் நடுவில் ஒரு ரோடு இருக்கிறது. அதன் மீது ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவச்சலம் : இதுபற்றி மதிப்பிடப் பட்டது. இதற்கு 40,000 ரூபாய் ஆகிறது. வில்லேஜ் வொர்க்ஸ் ப்ரோக்ராமிலிருந்து 15,000 ரூபாய் வரையில் கொடுக்கலாம். அதற்கு மேல் கொடுக்கமுடியாது. பஞ்சாயத்தும், பொது மக்களும் உதவி அளிக்க முன் வந்தால் அதை நிறைவேற்றிக் கொள்ளலாம். பஞ்சாயத்தில் நிதி இல்லை என்று சொல்லி விட்டார் கள். அக்கரை உள்ள பொது மக்களும் நிதி வசூலிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

டாக்சிகள்.

* 107 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா :—

(அ) கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச் சிராப்பள்ளி முதலிய நகரங்களில் ஓடுகின்ற டாக்சிகளுக்கு மீட்டர் அமைக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதா ?

(இ) இல்லையென்றால், இனிமேலாவது மீட்டர் வைக்கும்படி சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) Under the Madras Motor Vehicles Rules, taxis plying in the mofussil should be fitted with either taxi-meters or mile-meters.

* 108 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா :—

(அ) தற்போது சென்னை நகரில் எத்தனை டாக்சிகள் உள்ளன?

(இ) இரவு 8 மணிக்கு மேல் டாக்சிகள் ஓடுவதற்கான வசதி செய்ய உத்தேசமுண்டா ?

The Hon. Sri M BHAKTAVATSALAM : (a) 1,607.

(b) There is no time restriction for plying taxis.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், சென்னை நகரில் போலீஸ் உபத்திரவத்தால் இரவு 9 மணிக்கு மேல் அதிகமாக டாக்ஸி ஓடுவது இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் :- அது கனம் அங்கத்தினர் கருத்தாக இருக்கலாம். போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்தும் கொண்டாலும் அதை அவர்கள் உபத்திரவம் செய்கிறார்கள் என்று சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. எவ்வளவோ விபத்துக்கள் ஏற்படுகின்றன. டாக்ஸி டிரைவர்கள்

தவறுதலாக ஓட்டுகிறார்கள். போலீஸ் நடவடிக்கை மக்களை பாதிக்கிறது, அதனால் தான் இரவில் டாக்ஸிகள் ஓடமுடியவில்லை என்று சொல்லுவதையும் நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னை நகரில் அனுமதிக்கப் பட்டிருக்கிற டாக்ஸிகளின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது தேவைப்பட்ட அளவுக்கு அனுமதி வைக்கப்பட்டிருக்கிதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உச்ச வரம்பு ஒன்றும் இல்லை. மேலும் கூட டாக்ஸிகள் அனுமதிக்க வேண்டும் என்பது அரசாங் கத்தின் கருத்து. அதிலும் ஃப்ளீட் சொந்தக்காரர்களுக்குக் கூட டாக்ஸி கொடுக்கலாம், அவர்கள் அதிகமாக வைத்துக் கொள்ள லாம், அதனால் நெருக்கடி அகற்றப்படும் என்று அவர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. பொன்னுசாமி :** டாக்ஸி ட்ரைவர்கள், அவர்களாக டாக்ஸி வாங்கிக் கொள்ள வசதியாக ஃபைனான்ஸிங் கார்ப்பொ ரேஷன் கடன் உதவி செய்ய பணம் ஒதுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கு ஃபைனான்ஸிங் கார்ப் பொரேஷன் வேண்டுமென்பதல்ல. வேறு வகையில் ஏற்பாடு செய்து கொள்ளலாம். கூட்டுறவு ஸ்தாபனம் வைத்துக் கொள்ள லாம். ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் வைத்துக்கொண்டு டாக்ஸி வாங்கி ஓட்டலாம்.

**திரு. எம். எஸ். மணி :** சென்னை நகரில், இரவில் பொது மக்க களுக்கு வசதியாக இரவு நேரத்தில் ஓட்டுவதற்கு சில டாக்ஸி களுக்கு அரசாங்கம் லைசென்ஸ் வழங்கி இரவு நேரத்தில் மட்டும் ஓடக்கூடிய டாக்ஸிகளுக்கு வழிவகைச் செய்ய அரசாங்கம் ஏற் பாடு செய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இரவில் மட்டும் ஓட்டுவதற்கு லைசென்ஸ் வழங்கினால் அப்படி டாக்ஸிகளை ஓட்ட யாரும் முன் வர மாட்டார்கள். பகல், இரவு ஆகிய இரண்டு வேளைகளிலும் ஓட்டு வதற்குத் தான் லைசென்ஸ். இன்னும் லைசென்ஸ் கொஞ்சம் அதிக மாகக் கொடுத்தால் இரவு நேரங்களில் அதிகமாகக் கிடைக்கும் என்பது அரசாங்கத்தின் கருத்து.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இப்போது ஓடிக் கொண்டிருக்கக் கூடிய டாக்ஸிகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ள திட்டம் ஏதாவது உண்டா? அந்த மாதிரி எடுத்துக் கொண்டு பொது மக்களுக்குச் சௌகரியம் செய்ய உத்தேசம் இருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ஒன்றும் உத்தேசம் இல்லை.





**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, இரவு 10 மணிக்கு மேல் ஓடக் கூடிய டாக்ஸியை அழைத்தால் அதிகமான கட்டணம் கொடுக்க வேண்டுமென்று டிரைவர்கள் கேட்கிறார்களே, அவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பாதிக்கப்பட்டவர்கள் போலீ ஸாரிடம் சொல்லி புகார் செய்தால் அதைப் பற்றி கவனம் செலுத்த லாம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சென்னை நகரத்தில் இருக்கிற டாக்ஸி டிரைவர்கள் சங்கத்திலிருந்து கூட்டுறவு முறையில் டாக்ஸி கள் ஓட்டவேண்டுமென்று விண்ணப்பம் ஏதாவது வந்திருக்கிறதா? அது ஆலோசிக்கப்பட்டதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை.

**திரு. வை. சங்கரன் :** ஒரு சிலரிடத்தில் 10-12 டாக்ஸிகளுக்கு மேல் இருக்கின்றன. நிலத்திற்கு உச்ச வரம்பு வைத்திருப்பது போல ஒருவர் இவ்வளவு டாக்ஸிகள் தான் வைத்துக் கொள்ள லாம் என்று உச்ச வரம்பு வைக்க சர்க்கார் யோசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது டாக்ஸி பற்றாக் குறை இருப்பதால் அவ்வாறு இன்று உச்ச வரம்பு வைக்க வேண் டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, டாக்ஸிகளில் இப்போது உட்கார அனுமதிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கை மூன்று என்று இருக்கிறது. அந்த எண்ணிக்கையை நான்கு ஆக உயர்த்து வதற்கு அரசினருக்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு உத்தேசம் இல்லை.

### சட்டசபை அங்கத்தினர்களுக்கு கார் விற்பனை

*109 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

எம்.எல்.ஏ.-க்களுக்கு, தங்கள் பணியைச் செவ்வனே செய் யும் வகையில் சிறிய கார்கள் (பியட், ஸ்டாண்டர்டு, அம்பாசிடர்) விரைவில் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்து தரும் உத்தேச முண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal.

**திரு. இராம. அரங்கண்ணல் :** பாராளுமன்ற உறுப்பினர் 9-00 a.m.
களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதோடு பக்கத்

தில் இருக்கும் ஆந்திரம், மராத்தி ஆகிய மாநிலங்களில் இந்தச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. இங்கு மட்டும் வழங்க நம் அரசு முன் வராத காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு யார் யாருக்கு எந்தெந்த மாநிலங்களில் அல்லது மத்திய பார்லிமெண்டில் இந்தச சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த மாநிலத்தைப் பொருத்த மட்டில் போதிய கார்கள் இல்லை. நான்கு-ஐந்து கார்கள் அப்போதைக்கப்போது அலாட் செய்யப்படுகின்றன. அவைகள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் போன்றவர்களுக்கு அலாட் செய்யப்படுகின்றன. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அலாட் செய்யவேண்டுமானால் அதிகமான கார்கள் வேண்டும். அவ்வளவு தூரம் கார்கள் இல்லை. அது தான் முக்கிய காரணம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** வெளியில் சட்ட மன்ற அங்கத்தினர்கள் வட்டார ஜீப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள அரசு அண்மையில் ஆணை பிறப்பித்திருக்கிறது. சென்னை நகரத்தில் இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அந்த சலுகை இல்லை. சென்னை நகர உறுப்பினர்களுக்கு மட்டுமாவது கார்களை அலாட் செய்யும் விஷயத்தைப் பற்றி அரசு கவனிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில் எனது மதிப்புக்குரிய தொழில் அமைச்சர் நல்ல பஸ் சர்வீஸ் வைத்திருக்கிறார். அதனால் அவர்களுக்கு கஷ்டம் ஒன்றும் இல்லை.

**திரு. வை. சங்கரன் :** 1947-லிருந்து 1952 வரையில் இருந்த அசெம்ப்ளி டைமில் நெருக்கடி ஏற்பட்ட போது இந்த மாதிரி அப்போது எம்.எல்.ஏ.-க்களுக்கு ப்ரையாரிட்டி பர்மிட் வழங்கியது ஞாபகம் இருக்கலாம். அந்த மாதிரி முறையில் இப்போது வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்போது எவ்வளவோ தொல்லை ஏற்பட்டது. அப்போது கொஞ்சம் கார்கள் அதிகமாகக் கிடைத்திருக்கலாம். இப்போது பெரிய கார்கள் நிறுத்தப்பட்டு விட்டன. சில கார்கள் இங்கேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. போதிய கார்கள் இப்போது இல்லாதது ஒன்று. இன்னும் சட்ட மன்றத்தின் ஸ்தானங்கள் கூட 234 ஆகப் போகிறது. எண்ணிக்கை அதிகமாகப் போகிறது. ஆனால் கார்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** அப்புறம் கூடுதலாகச் சம்பளம் கேட்க ஆரம்பித்து விடக் கூடாது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சட்ட மன்ற உறுப்பினர்கள் இப்போது பழைய கார்கள் வாங்கிக்கொண்டு வரும்போது அந்தக் கார்கள் போடும் சப்தம் கோட்டைக்குள் வந்து விட்டால் இங்கே இந்த மன்றக் கூட்டத்தை நடத்த முடியாது; அதோடு கார்கள் வழியிலும் நின்று விடக் கூடிய நிலைமை இருக்கிறது. ஐந்து வரு-



ஷத்திற்கு ஒரு முறை, 205 ஆனாலும், 234 ஆனாலும், எப்படியானாலும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பர்மிட் வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மற்றவர்களும் கார்கள் வாங்கிக் கொண்டு தான் இருக்கிறார்கள், கம்பெனிகளிடமிருந்து. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கார் இருந்தால் போதும் என்றால் அரசாங்கம் இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யாமலேயே சாதாரணமாக கம்பெனிகளிடமிருந்து வாங்கிக் கொள்ள முடியும். சலுகை பெற விரும்புகிறவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது ஆண்டுக்கு ஒரு முறை என்று கூட கேட்கிறார்கள்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** சட்ட மன்றத்திலே பெண்கள் குறைவான எண்ணிக்கையில் இருப்பதன் காரணமாக, பெண்களுக்காவது கார்கள் கிடைப்பதற்கான சலுகையைக் கொடுக்க முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆண்களும் பெண்களும் சரி நிகர்சமம் என்ற அடிப்படையில் சம உரிமையே தவிர, பாகுபாடு செய்ய முடியாது. (சிரிப்பு.)

**திரு. இராம. அரங்கண்ணல் :** கவர்ன்மெண்ட் அஃபிஷியல்ஸ், க்வாஸி-கவர்ன்மெண்ட் அஃபிஷியல்ஸ் ஆகியவர்களுக்கு கார் வாங்குவதற்கான பர்மிட் கொடுக்கப்படுகிறது. சட்ட மன்ற உறுப்பினர்களுக்குப் பொறுப்பு அதிகமாக இருக்கிறது. சென்னை நகரத்தில் இரவு நேரத்தில் டாக்ஸிகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. பஸ்களும் தேவையான நேரங்களில் கிடைப்பதில்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள் அங்குமிங்கும் ஓட வேண்டியிருக்கிறது. இவை எல்லாவற்றையும் கவனித்து, எம்.எல்.ஏ-க்களுக்கு நல்ல முறையில் உதவி செய்யவேண்டும் என்கிற மனப்பான்மையோடு, ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை பர்மிட் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் 25 பேர்கள் கேட்டால் ஐந்து பேர்களுக்குத்தான் பர்மிட் கொடுக்கப்படுகிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் 50 பேர்கள் கேட்டுக் கொண்டிருந்து, அவர்களில் நான்கு பேர்களுக்குக் கொடுத்து விட்டு, மற்றவர்களுக்குக் கொடுக்காமலிருந்தால் அது முறையாகாது என்று கார் வரும். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பர்மிட் கொடுத்தால் போதும் என்று இருந்தால், சர்க்காரின் தலையீடே இல்லாமல் சுலபமாக கார் கிடைத்துவிடும்.

**திரு. எம். எஸ். மணி :** பஞ்சாயத்து யூனியனிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்து ஜீப்களை உபயோகித்துக் கொள்ள அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. அதே போல், நகராட்சி மன்றத்திலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் நகராட்சி ஜீப்களை உபயோகிக்க அனுமதி தரப்படுமா?

[12th August 1963

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு பொருந்தாது. நகர மன்ற மோட்டார் கார்களை உபயோகிக்க அனுமதிக்க முடியாது. அவர்களும் கொடுக்கமாட்டார்கள். நகர மன்றத்தினர் ஒப்புக் கொண்டால் அரசாங்கத்திற்கு அதிலே ஆட்சேபனை இருக்காது.

**திரு. ம. கமலநாதன் :** பஞ்சாயத்து யூனியனுடைய ஜீப்பைச் சட்டமன்ற உறுப்பினர்கள் உபயோகிக்கும்போது, அதற்கு ஆகும் பெட்ரோல் செலவைச் சட்ட மன்ற உறுப்பினரே ஏற்றுக் கொள்ள வேண்டுமா அல்லது, பஞ்சாயத்து யூனியனே ஏற்றுக் கொள்ள வேண்டுமா? பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெட்ரோல் அலாட்மெண்ட் கோட்டாவை அதிகமாக்க முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி எனக்குத் தகவல் தெரியாது. தனிக் கேள்வி போடலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** மாதந்தோறும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கென்று ஒரு கோட்டா இருக்கிறது. அதில் ஒரு பகுதியை எம்.எல்.ஏ.-க்களுக்கென்று ஒதுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போதே போதிய அளவில், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய தேவைக்கேற்றவாறு கொடுப்பதற்கில்லை. அதையும் குறைப்பதற்கில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கார் உற்பத்தியை அதிகமாகப் பெருக்கி, சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கார் உற்பத்தியைப் பெருக்குவதிலே இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. உற்பத்தி பெருகிவிட்டால் அரசாங்கத்தின் தலையீடு இல்லாமலேயே சாதாரணமாக கனம் உறுப்பினர்களுக்குக் கார் கிடைக்கும்.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்களைப் பார்த்து, 'எங்களுக்குக் கார் கொடுத்து விட்டார்கள், உங்களுக்கு இல்லையா?' என்று கேட்கிறார்கள். அது எங்களுக்கு மிகவும் கேவலமாகத் தெரிகிறது. (சிரிப்பு.) அதற்காகவாவது அரசாங்கம் எங்களுக்குக் கார் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நாம் அதைக் கேவலமாகக் கருதக் கூடாது. அவர்கள் 'பார் ஆளும்' மன்ற உறுப்பினர்கள். (சிரிப்பு.)

**திரு. ஜே. மாதா கவுடர் :** அவசர காலங்களிலும், எந்த நேரத்திலும் நோயாளிகளைப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கும் டாக்டர்களுக்குக் கார் பர்மிட் வழங்குவதற்காவது முதல் இடம் கொடுக்கப்படுமா?



12th August 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டாக்டர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருந்தால், அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. மற்ற டாக்டர்களுக்கும் கம்பெனியார்களே கொஞ்சம் சலுகை காட்டித்தான் வருகிறார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. வை. சங்கரன் :** கனம் அங்கத்தினர் திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் விரும்புகிறபடி, சென்னை நகரத்தில் இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் கார் பர்மிட் வழங்கிவிட்டு, மற்ற இடங்களில் இருப்பவர்களுக்கு வழங்கவில்லையென்றால், அது 'டிஸ்கிரிமினேஷன்' செய்யப்பட்டதாகச் சொல்லி, 'ரிட்' போடுவதற்கு இடமளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு).

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் வழக்கறிஞர். 'ரிட்' அவர்களுக்குத் தண்ணீர் பட்ட பாடமாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்காமல் இருப்பதற்கில்லை. (சிரிப்பு).

**திருமதி சி. குழந்தையம்மாள் :** 'சர்க்கார் உத்தியோகஸ்தர்' என்கிற 'காடிகரி'யிலே கனம் அமைச்சர்கள் சொந்த முறையில் கார் வாங்கிக்கொள்ள சட்டம் இடங்கொடுக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுகூட இல்லை. அமைச்சர்கள் தனிப்பட்ட ஹோதாவில் 'சொந்த உபயோகத்திற்கு' என்று கேட்டால்கூட, இந்தச் சலுகையிலே சேர்க்கவில்லை. 'சேர்க்க முடியாது' என்றே அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

## கலை அரங்கு (அரக்கோணம்)

*110 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரசபையினரிடமிருந்து கலை அரங்கு ஒன்று வாங்க அனுமதி கோரி தீர்மானம் வந்ததா?

(இ) அதன் மீது சர்க்கார் என்ன முடிவு செய்தனர்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

## *Junior Polytechnic Schools*

*111 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the places where the Junior Polytechnic Schools are to be opened during 1963; and

(*b*) when they would be opened?

[12th August 1963

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Thoovakudi, Vellore and Nagercoil.

(b) Already opened in July 1963.

*திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:* பாலிடெக்னிக்குகளுக்கும் ஜூனியர் பாலிடெக்னிக் பள்ளிகளுக்கும் ஏதேனும் வித்தியாசம் உண்டா? அப்படியானால், என்ன வித்தியாசம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பாலிடெக்னிக் படிப்பு என்பது எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் மூன்று வருஷம் பயிற்சி பெற்று டிப்ளமா ஹோல்டர் ஆவது. அது சூபர்வைசர் கிரேடு. ஜூனியர் பாலிடெக்னிக் என்பது, ஹைஸ்கூலில் எட்டாவது வரையில் ஒரு க்ராஃப்டை எடுத்துக்கொண்டு படிப்பது. அவர்கள் இன்ட்ஸ்ட்ரியல் ட்ரெயினிங் ஸ்கூலில் எல்லாவிதமான க்ராஃப்ட்டுகளும் கற்றுக் கொள்ளுவார்கள். சாதாரண பாடமும் ஒரு தொழிலும் சேர்த்துப் படிக்கிற பள்ளிக்கூடம் ஜூனியர் டெக்னிகல் ஸ்கூல் ஆகும்.

*திருமதி சி. குழந்தையம்மாள்:* கோவை மாவட்டத்திலிருந்து, 'பெண்களுக்கென ஒரு பாலிடெக்னிக் வைக்கவேண்டும்' என விண்ணப்பம் அரசாங்கத்திற்கு வந்ததா? அதற்கு என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இன்னும் முடிவு எடுக்கப் படவில்லை.

*திரு. வீ. ராமனுதன்:* திருச்சி மாவட்டம் கரூரில் பாலிடெக்னிக் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** மூலக் கேள்வி ஜூனியர் டெக்னிகல் ஸ்கூல்ஸ் சம்பந்தமானது. பாலிடெக்னிக் சம்பந்தமான தகவல் வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் பார்த்து பதில் சொல்கிறேன்.

### *Text books for High Schools*

*112 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether students are experiencing any difficulty in getting the books prescribed for the High Schools, published by the Government; and

(b) if so, the action taken to get over the difficulty?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have not received any representation in this regard.

(b) Does not arise.

*திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:* நான் இந்தக் கேள்வி போடும் போடி இருந்த நிலையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.



12th August 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** உயர்நிலைப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில், எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்கு வேண்டிய புத்தகங்களைப் பல்கலைக் கழகத்தினர் போடுகிறார்கள். மற்ற பாடப் புத்தகங்களைத் தனியாக அரசசாங்கம் போடுவது இல்லை. பல்கலைக் கழகத்தினரும் போடுவது இல்லை. பாடப் புத்தகக் கமிட்டியினரால் அங்கீகரிக்கப்படும் புத்தகங்கள்தான் விற்கப்படுகின்றன. அதிலே வேறொன்றும் புகார் இருப்பதாகத் தெரியவில்லை.

*திரு. கூவ. சங்கரன்:* குறிப்பாக, ஹைஸ்கூல் வகுப்புகளுக்கு வேண்டிய அட்லாஸ் கிடைப்பதே இல்லை. 'ஸ்டாக் இல்லை' என்று சொல்கிறார்கள். சர்க்காரே அட்லாஸ் வெளியிட்டு உதவ முன் வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது கவனிக்கப்பட்டு வருகிறது.

*திருமதி சி. குழந்தையம்மாள்:* இந்தப் புத்தகங்கள் கால தாமதம் இல்லாமல் கிடைக்க புத்தகக் கமிட்டி குறைந்தது மூன்று மாதங்கள் அல்லது நான்கு மாதங்களுக்கு முன்பு கூடி முடிவு எடுக்கும்படி அரசினர் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** புத்தக அங்கீகரிக்கும் கமிட்டியால்தான் இந்தத் தாமதம் ஏற்படுகிறதாக எனக்குத் தெரியவில்லை.

*திரு. கரு. சீமைச்சாமி:* இந்தப் புத்தகக் கமிட்டி, பள்ளிக்கூடம் திறந்தவுடன்தான் கூடுகிறது. ஆகையால், புத்தகங்களை அங்கீகரிக்கத் தாமதம் ஏற்படுகிறது. வருடாந்திரப் பரீட்சை முடிந்தவுடனேயே அந்தப் புத்தகக் கமிட்டி கூடி, அடுத்த ஆண்டு என்ன புத்தகங்களை வைக்கவேண்டும் என்பதை முடிவு செய்து விட்டால் புத்தகங்கள் தாமதமன்னியில் கிடைக்கும் என்பதை அமைச்சர் அறிவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** புத்தகம் அங்கீகரிக்கும் குழுவால்தான் இந்தத் தாமதம் ஏற்படுகிறது என்று நான் கருதவில்லை என்று நான் இப்பொழுதுதான் பதில் கூறினேன்.

*திரு. இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே, புத்தகங்களை வெளியிடுவதற்கு எந்த எந்த வகையிலே தாமதம் ஏற்படுகிறது என்பதை ஆராய்வதற்கு அரசினர் முயற்சி எடுத்தார்களா? எடுத்திருந்தால், அடுத்த ஆண்டிலிருந்து இந்தத் தமாதம் ஏற்படாமல் தடுத்து நிறுத்தப்படுவதற்கு வழிவகை ஏற்படுத்த அரசினருக்கு உத்தேசம் உண்டா?

**கனம். திரு. எம். பக்தவத்சலம்:** அரசாங்கத்திற்கு, இம்மாதிரி தாமதம் ஏற்படுவதாகப் புகார் வரவில்லை. தாமதம் ஏற்படுவதற்கு ஒரு காரணம், அந்தந்த உயர்நிலைப்பள்ளி நிர்வாகிகள், இன்ன புத்தகங்களைத் தெரிந்தெடுக்கவேண்டும் என்று முடிவு செய்வதிலே தாமதம் ஏற்பட்டிருக்கலாம். இதுவரை புகார் வரவில்லை. புத்தகங்கள் குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கச் செய்யவேண்டும், என்பதிலே அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

## பஞ்சாயத்து யூனியன்கள் (புதிய கட்டடங்கள்)

* 113 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் எத்தனை பஞ்சாயத்து யூனியன்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன?

(இ) அவற்றிற்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) 86.

(இ) 1963 ஜனவரி முடிய 32.51 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

(a) 86.

(b) Rs. 32.51 lakhs upto the end of January 1963.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களுடைய கட்டிடங்களுக்காக செலவிடப்பட்ட தொகை மட்டுமா? அல்லது அதோடு இருக்கிற சிப்பந்திகளுடைய கட்டிடங்களுக்கும் சேர்த்துச் செலவிடப்பட்ட தொகையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** யூனியன் கட்டிடங்கள் என்றால் அங்கங்கே இருக்கிற சிப்பந்திகளுக்கும் கட்டிடம் கட்டப்பட்ட செலவையும் சேர்த்துத்தான் சொன்னேன்.

**திரு. எம். தண்டாயுதபாணி:** பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கட்டிடம் கட்டத் துவங்கப்பட்டு, நெருக்கடி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற கட்டிடங்களை மீண்டும் துவங்க சர்க்கார் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது இப்போது கவனிக்கப்பட்டுதான் வருகிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** மதுரை மாவட்டத்தில் சில பஞ்சாயத்து யூனியன் கட்டிடங்கள் ஜனப் போக்குவரத்து வசதியே இல்லாத அனாதையான இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது. கட்சி விருப்பு வெறுப்பை வைத்து இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதா அல்லது வேறு என்ன காரணத்தினால் என அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கட்டிடம் கட்டுவதற்குத் தகுதியான இடம் சில கிராமங்களில் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது கலெக்டர் இருக்கக்கூடிய எல்லா விஷயங்களையும் நன்றாகக் கலந்து பார்த்து ஆலோசித்தே முடிவு செய்வார்கள்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** இப்போது இம்மாதிரி கட்டிடம் கட்டுவதற்குக் காண்டிராக்ட் விடுகிறார்கள். இதனால் அதிகமான காலதாமதம் ஆகிறது. இவ்வளவு காலத்திற்குள்ளாகக் கட்ட வேண்டுமென்ற காலவரையறை விதிப்பது கிடையாதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதுபற்றியெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது.





**திரு. டி. கார்ச்சா கவுடர்:** புதிதாகக் கட்டப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கட்டிடத்தில் டெலிபோன் வசதி வைக்காததனாலே மிகவும் கஷ்டப்படுகிறார்களே. ஆகவே இனி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கட்டிடத்திலும் டெலிபோன் வசதி செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலும் டெலிபோன் வசதி செய்து கொடுப்பது சாத்தியமாக இராது. எந்த எந்த ஊரில் டெலிபோன் வசதி ஏற்கனவே இருக்கிறதோ அந்த அந்த ஊரில் உள்ள பஞ்சாயத்து யூனியன் கட்டிடங்களுக்கு வேண்டுமானால் டெலிபோன் வசதி அளிக்கலாம். அதுவும் ஒரு பஞ்சாயத்து யூனியன் டெலிபோன் மூலமாகக் காரியங்களை கவனிக்கவேண்டிய அவசியம் அதிகமாக இருக்காது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் எக்ஸ்டென்ஷன் ஆபீசருக்கு மட்டும் குடியிருப்பு கட்டிடம் கட்டிக்கொடுத்துவிட்டு மற்ற குமாஸ்தாக்களுக்குக் குடியிருப்பு கட்டிடம் கட்டிக்கொடுக்கப்படாமல் விடப்படுவதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம் பக்தவத்சலம்:** கூடிய வரையில் எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் தான் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. முதலிலே எக்ஸ்டென்ஷன் ஆபீசருக்குக் கட்டிக் கொடுக்கலாம். பிறகு மற்றவர்களுக்கும் கட்டிக் கொடுக்கப்படும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** பஞ்சாயத்து யூனியன் கட்டிடத்திற்கு ஒதுக்கப்படும் தொகை எந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கட்டிடம் கட்ட திட்டமிடும்போது அந்த அந்தக் கட்டிடத்திற்கு என்ன எஸ்டிமேட் போடப்படுகிறதோ அந்த அடிப்படையில் அனுமதிக்கப்படுகிறது.

**திரு. முனு. ஆதி:** எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டு, மற்றவர்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படாமல் விடப்பட்டாலும், அதைச் சுற்றியிருக்கிற சர்க்கார் புறம்போக்கு நிலங்களையாவது காட்டினால் அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு பட்டா செய்து கொடுக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதுபற்றித் தனிக் கேள்வி போடவேண்டும்.

## சிறு தொழில்கள் (தென் ஆற்காடு)

* 114 கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்துக்கு தென்னாற்காடு ஜில்லாவில் சிறு கைத்தொழில்கள் நிறுவ எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது?

[12th August 1963

(இ) என்னென்ன சிறு தொழில்கள் எங்கெங்கே நிறுவப்படும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) தென் ஆர்க்காடு மாவட்டத்தில், குறிப்பிட்ட சிறு கைத்தொழில் யூனிட்டுகளை நிறுவுவதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 90.63 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) கீழே கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளன :—

1. விருத்தாசலம்—மெருகிட்ட குழாய்கள் தயாரிப்புத் தொழிற்சாலை.

2. விருத்தாசலம்—மட்பாண்டங்கள் தயாரிப்புப் பயிற்சிப் பள்ளி.

3. விருத்தாசலம்—மட்பாண்டங்களுக்கான தொழிற் பேட்டை.

4. விருத்தாசலம்—வெப்பம் தாங்கும் கற்கள் (Refractories) தயாரிப்புப் தொழிற்சாலை.

5. விழுப்புரம்—பொதுநோக்கப் பொறியியல் பட்டறை.

6. நெய்வேலிப்பகுதி—ஆக்டிவ் கார்பன் (Active carbon) தயாரிப்புத் தொழிற்சாலை.

இவைகள் தவிர, விருத்தாசலத்தில் உள்ள மட்பாண்டங்கள் தயாரிப்பு நிலையத்தினை விரிவுபடுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, மட்பாண்டம் தயாரிக்கும் பயிற்சி நிலையத்திற்கு ஆசிரியராக வருகிறவர்களுக்கு என்ன என்ன தகுதி இருக்கவேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தகுதி என்று சொன்னால் அதற்குத் தனியாகப் பயிற்சி இருக்கிறது. அந்தப் பயிற்சி உள்ளவர்கள்தான் ஆசிரியராக வரவேண்டும்.

**திரு. கோ. சி. மணி :** மட்பாண்டம் தயாரிக்கும் பயிற்சி நிலையத்திற்கு வருகிற ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சக் கல்வி அறிவு எவ்வளவு வேண்டும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தொழில் சம்பந்தப்பட்டவரையில் என்ன என்ன யோக்கியதாம்சங்கள் வேண்டும் என்கிற விவரம்தான் என்னிடம் இருக்கிறது. அடிப்படைப் பொதுக் கல்வியைப்பற்றி என்றால் தனிக்கேள்வி போடவேண்டும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தென்னாற்காடு ஜில்லாவில் சில குறிப்பிட்ட இடங்களை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருவக்கரையில் பீங்கான் தொழிற்சாலை ஏற்படுத்தப்போவதாக முன்பு சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது?



12th August 1963]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி :** சிறு தொழில்கள் சம்பந்தமான உத்தியோகஸ்தர்கள் ஆங்காங்கே கிராமங்களுக்குச் சென்று மக்களை அணுகி சிறுதொழில்களை ஆரம்பிக்க முயற்சி எடுத்துக் கொள்கிறார்களா? அல்லது மக்களே அவர்களை அணுகும்படியாக இருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இவர்களே மக்களை அணுகவேண்டும் என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத காரியம்.

## ஆந்திரப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்குதல்

* 115 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மின்சாரம் தேவை என்று கோரி ஆந்திர சர்க்கார் நமது சர்க்காருக்குக் கடிதம் எழுதியுள்ளார்களா?

(இ) இது விஷயமாக நமது சர்க்கார் என்ன பதில் அளித்தார்கள். I

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) ஆம். ஆந்திரப் பிரதேச முதன் மந்திரியிடமிருந்து நம் முதன் மந்திரிக்கு இப்பொழுதுதான் ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது.

(இ) இந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்படும்.

(a) Yes, a letter from the Chief Minister of Andhra Pradesh to our Chief Minister has just been received.

(b) The request will be examined.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஆந்திர சர்க்காரில் இருந்து எழுதப்பட்டுள்ள கடிதத்தில் மின்சாரம் தந்தால்தான் தண்ணீர் கொடுப்போம் என்கிற நிபந்தனை ஏதாவது குறிப்பிட்டிருக்கிறார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்படி ஒன்றும் இல்லை.

**திரு. க. ர. நல்லசிவம் :** நம்முடைய சர்க்கார் நிபந்தனையற்ற முறையில் மின்சாரம் கொடுக்க ஆலோசிக்குமா? அல்லது நிபந்தனையோடு மின்சாரம் கொடுக்க ஆலோசிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆலோசனை என்று சொன்னால் இதுதான் ஆலோசனை.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிந்தன.

[*Note.*—An Asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO THE LACK OF ACCOMMODATION IN ENGINEERING COLLEGES.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. the Minister for Industries to the following matter of urgent public importance :—

"Frustration experienced by students on account of their failure to get accommodation in the Engineering colleges of the State and consequent hardship caused to their parents and the steps taken by Government to plan and to provide admission to all eligible and willing students, in the Engineering Colleges in the State."

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the programme for additional intake in Engineering Colleges and the opening of new colleges during the Third Five-Year Plan has been fixed on the basis of estimates of additional requirements of manpower in the State and Central Plans. There were nine Engineering Colleges (of which two are Government Colleges) with a total admission capacity of 1,157 at the begining of the Third Plan. The corresponding All India figures were 100 Engineering Colleges with 13,860 admissions. The development schemes under Technical Education for the Third Plan provide for raising the total admissions for the Degree Courses to 1,767 at the end of the Third Plan as against the All India figure of 19,140.

2. During 1962-63, an *ad hoc* increase of 60 seats was allowed in the Engineering Colleges to meet the pressure on admissions. The intake in all the Engineering Colleges in this State (including Annamalai University has been increased from 1,157 to 1,602 in 1963-64. This increase will also cover the admissions for the new three-year Engineering course for B.Sc. students introduced during the current year.

3. The Regional Engineering College, Tiruchirappalli, will be started during 1964-65. It will have an initial intake of 120 students which will ultimately go up to 250 students. A Government Engineering College with an intake of 120 students is likely to be started at Salem before the end of the Third Plan. There is also a proposal to start an Engineering College at Tirunelveli in the private sector, during the Third Plan period. With the starting of these new colleges, the total admissions for the Degree cources would be in excess of the number originally targetted for in the Plan.

4. The selection for admission to Engineering Colleges is made by a Committee constituted by Government every year. Separate rules have been framed for admission to Engineering Colleges. Eligible candidates are selected aftfer interview by the Committee.

5. Part-time courses for A.M.I.E. which has been recognised as equivalent to a B.E. degree for Government service are also being conducted in the Central Polytechnic, Madras.



6. There is also a proposal to start part-time Degree courses for Diploma holders employed in industrial concerns, subject to the University's concurrence. A Committee has been constituted to draft a detailed scheme for the proposed course.

## III.—ANNOUNCEMENTS.

### (1) ELECTION TO THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

MR. SPEAKER : I have to announce to the House that the following fourteen members were duly nominated for election of fourteen members of the Madras Legislative Assembly to the Committee on Public Accounts for the year 1963-64 :— 9-30 a.m.

1. Sri R. S. ARUMUGAM.
2. Sri R. JEEVARATHINAM.
3. Sri T. KARCHA GOWDER.
4. Srimathi PARVATHI ARJUNAN.
5. Sri C. M. AMBIKAPATHY.
6. Sri S. PONNUSWAMY.
7. Dr. B. NATARAJAN.
8. Sri C. SRINIVASAN.
9. Sri V. R. NEDUNCHEZHIYAN.
10. Sri N. RAJANGAM.
11. Sri M. V. KARIVENGADAM.
12. Sri S. MADHAVAN.
13. Sri K. MOOKIA THEVAR.
14. Sri C. CHIRANJEEVULU NAIDU.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., fourteen, I hereby declare them to have been duly elected to the Committee on Public Accounts for the year 1963-64.

The Hon. Minister for Finance and the Chairman, Committee on Estimates, are members of the Committee, ex-officio.

Under Rule 174 of the Assembly Rules, I nominate Sri V. R. Nedunchezhiyan, M. L. A., to be the Chairman of the Committee.

### (2) ELECTION TO THE COMMITTEE ON ESTIMATES.

MR. SPEAKER : I have also to announce to the House that the following fourteen members were duly nominated for the election of fourteen members of the Madras Legislative Assembly to the Committee on Estimates for the year 1963-64 :—

1. Sri K. S. G. HAJA SHERIFF.
2. Sri V. S. ARUNACHALAM.
3. Sri S ANGAMUTHU NAICKER.

4. Sri A. RAMACHANDRA RAYAR.
5. Srimathi P. K. R. LAKSHMIKANTHAM.
6. Sri K. PONNIAH.
7. Sri S. SADASIVAM.
8. Sri K. T. KOSALRAM.
9. Sri MUNU ADHI.
10. Sri M. SHUNMUGAM.
11. Sri S. MURUGAIYAN.
12. Sri M. S. MANI.
13. Sri SAW. GANESAN.
14. Sri K. CHEEMAICHAMY.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., fourteen, I hereby declare them to have been duly elected to the Committee on Estimates for the year 1963-64.

The Hon. Minister for Finance and the Chairman of the Committee on Public Accounts are members of the Committee ex-officio.

Under Rule 165 of the Assembly Rules, I nominate Sri K. S. G. Haja Sheriff, M.L.A. to be the Chairman of the Committee.

(3) THE MADRAS GENERAL SALES TAX (SPECIAL PROVISIONS) BILL, 1963 (L.A. BILL No. 11 OF 1963).

MR. SPEAKER : I have to announce to the House that the Madras General Sales Tax (Special Provisions) Bill, 1963 (L.A. Bill No. 11 of 1963) has been passed by the Legislative Council without any recommendation.

## IV.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS DISTRICT POLICE (AMENDMENT) BILL, 1963.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras District Police (Amendment) Bill, 1963."

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras District Police (Amendment) Bill, 1963."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.



## V.—GOVERNMENT MOTION re CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, under Rule 21 (3) of the Assembly Rules, I move—

"That item IV—First Supplementary Statement of Expenditure for the year 1963-64 and item V (1) under Government Bills, viz., The Madras Appropriation (No. 4) Bill, 1963, be taken up before item III—General discussion on the Madras State Electricity Board Budget for 1963-64."

*கனம் சபாநாயகர் அவர்களே, துணை மதிப்பீடுகளைப் பற்றிய விவாதம் நேற்று முன் தினம் நடைபெற்ற காரணத்தால் மீண்டும் விவாதத்திற்கு அவசியமில்லை என்று கருதி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கூறினேன். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே, முதலில் இதை எடுத்துக்கொண்டு பின்னர் மின்சாரத்தைப பற்றிய விவாதத்தை தொடங்கலாம் என்ற காரணத்தால் நான் இதைப் பிரேரேபிக்கிறேன்.*

MR. SPEAKER : The question is—

"That item IV—First Supplementary Statement of Expenditure for the year 1963-64 and item V (1) under Government Bills, viz., The Madras Appropriation (No. 4) Bill, 1963, be taken up before item III—General discussion on the Madras State Electricity Board Budget for 1963-64."

The motion was put and carried.

## VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE FOR 1963-64.

*A. Expenditure on Revenue Account.*

(1) DEMAND III—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES ADMINISTRATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 7,35,800 under Demand III—General Sales Tax and other Taxes and Duties Administration."

*திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கைகளின் மீது எதிர்க்கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகள் அத்தனையையும் வலியுறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 7,35,800 under Demand III—General Sales Tax and other Taxes and Duties Administration."

The Demand was put and carried and the Grant was made.

[12th August 1963

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) DEMAND VIII—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a further sum not exceeding Rs. 1,21,100 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 1,21,100 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff."

The Demand was put and carried and the Grant was made.

(3) DEMAND IX—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand IX—District Administration and Miscellaneous."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand IX—District Administration and Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

(4) DEMAND XII—POLICE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a further sum not exceeding Rs. 31,35,000 under Demand XII—Police."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 31,35,000 under Demand XII—Police."

The Demand was put and carried and the Grant was made.



12th August 1963]

(5) DEMAND XIII—EDUCATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a further sum not exceeding Rs. 56,90,600 under Demand XIII—Education."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 56,90,600 under Demand XIII—Education."

The Demand was put and carried and the Grant was made.

(6) DEMAND XIV—MEDICAL.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a further sum not exceeding Rs. 5,77,100 under Demand XIV—Medical."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 5,77,100 under Demand XIV—Medical."

The Demand was put and carried and the Grant was made.

(7) DEMAND XV—PUBLIC HEALTH.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a further sum not exceeding Rs. 15,00,100 under Demand XV—Public Health."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 15,00,100 under Demand XV—Public Health."

The Demand was put and carried and the Grant was made.

(8) DEMAND XVI—AGRICULTURE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a further sum not exceeding Rs. 12,54,900 under Demand XVI—Agriculture."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 12,54,900 under Demand XVI—Agriculture."

The Demand was put and carried and the Grant was made.

[12th August 1963

(9) DEMAND XVII—FISHERIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 8,18,500 under Demand XVII—Fisheries."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 8,18,500 under Demand XVII—Fisheries."

The Demand was put and carried and the Grant was made.

(10) DEMAND XVIII—ANIMAL HUSBANDRY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 2,57,600 under Demand XVIII—Animal Husbandry."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 2,57,600 under Demand XVIII—Animal Husbandry."

The Demand was put and carried and the Grant was made.

(11) DEMAND XX—INDUSTRIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 7,31,600 under Demand XX—Industries."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 7,31,600 under Demand XX—Industries."

The Demand was put and carried and the Grant was made.

(12) DEMAND XXIII—COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand XXIII—Community Development Projects, etc."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand XXIII—Community Development Projects, etc."

The Demand was put and carried and the Grant was made.



12th August 1963]

(13) DEMAND XXV—WELFARE OF SCHEDULED TRIBES, CASTES AND OTHER BACKWARD CLASSES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,06,100 under Demand XXV—Welfare of Scheduled Tribes, Casts and Other Backward Classes."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,06,100 under Demand XXV—Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes."

The Demand was put and carried and the Grant was made.

(14) DEMAND XXVI—IRRIGATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,000 under Demand XXVI—Irrigation."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,00,000 under Demand XXVI—Irrigation."

The Demand was put and carried and the Grant was made.

(15) DEMAND XXVIII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 59,800 under Demand XXVIII—Public Works—Establishment and Tools and Plant."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 59,800 under Demand XXVIII—Public Works—Establishment and Tools and Plant."

The Demand was put and carried and the Grant was made.

(16) DEMAND XXIX—PUBLIC WORKS—GRANTS-IN-AID.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 15,00,200 under Demand XXIX—Public Works—Grants-in-Aid."

[12th August 1963

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 15,00,200 under Demand XXIX—Public Works—Grants-in-Aid."

The Demand was put and carried and the Grant was made.

(17) DEMAND XXX—ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 60,00,000 under Demand XXX—Road Transport Schemes."

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 60,00,000 under Demand XXX—Road Transport Schemes."

The Demand was put and carried and the Grant was made.

(18) DEMAND XXXIV—STATIONERY AND PRINTING.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,15,200 under Demand XXXIV—Stationery and Printing."

MR. SPEAKER : The question is :—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,15,200 under Demand XXXIV—Stationery and Printing."

The Demand was put and carried and the Grant was made.

(19) DEMAND XXXV—FOREST DEPARTMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor. I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,00,600 under Demand XXXV—Forest Department."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,00,600 under Demand XXXV—Forest Department."

The Demand was put and carried and the Grant was made.



12th August 1963]

*B. Expenditure on Capital Account.*

(20) DEMAND XL—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 23,55,600 under Demand XL—Capital Outlay on Industrial Development.'

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 23,55,600 under Demand XL—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the Grant was made.

(21) DEMAND XLI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,400 under Demand XLI—Capital Outlay on Irrigation.'

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,400 under Demand XLI—Capital Outlay on Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

(22) DEMAND XLII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 50,89,000 under Demand XLII—Capital Outlay on Public Works.'

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 50,89,000 under Demand XLII—Capital Outlay on Public Works.'

The Demand was put and carried and the Grant was made.

(23) DEMAND XLIII—CAPITAL ON ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 46,00,000 under Demand XLIII—Capital Outlay on Road Transport Schemes.'

[12th August 1963

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 46,00,000 under Demand XLIII—Capital Outlay on Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

### III. ANNOUNCEMENTS—*cont.*

(4) THE MADRAS APPROPRIATION (NO. 4) BILL, 1963.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in, and consideration by the Madras Legislative Assembly of the Madras Appropriation (No. 4) Bill, 1963.

### IV. GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS APPROPRIATION (NO. 4), BILL, 1963.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 4) Bill, 1963.'

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 4) Bill, 1963.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### VII. THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1963-64 DISCUSSION—*cont.*

MR. SPEAKER : Now the general discussion on the Madras State Electricity Board Budget for 1963-64 will be continued. The hon. Member, Sri Thirupathy, will now speak.

* **திரு. கு. திருப்பதி கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, 1963-64 மின்சார அறிக்கையின் பேரில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என் தொகுதியைப் பொருத்தவரையில், மின்சாரம் ரொம்பவும் குறைந்திருக்கிறது. விவசாயிகளுக்கு ரொம்பவும் தொந்தரவாக இருப்பதால், அதற்கு ஆவன செய்ய வேண்டும். நம் ஆளும் கட்சி முதல், எதிர்க்கட்சி வரை, பாராளுமன்றம் முதல் பஞ்சாயத்து போர்டு வரை எங்கும் விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால், நடைமுறையிலே எதுவும் காணப்படவில்லை. என் தொகுதியைப் பொருத்த வரை, பாலாற்று பேசின் என்று சொல்லுகிறார்கள். பம்ப்பு செட்டுகளுக்கு மாவட்டக் கலெக்டர் அத்தாட்சி வந்தால் மின்சார கனெக்ஷன் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். அதுபற்றி கலெக்டரிடம் போய்க் கேட்டால், மேட்டூருக்கு எழுதி இருக்கிறேன்



12th August 1963] [திரு. கு. திருப்பதி கவுண்டர்]

தகவல் வரவில்லை வந்தவுடன் அது பற்றி யோசிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அதேமாதிரி பொதுப்பணித் துறையில் விசாரித்ததில், வாணியம்பாடி தொகுதியில், பாலாற்றின் கரையோரம் 30 கிராமங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மற்ற கிராமங்களுக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்று சொல்லுகிறார்கள். என் தொகுதி பொருத்த வரையில், சில கிராமங்களில் பம்ப்பு செட்டுகள் பிட்டிங் செய்திருக்கிறார்கள்; கனெக்ஷனை எதிர்பார்த்திருக்கிறார்கள். புதுப்பேட்டை, நற்றும்பள்ளி, கந்திலி, எலக்கல், நத்தம், ஜோலார்பேட்டை, கேத்தாண்டபட்டி முதலிய கிராமங்களில் கனெக்ஷனை எதிர்பார்த்திருக்கிறார்கள். இதுவரையில் எந்தவிதமான தகவலும் வரவில்லை. இதனால் விவசாயிகளுக்கு பாலாற்று பேசினை வைத்துக்கொண்டு ரொம்பவும் தொந்தரவு படுகிறார்கள். அந்த பாலாறு பேசின் 30 கிராமங்களைத் தவிர மற்ற கிராமங்களுக்கு மின்சார கனெக்ஷன் கொடுப்பது நல்லதாக இருக்கும். என் தொகுதியில் 70, 80 அடி ஆழம் இருக்கின்ற கிணறுகள் ஏரிப் பாசனத்துக்கு எந்தவித வசதியும் கிடையாது. மழையைத்தான் மக்கள் நம்பி இருக்கிறார்கள். ஆற்றுப் பாசனம் கிடையாது. பம்ப்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்தால், விவசாயத்தை நன்கு விவசாயம் செய்ய முடியும்.

மின்சார சூப்ரவைசர்கள், எஞ்சினியர்கள் இவர்கள் பஞ்சாயத்து யூனியன் மீட்டிங்கில் கலந்து கொண்டால் இருக்கிற குறைகளை அவர்களிடம் கூற முடியும், அவர்களும் அதைப் புரிந்து கொண்டு விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்யமுடியும் என்று நினைக்கிறேன். என் சொந்த கிராமத்தில்கூட மின்சார வசதி கிடையாது. என் கிராமத்திலுள்ள விவசாயிகள் 130 ஹார்ஸ் பவருக்கு மேல் பம்ப்பு செட்ஸ்க்காக மனு செய்திருக்கிறார்கள். அப்படி மனு செய்து ஒரு ஆண்டாகிறது. இதுவரையிலும் அது பற்றி எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை. அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில பம்ப்பு செட்களை இரவில்தான் ஓட்டுகிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இரவில் பாம்புகள் போன்ற விஷ ஜந்துகள் தொல்லைகள் இருக்கும். நெல் ஒன்றுக்குத்தான் இரவில் பாய்ச்ச முடியும். மற்ற தான்யங்களுக்கு இரவில் பாய்ச்ச முடியாது. அதனால் விவசாயிகளுக்கு பகலில் மின்சாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூர் தாலுகாவில் குடி தண்ணீர் எடுப்பதற்கு என்றாலும் அதற்கு பம்ப் செட்ஸ் வைக்க கலெக்டர் சர்டிபிகேட் தேவை என்று சொல்லுகிறார்கள். இதற்கு விதிவிலக்கு அளித்து அங்குள்ள எல்லா பம்ப் செட்டுகளுக்கும் கனெக்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் யூனியன்களுக்கு சில வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். புடப்பலாற்றில் ஒரு மூன்று மைல்கள் வெட்டினால் நல்லபடி தண்ணீர் பாயும். அப்படிச் செய்தால் கிணற்றில் தண்ணீரே வற்றாது. அதனால் விவசாயிகள் நல்லபடி பயிர் செய்ய மிகவும் வசதியாக இருக்கும். அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். யூனியன்களில் விவசாயிகள் லோன் போன்றவற்றிற்கு மனு கொடுத்தால்,

[திரு. கு. திருப்பதி கவுண்டர்] [12th August 1963

அவர்கள் அதை சரிவர பெற முடிவதில்லை. ஆகவே விவசாயிகளுக்கு கடன் கிடைக்க வேண்டிய வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மின்விசை மான்யத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். நிர்வாகத் துறையை எடுத்துக் கொண்டால் இந்த மின்விசைத் திட்டம் நல்லமுறையில் ஆக்க வேலையில் ஈடுபட்டு நன்கு முன்னேறியிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நீர் மின்விசையை எடுத்துக் கொண்டால் நல்லமுறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு குந்தாவில் நல்லதொரு திட்டம் ஏற்பாடு செய்திருப்பதோடு மதுரையில் ஒரு நீர் மின்விசைத் திட்டமும், திருநெல்வேலியில் ஒன்றும், கன்னியாகுமரியில் ஒன்றும் என்று இவ்வாறு நீர்மின்விசையில் நல்ல ஆக்க வேலைகள் ஏற்பட்டிருப்பதோடுகூட அனல் மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் அதுவும் நல்லமுறையில் அமைக்கப்பட்டு இன்னும் இரண்டு யூனிட்கள் அதிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதோடுகூட அணு மின்விசைத் திட்டம் ஒன்று, மகாபலிபுரத்தின் பக்கத்தில் மாபெரும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. மின்விசையை எடுத்துக் கொண்டால் தமிழ் நாட்டில் 100,000 கனெக்ஷன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. அதோடு நம் நாட்டு பொருளாதார நிலை இந்த மின்விசையினால்தான் முன்னேறியிருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படியிருந்தும் எதிர்க்கட்சிக்காரர்கள் மின்விசை சரியானபடி இயங்கவில்லை, நல்லமுறையில் மின்சாரம் கிடைப்பதில்லை, இத்திட்டமே சரியாக இல்லை என்று சொல்வது குறித்து நான் வருத்தப்படுகிறேன். நம் கனம் அமைச்சர் அவர்கள், இரும்பை முறித்துக் காட்டினாலும்கூட அதை செப்படு வித்தை என்று சொல்வது போல்தான் இருக்கிறது. ஆக்கவேலையில் முன்னேறிக் கொண்டிருக்கும் திட்டங்களைப் பழித்து நம் அமைச்சரவைக்கு ஊக்கம் அளிக்காமல் குறை கூறிக்கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். சில கிராமங்களில் மின்சார வசதி குறைவாகத்தான் இருக்கிறது. நல்லமுறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு இன்று 15,000 கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்குள்ளாக இன்னும் 3,000 கிராமங்களுக்கு மின்வசதி கொடுத்து விடுவோம் என்று உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது நம் திட்ட வேலைகள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன என்பதைக் காணலாம். என்ன செய்தாலும் சில குறைகள் இருக்கத்தான் செய்யும். பெரிய நிர்வாகத்தில் சில குறைகள் இருக்கத்தான் இருக்கும். அவற்றை நிவர்த்தி செய்து கொள்ள வசதி, வாய்ப்பு இருக்கிறது. நம் மின்சார போர்ட் நல்லமுறையில் இயங்கி வருகிறது. மின்சார போர்டுக்கு கடிதம் எழுதினால், வேறு துறைகளை எடுத்துக் கொண்டால் இந்த மின்சாரத் துறையிலிருந்து கடிதங்களுக்கு சீக்கிரமாக பதில் கிடைப்பது போல் வேறு எதிலிருந்தும் கிடைப்பதில்லை.



12th August 1963] [திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர்]

இப்போர்ட் நல்லமுறையில் இயங்கி வந்தபோதிலும்கூட சில குறைகள் இருக்கின்றன. அவற்றையும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஒரு முனிசிபாலிட்டியை எடுத்துக் கொண்டால் 10 ஆண்டுகளாக இந்த போர்ட் அட்வான்ஸ் கொடுங்கள் என்று ஒரு ஆண்டு 600, ஒரு ஆண்டு ரூ. 1,000 இப்படியாக அவர்கள் கொடுக்கச் சொல்லுகிறார்கள். அதற்கு அவர்கள் கணக்கு வைத்துக் கொள்கிறார்கள். எந்தெந்த வேலைகளுக்காக அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது, எப்போது அந்த வேலை செய்யப்பட்டிருக்கிறது, அந்த வேலை செய்தது போக பாக்கி எவ்வளவு மிச்சம் இருக்கிறது என்பதற்கான புள்ளிவிவரக் கணக்குகள் தெரியாமல் இருக்கிறது. அந்த அக்கவுண்ட்களை போர்ட் ஓரளவு சீர்திருத்தி நல்லமுறையில் அவர்களுக்குக் கணக்குக் காட்டினால் நலமாகயிருக்கும். கோபிச்செட்டிபபாளையம் தொகுதியில் கோபி தாலுகாவில் குத்தியாலத்தூர், மாக்கம்பாளையம், குன்றி என்ற மூன்று தாய்கிராமங்கள் இருக்கின்றன. அவற்றைச் சுற்றி 40 கிராமங்கள் இருக்கின்றன. அங்கு 10,000 பேர்கள் வசிக்கிறார்கள். இப்போது ஒரு திட்டம் தாள்வாடிக்கும் பர்க்கூருக்கும் போடப்பட்டிருக்கிறது. அங்குள்ள ஆதிவாசிகள் மழை நன்கு பெய்யாத காரணத்தினால் விவசாயம் குன்றிப்போய் அவர்கள் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அங்கு ஒரு திட்டம் வகுத்து அந்த 40 கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். வகுத்தம்பாளயம் திட்டம் என்ற திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அக்ரிமெண்ட் செய்து ஒரு ஆண்டாகிறது. இன்னும் அத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அரியப்பம்பாளயம் கிராமத்திலும் 4 ஆண்டுகள் ஆகின்றன. அக்ரிமெண்ட் செய்து சில கம்பங்கள் போடப்பட்டிருக்கிறதே தவிர மின்சார வசதியை சீக்கிரத்தில் அளிக்க கனம் அமைச்சர் அவர்கள் வேண்டிய திட்டத்தை நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சத்தியமங்கலத்திலிருந்து கோபிக்குச் செல்லும் மெயின் ரோட்டில் மூலவாய்க்கால், புதுவல்லயாம்பாளயம், அரசூர், காசிபாளயம், மணிகாரயம்பாளயம், மாக்கம்கோம்பை, அரசூர் போன்ற கிராமங்களில் கிணற்றுக்கு நீர் சப்ளை செய்ய அக்ரிமெண்ட் செய்யப்பட்டு இன்னும் வேலை துவங்கப்படாமல் இருக்கிறது. மின்சார வசதி இல்லாததினால் அங்குள்ள விவசாயிகள் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட, லோயர் பவானிப் பகுதியை எடுத்துக்கொண்டு பார்த்தால், இப்பொழுது 2 லட்சம் ஏகராவுக்கு நீர்ப்பாசனம் அளிக்கப்படுகிறது. நான்கு மாதங்களுக்கு ஒரு லட்சம் ஏகராவுக்கு நீர்ப்பாசனமும், அடுத்த நான்கு மாதங்களுக்கு இன்னொரு ஒரு லட்சம் ஏகராவுக்கு நீர்ப்பாசனமும் அளிக்கப்பட்டு, அந்த வகையில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. 'ஆல்டர்னேடிவ் ஸிஸ்டம்' என்ற அடிப்படையில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அங்கே நெல் மகசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு லட்சம் ஏகரில் நெல் மகசூல் செய்யப்படும்பொழுது, 10-00 a.m.

இன்னொரு லட்சம் ஏகரா நிலம் சும்மாவாகத்தான் கிடக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, 7, 8 மாதங்களுக்கு பூமி சும்மா கிடக்கிறது. மின்விசை இல்லாத காரணத்தினால் எந்த விவசாயமும் செய்யப்படாமல் இருக்கிறது. அந்த அளவுக்கு மின்விசை இருந்தாலும், வாய்க்காலுக்குப் பின்னால் பம்பு செட்டுகள் வைத்தால் ஸ்பிரிங்கை இழுத்துவிடும் என்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. சென்ற பட்ஜெட்டில் சொன்னதின்பேரில் 6 மாதங்களுக்கு மாத்திரம் அந்த 'டாரிப் ஸிஸ்டம்' கீழ் கனெக்ஷன் கொடுத்து, இப்பொழுது எக்ஸ்பெரிமெண்டு முறையில் என்னுடைய தொகுதியில் மாசிப்பட்டம் என்று பயிர்போட்டதில் ஏகர் ஒன்றுக்கு 9 பொதி விதம் நன்றாக விளைச்சல் விளைந்திருக்கிறது. அதனால் விவசாயிகளுக்கு உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது. மகசூல் நல்ல முறையில் கிடைக்கிறது. தண்ணீர்விட்டால் நன்றாகச் செய்வோம் என்று எதிர்பார்த்து ஏங்கியிருக்கிறார்கள் விவசாயிகள். ஆறு மாதங்களுக்கு மின்விசை கொடுத்தால் ஸ்பிரிங்கை இழுத்துவிடும் என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள் என்றாலும், 6 மாதங்களுக்கு கரெண்டு கொடுத்தும், 6 மாதங்களுக்கு கரெண்டு கொடுக்காமலும் ஏற்பாடு செய்து கோடைப் பருத்தி விளைவிக்க விவசாயிகளுக்கு உற்சாகத்தை ஊட்டவேண்டும். இந்த வருஷத்தில் மட்டும் அப்படி விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்தால், சுமார் 25,000 பேல் பஞ்சு கிடைக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அமராவதி மின்சாரத் திட்டம் 10 வருஷங்களாக இருந்துவருவதாகத் தெரிகிறது. ஆனால் இந்த பட்ஜெட்டில்கூட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அது கொண்டுவரப்படவில்லை. அதற்குக் காரணம் தெரியவில்லை. அதை சீக்கிரம் அமல் நடத்தி ஏற்பாடு செய்தால் நல்ல முறையில் மின்சாரம் கிடைப்பதற்கு இன்னும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. முனு. ஆதி : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்களால் சபை முன்பு வைக்கப்பட்டிருக்கிற 1963-64-ம் ஆண்டுக்கான மின்சார போர்டு நிதிநிலை அறிக்கையின்மீது சிலவார்த்தைகளைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மின்சார இலாகா தமிழ் மாநிலத்திலே மிகவும் சீராகவும், சிறப்பாகவும் நடைபெறுகிறது என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஆனால், அதே நேரத்தில் அதில் இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம் என்ற காரணத்தினாலே, என்னுடைய தொகுதியிலுள்ள, மாநிலத்திலுள்ள சில குறைபாடுகளை எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையினால்தான் அந்தக் குறைபாடுகளை எடுத்துக் கூட விரும்புகிறேன்.

மின்சார போர்டு தலைவர் திறமையாகவும், அறிவாற்றலுடனும் இயங்குகிற காரணத்தினால், மின்சார இலாகா மிகவும் முன்னேறியிருக்கிறது என்பது பற்றி நாம் பெருமைப்படுகிறோம். அந்த இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்





களுக்கு நல்லதொரு பாதுகாப்பும், உற்சாகமும் கொடுக்கக் கூடிய அளவுக்கு அவர்களுக்கு உத்தியோக உயர்வு தரப்படவேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. ஸீனியாரிடி லிஸ்டில் தொழிலாளர்கள் இருந்தாலும், 'எபிஷியன்ஸி' என்பதை வைத்துக்கொண்டு, அந்த சந்தர்ப்பத்தில் யாருக்குத் தேவையோ அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கிற நிலைமை ஏற்படுகிறது. 'எபிஷியன்ஸி' என்று இருந்தாலும் கூட, 'ஸீனியாரிடி லிஸ்டில்' இருக்கிறவர்களுக்கு முறையாக உத்தியோக உயர்வு தருவதிலே கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆபத்தான நிலைமையில் மின்சார வேலை செய்கின்ற நான்காவது கிரேடு சிப்பந்திகளுக்கு திடீரென்று கரண்டினால் ஷாக் அடித்து இறந்துபோகக்கூடிய நிலைமை ஏற்படலாம். அவர்களுக்கெல்லாம் சர்க்கார் இன்ஷூரன்ஸ் செய்திருக்குமானால், அப்படி தொழிலாளர்கள் கரண்டு ஷாக் அடித்து திடீரென்று இறந்துவிட்டால், அவர்களுக்கு பண உதவி செய்வதற்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட சிப்பந்திகளுக்கு இன்ஷூரன்ஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி எத்தனை ஆயிரம் தொழிலாளர்களுக்கு இன்ஷூரன்ஸ் செய்ய முடியும் என்று கனம் அமைச்சர் அவர்கள் பதில் கேட்கலாம். ஆனால் லைனில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு மட்டும், கம்பியிலிருந்து கொண்டு ஆபத்தான நிலைமையில் வேலை செய்பவர்களுக்கு மட்டும் சர்க்கார் இன்ஷூரன்ஸ் செய்தால் போதும்.

அடுத்து, ஊராட்சி மன்ற அனுபவத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். மின்சார இலாகா சரியான முறையில் வேலை செய்தாலும் அங்கே இருக்கிற தெரு விளக்குகள் முறையாக எரிவதில்லை. காரணம் பல்பு ஸ்டாக் இல்லை என்று சொல்லுகிறார்கள். பல்பு ஸ்டாக் இல்லை, ஆகவே பல்புகளை முறையாக விநியோகம் செய்ய முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. கடந்த ஆண்டில் இது பற்றி பேசியிருக்கிறேன். உபகரணங்களைச் செய்கின்ற உரிமைகளை தமிழ் மாநிலத்தில் வைத்துக்கொண்டு, பல இடங்களில் சிறு சிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். தாம்பரம் பஞ்சாயத்தில் சுமார் ரூ 40,000 இதற்காக செலவழித்தாலும், ரூபாய் 30,000 அளவுக்குத்தான் பயன்பெற வேண்டிய நிலையில் இருக்கிறோம். மக்கள் பூரண பயன் அடைய முடியவில்லை, இருட்டில் இருக்கும் நிலைமைதான் இருக்கிறது. ஊராட்சி மன்றம் வீணாகச் செலவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. பல்புகளை உற்பத்தி செய்ய மாநில சர்க்கார் முன்வரவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மின்சார இலாகா முறையாக வேலை செய்தாலும் குறிப்பாக ஒரு நிலைமையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். மதுராந்தகம் தாலுகாவில் கருங்குழி ஊராட்சி மன்றத்தில் ஒரு நூல் நிலையம் கட்டப்பட்டு, மின்சார இலாகாவை

மின்சாரம் கொடுக்க அனுமதி கேட்டிருந்தார்கள். மின்சார இலாகா சீப் இன்ஜினியர் அனுமதி கொடுத்திருக்கிறார். அந்தக் கட்டிடம் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சனை எழுந்தது. தனியார் ஒருவர் கோர்ட்டில் வழக்கு போட்டார். கோர்ட்டார் அந்தக் கட்டிடம் ஊராட்சி மன்றத்திற்குத்தான் சொந்தம் என்று தீர்ப்பளித்துவிட்டார்கள். ஆனால், இது வரையில் உத்தரவு கையில் வைத்திருந்தும் ஏ. ஈ. அவர்கள் அந்த நூல் நிலையத்திற்கு மின்சாரம் கொடுக்கவில்லை. ஏன் இன்னும் மின்சாரம் கொடுக்கவில்லை என்று கேட்டால் 'நாங்கள் மின்சாரம் கனெக்ஷன் கொடுக்கச் சென்றால், குறிப்பிட்ட மனிதர்கள் எங்களைத் தாக்குகிறார்கள். அதனால் மின்சாரம் கொடுக்க முடியவில்லை' என்று சொல்லி தட்டிக்கழித்து விடுகிறார்கள். போலீஸாருடைய உதவியை நாடினால், தங்களை மேலதிகாரிகள் இதில் தலையிடக்கூடாது என்று சொல்லியிருப்பதாகக் கூறிவிடுகிறார்கள். இன்றுவரையிலே இந்த நூல் நிலையத்திற்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை. நானும், நண்பர் விசுவநாதன் அவர்களும் எவ்வளவோ முயற்சி செய்தும், இன்று வரையில் நூல் நிலையத்திற்கு மின்சாரம் கிடைக்கவில்லை. இதை உடனடியாக கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சென்னை மாநகர ஆட்சி மன்றம் கழிவு நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு திட்டத்தை தீட்டியிருக்கிறது. அதற்கு ஏறக்குறைய ரூ. 30 லட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அம்மாதிரி கழிவு நீர் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசினர் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவரையில் அரசினர் அதுபற்றி அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ரூ. 30 லட்சம் செலவில் கொருக்குப்பேட்டையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் உரம் போன்ற பொருள்களும் கிடைக்கும் என்று மாநகராட்சி மன்றம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த உரம் சிந்திரி உரத்திற்கு சமமாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரி உரம் தயாரிப்பதற்கும், கழிவு நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதுபற்றியும் சர்க்கார் பரிசீலனை செய்து, சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அது சம்பந்தமாக துரிதமாக உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார இலாகா தொழிலாளர்களுக்கு கைத்தறி உடைகளை வழங்கவேண்டும். கதர் உடைகள் உடுத்திக் கொண்டு, அதுவும் வெய்யிலில் வேலை செய்வது மிகவும் சிரமமாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் இந்தத் தொழிலாளர்களுக்கு கைத்தறி ஆடைகளை வழங்க வேண்டும் என்று சென்ற தடவை சொன்னதைப்பற்றிகூட அதிகாரிகள் குறிப்பெடுத்து, அந்த யோசனை சிறப்பானது என்றுகூட இந்த புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தொழிலாளர்களுக்கு கைத்தறி ஆடைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்தத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு பாதுகாப்புக் கொடுத்து, அவர்களுக்கு சம்பளம், இன்கிரிமெண்டு, பிரமோஷன் இவைகளையெல்லாம் முறையாகக் கொடுப்பதில் சர்க்கார் கவனம் செலுத்தி, நன்றாக இயங்கிக்கொண்டு வருகிறது என்று எல்லோராலும் பாராட்டப்படுகின்ற இலாகாவை, இதர மாநிலங்களைவிட நம் மாநிலத்தில் சிறப்பான பெயரை பெற்றிருக்கிற இந்த இலாகாவை, மேலும் உற்சாகத்துடன் பணிபுரியும்படிச் செய்யவேண்டும். உயர் அதிகாரிகள் நல்ல திறமையோடும், அக்கறையோடும் வேலை செய்கிறார்கள். இந்த இலாகாவில் இடையிலே உள்ள தொழிலாளர்களையும் நன்றாக கவனித்து, அவர்களுக்கு இன்க்ரிமெண்டு, பிரமோஷன் முதலியவைகளை முறையாகக் கொடுப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

எதிர்கட்சியினர் மின்சார இலாகாவை எப்பொழுதும் தாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்று முன்பு பேசிய உறுப்பினர் ஒருவர் கூறினார். குறைகளைச் சொல்லுவதற்குத்தான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம். நம்முடைய தொகுதியில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, அவைகளுக்கு நிவாரணம் காண்பதற்குத் தான் இங்கே அமர்ந்திருக்கிறோம். இந்த இலாகாவை பாராட்டி, அதே சமயத்தில் தொகுதியிலுள்ள குறைபாடுகளையும், மாநிலத்திலுள்ள குறைபாடுகளையும் எடுத்துக் கூற நாம் கடமைப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்த இடத்திலே உட்கார்ந்துகொண்டு அத்தகைய குறைகளை எடுத்துச்சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அதே சமயத்தில் நம்முடைய பாராட்டுதலை தெரிவிப்பதன் மூலம், அதிகாரிகளும், ஆபத்தான கட்டத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்களும் மேலும் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் வேலை செய்வார்கள். தொழிலாளர்களுக்கு உள்ள உரிமைகளையும், சலுகைகளையும் முறையாக அளிப்பதன்மூலம் அவர்களை மேலும் ஊக்குவிக்க வேண்டும். தொழில் அபிவிருத்திக்கு மின்சாரம் தேவை. மின்சார தேவையை அரசாங்கம் கருதி, மின்சார இலாகா பெரிய இலாகா என்று கருதி, தொழிலாளர்களுக்குரிய உரிமைகளையும், சலுகைகளையும் தரவேண்டும், மேலும் அவர்கள் ஊக்கத்துடன் பணிபுரிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கூறி, இந்த இலாகாவுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். வி. கரிவேங்கடம்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு மின்சாரக் கழகத்தின் நிதி நிலை அறிக்கையின்மீது ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த உலகம் மின்சார உலகம் என்று சொன்னால் மிகையாகாது. இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களைவிடவும் நம் மாநிலம் மின்சாரத் துறையில் முன்னின்று வருகிறது என்று சொன்னாலும் நம்முடைய தேவைக்கு இன்னும் குறைவாகவே இருக்கிறது. ஆகவே நாம் இன்னும் நம்முடைய மின்சாரத்தை பெருக்கவேண்டும். நம்முடைய தேவைகளை எல்லாம் நாமே பெருக்கிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்

முடைய நீர்த் தேக்கத்தின்மூலம் கிடைத்து வருகின்ற மின்சாரத்தை எல்லாம் நாம் பயன்படுத்தியாக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அடுத்தாற்போல், மாட்டுச் சாணத்திலுள்ள வாயு மூலமாகவும், எண்ணெய்களின் மூலமாகவும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. சூரிய வெப்பத்தின் மூலமும் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும் என்றும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த முறைகளின் மூலம் எல்லாம் மின்சாரத்தை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு மின்சார இலாகா ஈடுபட வேண்டும் என்று கருதுகிறேன்.

அடுத்தாற்போல், ஒகனேக்கல் மின்சாரத்தைப்பற்றி நமது தொழில் அமைச்சர் அவர்களும், மின்சார போர்டு தலைவர் அவர்களும் இத்திட்டத்தை வந்து பார்வையிட்டதாக அறிந்தோம். இதைப்பற்றி நடந்த பரிசீலனையைப் பார்த்தபோது வேகமாக இதற்கான பேச்சுவார்த்தைகள் துரிதமாக நடந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாகவே இந்த ஒகனேக்கல் திட்டம் நடந்தேறும் என்கின்ற ஒரு நிலை இருந்து வந்தது. ஆனால் இப்போது மைசூர் அரசாங்கம் மாற்றுக் கருத்து ஒன்றை தெரிவித்திருப்பதாக தெரிகிறது. இந்தக் கருத்தை நமது அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் நன்கு பரிசீலனை செய்து திட்டத்தை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். ஐம்பது கோடி ரூபாய் செலவு செய்து சுமார் 840 மெகாவாட் மின்சாரத்தை பெருக்கிக் கொள்ள முடியும் என்று கருதப்படுகிறது. மேலும், இந்த ஒரு பொதுத் திட்டம் நிறைவேற்றுவதற்கு முன்பே காவேரியிலிருந்து தண்ணீரை சின்னாற்றில் திருப்பி நம்முடைய பகுதியிலேயே ஒரு அணையைக் கட்டினால் அதன் மூலமும் ஓரளவு மின்சாரத்தைப் பெருக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. இதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நமக்கு இன்னும் மின்சாரம் கிடைக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் தனியார் துறையில் தற்பொழுது 8 மின்சார நிறுவனங்கள் தமிழ் நாட்டில் இருந்து வருவதாகத் தெரிகிறது. நமது மின்சாரக் கழகத்தின் வேலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தத் தனியார் நிறுவனங்கள் மிகவும் குறுகிய அளவிலேயே தங்கள் வேலைகளை செய்து வருவதாகத் தெரிகிறது. அதோடு தனியார் நிறுவனங்களில் காணப்படும் பல குற்றங்குறைகளை இங்கு பல அங்கத்தினர்கள் எடுத்து வற்புறுத்தி சொல்லி வந்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் பார்க்கின்ற நேரத்தில் மின்சாரக் கழகம் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆகவே தனிப்பட்ட நிறுவனங்களை மின்சாரக் கழகத்தோடு இணைப்பதற்கு அரசு உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



அடுத்தாற்போல் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமா என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டுமென்றும் அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் நிதி நிலை அறிக்கைகளில் காணப்படுகிறது. 1959-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந்தேதி மின்சாரக் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டு அமல் செய்யப்பட்டு வருகிறது. அதற்குமேல் 1962-63-ம் ஆண்டு பட்ஜெட் தயாரிக்கும்போது அதில் ஏற்பட்டப் பற்றுக் குறையை சரிக்கட்டுவதற்காக மின்சாரக் கட்டணத்தில், 10 சதவீதம், 5 சதவீதம் என்று உயர்த்தப்பட்டது. அவ்விதம் உயர்த்தியது சரியா இல்லையா என்பது சட்டப் பிரச்னைக்கு உரிய விஷயம் என்றாலும் 1959-ம் ஆண்டில் தான் மின்சாரக் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மின்சார நிறுவனத்திற்காக 75 லட்சம் ரூபாய் தேவை என்றும் அதற்காக மின்சார வரியை உயர்த்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. ஏற்கெனவே பல வரி உயர்வுகளினால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மேலும் மின்சாரத்திற்கான கட்டணத்தை உயர்த்தாமல் குறைந்த அளவிலேயே வைத்திருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு அதிகமாகச் செய்யப்பட்டு இருக்கிறது என்பது பொதுவாக உண்மையாக இருந்தாலும், நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் பெண்ணகரம் தொகுதியில் இன்னும் முழுமையான அளவுக்கு மின்சார வசதி ஏற்படவில்லை. இத்தொகுதியில் சுமார் 250 கிராமங்கள் வரை இருக்கின்றன. இவற்றில் இன்னும் சுமார் 20, 25 கிராமங்களுக்கு இன்னும் மின்சார விஸ்தரிப்பு செய்யப்படாமல் இருக்கிறது. இந்தப் பிரதேசங்கள் மிகவும் பிற்போக்கான பிரதேசங்கள். நிச்சயமாக சீக்கிரமாகவே இந்த கிராமங்களுக்கும் மின்சார விஸ்தரிப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதில் ஓரளவு காலதாமதம் ஏற்படுகிறது. பம்பு செட்டுகளை எல்லாம் இணைத்துவிட்டு கனெக்ஷன் கிடைப்பதற்காக விவசாயிகள் பல இடங்களுக்கும் அலைகிறார்கள். இக்கஷ்டங்களைப் பார்க்கின்றபோது தங்களுக்கு இம்மாதிரி பம்புச் செட்டே வேண்டாமென்று எண்ணிவிடக் கூடிய நிலைமையில் அதிருப்தி வளர்ந்து இருக்கிறது. ஆகவே கனெக்ஷன் கிடைப்பதில் ஏற்படுகின்ற காலதாமதத்தை தவிர்ப்பதற்கு மின்சார போர்டார் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, குறைந்தபட்ச கட்டண விகிதம் சம்பந்தப்பட்டவரையில் முன்பெல்லாம் முற்போக்கு பகுதிகள், பிற்போக்கு பகுதிகள் என்று பிரிக்கப்பட்டு சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு ஒரு குதிரை வேக ஓட்டத்திற்கு 5 ரூபாய் 10 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது 35 ரூபாய் என்றெல்லாம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இக்கட்டணம் குறைக்கப்பட்டு 25 ரூபாய் என்ற அளவில் வரும் என்று விவசாயிகள் எல்லாம்

ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து இக்கட்டணத்தைக் குறைப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

மேலும் மின்சாரக் கேபில், கம்பிகள், கம்பங்கள் முதலியவைகளை நாம் அண்டை மாநிலங்களில் இருந்து பெறுகிறோம். இதைத் தவிர்த்து நம்முடைய மாநிலத்திலேயே உற்பத்தி செய்து பயன்படுத்தினால் நம்முடைய தேவைக்கு தகுந்தபடி பொருள்களும் கிடைக்கும், அதோடு நம்முடைய நாட்டில் வேலை வாய்ப்பும் கிடைக்கும், அதே நேரத்தில் குறைந்த விலையில் நமக்குத் தேவையான பொருள்களை தயாரிக்கவும் முடியும். இதைப் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். பொதுவாக நம்முடைய மாநிலத்தில் மின்சார வளர்ச்சி மற்ற மாநிலங்களைவிட அதிகமாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதற்கு அந்த இலாக்காவினரும் மின்சாரத் துறைத் தலைவரும் ஆவார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின்போது நாம் குறிப்பிட்ட ஒரு சில குறைகளைப் போக்கி, மேலும் மின்சாரத்தைப் பெருக்கி நம்முடைய தேவைகளை நிவர்த்தி செய்துகொள்ளுவதில் தக்க கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ் நாட்டு மின்சார போர்டின் 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். இந்த மின்சாரத் திட்டம் தமிழ்நாட்டில் பரவலான முறையில் நகரப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதைப்பற்றி நான் பாராட்டுகிறேன்.

இந்த மின்சார வெட்டுகள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே வருகிறது தென்னாடெங்கிலும். மேலும் இவ்வாண்டில் ஜூன்-ஜூலை மாதங்களில் கணிசமான முறையில் இந்த மின்சார வெட்டுக்கள் ஏற்பட்டு தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் பலவிதமான கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் என்னுடைய கோவை ஜில்லாவில் மின்சார வெட்டுக்கள் ஏற்பட்டதன் காரணமாக, தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் முன்னேற்றம் அடைந்துள்ள பகுதியாக இருந்தாலும் பல கஷ்டங்கள் ஏற்பட்டதால் அவைகளைத் தவிர்க்கவேண்டி ஒரு அனல் மின்சார நிலையத்தை அங்கே ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம் 50 ரூபாய் என்று இருந்தது 35 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நமது அமைச்சருடைய அறிக்கையில் மேலும் அதிகப்படுத்தலாம் என்று தெரியவருகிறது. அப்படி அதிகப்படுத்தும் போது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றுதான்





ஏற்படுகிறது. என்னுடைய தொகுதியில் உடுமலைப்பேட்டை தாலுகாவில், குடிமங்கலம் பிர்க்காவை எடுத்துக்கொண்டால் இன்றைய நிலையில் குடிக்கக்கூட தண்ணீர் கிடையாது. மேலும் கிணற்றில் மோட்டார் பம்ப்செட் வைத்திருந்தாலும் தண்ணீர் இறைக்க வசதியும் இல்லாமல் இருக்கிறது. அப்படி இருந்தும் அவர்கள் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்திக்கொண்டுதான் வருகிறார்கள். மேலும் மேலும் விவசாயிகளுக்கு அதிகப்படியாக இந்த மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அதனால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்திற்குள்ள கட்டணங்களை அதிகப்படுத்தாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இரவு காலங்களில் மின்சாரம் கொடுப்பதால் அவர்கள் தண்ணீர் பாய்ச்சக் கஷ்டப்படுகிறார்கள். மேலும் நாற்று நடும் காலங்களில் அவர்கள் ஓரிரண்டு நாளில் நாற்று நடுவதற்கு பதில் 10 நாட்கள் ஆகின்றன. இரவுக் காலத்தில் நாற்று நட கூலி ஆட்களும் வர மறுக்கிறார்கள். எப்படி இருந்தாலும் நாற்று நடும் காலத்திலாவது பகலில் பூரா மின்சாரம் கொடுக்க வழி வகை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கிணத்துக்கிடவு பிர்க்காவில் மெட்டுபாவி பஞ்சாயத்திலிருந்து வீதி விளக்குகள் போட விண்ணப்பித்திருந்தும் அந்தக் கிராமப் பகுதிகளுக்கு நாளது வரையில் வந்து சேரவில்லை. இப்போதுதான் ஸ்கெட்ச் அனுப்பும்படி சொல்லியிருக்கிறார்கள். முன்பு அனுப்பப்பட்டிருந்த ஸ்கெட்ச் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இப்போது கேட்டால், ஸ்கெட்ச் அனுப்பவில்லை, அதனால்தான் தாமதம் என்று சொல்லுகிறார்கள். சிறிய ஆபீசர்களெல்லாம் சிறந்த முறையில் பணியாற்றுவதே கிடையாது. பெரிய ஆபீசர்களுக்கு விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று இருந்தாலும், சிறிய ஆபீசர்கள் தங்கள் உதவியை நம்பித்தான் விவசாயிகள் பிழைக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள். இந்தச் சபையில் ஒரு விஷயத்தைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு வருஷத்திற்கு முன் 60 கிணறுகளுக்கு விவசாய பம்ப்செட்டுகளுக்கு உத்திரவு வாங்கியிருந்தும் சர்வீஸ் கொடுக்காமல், வேண்டிய கம்பங்கள் போடாமல், லைன்கள் இழுக்காமல் இருந்தார்கள். ஒரு நாள், 10 மாதங்களுக்கு முன், பொள்ளாச்சி ஏரியா எ.இ. ஆபீசுக்குப் போனேன். அன்று சாயங்காலம் அதைப் பற்றி விசாரிக்கலாம் என்று போனேன். அந்த நேரத்தில் அங்கே போர்டு சேர்மன் திரு. அப்பாதுரை முதலியார் அவர்களும் வந்திருந்தார்கள். என்னைக் கண்டதும் 'யார் நீங்கள்' என்று கேட்டார்கள். 'நான் கோயில்பாளையம் தொகுதி எம். எல். ஏ.' என்று சொன்னேன். 'என்ன காரியமாக இங்கு வந்தீர்கள்' என்று அவர் கேட்டார்கள். நான் '60 பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்க உத்தரவு கொடுத்தும் நாளது வரையில் மின்சாரம் கொடுக்கவில்லை, கம்பங்கள் போடவில்லை, வொயர் இழுக்கவில்லை, கேட்கும்போது கம்பங்கள் வந்து சேரவில்லை, கப்பலில் வெளி நாட்டிலிருந்து தான் வருகிறது, வருவதற்கு 6 மாதம் அல்லது 1 வருஷம் ஆகும் என்று

[திரு. எம். பி. முத்துகருப்பண்ணசாமி கவுண்டர்]
[12th August 1963

சொல்லுகிறார்கள், அங்குள்ள விவசாயிகள் அவர்களிடம் உள்ள மாடுகளையெல்லாம் விற்று விட்டு இப்போதைய நிலையில் தண்ணீர் இறைக்க வழி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்' என்று தெரிவித்தேன். உடனே அவர் ஆபீசர்களைக் கூப்பிட்டு 'இவ்வளவு தாமதத்திற்கு என்ன காரணம், மெட்ராசில் கேட்டீர்களா, அல்லது வேறு இடங்களில் விசாரித்தீர்களா? ஏன் தாமதம்? உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்' என்று தெரிவித்தார்கள். என்னிடம் 'அடுத்த வாரத்திற்குள் சர்வீஸ் வராமல் இருந்தால் மதராஸுக்கு கடிதம் அனுப்புங்கள்' என்று தெரிவித்தார்கள். உடனடியாக, ஒரு வருஷமாக கம்பம் இல்லை என்று சொன்னது அடுத்த வாரத்திற்குள் வந்து சர்வீஸ் கொடுக்க வந்து விட்டார்கள். எவ்வளவு சீக்கிரமாக ஏற்பாடு செய்தார்கள் என்று வார்த்தைகளால் சொல்லவே முடியாது. அவர்களைப் போய்ப் பார்த்து, அவர்களுடைய தயவை நாடி இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் விவசாயிகள் 10—15 தடவைகள் போய் அவர்களைப் பார்த்து, அவர்களை கவனித்துக்கொண்டு வந்தால்தான் சீக்கிரம் காரியம் நடைபெறும் என்ற முறையில் இருக்கிறது. இந்த முறை நல்ல முறையில் சீர்திருத்தி விவசாயிகளுக்குக் கூடிய விரைவில் சௌகரியம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி அணைக்கு மேலே ஒரு ஜல மின்சாரத் திட்டம் ஏற்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பல்லடம் தாலூகாவில், வாரப்பட்டி பிர்க்காவில், குமாரபாளையம் கிராமத்தில் வெங்கிடாசலக் கவுண்டர், ஆறுமுகக் கவுண்டர், கருப்பண்ணசாமிக் கவுண்டர், எம். வெங்கடாசலக் கவுண்டர் ஆகிய நான்கு பேர்கள் மின்சாரத்திற்கு விண்ணப்பம் அனுப்பி நான்கு வருஷ காலம் ஆகிறது. அவர்களுக்கு ஐயம்பாளையம் கிராமத்தில் பூமி இருக்கிறது. இதுவரையில் அவர்களுக்கு எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை. எல்லோருக்கும் விண்ணப்பம் அனுப்பியும் எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை. எனக்கும் அந்த மாதிரி விண்ணப்பம் அனுப்பினார்கள். எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அவைகளையும் பார்த்து என்ன காரணம் என்று தெரிந்து கூடிய வரையில் இந்த மின்சார சப்ளை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு சந்தர்ப்பம் அளித்த உதவி சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். முருகையன்** : சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, மின்சார இலாகாவின் 1963-64-ம் ஆண்டு மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக எல்லோருமே மின்சார இலாகாவைப் பாராட்டித்தான் சொன்னார்கள். உண்மையிலேயே பாராட்டுக்குரிய இலாகா அது என்று நானும் சொல்ல விரும்புகிறேன். 1—4—1963-ல், 14,773



12th August 1963] [திரு. எஸ். முருகையன்]

கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையில் காணப்படுகிறது. ஆனால் 1,64,483 பம்ப் செட்டுகள் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதைப் பார்த்தால் அதிக கிராமங்கள் இருக்கிறதே தவிர, கிராமங்களுக்கு ஏற்றவாறு பல பம்ப் செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. பல கிராமங்களில் டிரான்ஸ்பார்மர் சார்ஜ் செய்யப்பட்டு பம்ப் செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கப்படாமலேயே இருந்துகொண்டு வருகிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. அது மட்டுமல்ல. இந்த மினிமம் காரண்டி அக்ரிமெண்ட் செய்யும்போது ஹார்ஸ் பவர் ஒன்றுக்கு 35 ரூபாய் வீதம் அக்ரிமெண்ட் செய்கிறார்கள். ஏரிகள் அதிகமாக உள்ள இடங்களில் வருஷத்துக்கு 5 மாதம் அல்லது 4 மாதம் இறைக்கும் நிலைமை இருக்கிறது. மீதி நாட்களிலும் மினிமம் காரண்டி தொகை பூராவும் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பொதுவாக அந்த முறையில் ஒரு மாற்றம் செய்தால் நலமாக இருக்கும். அவர்களிடத்தில் 10 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்படுகிறது. உதாரணத்திற்கு 3 ஹார்ஸ் பவர் என்று வைத்துக் கொள்வோம். அப்போது 105 ரூபாய் ஆகிறது. பத்து ஆண்டுகளுக்கு 1,050 ரூபாய் ஆகிறது. பத்து ஆண்டுக்குள் 1,050-ஐக் கட்டணமாகச் செலுத்தி விட்டால் போதும் என்ற நிலையில் சட்டத்தை மாற்றினால் ஏழை விவசாயிகளுக்கு நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், எங்கள் பகுதியில் ஏராளமாக ஏரிகள் இருக்கின்றன. வருஷத்திலே, இரண்டு மூன்று மாதங்கள் தான் இறைப்பு இறைக்க வேண்டிய அவசியம் இருக்கும். மழை பெய்து விட்டால் அப்படித்தான் இருக்கும். ஆனால், மழை இல்லாவிட்டால் வருஷம் பூராவுமே இறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும். மின்சார ஒப்பந்தங்கள் 10 ஆண்டுகளுக்குச் செய்து கொள்ளப்படுவதால், ஒரு ஆண்டு குறைவாகக் கரண்டு உபயோகித்து, அடுத்த ஆண்டு அதிகமாக உபயோகித்தால், அவற்றை இரண்டு ஆண்டுகளுக்கும் அட்ஜஸ்ட் செய்து கொள்ளக் கூடிய ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். சென்ற ஆண்டுத் தொகையை அடுத்த ஆண்டுக்கும் கணக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை. அல்லது, 10 ஆண்டு காலத்தில் ஏற்படக்கூடிய தொகையை ஈவு செய்து, இடைக்காலத்திலேயே அதைக் கட்டிவிட்டால், காரன்டியிலிருந்து விடுதலை செய்தால் நலமாக இருக்கும். 10-30 a.m.

அது மட்டுமல்ல, தனியார் மின்சாரத் துறைகள் ஏராளமாக இருக்கின்றன. இதையெல்லாம் சர்க்காரே எடுத்துக் கொண்டு, அதாவது, மின்சார இலாகாவே எடுத்துக் கொண்டு விட்டால் இப்பொழுது இருக்கும் நிலையில் விவசாயிகளுக்கு ரொம்ப நலமாக இருக்கும். இது பற்றி ஒவ்வொரு ஆண்டும் சட்ட மன்றத்திலே சொல்லுகிறோம். பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆனால் ஒரு போர்டாரே கம்பெனியைக் கூட எடுத்ததாகத் தெரியவில்லை. விவசாயிகளுக்கு நல்ல தருணத்திலே கரண்ட் கொடுக்க வசதியாக இருக்கும். எடுத்துக் கொண்டு விட்டால்

[திரு. எஸ். முருகையன்] [12th August 1963

பல கிராமங்களிலே, அரிஜன விவசாயிகள் பணம் கட்டி பம்ப் செட்டுகள் வாங்கியும், காண்ட் கனெக்ஷன் கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு மின்சார அதிகாரிகளைச் சந்தித்து, வேண்டியதைச் சாதித்துக் கொள்ள முடியவில்லை. ஆகையினால், ஏழை அரிஜன விவசாயிகள் உடனடியாக கரண்ட் அடைந்து வசதிகளைப் பெறத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு புதிதாக ஒரு கிராமத்திற்கு கரண்ட் வேண்டுமென்று மனு செய்து கொண்டால், அது கமர்ஷியலிலே சென்று விடுகிறது. அவர்கள் ஒரு சீனியாரிட்டி அல்லது ப்ரையாரிட்டி லிஸ்டு வைத்திருக்கிறார்கள். அவர்கள் கிராமத்திற்கு சென்று எல்லாச் சடங்குகளையும் செய்ய ஒரு ஆண்டு ஆகிறது. பிற்பாடு அந்த மனு விஷயம் கமர்ஷியலிலிருந்து கன்ஸ்ட்ரக்ஷனுக்கு போக ஒரு ஆண்டு காலம் ஆகிறது. அங்கே, கன்ஸ்ட்ரக்ஷனில் அவர்கள் ஒரு ப்ரையாரிட்டி லிஸ்டு வைத்திருக்கிறார்கள். இதற்குப் பிறகு ஒரு ஆண்டோ அல்லது இரண்டு ஆண்டுகளோ ஆகின்றன அந்தக் கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்க. ஆகவே, ஏழை விவசாயிகள் உடனடியாக மின்சார வசதி பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டிய எற்பாடுகளை உடனடியாகச் செய்தால் நலமாக இருக்கும்.

கன்ஸ்ட்ரக்ஷனிலே வேலை செய்து விட்டு, ட்ரான்ஸ்பார்மரையும் சார்ஜ் செய்து விட்டு, கரண்ட் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. லைன்கள் போடும்போது, எல்லா விவசாயிகளுக்கும் கரண்ட் கிடைக்கும் என்று சொல்லி அவர்கள் உடனடியாக மோட்டார் வாங்கி வைக்க எச்சரிக்கை செய்திருந்தால், நலமாக இருந்திருக்கும். கம்பம் நடும்போது, விவசாயிகள் என்ன நினைக்கிறார்கள் என்றால், இப்பொழுது தானே கம்பம் நடுகிறார்கள், மின்சாரம் வர இன்னும் சில ஆண்டுகளாவது ஆகும் என்று சும்மா இருந்து விடுகிறார்கள். ஆனால், ட்ரான்ஸ்பார்மர் சார்ஜ் கொடுக்கும் நேரத்தில், விவசாயிகள் கரண்டை எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லாததால், உடனே O & M -ல் ஹாண்டோவர் செய்து விட்டுப் போகிறார்கள். அவர்கள் உடனடியாக மின்சாரத்தை உபயோகிக்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் உடனடியாக கரண்ட் வரும் என்பது அவர்களுக்கு தெரியாததால் தான். ஆகவே, லைனைப் போடும்போதே, அந்தந்தப் பக்கத்தில் ஃபீடர் போட்டு விடவேண்டும். அது, இப்பொழுது செய்வது கிடையாது. அதற்கு வேண்டிய முறையில் சட்டத்தை மாற்றி, விவசாயிகள் உடனுக்குடனே கரண்டைப் பெறும் அளவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில கிராமங்களில் பணம் கட்டுவது கூட சிரமமாகி இருக்கிறது. ஏற்கனவே இருந்த பணம் கட்டும் ஆபீசுகளை மாற்றி இருக்கிறார்கள். அதனால் விவசாயிகள் அல்லல் படுகிறார்கள். உதாரணமாக, ஏற்கனவே கலசபாக்கம் கிராமத்தில் ஒரு ஆபீஸ் இருந்தது. அதை எடுத்து விட்டு, தானிப்பாடி தொகுதியில்



12th August 1963] [திரு. எஸ். முருகையன்]

காஞ்சி என்ற கிராமத்திற்கு மாற்றி விட்டார்கள். இப்பொழுது 15, 20 கிராம மக்கள் அங்கே செல்ல வேண்டுமென்றால் போளூர் சென்று பஸ் ஏறி, வேலூருக்குச் செல்லும் பஸ்ஸில் மாறிப் போக வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட கோளாறினால் (இரண்டு பஸ்கள் மாறிச் செல்ல வேண்டி இருப்பதனால்), விவசாயிகள் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். வாரத்திற்கு ஒரு முறை பில் கலெக்டர் கிராமத்திற்கு வருகிறார். ஆனால், அவர் வரும்பொழுது, எல்லா விவசாயிகளும் ஊரில் இருப்பதில்லை; வயல் வெளிக்கு சென்றிருப்பார்கள். அப்பொழுது கட்டணத்தைச் செலுத்த முடிவதில்லை. கலசபாக்கத்திலேயே அந்த கலெக்ஷன் ஆபீசை வைத்தால், 20, 25 கிராமங்களுக்கு வசதியாக இருக்கும்.

பொதுவாக கரண்ட் வசதி பெற வேண்டுமானால், விவசாயிகளுக்கு எந்த ஆபீசுக்குப் போகவேண்டும், யாரைப் பார்க்க வேண்டும் என்பதெல்லாம் தெரிவதில்லை. இந்த மின்சார இலாகா, "சீக்கிரத்தில் மின்சாரம் பெறுவது எப்படி." என்று ஒரு சிறிய, 20 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை வெளியிட்டால், அதை விவசாயிகள் ஒவ்வொருவரும் வாங்குவார்கள், படிப்பார்கள், கமர்ஷியலுக்குப் போகவேண்டுமா, கன்ஸ்ட்ரக்ஷனுக்குப் போக வேண்டுமா, O. & M.க்குப் போகவேண்டுமா என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரிய வசதியாக இருக்கும். கரண்ட் பெறுவதும் எளிதாக இருக்கும்.

இந்த இலாகாவில் உள்ள பலதரப்பட்ட பிரிவுகள் ஒரே ஊரில் இருந்தாலும், பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படியே இருக்கும் பல ஆபீசுகளுக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் போவதும்கூட சிரமமாக இருக்கிறது. விவசாயிகள் கஷ்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாம். ஆகவே, இந்த ஆபீசுகளையெல்லாம் ஒரே கட்டடத்தில் வைத்தால் வசதியாக இருக்கும். வாடகைக் கட்டடமாக இருந்தாலும், ஒரே இடத்தில் அமைந்தால் விவசாயிகள் சென்று தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ள வசதியாக இருக்கும். ஒவ்வொரு டி.இ. ஆபீசிலும் ஒரு விசாரணை அதிகாரியை நியமிக்க வேண்டும். அங்கே சென்று மக்கள் வேண்டிய தகவல்களைப் பெற வசதியாக இருக்கும்.

என்னுடைய தொகுதி பற்றிச் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். பாலாறு பேசின் என்று சொல்லி, வட ஆற்காடு முழுவதையும் முதலிலே சேர்த்திருந்தார்கள். என்னுடைய தொகுதியான தூரிஞ்சாபுரத்தில், சில கிராமங்களில் ஐந்து குதிரை வேகத்திற்குக் குறைந்த கரண்ட் கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். பல கிராமங்களில் ஸ்கீம்கள் போட்டு நிறைவேற்றப்பட வில்லை. விவசாயிகள் 7½ அல்லது 10 குதிரை வேகம் என்று எக்ரிமெண்ட் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டிய 3 அல்லது 5 குதிரை வேகத்தில் ஸ்கீமை நிறைவேற்ற முடியாத நிலைமை இருக்கிறது. ஸ்கீம் சாங்ஷன் ஆகியும் கரண்ட் பெற முடியவில்லை. எலெக்ட்ரிசிட்டி

டிபார்ட்மெண்டிலே 10 குதிரை வேகம் என்று போடுகிறார்கள். 10 ஏக்கர் நிலம் இருந்தால்தான் அதைச் செய்து கொள்ள முடியும். ஒரு கிணறு இருந்தால், 2 கிணறுகள் இருந்தால் இரண்டு 5 ஹார்ஸ் பவர் மோட்டார் போதும். ஆகவே, இம்மாதிரி நிலைமையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை பாலாற்றிலிருந்து 45, 50 மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கே ஒரு ஊற்றும் கிடையாது. ஆகவே, இந்தத் திட்டத்தை மாற்றி விவசாயிகள் குறைந்த வேகமுள்ள மோட்டார்களைப் பொருத்திக் கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சில கிராமங்களில் மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டும், டிரான்ஸ்பார்மர் வைத்தும் அக்ரிமெண்டு ஆகாமலும் கரண்டு வராத நிலை இருந்து கொண்டிருக்கிறது. மேப்பத்துறை, தேவகாரந்தாங்கல், சொரகளத்தூர், பொற்குணம், சாணநந்தல், சடையனோடை, நாந்தம் பூண்டி, நம்மியந்தல், சிலெப்பந்தல், கோஹூர், கார்கொணம், வேடந்தவாடி, மேல்பாலானந்தல், கீழ் பாலானந்தல் ஆகிய கிராமங்களில் கம்பங்கள் நட்டிருக்கிறார்கள். ஆனால் கம்பி இல்லை என்று சொல்கிறார்கள். சில கிராமங்களில் கம்பங்கள் கூட நடவில்லை. இப்படிப் பல குறைபாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தக் குறைபாடுகளையெல்லாம் உடனடியாகக் கவனித்து, நிவர்த்தி செய்து, மின்சார இணைப்பு தேவையான இடங்களில் உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்தால் தான் நல்ல முறையில் உணவு உற்பத்தி செய்ய முடியும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

* **திரு. கே. பொன்னையா:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மின்சார போர்டாரின் நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

சரித்திரம் காணாத அளவில், தென்-மேற்குப் பருவ மழை பொய்த்து விட்டது. இந்தக் காலத்தில் எல்லா அணைகளும் வழிந்தோடிக் கொண்டிருக்கவேண்டும். வால்பாறைப் பிரதேசத்தில் வருஷா வருஷம் இந்த நாட்களில் 200 அங்குலம் மழை பெய்திருக்கவேண்டும். ஆனால், 65, 70 அங்குலத்தோடு போய்விட்டது. பெரு மழையினால் பெரிய பெரிய சேதங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். நிலச் சரிவுகளினால், 'காட் ரோடு' களில் பாலங்கள் சேதம் அடைந்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட விரோதங்கள் வருஷா வருஷம் காணப்படுவதுண்டு. இந்த வருஷம் அதெல்லாம் ஒன்றும் கிடையாது. அதற்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன். 'பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும்' என்று சொல்லுவதுண்டு. அதுபோல், பெரிய பெரிய நீர்த் தேக்கங்களில் தண்ணீர் நிரம்பாத காரணத்தால், மின்சாரம் எவ்வளவு மாதங்களுக்கு ஓடி வருமோ என்று தெரியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.



பருவ நிலை கோளாறினால் இப்படியெல்லாம் ஏற்படுகிறது என்பதைக் கருதித்தான் நமது சர்க்காரும், மின்சார போர்டாரும் அனல் மின்சார நிலையங்களையும், அணு மின்சார நிலையத்தையும் பல இடங்களில் நமது மாநிலத்தில துவக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த முயற்சியை நான் மிகவும் வரவேற்கிறேன்.

வால்பாறைப் பிரதேசத்தில் தேயிலை பாக்டரிகள் ஏராளமாக இருக்கின்றன. மின்சார வெட்டு வருவதற்கு முன்னாலேயே, 'மின்சார வெட்டு வரப்போகிறது, 25 சதவிகிதம், 50 சதவிகிதம் மின்சாரத் தேவையைக் குறைத்துக்கொண்டால் நல்லது' என்று சொல்லி மானேஜ்மெண்டாருக்குத் தகவல் கொடுத்தால், அதன்படி பாக்டரி மானேஜ்மெண்டார் நடந்துகொள்வார்கள். சமீபத்தில் மின்சார வெட்டு ஏற்பட்டபோது, எந்த அளவுக்கு மின்சாரம் பாக்டரிகளுக்குக் கொடுக்கப்படும என்பதுபற்றி முன்னாடியே தகவல் கொடுக்காத காரணத்தால், ஸ்விட்ச் போட்டவுடன் 'ஹம்' என்கிற 'நாய்ஸ்' ஏற்பட்டு அங்கிருக்கும் மோட்டாரை உடைத்தெறிந்து விட்டது. 'பர்ன்' ஆய்விட்டது. ஷோலையார் எஸ்டேட்டிலிருந்து போர்டு சேர்மனுக்கும், கனம் அமைச்சர் அவர்களுக்கும் தந்தி கொடுத்தார்கள். நானும் கூட அமைச்சருக்குத் தந்தி கொடுத்தேன். பிற்பாடு, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் இது பற்றிப் பேசும்போது, பொள்ளாச்சி சப்-டிவிஷனில் உள்ள பூல்டர்கள், இரண்டு, மூன்று மாதங்களாகக் கெட்டுவிட்டன என்றும் சீக்கிரத்தில் பழுது பார்த்து, நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதாகவும் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் பதில் சொல்லப்பட்டது. ஆகவே இனிமேலாவது டிபார்ட்மெண்டார் மின்சார சப்ளையைக் 'கட்' செய்வதற்கு முன்னால், ஏழெட்டு நாட்களுக்கு முன்னதாகவே, 'இவ்வளவு கரண்ட் கட் ஆகும், அதற்குத் தகுந்தபடி லோடைப் போட்டுக்கொள்ளுங்கள்' என்று தகவல் கொடுத்துவிட்டால் மிகவும் நலமாக இருக்கும். அதற்கான ஏற்பாட்டை மின்சார போர்டார் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கனம் அமைச்சர் திரு. ராமையா அவர்களும், மின்சார இலாகா அமைச்சர் அவர்களும் சமீபத்தில் கேரளம் சென்றிருந்தார்கள். நம் ராஜ்யத்தில் நாமெல்லாம் ஹைடெல் பவரைத்தான் அதிகமாக நம்பி வந்திருக்கிறோம். ஹொக்கனெக்கல் திட்டமானது இன்டர்-ஸ்டேட் நதி சம்பந்தப்பட்டது. பரம்பிக்குளம்-ஆளியார் திட்டமும் இன்டர்-ஸ்டேட் நதி சம்பந்தப்பட்டதுதான். பரம்பிக்குளத்திற்கு மேல், நீராறுக்கு 4 மைலுக்கு மேல் ஆனைமலை ஆறு, இடமலை ஆறு என்கிற இரண்டு ஆறுகள் இருக்கின்றன. அந்த ஆறுகளைப் பற்றியும் பேசினார்களோ என்னவோ தெரியாது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்டத்தில் அது சேர்ந்திருந்தது. அந்த ஆறுகளுக்கும் சேர்த்துத் திட்டமிட்டால் விவசாயத்திற்குப் பயன்படும். மின்சாரமும் நல்ல உயர்ந்த இடத்திலிருந்து தாராளமாக எடுக்கலாம் என்பதையும் நான் கனம் அமைச்சருக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

[திரு. கே. பொன்னையா] [12th August 1963

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நாம் மின்சாரம் எடுக்கிறோம். அதே போல், சாத்தனூர் அணைக்கட்டு, கீழ் பவானி அணைக்கட்டு, மணிமுத்தாறு அணைக்கட்டு, அமராவதி அணைக்கட்டு ஆகியவற்றிலிருந்தும் ஏன் மின்சாரம் நாம் எடுக்கக்கூடாது? மேட்டூரில் எடுக்கக்கூடிய நிலை இருக்கும்போது, மற்ற நீர்த் தேக்கங்களிலிருந்தும் ஏன் மின்சாரம் எடுக்கக்கூடாது என்பதைப்பற்றி ஆராயவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைப் படித்தபோது எனக்கு ஒரு 'ஷாக்' ஏற்பட்டது. சோலையாறு பவர்ஹௌஸ் (1)-ம் சர்க்கார் பதி பவர்ஹௌஸூம்தான் சாங்ஷன் ஆகும்போல் ஆரம்பத்தில் இருந்தது. அடுத்த இரண்டு வரிகளைப் படித்தபோது, சோலையாறு பவர்ஹௌஸ் (2)ம், ஆளியாறு பவர்ஹௌஸூம் சேர்க்கப்பட்டிருப்பதைப் பார்த்துச் சந்தோஷப்பட்டேன். நான்காவது திட்டத்திற்குப் போய்விடுமோ என்கிற அச்சம் இருந்த நிலை மாறி, மூன்றாவது திட்டத்திலேயே நிறைவேறும்படி செய்ததற்கு திட்ட கமிஷனுக்கும், கனம் அமைச்சர் அவர்களுக்கும், மின்சார போர்டாருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியிலிருந்து சோலையாறு பவர் ஹவுஸூக்குப் போகவேண்டுமென்றால் வால்பாறை வந்துதான் போகவேண்டும். பொள்ளாச்சியிலிருந்து டாப்ஸ்லிப் வரை ரோடு வசதி ஏற்படவேண்டும். ஊளாந்தி பாரஸ்ட் வரையில் ரோடு போட்டாய்விட்டது. இன்னும் 6 மைல் ரோடு போட்டுவிட்டால் சோலையாறு பவர் ஹௌஸ் போய்விடலாம். அதுபற்றி ஏற்கனவே அமைச்சர் வந்தபோதுகூடச் சொன்னேன். அந்த ரோடை போட்டுவிடும் பட்சத்தில் மிகவும் சுலபமாகப் பெரிய சாமான்களைக் கூட மேலே கொண்டு போய்விடலாம். அதை டிபார்ட்மென்டாரும் கனம் அமைச்சர் அவர்களும் கவனிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.

இந்தப் பிராந்தியத்தில் எனக்கு அடிக்கடி ஏற்படுகிற ஒரு தலைவலி என்னவென்றால், பாரஸ்ட் டிபார்ட்மென்டும் எலெக்ட்ரிசிடி டிபார்ட்மெண்டும் அடிக்கடி மோதிக் கொள்ளுகிறார்கள். நானும் உத்தியோகஸ்தர்களைப் பார்த்துச் சொன்னேன். டிபார்ட்மென்டுக்குள்ளேயே சர்ச்சை இருக்கக்கூடாது என்று சொன்னேன். ஒன்றும் கேட்டபாடில்லை. மினிஸ்டர் லெவலில் இதை ஒழுங்குபடுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டி. ஈ. மெயின்டினென்ஸ் 20,000 ரூபாய் வரையில் எஸ்டிமேட் சாங்ஷன் செய்யலாம் என்றும், ஏ.ஈ. மெயின்டினென்ஸ் ஆயிரம் ரூபாய் வரையிலும் சாங்ஷன் செய்யலாம் என்றும் வரையறை இருக்கிறது. ஏ.ஈ. க்கு 5,000 ரூபாய் வரையில் சாங்ஷன் செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டால்தான் நன்றாக இருக்கும். ஆயிரம் ரூபாய் என்பது இந்தக் காலத்தில் மிகக் குறைந்த அளவாகும். இதையும் டிபார்ட்மென்டார் யோசிக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.



12th August 1963] [திரு. கே. பொன்னையா]

இந்த டிபார்ட்மென்ட் மற்ற எல்லா டிபார்ட்மென்ட்களைக் காட்டிலும் தலைசிறந்து விளங்குகிறது. எதிர்க் கட்சியில் உள்ள சில கனம் உறுப்பினர்கள் சபித்தார்கள். குறை கூறினார்கள். அவர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 156 மெக வாட்டாக உற்பத்தித் திறன் இருந்தது, இரண்டாவது திட்டத்தின் இறுதியில் 560 மெக வாட்டாக உயர்ந்திருக்கிறது. மூன்றாவது திட்டத்தின் இறுதியில் 1,220 மெக வாட் அளவுக்கு வரப்போகிறோம். மின் சக்தி உபயோகிப்போரின் எண்ணிக்கை முதல் திட்டத்தில் 2.5 லட்சமாக இருந்தது, இரண்டாவது திட்டத்தில் 9.7 லட்சமாக உயர்ந்திருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் அது 14 லட்சமாகப் போகிறது. மின் சக்தி விஸ்தரிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை முதல் திட்டத்தில் 1,813 ஆக இருந்து, இரண்டாவது திட்டத்தில் 14,873 ஆக அதிகரித்து, மூன்றாவது திட்டத்தில் 18,000 ஆகப் போகிறது. விவசாய பம்ப் செட்டுகளின் எண்ணிக்கை 14,373 லிருந்து 200,000 ஆக அதிகரிக்கப் போகிறது. இந்த டிபார்ட்மென்ட் மற்ற டிபார்ட்மென்ட்களைக் காட்டிலும் மிக மிக வேகமான நிலையில் முன்னேறிக் கொண்டு வருகிறது என்பதைச் சந்தோஷத்தோடு தெரிவித்து, இந்த டிபார்ட்மென்டுக்கு நாம் எல்லோரும் மிகவும் ஆக்கம் கொடுத்து, மூன்றாவது திட்டத்திற்குள்ளாக அமைச்சர் அவர்கள் சொன்ன குறிக்கோளைத் தொட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உப தலைவர் அவர்களே, மின்சாரக் கழகத்தின் நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்கின்றேன். மின்சாரக் குழு தனியாக அமைக்கப்பட்டபோது, சட்ட சபை அங்கத்தினர்களுக்கு அதைப்பற்றி சரியான அபிப்பிராயம் சொல்ல முடியாத நிலை இருந்தது. அரசாங்கத்தின் கையில் இருக்கும் அதிகாரத்தை மின்சாரக் குழு பறித்துக்கொண்டு போவது போன்ற ஓர் உணர்ச்சி அப்பொழுது ஏற்பட்டதுண்டு. ஆனால், நடைமுறையில் அது எல்லோருக்கும் திருப்தி அளிக்கக் கூடிய அளவிற்குச் செயல்பட்டு வருவது எல்லோருக்கும் சந்தோஷத்தைத் தருகிறது. இந்த இலாகா எப்படி ஒரு தனியான குழுவின்கீழ் இருந்து வேகமாக இயங்குவதற்கு முடிகிறதோ இவைகளையெல்லாம் பார்த்தபோது, இன்னும் பல இலாக்காக்களைக்கூட இதுபோல் எந்த எந்த வகைகளில் எல்லாம் திருத்தி அமைத்தால் நம்முடைய எண்ணத்தின் வேகத்திற்குத் தகுந்தாற்போல் வளர்ச்சியை வேகமாக எட்டிப் பிடிக்க முடியும் என்பதை மத்திய, இராஜ்ய சர்க்கார்கள் பரிசீலனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மின்சார போர்டு தனியாக இயங்குவதற்கு வழி செய்ததன் காரணமாக அவசியம் இல்லாமல், போக வேண்டாத இடங்களுக்கெல்லாம் போகாமல், நேராக, சுருக்காக, வேகமாக இந்தக் காரியங்களையெல்லாம் செயல்படுத்துவதற்கு முடிகிறது. போர்டார் தங்களுடைய கருத்திலே தெளிவாகத் தெரியக்கூடியதைச் சிந்தித்து அதன்படி நல்ல முறையில் நடந்து வருவதை நாம் பார்க்கிறோம். இதனால், நம்முடைய திட்டங்கள் சம்பந்தப்பட்ட பல

காரியங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு ஒரு 'ஃபிலிப்' ஆக, முன்னேடியாக ஒரு எண்ணத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.

எங்களுக்கு எல்லாம் ஒரு பெரிய திருப்தி. அங்கத்தினர்கள் அப்பொழுது அப்பொழுது சொல்கிற யோசனைகளை எல்லாம், குறைபாடுகளை எல்லாம் உடனடியாகக் கவனித்து அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகின்றன, எவை எவை சாத்தியமானவை, எவை சாத்தியமற்றது என்கிற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மற்ற மானியங்கள் சம்பந்தப்பட்டவரையிலும்கூட இதேமாதிரி முறையையே ஒரு முன்னேடியாகக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். மின்சாரம் எவ்வளவு வேகமாக விஸ்தரிக்கப்பட்டு வருகிறதோ அவ்வளவு வேகமாக நகரத்திற்கும், கிராமங்களுக்கும் உள்ள வேறுபாடு மறைந்து வருவதும், மக்கள் கிராமங்களில் போய்க் குடியிருக்க ஒரு மோகம் கொள்வதையும் பார்க்கிறோம். எப்படி கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டுவிட்டதோ அப்படியே இன்றையதினம் நம்முடைய ராஜ்யத்திலிருந்தும் மற்ற ராஜ்யங்கள் எல்லாவற்றுக்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, பல்வேறு தேசங்களுடைய ஒத்துழைப்பை ருஷ்ய அரசாங்கத்தின் ஒத்துழைப்பை, கனடிய அரசாங்கத்தின் உதவியை, ஜப்பான், யூகோஸ்லோவியா போன்றவற்றின் உதவியை எல்லாம் சேர்த்து தொகுத்து ஒன்றாகப் பார்க்கிறபொழுது நம்முடைய அயல் நாட்டுக் கொள்கை எத்தகையது என்பதைப் பெருமையாகப் பார்க்கிற இடமாக இந்த இலாகா பணிபுரிந்து வருகிறது.

மற்றொரு மகிழ்ச்சி என்ன வென்றால் கேட்கிற தகவல்களுக்கு ஏதேனும் ஒரு பதிலாவது கொடுக்கிறார்கள். இது மற்ற இலாக்காக்கள் பின்பற்றுவதற்கு ஓர் உதாரணமானது என்று கருதுகிறேன்.

இந்த இலாகாவுக்குரிய 1957-58-ம் ஆண்டுக்குரிய ஆடிட் ரிப்போர்ட்டை நான் படித்துப் பார்த்தேன். அதில் உற்பத்தியாகக் கூடிய மின்சாரம், விற்பனையாகக் கூடிய மின்சாரம் ஆகிய இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து நூற்றுக்கு எண்பத்திரெண்டரை சதவிகிதம்தான் விற்பனையாகியிருக்கிறது, பாக்கி ஆகவில்லை என்ற புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. இப்படி நூற்றுக்கு பதினேழரை சதவிகிதம் விரயமாகிறது என்றால் இதுபோல மற்ற நாடுகளிலும் ஆகிறதா? மற்ற நாடுகளில் எல்லாம் விரயமாகக் கூடிய மின்சாரம் எவ்வளவு, இப்படி விரயமாவதைத் தடுக்க முடியாதா, இது உண்மையான விரயம்தானா அல்லது இங்குதான் அதிகமாக வியர்த்தமாகிக் கொண்டிருக்கிறதா என்கிற விஷயங்களை எல்லாம் பரிசீலனை செய்து கனம் அமைச்சர் அவர்கள் சொல்வாரானால் நல்லது என்று நான் கருதுகிறேன்.

டெல்லிக்குச் சென்றிருப்பவர்கள் கட்டாயம் பார்த்திருக்கக் கூடும். இன்றையதினம் டெல்லி, ஆக்ரா போன்ற நகரங்களுக்குப் போய்ப் பார்க்காதவர்கள் இருக்க முடியாது. அவை சர்வதேச





நகரங்களாக விளங்குகின்றன. டெல்லிக்கும் ஆக்ராவுக்கும் இடையில் நூற்றுக்கும் மேற்பட்ட மைல் தூரம் இருக்கும். டெல்லி, ஆக்ரா இவை இரண்டுக்கும் இடையில் இருபத்திரண்டு ஊர்கள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். ரோடு மார்க்கமாகச் செல்கிறவர்கள் பார்க்கலாம், இந்த இருபத்திரண்டு ஊர்களில் ஒரு ஊரில்கூட மின்சார இணைப்பைப் பார்க்க முடியாது. அதை நினைக்கிறபோது நம்முடைய மாநிலத்தில் உள்ள கிராமங்கள் எல்லாம் எவ்வளவு தூரம் மின்சாரத்தினால் இணைக்கப்பட்டு, அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதை என்னால் மிக நன்றாகப் பார்த்துப் பெருமையடைய முடிகிறது. தெற்கு வளருகிறது. பதினாயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் மின்சார இணைப்பைப் பெற்றுவிட்டன. மூன்றாம் திட்ட முடிவில் நம்முடைய லட்சியம்—இந்த மாநிலத்தைப் பொறுத்த மட்டில் பதினெட்டாயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்துவிடப் போகிறோம் என்பது பெருமை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

நம்முடைய மாநிலத்தில் 18 ஆயிரம் கிராமங்கள் சொச்சம் இருக்கின்றன என்றால் ரெவின்யூ கிராமங்களை மட்டும் கணக்கிட்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஒரு ரெவின்யூ கிராமத்தில் பத்துப் பதினைந்து குக்கிராமங்கள் உண்டு. ஒரு கிராமத்திற்கு மின்சார இணைப்புக் கொடுக்கிறபோதே அந்த ரெவின்யூ கிராமத்துடன் சேர்ந்துள்ள குக்கிராமங்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரிப்பதுதான் நல்லது. இப்போது அவை இணைப்பைப் பெறுவிட்டால் பின்னர் அந்த குக்கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பது என்றால் அந்தத் திட்டம் லாபகரமாக இருக்குமா இல்லையா என்று பார்க்கிறபோது லாபகரமானதாக இருக்காது. அந்த ஒரு காரணத்தினாலேயே அந்தக் குக்கிராமங்களுக்கு பின்னால் விஸ்தரிப்பு செய்வது என்பது இயலாத காரியமாகப் போய் விடும். ஆகவே இப்போதே ஒரு கிராமத்திற்கு மின்சார இணைப்புக் கொடுக்கிறபோது, அந்த கிராமங்களைச் சேர்ந்த குக்கிராமங்களுக்கும் விஸ்தரிப்பு செய்ய வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஹரிஜன பகுதிகளுக்கு மின்சாரம் விஸ்தரிப்பதற்காக வும் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், இது வருஷா வருஷம் ஒன்றரை லட்சம் என்ற அடிப்படையில் செலவிடப்படும் என்றும் இருக்கிறது. இவ்வாண்டு ஒன்றரை லட்சம் செலவாகிவிட்டது என்றால் அதற்குமேல் செலவிடக்கூடாது என்று தடை செய்யாமல் அந்த பதினைந்து லட்சத்தையும் சீராக அந்த விஸ்தரிப்புப் பணியிலே தடையில்லாமல் செலவிட்டு வருவதன் மூலம் மிகக் குறுகிய காலத்திலேயே ஹரிஜனப் பகுதிகள் எல்லாம் மின்சார விஸ்தரிப்பைப் பெற வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மின்சார போர்டிலே மேல் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் எப்போதும் சிரித்த முகத்துடன், மலர்ந்த முகத்துடன் நாம் கேட்கிற கேள்விகளுக்குப் பதிலளித்துக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் செய்து வருகிற காரியங்களில் மிக ஊக்கமும், உற்சாகமும் காட்டி வருகிறார்கள். ஆனால் கிராமப் பகுதியில்

இருக்கக்கூடிய சூப்ரவைசர் போன்றவர்கள் பலர் அப்படியில்லை. அவர்கள்தான் வன்றூடம் கிராம மக்கள் பலரால், ஏழை எளிய மக்கள் பலரால் அண்டி பேசுவதற்குரியவர்களாக இருக்கிறார்கள். இன்றையதினம் அவர்கள் தவறு செய்வதற்குரிய மார்க்கங்கள் இருப்பதாகக்கூட நான் நம்புகிறேன். ஆங்காங்கு மோட்டார் சப்ளை செய்கின்றபோது குறிப்பிட்ட மோட்டாரை வாங்கினால் தான் உங்களுக்கு மின்சாரம் கொடுப்போம் என்பதாக நிபந்தனை விதிப்பதாகக்கூட புகார் வருகின்றன. இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நல்ல மின்சாரப் பொருள்களை விற்பனை செய்யக்கூடிய கம்பெனிகளும் இருக்கின்றன. இல்லாத கம்பெனிகளும் இருக்கின்றன. விவசாயிகளுக்கு நல்லது எது, கெட்டது எது என்று பார்ப்பது கஷ்டம். தவறான பொருள்கள் உபயோகப்படுத்தப்படுமானால் அதைத் தடுப்பதற்குரிய அதிகாரம் இன்று இருப்பதாகத் தெரியவில்லை. தவறான வயர்களே இழுக்கப்பட்டு, மின்சார சர்வீசும் கொடுக்கப்படுமானால் அதனால் ஏற்படுகிற ஆபத்து அந்த வீட்டுக்கு மட்டும் அல்ல, பக்கத்தில் உள்ள வீடுகளுக்கும், அந்த ஊருக்குமே ஆபத்து ஏற்படக்கூடும். உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே வயரிங் நல்லமுறையில் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை முதலிலேயே பரிசீலனை செய்து அதற்குப் பிறகு சர்வீஸ் கொடுக்கும்படியான அதிகாரம் யாரிடமாவது இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

பெரிய காற்று அடிக்கிற காலத்தில், மழை பெய்கிற காலத்தில் மின்சாரக் கம்பங்கள் அங்கங்கே விழுவதும், அதனால் கால்நடைகளுக்கு, மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. மற்ற பெரிய தொழிற்சாலைகளில், கம்பெனிகளில் இதுமாதிரியாக விபத்து ஏற்பட்டால் நஷ்டஈடு கொடுக்க வழிவகை இருக்கிறது. ஆனால் கிராமங்களில் உள்ள கால்நடைகளோ, மனிதர்களோ இந்தமாதிரியாக மழை பெய்கிற காலத்தில் மின்சாரக் கம்பங்கள் விழுந்தோ, வயர் அறுந்து விழுந்தோ இறந்தார்களானால் அதற்கு நஷ்ட ஈடு பெறுவதற்கு வழிவகை இருப்பதாகத் தெரியவில்லை. இதையும் பரிசீலனை செய்து, இந்தமாதிரி விபத்துக்குள்ளானவர்கள் யாரிடம் நஷ்ட ஈடு கோரவேண்டும் என்பதையும் நிர்ணயித்து, நஷ்ட ஈடு கொடுப்பதற்காகவே நிதி ஒதுக்கித் தருவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

குறைந்தபட்ச கட்டணத்தைப் பொறுத்தமட்டில் அதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து வருவதோடு அறவே நீக்கிவிடுவது தான் எங்கள் லட்சியம் என்று குறிப்பிட்டு இன்று ஐம்பதில் இருந்து நாற்பத்தைந்து, நாற்பத்தைந்திலிருந்து முப்பத்தைந்து என்ற அளவுக்குக் குறைத்திருக்கிறோம் என்று சொன்னாலும் இப்படியே குறைத்துக் கொண்டுபோய் நம்முடைய லட்சியத்தை எட்டிப் பிடிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறோம், வருஷா வருஷம் எந்த அளவுக்கு அந்தத் திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்பதைப் பரிசீலனை செய்து பார்ப்பது நல்லது என்று கருதுகிறேன்.



என்னுடைய தொகுதியில் நாசரத் என்ற ஊரில் திருச்செந்தூர் கூட்டுறவு மில் இயங்கி வருகிறது. அது இரவு, பகல் என்று இரண்டு வேளையில் வேலை செய்து வருகிறது. ஆனால் அங்குள்ள தொழிலாளர்கள் தொடர்ந்து ஒரு கஷ்டத்தை உணர்ந்து வருகிறார். பகல் ஷிப்டாக இருந்தாலும் இரவு ஷிப்டாக இருந்தாலும் பகல் முழுவதும், இரவு முழுவதும் அவர்கள் வசதிபோல் வேலை செய்யக்கூடிய அளவுக்கு மின்சாரம் சப்ளை செய்வதில்லை. இரவு 6 மணி முதல் 9 மணி வரை, பகல் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரை என்பதாக சில ரெஸ்ட்ரிக்ஷன் இருப்பதனால் அவர்கள் பகல் முழுவதும் ஒரு ஷிப்ட், இரவு முழுவதும் ஒரு ஷிப்ட் என்று வேலை செய்யக்கூடிய கஷ்ட நிலையை உணருகிறார்கள். அப்படியின்றி மின்சாரம் தொடர்ந்து கிடைக்கச் செய்தால் 3 ஷிப்ட் என்று ஏற்படுத்திக்கொள்ளலாம். இதனால் இன்னும் அதிகமான தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும்; தொழிலாளர் சிரமமும் குறையும் என்று நம்புகிறேன். அதற்குரிய கோரிக்கையும் இருந்து வருகிறது. அதையும் மின்சார போர்டு கவனிக்கும் என்று நான் கருதுகிறேன்.

மேல் திசையில் ஓடக்கூடிய ஆறுகளை எல்லாம் பயன்படுத்தி, 11-00
எப்படி அந்தப் பக்கத்தில் ஆளியாறு-பரம்பிக்குளம் திட்டங்கள் a.m.
மேற்கொள்ளப்பட்டனவோ அதே போன்று 'அப்பர் பெரியாறு', பம்பையாறு போன்றவற்றையெல்லாம் விவசாயத்திற்கு மாத்திரமல்லாமல், மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற முறையில் அமைத்தால் குறிப்பாக இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கக் கூடியவர்கள் பயன்பெற முடியும். நமது அரசாங்கம் கேரள அரசாங்கத்தோடு நடத்தும் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறுவதற்கான எல்லா விதமான நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார போர்டினுடைய ஆண்டு அறிக்கையின் மீது பேசிய எங்கள் கழக அங்கத்தினர்கள் பலர் மின்சார போர்டினுடைய தலைவரைப் பற்றியும், இலாகாவைப் பற்றியும் புகழ்ச்சியாகவும், அதே சமயத்தில் அவரவர்கள் தொகுதியில் இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியும் இங்கே பேசினார்கள். எங்களுடைய பகுதியிலிருந்து மின்சாரக் குழுவைப் பாராட்டுகிற போது, அதிலே வேலை செய்கிற அதிகாரிகளை எல்லாம் புகழ்ந்து பாராட்டுகிற சமயத்தில் எங்களுக்கு முன்னால் இருக்கிற நம்முடைய அமைச்சர் அவர்கள் "ஈன்ற பொழுதினும் இனிதுவக்கும் தன் மக்களைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற முறையிலே புன்னகை செய்து வரவேற்கிற காட்சியைப் பார்க்கிறேன். தன்னுடைய பிள்ளைமட்டும் நன்றாக இருந்துவிட்டால் போதும் என்று எண்ணுவது தாய்க்குரிய நல்ல கோட்பாடாகாது. தாயாக இருக்கின்றவர்களும் நல்ல முறையிலே கொள்கைகளை வகுத்துச் செயல்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம். மின்சார இலாகாவானது இருக்கின்ற மின்சாரத்தை [illegible] [illegible] மற்றத் துறையிலேயும் [illegible] ஆனால்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [12th August 1963

மேலும் பல திட்டங்களை வகுத்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அமைச்சரைச் சார்ந்ததாகும். அந்த முறையிலே பல திட்டங்களை எடுத்து நிறைவேற்றவேண்டுமென்று மின்சார போர்டு வற்புறுத்தி வந்திருக்கிறது. நாம் இன்னும் ஆண்டுதோறும் மின்சாரத்திற்கு வெட்டு ஏற்படுத்துவதற்குண்டான நிலைமையில்தான் இருந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல் மாதம் வந்துவிட்டால் மின்சாரத்தை வெட்டுகின்ற நிலைமையில்தான் நாம் இருக்கிறோம். இந்த நிலைமை எப்போது தீரும்? இந்த நிலைமை ஏற்படாமல் செய்வதற்குத் தாய்ப் பொறுப்பிலே இருக்கிற அரசாங்கம் கவனித்து செயல்பட வேண்டும். மழை பெய்வதற்கும் அமைச்சர்களுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை. ஆனால் நிலக்கரியை பயன்படுத்தி மின்சாரத்தை உண்டு பண்ண நம்முடைய அமைச்சரவை முயற்சி எடுத்துக்கொள்ள முடியும். அது அவர்களால் முடியாது என்று நான் கருதக் கூடியவனல்ல. ஆகையால் ஆண்டுதோறும் ஏற்படக் கூடிய இந்த நிலையைச் சமாளிக்க, அதிகப்படியாக மின்சாரம் உற்பத்தியாகிற திட்டங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டிலேகூட மின்சார வெட்டின் காரணமாக எத்தனையோ மில்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் இருக்கும் மில்களில் எல்லாம் மின்சார வெட்டின் காரணமாக மில்லை மூடியதால் அங்கு இருக்கும் தொழிலாளர்களுக்கு 'பேசிக் பே' கொடுத்து நிர்வாகத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏன் இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சென்ற ஆண்டு ஆரம்பத்திலே நம்முடைய சென்னை மாநிலத்தில் இருக்கும் தொழிலதிபர்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு 'தாங்களாகவே மின்சாரத்தை உற்பத்தி செய்கிற நிலையத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம்' என்று முன்வந்தார்கள். அதனை நம்முடைய சர்க்கார்கூட மத்திய சர்க்காருக்குத் தெரிவித்தது. ஆனால் என்ன காரணத்தாலோ, இண்டஸ்ட்ரியல் பாலிசியை அடிப்படையாக வைத்தோ என்னவோ தனிப்பட்டவர்கள் மின்சார உற்பத்தி செய்வதை மத்திய சர்க்கார் அனுமதிக்கவில்லை. பம்பாய் போன்ற மாநிலங்களில் ஏரோப்ளேன் விடுவதைக்கூடத் தனி மனிதர்கள் கையில் ஒப்படைத்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது நம்முடைய மாநிலத்தில் மட்டும் அரசாங்கத்தினால் முடியாத காரியத்தைத் தனிப்பட்டவர்கள் முன் வந்து செய்ய முற்படும்போது ஏன் அவர்களுடைய கோரிக்கை மத்திய சர்க்காரால் நிராகரிக்கப்படுகிறது என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அதைச் சீர்படுத்த நம்முடைய அரசாங்கம் நல்ல பல முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெய்வேலித் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இப்போது நெய்வேலியிலிருந்து மின்சாரம் நமக்குக் கிடைக்கிறது. அங்கிருந்து எந்த முறையில், எந்த அளவுக்குக் கிடைக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் இந்தச் சபையில் விளக்கப்படவேண்டியது அவசியமாகும். நெய்வேலியில் இருந்து



12th August 1963] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

கரண்டை யூனிட் ஒன்றுக்கு 7 ந.பை. வீதம் கொடுந்து வாங்குவதாகக் கேள்விப்படுகிறேன். அவ்வாறு 7 ந. பை. கொடுத்து வாங்கி தனிப்பட்டவர்களுக்கு, மில் வைத்து நடத்துகிற முதலாளிகளுக்கு 4 ந.பை. வீதம் கொடுக்கிறார்கள். ஹைடென்ஷன் லைன்போட்டு டிரான்ஸ்பார்மர் மூலம் கொடுக்கிற கரண்டை 4 ந.பை. வீதம் கொள்முதல் செய்யும்போது, இவ்வாறு 6 பைசா, 7 பைசா கொடுத்து வாங்கி நஷ்டத்திற்குக் கொடுக்க வேண்டுமா என்பதைப் பற்றி நம்முடைய மாகாண அரசாங்கம் சற்றுச் சிந்திக்க வேண்டும். லாபத்திற்காகத்தான் வியாபாரமே தவிர, நஷ்டத்திற்கு வியாபாரமல்ல என்பதை நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லக் கூடியவர்கள். இப்போது லாபத்திலேயா வியாபாரம் செய்கிறார்கள்? நான் கேட்டுக் கொள்வது எல்லாம் இந்த நெய்வேலி மின்சாரத் திட்டத்தை நம்முடைய மின்சாரக் குழுவின் வசமே ஒப்படைக்க நமது அரசாங்கம் ஏன் தயங்கவேண்டும்? நெய்வேலித் திட்டம் என்று சொல்லும்போது அது பல துறைகளிலே ஈடுபட்டிருந்தும் இப்போது உடனடியாக அமலுக்கு வந்திருப்பது மின்சாரத் திட்டந்தான். என்பது கோடி, தொண்ணூறு கோடி என்று செலவழித்திருப்பதால் 7 ந.பை. வீதம் விற்றால்தான் கட்டுபடியாகும் என்று சொன்னால் அது நம்மைக் கட்டுப்படுத்தும் நிலைமை இருக்கக் கூடாது. ஆகவே, நம்முடைய மின்சார போர்டே கரண்டை சப்ளை செய்யக் கூடிய உரிமையை வாங்கி மின்சாரத்தை விநியோகிக்கின்ற நிலைமையைக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் ஒழுங்காகக் கரண்டை சப்ளை செய்ய முடியும். ஆகவே, 'காபிடல் டிரான்ஸ்பர்' என்ற அளவில் 30, 35 கோடி ஆனாலும் நெய்வேலி மின்சாரத் திட்டத்தை நம்முடைய மின்சாரக் குழுவிற்கு மாற்ற வேண்டும். அப்படி மாற்றினால்தான் லாபமோ நஷ்டமோ அது நம்மைச் சேர்ந்ததாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்து, மின்சாரப் பம்ப் செட்டுகளுக்குக் கரண்ட் கொடுப்
பது பற்றிப் பல மெம்பர்கள் சொன்னார்கள். அகல உழுவதை
விட ஆழ உழுவது சிறந்தது என்று சொல்வார்கள். மின்சாரப்
பம்புகளை மட்டும் அதிகமாக்கி விட்டால் போதாது. எல்.டி.
லைனில் ஓடுகிற மோட்டார்களுக்குக் குறைந்த பட்சம் 230 வோல்ட்
இருந்தால்தான் ஒழுங்காக ஓடும். இப்போது என்ன நடைபெறு
கிறது? இப்போது கரண்ட் கொடுக்கப்படுகிறது என்று சொன்
னால் மோட்டாரை இயக்குகின்ற அளவுக்கு வோல்டேஜ் அதிகமாக
இல்லை. அதன் காரணமாக 'டெயில் என்ட்'-இல் இருக்கும்
மோட்டார்கள் அடிக்கடி தீய்ந்து விடுகின்றன. இந்த மோட்டார்
கள் ஓடுவதற்குத் தேவையான 230 வோல்டேஜ் கரண்ட் கிடைக்கா
மல் 180 அல்லது 160 வோல்டேஜ் அளவுக்குத்தான் கரண்ட் சப்ளை
செய்யப்படுகிறது. அதன் காரணமாக மோட்டார்கள் தீய்ந்து
விடுகிறதாயினும், ஏழை விவசாயிகள் அதை அறியாமல் தங்க
ளுடைய மோட்டார்கள் மட்டும் என்ன காரணத்தாலோ தீய்ந்து
போய் விட்டன என்று நினைத்துக் கொள்கிறார்கள். ஆகவே,
கொடுக்கின்ற கரண்டை, நல்ல முறையில், மோட்டார்கள் தீய்ந்து
போகாத முறையில் 230 வோல்டேஜ் கொடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

என் பகுதி; மின்சாரத் துறையில் நல்ல அபிவிருத்து அடைந்த பகுதி. அது வரண்ட பகுதியல்ல. சில இடங்களில் மின்சாரம் எடுக்க எக்ரிமென்ட்கூட எடுக்க மாட்டேன் என்று சொல்வார்கள், என் பகுதியில் அந்நிலை இல்லை. மின்சாரம் வேண்டுமென்று பல விவசாயிகள் க்யூவில் நின்று லஞ்சம் கூட கொடுக்கும் நிலை இருக்கிறது. அந்நிலையை மாற்றியமைக்க வேண்டும். சில இடங்களில் கன்ஸ்ட்ரக்ஷன் வேலை முடிந்த பிறகு 100 கிலோவாட்ஸ் டிரான்ஸ்பார்மரை வைத்து விட்டு 30 ஹார்ஸ் பவரை விட்டு வைத்திருப்பார்கள். கண்ஸ்ட்ரக்ஷன் முடிந்த பிறகு ஓ.எம்.-க்கு கொடுத்து விடுகிறார்கள். 4, 5 பம்ப் செட்ஸ் கொடுக்க அங்குள்ள சூப்பர்வைசர் வைத்ததுதான் சட்டம். யார் யார் 200 ரூபாய் கொடுக்கிறார்கள், யார் யார் 150 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று பார்த்து மின்சாரத்தை தவறுதலாகப் பயன்படுத்துகிறார்கள். இலாகா தலைவர் அவர்கள் நல்லவர்தான். அவர்களிடம் பணியாற்றும் என்ஜினியர்களும் நல்லவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் இந்த இலாகாவில் அடியில் உள்ள சூப்பர்வைசர்கள், லைன்மென் போன்றவர்கள் எல்லாம் இந்த இலாகாவிற்கு பழியை உண்டு பண்ணுகிறார்கள். அப்பழியைத் துடைக்க மின்சாரக் குழு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியில் 6, 7 ஹரிஜனக் காலனிகள்கூட விளக்கு இல்லாமல் இருக்கின்றன. சுதந்திரம் கிடைத்து 16 ஆண்டு காலமாகியும் அந்த காலனிகளுக்கு மின்சார விளக்குகள் கிடைக்காமல் இருக்கின்றன. அடுத்த பட்ஜட்டுக்கு உள்ளாகவாவது அங்குள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார விளக்குகள் போட மின்சார இலாகா துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர் கிளியரன்ஸ் சர்டிபிக்கட் வாங்க சில கஷ்டங்கள் இருக்கின்றன. பாலாறு பாசனத்திற்கு சர்டிபிக்கட் கொடுப்பது வேறு விஷயம். தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள சானல்களில் 10 நாட்கள் தண்ணீர் வருகிறது என்றால் அதன் பக்கத்தில் கரண்ட் போடக் கூடாதா? அங்கு பம்ப் செட்ஸ் வைத்துக் கொள்ள கிளியரன்ஸ் சர்டிபிக்கட்டு கிடைக்காமல் சிரமப்படுகிறார்கள். சிலர் பல ஆண்டுகளாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எங்கெங்கு அவசியமோ அங்குவேண்டுமானால் இந்த உத்தரவை வைத்துக் கொள்ளலாமே தவிர தென் ஆற்காடு மாவட்டத்தில் பி.டபிள்யூ.டி. வாய்க்கால்களுக்கும் அங்குள்ள போர்களுக்கும் சம்பந்தமே கிடையாது. ஐம்பது அடி கீழுள்ள ஆர்டிஸைன் வெல்ஸ் இருக்கும். அதற்கும் வாய்க்காலுக்கும் என்ன சம்பந்தம்? இப்படிப்பட்ட இடங்களில் அந்நிலை இருக்கக்கூடாது. மின்சார இலாகா திறம்பட செயலாற்றுகிறது. நாம் எல்லோரும் திருப்திப்படுகிற வகையில்தான் மின்சார இலாகா தலைவர் அவர்களும் மற்றவர்களும் நல்லமுறையில் பணிபுரிகிறார்கள். ஒன்றை நாம் மறந்து விடுகிறோம். இந்த இலாகாவிற்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்க பாடுபடுகிறார்களே என்.எம்.ஆர்., டி.சி.எல்., போன்றவர்கள் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை பலப்படுத்தினால்தான் மின்சார இலாகாவிற்கு நல்ல பெயர் இருக்க முடியும். முன்பெல்லாம் இரண்டு ஆண்டுகள் டி.சி.எல். ஆக இருந்தவர்களை என்.எம்.ஆர். ஆக மாற்றுவார்கள், வேலை காலி ஏற்படும்போது அவர்களுக்கு அந்த வேலை கிடைக்கக்



கூடிய வாய்ப்பிருந்தது. ஆனால் இப்போது மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் டி.சி.எல். ஆக இருந்தவர்கள் கூட வீட்டிற்கு போகக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகள் அவர்கள் இங்கு வேலை செய்து விட்டு எங்கு செல்வது? அவர்கள் வாழ்க்கையை யார் பார்ப்பது? மின்சார இலாகா அபாயகரமான இலாகா. மரங்கள் ஏறுவதும், சிமென்ட் கம்பங்களைத் தூக்குவதும், கம்பி மேல் நடமாடுவதும் சிரமமான வேலைகள். இந்த இலாகாவில் அடிமட்டத்தில் இருக்கக் கூடியவர்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்ற குற்றச் சாட்டை நான் கூற விரும்புகிறேன். என் பகுதியில் இவர்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் சொல்வது எங்கெங்கு வேலை காலியாக இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக போட வேண்டும். அடுத்து, காண்ட்ராக்ட் ஸிஸ்டம் கொண்டு வந்த பிறகு இந்த காஷுவல் லேபரர்களின் நிலை பரிதாபமாகயிருக்கிறது. வேலையும் ஒழுங்காக நடப்பதில்லை, கண்ஸ்ட்ரக்ஷன் வேலையும் ஒழுங்காக நடப்பதில்லை, தொழிலாளர்களும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே முன்பு இருந்ததைப் போலவே இலாகா மூலம் வேலைகளை நடத்தினால் நலமாக இருக்கும். ஓ.எம். டிவிஷனல் சூப்பர்வைஸர்கள் தனிப்பட்ட சர்வீஸ்களுக்கு அப்ளிகேஷன் கொடுத்தால் ஆறு மாதத்திற்குள் கரென்ட் கொடுக்க வேண்டும். அந்த காரண்டியாவது கொடுங்கள். எம்.எல்.ஏ. ஆகிய நான் போய் சிபார்சு செய்தும்கூட இரண்டு வருட காலமாகியும் கரென்ட் கொடுக்கவில்லை. இப்படி இந்த இலாகாவிற்கு யார் யார் கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கிறார்கள் என்று கண்டுபிடித்து அப்படி தவறுதலாக நடப்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு தக்க தண்டனை கொடுக்கவேண்டும். இந்த இலாகாவின் நல்லபெயரை அடிமட்டத்தில் இருப்பவர்கள் கெடுக்கும் விதத்தில் அவர்கள் தவறுதலாக தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தினால் அவர்கள் பேரில் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். சின்னய்யன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மின்சார போர்ட் ஆண்டு அறிக்கை மீது சில கருத்துக்களை கூற முன்வந்திருக்கிறேன். மின்சார அபிவிருத்தி நம் மாநிலத்தில் மிக வேகமாக சிறந்த முறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பதைப் பற்றி இந்த மாநிலத்தில் இருக்கிறவர்கள் மட்டுமல்ல, மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் கூட மிகவும் பாராட்டி பேசுகிறார்கள். இந்த மின்சார போர்ட் நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிற உயர்தர அதிகாரிகள் சிறந்த முறையில் இந்த இலாகாவை கண்காணித்து வருகிற காரணத்தினால்தான் விவசாயத் துறையில் மட்டும் அல்ல தொழில் துறைப் போன்ற பல துறைகளிலும் நம் மாநிலம் முன்னேற்றம் அடைந்து வருகிறது. எங்கு பார்த்தாலும், காடு மேடுகளில் எல்லாம் கூட இன்று மின்சாரம் காட்சியளிக்கும் ஒரு நிலையை நாம் காண்கிறோம். பல காலமாக ஏற்றத்தையும், கமலையும் பிடித்துக் கொண்டு கவலையோடு காட்சியளித்து வந்த விவசாயிகள் இன்று தண்ணீர்ப் பஞ்சமின்றி கவலை இன்றி 100 அடி ஆழத்தில் இருக்கிற

[திரு. எஸ். சின்னய்யன்] [12th August 1963

விசையைத் தட்டி விட்டு கிணற்றில் உள்ள தண்ணீரை வயலுக்கு
பாய்ச்சுவதைப் பார்க்கிறோம். இன்று விவசாயத்துறை மின்
சாரம் காரணமாக நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆகை
யினால்தான் இன்று விவசாயிகள் செழிப்பாக இருக்கிறார்கள்.
வறண்ட பிரதேசமாகிய என் சேலம் ஜில்லாவில் கூட விவசாயிகள்
முன்னேற்றத்தை யாரும் குறைத்துக் கணக்கிட முடியாது. அந்த
அளவிற்கு மின்சாரத்தினால் விவசாயத் துறை முன்னேறியிருக்
கிறது. தொழில் துறையும் அதேபோல்தான். சேலம் ஜில்லாவில்
தொழில் துறையில் எங்கு எடுத்துக் கொண்டாலும் மின்சாரம்
நன்கு இயங்கி வருகிறது. மின்சாரம் அபிவிருத்தி காரணமாக
இந்நாட்டிலுள்ள பெரும் பகுதி மக்கள் நல்ல பயனை அனுபவிக்கிற
நேரத்தில் மின்சாரத்தினால் எந்தப் பகுதி மக்கள் எப்படி எப்படி
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி நம் அரசாங்கம்
கவலை கொள்ளாமல் இருப்பது குறித்து நான் வருந்துகிறேன்,
மின்சாரத்தினால் விவசாயத் துறை வளர்ச்சி அடைந்து கொண்டு
வருவதால் விவசாயத்துறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பறி
தைக்கும் தொழிலாளர்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள் என்பதைப் பற்றி சென்ற பட்ஜட் கூட்டத்திலும் அதற்கு
முன்பும் நான் வற்புறுத்திக் கூறியிருக்கிறேன். அரசாங்கம் இதை
நன்கு கவனிக்கவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தேன்.
அன்று முதல் இன்று வரைக்கும் இது சம்பந்தமாக பாதிக்கப்பட்
டிருக்கக்கூடிய இந்தத் தொழிலாளர்கள் சம்பந்தமாக அரசாங்கம்
யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது
குறித்து நான் வருந்தாமல் இருக்க முடியவில்லை. ஏன் இதைச்
சொல்லுகிறேன் என்று சொன்னால், இந்தத் தொழிலாளர்கள்
ஒன்று, இரண்டு பேர்கள் அல்ல, சேலம் ஜில்லாவைப் பொறுத்த
வரையில் சுமார் 20,000 தொழிலாளர்கள் விவசாயத் துறையிலே
கிணறுகளில் பம்பு செட்டுகள் வைத்திருக்கிற காரணத்தினால்,
பறி தைக்கக்கூடிய ஹரிஜனத் தொழிலாளர்கள், 20,000
தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான்
எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர்களுடைய வாழ்வுக்கு
ஏதாவது மாற்றுத் தொழில்கள் கண்டுபிடிக்கவேண்டும், மாற்றுத்
தொழில்கள் ஏற்படுத்தவேண்டும், அந்தக் கடமை இந்த அரசாங்
கத்தின் கடமையாகத்தான் இருக்க முடியும். மின்சாரம் எந்த
அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு
அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்வு நாளுக்கு நாள் நலிந்து
கொண்டு வருவதோடு, பாழடைந்துகொண்டு வருகிறது. உள்ள
படியே சேலம் ஜில்லாவில் பறிதைக்கும் தொழிலாளர்களுடைய
நிலைமையை, 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமையையும்,
இன்றைக்கு அவர்கள் இருக்கும் நிலைமையையும் அதிகாரிகளும்,
அரசினரும் அந்தக் கிராமங்களுக்குச் சென்று கவனிக்க வேண்
டும். சீரும் சிறப்பாக வாழ்ந்த மக்கள், நன்றாக உண்டு களித்
திருந்த அந்த மக்கள் இன்றைக்கு கால் வயிற்றுக் கஞ்சிக்குக்
கூட வழி இல்லாமல் நலிந்து வருகிறார்கள், நசித்துக்கொண்டு வரு
கிறார்கள், அவர்கள் வாழ்வு நாளுக்கு நாள் பாழடைந்து வருகிறது.
எந்த அளவுக்கு மின்சாரத்தில் முன்னேற்றம் காண்கிறோமோ,
அந்த அளவுக்கு அவர்களுடைய வாழ்வும் நலிந்து கொண்டே வரு
கிறது, நசித்துக்கொண்டே வருகிறது. நான் சென்ற கூட்டத்தில்



12th August 1963] [திரு. எஸ். சின்னய்யன்]

இதைப்பற்றி சொல்லுகிறபொழுது, அந்தப் பகுதி மக்களுடைய
நிலை அந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது, அதை அவர்கள்
யாரிடம் சொல்லுவது, எங்கு போய் சொல்லுவது, யாரிடம் முறை
யிடுவது, அவர்கள் அறிவும் ஆற்றலும் இல்லாமல், திறமையற்றவர்
களாக இருக்கிறார்கள் என்று சொன்னேன். அப்பொழுது கனம்
அமைச்சர் அவர்கள் கூட அந்த சமுதாயத்தில் இருக்கிற தொழி
லாளர்கள் கூட நல்ல அறிவும், ஆற்றலும் உடையவர்களாக இருக்
கிறார்கள் என்று சொன்னார்கள். வாஸ்தவம், ஒரு சிலர் இருக்
கிறார்கள். அப்பொழுதே சொன்னேன். இந்த ரீதியிலே அதிக
மாக பாதிக்கப்பட்டிருக்கிற இந்தத் தொழிலாளர்கள் இதைப்
பற்றி ஒழுங்காகவும், விரிவாகவும் நல்ல முறையில் எடுத்துச்
சொல்லுவதற்கு லாயக்கற்றவர்களாக இருக்கிறார்கள், ஆகையினால்
அந்தப் பொறுப்பை, அந்தக் கடமையை அரசாங்கம் ஏற்றுக்
கொண்டு செய்யவேண்டும் என்று சொன்னேன். இந்த நாட்டில்
இவ்வளவு நல்ல முன்னேற்றம் அடைந்துள்ள இந்த மாநிலத்தில்,
நல்ல அறிவும் ஆற்றலும் படைத்தவர்கள் உள்ள இந்த மாநிலத்தில்
ஒரு சில பொது மக்கள், ஒரு சில தொழிலாளிகள் இவ்வளவு
கேவலமான அளவில் மோசமான வாழ்க்கைத் தரத்திலே நாளுக்கு
நாள் நசிந்து போகக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள் என்பதை
அரசாங்கம் நன்றாகக் கவனிக்கவேண்டும், கவனித்து அவர்களுக்கு
மாற்றுத் தொழில்கள் ஏற்படுத்திக்கொடுப்பதற்கு ஆவன செய்ய
வேண்டுமென்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரம் வேண்டாம் என்று சொல்ல முடியாது. இந்த
நாட்டிற்கு மின்சாரம் மிகவும் அவசியம், இந்த நாட்டினுடைய
முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியம். மின்சாரம் இல்லையென்
றால், இன்றைக்கு அரசாங்கம் தீட்டியிருக்கக்கூடிய திட்டங்கள்,
விவசாயத் துறையிலும் சரி, தொழில் துறையிலும் சரி, நல்ல முன்
னேற்றத்தைக் காண முடியாது, நாட்டினுடைய முன்னேற்றத்
தைக் காண முடியாது, நாட்டு மக்களின் வளர்ச்சியைக் காண
முடியாது, இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய பெரும் பகுதி மக்
கள் முன்னேறுவதற்கு மின்சாரம் மிகவும் அவசியம். ஆகவே,
மின்சாரம் முன்னேறிக்கொண்டு தான் இருக்கவேண்டும், முன்
னேற்றம் அவசியம் தான். ஆனால், அதே நேரத்தில் ஒரு சில
தொழிலாளர்கள் சில ஜில்லாக்களில் அதிகமாக பாதிக்கப்பட்
டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்விலே, அவர்களுடைய முன்
னேற்றத்தில் அரசாங்கம் அக்கறை கொள்ளவேண்டும் என்று
மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவர்களுக்கு மாற்றுத் தொழில்களைப் பொறுத்தவரையில்,
மாற்றுத் தொழில்கள் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொண்டதின் பேரில், சில அதிகாரிகள் தக்க நடவடிக்கை
எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நடவடிக்கைகளை அர
சாங்கம் துரிதப்படுத்தவேண்டும். அந்த நடவடிக்கைகளை
துரிதப்படுத்தி, மாற்றுத் தொழில்களுக்கு வேண்டிய வசதி
ஒழுங்கத்தை செய்து, உடனடியாக அவர்களுடைய வசதி

[திரு. எஸ். சின்னையன்] [12th August 1963

நல்வாழ்வு அடைவதற்கு, எல்லா மக்களையும் போல அவர்களும் வாழ்வதற்கு நல்ல உற்சாகத்தை அவர்களுக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என். துரைபாண்டி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எல்லா மாநிலங்களையும் விட தமிழ் நாட்டில் மின்சார விஸ்தரிப்பு அதிகமாக இருக்கிறது என்று நாம் பெருமைப்பட்டாலும் கூட, விவசாயிகளுக்கு வேண்டிய அளவுக்கு மின்சார விஸ்தரிப்பு இன்னும் கிடைக்கவில்லை என்று தான் சொல்லிக்கொள்ள வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு கிராமத்தையும் எடுத்துக்கொண்டால், எத்தனையோ கிணறுகள் இருந்தும், தண்ணீர் பாய்ச்சுவதற்கு வேண்டிய கிணறுகள் இருந்தாலும், அந்த கிணறுகளுக்கெல்லாம் பம்பு செட்டுகள் வைத்துக்கொள்வதற்கு இன்னும் மின்சாரம் கிடைக்கவில்லை. பல வருஷங்களாக விவசாயிகள் மனு செய்தும், அந்தக் கிணறுகளுக்கு மின்சார வசதி அளிக்கப்படவில்லை.

எனது தொகுதியை எடுத்துக்கொண்டால், நாங்குனேரி தாலூகாவில் மணிமுத்தாறு கால் ஓடுகிறது. அம்மாதிரி கால் ஓடுவதன் காரணமாக சில இடங்களில் 60 அடி ஆழப்படுத்தியிருக்கிறார்கள். ஆழப்படுத்தியுள்ள இடங்களுக்கு பக்கத்திலுள்ள கிராமங்களில் ஊற்று நின்று போய்விடுகிறது. அதன் காரணமாக பட்டாங்குளம், வேலியார்குளம் முதலிய கிராமங்களைச் சுற்றி தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. அங்கு இருக்கும் மக்கள் கனம் முதல் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது கூட அது பற்றி மனு கொடுத்தார்கள். இருந்தும், அது விஷயமாக எதுவும் செய்யப்படவில்லை. மணிமுத்தாறு கால் ஓரத்திலுள்ள கிணறுகளுக்கு பம்பு செட்டுகள் வைத்துக்கொள்வதற்கு அனுமதி கேட்டால், கால் தண்ணீரை உறிஞ்சி எடுத்துவிடுகிறது என்று சொல்லுகிறார்கள். மணிமுத்தாறு காலை ஆழப்படுத்தியதன் காரணமாக, கிராமவாசிகள் பாரம்பரியமாக உபயோகப்படுத்திக்கொண்டு வந்த கிணறுகளில் ஊற்று இல்லாமல் போய்விட்டது. ஊற்று இல்லாமல் போன கிணறுகளுக்காக கிராமவாசிகளுக்கு சர்க்கார் எதுவும் செய்யவில்லை. அதே காலில் 13-வது மைலில் 60 அடி ஆழத்தில் ஒரு பெரிய ஊற்று இருக்கிறது. மணிமுத்தாறில் தண்ணீர் இல்லாமல் இருக்கும்போது கூட, இந்த ஊற்றில் ஏராளமான தண்ணீர் இருந்துகொண்டிருக்கிறது. அந்த ஊற்றில் ஒரு பம்பு செட்டு வைத்து அந்தத் தண்ணீரை பாதிக்கப்பட்ட கிராமவாசிகள் உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய இந்த அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் தான் இந்த நாட்டினுடைய ஜீவநாடி. உணவு உற்பத்திதான் மக்களுக்குத் தேவை. பசி வந்திட எல்லாம் பறந்துபோம். நாட்டு மக்கள் மத்தியிலே விவசாயம் எவ்வளவு அபிவிருத்தி அடைகிறதோ, அதை வைத்துத்தான் நாடு முன்னேறவேண்டும். விவசாய அபிவிருத்திக்காகத்தான்



12th August 1963] [திரு. என். துரைபாண்டி]

மணிமுத்தாறு கால் வெட்டப்பட்டது. அந்தக் கால் வெட்டியதன் காரணமாக மானாவாரிப் பிரதேசங்களில் பல கிணறுகள் இயற்கையாக உள்ள தண்ணீர் ஊற்று நின்றுவிட்டது. அதே சமயத்தில் அந்தக் காலின் மூலமாக அந்தக் குளங்களுக்கும் தண்ணீரும் கிடைக்கவில்லை. சர்க்காரால் வெட்டப்பட்ட மணிமுத்தாறு கால் ஓரத்திலுள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கு இயற்கையாகவே இருக்கிற கிணறுகளுக்குக் கூட பம்பு செட்டுகள் வைத்துக் கொள்வதற்கு அனுமதி தராமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நாங்குனேரி தாலூகாவில் தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. விவசாயத்துக்கு மணிமுத்தாறு கால் வெட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கால் தண்ணீர் ஊற்றிற்குப் பக்கத்தில் கிணறு அடித்து பம்பு செட்டுகள் வைத்தாலும்கூட, அந்தத் தண்ணீர் விவசாயத்திற்குத் தான் உபயோகப்படப் போகிறது. அப்படியிருக்கும்பொழுது, ஏன் இந்த மணிமுத்தாறு கால் ஓரத்தில் இருக்கக்கூடிய நிலங்களுக்கு கிணறு அடித்து, அந்தக் கிணறுகளுக்கு பம்பு செட்டுகள் வைத்துக்கொள்வதற்கு ஏன் அனுமதி கொடுக்கக்கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்கிறேன். அந்தத் தண்ணீரும் விவசாய உற்பத்திக்குத் தான் பிரயோசனப்படப் போகிறது. ஆகவே, இப்பொழுதிருக்கிற சட்டத்திலிருந்து விதி விலக்கு அளித்து, மணிமுத்தாறு கால் ஓரத்திலிருக்கிற நிலங்களில் கிணறு அடித்து விவசாயம் செய்வதற்கு சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் காலத்தில் மின் சக்தி கிடையாது. இப்பொழுது மின் சக்தி காரணமாக பட்டணங்களில் தொழிற்சாலைகளும், மில்களும் அதிகமாகத் தோன்றி இருக்கிறதனால், கிராம மக்கள் பட்டணத்தை நோக்கி ஓடி வந்து கொண்டிருக்கிறார்கள். இனிமேல் ஏற்படுத்தப் போகும் தொழிற்சாலைகளையும், மில்களையும், கிராமங்களிலேயே ஏற்படுத்தினால், கிராம வாசிகள், கிராமங்களிலேயே இருந்து கொண்டு வாழ்க்கை நடத்துவார்கள். தொழிற்சாலைகளெல்லாம் பட்டணங்களில் ஏற்படுவதால், கிராம மக்கள் பட்டணத்தில் குவியல் குவியலாக வந்து, வீடு வசதியும் இல்லாமல், ஊரை நோக்கிப் போகவும் முடியாமல், பிளாட்பாரத்தில் வசிக்க நேரிடும் போது, போலீஸ்காரர்கள் அவர்களைப் பிடிக்கும் நிலைமை ஏற்படுகிறது. அவர்களைக் கொண்டு, எதிர்க்கட்சிக்காரர்கள் போராட்டங்கள் நடத்த கூலி கொடுத்து அவர்களைச் சேர்த்துக் கொண்டுவிடுகிறார்கள். மேலும் ஒரு பஞ்சாயத்தை எடுத்துக் கொண்டால், பிரிவினை காரணமாக, ஒரே கிராமம் இரண்டாகப் பிரிந்திருக்கிற காரணத்தினால், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பொருளாதார நிலைமை மோசமாகிவிடுகிறது. அதன் காரணமாக சம்மந்தப்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மின்சார விஸ்தரிப்பு இல்லாமல் இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால், அங்கே 400, 500 வீடுகள் இருக்கின்றன. 30, 40 கிணறுகள் கொடுக்க முடியவில்லை. ஐந்து, பத்துதான் கொடுக்க முடிகிறது. இந்த மக்கள் முன்னேற இந்த சர்க்கார் அதற்கும் விதி விலக்கு அளித்து அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க கவனம் செலுத்தவேண்டும்.

என்னுடைய தொகுதியில், பனைமர பதனியிலிருந்து, பனை வெல்லத்தை உற்பத்தி செய்கிறார்கள். அதுதான் அவர்களுக்கு ஜீவனம். அப்படிப்பட்டவர்கள், விறகு விலைவாசி அதிகமாக இருப்பதன் காரணமாக, கருப்பட்டி செய்ய அவர்களால் முடிய வில்லை. விறகு விலை அதிகமாக இருக்கிறது. சர்க்கார் அனல் மின்சாரம், அணுமின்சாரம் உற்பத்தி செய்யும் சமயத்தில், கருப்பட்டி செய்வதற்கு என்று மின்சாரம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமங்களில் மின்சார வெட்டு ஏற்படுவதைத் தெரிந்து கொள்ள முடியாமல் மக்கள் அவதியுறுகிறார்கள். பருவ மழை இன்மையால் மின்சார வெட்டு ஏற்படுகிறது. அப்படி ஏற்படும் போது உடனுக்குடன் அந்தந்த ஊரிலே இருக்கும் சூப்பர்வைசர் அல்லது ஹெல்ப்பர் மூலமாக எந்த எந்த நாளில், எந்தெந்த நேரத் தில் கரண்ட் கிடைக்காது என்று முன் கூட்டியே அறிவித்தால் நலமாக இருக்கும். மேலும், காலையிலே அல்லது மாலை யிலே அல்லது மத்தியானத்திலே, இரண்டு மணி, மூன்று மணி அல்லது ஐந்து மணி என்று நிறுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு நாள் முழுவதும் என்று சொல்லி, பூராவாக நிறுத்தினாலும் பரவாயில்லை. அதை விவ சாயிகள் புரிந்து கொள்ளவும் சாதகமாக இருக்கும். விவசாயிகள் ஒரு வருஷம் பூராவும் வேலை செய்து விட்டு, கடைசியில் பலன் அடைபவர்கள். அவர்களுக்கு ஒரு நாள், இரண்டு நாள் தண்ணீர் பாய்ச்சாமல் போனால், ஒரு வருஷ வருமானமும் கிடைக்காது. அவர்களைத்தான் முதலில் கவனிக்க வேண்டும். அவர்களுடைய தேவையை முதலில் பூர்த்தி செய்யவேண்டும். பல சர்க்கார் ஆபீசு களில் ஆளில்லாமலேயே விசிறிகள் ஓடுகின்றன, லைட்டுகள் எரி கின்றன. சினிமா கொட்டகைகளுக்கு கரண்ட் கொடுக்கிறோம். ஆனால், கரண்ட் இல்லாவிட்டால், அவர்களே ஆயில் என்ஜின் வைத்து உபயோகிக்க முடியும். ஒரு மாதம் சினிமா ஓடாமல் இருந்தாலும் நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது. நஷ்டம் வந்தாலும் தனிப்பட்ட முதலாளிக்குத்தான். ஆகவே, அவர்களுக்குக் கரண்டைக் கொடுக்காமல், விவசாயிகளுக்கே கொடுத்தால், ஒரு வருஷம் பூராவும் உழைத்துக் கடைசியில் பலன் பெறும் விவசாயி கள் பலனடைவார்கள். நஷ்டம் அடையாமல் இருப்பார்கள். ஒரு நாள் இரண்டு நாள் கரண்ட் இல்லாமல், தண்ணீர் இறைக்காமல் போய்விட்டால், அவர்களுக்கு ஒரு வருஷப் பலன் போய்விடும். தத்தளித்துப் போய் விடுவார்கள். ஆகவே, அவர்கள் நிலையைப் பார்த்து, சர்க்கார் விவசாயிகள் முன்னேற வேண்டும் என்று விரும்பினாலும், எவ்வளவோ செய்தாலும்கூட, அவர்களுக்கு ஒரு நாள் இரண்டு நாள் கரண்ட் இல்லாமல் போய் நஷ்டம் ஏற்பட்டு விட்டால், செய்த நன்மைகளை எல்லாம் மறந்து விட்டு, சர்க்கா ருக்கு விரோதமாகப் போகும் அளவுக்குத் தூண்டிவிடாமல், அவர்களுக்கு தேவையான மின்சாரத்தை கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன், வணக்கம்.





* திரு. நா. இராசாங்கம் : கனம் உதவி சபாநாயகர் அவர் களே, 1963-64-ம் ஆண்டுக்கான மின்சார நிதி நிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களை சொல்லத் துணிகிறேன். தமிழ் நாட்டு சர்க்காரில் இருக்கிற எல்லா இலாக்காக்களைக் காட்டிலும், மின்சார இலாகா மட்டுந்தான் மிகச் சிறப்பாக, கொடுத்த வேலையை குறித்த காலத்தில் நடத்திக் கொடுக்கிறது; வாயாலே அல்லது எழுத்திலே கேட்டாலும், உடனுக்குடன் பதில் அனுப்பு கிற இலாகா ஒன்று உண்டென்றால், அது இந்த மின்சார இலாகா தான். அதிலே சில தவறுகள் இருக்கலாம். இருந்தாலும், 100-க்கு 90 பங்கு நல்ல ஒரு பெயரை வாங்கும் இலாகா மின்சார இலாகாதான். இதை யாருமே மறுக்க முடியாது. அப்படி இருந்தும், இப்பொழுது இருக்கும் அரசாங்க கொள்கை அடிப் படையில் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. குறிஞ்சிப்பாடி தொகுதியில் நெய்வேலி இருக்கிறது. தமிழ் நாட்டுக்கே மின்சா ரம் வழங்க அனல் மின்சார நிலையத்தை அங்கே வைத்திருக் கிறோம். அதிலிருந்து மின்சாரம் மாநிலம் பூராவுக்கும் கிடைக் கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அனல் மின்சார நிலையத் திற்குப் பக்கத்திலுள்ள காட்டுக்கூடலூர், செலத்தூர், கீழிருப்பு, மேலிருப்பு, பேப்பரையான்குப்பம் பகுதிகள், காடாம் புலியூர், பத்தரைக்கோட்டை, சிலம்பியநாதன்பேட்டை கிராமங்களுக்கு மின்சாரம் என்றால் என்ன என்றே தெரியாது. இரண்டு மைல் தூரத்தில், எட்டிப் பார்த்தால், அனல் மின்சாரத்தால் லட்சக் கணக்கான விளக்குகள் இருக்கின்றன. ஆனால், காட்டுக்கு உள்ளே இருக்கும் இந்தக் கிராமப் பகுதியில் எதையுமே பார்க்க முடியாத நிலைமைதான் இருக்கிறது. அந்த கிராமங்களுக்கு எப் படி மின்சாரம் கொடுக்கவேண்டும் என்பதை அரசாங்கமே யோசித் துச் செய்ய வேண்டும். பஞ்சாயத்துக்கள் மூலதனத்தைப் போட்டு கரண்ட் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அது ஒரு வறண்ட பிரதேசம். மழை பெய்தால்கூட ஊற்றுக்கு தண் ணீர் கிடைக்காது. எங்கள் மாவட்ட அமைச்சருக்கும் தெரி யும், அவர்களே இந்த இலாகாவுடன் பேசி ஆவன செய்ய வேண் டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கிழக்கே மேல்மாம்பட்டு, காடாம்புலியூர், கீழ்மாம்பட்டு. அந்தப் பகுதிகளுக்குக் கிழக்கே போனால், கடற்கரை. உப்பனாற்றுக்கு கிழக்கில் பெரிய குப்பம் பகுதியில் 20, 30 கிராமங்கள் இருக்கின்றன. ஒரு வித வசதியும் கிடையாது. போனால், கடலில்தான் விழவேண்டும், அல்லது உப்பனாற்றில் விழவேண்டும். எத்தனை திட்டங்கள் போட்டாலும், நிறைவேற்றினாலும், நிச்சயமாக இந்த கிராம மக்க ளுக்கு ஏதாவது வசதி செய்து கொடுக்காவிட்டால், நாம் நம் பணியைச் செய்தவர்கள் ஆகமாட்டோம். பஞ்சாயத்துகள் மின் சாரத்தை வழங்க முடியவில்லை. யூனியன்களாலும் செய்ய முடிய வில்லை. ஆகவே, அரசாங்கமே, இதைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். இந்த வறண்ட பிரதேசங்களுக்கு மின்சாரம் அளிக்கும் வகையில், பஞ்சாயத்துக்களுக்கு சர்க்கார் சட்டத்தில் மாறுதல் செய்து, பஞ்சாயத்துக்களுக்கு நீண்டகால கடன்களைக் கொடுத்து, மூலதனம் போட்டு மின்சாரம் விஸ்தரிக்க வழி காண வேண்டும். அந்தக் கடன்களை பஞ்சாயத்துக்களோ, யூனியன் களோ, 15, 20 ஆண்டுகளில் திருப்பிக் [illegible] வேண்டுமென்று சட்டத்

[திரு. நா. இராசாங்கம்] [12th August 1963

தில் மாறுதல் செய்து சர்க்காரே வழி செய்தாலொழிய, இம்மாதிரியான வறண்ட பிரதேசங்களுக்கு மின்சாரமே கொடுக்க முடியாது. இம்மாதிரித் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் இந்த இலாகா இன்னும் அதிகமான நல்ல பெயரை அடையும். இன்றைக்கு இந்த இலாகா, மேல் மட்டத்தில் மட்டுமல்லாமல், கீழ் மட்டங்களிலும் சுறு சுறுப்பாகவும், விறு விறுப்பாகவும் திட்டங்களை நிறைவேற்றுகிற ஒரு இலாகா. அந்த இலாகா நல்ல முறையில் வேலை செய்கிறது என்று எல்லா மக்களும் உணர வேண்டுமென்கிற பட்சத்தில் இந்த மாதிரி வறண்ட பிரதேசங்களையும் மற்ற பிரதேசங்களையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு நான் விடைபெறுகிறேன், வணக்கம்.

* **திரு. கே. பி. பழனிசாமி:** கனம் உப தலைவர் அவர்களே, இன்றையதினம் நமது சபையிலே தொழில் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற தமிழ் நாட்டு மின்சார போர்டின் அறிக்கையையொட்டிச் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாடு பல ஆண்டுகளாக விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும், முன்னேற்றம் காணுமல் இருந்து இப்போது மின்சக்தி காரணமாகப் பல முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம். ஆனால் இந்த முன்னேற்றங்களையெல்லாம் நமது நாட்டிலே பயன்படுத்திக்கொள்வது 10, 12 ஆண்டுகளாகத்தான். குறிப்பாக, எதிர் கட்சிக்காரர்கள் கூட கழிந்த காலத்தில் இருந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள், ஆளும் கட்சிக்காரர்கள் விளக்குப் போட்டு ஏமாற்றுகிறார்கள், விளக்கு தான் கிடைக்கிறது என்று சொன்னார்கள். இந்த பட்ஜெட்டில் பார்க்கும்போது அவர்களும் மனதார வரவேற்றிருக்கிறார்கள். அவர்களும்கூட இப்போது செய்யக் கூடிய வேலையைப்பற்றி உணர்ந்திருக்கிறார்கள். அதைப் பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நம் நாட்டில் இப்போது மின் சக்தி வேகமாகப் பரவிக்கொண்டு வருகிறது. இந்தியாவில் உள்ள எல்லா மாகாணங்களை விட தமிழ் நாட்டு மாகாணத்தில் முன்னேற்றம் அதிகமாக இருப்பதைப் பற்றி பெருமைப்படுகிறேன். குறிப்பாக 18,000 கிராமங்களுக்கு நாம் மின் விசையைப் பரப்பியிருக்கிறோம். அதே நேரத்தில் விவசாயிகளுக்குத் தமிழ் நாட்டில் இரண்டு லட்சம் பம்ப்செட்டுகள் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்றால் அது பெருமைக்குரிய விஷயம். பம்ப் செட் காரணமாக ஒரு சமூகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மை. இது வரையில் வெகு காலமாக இதே தொழிலை நம்பி இருந்த சமூகம், பம்ப்செட் திடீரென்று வந்து வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதே டிபார்ட்மெண்டில் கூட காஷுவல் லேபரர்ஸ் என்ற முறையில் வேலை கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. அல்லது வேறு தொழில் துறையிலும் வேலை கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. அதைப் பற்றியும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்கிறார்கள். அதிலே டிபார்ட்மெண்டில் சில குறைகள் இருக்கின்றன. ஒரு பகுதியில் 2 அல்லது 3 ஸ்கீம்கள் போடுகிறார்கள். ஐந்து கிணறுகளுக்கு ஒரு ஸ்கீம் என்று வைத்திருக்கிறார்கள். அதே பகுதியில் 12 கிணறுகளுக்கு ஒரு ஸ்கீம் என்று வேறு போடுகிறார்கள். ஒருவர் அப்ளிகேஷன் போட்டிருக்கிறார். அது கமர்ஷியல்



12th August 1963] [திரு. கே. பி. பழனிசாமி]

டிபார்ட்மெண்ட்டில் இருக்கலாம். அந்த நிலையில் வெரிஃபிகேஷன் செய்யாமல் இன்னொரு ஸ்கீமை நடத்துகிறார்கள். கேட்டால் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஜூனியர் என்ஜினியருக்கு இவ்வளவு தூரத்திற்குத் தான் சாங்ஷன் செய்ய அதிகாரம் இருக்கிறது, ஓ. அண்ட் எம்.-க்கு அப்ளிகேஷன் போயிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவது விவசாயிகளுக்குப் புரியவில்லை. எல்லாவற்றையும் பரிசீலனை செய்து முன்பாகவே ஸ்கீம் இருந்தால் எல்லாவற்றையும் கவனித்து பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ளவேண்டும். குறிப்பாக என்னுடைய பகுதியில் 4, 5 பேர்களுக்காக நான் அப்ளிகேஷன் கொடுத்தேன். அதை விட்டு விட்டு கமர்ஷியல் டிபார்ட்மெண்ட்டில் வேறு ஸ்கீமை எடுத்துக் கொண்டார்கள். நான் அதைப் பற்றி எஸ்.ஈ.-யிடம் சொன்னேன். பின்பு கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். முன்பு எலெக்ட்ரிசிட்டி அட்வைஸரி கமிட்டி என்று இருந்தது. இப்போது அதுவும் டி.டி.சி.-யில் வருகிறது; டி.டி.சி.-யில் விரிவாகப் பேச வாய்ப்பு இல்லை. தனியாக இருந்தபோது குறைகளைச் சொல்லுவது மாதிரி இங்கே சொல்லுவதற்குச் சாத்தியமில்லை. தனிப்பட்ட முறையில் இல்லாவிட்டாலும், நல்ல முறையில் சீர்திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹரிஜன காலனிகளுக்கு, பல கிராமங்களுக்கு மின் விசை அளித்து விளக்குப் போட வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இப்போது நமது சர்க்கார் செய்து வருகிறது. இப்போது இதிலே பஞ்சாயத்துக்கு அதிகாரம் இருக்கிறது. இதைச் செய்வதற்கு 100 அல்லது 150 ரூபாய் தான் ஆகும். சர்க்காரே கவனித்து செலவை ஏற்றுக்கொண்டு பஞ்சாயத்துக்கு உதவி செய்யவேண்டும். அநேக கிராமங்களில் உள்ள மக்கள் விளக்கையே பார்த்திருக்கமாட்டார்கள். அந்த மாதிரி இடங்களில் செய்தால் மக்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். ஹரிஜனத் தெருக்களில் சங்கமோ அல்லது கோவிலோ இருந்தால், உடனடியாக விளக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். விசேஷங்களைக் கூட, கல்யாணத்தைக் கூட இருட்டில் தான் செய்யவேண்டிய நிலை இருக்கிறது. கம்யூனிட்டிக்குப் பொதுவாக இடமோ அல்லது கோவிலோ இருந்தால் அதற்கு மின்சாரம் கொடுக்க வசதி செய்தால் சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு கூட, கோவை போன்ற தொழில் பகுதியில் அநேகம் பேர்கள் சிறு தொழில்கள் செய்ய முன் வருகிறார்கள். 5, 10, 15, ஹார்ஸ்பவர் கேட்டால் ஸாங்ஷன் செய்ய முடியாது என்று தாமதித்து வருவதாகக் கேள்வி. தொழில் துறையில் முன்னேற்றம் காண அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. சே. ஆறுமுகம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நடைபெறுகின்ற 1963-64-ம் ஆண்டு மின்சார போர்டின் நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தினையும் வழங்க முற்படுகிறேன். மின்சாரத் துறை, நாட்டில் நல்ல

முறையில் இயங்கி வருகிறது என்று ஆளும் கட்சியின் தரப்பிலும், எதிர்க்கட்சிகளின் தரப்பிலும் பெருமையாக இங்கு அனைவராலும் சொல்லப்படுகிற ஒரு துறை ஆகும். ஆகவே இத்துறை நல்ல முறையில் செயல்படுவது எல்லோருக்கும் தெரிந்ததாக இருப்பினும், தனியார் துறையில் இருக்கிற குறைகளை அகற்றுவதற்கு அதையும் ஆட்சியாளர்கள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது தான் என்னுடைய கருத்து ஆகும். தனியார் துறையில் ஒரு போர்டானது பல கிராமங்களை ஒரு பிர்காவாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அந்த பிர்காவை எடுத்துக்கொடிருக்கிற நேரத்தில், அப்பகுதி விவசாயத்திற்கு லைன் கொடுப்பதற்கு முன்பே, சர்க்கார் எங்கு மின்சாரம் வினியோகம் செய்து விடுவார்களோ என்று தனியார் துறையில் இருப்பவர்கள் ஒரு ஆண்டுக்கு முன் விவசாயப் பெருங்குடி மக்களைப் பார்த்து, உங்களுக்கு மூன்று மாதங்களுக்குள்ளாக, அல்லது ஒரு மாதத்திற்குள்ளாக இங்கு பம்ப்செட்டுகளுக்கு சப்ளை கொடுத்து விடுகிறோம் என்று சொல்லி விவசாய மக்களை ஏமாற்றி, தகாத வார்த்தைகளைச் சொல்லி அக்ரிமெண்ட் செய்திருக்கிறார்கள். அப்படி அக்ரிமெண்ட் செய்த பிறகு இரண்டு ஆண்டுகள் கூட கவனிப்பதில்லை. அக்ரிமெண்ட் செய்த இரண்டு ஆண்டுகள் ஆகிறதே ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டால், எங்களுக்கு மின்சாரம் கொடுக்க உபபொருள்கள் சாமான்களெல்லாம் இன்னும் கிடைக்கவில்லை; அதோடு உங்களுக்கு சப்ளை கொடுக்க டிரான்ஸ்பார்மர் புதிதாக அமைக்கப்படவேண்டும்; ஆகவே இத்தனை சிக்கல்கள் இருக்கிற காரணத்தினால், இன்னும் 6 மாதங்கள் ஆகும் என்று அக்ரிமெண்ட் செய்து விட்ட பிறகு இப்படிப்பட்ட குறைகளை விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலே சொல்லிவிடுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் என்னுடைய தொகுதியில் கூட ஏர்வாடி, வாணியம்பாடி, பாரப்பட்டி என்ற கிராமத்தில் 1½ ஆண்டுகளுக்கு முன் தனியார் துறையில் இருக்கிற போர்டானது ஒரு அக்ரிமெண்ட்டை எல்லா விவசாயிகளிடத்திலும் செய்துகொண்டது. அப்படிச் செய்து கொண்டு இன்றைய வரைக்கும் சர்விஸ் கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் உள்ளபடியே வேலைகள் அங்கு நடைபெறவில்லை. சர்க்கார், நீங்கள் செய்தால் செய்யுங்கள், இல்லையானால் நாங்களாவது எடுத்து நடத்துகிறோம் என்று தனியார் துறையைப் பார்த்து கேட்கும் நேரத்தில், தனியார் துறையில் இருக்கிறவர்கள், ஏற்கனவே அக்ரிமெண்ட் செய்து விட்டோம், நாங்கள் தான் அங்கு சப்ளை கொடுக்கவேண்டுமே தவிர நீங்கள் இதில் தலையிட முடியாது என்று தனியார் துறையில் இருக்கின்றவர்கள் சர்க்கார் துறையில் இருப்பவர்களோடு போட்டி போடக் கூடிய முறையில் எதிர்த்துப் பேசும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைமையில் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் சர்க்காருக்கோ, தனிப் பட்ட நிறுவனங்களுக்கோ எந்தவிதமான நஷ்டமும் ஏற்படவில்லை என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே தற்போது இருக்கும் 8 தனியார் துறையும் ஆண்டு ஒன்றுக்கு நான்கைந்து வீதமாக எடுத்து இரண்டு ஆண்டு காலத்திற்குள் எல்லாத்தனிப்பட்ட நிறுவனங்களையும் மின்சார போர்டே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





கிராமங்களுக்கு மின்சார லைட் வசதி செய்துகொடுக்கும் விஷயத்தில் பல இடங்களில் கம்பங்களை எல்லாம் நட்டு விட்டு எங்கிருந்து பல்புகள் வாங்கவேண்டுமோ, அந்த இடங்களில் பல்புகள் இல்லை என்று சூப்பர்வைசர்கள் போன்றவர்கள் சொல்லிவிடுகிறார்கள். ஆகவே மக்கள் மின்சார லைட் வசதி இல்லாமல் கஷ்டப்பட வேண்டி இருக்கிறது. சாதாரண பல்புகள் போடும் இடத்தில் டியூப் லைட் போடுவதாக இருந்தால் வெளிச்சம் அதிகமாக இருக்கும், செலவும் குறைவாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இதைப் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் இந்தத் துறையிலுள்ள சூப்பர்வைசர்களுக்கு அதிகாரம் மிகக் குறைவாகவே இருக்கிறது. ஒரு இடத்தில் மின்சார வசதி செய்ய வேண்டுமென்று எஸ்டிமேட் தயாரித்து முடிவு செய்தாலும் கூட, இதற்கான அனுமதி கொடுக்கின்ற அதிகாரம் சூப்பர்வைசர் இடத்தில் இல்லை. டி.இ. போன்ற அதிகாரிகளுக்கு அனுப்பி தான் போதுமான அதிகாரத்தை பெற வேண்டியிருக்கிறது. இதனால் பல காலதாமதங்கள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்கின்ற முறையில் சூப்பர்வைசர்களுக்கு சுமார் 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் ரூபாய் வரை எஸ்டிமேட் செய்து அதை நிறைவேற்றுவதற்கான அனுமதிக் கொடுக்கக் கூடிய அதிகாரத்தை வழங்குவதற்கு மின்சார போர்டார் உத்தரவு இட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு இவர்களுக்கு ஜீப் வாகன வசதி செய்து கொடுத்தால் அவசரமான நேரங்களில் பல இடங்களுக்குச் சென்று மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக இருக்கும். மேலும் இனும் நிலங்களுக்கு விவசாயிகள் மின்சார வசதி வேண்டுமென்று கேட்கும்போது தனியார் துறையாக இருந்தாலும் சரி, சர்க்கார் துறையாக இருந்தாலும் சரி இனும் நிலங்களுக்கு சப்ளை கொடுக்க முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். இனும் நிலங்களை எல்லாம் சர்க்கார் எடுத்து பல காலங்கள் ஆகி விட்டன, இருந்தாலும் சில இடங்களில் இனும் நிலங்கள் சர்வே செய்யப்படாமல் இருக்கின்ற காரணத்தால் மின்சார சப்ளை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதன் காரணமாக இனும் நிலங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதன் பேரில் சர்க்கார் ஒரு தெளிவான உத்ரவை டி.இ., சூப்பர்வைசர் போன்றவர்களுக்கு இனும் நிலங்களாக இருந்தாலும் சப்ளை கொடுக்க வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பொதுவாக மின்சாரத்துறை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அதற்காக நாம் அந்தத் துறையினரைப் பாராட்டுகின்றோம். மேலும் இந்த மின்சாரத் துறையினருக்கும், மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கச் செய்ய வேண்டும். தற்போதுள்ள முறையில் டி.இ., சூப்பர்வைசர் போன்றவர்கள் நாலைந்து மைல் சுற்றளவில் உள்ள இடங்களில் இருக்கிறார்கள். இவர்களைச் சந்திப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே நாலைந்து மைல்கள் சுற்றளவு உள்ள ஒவ்வொரு இடங்களிலும் இந்த அதிகாரிகள் மாதம் ஒரு முறை அல்லது 2 முறைகள் கூடி அந்தந்த இடங்களில் பஞ்சாயத்துபோர்டு

[சோ. ஆறுமுகம்] [12th August 1963

தலைவர்களைச் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகள் என்னென்ன என்பதைக் கேட்டறிந்து அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதைப் பற்றியும் ஆலோசனை செய்து நல்ல முறையில் முடிவெடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். பொதுவாக இரவு நேரங்களில் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பது கொஞ்சமும் பொறுத்த மல்ல. "இரவில் விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் இறங்குவது போல்" என்று கூடச் சொல்லு வார்கள். இரவில் மின்சாரம் கொடுப்பதால் விவசாயத்திற்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது. தண்ணீரைப் பாய்ச்ச லாமே தவிர, உழவு ஓட்டவோ வேறு எந்தவிதமான வேலையும் செய்யவோ முடியாது. ஆகவே விவசாயத்திற்கு இரவு காலத்தில் மின்சாரம் கொடுப்பதை நிறுத்தி பகல் நேரத்தில் கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த அளவோடு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**திரு. வி. எல்லம நாயுடு :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள 1963-64-ம் ஆண்டு மின்சார நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ் நாட்டில் மிகச் சிறந்த முறையில் மின்சார இலாக்காவானது செயல் பட்டு வருகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இது மிகவும் போற்றப் படக்கூடிய ஒரு விஷயம். அதே சமயத்தில் திறம்பட நிர்வகித்துவரும் இந்த ஸ்தாபனம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்குக் கட்டணத்தை உயர்த்தலாமா என்ற ஆலோசனையைக் கிளப்பி உள்ளது மாதிரித் தென்படுகிறது. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கை விவாதத்தின் போது நான் தெரிவித்திருந்தேன். இப்போதும் அதையேதான் தெரிவிக்கிறேன். விவசாயம் என்பது ஒரு சீரான தொழில், பெரிய அணைகளைக் கட்டி விவசாயிகளுக்குத் தண்ணீர் வழங்குகிறோம். அதேபோன்று சிறிய அணைகளைக் கட்டியும் குளங்கள் மூலமாகவும் ஏரிகள் மூலமாகவும் தண்ணீர் பாசன வசதி செய்துகொடுத்து வருகிறோம். மின்சாரமும் அதேபோன்றுதான் என்பதை நாம் எப்போதும் கருத வேண்டும். இதைத்தான் நான் இப்போதும் வலியுறுத்த விரும்புகிறேன். தற்போதுள்ள நிலைமையில் ஒரு ஏக்கராவுக்கு குறைந்த பட்சம் 50 ரூபாய் வரை மின்சாரக் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் லோயர்பவானி, அமராவதி, பரம்பிக்குளம் பகுதி போன்ற இடங்களில் ஒரு ஏக்கராவுக்கு அதிகபட்சமாகப் பார்த்தால் கூட 15 ரூபாய் 20 ரூபாய் என்ற அளவில் தான் தண்ணீர் கட்டணமாக செலுத்தப்பட்டு வருகிறது. ஆகவே இதிலிருக்கின்ற பாகுபாட்டை படிப்படியாக நாம் குறைக்க வேண்டும். அதற்குரிய முறைகளை மின்சாரக் கழகத்தினர் ஆராய்ந்து கண்டறிய வேண்டும். நீண்ட காலமாக மின்சாரக் கட்டணத்தை அதிகமாக விவசாயிகள் செலுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் மூன்றாவது திட்டக் காலத்திற்குள்ளாக 2 லட்சம் கிணறுகளுக்கு பம்பு செட்டு வசதி செய்து கொடுக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. இவ்விதம் 2 லட்சம் கிணறுகளுக்கு பம்பு செட்டு வசதிகள் செய்யப்பட்டால் அதன் மூலம் வருமானம் அதிகமாகும். அதேபோன்று 18 ஆயிரம்



12th August 1963] [திரு. வி. எல்லம நாயுடு]

கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படும் என்றும் சொல்லப் படுகிறது. அவ்விதம் மின்சாரம் விஸ்தரிக்கப்படும்போது வருமானம் பெருகும். இந்த வருமானத்தைக் கொண்டு விவசாயத்திற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்குக் கட்டணத்தை ஓரளவு குறைத்தால் மிகவும் நன்மையாக இருக்கும். கிராம வாசிகளுக்கு இது மிகவும் பேருதவியாக இருக்கும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சார விஸ்தரிப்பு விஷயமாக ஹரிஜனங்கள் ஆதிவாசி மக்கள் இவர்கள் வசிக்கும் இடங்களில் மின்சாரம் இன்னும் சரியானபடி போய்ச்சேரவில்லை, காரணம் அவர்கள் கிராமங்களில் இருந்து கொஞ்சம் தூரத்தில் இருந்து வருகிறார்கள். இதை அரசாங்கமே ஏற்று எடுத்துக்கொள்ளவேண்டியது. ஊராட்சி மன்றங்கள் இந்த இடங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு கொடுப்பதற்கு வசதி இல்லாத முறையில் நிதி வசதி குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் பல இடங்கள் விடப்பட்டிருக்கின்றன. ஆதிவாசிகள் கிராமங்களி 1 200 p.m. லிருந்து தூரமான பகுதியில் வசிக்கிறார்கள். அந்தப் பகுதிகளுக்கு, பத்தாண்டுகளுக்குப் பின்பும் கூட, மின்சாரம் வழங்கப்படவில்லை. அவர்களுடைய வீடுகளுக்கு மின்சார கனெக்‌ஷன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அரசாங்கமே அப்பேர்ப்பட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து, மின்சார விளக்கு வசதி செய்து கொடுத்துவிட்டு, அதற்குரிய கட்டணத்தை ஊராட்சி மன்றங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

விவசாயிகளுக்குப் பம்ப் செட் கொடுக்கும்போது, ஓனர்ஷிப் சர்ட்டிபிகேட் ரெவினியூ இன்ஸ்பெக்டரிடமிருந்துதான் பெற வேண்டியிருக்கிறது. இதுபற்றிப் பல ஆண்டுகளாக இந்தச் சட்ட மன்றத்தில் பலர் சொல்லி வந்திருந்தும்கூட, இன்னும் இந்தக் குறை நீங்கினபாடில்லை. இது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கிராமக் கர்ணத்திடமிருந்து சர்ட்டிபிகேட் பெற்று, பிறகு ரெவினியூ இன்ஸ்பெக்டரிடமிருந்து சர்ட்டிபிகேட் பெறுவதைக் காட்டிலும், மின்சார இலாகாவினரே, 'கிணற்றில் தண்ணீர் இருக்கிறதா? பூமி சொந்தமா?' என்று பார்த்து, மின்சார வினியோகம் செய்வது நலமாக இருக்கும். பஞ்சாயத்துக்களிடம் அப்படிச் செய்வது நலமாக இருக்கும். பஞ்சாயத்துக்களிடம் அப்படித் தான். சென்ற ஆண்டும், அதற்கு முன்பும் யூனியன் மன்றத்தில் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி அவர்களே சர்ட்டிபிகேட் கொடுக்கலாம் என்று இருந்ததை மாவட்டக் கலெக்டரிடமிருந்து ஆக்கியிருக்கிறார்கள். மீண்டும் சர்ட்டிபிகேட் பெறவேண்டுமென்று ஆக்கியிருக்கிறார்கள். மீண்டும் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரியே சர்ட்டிபிகேட் கொடுக்கலாம் என்று மாற்றி, மின்சார இணைப்புக்கள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மின்சாரக் கழகம் நல்ல முறையில் பல ஆண்டுகளாகப் பணி புரிந்து வந்திருந்தாலும், பெரிய பாசன ஆதாரங்கள் இல்லாத இடங்களில் பெரிய கிணறுகள் வெட்டி, அங்கு பெரிய மின் சக்தி இயந்திரங்களை வைத்து, பாசன வசதி செய்து கொடுத்து—ஏரிகள்,

குளங்கள் இவைகளிலிருந்து தண்ணீர் கொடுத்து, அதற்கான கட்டணத்தை வசூல் செய்துகொள்வது போன்று—வசூல் செய்து கொள்ளலாம் என்கிற என்னுடைய யோசனையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'இலவசமாகக் கூட மின் சக்தி இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது' என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இலவசமாக எங்கே மின் சக்தி கொடுத்திருக்கிறார்கள் என்பது எனக்கு நன்றாகப் புரியவில்லை.

ஆண்டொன்றுக்கு 35 ரூபாய் ஆக நாம் மினிமம் கட்டணத்தைக் குறைத்திருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. கோயமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்த வரையிலும் 35 ரூபாயாக இருந்தாலும், 25 ரூபாயாக இருந்தாலும் அந்தக் குடியானவன் செலவிடும் தொகை ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. ஹார்ஸ் பவருக்கு 35 ரூபாய் என்று மாற்றினாலும், அந்த விவசாயிக்கு 50, 60 ரூபாய் செலவாகி விடும். ஆகவே, மின்சார மினிமம் கட்டணத்தைக் குறைப்பதைக் காட்டிலும், உபயோகிக்கும் மின்சாரத்திற்கான கட்டணத்தைக் குறைப்பது நல்லது, அல்லது கட்டணத்தை அதிகப்படுத்தாமலாவது தயவு செய்து இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்தக் கழகத்தின் வருவாய் நல்ல முறையில் இருப்பதை நாம் பார்க்கின்றோம். இலாபகரமான முறையில் இந்த ஸ்தாபனம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. கீழ்த்தரச் சிப்பந்திகளுக்கும் மேலே உள்ள அதிகாரிகளுக்கும் ப்ராவிடென்ட் பண்டு முதலியவைகளை நாம் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் என்று காட்டப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல், அவர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சூபர்வைசர்கள் குடியிருப்பதற்கும், அவர்களுடைய காரியாலயங்களுக்கும் போர்டாருக்குச் சொந்தமான கட்டடங்கள் அனேக இடங்களில் இல்லை. காரியாலயத்திற்கு வேண்டிய வசதிகளும், சிப்பந்திகள் குடியிருப்பதற்கேற்ற வசதிகளும் சர்க்காரே செய்து கொடுப்பது நலம். ஒவ்வொரு ஊரிலும் அவர்கள் பிறரை நம்பி, வாடகை வீடுகளில் இருக்கவேண்டியிருக்கிறது. அதனால், அரசாங்கமே அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பது நலம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ரீதியில் ஆலோசனைக் குழுக்கள் முன்பு இருந்தது போல அமைத்து, இதைச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. ஆர். ரங்கசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த மின்சார போர்டாரின் நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் நானும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.





சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த 220 குறைகளைக் குறித்த விமரிசனங்கள் அச்சிடப்பட்டு புத்தக ரூபமாகத் தரப்பட்டிருக்கிறது. வேறு எந்த இலாகாவும் செய்யாத ஒரு முறையை மின்சார போர்டார், போற்றத்தக்க முறையில், செய்திருக்கிறார்கள். குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய முறையில், அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கள் இப்பொழுது நடைமுறையில் என்ன நடக்கிறதோ, அப்படியே திருப்பி எழுதப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமங்களில் விவசாயத்திற்காக மின்சாரம் வழங்குவதற்கு எஸ்டிமேட் தயார் செய்யும்போது, பத்து சத விகிதம் லாபம் வந்தால்தான் அந்த வேலையை எடுத்துக்கொள்ளவேண்டும் என்கிற ஒரு விதிமுறை இருக்கிறது. அந்த விதிமுறையின் பிரகாரம் எஸ்டிமேட் தயார் செய்வதனால், அனேகமாக கிராமங்களில் மின்சார விஸ்தரிப்பு செய்யப்படுவது தாமதமாகிக்கொண்டிருக்கிறது. ஒரு கிராமத்தில் ஒருசிலர் தங்களுடைய டெபாசிட் தொகையைக் கட்டின பிறகு கூட மற்றும் ஒரு சிலர் கட்டாமல் இருந்தால், அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படாமல் விஸ்தரிப்பு வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே மின்சார போர்டார் இப்படிப்பட்ட வேலைகளை எடுத்துக்கொள்ளும்போது பத்து சத விகித லாபம் அவர்களுக்குக் கிடைக்காமல் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னால், அதற்கு முக்கிய காரணம் என்ன என்று பார்க்கவேண்டும். சில மாதங்களுக்கு முன்பு வழங்கப்பட்ட மின்சார போர்டு பட்ஜெட்டில் பார்க்கும்போது, நமது சர்க்காருக்கு அவர்கள் கட்டக்கூடிய கடனுக்கு வட்டியாகத்தான் அனேகமாக அதற்கான காரணமாக இருக்கிறது என்று நம் எல்லோருக்கும் தெரியும். அந்த வட்டி அனேக கோடி ரூபாய் அளவுக்கு அவர்கள் நமது சர்க்காருக்குச் செலுத்த வேண்டியிருக்கிறது. மற்றும் அவர்களுக்கு முதலீட்டுக்குத் தேவையானதையும் தேய்மான நிதியும் ஒதுக்கியது போக, பத்து சத விகிதம் லாபகரமாக இருக்கவேண்டும் என்று எஸ்டிமேட் போடும்போது, அனேகமாக சில கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுக்காமல் விட்டுவிடவேண்டிய கட்டாய நிலைமையும் அவர்களுக்கு ஏற்படுகிறது. விவசாயத்திற்கு உண்மையிலேயே நமது சர்க்கார் நல்ல முறையில் மின்சாரம் வழங்க முயற்சி செய்யவேண்டும், விவசாயத் துறையில் உணவுப் பொருள் உற்பத்தியை அதிகமாகச் செய்யவேண்டும் என்று கோஷம் போடும் இந்த நேரத்தில், விவசாயத்திற்கு அந்த முறையில் பத்து சத விகிதம் லாபகரமாக இருக்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தை மாற்றி, நஷ்டம் வந்தாலுங்கூட அதைப் பொருட்படுத்தாமல், இப்பொழுது சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை மாற்றியமைத்திருக்கிற மாதிரியாக எந்த விதத்திலாவது விவசாயிகளுக்கு மின்சார வசதி செய்ய வேண்டும் என்ற ஒரு கொள்கையோடு செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. ஆர். ரங்கசாமி] [12th August 1963

மின்சாரத்திற்கு எஸ்டிமேட் சாங்ஷன் செய்து வேலை ஆரம்பிக்கும்போது, போஸ்ட்கள் எடுத்துச் செல்வதில் ஒரு கஷ்டமான நிலைமை இன்றைக்கு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை உடனடியாகக் கொண்டு சேர்ப்பதற்கு மின்சார போர்டில் வசதி இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். விவசாயிகள் தான் அந்த போஸ்ட்களை அனேகமாக சொந்த செலவில் எடுத்துச் செல்கிறார்கள் என்பது தெரிந்த விஷயம். அப்படி எடுத்துச் செல்லும் போஸ்ட்களுக்காக ஏதாவது வாடகை கொடுக்கப்படுகிறதா என்றால் அதை விவசாயிக்குக் கொடுப்பதும் இல்லை. அதை அனேகமாக அவர்கள் வற்புறுத்துவதும் இல்லை. ஆனாலுங்கூட, இனமாக அவர்கள் எடுத்துச் செல்லும்போது, அந்தப் பலன் போட்டாருக்காவது நேரடியாக லாபகாமான திட்டமாக இருக்க வேண்டும். அல்லது அந்த போஸ்ட்களை விவசாயிகள் எடுத்துச் செல்வதற்கான வாடகையாவது கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலமைச்சர் அவர்கள் மதுரையில் பேசும்போது, 'தொழில்களுக்கு இரண்டு நாட்கள் வேலையைக் குறைத்து, மாற்று விதத்திலே மின்சாரம் எடுத்துக் கொண்டால் நலம்' என்று சொன்னார்கள். இன்று விவசாயம் செய்வதே கஷ்டமான நிலையில் இருக்கிறது. அதுவும் மின்சாரம் வழங்குவதிலும் அவர்களுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன. தோட்டப் பயிர் செய்யும் விவசாயிகள் இரவில் தண்ணீர் பாய்ச்சுவது ஒரேயடியாக முடியாத காரியம் என்றுகூட சொல்லிவிடலாம். அந்த முறையில் இருப்பதால், தொழிலமைச்சர் அவர்களே மின்சார இலாகாவையும் வைத்திருப்பதால் போர்டார் அவர்களைக் கலந்து, பகலில் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

* திரு. ஜே. மாதா கவுடர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார போர்டாரின் நிதி நிலை அறிக்கையின் மீது நான் ஒரு சில கருத்துக்கள் தெரிவிக்க விரும்புகிறேன். நேரம் அதிகம் இல்லாததால் நானும் மின் வேகத்தில் பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், ஒன்றிரண்டு கருத்துக்களை மாத்திரம் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆண்டுதோறும் நம் மாநிலத்தின் மின்சாரத் தேவை 20 சத விகிதத்திற்கு மேல் அதிகரித்து வருகிறது என்பதை இந்தக் குறிப்பில் பார்க்கும்போது, நாட்டில் வளர்ச்சி எவ்வளவு வேகமாக முன்னேறிக் கொண்டுபோகிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இருபது சத விகிதம் அளவுக்கு ஒரு ஆண்டிலே மின்சாரம் தேவைப்படுகிறது என்றால், அந்த 20 சதவிகிதம் அளவுக்குத் தொழில்களும் நாட்டில் முன்னேறிக் கொண்டு போவதை நாம் பார்க்கிறோம். தொழில் வாய்ப்பு இந்த அளவுக்கு ஏற்பட்டு இருக்கும்போது, தொழிலாளர்களுடைய குறைகளையும்



12th August 1963] [திரு. ஜே. மாதா கவுடர்]

நாம் நீக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மின்சாரம் அதிகமாகத் தேவைப்படும் நேரத்தில்தான் நாடு முன்னேற்றப் பாதையில் அடி எடுத்து வைக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்தில், இந்தத் துறையில் தொடர்ந்து பத்து சத விகித லாபத்தை நாம் எதிர்பார்த்துத் திட்டம் போடுவதாக இருக்கிறது. குறிப்பாக என்னுடைய நீலகிரி ஜில்லாவில் 10 சத விகித லாபத்தை எப்படி நீங்கள் (போர்டார்) எதிர்பார்க்கமுடியும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். 'ப்ளெயின்ஸ்' இல் ஒரு ஊரில் 200 வீடுகள் இருந்து அந்த ஊருக்கு ஒரு திட்டம் போடுவதாயிருந்தால், குறைந்த செலவில் செய்ய முடியும். அங்கு சில பேர்கள் மின்சார கனெக்ஷன் எடுத்துக்கொண்டால்கூடப் போதுமானதாக இருக்க முடியும். அந்த மலைப் பிரதேசத்தில் ஒரு போஸ்டை போடுவதற்கும், ஒரு குழியைத் தோண்டுவதற்கும் கூட செலவு அதிகம் ஏற்படுகிற காரணத்தினால் அந்தச் செலவில் 10 சதவிகிதம் அவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டும் என்று இருப்பது சிரமமாக இருக்கும். ஆகவே கண்டிப்பாக மலைப் பிரதேசத்திற்கும், ப்ளெயினுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சப்சிடி ஸ்கீமை நிறுத்திவிட்டதாகச் சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட எல்லா கிராமங்களுக்கும் என்னுடைய பகுதியில் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுவிட்டது என்றாலும் கூக்கல்துரை, கொட்டகம்பை போன்ற கிராமங்களுக்கு சப்சிடி ஸ்கீமை நிறுத்திவிட்டதால் கொடுக்க முடியவில்லை. ஆகவே தயவு செய்து இந்தமாதிரியாக மலைப் பிரதேசங்களில் இருக்கும் கிராமங்களுக்காவது அந்த சப்சிடி ஸ்கீம் திட்டத்தை நீடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹொகெனகல் திட்டத்தைப்பற்றியும் ஒன்று சொல்லப்படுகிறது. அது இரண்டு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதான குறிப்பு காணப்படுகிறது. ஒருகால் மைசூர் அரசாங்கத்தார் ஹொகெனகலுக்கு மேலே அணை கட்டிவிட்டால் அதனால் நமக்கு ஏதாவது பாதகம் ஏற்படுமா என்பதைப் பரிசீலிக்கவேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலம் மின்வேகத்தில் தான் முன்னேறிக்கொண்டு வருகிறது. மற்ற மாநிலங்களை எல்லாம்விட நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்பதை இந்தப் புத்தகத்தில் கடைசியில் கோடிட்டுக் காட்டியிருப்பதைப் பார்த்தாலேயே தெரியும். படத்தைப் பார்த்தே நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சியை தெரிந்துகொள்வதற்கு வசதியாக இவ்வாண்டு இந்த அறிக்கை சமர்ப்பித்துக்கொடுத்திருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஒவ்வொரு வருடமும் இதுபோன்ற வெளியீடுகள் அளிக்கவேண்டும் எனத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார போர்டின் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையின்மீது சில வார்த்தைகளை உங்கள் மூலமாகச் சமர்ப்பிக்கலாமென்று [illegible]

கிறேன். எனக்கு முன்னால் பேசிய திரு மாதா கவுடர் கூறியது போல நானும் மின்சார வேகத்தில் ஒன்றிரண்டு கருத்துக்களை கோடிட்டுக் காட்ட முயற்சிக்கலாமென்று கருதுகிறேன்.

ஒரு விஷயத்தில் கனம் அமைச்சர் அவர்களை நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த நம்முடைய அமைச்சர் அவர்கள் நாங்கள் சொன்ன கருத்துக்களில் எவற்றை ஏற்றுக்கொள்ளலாம், எவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது தடங்கல்கள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒத்துக்கொண்டிருக்கக் கூடிய யோசனைகளைச் செயலாற்றுவதற்கு' என்ன என்ன வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முக்கியமாக அவர்களுடைய உரையில் மின்சாரத் துறையில் நம்முடைய சாதனையையும், நாம் செய்திருக்கிற காரியங்களையும் எடுத்துச் சொல்கிற நேரத்தில் மின்சார வெட்டைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நாம் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை. நாம் பதினாலாயிரம் கிராமங்களுக்கு மின்சக்தியை விஸ்தரிக்கிறோம் என்றும், ஒன்றரை லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சக்தியை வழங்கியிருக்கிறோம் என்று சொன்னாலும், மற்ற மாநிலங்களைவிட மிக அதிகமாக முன்னேறியிருக்கிறோம் என்று சொன்னாலும் இவ்வாண்டும் 16 நாட்கள் மின்சார வெட்டு வந்தது என்றால் பல நூறு தொழிற்சாலைகள் மூடப்பட்டு கிடந்தன, பல்லாயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்து தவித்தார்கள் என்றால் நாம் இன்னும் நெடுந்தூரம் முன்னேறவேண்டியதாக இருக்கிறது. அதை கனம் அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருப்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் பருவ மழை தவறிவிட்டதன் காரணமாக இந்த மின்சார வெட்டு வந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் இப்படி பருவ மழை தட்டித்தான் போகிறது. பருவ மழை தப்பிவிட்டது, அதனால் மின்சார வெட்டு வந்தது என்று சொல்வது திட்டமிட்ட பொருளாதாரத்தில் செயலாற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்கிற நமக்கு எல்லாம் அவமானமாகும். ஆடிமஞ்சனத்தைப் போல, ஆடி பதினெட்டைப் போல, ஆவணி அவிட்டத்தைப் போல ஆண்டுதோறும் இந்த மின்சார வெட்டு வருகிறது. அதைத் தொடர்ந்தே பல இடைஞ்சல்களும் வந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும் இப்படி ஆண்டுதோறும் ஏற்படுகிற மின்சாரத் தட்டுப்பாட்டை பருவ மழை தவறுகிற காலத்தில் மட்டும் சமாளித்துக்கொள்ள போதுமான அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம். அவ்வாறு ஏற்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டோம். அதனால் தான் ஆண்டுதோறும் ஏற்படுவது போலவே இவ்வாண்டும் மின்சார வெட்டு ஏற்பட்டது. பல தொழிலாளர்கள் வேலை இழந்து திண்டாடிவிட்டது: இனி இந்தமாதிரியாக மின்சார வெட்டு என்பது நம்முடைய அவமானச் சின்னமாக நிலைத்திருக்கக்கூடாது





என்றால் கடலூரிலும், நாகப் பட்டினத்திலும், தூத்துக்குடியிலும் அனல் மின்சார நிலையம் சீக்கிரமே அமையவேண்டும். நெய்வேலியில் ஆயிரம் மெகவாட் உற்பத்தி செய்யக்கூடிய அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். அதை இன்னும் நல்லமுறையில் வற்புறுத்த வேண்டும். கல்பாக்கத்தில் அமைய இருக்கிற அணு மின்சார நிலையம் நான்காம் ஐந்தாண்டுத்திட்டம் என்ற அளவுக்குப் போகாமல் அதை உடனடியாக எடுத்து நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். காரணம் முன்பு தூத்துக்குடியில் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் வருமென்று சொன்னார்கள். வரவில்லை. அதுபோல் அறிக்கையில் கடலூரில் வருகிறது, நாகப்பட்டினத்தில் வருகிறது, கல்பாக்கத்தில் வருகிறது என்று சொல்லிக் கொண்டிருப்பதனால் இவை வருமோ வராதோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. ஆகவே இவை உடனடியாக வந்து செயல்படுவதற்கேற்றபடி தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அணு மின்சார நிலையத்தை உடனடியாக ஏற்படுத்துவதற்குத் தென் மாநில ராஜ்யங்கள் நான்குமாவது சேர்ந்து செயலாற்ற வழி செய்ய வேண்டும். "இதை நாங்கள் வற்புறுத்தினோம். அதைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்வதில் பயன் இல்லை. இந்த ஒரு விஷயத்திலாவது இந்த நான்கு மாநில அரசாங்கங்களும் ஒரு உடன்படிக்கைக்கு வந்து இந்த அணு மின் நிலைய திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான்கு மாநிலங்களையும் இணைக்கின்ற இணைப்புப்பற்றி ('க்ரிட்') கூடிப்பேசினார்கள். ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆண்டி கூட அரசனாவது உண்டு. அரசன் ஆண்டியாவதும் உண்டு. இந்த க்ரிட் விவகாரத்தில் இந்த மாநிலம், அந்த மாநிலம் என்ற வேறுபாடு இல்லாமல் பரந்த பொருளாதார அடிப்படையில் தென்னக ராஜ்யங்களிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்த இதை அவசியம் செயலாக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். தென்மண்டலக் கவுன்சில் என்னமோ கூடுகிறார்கள். பேசுகிறார்கள். ஆனால் நிலையான, நிரந்தரமான ஓர் ஏற்பாட்டுக்கு, தென்னக ராஜ்யங்களிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தக்கூடிய மின்விசைத் திட்டத்தையோ, குடிதண்ணீர்த் திட்டத்தையோ, ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை அமைத்ததாகக் காணோம்.

இன்றைக்கும் குந்தாவைப் பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே குந்தா திட்டத்தைப்பற்றி நாம் எல்லோரும் பெருமைப்படலாம். நாங்கள் எல்லாம் போய்ப் பார்த்தோம். எமரால்ட், அவலாஞ்சி போன்றவைகளை எல்லாம் பார்க்கிறபோது மிகவும் பெருமையடையத்தக்கதாக இருக்கிறது. அதுவும் அந்தத் திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றித் தருவதற்கு நம்முடைய மின்சார பிரதம என்ஜினியர் திரு. அப்பாத்துரை

அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும்படியான காரியங்களை உற்று நோக்கும்போது—குந்தா மின் திட்டம் என்ற பெயரையே மாற்றி—அப்பாத்துரை மின் திட்டம் என்று பெயரிட்டுக் கூட அழைக்கலாம். காரணம் இன்றைய தினம் அங்கேயே ராமையா பாலம், வெங்கட்டராமன் பாலம் என்று எமரால்ட் தாண்டிப்போனால் பெயர் வைத்திருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப் பெயர் வைப்பதில் தவறு ஒன்றும் இல்லை. காமராஜ் சாகர் என்று இல்லையா? அப்படி இந்த ஒரு திட்டத்திற்காக ஒரு அதிகாரி ஆற்றியிருக்கும் படியான காரியங்களை எல்லாம் பாராட்டும் வகையில் இதற்கு அப்பாத்துரை மின் திட்டம் என்றே பெயர் வைக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

மேலும் சோலையாறு, ஆளியாறு மின்சார நிலையங்களையும் மூன்றாவது திட்ட காலத்திலேயே நிறுவ இந்திய அரசினர் ஒப்புக்கொண்டுள்ளனர் என்று சொல்லியிருப்பது மிகவும் வரவேற்கக் கூடிய விஷயம். பேசின் பிரிட்ஜ் மின்சார நிலையத்திலும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவது மிகவும் அவசியமானதாகும். இன்னும் தனியார் துறையில் இயங்கி வருகிற மின்சார விநியோகக் கம்பெனிகளைப் பற்றிச் சொன்னார்கள். என்னமோ ஜமீன் பிரதேசம் போல தனியார் கம்பெனியின் பகுதிகளை விட்டுவிடாமல் அவற்றை எல்லாம் மின்சார போர்டே எடுத்துக் கொள்ள வேண்டும். நஷ்ட ஈடு, நஷ்ட ஈடு என்று சொல்லிக் கொண்டிருப்பதால் பயன் இல்லை. தனியார் கம்பெனிகளுடைய பிராந்தியத்தில் இருக்கும் கிராமங்கள் மிகவும் தவித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே தனியார் கம்பெனிகளை எல்லாம் போர்டு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹொகேனக்கல் திட்டத்திற்கு நம்முடைய ராஜ்யமும், மைசூர் ராஜ்யமும் சேர்ந்து திட்டம் தயாரித்திருக்கிறார்கள் என்று சொன்னார். திரு. காமராஜும், திரு. நிஜலிங்கப்பாவும் இது பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றாலும் இந்தத் திட்டம் சாத்தியமாகும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அதைத் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதே நேரத்தில் இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது கட்டண விகிதங்களைத் திருத்தியமைக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கண்டிப்பாகக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். தொழிற்சாலைகளுக்கு வேண்டுமானால் கட்டணத்தை ஏற்றுங்கள்.

இன்னொன்றையும் நான் இப்போது வற்புறுத்த விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தவறியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையிலே கூடச் சரியாகக் கொடுக்கவில்லை. கேபிள்கள், ஒயர்கள் மின்சாரக் கம்பிகள் ஆகியவற்றையெல்லாம் இப்போது கமானி கம்பெனியிலிருந்தும்





கல்கத்தாவிலுள்ள ஒரு கம்பெனியிலிருந்துதான் வாங்குகிறார்கள். இவற்றையெல்லாம் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையைப் பொதுத் துறையிலே மின்சார போர்டின் கீழ் நிறுவினால் கோடிக் கணக்கான ரூபாய் நமக்கு மிச்சமாகும். அதனால் பொருளாதார வளம் பெருகும் என்று நான் இதற்கு முன்பே சொன்னேன். இது மிக மிக அவசியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பெரிய விவகாரம். இதனை நான் மிக தைரியமாக எடுத்துச் செய்யப்பட வேண்டிய ஒன்று என்ற வகையில் வற்புறுத்துகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமது மாநிலத்திலே பொதுத் துறையிலே எந்தத் தொழிலும் மேற்கொள்ளப்படவில்லை. இவற்றை எல்லாம் நான் எடுத்துச் சொன்னால், 'எப்போதும் வடக்கு தெற்கு என்று தான் பேசுவார்கள்' என்று சொல்வார்கள். ஆகவே, இப்போதாவது இந்தத் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் பொதுத் துறையில் உருவாக்குவதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

1957-58-ஆம் ஆண்டுக் கணக்குகள் சபை முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரு தயக்கம் இருக்கத்தான் செய்கிறது. இன்னும் நான்கைந்து ஆண்டுகளுக்கான கணக்குகள் சீக்கிரத்தில் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே கால தாமதத்திற்காக வருந்துகிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கான வகையில் செயல்படுவதற்கான ஆற்றலையும், நல்ல முற்போக்கான தன்மையையும் நீங்கள் பெற வேண்டுமென்று கூறி, உங்களுடைய திறமையிலே குறை இல்லை, திட்டங்களிலேதான் குறை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி, திட்டங்களை நிறைவேற்றுவதில் தீர்க்கதரிசனத்துடன் செயலாற்றவேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. தா. பெருமாள் ராஜு: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1963-64-ம் ஆண்டு வரவு செலவு அறிக்கையின் மீது சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். சென்ற ஆண்டு எடுத்துச் சொல்லப்பட்ட பல காரியங்கள் ஓரளவு நமது போர்டாரால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று கருதலாம். குறிப்பாக, தாளவாடி மலைப் பிரதேசத்தில் இப்போது லைன்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்கது. மலைப் பிராந்தியங்களில் மிருகங்கள் அதிகமாக இருக்கும் காரணத்தால் மின்சாரம் கொடுப்பது மிகவும் அவசியமானதாகும். அங்கு போர்டு தலைவர் அவர்களே முன் நின்று வேலை செய்து கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவருக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இரண்டாவதாக, அந்தியூர் மலைப் பிரதேசமாகிய பர்கூர் பிரதேசத்தில் இப்போது மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகளை ஆரம்பிக்க இருக்கிறார்கள். பொதுவாக, மலைப் பிரதேசங்களுக்கு மின்சாரம் கொடுப்பதில் நஷ்டம் ஏற்படுகிறது

என்று போர்டார் கூறியிருக்கிறார்கள். இதிலே நஷ்டம் ஏற்பட்டாலும் சர்க்காருக்கு வேறு வகையிலே வருமானம் அந்தப் பகுதிகளில் இருந்து கிடைக்கிறது. ஃபாரஸ்ட் இலாகாவின் மூலம் இந்தப் பகுதிகளில் இருந்து கோடிக்கணக்கான ரூபாய் சர்க்காருக்குக் கிடைக்கிறது. அதை ஒரு நிமித்தமாக வைத்துக் கொண்டு இந்தப் பகுதிகளில் எல்லாம் மின்சார விஸ்தரிப்பை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கோபிபஞ்சாயத்து யூனியன், அந்தியூர் பஞ்சாயத்து யூனியன் ஆகியவை பஞ்சாயத்துக்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்தும் இதுவரை எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதனை உடனடியாகக் கொடுக்க வேண்டும். பஞ்சாயத்துக்கள் முன்னேற்றம் அடையும் வகையில் அவற்றுக்கு முதலிடம் கொடுத்து மின்சாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தியூர் பிர்க்காவிலே ஷார்டேஜ் அதிகமாகக் காணப்படுகிறது. மின் விளக்குகள் எல்லாம் பவர் குறைவாக இருக்கிறது. பவர் அதிகமாக இல்லாததால் ரைஸ் மில்கள் எல்லாம் ஓடுவதில் தடை ஏற்படுகிறது. ஆகவே, அங்கு ஒரு சப்-ஸ்டேஷன் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் லோயர் பவானி ஏரியாவில் உள்ள பகுதிகளில், அங்கிருந்து ஒரு பர்லாங் தூரத்திற்குப் பிறகு உள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைப்பதற்குத்தான் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. இந்த வாய்க்கால்களில் சுமார் நான்கு மாதங்கள்தான் தண்ணீர் ஓடுவதன் காரணமாக எட்டு மாதங்களில் விவசாயம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களும், கனம் மின்சார அமைச்சர் அவர்களும் சேர்ந்து ஆராய்ந்து, லோயர் பவானி ஏரியாவில் எல்லாக் கிணற்றுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார போர்டின் ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றி இவ்வளவு விரிவாக நாம் பரிசீலித்துப் பார்க்கும்போதே எவ்வளவு முக்கியத்துவம் அதற்கு வந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. மின்விசை எவ்வளவு வேகமாகச் செல்லுகிறதோ அதே போன்று மின்சார இலாகாவானது மிகத் துரிதமாக வேலை செய்து வருகிறது. அந்த வகையில் சிறந்த முறையில், குறைந்த காலத்தில் பல திட்டங்களை முடிக்கக்கூடிய திறமை படைத்த இலாகாவாக அது விளங்கி வருகிறது. அந்த இலாகா நல்ல முறையில் கிராமப் புறங்களிலும் மின்சார வசதியினைச் செய்து தந்திருக்கிறது என்பதற்காக நான் பாராட்டுகிறேன். இன்று சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் பலப் பல தொழிற்சாலைகள் ஏற்பட்ட வண்ணமாக இருக்கின்றன. தொழிற்சாலைகளுக்கு மிக மிகத் தேவைப்படுவது ஒன்று தண்ணீர், மற்றொன்று



மின்சாரம். அந்த வகையிலே மின்சாரமும், தண்ணீரும் கொடுத்துவிட்டால் இன்னும் பல புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலைகள் வளரும். சென்னை நகர மக்கள் தொழிலிலே அதிகமான ஆர்வமும், ஆற்றலும் நம்பிக்கையும் உடையவர்களாக இருக்கிறார்கள். மிகச் சிறந்த தொழில் நிபுணர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அந்த நிலையில் சென்னையின் சுற்றுப் புறங்களில் உள்ள இடங்களில் புதுப் புதுத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில் மின்சாரத்தை எவ்வளவு அதிகமாக, சுலபமாகக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்க முன் வந்தால் நலமாக இருக்கும். ஆவடி, அம்பத்தூர் போன்ற இடங்களில் தண்ணீர்க் கஷ்டமும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த இரண்டுக்குமான வசதிகளைச் செய்து தர முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் புறங்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு முதலிடம் கொடுப்பது போன்றே சிறு தொழில்களுக்கும் மின்சாரம் கொடுக்க முன் வரவேண்டும். மின்சாரம் விஸ்தரிக்கும் பொறுப்பைத் தனி நபர்களிடமிருந்து எடுத்து விடுவது மிக மிக அவசியம் என்பதை இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக இந்தச் சட்டசபையில் சொல்லிக் கொண்டே வருகிறோம். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பல கிராமங்களில் மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் மின்சாரத்தை விஸ்தரிக்கும் பொறுப்பு தனி நபர் கையில் இருப்பதுதான். அரசாங்கம் திடீரென்று அவர்களுடைய கம்பெனிகளையெல்லாம் தேசியமயமாக்கி விட்டால் நஷ்டம் ஏற்பட்டு விடுமே என்று பயப்படுகிறார்கள். அரசாங்கத்தைக் கடன் கொடுக்கச் சொன்னால் தாங்கள் மின்சாரத்தை விஸ்தரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். 12-30 p.m.

அதேபோன்று திருச்சி மாவட்டத்தில் கூட பல கிராமங்களில் அங்குள்ள கார்ப்பரேஷன் அரசாங்கம் எவ்வளவு ஆர்வத்தோடும் ஆசையோடும் கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கிறதோ அவ்வளவு வேகமாக கொடுக்க முன்வருவதில்லை. காரணம், அவர்களுக்கு அக்கறை கிடையாது. அரசாங்கம் இதை எடுத்துக் கொள்ள நேரிடலாம், பின் நாம் ஏன் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இருக்கிறார்கள். ஆகவே நான் அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்வது என்னவென்றால், ஒன்றில் அவர்கள் மின்வேகத்தில் மின்சாரத்தை விஸ்தரிக்கச் செய்யவேண்டும் அல்லது அரசாங்கமே அதை எடுத்து மின்சாரத்தை பல கிராமங்களுக்கு பரவச் செய்வது மிக மிக அவசியம். பல கோணங்களிலிருந்து பார்த்தாலும் அது அவசியம். விவசாய உற்பத்தி, சிறு தொழில் அதிகரிப்பு, வீட்டு வசதி இவற்றிற்காக மின்சாரம் தருவது பற்றி லைசென்ஸ்தாரர்கள் நோக்கத்தை மாற்றி அவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று சொல்ல வேண்டும். இல்லாவிடில் அவர்கள் விட்டு விட்டுப் போகட்டும். இன்றிருந்தால் பத்து கோடிக்கு மேல் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டி வரும். ஆனாலும் அந்த நஷ்டயீட்டைக் கொடுத்துவிட்டு அந்த நாமே

[திருமதி டி. என். அநந்தநாயகி] [12th August 1963

ஏற்றுக்கொள்வதுதான் சாலச் சிறந்தது என்று கூறி. அது
குறித்து அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்
கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக, சென்னையில்
நாம் எல்லோரும் மின்சாரத்தை அனுபவிக்கிறோம். ஆனால் அடிக்
கடி தக்க சமயத்தில் அது நின்று விடுகிறது. சாப்பிட்டுக்
கொண்டிருக்கும்போது அது நின்று விடுகிறது. திரும்ப
வருவதற்கு நேரமாகிறது. அப்படி 'பரீக்வன்ட் பெயிலியர்'
ஏற்படுவதால் உடனடி பழைய விளக்குகளைத் தேடி வைக்க
வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே இப்படி அடிக்கடி கரென்ட்
பெயில் ஆவதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்து
அப்படி அடிக்கடி ஏற்பட்டாமல் இருப்பதற்கு முயற்சி எடுத்துக்
கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய துணைத்தலைவர்
அவர்களே, தமிழ்நாடு மின்சாரக் கழகத்தின் 1963,
64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையும், 1962-63-ம் ஆண்டுக்கான
துணை நிதிநிலை அறிக்கையும் கனம் தொழில் அமைச்சர்
அவர்களால் இந்த மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்
கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மின்சார உற்
பத்தியைப் பெருக்குகிற வகையில், அரசினர் எடுத்திருக்கிற
முயற்சியும், தமிழக மின்சாரக் கழகத்தினர் உற்பத்தியைப்
பெருக்குவதற்காக ஏற்படுத்தித் தந்திருக்கிற ஆக்கமும் உள்ள
படியே பாராட்டுவதற்குரியனவாகும். உற்பத்தியைப் பெருக்கு
வதற்காகப் பொதுவாகக் காட்டிவருகிற ஊக்கமும் ஆக்கமும்
பாராட்டுவதற்குரியன. ஆனால் மின்சாரம் வழங்குவதில் உள்ள
குறைபாடுகளையும், குற்றங்களையும்தான் ஆளும் கட்சியினரும்,
எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் இந்த மன்றத்தின்
கவனத்திற்கும், அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு
வந்தார்கள். மின்சாரத்தைப் பெருக்குவதற்காக எடுத்துக்
கொண்ட முயற்சியை நான் குறைத்து மதிப்பிடவில்லை.
அதனை வழங்குகிற முறையில் எது எதற்கு வழங்குவது,
எப்படி எப்படி வழங்குவது, எந்தெந்த முறையில் வழங்குவது
யார் யாருக்கு வழங்குவது, எந்தெந்த முறையில் வழங்குவது
என்பது பற்றிய பிரச்சனையில்தான்—வழங்குகிற முறையில்தான்
பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. அதைத்தான் ஆளும்
கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்த
உறுப்பினர்களும், இங்குச் சுட்டிக்காட்டினார்கள். எதிர்க்கட்
சிக்காரர்கள் குறை சொல்வதைத்தான் தங்கள் தொழிலாகக்
கொண்டிருக்கிறார்கள் என்று கூறிய கனம் கோபிச்செட்டிப்
பாளையம் தொகுதி உறுப்பினர் கூட, அதைச் சொல்லி முடித்த
அடுத்த நிமிடத்தில் அவர்கள் குறைகளை வரிசையாக எடுத்து
அடுக்க ஆரம்பித்து விட்டார்கள். மின்சாரத்தை வழங்கும்
முறையில் உள்ள குறைபாடுகளை இம்மன்றத்தில் எடுத்து
வைப்பதன் மூலம், தக்க விளைவுகள் பெறலாம் என்ற முறை
யில்தான் அவை எடுத்து வைக்கப்படுகின்றன.

சென்ற ஆண்டு இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் பலர்
எடுத்து வைத்த குறைகளை கவனித்து ஆவன செய்வோம்
என்று தொழில் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருந்



12th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

தார்கள். எந்தெந்த வகையில் என்னென்ன முயற்சிகள் மேற்
கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற முறையில் அதை விளக்கும்
விதத்தில், சென்ற ஆண்டு எழுப்பிய பிரச்சினைகளுக்கு விடை
அளிக்கும் விதத்தில், ஒரு அறிக்கையை இம்முறை தந்திருக்
கிறார்கள். அந்த முயற்சியை உள்ளபடியே நான் பாராட்டு
கிறேன். மின்சாரத் துறையினர், இம்மன்றத்தில் உறுப்பினர்
கள் எடுத்துக் கூறிய பிரச்சினைகளுக்குத் தக்க விளக்கங்களை
எடுத்துக் கூறி, அவற்றைத் தொகுத்து, நிலைமைகளைக் கண்டு
அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருப்
பதைப் போல், மற்ற துறைகளைச் சார்ந்த அமைச்சர்களும்
அந்தந்த துறையைப் பற்றிய விவாதங்கள் வரும்போது இந்த
மன்றத்தில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கும், ஐயப்பாடுகளுக்கும்
தக்க விடைகளை அச்சிட்டுத் தந்தால் அது நன்றாக அமையும்
என்று நான் தங்கள் மூலம் இந்த மன்றத்தின் முதல்வருக்கு
தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிக்
கொடுப்பதால் இந்த மன்றத்தில் கனம் அங்கத்தினர்கள்
கூறிய கருத்துக்களை அதிகாரிகளும் பிறரும் எந்த வகையில்
ஏற்று, நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை
அங்கத்தினர்கள் புரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும்.
அந்த ஒருமுறையை எல்லாத் துறையினரும் பின்பற்ற
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அம்முறையை பின்பற்றிய
இத்துறையினரை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் வாழ்க்கைக்கு மிக
இன்றியமையாததொன்றாக அது அமைந்து விட்டது என்பதை
நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். உலக நாடுகள் எல்லாம்
தங்களுடைய வளத்தை, வசதியைப் பெருக்கிக்கொள்ள மின்சா
ரத்தை உறுதுணையாக தம்பி வாழ்கின்றன. ஏனெனில்
வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு மூலப்பொருள்களும், கனிப்
பொருள்களும் உற்பத்திப் பொருள்களாக மாற்றப்பட வேண்டும்.
அப்படி மாற்றினால்தான் நாட்டிற்கு நல்ல வருமானம் கிடைக்க
வாய்ப்பு ஏற்படும். மூலப் பொருள்களையும், கனிப் பொருள்
களையும் உற்பத்திப் பொருள்களாக மாற்ற தொழிற்சாலைகள்
இயங்க வேண்டும். தொழிற்சாலைகள் இயங்க, அதற்கு உறு
துணை புரியக் கூடிய, மின்சாரம் வேண்டும். எந்த நாடு மின்
சாரத்தைப் பெருக்கிக்காட்டியிருக்கின்றதோ அந்த நாடு தொழில்
துறையில் வளரவும், தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்
கொள்ளவும், தங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்
ளவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அம்முயற்சி
யில் தமிழக அரசு கவனம் செலுத்தி வருவது வரவேற்கத்
தக்கதே. இந்த முயற்சியோடு நின்று விடுகிற அளவில்
நிலைமை அமைந்து விட்டதா என்றால் இல்லை. உலக நாடு
களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இந்தியாவில் ஆள் ஒன்
றுக்குக் கிடைக்கப் பெறுகிற மின்சாரத்தின் அளவு மிக மிகக்
குறைவாக இருப்பதைப் பார்க்கிறோம். 1960-ம் ஆண்டுக் கணக்குப்
படிப் பார்த்தால், அமெரிக்காவில் ஆண்டு ஒன்றுக்கு தனி
மனிதர் ஒருவர் பெறுகிற மின்சாரத்தின் அளவு, 4,550 கிலோ
வாட்ஸ், ஸ்வீடனில் 4,550 கிலோவாட்ஸ், பிரிட்டனில் 2,600

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [12th August 1963

கிலோவாட்ஸ், மேற்கு ஜெர்மனியில் 2,180 கிலோவாட்ஸ்,
பிரான்ஸில் 1,580 கிலோவாட்ஸ், இத்தாலியில் 1,240 கிலோவாட்ஸ்
ஜப்பானில் 1,238 கிலோவாட்ஸ் பெறுகிருர்கள் என்ருல் இந்தியா
வில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு தனி நபர் பெறும் மின்சாரத்தின்
அளவு 46 கிலோவாட்ஸ்தான் என்று தெரியவருகிறது. தமிழ
கத்தில் 1960-61-ல் 60 கிலோ வாட்ஸூம், 1963-ல் 72 கிலோ
வாட்ஸூம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
நான் இதைக் குறிப்பிடுவது, ஏன் அந்த நாடுகளின் அள
விற்கு இந்த நாடு வரவில்லை என்று கேட்பதற்காக அல்ல.
அமெரிக்காவில் ஒரு தனி மனிதனுக்கு ஆண்டு ஒன்றுக்கு
4,550 கிலோவாட்ஸ் கிடைக்கிறது. அதேபோன்று அடுத்த
ஆண்டே இந்த நாட்டில் இருப்பவர்களும் அந்த அளவைப்
பெற வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக அல்ல, ஏன் அந்த
நிலைக்கு நாம் போகவில்லை என்று கேட்பதற்காக அல்ல; எப்படிப்
பட்ட நிலையை நாம் எட்டிப் பிடிக்கவேண்டியவர்களாக இருக்
கிரும், நம் முன்னேற்றத்திற்கு அது மிக இன்றியமையாதது
என்று எடுத்துக் காண்பிப்பதற்காகத்தான் இதைக் கூறினேன்.
உற்பத்தியாகிற முறையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீர்
மின்சாரம் ஓரளவு எட்டிப் பிடிக்கப்பட்டாகிவிட்டது என்று
அறிக்கையில் கூறியிருப்பதைப் பார்க்கிரும். மின்சாரத்தை
நாம் மூன்று வித முறையில் உற்பத்தி செய்யவேண்டியவர்களாக
இருக்கிரும். நீர்விசை மூலம் மின்சாரம் பெறுவது, அனல்
விசை மூலம் மின்சாரம் பெறுவது, அணு விசை மூலம் மின்சாரம்
பெறுவது என்று இம்மூன்று முறையில் மின்சாரத்தைப் பெருக்க
வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் கூட
இதைத் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிருர். நீர்மின்சாரத்
தைப்பெற குந்தா, மேட்டூர் சுரங்கக் கால்வாய் போன்ற திட்டங்
களைக்கொண்டு வருவதன் மூலம் மின்சாரத்தை பெருக்குவதற்
கான முயற்சி எடுத்து இருப்பதைப் பாராட்டுகிரும். சிறு சிறு
நீர்வீழ்ச்சிகளில் சிறிய அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்து
சிறு சிறு தொழிற்சாலைகளுக்கு, சிறிய சிற்றூர்களுக்கு
பயன்படும் வகையில் முயற்சிகளை மேற்கொள்வது பரிசிலனை செய்
யப்பட்டு வருகிறது என்று தெரிவித்திருக்கிருர்கள். அந்த
வாய்ப்புக் கூறுகளைப் பயன்படுத்திச் சிறு சிறு தொழில்கள்
இயங்கவும், சிற்றூர்களுக்கு அது பயன்படவும் தக்க முயற்சி
எடுப்பது வரவேற்கத்தக்கதே. தமிழகத்தைப் பொறுத்தவரை
யிலே, நீர் விசையின் மூலம் மின்சாரத்தைப் பெருக்குவதற்கான
வழிவகை இல்லை என்ருலும் கூட, தென் மண்டலத்தைப் பொறுத்த
வரையில் அந்த வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றன என்ற கருத்தைப்
பல வல்லுணர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.
அந்த வாய்ப்புக்கூறுகளை தென் மண்டலக் குழுவினர் அடிக்கடி
ஆராய்ந்து வருவதாகவும் செய்தித் தாள்களில் அவ்வப்பொழுது
செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. தென் மண்டலத்தைப்
பொறுத்த வரையிலே, தமிழக, ஆந்திர, கேரள, கருநாடகம்
ஆகிய நான்கு மாநிலங்களைப் பொறுத்த வரையிலே மின்சாரத்
தைப் பெருக்குவதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன.
ஆனல், தமிழகத்தைப் பொறுத்தவரையில் மட்டும் எடுத்துக்
கொண்டால் அந்த வாய்ப்புக் கூறுகள் ஏறத்தாழ அடியோடு



12th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அற்றுப் போய் விட்ட நிலைமை வந்துகொண்டிருக்கிறது. மேற்குத்
தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் நீர் ஏறத்தாழ 80 சத விகிதத்
திற்கு மேல் கேரளத்திற்குப் பயன்படாமல், கடலில் வீணுகப்
போய்ச் சேருகிறது என்று வல்லுணர்கள் தெரிவித்திருக்கிருர்கள்.
அந்த அளவிலே மொத்தமாகப் பார்க்கிறபொழுது, அந்த நீரைக்
கிழக்குப் பக்கத்திற்குத் திருப்பி விடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி
ஞல் அந்த நீர், நீர்ப்பாசனத்திற்கு பயன்படுவதற்கு வழிவகைகள்
ஏற்படும் என்பதுமட்டும் அல்லாமல், மின்சாரத்தைப் பெருக்கிக்
கொள்வதற்கு அவர்கள் பகுதி தண்ணீரை நமக்குத் தந்து, அவர்
களுக்கு அதற்கு ஈடாக நாம் மின்சாரம் வழங்கும் முயற்சியும்
ஏற்படக்கூடும்.

அமைச்சர் அவர்கள் ஹொகனக்கல் திட்டத்தை நிறைவேற்று
வதன் மூலம் தமிழகத்திற்கு அதிகமாக மின்சாரம் கிடைப்பதற்கு
வழிவகைகள் ஏற்படும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.
அகில இந்திய தேசீயத்தின் காரணமாக வற்புறுத்தப்படுகிற
ஒருமைப்பாட்டை உணவில், உடையில், மொழியில், இசையில்,
நாடகத்தில், கலையில், பண்பாட்டில், நாகரிகத்தில், பழக்கவழக்கத்
தில் ஏற்படுத்த முயற்சி செய்வதைவிட, ஒரு மாநிலத்திற்கு மற்
ருெரு மாநிலம் விட்டுக்கொடுப்பதன் மூலம், கொடுத்து வாங்கு
வதன் மூலம் ஏற்படுகின்ற நன்மையைப் பெறுவதற்காகப் பயன்
படுத்திஞல், அது மிக நன்ருக இருக்கக்கூடும். இந்த நான்கு
மாநிலங்களும் நீரை பகிர்ந்து கொள்கின்ற அளவிலே எத்தகைய
முடிவுகளை தென் மண்டலக் குழுவினர் எடுத்திருக்கிருர்கள் என்று
நமக்கு திட்டவட்டமாகத் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள்
தமது இறுதி உரையிலே. திட்டவட்டமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற
வாய்ப்புக் கூறுகள் எவை என்பதையும், ஹொகனக்கல் திட்டம்
எந்த அளவுக்கு நமக்கு பயன்படுகிற அளவுக்கு அமையக்
கூடும், அது எந்த அளவுக்கு வரும் என்பதையும் விளக்குவார்கள்
என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நீர் மின்சாரத்தின் மூலமாக மின்சாரத்தை பெருக்கிக் கொள்
கிற வாய்ப்புகள் அடியோடு கிடையாது என்பதுமட்டுமல்லாமல்,
மற்றும் அனல் மின்சாரத்தைப் பெருக்குவதற்கு வழிவகைகளைப்
பெருக்க இருக்கிரும். நீர் மின்சாரம் கிடைக்கிற அளவை
எடுத்துச் சொல்லும்பொழுது, 1960-61-ல் 80.32 சத விகிதம் நீர்
மின்சாரமும், 18.6 சதவிகிதம் அனல் மின்சாரமும் 2.18 சதவிகிதம்
பிறவகையிலும், கிடைக்கின்ற அளவுக்கு தமிழகம் மின்சாரத்
தைப் பெற்றிருந்தது என்று கூறப்பட்டிருக்கிறது. அனல் மின்சா
ரத்தை பெருக்குவதற்கான வழிமுறைகளைக் கையாண்டால்தான்,
கோடைகாலத்தில் ஏற்படுகின்ற தட்டுப்பாட்டை நீக்க வழி ஏற்
படும். கோடை காலத்தில் மின்சாரத் தட்டு ஏற்படுவதாகவும்,
அதன் காரணமாக பல்வேறு தொழிற்சாலைகள் வேலையின்றி மூடப்
படுவதாகவும், அதன் காரணமாக தொழிலாளர்கள் வேலையின்றி
தவிக்கும் நிலை ஆண்டு தோறும் ஏற்படுகின்ற ஒரு நிகழ்ச்சியாகி
விட்டது. ஆண்டு தோறும் இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடை
பெற்றுக்கொண்டிருக்கிறது. சில ஆண்டுகளில் அத்தகைய
[illegible] ஏற்படாமல் போனாலும், [illegible] பெரும்பாலான

ஆண்டுகளில் அடிக்கடி அத்தகைய நிலைமை ஏற்படுகிறது. பெரும்
பாலான ஆண்டுகளில் அடிக்கடி ஏற்படும் தட்டுப் பாட்டின் காரண
மாக மின்சார வெட்டு ஏற்படுகிறது; மின்சார வெட்டு ஏற்படுவதன்
காரணமாகச் சில தொழிற்சாலைகள் இயங்காமல் நின்று விடுகின்
றன; அதன் காரணமாக தொழிலாளர்கள் 15 நாட்களுக்கு, ஒரு
மாத காலத்திற்கு, இரண்டு மாத காலத்திற்குக் கூட, வேலையின்றி
தவிக்கும் நிலைமைகள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு சமயத்தில்
மழை எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்படுகின்ற மழை
பெய்யாததன் காரணமாக நீர்த்தேக்கங்களில் நீர் நிரம்ப
வில்லை. ஆகவே மின்சார விசையை இயக்குவதற்கு
வழி ஏற்படவில்லை என்று காரணம் சொல்லப்படுகிறது.
இந்த ஆண்டில்தான் அதை அறிந்து, அந்த நிலை
மையை உணர்ந்து அடுத்த ஆண்டில் தக்க வழி ஏற்படுத்துவ
தாக அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் சொல்லி
யிருக்கிறார்கள். இதுவரையில் நீர்த் தேக்கங்களில் ஜூன் திங்கள்
மூன்றும் வாரம் வரையில்தான், தேக்கிய தண்ணீரைப் பயன்
படுத்த முடிந்தது. ஆனால் இனிமேல் ஜூலைத் திங்கள் முதல் வாரம்
வரையில் அத்தண்ணீரைப் பயன்படுத்துவது சாத்தியமாக
இருக்க வேண்டும், அத்தகைய முறையில் அதை நீட்டுவதன்
மூலமாகத் தட்டு ஏற்படாத அளவுக்கு வழிவகை மேற்கொள்ளப்
படுவது பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை
அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.
அந்த முறையில் ஆண்டு தோறும் இம்மாதிரி தட்டுப்பாடு வராத
அளவுக்குத் தக்க முறைகளைக் கையாளவேண்டும். அதற்கான
முயற்சிகள் எடுப்பதன் மூலம், அடுத்த ஆண்டில் தட்டு ஏற்படாத
அளவுக்கு வழிவகை செய்ய அரசினர் தீவிர முயற்சியை மேற்
கொள்ள வேண்டும்.

நிலக்கரி மூலம் கிடைக்கிற அனல் மின்சாரத்தைப் பெருக்கு
வதற்கான வழிவகைகளில் நமக்கு ஏற்பட்டிருக்கிற வாய்ப்புக்
களைப் பொறுத்தவரையில், நெய்வேலியில் இருக்கிற பழுப்பு நிலக்
கரியை பயன்படுத்துவதன் மூலம், அனல் மின்சாரத்தை உற்பத்தி
செய்யக்கூடிய கூறுபாடுகள் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன.
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் அதன் உற்பத்தித்
திறன் 600 மெகவாட். அதை 1,000 மெகாவாட்டாக மாற்றுகின்ற
முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று இந்திய அரசினரை
இந்த அரசு கேட்டுக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறி
யுள்ளார்கள். அனல் மின்சாரத்தைப் பெருக்குவதற்கான பெரும்
வாய்ப்புக்கு நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி பெருந்
துணையாக இருந்துவருவதாகவும், அப்படி நெய்வேலியில் பழுப்பு
நிலக்கரி 200 கோடி டன்களுக்கு மேலாக கிடைக்கக்கூடும் என்றும்
ஆராய்ச்சியாளர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இனிமேல் நீர்
மின்சாரத்தைப் பெருக்குவதற்கு தமிழகத்தைப் பொறுத்தவரை
யிலும் எந்த வழியும் இல்லாத காரணத்தினால், அனல் மின்சாரத்
தைப் பெருக்குவதற்கான முயற்சியில் முழு கவனத்தையும்
செலுத்தவேண்டும். அதற்கான நிலைமைகளும், நிலக்கரியும்
இல்லை என்ற குறைபாடுகள் இருந்து வந்தன. இப்பொழுது நிலக்
கரி ஏராளமான அளவிலே, நெய்வேலியில் கிடைக்க வாய்ப்பு ஏற்





பட்டிருக்கிறது. அப்படி எந்த அளவுக்குப் பெருக்கி அனல் மின்
சாரத்தை நீர்மின்சாரத்தின் சம நிலைக்குக் கொண்டுவரமுடியுமோ
அந்த அளவுக்கு அதிகமாகப் பெருக்குவதற்கு வழிகளைப் பெற
வேண்டும், பெற வேண்டிய கட்டாயத்தில் அரசினர் இருக்கிறார்
கள்.

மேலும், மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பொறுப்பு மாநில
அரசாங்கத்திற்கு விடப்பட்டிருக்கிறது. அந்த முறையில் ஒவ்
வொரு மாநிலமும் தனக்குத் தேவையான அளவு மின்சாரத்தை
உற்பத்தியாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. தமிழகத்தில்
அந்தப் பொறுப்பை தமிழக மின்சாரக் கழகம் ஏற்றுக்கொண்
டிருக்கிறது. கடன் தொகைக்குரிய வட்டியை தமிழக அரசின
ருக்கு செலுத்திவிட்டு, மின்சாரத்தை உற்பத்தியாக்கி, வழங்கு
கின்ற முழுப்பொறுப்பையும் தமிழக மின்சாரக் குழுவே ஏற்றுக்
கொண்டிருக்கிறது. நெய்வேலியில் அனல் மின்சாரத்தைப்
பொறுத்தவரையில் முழுப் பொறுப்பையும், மின்சாரத்தை உற்
பத்தியாக்கி வழங்குகின்ற முழுப் பொறுப்பையும் தமிழக மின்
சாரக் குழு ஏற்றுக்கொண்டு, தமிழக அரசினருக்கு அது வட்டித்
தொகையை எப்படிச் செலுத்தி வருகின்றதோ, அதே முறையில்
இந்திய சர்க்கார் கொடுத்திருக்கிற மூலதனத்திற்குரிய வட்டியை
அவர்களுக்குச் செலுத்தி அதனை ஏற்று நடத்துகின்ற பொறுப்பை
தமிழக மின்சாரக்குழு ஏற்றுக்கொள்ளலாம். ஏனென்றால், மின்
சாரத்தை உற்பத்தியாக்கி வழங்கும் முழுப் பொறுப்பும் மாநில
அரசுக்கு விடப்பட்டிருக்கிறது. இது மத்திய சர்க்கார் ஏற்று
நடத்துகிற ஒரு துறை அல்ல. எனவேதான் எந்த அளவுக்கு
மத்திய அரசாங்கம் நெய்வேலியில் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்
கிறதோ அந்தப் பொறுப்பை மாற்றித், தமிழக மின்சாரக் குழு
வினருக்குத் தருகிற நிலைமை இருந்தால், அனல் மின்சாரத்தை
மிக நல்ல முறையில், தமிழகத்தைப் பொறுத்த வரையில், பயன்
படுத்துவதற்கு வழிவகைகள் ஏற்படக்கூடும். மேலும், அங்கே விலை
கொடுத்து வாங்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். யூனிட்டு
க்கு 7 காசு என்று சொல்லப்படுகிறது, அது எந்த அளவுக்கு
உண்மை என்பதை அமைச்சர் அவர்கள் இறுதி உரையில் விளக்கு
வார் என்று எதிர்பார்க்கிறேன். நாம் மின்சாரத்தை யூனிட் 4
காசுகள் என்று விற்கிறோம்; தமிழக மின்சாரக் குழுவினருக்கும்
அதே விலைக்கு நெய்வேலி மின்சாரத்தைப் பெறவேண்டும்; இன்
னும் விலை நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறது, என்றும்
சொல்லப்படுகிறது. மற்றவர்களுக்கு எந்த அளவுக்கு நாம்
கொடுக்கிறோமோ அந்த அளவுக்கோ, அல்லது அதைவிடக் குறை
வாக கிடைக்கக்கூடிய அளவுக்கோ மத்திய அரசிடமிருந்து பெறு
வதற்கு தமிழக அரசு முயற்சி செய்யவேண்டும்.

அடுத்து, சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சாரத்தை உரு
வாக்கக்கூடிய முயற்சியை மேலை நாடுகளில் சில நாடுகள் மேற்
கொண்டிருக்கின்றன. அந்தக் கருத்து இங்கேயும் பரப்பப்பட்டு
வருகிறது. அந்த முறையின் மூலம் மின்சாரத்தைப் பெருக்கு
வதற்கு வழிவகை இருக்குமா என்பதை அரசினர் முயற்சி செய்ய
லாம், முயற்சி செய்தல் வேண்டும். உதய சூரியனைப் பயன்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [12th August 1963

படுத்தி, உதய சூரியனில் உள்ள கோடுகளின் அளவை கணக்கிட்டுப் பார்ப்பதைவிட, கதிர்கள் எந்த அளவுக்குப் பயன்படுமோ அந்த அளவுக்கு அவைகளைப் பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டால் அது அதிக பலன் தரும் என்று அமைச்சர் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அணுசக்தியின் மூலம் மின்சாரத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அணுசக்தியைச் சேகரிப்பதற்கான அடிப்படை மூலப் பொருளான யுரேனியம், குமரி மாவட்டத்தில் கடலோரத்தில் ஏராளமாக இருக்கிறது. பிற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்ற அளவுக்கு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, அதற்கு வேண்டிய மூலப் பொருள் நம்முடைய தமிழகத்தில் கிடைக்கிறது. முக்கியமாக யுரேனியத்தைப் பயன்படுத்தி, அணுசக்தியின் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய முயற்சியை செங்கல்பட்டு மாவட்டத்தில் கல்பாக்கத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது எந்த அளவில் இருக்கிறது என்று தெரியவில்லை. அணு மின்சாரத் திட்டங்களை மேற்கொள்வதற்கு, பம்பாய் மாநிலத்தைச் சேர்ந்த தாராபூர் அணு மின்சார நிலையமும், ராஜஸ்தானத்தைச் சேர்ந்த ராணு பிரதாப் சாகர் என்னுமிடத்தில் ஒரு நிலையமும், நிறுவுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது நிலையம் கல்பாக்கத்தில் வந்து விடும் என்று நாம் நினைத்தோம். ஆனால், அமைச்சர் அறிக்கையில், "நம் நாட்டில் மூன்றாவது அணு மின்சார நிலையம் நிறுவுவது பற்றி ஒரு முடிவு எடுத்தால், அந்த நிலையம் செங்கற்பட்டு மாவட்டம், மகாபலிபுரத்திற்கு அருகில் கல்பாக்கத்தில் நிறுவப்படும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இதுவரை முடிவு எடுக்கப்பட்டு விட்டதாகவும், அது துவக்கத்தான் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது என்றும் கருதினோம். ஆனால், மூன்றாவது திட்டம் பற்றி "முடிவு எடுத்தால்" என்று ஐயப்பாட்டிற்கு அறிகுறியாக இந்த அறிக்கையும் அமைந்திருக்கிறது. உள்ளபடியே, முடிவு எடுக்கப்பட்டதா? அல்லது இனிமேல் எடுக்கப்படுமா? எடுக்கப்பட்டால், அது கல்பாக்கத்தில் வந்து சேருமா? அல்லது வேறு பகுதிக்குப் போகும் அளவுக்கு ஆபத்து இருக்குமா? என்று அமைச்சர் இறுதி உரையில் விளக்கம் தருவார்கள் என்று நம்புகிறேன். தாராபூர் நிலையம், டிசைன், கட்டட நிர்மாணம் அத்தனைக்கும் அன்னியச் செலாவணி இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ராணு பிரதாப் சாகர் நிலையம் பொறுத்தவரை, டிசைன் கன்னடா நாட்டினர் ஆக்கித் தருவதாகவும், கட்டட வேலையை நம் அரசு ஏற்றுக் கொள்வதாகவும் சொல்லப்படுகிறது. கல்பாக்கத்தைப் பொறுத்த வரை, டிசைன், கட்டடம் அத்தனையையும் நாமே ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் நிலைமைகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. பிரிட்டனைச் சேர்ந்த அணுசக்தி ஆராய்ச்சித் துறை சீப் எஞ்ஜினியர், ஆர். டி. வங்கன் என்பவர், ஏப்ரல் முதல் தேதி சென்னைக்கு வந்து அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்து, பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். அவர் பிரிட்டனில் இருக்கிற புதுமையான, கடற்கரையில் நிறைவேற்றப்பட்



12th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

டிருக்கிற, டிசைன் போல இந்த டிசைன் அமையவில்லை என்று "பர்க்லி" என்ற பத்திரிகையில் அறிக்கை விட்டு இருக்கிறார்கள். சற்று அதையும் ஆராய்ந்து பார்த்து, அந்த டிசைன் பொறுத்த வரையிலும், மிகப் பெரிய பலன் தரக்கூடிய வகையில் உருவாக்க அமைச்சரவை மேற்கொண்டால் நல்லது என்று கருதுகிறேன். இப்பொழுது இருக்கிற, நாம் போட்டு இருக்கின்ற முறையில் இருக்கின்ற குறைபாடுகள் என்ன, புதுமையான டிசைன் மூலமாக ஏற்படக்கூடிய பலன்கள் என்ன, தடைகள் என்ன என்று ஆராய்ந்து சீர் படுத்த முயலுதல் வேண்டும். ஆகவே, மின்சாரத் தேவை அதிகமாக இருக்கிறது என்பதை நாம் உணருகிறோம். பல்வேறு உறுப்பினர்கள் கருத்திற்கிணங்க, மின்சாரத் தேவை அதிகமாக இருக்கிறது என்பதை உணருகிறோம். அந்தத் தேவையை நிறைவேற்றும் அளவுக்கு நாம் கொடுக்கும் அளவு போதுமானதாக இல்லை என்ற காரணத்தால், நல்லமுறைகள் அத்தனையையும் கடைபிடித்து, நிறைவேற்றுவதற்கான முழு வாய்ப்புகளையும், பயன்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். தனியார் மின்சார உற்பத்தி செய்து, வழங்கி வரும் நிறுவனங்களை அரசினரே எடுத்து நடத்தலாமே என்ற யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனியார் நிறுவனங்கள் மூலமாக மக்கள் எதிர் பார்க்கும் பலன்கள் கிடைக்கவில்லை என்பது உண்மையாக இருக்குமானால், அரசினரே அந்த நிறுவனங்களை ஏற்று, அந்தக் குறைபாடுகளைப் போக்கும் அளவுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு முழுப்பொறுப்பையும் அரசினரே ஏற்றுக்கொள்ளவேண்டும். மேலும், கோவை போன்ற பெரும் பெரும் தொழிற்சாலைகள் உள்ள இடங்களிலே தொழிலதிபர்கள் தாங்களே தங்களுக்குத் தேவையான மின்சாரத்தை அனல் மின்சாரத்தின் மூலமாக பெருக்கிக் கொள்ளுவதற்கும், அனுமதி கொடுக்கிறோம் என்ற யோசனையைக் குறிப்பிட்டதாகவும் தெரிகிறது. அவர்கள் தங்கள் தேவை அளவுக்கு மின்சாரத்தை அனல் மின்சாரம் மூலம் பெருக்கிக்கொண்டு, தங்கள் தேவைக்குப் போக பாக்கியைத் தமிழ் நாட்டு மின்சாரக் குழுவினர் மூலம் வழங்க வழி இருக்குமேயானால் அது வரவேற்கத் தக்க ஒன்று. தனியார் இடத்தில் தொழிற்சாலையை விட்டு விட்டு, லாப நோக்கோடு, வர்த்தக முறையிலே இருக்கிறதை மாற்றி, அரசினர் ஏற்றுக் கொள்ளவேண்டும். அரசினர் உற்பத்தி செய்யும் மின்சாரத்திலிருந்து வாங்கிக்கொள்ளாமல், தங்களுடைய தேவையைத் தாங்களே நிறைவேற்றிக்கொண்டு, அதற்கும் மேல் கிடைக்கக் கூடிய மின்சாரத்தை தமிழ் நாட்டு மின்சாரக் குழுவினருக்கு ஒப்படைத்து, அவர்கள் மூலம் வினியோகம் செய்கிற வாய்ப்புக் கூறுகள் ஏற்படுமேயானால், அதை நிறைவேற்ற அரசினர் முன் வருவது ஓரளவுக்கு மின்சாரத்தைப் பெருக்க வழிவகை ஏற்படுத்தும்.

மேலும், சென்னை மாநகரத்தைப் பொருத்தவரை, மின்சார கட்டணத்தை வசூலிக்க, பல்வேறு இடங்களில் நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நிலையங்கள் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாக, திருவல்லிக்கேணி, பெல்ஸ் ரோடில் இருந்த வசூலிக்கும் நிலையம்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [12th August 1963

இப்பொழுது ராயப்பேட்டை பக்கத்துக்கு மாற்றப்பட்டு, அந்த நிலையத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வர்த்தக துறையில் ஈடுபட்டிருப்பவர்களும், வீடுகளில் இருப்பவர்களும் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். அவ்வப்பொழுது கட்டணங்களைச் செலுத்த பரவலாக நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். எண்ணிக்கையை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக்கமுடியுமோ, அவ்வளவுக்கு அதிகம் ஆக்க முயற்சி செய்யவேண்டும், மக்களுக்கு வாய்ப்புகள், வசதிகள் அதிகமாக ஏற்படுத்தப் படவேண்டும்; சிரமங்கள், கஷ்டங்கள் ஏற்படுவது தடுக்கப் படுவதற்கான நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மின்சாரத் துறையில் இருக்கும் தொழிலாளர்கள் பற்றியும், அவர்கள் குறைகள் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். மின்சார தொழிற்சாலை பெரியதாக இருப்பது மேட்டூரில் உள்ள தொழிற்சாலை என்று கூறுகிறார்கள். அங்கே, ஓ.எஸ்.எஸ். தொழிலாளிகள் 586; என்.எம்.ஆர். தொழிலாளிகள் 243 பேர்; காஷுவல் தொழிலாளிக்ள் 118 பேர் இருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது. இதிலே, என். எம். ஆர். தொழிலாளிகள் பெரும்பான்மையானவர்கள், ஏழு ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து பணியாற்றியவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஐந்து, ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய என்.எம்.ஆர். தொழிலாளிகளை, ஓ.எஸ்.எஸ். தொழிலாளிகளாக மாற்றுவதன் மூலம், அவர்கள் சிலபல சலுகைகள் அடைகிறார்கள். வேலைக்கான உறுதி வருவது, வேலை உத்தரவாதம் ஏற்படுவது, அவர்களுக்கு வாழ்க்கையில் அச்சம் ஏற்படுவதைத் தடுப்பது, இவை அரசினரின் பொறுப்பு ஆகும். ஆறு, ஏழு, எட்டு ஆண்டுகள் வேலை செய்தவர்கள், கூடுதலான வாய்ப்புகள் ஏற்படக்கூடும் என்று கருதுகிறார்கள். மேலும், மின்சாரத் துறை வளரும் துறை ஆகும். வேலை வாய்ப்புகள் அதிகமாக வளரக் கூடும். என்.எம்.ஆர். தொழிலாளிகள் ஓ.எஸ்.எஸ். தொழிலாளிகளாக மாற்றிக் கொள்வதனால், எத்தகைய சிரமமும் தங்களுக்கு எதிர் காலத்தில் இராது என்று கருதுகிறார்கள். அதே போல, மூன்று ஆண்டுகளுக்கும் மேற்பட்டு, காஷுவல் லேபர் என்று வைக்கப்படுகிறார்கள். அவர்களையும், என்.எம்.ஆர். தொழிலாளிகளாக மாற்றினால், அவர்களும் சிலபல வசதிகளைப் பெற்று, 5, 6 ஆண்டுகள் கழித்து, அவர்கள் ஓ.எஸ்.எஸ். தொழிலாளிகளாக மாற்றப் படுவதற்கான வசதியும் ஏற்படும். என்.எம். ஆர். தொழிலாளிகளாக மாற்றப்படுவதன் காரணமாக அவர்களும் ஓ.எஸ்.எஸ். தொழிலாளிகளாக மாற்றப் பட வழிஏற்படும். அதற்கான வாய்ப்பையும் அவர்களுக்கு மின்சாரக் குழுவினர் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சாலையில் ஏற்பட்டிருக்கும் காலி இடங்களுக்கு, அடுத்த நிலையில் இருப்பவர்களை அந்த வேலையில் அமர்த்தாமல் இருக்கிற போக்கு இருப்பதாகவும் கூறப்பட்டது. ஏறத்தாழ 61 இடங்கள் காலியாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட இடங்களில் அடுத்த நிலையில் இருப்பவர்களைக் கொண்டு நிரப்புவதன் மூலம் சில பல தொழிலாளிகளுக்கு, நிரந்தர வேலை கிடைக்கும் நிலை ஏற்படக்கூடும்.



12th August 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அடுத்து என்.எம்.ஆர். தொழிலாளிகளுக்கு 1—1—1962 முதல் சம்பள உயர்வு 20 காசுகள் அதிகமாகத் தருவது என்று முடிவு செய்யப்பட்டதாகவும், அத்தகைய தொகை அவர்களுக்கு தரப் படாமல் இருப்பதாகவும் குறை சொல்லப்படுகிறது. இந்தக் குறையை நீக்க அரசினரும், மின்சார குழுவினரும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இருக்கிற மின்சார தொழிற் சாலைகளில், மிகப் பெரிதானது, மேட்டூர் தொழிற்சாலை. அங்கே நல்ல பயிற்சி பெற்றவர்களும், கைதேர்ந்த வேலைக்காரர்களும், பல இயந்திரங்களும் இருந்தும், சிலபல வேலைகள் தனியார் கம்பெனியார்களுக்குக் கொடுக்கப்பட்டு, நிறைவேற்றப் படுகின்றன என்று சொல்லப்படுகிறது. அதை நன்றாக ஆராய்ந்து, எந்த அளவுக்கு வேலைகள் முழுவதையும் இருக்கும் இயந்திரங்களைக் கொண்டு செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்து, முடியாத அளவில் மட்டும் தனியார் கம்பெனிக்குக் கொடுக்க முயலலாமே தவிர; மற்றபடி வாய்ப்பும் வசதியும் இருந்தால், அவைகளைப் பயன்படுத்த மின்சாரக் கழகத்தினர் முன்வரவேண்டும்.

இறுதியாக, தணிக்கையாளர் கொடுத்திருக்கும் இரண்டு கருத்துக்களுக்கும், அமைச்சர் அதற்கான விளக்கத்தை எடுத்துக் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அக்கௌண்டண்ட் ஜனரல் அறிக்கையில்,

All the assets created out of revenue by Government prior to the formation of the board were transferred to the Board with effect from 1st July 1957. The value of such assets has yet to be assessed and it is yet to be decided whether the transfer should be treated as a gift or a loan. Pending a final decision by the Government these assets have not been exhibited in the Balance Sheet.

என்று தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது 1-00 p.m. பற்றிய நிலைமையும் விளக்கமும் என்ன என்று கனம் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். இறுதியில்,

The total energy generated and purchased by the Board during 1957-58 amounted to 1,043 million units while 860.2 million units (i.e., 17.5 per were sold. There was thus a loss of 182.8 million units transmission and distribution. cent) valued at Rs. 155.56 lakhs during The Board has yet to fix the permissible limit for such losses.

அக்கௌண்டண்ட்-ஜனரல் அவர்கள் தன் தணிக்கை என்றும் அக்கௌண்டண்ட்-ஜனரல் அவர்கள் இது பற்றிய நிலைமையையும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இது பற்றிய நிலைமையையும் விளக்கத்தையும் தரவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மின்சார உற்பத்தியைப் பெருக்கும் அளவில் அதிகமான அளவு இந்த மாநிலம் ஈடுபட்டிருந்தாலும், வேறு பல வழிகளில் செலவினங்களை மத்திய அரசினர்

ஏற்றுக்கொள்ளும்போது, புதிதாக அணைக்கட்டுகள் கட்டுதவற்கு ஆறுகள் வடக்கே தான் ஓடுகின்றன, அதனால் அங்கேதான் அதிகம் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று சொல்லுகிற நேரத்தில், இந்த மாநிலத்தின் தேவையை நிறைவேற்றுகிற அளவுக்கு அனல் மின்சாரத் திட்டத்தையும், அணு மின்சாரத் திட்டத்தையும் விரைவில் நிறைவேற்றி இந்த மாநிலத்தின் தேவையைப் பெரும் அளவுக்கு நிறைவேற்றும் முழு முயற்சியை அரசினரும், தமிழ்நாட்டு மின்சார நிறுவனத்தாரும் மேற்கொள்ள வேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்ட கனம் அங்கத்தினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் தங்கள் பகுதியில் உள்ள குறைபாடுகள் எல்லாவற்றையும் அவர்கள் எடுத்துச் சொல்லுவதன் மூலமாக மின்சார போர்டின் கவனத்தை அவர்கள் திருப்பியும், இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதையும் அவர்கள் வற்புறுத்திக் கூறினார்கள்.

முதலில் பொதுவாகச் சில விஷயங்களைப் பற்றிக் கூறி விட்டு, பிறகு தனித் தனியாகச் சொல்லப்பட்ட சில கருத்துக்களுக்கு என்னுடைய பதிலைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். எல்லா அங்கத்தினர்களும் வற்புறுத்திச் சொல்லியது தமிழ் நாட்டிலே மின்சாரத்திலே பற்றாக்குறை இருக்கிறது என்பது. ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலே மின்சார வெட்டு வருகிறது, அதைத் தவிர்ப்பதற்கு முடியவில்லை, இந்தக் குறைபாடு நீங்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் குறைபாடு நீங்கவேண்டுமென்பதற்காகத் தான் பல திட்டங்கள் போட்டிருக்கிறோம். எல்லாத் திட்டங்களைப் பற்றியும் விவரமாக அறிக்கையிலே நான் கொடுத்திருக்கிறேன். ஆனால் இந்தத் திட்டங்களையெல்லாம் சாதாரணமாக ஏதோ ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் போல ஒரு ஆண்டில் நிறைவேற்ற முடியாது. ஒரு மின்சாரத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் குறைந்தது மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் ஆகும். முதலில் இன்வெஸ்ட்டிகேஷன் நடக்க வேண்டியிருக்கிறது. இன்வெஸ்ட்டிகேஷன் செய்த பிறகு கட்டுபடியாகுமா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு யந்திரங்கள் அயல் நாடுகளிலிருந்து வர வேண்டியிருக்கிறது. ஆகையால் எவ்வளவு வேகமாகத் திட்டங்கள் போட்டாலும் நிறைவேற்றுவதற்கு ஓரளவு கால தாமதம் ஏற்படத்தான் செய்யும். அதைத் தவிர்க்க முடியாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் அந்த விதமான காலதாமதம் ஏற்படுகிற இடைக் காலத்தில் நம் தேவை அதிகரிக்காமலிருந்தால் நம் திட்டங்கள் பூர்த்தியாகும்போது நமக்கு வேண்டிய அளவு உற்பத்தி செய்து விட்டோம் என்று சொல்ல முடியும். ஆனால் இடைக் காலத்தில் தேவைகள் வருஷம் ஒன்றுக்கு ஏறக்குறைய 20 சத விகிதம் அளவில் வளர்ந்துகொண்டிருக்கிறது. தேவை வளருகிறது என்று சொன்னால் என்ன அர்த்தம்? புதிய தொழிற்சாலைகள் வரு-





கின்றன. அதனால் அவைகளுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டியிருக்கிறது. புதிதாகப் பல கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கிறோம்; அதனால் தேவை அதிகரிக்கிறது. புதிதாக விவசாயிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கிறோம், பம்ப்செட்டுகள் கொடுக்கிறோம்; நகரங்களுக்கு எல்லாவற்றுக்கும் மின்சார சப்ளை செய்கிறோம். இதன் மூலமாகத் தேவை வெகு வேகமாக அதிகரிக்கிற காரணத்தினால், எவ்வளவு திட்டங்கள் போட்டாலும் அந்தத் திட்டத்தை விட தேவை நம் ராஜ்யத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற நிலைமையை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதைப் பற்றி எனக்கு வருத்தம் இல்லை. இதைத் தான் பெருமையாக தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு அறிகுறி என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக எந்த ராஜ்யத்திலும் 250 மெகவாட்டிலிருந்து 550 மெகவாட் அளவுக்கு, இரண்டு மடங்குக்கு மேல் ஒரு திட்ட காலத்தில் அதிகரிக்கவில்லை. இவ்வளவு அதிகரித்தும் பற்றாக்குறை இருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் 1,200 மெகவாட் அதிகரிக்கும் என்று சொன்னாலும் இறுதியில் உற்பத்தி செய்கிற 1,200 மெகவாட் போதாது. மேற்கொண்டு புதிதாகப் போட்டிருக்கக் கூடிய ஸ்கீம்களில் ஒன்றிரண்டை, உதாரணமாக மேட்டூர் டன்னல் ஸ்கீம், மூன்றாவது திட்ட இறுதியிலேயே முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதெல்லாம் வந்தால் கூட நமது தேவைகள் பூர்த்தியாகாது. மின் வெட்டைத் தவிர்க்க முடியும் என்று சொல்ல முடியாது. மின் வெட்டைத் தடுத்து விடவேண்டும், அது தான் நம் நாட்டின் லட்சியம், குறிக்கோள் என்று சொன்னால் அதற்குச் சுலபமாக ஒரு வழி இருக்கிறது. அதைத் செய்ய நாங்கள் தயாராயில்லை. சுலபமான வழி என்னவென்றால், யாராவது புதிதாகத் தொழில் ஆரம்பிக்க முன் வந்தால் மின்சாரம் கொடுக்க வழியில்லை என்று சொன்னால் லைசென்ஸ் கொடுக்கமாட்டார்கள். மின்சாரம் கிடைக்காது என்றால் லைசென்ஸ் கொடுக்க மாட்டார்கள். லைசென்ஸ் இல்லையென்றால் புதுத் தொழில்கள் வராது. அந்த முறையைக் கையாள இந்த சர்க்கார் தயாராயில்லை. பல ஆண்டுகளுக்குப் பின் வருகிற தொழில்களுக்குக் கூட இப்போதே திட்டமிட்டு அதற்கு மின்சாரம் கொடுக்க முடியுமா, முடியாதா என்று இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் சட்டப் பிரகாரம் லைசென்ஸ் வேண்டுமென்று மனுப் போடும்போது, அந்த நேரத்திலேயே எங்களால் கொடுக்க முடியும் என்று சொல்லி உத்திரவாதம் கொடுத்தால் தான் அவர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பார்கள். யார் மனுப் போட்டாலும் மின்சாரம் கொடுக்க முடியாது என்று ஒருவருக்கும் சொன்னது இல்லை. அதிர்ஷ்டவசமாக அந்த விதமாகச் சொல்லி கொடுக்காமல் இருந்ததும் இல்லை. மின்சாரம் கொடுக்கும் நேரம் வேறு வேறாக இருக்கலாம். பகலில் ஒரு வேளை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லலாம். இரவில் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லலாம். நிர்ப்பந்தமாக, கட்டாயத்தின் பேரில் கஷ்டமான நேரங்களில் உபயோகிக்கும்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால் தொழிற்சாலையைக் கட்டி முடித்து விட்டோம் என்று சொல்லி மின்சாரம் வேண்டுமென்று கேட்டபோது இல்லை என்று சொன்னது இடையாது. அது தான் தமிழ் நாட்டின் பெருமை என்று நான் நினைக்கிறேன். ஏதோ கிராமங்களுக்கு மின்சா-

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [12th August 1963

ரத்தை அதிகமாக விஸ்தரித்தது பெரிது அல்ல. பம்ப்செட்டு
களை அதிகரித்தது பெரிது அல்ல. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு
எவ்வளவு தேவை ஏற்படும் என்று கூடக் கணக்கிட்டுப் பார்க்கா
மல் யார் அனுமதி கேட்டாலும் அவர்களுக்குக் கூட தொழில்
வைக்க வேண்டிய மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொல்லி
அதே விதமாகக் கடந்த 5, 6 ஆண்டுகளில் அந்தந்தத் தொழில்கள்
உருவாகி வரும் காலத்தில் மின்சாரம் கொடுத்திருக்கிறோம்.
ஆகவே நம் வளர்ச்சி அதிகமாக இருக்கிற காரணத்தினால் இன்
னும் மின்சாரத் தட்டு இருக்கும் என்று தான் சொல்லவேண்டும்.
மின்சாரத்தட்டு போய்விடும் என்று எந்த நேரத்திலும் நான்
சொன்னதில்லை. மின்சாரத்தட்டு போய் விடும் என்ற நிலைக்கு
உலகத்திலே எந்த நாடும் வரவில்லை. இன்னும் வளர்ச்சி அடைந்த
நாடுகள், தலை விதம் 4,500 யூனிட்டுகள் உபயோகிக்கிற நாடுகள்
இருக்கிறதே அந்த நாடுகளில் கூட அவர்களுக்குப் பற்றாக்குறை
இருக்கிறது என்ற நிலைமை தான் இருக்கிறது. அமெரிக்கா
தேசத்தை எடுத்துக் கொண்டாலும் அப்படித் தான். எதற்காக
இங்கிலாந்தில் 7, 8 அணு யூனிட்டுகள் போடுகிறார்கள். புதிதாக
வளர்ச்சி அடையும் தொழில்களுக்கு இப்போது இருக்கும் திட்டங்
கள் போதாது என்ற காரணத்தினால் புதுப் புதுத் திட்டங்கள்
போடுகிறார்கள். புதிதாக அமெரிக்காவில் மின்சார நிலையங்கள்
அமைக்கிறார்கள் என்றால், புதிதாக வளர்ந்து வரும் தொழில்
களுக்கு இப்போது இருக்கும் மின்சாரம் போதவில்லை என்று தான்
அமைக்கிறார்கள். நம் ராஜ்யத்தில் வேகமாக வளர்ச்சி ஏற்பட்டு
வருகிற காரணத்தினால் இந்த நிலைமை இருக்கிறது. அந்த நிலை
மையைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை என்பதை மாத்
திரம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே சமயத்தில்
நம்மால் என்ன இயலுமோ அதையெல்லாம் செய்ய முயற்சி எடுத்
துக் கொண்டிருக்கிறோம். இத்தனை அங்கத்தினர்கள், இதிலே
பேசியவர்கள் வேறு ஏதாவது புதுத் திட்டம் இருக்கிறது, அதைச்
செய்ய முடியுமா என்று சொல்ல முடியவில்லை. ஒன்றிரண்டு
சொன்னவர்களுக்குப் பின்னால் பதில் சொல்லுகிறேன். உதாரண
மாக திருமதி பொன்னம்மாள் மஞ்சளாறு பற்றிச் சொன்னார்கள்.
அதையும் இன்வெஸ்டிகேஷன் செய்து பார்த்தோம். அதிலே
250 கிலோவாட் மின்சாரம் கிடைக்கும். லட்சக் கணக்கில் செலவு
செய்து 250 கிலோவாட் மின்சாரம் கிடைக்கக் கூடிய திட்டத்தை
எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? அதே மாதிரி அமராவதித்
திட்டம் பற்றிச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றி
யும் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறோம். கிலோவாட் ஒன்றுக்கு
2,500 ரூபாய் செலவு ஆகும். அப்போது யூனிட் காஸ்ட் 10 அல்
லது 15 நயா பைசா ஆகும். அந்த மின்சாரத்தை யாருக்குக்
கொடுப்பது, அதை யார் உபயோகிப்பார்கள் என்பதையெல்லாம்
பரிசீலனை செய்திருக்கிறோம். தமிழ் நாட்டில் இன்றைக்குப் பரி
சீலனை செய்யாத ஒரு திட்டம் பாக்கி இருக்கின்றது என்றும்
யாரும் சொல்ல முடியாது. சிறு சிறு திட்டங்கள் அத்தனையும் பரி
சீலனை செய்ய வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்பு தான்
முடிவு எடுத்தோம். முடிவெடுத்த நாலைந்து மாதங்களுக்குள்
மின்சார போர்டார் ஒவ்வொன்றுக்கும் திட்டம் தயாரித்துத் தந்
தார்கள். அவற்றில் எவற்றை எல்லாம் நிறைவேற்ற முடியுமோ



12th August 1963] [திரு ஆர். வெங்கட்டராமன்]

அவற்றை எல்லாம் நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம். இதில்
பேசிய பலர் பல அணைக் கட்டுகளைக் குறிப்பிட்டு இவற்றில் எல்
லாம் ஏன் 'டர்பைன்' களை வைக்கக் கூடாது, அதன் மூலம் மின்
சாரத்தை உற்பத்தி செய்யக் கூடாது என்றும் கேட்டார்கள். அவ்
விதம் பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. பாபநாசத்தில்
5 ஆயிரம் கிலோவாட்ஸ் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்
டிருக்கிறது. வைகையில் 10 ஆயிரம் கிலோவாட்ஸ் உற்பத்தி
செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. சுருளியாறு திட்டமும் இன்
வெஸ்டிகேஷன் நடந்திருக்கிறது. இவ்விதம் சிறு சிறு திட்டங்
களை எல்லாம் நன்கு பரிசீலனை செய்து திட்டங்களைத் தயாரிப்
பதற்கு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஏதா
வது புதிதாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டு
மென்று இருந்தால் அதையும் பரிசீலிக்க நாம் தயாராக
இருக்கிறோம். பொதுவாக மின்சாரத்தை இன்னும் அதிக
மாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லும்பொழுது லிக்
னைட் மூலமாகவும் நிலக்கரி மூலமாகவும் தான் உற்பத்தி செய்ய
வேண்டும். அப்படி உற்பத்தி செய்யும்பொழுது நமக்கு
உற்பத்திச் செலவு அதிகமாகும். அனல் மின்சாரத்தை
எடுத்துக்கொண்டால் இதற்கான நிலக்கரியை வெளி இடங்களில்
இருந்தும் நாம் வரவழைக்க வேண்டியிருக்கிறது. அதன் காரண
மாக உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கும். மின்சாரக் கட்ட
ணத்தை உயர்த்தவே கூடாது என்று மட்டும் நான் சொல்லிக்
கொண்டு மின்சாரத்தையும் உற்பத்தி செய்ய வேண்டுமென்று
சொன்னால் அது ஜால வித்தையின் மூலமாகத்தான் முடியும்.
இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் மூலம் செய்ய முடியாது. ஒரு
தொழிலை ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்காக எவ்வளவு செல
வாகும் என்று கணக்கிட்டு அதற்கான செலவை நாம் ஓரளவுக்கு
ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். செலவு விரயம் ஆகாமல்
பார்த்துக் கொள்ள வேண்டியது நம் கடமை. சிக்கனமாகச் செலவு
செய்ய வேண்டியதும் நம்முடைய பொறுப்புதான். சில தொழில்
களில் செலவு சிக்கனமாகச் செய்ய முடியும். சில தொழில்களில்
அதிகமான செலவு ஏற்படுகிறது. அந்த முறையில் பார்க்கும்
பொழுது அதிகமான அளவில் செலவு ஏற்படக்கூடிய ஒரு துறை
தான் அனல் மின்சார உற்பத்தியும். அனல் மின்சார உற்பத்
திக்குச் செலவு அதிகமாகும் என்ற காரணத்தினால் தான் இதற்
கான கட்டணத்தையும் நாம் ஓரளவுக்கு அதிகரிக்க வேண்டிய
நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்தக் கட்டண அதிகரிப்பை யார்
மீது போடுவது? தொழில்களின் மீது போடுவதா, வீடுகளில் மின்
சாரம் உபயோகிப்பவர்களின் (டொமஸ்டிக் கன்ஸ்யூமர்ஸ்) மீது
போடுவதா அல்லது நகரங்களில் உள்ள புதுத் துறைகளின் மீது
போடுவதா என்பது பின்பு முடிவு செய்ய வேண்டிய விஷயம்.
ஆனால், கட்டணத்தை உயர்த்தி ஆக வேண்டிய நிலைமை நிச்சய
மாக ஏற்படுகிறது. அனல் மின்சாரத்தை நாம் எந்தவிதத்திலும்
பெருக்கியே தீர வேண்டுமென்ற நிலைமையும் ஏற்படுகிறது. இதற்கு
செலவு அதிகமாகுமே என்று மட்டும் பார்த்துக் கொண்டு இருப்
பதில் பயனில்லை. நான் பழைய ரிகார்டுகளைப் பார்த்தபோது
பைகாரா மின்சாரம் தயாரிக்கும்போது ஒரு யூனிட் ஒரு நயா
பைசா செலவில் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அதைக்கூட

மிகவும் 'காஸ்ட்லி' பைகாரா ஸ்கீம் ஒரு பைத்தியக்கார ஸ்கீம் என்றெல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது ஒரு யூனிட் ஒரு நயாபைசா செலவில் தயாரித்தால் நாம் அதை எவ்வளவோ லாபம் என்று எண்ணுவோம். அந்த முறையில் இன்றைக்கு நாம் அதை லாபமாகவே எண்ணுகிறோம். இப்பொழுது நாம் 5 நயாபைசா, ஆறு நயாபைசா செலவில் மின்சாரத்தைத் தயாரித்தாலும் இப்பொழுது காஸ்ட்லி என்று சொன்னால் கூட ஐந்து, பத்து ஆண்டுகளுக்குப் பிறகு நிச்சயமாக இதுவும் மலிவாகத்தான் இருக்கும். இது வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். ஆரம்பக் காலத்தில் சில கஷ்டங்களை, சில அசௌகர்யங்களை நாம் ஏற்றுக் கொண்டாலும் பிற்காலத்தில் நமக்கு அது சாதகமாகவே முடியும். எந்த ஒரு ராஜ்யத்திலும் தொழில் முன்னேற்றம் ஏற்படும்பொழுது கட்டணங்கள் ஏறவே கூடாது. கட்டணங்கள் ஏறாமல் இருப்பதுதான் நமது லட்சியம் என்று நினைப்பது தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மற்ற ராஜ்யங்களுடன் இணைந்து மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்குப் பல திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். இரண்டு ராஜ்யங்கள் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டுமென்றால் இரண்டு தரப்பினரும் ஒத்துக் கொள்ள வேண்டும். அது தான் ஒப்பந்தம் ஆகும். நாம் மட்டும் நமது விருப்பத்தைத் தெரிவிப்பது நம்முடைய விருப்பம் மட்டும் தான் இருக்கும். பிற ராஜ்யங்களில் ஏற்படும் ஒப்பந்தங்களைப் பற்றி பேசும்போது சிறிது கவனமாகவே பேச வேண்டும், அதிலும் மிகவும் கண்காணிப்பாகவே இருக்க வேண்டும். நம்முடைய சட்ட சபையில் உள்ளவர்கள், 'அதைப் பகிர்ந்துக் கொண்டால் என்ன? இதில் அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்றெல்லாம் பேசும்பொழுது அந்த ராஜ்ய சட்டசபையில் உள்ளவர்களும் கோபமாக வேறு ஏதாவது பேசக்கூடும். ஆகவே இம்மாதிரிப் பட்ட விஷயங்களில் அரசாங்கத் தரப்பில் முழு விவரங்களையும் வெளியிடுவது சரியாக இராது. பேச்சு வார்த்தைகளிலுள்ள விவரங்களை, வெளியிடாமல் உயர் மட்டத்திலேயே பேச்சு வார்த்தைகளை நடத்தி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கின்ற முறையில் பேச்சுக்களை நடத்திப் பொதுவான முடிவுகளை எடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஒவ்வொரு ராஜ்யத்தில் உள்ளவர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல ஆரம்பித்து விட்டால் வீணை கோபத்தைத் தான் உண்டாக்கும். அதன் காரணமாக வீணை மனவருத்தம் தான் ஏற்படுமே தவிர, எந்தவிதமான ஒப்பந்தமும் ஏற்படாது. அந்த முறையில் ஹோகனேக்கல் திட்டமாக இருந்தாலும் சரி, கேரள ராஜ்யத்தோடு செய்யப்படுகின்ற திட்டமாக இருந்தாலும் சரி, அரசாங்க அளவில் முழு அறிக்கைகளையும் வெளியிடாமல் இருப்பது தான் நல்லது. இப்போது இருக்கக் கூடிய சூழ்நிலையில் மைசூர் அரசாங்கத்திலிருந்து ஹோகனேக்கல் திட்ட சம்பந்தமாக ஒரு புதிய திட்டத்தை வைத்திருக்கிறார்கள். நாம் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறோம். இந்த இரண்டு திட்டங்களைப்



பற்றியும் நிபுணர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். இவற்றில் எது லாபகரமாக இருக்கும், எதைச் சுலபமாகச் செய்யலாம், எது இயற்கை வசதி உள்ளதாக இருக்கும் என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்து நிபுணர்கள் முடிவைத் தெரிவிப்பார்கள். அதன் பின்னால் தான் திட்டத்தை நிறைவேற்ற முடியும். தலைவர்கள் மட்டும் பேசி விடுவதால் பிரயோசனம் இல்லை. தலைவர்கள் பேசி திட்டத்தை நடத்த வேண்டுமென்று மட்டும் தான் முடிவுசெய்ய முடியும். எந்த முறையில் செயல் படுத்த வேண்டும், எக்கனமிக் ஸ்கீமாக வருமா, என்பதை எல்லாம் நிபுணர்கள் தான் பரிசீலனை செய்வார்கள். இப்பொழுது அதற்கான சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கிறது ஏதோ அந்தத் திட்டம் போய் விட்டது என்று யாரும் நினைக்க வேண்டிய தேவையில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நெய்வேலித் திட்டத்தைப் பற்றி சில கருத்துக்களைச் சொன்னார்கள். இப்போதுள்ள அளவை விட இன்னும் மின்சாரத்தை அதிகரிக்க வேண்டும் என்று சொல்லும்போது இரண்டாவது சுரங்கம் ஒன்றை நெய்வேலியில் ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் இன்னும் ஆயிரம் மெகா வாட் மின்சாரம் கிடைக்கும். இப்போது கிடைக்கின்ற மைன்-கட்டிலிருந்து கார்பனைசிங்-பிரிக்கெட்டிங் திட்டத்திற்குத்தான் போதுமானதாக இருக்கும். இன்னும் ஒரு இரண்டாவது மைன்-கட் ஏற்படுத்தினால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். இதற்காக ஆயிரம் மெகா வாட் மின்சாரத்தை அதிகரிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர்களும் இதைப் பற்றிப் பரிசீலனை செய்து தெரிவிக்கும்படிக் கேட்டிருக்கிறார்கள்.

"நெய்வேலித் திட்டத்தை நாமே எடுத்துக் கொள்ளவேண்டும்" என்ற கருத்தைக் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு அது சரி என்று தோன்றவில்லை. காரணம் என்னவென்றால், இன்றைக்கு நெய்வேலியில் போட்டிருக்கின்ற முதல், மத்திய சர்க்கார் போட்டிருக்கும் முதல் ஆகும்.

நெய்வேலித் திட்டத்தை நாமே எடுத்துக் கொண்டால், தமிழகத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 300 கோடி ரூபாய் என்றால், இந்தச் செலவும் இதற்குள்ளாக வரும். ஆனால், இதை மத்திய சர்க்கார் செய்வார்களானால், 300 கோடி ரூபாயும் அதற்கு மேல் நெய்வேலியில் அவர்கள் செலவு செய்து உற்பத்தி செய்யும் மின்சாரமும் நமது மாநிலத்திற்குக் கிடைக்கும். இதை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். நெய்வேலித் திட்டத்தை ஏன் நமது மாநில சர்க்காரே மேற்கொள்ளவில்லை என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் 'திட்டத்திற்காக இவ்வளவு' என்று தொகை ஒதுக்கப்படுகிறது. அந்தவிதமாக ஒதுக்கப்படும் தொகையைப் பல்வேறு வழிகளிலே செலவழிப்பதற்கு நாம் திட்டம் வகுக்கிறோம். அதற்கு மேலும் அதிகமாகத் தொகை செலவழித்து, நமக்கு மின்சாரம் கிடைக்கிறது. அதை நாம் எடுத்துக்கொள்ளும் உரிமை எப்பொழு

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [12th August 1963

வேண்டுமானாலும் இருக்கிறது. (திரு. இரா. நெடுஞ்செழியன்—குறுக்கீடு.) 'காபிடல்' நம்முடைய கணக்கிலே வந்துவிடும். நம்முடைய கணக்கில் வந்துவிட்டது என்றால், 'நான்காவது திட்டமாகவே வைத்துக்கொள்ளுங்கள்' என்று அவர்கள் சொல்லிவிடக் கூடும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்திற்கு 600 கோடி ரூபாய் ஒதுக்குவதாக வைத்துக் கொள்ளுவோம். 300 கோடி இப்பொழுது இருக்கிறது. அதை நான்காவது திட்டத்தில் 600 கோடி என்பதாக வைத்துக் கொள்ளுவோம்—அப்பொழுது என்ன ஆகும்? நெய்வேலித் திட்டத்திற்காக இருக்கும் 50 கோடி ரூபாயை 600 கோடி ரூபாயில் குறைத்து கொண்டு, 550 கோடி ரூபாய் என்ற கணக்குக் கொடுப்பார்கள். தன்னுடைய ராஜ்யத்தில் இருப்பதைத் தன்னுடைய திட்டமாக ஏற்றுக் கொண்டுவிட வேண்டும் என்று சொல்வோமானால், அந்தத் திட்டத்தின் செலவு அந்த ராஜ்யத்தினுடைய கணக்குக்குத்தான் வரும். அதனால்தான் இதை எடுத்துச் சொல்வதே கிடையாது.

நமக்கு என்ன வேண்டும்? நமக்கு மின்சாரம் வேண்டும். அதை மத்திய சர்க்கார் அங்கே உற்பத்தி செய்து நமக்குக் கொடுக்கின்றார்கள். அதை வேறு யாருக்கும் கொடுக்க முடியாது, நமக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று பழைய ஒப்பந்தம் இருக்கிறது. அதற்குச் செலவு அதிகம் ஆகிறது என்றால், நாம் செய்தால் மாத்திரம் செலவு குறைவாகப் போய்விடுமா? எவ்வளவு செலவு ஆகிறது எனக் கணக்குக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு தலைப்பிலும் நிபுணர்களைக் கலந்து ஆலோசிப்பார்கள். இறுதியில் யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்படும். அவ்வாறு முடிவு செய்கின்ற வரையில் நாம் ஓரளவு தோராயமாக—'ஆவரேஜ்' ஆக—ரேட் போட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நெய்வேலித் திட்டத்தை மாநில சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதை எடுத்துக் கொள்ளாததால் நமக்கு நன்மை இருக்கிறது. அதை எடுத்துக் கொள்ளாமல் இருக்கும்போதே, அதில் உற்பத்தியாகும் எல்லா மின்சாரமும் தமிழ்நாட்டுக்குத்தான் கிடைக்கும். அதனுடைய விலை அதிகமாக இருக்கிறது என்பதைக்கூட நாம் அதிகமாக வற்புறுத்தக் கூடாது என்று நான் நினைக்கிறேன். காரணம், ஒருபுறத்தில் 'சுரங்கங்கள் வைத்து 500 மெக வாட் உற்பத்தி செய்யுங்கள், மற்றுமொரு அனல் மின்சார நிலையத்தை வைத்து 1,000 மெக வாட் உற்பத்தி செய்யுங்கள், இரண்டாவது சுரங்கத்தை வெட்டுங்கள்' என்று கேட்கின்றோம். ஆனால், அதற்குப் பணம் கொடுக்கின்றபோது, '3 நயே பைசே தான் கொடுப்போம், 4 நயே பைசே தான் கொடுப்போம்' என்றால் அவர்கள் செய்யமாட்டார்கள். அவர்களுக்கும் கட்டுபடியாக வேண்டும். அந்தவிதமான நிலைமை ஏற்படக் கூடாது என்பதற்காக விலையைக் கூட நிர்ணயம் செய்யாமல் இழுத்துக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக எந்த விலை கொடுக்க வேண்டும் என்கிற நிலைமை எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுது கொடுக்க முன்வருவோம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



12th August 1963] [திரு ஆர். வெங்கட்டராமன்]

கல்பாக்கத்திலிருக்கும் அணு மின்சார நிலையம் (அடாமிக் ப்ளாண்ட்) பற்றி அறிக்கையில் போட்டிருப்பது பார்லிமெண்டில் பேசுகிறபோது என்ன சொல்லப்பட்டதோ அதனுடைய மொழி பெயர்ப்புத்தான். மூன்றாவது அணு மின்சார நிலையம் இந்திய நாட்டில் அமைக்கப்படுகின்றபோது அது கல்பாக்கத்தில்தான் அமையும் என்று சொன்னார்கள். 'மூன்றாவது நிலையம் அமையும் போது' என்று இருக்கிறது. அப்படித்தான் நிலைமையுங்கூட. இப்பொழுது சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான்—மூன்றாவது அணு மின்சார நிலையத்தை வைப்பதாக அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ப்ளானிங் கமிஷன் அதைப் பற்றிப் பரிசீலனை செய்து, ஓரளவு அதற்குச் சாதகமான அபிப்பிராயங்கள் பரவி வருகின்றன. டாக்டர் பாபா அவர்கள்தான் அந்த இலாகாவின் பொறுப்பில் இருக்கிறவர்கள். அவர்கள் இதிலே தீவிரமாகவும் ஊக்கமாகவும் இருக்கிறார்கள். கல்பாக்கத்தில் அமையக்கூடிய அணு மின்சார நிலையத்தை வெளி நாட்டாருடைய உதவி இல்லாமலேயே அமைக்க முடியும் என்கிற எண்ணம்கூட அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, எவ்வளவு சீக்கிரமாக, துரிதமாகச் செய்ய முடியுமோ அதை நாம் செய்வதற்கு முயற்சி செய்வோம். எப்படி டிசைன் இருக்க வேண்டும் என்பதை எலெக்ட்ரிசிடி போர்டுகூட நிர்ணயம் செய்ய முடியாது. அடாமிக் எனெர்ஜி கமிஷனைச் சேர்ந்த டாக்டர் பாபா அவர்களும், அவருடைய குழுவினரும்தான் தீர்மானம் செய்வார்கள். ஆகவே, இதை அவர்களிடத்திலேயே விட்டுவிடலாம் என்றும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

லைஸென்ஸீஸ் பகுதிகளையும் மின்சார போர்டே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி சில கனம் உறுப்பினர்கள் விளக்கினார்கள். சென்ற ஆண்டிலேகூட, லைசென்ஸ்தார்கள் ஒரு சில இடங்களில் மின்சாரம் விஸ்தரிக்கவில்லை என்கிற பெரிய புகார் இருந்தது. அதற்குப்பிறகு, நாம் அவர்களுடன் கலந்து ஆலோசித்து, பல பகுதிகளை அவர்களிடமிருந்து எடுத்து விட்டோம். அம்மாதிரி எடுப்பதற்கு முக்கிய காரணம் அவர்களுக்குக் கடன் கொடுக்க முடியாது என்று சொன்னது ஒன்று. இரண்டாவது, அவர்களும் பெரிய மனது செய்தது. அதையும் நாம் சொல்லாமல் இருக்கக் கூடாது. அவர்கள் ஒப்புக்கொண்டு இப்பொழுது பல பகுதிகளை விட்டுக் கொடுத்துவிட்டார்கள். அம்மாதிரி லைசென்ஸ்தார்கள் மின்சாரம் விஸ்தரிக்க முடியாமல் விட்டிருக்கும் பகுதிகள் பாக்கி இருந்து கொண்டே இருக்குமானால், எப்பொழுது வேண்டுமானாலும் அவர்களுடன் கலந்து ஆலோசித்து, அந்தப் பகுதிகளையும் நாம் எடுத்துக் கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தொழிலாளர்கள் சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது, என்.எம்.ஆர். ஆக இருக்கிறவர்களை ஓ.எல்.எஸ்; ஆக மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். போர்டார் அதைப் பரிசீலித்து அறிக்கை வைக்கின்றபோது, அதற்குப் பதில் கொடுப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

[திரு ஆர். வெங்கட்டராமன்] [12th August 1963

மற்ற கனம் உறுப்பினர்கள் பேசினதற்குப் பொதுவாகச் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நான் நினைக்கிறேன். இந்த போர்டு நிர்வாகம் சம்பந்தமாகப் பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. இந்த போர்டில் உத்தியோகப்பற்றற்றவர்கள் (நான்-அஃபிஷியல்ஸ்) அங்கத்தினர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இது புதிய கருத்து அல்ல. இது நீண்ட நாட்களாக விவாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. எங்களுடைய அபிப்பிராயத்தில், இது ஒரு எக்ஸிக்யூடிவ் போர்டாக இருக்கும் காரணத்தால், நான்-அஃபிஷியல்ஸ்ஸைப் போட்டு அவர்கள் என்ன நிர்வாகம் செய்வார்கள் என்று புரியவில்லை. உத்தியோகத்தில் இருக்கின்றவர்களைக் கொண்டே போர்டாக இருப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன். அதற்கு உதவியாகத்தான் அட்வைசரி கமிட்டி வைத்திருக்கிறோம். அதில் உத்தியோகப் பற்று அற்றவர்களும், சட்டசபை உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்களைக் கலந்தாலோசித்துத்தான் இந்த பட்ஜெட் வைக்க வேண்டும் என்கிற நிலைமை இருக்கும் காரணத்தால் போர்டிலே நான்-அஃபிஷியல்ஸ்ஸைச் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை.

லோகல் அட்வைசரி கமிட்டி வைக்கவேண்டுமென்று ஒரு கருத்து சொல்லப்பட்டது. லோகல் அட்வைசரி கமிட்டி வைப்பதற்குப் பதிலாக நாம் ஆங்காங்கு இருக்கும் மின்சார போர்டு உத்தியோகஸ்தர்களை டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டங்களை 'அடெண்டு' செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் அங்கே ஆஜராகியிருந்து, என்ன பதில் சொல்ல வேண்டுமோ அதையெல்லாம் சொல்ல வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்கும். ஆகவே, நாம் இந்த லோகல் அட்வைசரி கமிட்டி வைப்பதன் மூலமாக என்ன நன்மை ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோமோ அந்த நன்மை டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் மூலமாக அடையலாம் என்று நான் நினைக்கிறேன்.

ஸ்டோர்ஸ் பர்ச்சேஸ் செய்வதற்குத் தனியாகக் கமிட்டி வைக்க வேண்டும் என்று ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எவ்வளவுக்கு எவ்வளவு புதுப் புதுக் கமிட்டி போடுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு காலதாமதம் ஆகிறது. ஒவ்வொரு இடத்திலும் கமிட்டி போட்டு, அதை மறுபடியும் பரிசீலனை செய்து கொண்டிருப்பதில் காலதாமதம் ஆகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும், மின்சார உற்பத்தி வேகமாக நடந்திருக்கிறது. மின்சார விஸ்தரிப்பு வேகமாக நடக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம், ஓரளவு அதில் இருக்கும் சேர்மன் தைரியமாக, ஒரு பொறுப்பு எடுத்துப் பண்டங்களை அவசர அவசரமாக வாங்கி, உடனுக்குடன் வேண்டிய இடங்களுக்கு அவற்றை அனுப்பி, வேலைகளைச் சீக்கிரமாக நிறைவேற்றுவதுதான். சரியான முறையில் காரியங்களைச் செய்வதற்கு, தைரியமாக ஒரு பொறுப்பு எடுத்துக் கொண்டதுதான் காரணம். ஒவ்வொன்றுக்கும் கமிட்டி வைத்து, கமிட்டி ஆலோசனை செய்து,



12thAugust 1963] [திரு ஆர். வெங்கட்டராமன்]

அதற்குப் பிறகுதான் சாமான்களை வாங்கவேண்டும் என்ற நிலைமை ஏற்படுமானால், அதனால் காலதாமதம் ஏராளமாக ஏற்படும். தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், அந்த முறையில் இதுவரை தவறுகள் ஏற்பட்டிருந்தால் ஆடிட் ரிபோர்ட்டில் வந்திருக்கும். எந்தவிதமான தவறுகளும் ஆடிட் ரிபோர்ட்டில் குறிப்பிடப்படவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சர்க்காருக்கும் அம்மாதிரி தகவல்கள் வரவில்லை. ஆகவேதான், பிற ராஜ்யங்களில் இந்த பர்ச்சேஸிங் கமிட்டி வைத்து என்ன நடக்கிறது என்கிற அனுபவத்தை ஓரளவு தெரிந்துகொண்டிருக்கும் காரணத்தால், ஸ்டோர்ஸ் பர்ச்சேஸிங் கமிட்டிக்கு இப்பொழுது அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. சம்பந்தம் அவர்கள், ஏதோ ராமையர் என்று ஒருவர் பழைய போர்டில் மெம்பராக இருந்தார் என்றும், தனி எம்ப்ளாய்மெண்டில் இப்பொழுது அவர் இருப்பதாகவும் சொன்னார்கள். அதிலிருந்து என்னவென்று புரியவில்லை. ஒரு நபர் தன்னுடைய பொறுப்பையும் பதவியையும் தவறாக உபயோகித்திருக்கிறார் என்று அவர் சொல்கிறாரா என்று தெரியவில்லை. இப்பொழுதிருக்கும் நிலைமையை விளக்கினால் கனம் அங்கத்தினர் மேற்கொண்டு ஒன்றும் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது. கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற நபர் இப்பொழுது போர்டிலே மெம்பராக இல்லை. அவரைச் சென்ற ஆண்டிலேயே போகச் சொல்லியாகிவிட்டது. மே மாதத்தில் நான் இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டவுடனேயே, முதல் காரியமாக அவரை அங்கிருந்து எடுத்துவிட்டேன். அவர் இப்பொழுது அங்கே மெம்பராக இல்லை. மெம்பராக இல்லாமல் தனியார் கம்பெனியில் அவர் சேர்ந்து வேலை செய்கிறார் என்றால் அதை நாம் தடுக்க முடியாது. அதனால் எந்தவிதமான தீமையும் போர்டிலே ஏற்படவில்லை, எந்த நஷ்டமும் ஏற்படவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

விவசாயத்திற்கு மின்சாரம் வழங்குவது குறித்துப் பல குறைகள் சொல்லப்பட்டன. க்ரூப்பிங் ரெஸ்ட்ரிக்ஷன் மிகக் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். 'இல்லை' என்று சொல்லவில்லை. இரவில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வழங்குவதா? இல்லையா? என்று தயவு செய்து சொல்லிவிட வேண்டும். இரவில் உற்பத்தியாகும் மின்சாரத்தை 'வேஸ்ட்' ஆக்கி விடுவதா? இப்போதே மின்சாரப் பற்றாக்குறை என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். உற்பத்தியாகும் மின்சாரத்தை எல்லாத் துறைகளிலும் நாம் 24 மணி நேரமும் உபயோகப்படுத்தினால்தான, எல்லோருக்கும் அதனால் பயன் ஏற்பட முடியும். அப்படியில்லாமல், பகலில்தான் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்றால், இரவில் உற்பத்தியாகும் மின்சாரம் 'வேஸ்ட்' ஆகிவிடும். அதனால், உற்பத்தி செய்யக்கூடிய 'ஃபுல் கபாஸிடி.' யும் உபயோகப்படுத்தப்படாமல் போகும். புதிதாகத் தொழிற்சாலை ஆரம்பிக்கிறவர்களுக்கு இரவு பத்து மணியிலிருந்து

[திரு ஆர். வெங்கட்டராமன்] [12th August 1963

காலை 6 மணி வரையில்தான் மின்சாரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிவிடுகிறோம். புதிதாகத் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்கிறவர்களுக்கு மற்ற ராஜ்யங்களில் மின்சாரம் இல்லை என்கிற நிலையில், நம் ராஜ்யத்தில் ஒரு ஷிஃப்ட் டாவது ஓட்ட மின்சாரம் கொடுக்கிறோம். இதைப் போலவே, விவசாயத்தில் இருக்கிறவர்களும் ஒரு பகுதி அதை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. விவசாயத்திற்கு மட்டும்தான் இரவு நேரத்தில் மின்சாரம் கொடுப்பது போலவும், தொழிற்சாலை களுக்குப் பகலில் கொடுப்பது போலவும் ஒரு எண்ணம் இருக்கும்
1-30 p.m. காரணத்தால்தான் இப்படிப்பட்ட குற்றச்சாட்டு ஏற்படுகிறது. எல்லோருக்கும் நம்மிடத்தில் இருக்கக்கூடிய, பொதுவாக மொத்த மாகக் கிடைக்கக்கூடிய மின்சாரத்தைப் பகிர்ந்து விநியோகம் செய்யும்போது சில சமயம் இரவுக் காலத்தில் கூட உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் நாம் இந்த ஏற்பாட்டை வைத்திருக்கிறோம். இதில் இருக்கக்கூடிய தொல்லைகளை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்க முயற்சி எடுத்துக் கொள்ளலாமே தவிர இதை அடியோடு நிறுத்த முடியாது. அல்லது நான் முன்பு சொன்னது போல தொழில் வளர்ச்சி என்பது அடியோடு என் றைக்கு நின்று போகிறதோ அன்றைக்கு இது அவசியமாக இல்லாமல் போகலாம்.

அப்புறம் மினிமம் காரண்டி பற்றிச் சொன்னார்கள். இதை முப்பத்தைந்து ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். இதுவே போர்டுக்கு நஷ்டம். இனிமேலும் இதைக் குறைக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்த்து செய்யலாம்.

MR. DEPUTY SPEAKER : How long will the Hon. Minister take to finish his speech?

THE HON. SRI R. VENKATARAMAN : I will finish it within five minutes, Sir.

MR. DEPUTY SPEAKER : I hope the House has not objection to sit for five more minutes.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது மினிமம் காரண்டியை 35 ரூபாயாகக் குறைத்திருக்கும்போதே சிலவிடங்களில் 50 ரூபாய் கட்ட வேண்டு மென்று சொல்வதாகச் சொன்னார்கள். அப்படிக் கட்டச் சொன்னால் அது தவறாகும். அம்மாதிரி எந்த இடத்திலாவது 50 ரூபாய் கட்டச் சொல்லியிருந்தால் அதை என்ஜினியர் அவர்கள் கவனத் திற்குக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன். அல்லது எனக்கு வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். உடனே அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு நாங்கள் மின்சாரம் கொடுப்பது இல்லையென்று சொன்னார்கள். மேலும் பல்பு போட்டுக் கொள்ள அனுமதிப்ப தில்லை என்றெல்லாம் சொல்லப்பட்டது. இப்போது 300 வாட் பல்பு போட்டுக் கொள்ளலாம் என்று அனுமதித்திருக்கிறோம்.



12thAugust 1963] [திரு ஆர். வெங்கட்டராமன்]

எவ்வளவு அதிகமாக மின்சாரத்திற்கு அனுமதி அளிக்க முடியுமோ அவ்வளவு அளித்துத்தான் வருகிறோம். திருமதி குழந்தையம்மாள் பேசும்போது "டிரைனஸ் சர்டிபிகேட் ரெவின்யூ ஆபீசரிடம் போய் எதற்காக வாங்கி வரவேண்டும், நாங்கள் உபயோகப்படுத்திக்கொள்கிற மின்சாரம் எவ்வளவு என்பதுதான் மின்சார கட்டண பில்லில் தெரியுமே. பில் தொகை குறைந்திருப்பதில் இருந்தே கிணற்றில் தண்ணீர் இல்லை என்பது தெரியாதா ? இவர்களே டிரைனஸ் சர்டிபிகேட் இல்லாமல் சலுகை காட்டலாமே" என்றார்கள். பில் கட்டணம் குறைந்திருக்கிறது என்பதைப் பார்த்து மட்டும் கிணற்றில் தண்ணீர் இல்லை என்று சொல்ல முடியாது. மோட்டார் ரிப்பேராகியிருக்கலாம். அந்த சமயத்தில் மின்சாரம் குறைவாகத்தான் செலவாகியிருக்கும். அது போல இரண்டு மழை சேர்ந்தாற்போல பெய்தால் சிலபல நாட் கள் மின்சார பம்பு செட்டை ஓட்டமாட்டார்கள். அப்போதும் மின்சாரக்கட்டணம் குறைவாகத்தான் இருக்கும். ஆகவே மின்சா ரக் கட்டணம் குறைந்திருப்பதை மட்டும் கொண்டு கிணற்றில் தண்ணீர் இல்லை என்று கருதிவிட முடியாது. இப்போது இருப் பது போலவே டிரைனஸ் சர்டிபிகேட் வாங்கும் முறை இருப்பதில் தவறு ஒன்றும் இல்லையென்றுதான் நான் நினைக்கிறேன்.

அடுத்தாற்போல, அநேகமாக எல்லா அங்கத்தினர்களும் சேர்ந்து குறிப்பிட்ட ஒரு குறைபாடு 'காலதாமதமாகிறது' என்பதுதான். மின்சார விஸ்தரிப்பில் காலதாமதமாகிறது என்று எல்லா அங்கத்தினர்களும் ஒரேமாதிரியாகச் சொல்வதைக் கேட் கும்போது—மின் வேகத்தை விட இவர்களுடைய மனோவேகம் மிக அதிகமாக இருக்கிறது என்பதுதான். மின் வேகத்தைவிட மனோவேகம் அதிகமாகத்தான் இருக்கும். ஏன் இப்படிச் சொல் கிறேன் என்றால் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியி லிருந்து பார்த்தால் இதற்குள்ளேயே ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு விஸ்தரிப்பு செய்திருக்கிறோம். ஆகவேதான் காலதாமதம் ஆகிறது மனோவேகம்தான் அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டேன். எவ்வளவு சீக்கிரம் இந்த மின் விஸ்த ரிப்பை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செயலாற்றி வருகிறோம். அதேசமயத்தில் இன்னும் சில குறைகள் இருக் கின்றன. போதுமான அளவு மெட்டீரியல்ஸ் கிடைப்பதில்லை. குறிப்பாக கண்டக்டர் கிடைக்கவில்லை. நான்கூட ஒரு கிராமத் திற்குப் போயிருந்தபோது அங்கேயுள்ளவர்கள், "இதோ பாருங்கள், கம்பத்தைக் கொண்டுவந்து நட்டுவிட்டுப்போய் விட்டார்கள், மின்சாரம் இன்னும் வரவில்லை" என்றார்கள். "கம்பிகள் கிடைக்கவில்லை, கம்பங்களைக் கொண்டுவந்து நட்டு விட்டார்கள். இப்போது கம்பி கிடைத்தவுடன் ஒயர் இழுத்து கனெக்ஷன் கொடுத்துவிடலாம். ஒயர் கிடைத்த பிறகு கம்பம் நடலாம் என்றால் அப்போது அதிலிருந்து இன்னும் அதிகக் கால தாமதம் ஆகுமே என்ன செய்வது ?" என்று நான் அவர்களிடம் சொன்னேன். கனம் மதியழகன் அவர்கள் கூடச் சொன்னார்கள். இங்கேயே இன்சுலேட்டர் தயாரிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஓமேகா கேபிள்ஸ் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் இரும்பு போஸ்டர்களுக்குப்

*[திரு ஆர். வெங்கட்டராமன்]* [12th August 1963

*பதிலாக சிமிண்டு காங்கிரீட் போஸ்டர்களே இப்போது போடப் பட்டு வருகிறது. ஆகவே இப்படி எல்லா வகையிலும் இந்த விஸ்தரிப்பு வேலையைத் துரிதமாக நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன்.*

*அடுத்து பாலாறு பேசின் ரூல் சம்பந்தமாகச் சொன்னுர்கள். அந்தப் பகுதியில் மின்சார இலாகாவைப் பற்றி குறையே இல்லை. எங்கெங்கு ரெவின்யூ இலாகா தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்குகிறதோ அங்கெல்லாம் உடனடியாக மின்சாரம் வழங்கப் பட்டுதான் வருகிறது. ஆகவே பாலாறு பேசின் ரூல் சம்பந்தமாக விவசாயிகளுக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால் அவர்கள் ரெவின்யூ அமைச்சரிடம்தான் சொல்ல வேண்டும். அதுபற்றி கனம் அங்கத் தினர்கள் அவரிடம் கேட்கலாம் (சிரிப்பு).*

*ஹரிஜன காலனிகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென்ற அவசியத்தை சர்க்கார் நன்கு உணர்ந்து இருக்கிறுர்கள். இதற் காக 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை யிலும் 400 காலனிகளுக்கு விளக்கு போடப்பட்டிருக்கிறது. இன்னும் துரிதமாகப் போடுவதற்கு அந்த இலாகா அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். மின்சார இலாகாவைப் பொறுத்த அளவில் ஹரிஜனப் பகுதிக்கு மின்சாரம் கொடுக்கத் தயாராய் இருக் கிறோம். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்கிறேன்.*

*இன்னும் பல கருத்துக்களைக் கனம் அங்கத்தினர்கள் சொன் ஞர்கள். அதுபற்றிய அபிப்பிராயத்தையும், அதன்பேரில் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றியும் அடுத்த ஆண்டு இந்த ஆண்டுபோலவே கொடுக்கப்படும் அறிக்கையில் தெரிவிக்கிறேன்.*

*இன்னொரு விஷயத்தையும் இந்தச் சமயத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்களுடைய யோசனை, அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் பற்றி மின்சார இலாகா ஒரு அறிக்கையை மேசையின் மீது வைத்திருக்கிறுர்களே, இதுபோல மற்ற இலாகாக்கள் ஏன் வைக்கவில்லை என்று சொன் ஞர்கள். மின்சார இலாகா சம்பந்தப்பட்ட வரையில் ஏன் இவ்வாறு வைக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று விளக்க விரும்புகிறேன். மின்சார இலாகா ஒரு போர்டின் நிர்வாகத்தில் இப்போது விடப்பட்டிருக்கிறது. அதுபற்றி கனம் அங்கத்தினர்கள் சட்டசபையில் கேள்வி கேட்க முடியாது. இந்த ஒரு சமயத்தைத் தவிர மற்ற எந்தச் சமயத்திலும் இதுபற்றி சட்டசபையில் விசாரிக்க இடம் இல்லை. மற்ற இலாகாக்கள் என்றுல் அப்படி இல்லை. எப்போது வேண்டுமானுலும் கனம் அங்கத்தினர்கள் கேள்விகள் கேட்கலாம். அந்த அந்த மானியங்கள் வரும்போது பேசலாம். அதற்கு இந்த மின்சார போர்டு சம்பந்தப்*



12th August 1963] *[திரு ஆர். வெங்கட்டராமன்]*

*பட்ட நிர்வாகத்தில் இடமில்லையாதலால், கனம் அங்கத்தினர்கள் இந்த மின்சார போர்டு சம்பந்தப்பட்ட அறிக்கையின்மீது விவாதம் செய்கிறபோது சொல்கிற கருத்துக்கள் என்ன என்ன என்று தொகுத்து, அதன்பேரில் எடுத்துக் கொள்ளப்படுகிற நட வடிக்கைகளையும் குறித்து சட்டசபையில் வைக்கவேண்டுமென்று செய்திருக்கிறோம். ஆகவே இந்த அறிக்கையை சபை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

***திரு. அ. பெ. தர்மலிங்கம்:*** *ஹரிஜன சேரி சம்பந்தப்பட்ட வரையில் மின் விஸ்தரிப்பு செய்வதில் சவுத் மெட்ராஸ் கார்ப்ப ரேஷன் சரியான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. அதையே மின்சார போர்டார் எடுத்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.*

MR. DEPUTY SPEAKER: The House will now adjour 1-p.m
and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

165. *Notification issued with G.O. Ms. No. 1789, Home, dated 29th May 1963 cancelling the Local Self-Government Department Notification No. 979, dated the 6th September 1933, published at page 327 of Part I-A of the* Fort St. George Gazette, *dated the 12th September 1933 relating to the exemption from the tax the vehicles belonging to His or Her Majesty which are in the use of Army Department.* [*Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of* 1931).]

166. *Notification issued with G.O. Ms. No. 2105, Food and Agriculture, dated 6th July 1963 regarding the regulation of trade in Cashewnut under the Madras Agricultural Produce Markets Act, 1959 in South Arcot district.* [*Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).*]

### B. Reports, Notifications and other papers.

NIL.

## *HOW TO USE THE INDEX.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading 'Chair'.

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A. M./Ad. Motion .. .. .. | Adjournment Motion. |
| Ann. .. .. .. .. | Announcement. |
| B.O.H. .. .. .. .. | Business of the House. |
| C.A. .. .. .. .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. .. .. .. .. | Calling Attention Statement. |
| Consid. .. .. .. .. | Consideration stage of a Bill.<br>This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. .. .. .. . | Consideration of clauses of a Bill. |
| D.E.E. .. .. .. .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. .. .. .. ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. .. .. .. .. | Demands for Supplementary Grants. |
| G.A. .. .. .. .. | Governor's Address. |
| G.D. .. .. .. .. | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. .. .. | Half-hour Discussion. |
| Int. .. .. .. .. | Introduction stage of a Bill. |
| L.A. .. .. .. .. | Legislative Assembly. |
| L.C. .. .. .. .. | Legislative Council. |
| M. .. .. .. .. | Motion. |
| P.M. .. .. .. .. | Privilege Motion. |
| R/Res. .. .. .. .. | Resolution. |
| St. .. .. .. .. | Statement. |

# INDEX TO
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

---

**THIRD SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA**

---

*6th to 10th and 12th August* 1963.

**Volume XIII (Nos. 1 to 6).**


| | PAGES |
|---|---|
| **A** | |
| ALAGAMUTHU, SRI T. P.— | |
| Bus routes, Permits .. .. .. .. .. .. .. | 467–469 |
| Electricity Board Budget 1963-64— | |
| G.D. .. .. .. .. .. .. .. .. | 557–560 |
| Express Buses, Private Sector .. .. .. .. .. | 257 |
| Police lines, Thurayur .. .. .. .. .. .. .. | 607–608 |
| ANANDANAYAKI, SRIMATHI, T. N.— | |
| Constitution (Fifteenth Amendment) Bill, 1963— | |
